ஐரோப்பிய நிதி உதவித் திட்டத்தின் மூலமாக குளங்கள் பராமரிப்பு 250 ஏக்கரில் இருந்து, 500 ஏக்கர் எடுக்கப்பட்டு வருவதை, 500 ஏக்கரில் இருந்து 1,000 ஏக்கர் வரை எடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1994 ஏப்ரல் 26]

387--

அவினாசி தொகுதியில் கீழ்க்கதவுக்கரைக்கும் மேல்கதவுக்கரைக்கும் போக்குவரத்து வசதி ஏற்படுத்துதல்.

***21518–டாக்டர் மு. சீனியம்மாள் :**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அவினாசி தொகுதியில் கடைசி எல்லையிலுள்ள கீழ்கதவுக்கரை, மேல்கதவுக்கரை ஊர்களுக்கு போக்குவரத்து வசதி செய்ய அரசு முயலுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அவ்வூர்களுக்குச் செல்லும் சாலை செப்பனிடப்பட்டு அகலமாக்கப்பட்ட பின்னர், பேருந்து வசதி செய்து தரப்படும்.

389--

ஐரோப்பிய நிதி உதவித் திட்டத்தின் மூலம் குளங்களைப் பராமரித்தல்.

***10236--திரு. ஆர். ஈஸ்வரன்:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

ஐரோப்பிய நிதி உதவித் திட்டத்தின் மூலமாக குளங்கள் பராமரிப்பு 250 ஏக்கரில் இருந்து, 500 ஏக்கர் எடுக்கப்பட்டு வருவதை, 500 ஏக்கரில் இருந்து 1,000 ஏக்கர் வரை எடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. வினா கேட்க அழைத்தபோது இருக்கையில் இல்லாத உறுப்பினர் வினா நேரம் முடிந்த பிறகு அதுகுறித்து எழுப்புதல்.

திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கூப்பிடும்போது நீங்கள் இருக்கையில் இல்லை. அதற்குமேல் அந்தக் கேள்வி முக்கியமானது என்றால் நீங்கள் எழுதிக் கொடுங்கள். முன் அனுமதி பெற்று வந்திருந்தால் அந்தமாதிரித் திரும்ப எடுக்கலாம். அந்தமாதிரி இல்லை. (குறுக்கீடு) இல்லை, இப்போது முடியாது. நீங்கள் எழுதிக் கொடுங்கள். திரும்ப நாளைக்கு, நாளை மறுநாள் லிஸ்டில் போட்டுக் கொண்டு வரலாம். (குறுக்கீடு) இல்லை. இப்போது முக்கியமான பிரச்சினை, எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

3. எஞ்சிய கூட்ட நாட்களுக்குப் பேரவைப் பணிகளினின்று உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் தள்ளி வைக்கப்பட்டிருப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை--பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இந்தச் சட்டமன்ற கூட்டத் தொடர் முழுவதும் சட்டமன்ற நடவடிக்கைகளில் கலந்துக்கொள்ளக் கூடாது என்ற மிகப் பெரும் தண்டனையை நீங்கள் அவருக்கு வழங்கி இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அளித்த தண்டனையைப்பற்றி நீங்கள் உள்நோக்கம் கற்பிக்கக்கூடாது. அந்த உறுப்பினரைப் போலவே நீங்களும் நடந்துகொள்கிறீர்கள். அந்த உறுப்பினர் பற்றி நானே இங்கு சொல்லிவிடுகிறேன். நீங்கள் எழுப்பிவிட்டீர்கள் அல்லவா? (குறுக்கீடு) நீங்கள் மிகப் பெரிய தண்டனை என்கிறீர்கள். (குறுக்கீடு) விதி முறைப்படி நான் கொடுத்திருக்கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: ஒரு தீர்ப்பினை நீங்கள் வழங்கி இருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

திரு. பி.வி. இராஜேந்திரன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். நீங்கள் ஒன்றும் கொடுக்கவில்லை. விதி 120--ஐப் படித்துப் பாருங்கள்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: கலந்துகொள்ளக் கூடாது என்ற ஒரு தீர்ப்பினை நீங்கள் வழங்கி இருக்கின்றீர்கள். கடந்த திங்கள் அன்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பேரவையிலே சட்டமன்ற உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் தொடர்ந்து இந்த சட்டமன்றத்திற்கு வந்து, ஜனநாயக கடமைகளை ஆற்றுவதற்கு உங்களுடைய தீர்ப்பினை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கோரிக்கை விடுத்தார்கள். அதைப்போன்று நானும், கட்சியினுடைய கொறடா சுந்தரராஸ் அவர்களும் ரங்கநாதன் அவர்களும், சுதர்சனம் போன்றவர்கள் உங்களை நேரில் சந்தித்து இந்தக் கோரிக்கையை நாங்களும் வலியுறுத்தினோம். மேலும், உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் முதலமைச்சர் அவர்களை ஒருமையிலே நான் பேசவில்லை என்று....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது நீங்கள் கோரிக்கை வைக்கிறீர்கள். வேறு அதிகமாகப் பேசுவதற்கு அனுமதி இல்லை. அவர் நடந்துகொண்டது முறைகேடானது, இங்கே பேசியது மிகத் தவறானது என்பதை இரண்டு, மூன்று நேரங்களில் நான் சொல்லிவிட்டேன். நீங்கள் திரும்ப அவர் செயலை நியாயப்படுத்துகிறீர்கள். அவர் மிக முறைகேடாக நடந்துகொண்ட ஓர் உறுப்பினர். அவருக்கு இவ்வளவு வக்காலத்து வாங்கிக் கொண்டு இருப்பதை நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) இல்லை. மிக முறைகேடாக நடந்துகொண்டு, பல நேரங்களில் இந்தப் பேரவையின் அலுவல்களைக் கெடுக்க வேண்டுமென்று இருக்கிற 5,6, உறுப்பினர்களில் அவரும் ஒருவர். எனவே, அப்பேர்ப்பட்ட மிக மோசமான, விதிமுறைகளுக்கு மாறாக நடக்கிற உறுப்பினருக்கு நீங்கள் வக்காலத்து வாங்குவதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. அவருக்குக் கொடுத்த தண்டனை அப்படியே இருக்கும். எனவே, மற்ற உறுப்பினர்கள் தங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றுவதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அந்த உறுப்பினரைப் பற்றி இதற்கும் அதிகமாக நீங்கள் பேச வேண்டாம். அதை மறுபரிசீலனை செய்ய இயலாது. அந்த அளவுக்கு முறைகேடாக நடந்துகொண்டார். அதற்குப் பிறகு வெளியிலே போயும் அவர், தான் செய்தது சரி என்றும், பேரவைத் தலைவர்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

செய்தது மிகப் பெரிய தவறு என்றும் வெளியிலே பேசிக் கொண்டும் எழுதிக் கொண்டும் இருக்கிறார். அதை எல்லாம் சாதரணமாக எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதை அவை உரிமை மீறல் பிரச்சினையாகவேகூட எடுக்க வேண்டிய அளவிற்குத் தொடர்ந்து அவர் தவறு செய்துகொண்டிருக்கிற காரணத்தால் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற உங்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது. நீங்கள் அமரலாம்.

திரு. பி.வி. இராஜேந்திரன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்கிறேன். இந்தப் பேரவைத் தலைவர் சொல்வதுதான் இந்தப் பேரவையிலே இருக்கும். பேரவைத் தலைவரை விட இராஜேந்திரன், பீட்டர் அல்போன்ஸ் பெரிய ஆள் கிடையாது. உட்காருங்கள். இதிலே ஒன்றும் அனுமதிக்க முடியாது.

திரு. பி.வி. இராஜேந்திரன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இராஜேந்திரனும், பீட்டர் அல்போன்சும் மிக வரம்பு மீறி நடக்கிற உறுப்பினர்கள். உங்களை அனுமதிக்க முடியாது. அந்த அளவுக்கு (குறுக்கீடுகள்) மிக வரம்பு மீறி நடக்கிற உறுப்பினர்கள். ஏதோ உங்கள் மீது இன்னும் நடவடிக்கை எடுக்காமல் இருக்கிற காரணத்தால் இங்கே நின்று கொண்டு பேரவைத் தலைவருக்கு எதிராகப் பேசிக் கொண்டு இருக்கிறீர்கள். அனுமதிக்க முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வேறு எங்கேயோ போய், எது எதையோ சொல்லிக் கொண்டிருக்கிறார், சொல்லி கொண்டு இருக்கட்டும். சில "Yellow Journal"-ல் எல்லாம் அவர் எழுதிக் கொண்டிருக்கிறார். எழுதிக்கொண்டு இருக்கட்டும். அதைப் பற்றிக் கவலையில்லை. (குறுக்கீடுகள்). அதைப்பற்றி எல்லாம் கவலை இல்லை. முடியுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) அவர் சொல்லியது எதுவும் அவைக் குறிப்பிலே இருக்காது. (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-20

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 நாட்களாக....

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் தீர்ப்புக் கொடுத்து விட்டேன். அதற்கு மேலே பேச அனுமதியில்லை. (குறுக்கீடு) மறுபரிசீலனை செய்ய இயலாது. அவர் அவ்வளவு மோசமான உறுப்பினர், எனவே மறுபரிசீலனை செய்ய இயலாது.

திரு. பி.வி. இராஜேந்திரன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு நீங்கள் யார்? இங்கே அவையில் நடைபெறுவதைக் கட்டுப்படுத்துவதற்கு எனக்குப் பேரவை விதி 120 இருக்கிறது. அதன் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறேன். நான் நடவடிக்கை எடுத்ததைக் கேட்பதற்கு இராஜேந்திரனுக்கு எந்த உரிமையும் இல்லை. பேரவைத் தலைவருடைய உத்தரவை மீறிப் பேசுகிற உரிமை இராஜேந்திரனுக்கு இல்லை. (குறுக்கீடு) உட்காருங்கள்.

திரு. பி.வி. இராஜேந்திரன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எதுவும் கொடுக்காமல் பேசிக் கொண்டிருப்பதை அனுமதிக்க முடியாது.

திரு. ச. காந்திராஜன் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆஃப் ஆர்டர், பேரவைத் துணைத் தலைவர்.

***திரு. ச. காந்திராஜன் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்):** இந்த அவையிலே காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ஓர் உறுப்பினர் தவறாக நடந்துகொண்ட விதம் குறித்து தாங்கள் ஏற்கெனவே ஒரு தீர்ப்புச் சொல்லி இருக்கிறீர்கள். அந்தத் தீர்ப்பைச் சொன்ன பிறகு, 2,3 நாட்களுக்கு முன்பாகக் கூட இந்தப் பிரச்சினையை எழுப்பினார்கள். அப்போது, மற்ற உறுப்பினர்கள் இந்த அவைக்கு வந்து பேசுவதற்கும், விவாதத்திலே கலந்துகொள்வதற்கும் எந்த அனுமதி மறுப்பும் இல்லை, அவர்கள் வரலாம் என்று தாங்கள் கூறியும்கூட, தொடர்ந்து இந்தப் பிரச்சினையைத் தினந்தோறும் எழுப்பி, மறுபரிசீலனை என்ற பெயரில் ஏதாவது ஒரு பிரச்சினையை உருவாக்க வேண்டுமென்று திட்டமிட்டு ஏதாவது பிரச்சினை செய்து கொண்டிருக்கிறார்கள். மீண்டும், மீண்டும்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தாங்கள் தெளிவாகத் தங்கள் தீர்ப்பைச் சொன்ன பிறகு, மீண்டும் மீண்டும் திரு. இராஜேந்திரன் எழுந்து, அந்தத் தீர்ப்பை மீறி, அந்தத் தீர்ப்பை விவாதிக்கின்ற வகையிலே, உங்கள் உரிமையை அவர் தன் கையிலே, எடுத்துக் கொண்டு பேசிய பேச்சுக்கள் அவைக் குறிப்பில், இருக்கலாமா? தாங்கள் தெளிவான தீர்ப்பைச் சொன்ன பிறகும், இதில் மீண்டும் பரிசீலனை செய்யச் சொல்ல முடியுமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய அனுமதி பெறாமல் பேசியது அவைக் குறிப்பில் இருக்காது. ஓர் உறுப்பினர் நீங்கள் சொல்லுகிற அந்த உறுப்பினர் பலமுறை இந்த அவையினுடைய நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்திலேயே பேசிக் கொண்டு இருக்கிறவர், அத்தகைய நடவடிக்கைகளிலே ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறவர். அதைப்போல இப்போது செய்த நடவடிக்கைக்காக நான் நடவடிக்கை எடுத்து, வெளியேற்றி இருக்கிறேன். மேலும் அவையிலே முறைகேடாக நடந்துகொண்ட ஓர் உறுப்பினர், வெளியிலே போய் தான் செய்தது தவறு என்று கருதுவதுபோல் இல்லாத சூழ்நிலையில் அது பற்றி மறுபரிசீலனை செய்ய இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) மேற்கொண்டு இதிலே வேண்டாம். (மேசையை தட்டும் ஒலி) (குறுக்கீடு) மேற்கொண்டு இதிலே வேண்டாம். (குறுக்கீடு) பிரதான எதிர்க்கட்சியாக நீங்கள் இருக்கலாம். நேற்று இருந்தீர்கள், இன்றைக்கு இருக்கிறீர்கள். இங்கே இருந்து நீங்கள் பணியாற்றுங்கள். நீங்கள் பணியாற்ற வேண்டுமென்றுதான் நான் பலமுறை கேட்டிருக்கிறேன். (குறுக்கீடு) சுமுகமாக ஒத்துழைப்பது என்கிறபோது முறைகேடாக நடந்துகொண்ட உறுப்பினருக்கு வக்காலத்து வாங்குவது முறையல்ல. இதிலேயே நீங்கள் முறையாக நடந்துகொள்ளவில்லை. (குறுக்கீடு) இப்போதே பார்க்கிறோம், எப்படி சுமுகமாக நீங்கள் நடக்கிறீர்கள் என்று. எனவே இது வேண்டாம், உட்காருங்கள். (குறுக்கீடு) மறுபரிசீலனை செய்ய இயலாது என்று சொல்லிவிட்டேன், உட்காருங்கள்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மறுபரிசீலனை செய்யாததைக் கண்டித்து வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னைக் கண்டித்து வெளிநடப்புச் செய்கிறேன் என்று சொல்லுவதுகூட அவையினுடைய

அனைத்து விதிகளுக்கும் முரணானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

4. தகவல் கோரல்

பேரவைத் தலைவரிடம் எழுத்துமூலம் கொடுக்காது ஒரு பிரச்சினையை எழுப்புதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தம்புசாமி, நீங்கள் எதுவும் கொடுக்கவில்லை. 9-48க்கு வந்து ஒரு பிரச்சினையைப் பற்றி என்னிடம் சொல்லியிருக்கிறீர்கள். எழுத்து மூலமாகக் கொடுங்கள், நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் வாய்மொழி மூலமாக என்னிடத்திலே 9.48க்கு வந்து சொன்னீர்கள். நாளை எடுத்துக்கொள்கிறேன். எழுத்து மூலமாக நீங்கள் கொடுத்தால் நாளை எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) எழுத்து மூலமாகக் கொடுக்காததை எப்படி எடுப்பது? மாண்புமிகு அவை முன்னவர்.

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் எழுப்ப வேண்டுமென்று கேட்டபோது, அதை எழுத்து மூலமாகக் கொடுங்கள், நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன் என்று தாங்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறீர்கள். அப்படிச் சொன்ன பிறகும் நாங்கள் எழுப்புகிறோமென்று சொன்னால், எழுப்பினது நிற்கும், அதற்குப் பதில் இருக்காது. பதில் வேண்டுமென்றால் நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். உறுப்பினர்அவர்கள் முறைப்படி நடந்து கொள்ள வேண்டும்.

திரு. வே. தம்புசாமி: அவைக்குத் தகவல் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த மாதிரித் தகவல் சொல்வதற்கு விதிகளில் வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் மாதிரி நடந்து கொள்ள வேண்டாம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தகவல் எனக்கு எழுத்து மூலமாகக் கொடுத்து, அதை நான் அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். 9-48-க்கு வந்து என்னிடத்தில் சொன்னீர்கள். நான் உடனே, எழுத்து மூலமாகக் கொடுங்கள், நாளை எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) அந்தமாதிரி எடுக்க முடியாது. "ஜீரோ" அவர் என்பதில், அந்தமாதிரி எந்த விதிமுறைகளுக்கும்

அனைத்து விதிகளுக்கும் முரணானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

4. தகவல் கோரல்

பேரவைத் தலைவரிடம் எழுத்துமூலம் கொடுக்காது ஒரு பிரச்சினையை எழுப்புதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தம்புசாமி, நீங்கள் எதுவும் கொடுக்கவில்லை. 9-48க்கு வந்து ஒரு பிரச்சினையைப் பற்றி என்னிடம் சொல்லியிருக்கிறீர்கள். எழுத்து மூலமாகக் கொடுங்கள், நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் வாய்மொழி மூலமாக என்னிடத்திலே 9.48க்கு வந்து சொன்னீர்கள். நாளை எடுத்துக்கொள்கிறேன். எழுத்து மூலமாக நீங்கள் கொடுத்தால் நாளை எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) எழுத்து மூலமாகக் கொடுக்காததை எப்படி எடுப்பது? மாண்புமிகு அவை முன்னவர்.

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் எழுப்ப வேண்டுமென்று கேட்டபோது, அதை எழுத்து மூலமாகக் கொடுங்கள், நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன் என்று தாங்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறீர்கள். அப்படிச் சொன்ன பிறகும் நாங்கள் எழுப்புகிறோமென்று சொன்னால், எழுப்பினது நிற்கும், அதற்குப் பதில் இருக்காது. பதில் வேண்டுமென்றால் நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். உறுப்பினர்அவர்கள் முறைப்படி நடந்து கொள்ள வேண்டும்.

திரு. வே. தம்புசாமி: அவைக்குத் தகவல் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த மாதிரித் தகவல் சொல்வதற்கு விதிகளில் வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் மாதிரி நடந்து கொள்ள வேண்டாம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தகவல் எனக்கு எழுத்து மூலமாகக் கொடுத்து, அதை நான் அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். 9-48-க்கு வந்து என்னிடத்தில் சொன்னீர்கள். நான் உடனே, எழுத்து மூலமாகக் கொடுங்கள், நாளை எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) அந்தமாதிரி எடுக்க முடியாது. "ஜீரோ" அவர் என்பதில், அந்தமாதிரி எந்த விதிமுறைகளுக்கும்

உட்படாமல் எடுக்கமுடியாது. (குறுக்கீடு) நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) தகவல் சொன்னால் அவர்கள் பதில் சொல்லவேண்டும். (குறுக்கீடு) அவை உரிமை மீறல் பற்றிய பிரச்சினை இந்தப் பேரவையின் மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜீனத் சர்புதீன் (குறுக்கீடு) அவை உரிமை மீறல் பிரச்சினை என்பது எல்லாவற்றுக்கும் முன்னால் எடுத்துக் கொள்ளவேண்டியது (குறுக்கீடு) நீங்கள் எழுந்து நிற்பதால் (குறுக்கீடு) நீங்கள் 9.48க்குதான் சொன்னீர்கள் (குறுக்கீடு) விதி என்ன இருக்கிறது? (குறுக்கீடு) அரை மணிநேரத்திற்கு முன்னதாக வந்து கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது. 9.48 மணிக்கு என்னிடத்திலே வந்து ஒரு செய்தியைச் சொன்னீர்கள். அது கூட எழுத்து மூலமாகக் கொடுக்கவில்லை. (குறுக்கீடு) வேண்டாம்.

முற்பகல் 11-25

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த விதியின் கீழே வாதிட்டுக் கொண்டிருக்கிறார் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த விதி? எந்த விதி? (குறுக்கீடு) பாருங்கள். அமைச்சர் கேட்கிறார். எந்த விதியின் கீழ் நீங்கள் எழுப்ப வேண்டுமென்று கேட்கிறீர்கள்? அவர் கேட்பதற்கு நேரடியாகப் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) வேண்டாம், உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெளிவாக (குறுக்கீடு) திருப்பித் திருப்பிச் சொல்கிறார்கள். இவர்கள் தகவல் சொல்லவேண்டுமென்று சொன்னால் எழுதிக் கொடுத்தாலும் தகவல்தான். எனவே எழுதிக் கொடுத்துவிட்டால் அதற்கு முறையான பதிலை நாளை சொல்ல முடியும். இப்போது தகவல் அவையிலே சொல்கிறேன் என்று சொன்னால், அது பத்திரிகையில் வரவேண்டுமென்ற நோக்கமாகத்தான் இருக்கிறதேயொழிய, அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்ற நோக்கத்திலே அல்ல. நேற்றைக்கு இரவு 10 மணி வரைக்கும் கூட்டம் நடந்திருக்கிறது. தினந்தோறும் இந்த வாரம் முழுவதும் காலையிலும், மாலையிலும் கூட்டம் இருக்கிறது. இப்படிக் காலத்தை வீணாக்கிக் கொண்டிருக்க கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எழுதிக் கொடுங்கள். நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) காங்கிரஸ்காரர்களுக்கும் உங்களுக்கும் வித்தியாசம் இருக்கவேண்டும், உட்காருங்கள்.

5. உரிமைப் பிரச்சினை

11-4-1994-ஆம் நாளன்று பேரவை வளாகத்தில் தம்மை மூன்று உறுப்பினர்கள் தகாத வார்த்தைகளால் திட்டி, தாக்க வந்ததாக உறுப்பினர் திருமதி ஜீனத் சர்புதீன் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 220-ன்கீழ் உறுப்பினர் திருமதி ஜீனத் சர்புதீன் அவர்கள் என்னிடத்திலே அவை உரிமை மீறல் பிரச்சினை பற்றிய ஓர் அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த மாதம் 11ஆம் தேதி அன்று (குறுக்கீடு) இது முக்கியமான பிரச்சினை. இப்போது எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) நாளை எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) அப்படியானால் இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் தேட வேண்டும் என்கிற நோக்கம் உங்களுக்கு இல்லை. இது பத்திரிகையில் வரவேண்டும் என்ற (குறுக்கீடு) இல்லை. . . . பின் எப்படி? முதலமைச்சர் அவர்களோ மற்ற அமைச்சர்களோ எப்படிப் பதில் சொல்வார்கள்? (குறுக்கீடு) எழுத்து மூலம் கொடுக்காமல் இது எப்படி வரும்? (குறுக்கீடு) இது எப்படி வரும்? எந்த விதியின் கீழ் வரும்? (குறுக்கீடு) எந்த விதியின் கீழ் வரும்? (குறுக்கீடு) இதை அனுமதிக்கவே முடியாது. (குறுக்கீடு) விதியில்லாமல் என்ன இருக்கிறது? மாண்புமிகு அவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாள்தோறும் நாட்டிலே ஆயிரக்கணக்கான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஆயிரக்கணக்கான நிகழ்ச்சிகளுக்கும் ஆயிரக்கணக்கான தகவல்களை இங்கே நாம் தரமுடியாது. அதற்கெல்லாம் முறை இருக்கிறது, வகை இருக்கிறது, விதிமுறைகள் இருக்கின்றன. விதிமுறைப்படி ஒரு மணி நேரத்திற்கு முன்னாலேயே அவர்கள் எழுதிக் கொடுத்தால் அதற்குத் தக்க பதிலைத் தருவதற்கு அரசுக்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே உடனே எழுதிக் கொடுங்கள், நாளை எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை உறுப்பினர் திருமதி ஜீனத் சர்புதீன் அவர்கள், பேரவையில் தான் பணியாற்றிய விதத்திற்காக பேரவையின் வளாகத்தில் வெளியே லாபியில், தான் தகாத வார்த்தைகளால் பேசப்பட்டு, தாக்கப்படக்கூடிய சூழ்நிலையும் உருவாயிற்று என்ற ஒரு பிரச்சினையை என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அதை அவை உரிமை மீறல் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு, அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி, அதை விசாரித்துத் தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

"கடந்த மாதம் 11-ஆம் தேதி நான் சட்டசபையில் என் கேள்விக்குப் பதில் பெற்று, அதற்கு நான் துணைக் கேள்வி கேட்டுவிட்டு வெளியில் வரும்போது, லாபியில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சோ. பாலகிருஷ்ணன், திரு. பீட்டர் அல்போன்ஸ், திரு. திண்டிவனம் பன்னீர்செல்வம் ஆகிய மூவரும் என்னுடைய பெண்மையை பாதிக்கும் வகையில் தகாத வார்த்தைகளால் திட்டி, தாக்க வந்தார்கள். இந்தச் செயல் என் உரிமையைப் பாதிக்கிற அளவிற்கு உள்ளது. எனவே உரிமை மீறல் பிரச்சினையாக இதை எடுத்துக்கொண்டு உரிமைக் குழுவுக்கு அனுப்பி, தீர விசாரித்து நீதி வழங்கவேண்டும்" என்று கேட்டிருக்கிறார்கள்.

ஏற்கெனவே இந்தப் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கையாக என்னிடத்திலே எடுத்துச் சொல்லி, அதுபற்றி நான் நடவடிக்கை எடுக்கிறேன் என்று பேரவைக்குச் சொல்லி, இதை அவை உரிமை மீறல் பிரச்சினையாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால் உரிய வகையில் நீங்கள் கொடுத்தால் அதை அவை உரிமை மீறல் பிரச்சினையாக எடுத்துக் கொள்கிறேன் என்று தெரிவித்திருந்தேன். அதற்கேற்ப பேரவை விதி 220-ன்கீழ் இந்த அறிவிப்பினை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இந்த அறிவிப்பினை மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபோதே, இது அவை உரிமை மீறல் பிரச்சினை என்பது தெளிவாகத் தெரிகிற காரணத்தால், ஏனைய சில விதிகளில் வேறு விதமான விளக்கங்கள் சொல்லப்பட்டு இருந்தாலும், பேரவை விதி 226--ன்படி "Notwithstanding anything contained in these rules, the Speaker may suo motu refer any question of privilege to the Committee of Privileges for examination, investigation and report" என்று இருக்கிற அந்த விதியின்படி, இந்தப் பிரச்சினையை மேலெழுந்த வாரியாகப் பார்க்கிறபோது, அவை உரிமை மீறல் பிரச்சினை இதில் இருக்கிறது என்று கருதி, அவை உரிமைக் குழுவிற்கு இதை அனுப்பி விசாரித்து, இதனுடைய அறிக்கையைப் பேரவைக்கு வழங்குமாறு கேட்டு, அவை உரிமைக் குழுவிற்கு இந்தப் பிரச்சினையை அனுப்பி வைக்கிறேன்.

முற்பகல் 11-30

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஓ.எஸ். அமர்நாத் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஓ. எஸ். அமர்நாத். (குறுக்கீடுகள்)

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஜீனத் சர்புதீன் அவர்கள் சம்பந்தப்பட்டது, அவர்கள் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்..

1994 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் உங்கள் கட்சியாக இருக்கட்டும், எனக்கு அவர்கள் உறுப்பினர்; இந்த அவையினுடைய உறுப்பினர். (குறுக்கீடுகள்)

திரு. எஸ். டேனியல்ராஜ்: கட்சியிடம் ஒரு மனுக்கொடுத்து இருக்கிறார்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது இருக்கலாம்; அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுங்கள். எனக்கு, அவை உரிமை மீறல் பிரச்சினைக்காகக் கொடுக்கிறபோது, அதற்கு நான் நடவடிக்கை எடுக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் கட்சியில் அதற்கு என்ன வேண்டுமானாலும் நடவடிக்கை எடுக்கலாம். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சியில் என்ன வேண்டுமானாலும் நடவடிக்கை எடுக்கலாம். இந்த அவையினுடைய ஓர் உறுப்பினர், அவருடைய உரிமை, இந்த அவையில் அவர் பணியாற்றியமைக்காகப் பாதிக்கப்படுகிறபோது, நான் நடவடிக்கை எடுக்கிற கடமை எனக்கு இருக்கிறது. அதை நான் இன்றைக்குச் செய்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்)

6. கவன ஈர்ப்பு

(அ) மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் உள்ள சி.டி. ஸ்கேன் சரிவர இயங்காதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு ஓ.எஸ். அமர்நாத் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஓ.எஸ். அமர்நாத். (குறுக்கீடுகள்)

திரு. ஓ.எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் உள்ள 'சி.டி.ஸ்கேன்' சரிவர இயங்காதது குறித்த "அவசரப் பொது முக்கியத்துவம் வ்ாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது. (குறுக்கீடுகள்).

அறிக்கை

"மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் உள்ள சி.டி.ஸ்கேன் கடந்த *11-3-1994* முதல் *14-3-1994* வரை சப்ளை செய்த நிறுவனத்தாரின்

சீராக்கத்திற்கு (Servicing) உட்பட்டிருந்தபடியால், மேற்கண்ட காலத்தில் அக்கருவி இயங்காமல் இருந்தது. மீண்டும் 15-3-1994 முதல் இயங்கிக் கொண்டு வருகிறது.

5. உரிமைப் பிரச்சினை-தொடர்ச்சி

11-4-1994 **ஆம் நாளன்று பேரவை வளாகத்தில் தம்மை மூன்று உறுப்பினர்கள் தகாத வார்த்தைகளால் திட்டி, தாக்க வந்ததாக உறுப்பினர் திருமதி ஜீனத் சர்புதீன் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினை**--தொடர்ச்சி.

திரு. பி.வி. இராஜேந்திரன்: நீங்கள் நோட்டீஸ் கொடுக்க வேண்டும்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் நான் சொன்னேன்,. 226. (குறுக்கீடுகள்)

திரு. பி.வி. இராஜேந்திரன்: Is it extraordinary?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எக்ஸ்ட்ராஆர்டினரி தான் இது. ஓர் உறுப்பினருடைய பெண்மையைப் பாதிக்கிற வகையில் நடக்கிற ஒன்று சாதாரணமா உங்களுக்கு? இது எக்ஸ்ட்ராஆர்டினரி தான்; இது எக்ஸ்ட்ராஆர்டினரி தான். இது என்ன அவ்வளவு சாதாரணமா உங்களுக்கு? பெண்மையைப் பாதிக்கிற பிரச்சினை. (குறுக்கீடுகள்) இல்லை, சாதாரணமானது என்றால், பாதிக்கப்பட்ட உறுப்பினரைப் பேச விட வேண்டும்; அதிலே கூட நான் விடவில்லை.

திரு. பி.வி. இராஜேந்திரன்: விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேண்டாம் என்று சொல்கிறேன்; அது உங்களைப் போன்றவர்களுக்குச் சரியாக இருக்கும். எனக்கு அது ஒவ்வாத காரியம். அதாவது பெண்மையைப் பாதிப்பது உங்களுக்கு அவ்வளவு சாத்ராணக் காரியம் என்று இருக்கிறபோது, எனக்கு ஏற்றுக் கொள்ள முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. இராஜேந்திரன் உட்காருகிறீர்களா அல்லது நடவடிக்கை எடுக்கவா? (குறுக்கீடுகள்) நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை, பேரவை விதி 226-ல் 'Notwithstanding anything contained in these rules' என, அந்த ரூல்ஸ் இருந்தாலும்கூட, suo motu, Speaker

அனுப்பலாம் என்று இருக்கிறது. (குறுக்கீடுகள்) இப்போதுதான் நான் சொன்னேன்; நீங்கள் எங்கேயோ வெளியே போய்விட்டு வந்து சொன்னால் எப்படி? உங்களுக்கு அவ்வளவு சாதாரணமாக இருக்கிறது, பெண்மையைப் பாதிக்கிற சம்பவம். திரு. இராஜேந்திரன், எங்களுக்கு அது எக்ஸ்ட்ரா ஆர்டினரி. ஆனால் இது எங்களுக்கு ஆர்டினரி என்று சொல்கிற அளவுக்குப் பேசுகின்ற உறுப்பினர்களிடத்தில் நான் அதிகாமாகப் பேச விரும்பவில்லை. திரு. இராஜேந்திரன் உட்காருகிறீர்களா அல்லது நடவடிக்கை எடுக்கவா? உட்காருகிறீர்களா, இல்லையா? நடவடிக்கை எடுக்கவேண்டிவரும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதில் நான் முடிவு எடுத்து இருக்கிறேன். நான் முடிவு எடுத்த பிரச்சினையில், திரு. அழகிரிக்கு எந்த உரிமையும் இல்லை. உட்காருங்கள். திரு. டேனியல்ராஜ் உட்கார வேண்டும். உட்காருங்கள். திரு. ஓ. எஸ். அமர்நாத்.

6. கவன ஈர்ப்பு--தொடர்ச்சி

(அ) மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் உள்ள சி.டி. ஸ்கேன் இயங்காதது குறித்து--தொடர்ச்சி.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திலே மதுரை மாநகரில் இருக்கின்ற இராஜாஜி அரசு மருத்துவமனை மதுரை மாவட்டத்திற்கு உதவுகின்ற வகையில் ஏழை எளிய மக்கள் பயனடைந்து வருகிறார்கள். அந்த அரசு இராஜாஜி மருத்துவமனையிலே விபத்துக்கள் பிரிவு, தலைக் காயப் பிரிவு, நியூரோலாஜி பிரிவு--இவைகள் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு சி.டி. ஸ்கேன் மிகவும் பயன்பட்டு வருகிறது. சி.டி. ஸ்கேன் கடந்த ஒரு மாதமாக இயங்காமல் இருந்தது. இப்போது அந்த சி.டி. ஸ்கேன் நிறுவனத்தாரின் சீராக்கத்திற்கு அது உட்பட்டு மீண்டும் அது இயங்கிக் கொண்டு இருப்பதாக அந்த அறிக்கையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கின்றார்கள். அதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன். நன்றி.

(ஆ) பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டிருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் அ. செல்வராசன், வே. தம்புசாமி, ஜி. பழனிசாமி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை

1994 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் உங்கள் கட்சியாக இருக்கட்டும், எனக்கு அவர்கள் உறுப்பினர்; இந்த அவையினுடைய உறுப்பினர். (குறுக்கீடுகள்)

திரு. எஸ். டேனியல்ராஜ்: கட்சியிடம் ஒரு மனுக்கொடுத்து இருக்கிறார்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது இருக்கலாம்; அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுங்கள். எனக்கு, அவை உரிமை மீறல் பிரச்சினைக்காகக் கொடுக்கிறபோது, அதற்கு நான் நடவடிக்கை எடுக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் கட்சியில் அதற்கு என்ன வேண்டுமானாலும் நடவடிக்கை எடுக்கலாம். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சியில் என்ன வேண்டுமானாலும் நடவடிக்கை எடுக்கலாம். இந்த அவையினுடைய ஓர் உறுப்பினர், அவருடைய உரிமை, இந்த அவையில் அவர் பணியாற்றியமைக்காகப் பாதிக்கப்படுகிறபோது, நான் நடவடிக்கை எடுக்கிற கடமை எனக்கு இருக்கிறது. அதை நான் இன்றைக்குச் செய்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்)

6. கவன ஈர்ப்பு

(அ) மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் உள்ள சி.டி. ஸ்கேன் சரிவர இயங்காதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு ஓ.எஸ். அமர்நாத் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஓ.எஸ். அமர்நாத். (குறுக்கீடுகள்)

திரு. ஓ.எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் உள்ள 'சி.டி.ஸ்கேன்' சரிவர இயங்காதது குறித்த "அவசரப் பொது முக்கியத்துவம் வ்ாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது. (குறுக்கீடுகள்).

அறிக்கை

"மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் உள்ள சி.டி.ஸ்கேன் கடந்த *11-3-1994* முதல் *14-3-1994* வரை சப்ளை செய்த நிறுவனத்தாரின்

சீராக்கத்திற்கு (Servicing) உட்பட்டிருந்தபடியால், மேற்கண்ட காலத்தில் அக்கருவி இயங்காமல் இருந்தது. மீண்டும் 15-3-1994 முதல் இயங்கிக் கொண்டு வருகிறது.

5. உரிமைப் பிரச்சினை-தொடர்ச்சி

11-4-1994 ஆம் நாளன்று பேரவை வளாகத்தில் தம்மை மூன்று உறுப்பினர்கள் தகாத வார்த்தைகளால் திட்டி, தாக்க வந்ததாக உறுப்பினர் திருமதி ஜீனத் சர்புதீன் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினை--தொடர்ச்சி.

திரு. பி.வி. இராஜேந்திரன்: நீங்கள் நோட்டீஸ் கொடுக்க வேண்டும்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் நான் சொன்னேன்,. 226. (குறுக்கீடுகள்)

திரு. பி.வி. இராஜேந்திரன்: Is it extraordinary?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எக்ஸ்ட்ராஆர்டினரி தான் இது. ஓர் உறுப்பினருடைய பெண்மையைப் பாதிக்கிற வகையில் நடக்கிற ஒன்று சாதாரணமா உங்களுக்கு? இது எக்ஸ்ட்ராஆர்டினரி தான்; இது எக்ஸ்ட்ராஆர்டினரி தான். இது என்ன அவ்வளவு சாதாரணமா உங்களுக்கு? பெண்மையைப் பாதிக்கிற பிரச்சினை. (குறுக்கீடுகள்) இல்லை, சாதாரணமானது என்றால், பாதிக்கப்பட்ட உறுப்பினரைப் பேச விட வேண்டும்; அதிலே கூட நான் விடவில்லை.

திரு. பி.வி. இராஜேந்திரன்: விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேண்டாம் என்று சொல்கிறேன்; அது உங்களைப் போன்றவர்களுக்குச் சரியாக இருக்கும். எனக்கு அது ஒவ்வாத காரியம். அதாவது பெண்மையைப் பாதிப்பது உங்களுக்கு அவ்வளவு சாத்ரணக் காரியம் என்று இருக்கிறபோது, எனக்கு ஏற்றுக் கொள்ள முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. இராஜேந்திரன் உட்காருகிறீர்களா அல்லது நடவடிக்கை எடுக்கவா? (குறுக்கீடுகள்) நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை, பேரவை விதி 226-ல் 'Notwithstanding anything contained in these rules' என, அந்த ரூல்ஸ் இருந்தாலும்கூட, suo motu, Speaker

அனுப்பலாம் என்று இருக்கிறது. (குறுக்கீடுகள்) இப்போதுதான் நான் சொன்னேன்; நீங்கள் எங்கேயோ வெளியே போய்விட்டு வந்து சொன்னால் எப்படி? உங்களுக்கு அவ்வளவு சாதாரணமாக இருக்கிறது, பெண்மையைப் பாதிக்கிற சம்பவம். திரு. இராஜேந்திரன், எங்களுக்கு அது எக்ஸ்ட்ரா ஆர்டினரி. ஆனால் இது எங்களுக்கு ஆர்டினரி என்று சொல்கிற அளவுக்குப் பேசுகின்ற உறுப்பினர்களிடத்தில் நான் அதிகாமாகப் பேச விரும்பவில்லை. திரு. இராஜேந்திரன் உட்காருகிறீர்களா அல்லது நடவடிக்கை எடுக்கவா? உட்காருகிறீர்களா, இல்லையா? நடவடிக்கை எடுக்கவேண்டிவரும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதில் நான் முடிவு எடுத்து இருக்கிறேன். நான் முடிவு எடுத்த பிரச்சினையில், திரு. அழகிரிக்கு எந்த உரிமையும் இல்லை. உட்காருங்கள். திரு. டேனியல்ராஜ் உட்கார வேண்டும். உட்காருங்கள். திரு. ஓ. எஸ். அமர்நாத்.

6. கவன ஈர்ப்பு--தொடர்ச்சி

(அ) மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் உள்ள சி.டி. ஸ்கேன் இயங்காதது குறித்து--தொடர்ச்சி.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்திலே மதுரை மாநகரில் இருக்கின்ற இராஜாஜி அரசு மருத்துவமனை மதுரை மாவட்டத்திற்கு உதவுகின்ற வகையில் ஏழை எளிய மக்கள் பயனடைந்து வருகிறார்கள். அந்த அரசு இராஜாஜி மருத்துவமனையிலே விபத்துக்கள் பிரிவு, தலைக் காயப் பிரிவு, நியூரோலாஜி பிரிவு--இவைகள் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு சி.டி. ஸ்கேன் மிகவும் பயன்பட்டு வருகிறது. சி.டி. ஸ்கேன் கடந்த ஒரு மாதமாக இயங்காமல் இருந்தது. இப்போது அந்த சி.டி. ஸ்கேன் நிறுவனத்தாரின் சீராக்கத்திற்கு அது உட்பட்டு மீண்டும் அது இயங்கிக் கொண்டு இருப்பதாக அந்த அறிக்கையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கின்றார்கள். அதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன். நன்றி.

(ஆ) பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டிருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் அ. செல்வராசன், வே. தம்புசாமி, ஜி. பழனிசாமி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை

மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. செல்வராசன் இருக்கையில் இல்லை. திரு. வே. தம்புசாமி.

முற்பகல் *11-35*

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "*28-3-1994* முதல் தமிழ்நாட்டில் உள்ள உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் தங்களுடைய ஊதிய உயர்வு மற்றும் பல சலுகைகள் வேண்டி பள்ளிக் கல்வி இயக்ககத்தின் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

தமிழ்நாட்டில் உள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் தங்களுடைய சில கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி போராட்டம் நடத்தினார்கள். அக்கோரிக்கைகள் பின்வருமாறு:-

1. மத்திய அரசுக்கு இணையான ஊதியம் வழங்கப்படவேண்டும்.

2. உயர்நிலை/மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு மத்திய அரசு வழங்குவது போல ரூ. *150* சிறப்பூதியம் வழங்கப்படவேண்டும்.

3. மொத்தப் பணிக்காலத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு 'ஏ' பிரிவு தலைமை ஆசிரியர்களுக்கும், தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் தேர்வுநிலை மற்றும் சிறப்பு நிலை வழங்கியதைப் போல அனைத்து உயர்நிலை/மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் வழங்கப்படவேண்டும்.

4. பிற ஆசிரியர்களுக்கு வழங்கியதைப்போல ஒரு ஊதிய உயர்விற்கு இணையான தொகையைச் சிறப்புப்படியாக அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் வழங்கவேண்டும்.

5. அனைத்துத் தலைமை ஆசிரியர்களுக்கும் பணிவரன்முறை செய்து கொடுக்கப்படவேண்டும்.

1994 ஏப்ரல் 26] [பேராசிரியர் க. பொன்னுசாமி]

6. 1989 முதல் பதவி உயர்வு பெற்று உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாக பணிக்கு வந்தவர்களுக்கு எப்.ஆர். *22*(பி)-ன்படி ஊதிய நிர்ணயம் செய்யவேண்டும்.

7. மாவட்டக் கல்வி அலுவலர்/மகளிர் பள்ளி ஆய்வாளர் பதவி உயர்வின் மூலம்தான் நியமனம் செய்யவேண்டும். மேலும் நேரடி நியமனம் இப்பதவிக்கு வேண்டாம். இதற்கான வயது வரம்பு *55* என்று இருப்பதை நீக்க வேண்டும்.

8. மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அடுத்த பதவி உயர்வு முதன்மைக் கல்வி அலுவலராகக் கொடுக்கப்படவேண்டும்.

9. அனைத்து உயர்நிலை/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களை பள்ளி "முதல்வர்" என மாற்றவேண்டும்.

10. உதவிக் கல்வி அலுவலர் பணியிடங்களை உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களாக உயர்த்தி ஒன்றியப் பள்ளிக் கல்வி அலுவலராக ஆக்கவேண்டும்.

11. உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களை மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்களாகப் பதவி உயர்வளிப்பதில் தற்போது உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாகப் பணிபுரிந்துவரும் உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாகப் பதவி உயர்வு அளிக்கப்படவேண்டும்.

இக்கோரிக்கைகள் குறித்து பள்ளிக் கல்வி இயக்குநர், சங்கப் பிரதிநிதிகளுடன் *15-3-1994*-ல் பேச்சுவார்த்தை நடத்தினார். பேச்சு வார்த்தையின்போது பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் அரசின் கல்வி வளர்ச்சி முன்னேற்றத் திட்டங்களுக்கு தலைமை ஆசிரியர்கள் ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக்கொண்டார். மத்திய அரசுக்கு இணையான ஊதியம் வழங்குதல், உயர்நிலை/மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு மத்திய அரசு வழங்குவதுபோல ரூ. *150* சிறப்பூதியம் வழங்குவது, மற்றும் மொத்தப் பணிக்காலத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு 'ஏ' பிரிவு தலைமை ஆசிரியர்களுக்கும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தேர்வுநிலை மற்றும் சிறப்புநிலை வழங்குவது போல உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு வழங்குவது குறித்து அரசு பரிசீலனை செய்து, தக்க ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

பிற ஆசிரியர்களுக்கு வழங்கியதுபோல ஒரு ஊதிய உயர்விற்கு இணையான தொகையை சிறப்புப்படியாக வழங்குவது தற்போதுள்ள நிதிநிலைமை காரணமாக தாமதித்து வருகிறது. இதற்கு அரசுக்கு ஓராண்டுக்கு ரூ. 37,47,000 கூடுதல் செலவு ஆகும். மேலும் இவ்வாசிரியர்களுக்கு பணிவரன்முறை செய்தல், எப்.ஆர்.22(பி)-ன்படி ஊதிய நிர்ணயம் செய்தல் குறித்த கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. மேலும் மாவட்டக் கல்வி அலுவலர்/மகளிர் பள்ளி ஆய்வாளர் பதவிகளுக்கு நேரடி நியமனம் வேண்டாம் என்பது குறித்தும், வயது வரம்பு 55ஐ நீக்குவது குறித்தும், இவ்வாசிரியர்களுக்கு அடுத்த பதவி உயர்வு முதன்மைக் கல்வி அலுவலராக வழங்குதல் குறித்தும், இவர்களுக்கு பள்ளி 'முதல்வர்' எனப் பெயர் மாற்றுவது குறித்தும் அரசு பரிசீலிக்கும். மேலும் இவ்வாசிரியர்களுக்கு உதவிக் கல்வி அலுவலர் பணியிடங்களை உயர்த்தி ஒன்றியப் பள்ளி அலுவலராக ஆக்குவது குறித்த கோரிக்கை குறித்து பரிசீலிக்க இயலாது எனப் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களால் சங்கப் பொறுப்பாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களை மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாகப் பதவி உயர்வு அளிப்பது குறித்த கோரிக்கை பள்ளிக் கல்வி இயக்குநரால் பரிசீலிக்கப்படும்.

தமிழ்நாடு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் சங்கம் தங்களது முக்கியமான நான்கு அம்ச கோரிக்கைகளை (வ.எண். 1 முதல் 4) வலியுறுத்தி 28-3-1994 முதல் 30-3-1994 முடிய பள்ளிக் கல்வி இயக்கக வளாகத்திற்கு முன்பு அமைதியாக உண்ணாவிரதம் இருந்து 30-3-1994 டன் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டுள்ளனர். பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் மீண்டும் ஒருமுறை அச்சங்கப் பொறுப்பாளர்களுடன் பேசுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கைகள் குறித்து அரசு எதிர்காலத்தில் பரிசீலிக்கும் என்று விவர அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. மீண்டும் ஒருமுறை அந்தச் சங்கத்தோடு பேசுவதாகவும் விவர அறிக்கையில் உள்ளது. ஆகவே, காலம் கடத்தாமல் விரைவாக இந்தக் கோரிக்கையைப் பரிசீலனை செய்து நியாயம் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி

1994 ஏப்ரல் 26] [பேராசிரியர். க. பொன்னுசாமி]

தலைமை ஆசிரியர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி *28-3-1994* முதல் *30-3-1994* வரை *3* நாட்களுக்கு அமைதியாக பள்ளிக் கல்வி இயக்கக வளாகத்தின் முன்னால் உண்ணாவிரதம் இருந்தார்கள். பின்னர் அவர்களது கோரிக்கைகள் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களாலும், அரசின் மட்டத்திலும் பல்வேறு வகைகளில் பரிசீலிக்கப்பட்டு, அவர்களுடைய முக்கிய கோரிக்கையான நான்காவது கோரிக்கை--அதாவது மற்ற ஆசிரியர்களுக்கு வழங்கியதைப்போல ஒரு ஊதிய உயர்விற்கு இணையான தொகையைச் சிறப்பு ஊதியமாக அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் வழங்க வேண்டும் என்பது ஏற்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையாசிரியர்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்து, ரூ. *37* இலட்சத்து *47* ஆயிரம் செலவு ஏற்படும் என்றாலும்கூட, கருணை உள்ளத்தோடும், பெருந்தன்மையோடும், கோரிக்கையை ஏற்றுக்கொண்டார்கள். அது சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். அதைத் தொடர்ந்து ஆசிரியர்கள் இப்போது பணிக்குத் திரும்பி இருக்கிறார்கள். அமைதி நிலவுகிறது. தேர்வுத் தாள் திருத்தும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு கோரிக்கையை ஏற்றுக்கொண்டதற்காக நன்றி தெரிவித்து தந்தி அனுப்பி இருக்கிறார். நிதி தொடர்பில்லாத பிற கோரிக்கைகளை விரைவில் பரிசீலிக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து இருக்கிறார். தற்போது பிரச்சினை எதுவும் இல்லை. மற்ற கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன என்பதையும் விரைவில் நடவடிக்கையெடுக்கப்பட்டு கோரிக்கைகளை ஏற்பதற்கு அரசு முயற்சியெடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. அறிக்கை அளித்தல்.

அரசு உறுதிமொழிக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. எஸ். டேனியல்ராஜ், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *1993-94* ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் பதினொன்றாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

1994 ஏப்ரல் 26] [பேராசிரியர். க. பொன்னுசாமி]

தலைமை ஆசிரியர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 28-3-1994 முதல் 30-3-1994 வரை 3 நாட்களுக்கு அமைதியாக பள்ளிக் கல்வி இயக்கக வளாகத்தின் முன்னால் உண்ணாவிரதம் இருந்தார்கள். பின்னர் அவர்களது கோரிக்கைகள் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களாலும், அரசின் மட்டத்திலும் பல்வேறு வகைகளில் பரிசீலிக்கப்பட்டு, அவர்களுடைய முக்கிய கோரிக்கையான நான்காவது கோரிக்கை--அதாவது மற்ற ஆசிரியர்களுக்கு வழங்கியதைப்போல ஒரு ஊதிய உயர்விற்கு இணையான தொகையைச் சிறப்பு ஊதியமாக அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் வழங்க வேண்டும் என்பது ஏற்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையாசிரியர்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்து, ரூ. 37 இலட்சத்து 47 ஆயிரம் செலவு ஏற்படும் என்றாலும்கூட, கருணை உள்ளத்தோடும், பெருந்தன்மையோடும், கோரிக்கையை ஏற்றுக்கொண்டார்கள். அது சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். அதைத் தொடர்ந்து ஆசிரியர்கள் இப்போது பணிக்குத் திரும்பி இருக்கிறார்கள். அமைதி நிலவுகிறது. தேர்வுத் தாள் திருத்தும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு கோரிக்கையை ஏற்றுக்கொண்டதற்காக நன்றி தெரிவித்து தந்தி அனுப்பி இருக்கிறார். நிதி தொடர்பில்லாத பிற கோரிக்கைகளை விரைவில் பரிசீலிக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்து இருக்கிறார். தற்போது பிரச்சினை எதுவும் இல்லை. மற்ற கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன என்பதையும் விரைவில் நடவடிக்கையெடுக்கப்பட்டு கோரிக்கைகளை ஏற்பதற்கு அரசு முயற்சியெடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. அறிக்கை அளித்தல்.

அரசு உறுதிமொழிக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. எஸ். டேனியல்ராஜ், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-94 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் பதினொன்றாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

8. மானியக் கோரிக்கைகள், 1994-95, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 27--ஊரக வளர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 48--குடிநீர் வழங்கல்

(இ) கோரிக்கை எண் 49--நகராட்சி நிர்வாகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1994-95* ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண். *27*, ஊரக வளர்ச்சி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர். (குறுக்கீடு) திரு. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்--காங்கிரஸ் கட்சி வெளிநடப்புச் செய்தவுடன் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி எழுப்ப வந்தார்கள். நானும் எழுப்பினேன்–காங்கிரஸ் கட்சியோடு சேர்ந்துகொண்டு நீங்களும் அவையில் தொடர்ந்து இதுபோன்று......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சேர்ந்துகொண்டு என்று சொல்லவில்லை.

திரு. ஜி. பழனிசாமி: சேர்ந்துகொண்டு என்றால் நாங்கள் காங்கிரஸ் கட்சியோடு போகவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சேர்ந்துகொண்டு என்று சொல்லவில்லை. அதைப்போன்று என்று சொன்னார். அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு** டாக்டர் **இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள், காங்கிரஸ் கட்சியோடு சேர்ந்துகொண்டு என்று நான் சொல்லவே இல்லை. (குறுக்கீடு) காங்கிரஸ் உறுப்பினர்கள் போன்று என்று சொன்னேன். (குறுக்கீடு) போன்று என்றால் நீங்கள் சொன்னதையும் கேட்காமல், உட்காரச் சொன்னால் உட்காரவும் மாட்டேன் என்றும், விதிமுறையைக் கடைபிடியுங்கள் என்றால் கடைபிடிக்க மாட்டேன் என்றும், தகவல் என்று கேட்க முடியாது என்று சொல்லி, அதையும் கேட்பேன் என்றும் (குறுக்கீடு) ஜீரோ ஹவரில் இதையெல்லாம் கிளப்பக் கூடாது என்று சொல்லியபோது அதைக் கிளப்புவேன் என்றும் இப்படியெல்லாம் செய்ததன் காரணமாக, அதைப் போன்று என்று சொன்னேன்.

1994 ஏப்ரல் 26]

திரு. ஜி. பழனிசாமி: தலைவர் அவர்களே,.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, வேறு எதுவும் வேண்டாம். உட்காருங்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஊரக வளர்ச்சி பற்றிய 27-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.591,95,44,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2405, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'நாகை காயிதே மில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைப்பதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.591,95,44,000-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2412, திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'வேலூர் தொகுதி, சதுப்பேரி, புதுவகுர், வெங்கட்டாபுரம், கருகம்புத்தூர், சேண்பாக்கம் ஆகிய இடங்களில் ஜே.ஒய்.வி.டி. திட்டத்தின் கீழ் சமுதாயக் கூடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.591,95,44,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 48-குடிநீர் வழங்கல். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 48-குடிநீர் வழங்கல். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"குடிநீர் வழங்கல் பற்றிய 48-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.2,03,41,37,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2461, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நாகை மாவட்டத்தில் பல பாதுகாக்கப்பட்ட குடிநீர் மேல் நிலைத் தொட்டிகளைக் கட்டி, மக்களுக்குப் பயன்படாமல் இருப்பதைப் பயன்படுத்தும் அவசியத்தைக் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,03,41,37,000-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2498, திரு. எச். எம். ராஜு, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் முன்மொழியப்படவில்லை.

மானியக்கோரிக்கை எண் 49-நகராட்சி நிர்வாகம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நகராட்சி நிர்வாகம் பற்றிய 49-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.7,68,12,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2518, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'நாகை மாவட்டம், திருத்துறைப்பூண்டியில், புதிய பேருந்து நிலையம் கட்டி ஓராண்டுக் காலமாகியும் இன்னும் திறக்கப்படாமல் உள்ளது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிர்வாகம் பற்றிய 49-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,68,12,000-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2526, திரு. வி. கே. லட்சுமணன்.

*__திரு. வி.கே. லட்சுமணன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவை மாநகராட்சிக்குச் சொந்தமான கவுண்டம்பாளையம் கிராமத்தில் உள்ள உரக்கிடங்கில் நகராட்சிக் குப்பைகள் அனைத்தும் எரிக்கப்படுவதைத் தவிர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிர்வாகம் பற்றிய 49-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,68,12,000-ல் ரூ.100/- குறைக்கவேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று, பேரவையில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதில் உரையை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் தொடங்குகிறது. திரு. கே.ஆர். இராமசாமி அம்பலம்.

திரு. கே.ஆர். இராமசாமி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித்துறை மானியத்தின் மீது பேசுவதற்கு

@ 269 முதல் 392 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II மற்றும் III -ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

பொறுத்தமட்டில், இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்கள் முழுவதுமாக, ஏறத்தாழ 80 சதவீதம் மத்திய அரசினுடைய நிதி ஒதுக்கீட்டால் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மத்திய அரசு பல திட்டங்களை நமக்குக் கொடுத்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்றபோது, ஏறத்தாழ 80 சதவீதத்திற்கு மேலே ஊராட்சி ஒன்றியங்கள் மத்திய அரசினுடைய நிதியினால் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்ற தவறான தகவலை அவைக்குத் தந்து கொண்டிருக்கிறார்கள். உண்மை நிலை அப்படி அல்ல. இன்றைக்குத் தமிழகத்திலே இப்படிப்பட்ட உண்மைக்குப் புறம்பான செய்தியைச் சொல்லி ஒரு பிரமையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், இன்றைக்கு இந்தத் துறைக்கு இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் ரூ.583 கோடியே 12 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். இதிலே மத்திய அரசினுடைய பங்கு 48 சதவீதம்தான். மாநில அரசினுடைய பங்கு 52 சதவீதமாக இருக்கிறது. இதிலே ஏதோ 80 சதவீதத்திற்கு மேலே மத்திய அரசு பணம் தமிழகத்திற்கு வழங்குகிறது என்று சொல்வது தவறு என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

முற்பகல் 11-45

திரு. கே.ஆர். இராமசாமி அம்பலம்: ஐ.ஆர்.டி.பி.,ஜே.வி.வி.டி. போன்ற திட்டங்களுக்கு மத்திய அரசு 80 சதவீத அளவிற்கு பணத்தை ஒதுக்கிக் கொடுக்கிறது என்பதைத்தான் நான் கூறினேன். மத்திய அரசு திட்டங்களை வகுத்து, இவ்வாறுதான் செயல்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால் சில பல மாற்றங்களை நமது அரசு செய்திருக்கிறது. அதை அவ்வாறு செய்யாமல் மத்திய அரசினுடைய திட்டங்களை முழுமையாக ஏற்றுச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உதாரணமாக இப்போது ஐ.ஆர்.டி.பி. கடன்கள் வழங்குகிறோம். அந்தக் கடன்கள் சரியாக ஏழை எளிய மக்களுக்குப் போய்ச் சேர்கிறதா

1994 ஏப்ரல் 26] [திரு. கே.ஆர். இராமசாமி அம்பலம்]

என்பதை இந்த அரசு நல்லமுறையிலே கண்காணிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஐ.ஆர்.டி.பி. கடன்களைப் பொறுத்தமட்டில், இன்றைக்கு எந்த அடிப்படையிலே அந்தக் கடன்கள் வழங்கப்படுகின்றன என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்தக் குழுக்கள் எல்லாம் செயல்படுகிறதா என்பதை நீங்கள் நன்றாக எண்ணிப் பார்க்க வேண்டும். அதிலே எந்தவிதமான அரசியல்வாதிகளுடைய குறுக்கீடுகளும் இருக்கக் கூடாது. அரசியல்வாதிகளுடைய குறுக்கீடுகள் இருந்தால் நிச்சயமாக ஏழை எளிய மக்களுக்குச் சரியான முறையில் அது போய்ச் சேருமா என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்தக் கடன்களை வழங்குவதற்கு ஒரு கமிட்டி ஃபார்ம் பண்ணினீர்கள். அந்தக் கமிட்டி எந்த அளவிற்குச் செயல்படுகிறது என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இதற்கு முன்பாக சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாயைக் கொடுத்து செலவு செய்யச் சொன்னீர்கள். நான் இந்த அறிக்கையிலே பார்க்கும்போது அந்த வேலைகள் முடிந்ததாகக் கூறியிருக்கிறீர்கள். ஆனால் பல ஊராட்சி ஒன்றியங்களில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில் எடுத்துச் செய்யக்கூடிய திட்டங்களுக்காக ஒதுக்கிய ரூபாய்கள் செலவு செய்யப்படவில்லை. செலவு செய்யப்படாமலேயே நீங்கள் முழுமையாக செய்து முடித்திருப்பதாகக் கூறியிருக்கிறீர்கள். அதற்கான விவரத்தை....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுகின்றபோது, சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்திலே பெரும்பான்மையான ஒன்றியங்களில் அந்தப் பணம் செலவிடப்படவில்லை என்ற ஒரு ஆதாரமற்ற குற்றச்சாட்டை இங்கே எடுத்து வைக்கிறார். கொள்கைக் குறிப்பிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறோம், சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டிருக்கிறது என்று. அதிலே எந்தவிதமான குறைபாடுகளும் இல்லை. அப்படி ஏதாவது ஒன்றியங்களிலே அந்தத் தொகை செலவிடப்படாமல் இருக்குமென்று நீங்கள் குறிப்பிட்டுச் சொன்னால், நாங்கள் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.ஆர். இராமசாமி அம்பலம்: எங்களது மாவட்டத்தில் என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய அத்தனை ஒன்றியங்களிலுமே அந்த சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் முழுமையாக முடியவில்லை. அதற்கான ஆதாரங்கள் என்னிடம் இருக்கின்றன. நான் ஆதாரங்களைக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.

அடுத்தபடியாக ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தமட்டில், இப்போது இரண்டு ஆணையாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் என்ன வேலை செய்கிறார்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அரசிலே நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. என்று கூறுகிறீர்கள். ஆனால் இரண்டு ஆணையாளர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் இரண்டு ஆணையாளர்கள் தேவையா என்பதை நீங்கள் நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு ஆணையாளர்களுடைய வேலை என்ன என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு நீங்கள் ஆணையாளர்களிடம் பரிசுச் சீட்டுக்களைக் கொடுத்து விற்பனை செய்யச் சொல்லியிருக்கிறீர்கள். அவர்கள் ஒவ்வொரு ஊருக்கும் சென்று பரிசுச் சீட்டுக்களை விற்பதற்கு முனைந்து இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் சென்ற வாரம் சென்றிருக்கும்போதுகூட..... (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெளிவாகச் சொல்ல வேண்டும், என்ன பரிசுச் சீட்டு என்று. ஏதோ லாட்டரிச் சீட்டுபோல் சொல்லக் கூடாது. அது என்ன பரிசுச் சீட்டு, எதை விற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டும். இன்றைக்கு முழுமையாக இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்திலே இருக்கின்ற ஒன்றியங்கள் மட்டும்தான் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. மத்திய அரசு வழங்கியிருக்கிற அத்தனை தொகையையும் இந்தியத் துணைக் கண்டத்திலே செலவிடுவதில் முதல் நிலையிலே இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இது மத்திய அரசு சொல்லியிருக்கின்ற செய்தி. இதையெல்லாம் நான் என்னுடைய பதிலிலே எடுத்துச் சொல்ல இருக்கிறேன். நீங்கள் கொடுத்திருக்கின்ற பணம் எவ்வளவு? மாநில அரசில் ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் எவ்வளவு, அதிலே ஐ.ஆர்.டி.பி.க்கு எப்படியெல்லாம் நாங்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்ல இருக்கிறேன். ஐ.ஆர்.டிபி.யிலே இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திலே இந்த மாநிலம் முதல்

1994 ஏப்ரல் 26] [திரு. டி.எம். செல்வகணபதி]

நிலையிலே இருக்கிறது. இதுபோன்ற நிகழ்ச்சியெல்லாம் நான் சொல்லியிருக்கிறேன். இப்படி முதல் தரமான மாநிலமாக இந்தியத் துணைக் கண்டத்திலே உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால், பரிசுச் சீட்டு விற்றுக் கொண்டிருந்தால் அது முடியாது என்பதை நீங்கள் உணரவேண்டும்.

திரு. கே.ஆர். இராமசாமி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறும்போது கூறினார்கள் மத்திய அரசால் பாராட்டப்பட்டிருக்கிறது என்று. உண்மைதான். நீங்கள் நல்லது செய்யும்போது நாங்கள் அதைப் பாராட்டுவதற்குத் தயாராக இருக்கிறோம். அதேபோல், இன்றைக்கு ஆணையாளர்கள் பரிசுச் சீட்டுக்களை விற்கிறார்கள் என்று நான் கூறினேன். (குறுக்கீடு) சிறு சேமிப்பு என்றால் சிறுசேமிப்பிலே ஒரு பரிசுக் கூப்பன் வைத்திருக்கிறீர்கள்.... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர்.

முற்பகல் 11-50

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுசேமிப்புக்கான வைப்பு நிதி வசூலிப்பதற்கும் பரிசுச் சீட்டை விற்பதற்கும் வேறுபாடு உள்ளது. பரிசுச் சீட்டுகள் என்பது லாட்டரிச் சீட்டுகளை வாங்கி விற்கின்றபோதுதான் வரும். ஆனால் சிறு சேமிப்பு என்பது மத்திய அரசு, மாநில அரசு இரண்டும் சேர்ந்து மத்திய அரசின் சார்பாக நடைபெறுகின்ற ஒன்று. இதில் மத்திய அரசுக்கு 100க்கு 100 பங்கு உண்டு. மாநில அரசுக்கும் 100க்கு 100 பங்கு உண்டு. சிறுசேமிப்பின் மூலம் வருகிற தொகைகளிலே 25 சதவீதம் மத்திய அரசுக்கும் 75 சதவீதம் மாநில அரசுக்கும் கடனாக வழங்கப்படுகிறது. அதைத் திருப்பித் தர வேண்டிய பொறுப்பு மாநில அரசு, மத்திய அரசு இரண்டையும் சேர்ந்தது. ஆக மத்திய அரசும் சேர்ந்துதான் அந்தப் பணிகளைச் செய்கிறது. ஆகவே மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாநகராட்சியினுடைய ஆணையாளர்கள், சிறப்பு அதிகாரிகள் ஆகிய அத்தனை பேரும் நிதி திரட்டுகிற பணியிலே ஈடுபடுத்தப்படுகிறார்கள். வருவாய்த் துறை முழுவதும் ஈடுபடுத்தப்படுகிறது. பொது மக்களும் ஈடுபடுகிறார்கள். அதற்கு ஏஜென்டுகளும் இருக்கிறார்கள். ஆகவே சிறு சேமிப்புத் தொகையைத் தான், வைப்பு நிதியிலே வையுங்கள், சேமிப்பு செய்யுங்கள் என்று 11 வகையான திட்டங்கள் வகுக்கப்பட்டு இருக்கிறதே தவிர சீட்டு விற்கின்ற நிலையில் இல்லை. 500 ரூபாய்க்கு மேலே யாராவது தொகை கட்டுவார்களேயானால் அவர்களுக்கு போஸ்ட் ஆபிஸ் பரிசுச் சீட்டு தரும், அதிகாரிகள் யாரும் பரிசுச் சீட்டு தருவதே இல்லை.

திரு. கே.ஆர். இராமசாமி அம்பலம்: இப்போது ஆணையாளர்கள் இதுபோன்ற வேலைகளைச் செய்ய வேண்டுமா என்று நீங்கள் சிந்திக்க வேண்டும். இன்றைக்கு வளர்ச்சிப் பணிகளிலே அந்தந்த பகுதிகளிலே இருக்கக்கூடிய வளர்ச்சிப் பணிகளிலே, நீங்கள் ஒதுக்கியிருக்கிற பணம் ஒழுங்காக செலவு செய்து வேலை செய்யப்படுகிறதா என்று பார்ப்பதை விட்டுவிட்டு இன்றைக்கு இதுபோன்ற காரியங்களில் அவர்கள் திசை திருப்பப்படுகிறார்கள். ஆகவே இதை நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தாற்போல இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கக் கூடிய விளக்குகளிலே பெரும்பாலான விளக்குகள் எரிவது இல்லை. அதற்கு சில காரணங்கள் இருக்கின்றன. இன்றைக்கு வாங்கக்கூடிய பல்புகள் தரமானதாக இல்லை என்று கூறுகிறார்கள். ஆகவே ஊராட்சி ஒன்றியத்திலே இருந்து இதுபோன்ற சாமான்களை வாங்கிக் கொடுக்கிறபோது அதை ஈ.பி.யிலே உள்ளவர்கள் வந்து பிக்ஸ் பண்ண வேண்டியிருக்கிறது. ஈ.பி.க்காரர்களை ஊராட்சியிலே இருப்பவர்கள் உடனடியாக வந்து இதைச் செய்து கொடுங்கள் என்றால் அவர்கள் அதைச் செய்து கொடுப்பதற்குத் தயாராக இல்லை. எனவே ஹெல்ப்பர்கள் போன்ற போஸ்டுகளை ஊராட்சி ஒன்றியத்திற்கு நீங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல இன்றைக்கு உதிரி சாமான்களை வாங்குவதற்கு ஏதோ ஒரு கம்பெனியை பிக்ஸ் பண்ணி அந்தக் கம்பெனியிடமிருந்துதான் வாங்க வேண்டும் என்று கூறுகிறீர்கள். அந்தப் பொறுப்பை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் மட்டத்திலேயாவது பிரித்துக் கொடுத்து நீங்கள் செய்வீர்கள் என்றால், இன்னும் தரமான சாமான்கள் கிடைக்கும் என்று நான் எண்ணுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தெருவிளக்குகளுக்கு பயன்படுத்தப்படுகின்ற மின் சாதனங்களையும் பல்புகளையும் ஏதோ ஒரு கம்பெனியிலே வாங்கச் சொல்லுகிறார்கள், அது தரமானதாக இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு குற்றச்சாட்டை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது உண்மைக்குப் புறம்பானது. காரணம் இன்றைக்கு பல்வேறு அரசினுடைய உயர் மட்ட அதிகாரிகளைக் கொண்ட ஒரு உயர் மட்ட குழுதான் இந்த மின்

சாதனங்களையும், இந்த பல்புகளையும் வாங்குவதற்கு முடிவு எடுக்கிறது. முறையாக மேனுபேக்சர்ஸ் என்று சொல்லுகிற உற்பத்தியாளர்கள் அத்தனை பேர்களையும் வரவழைத்து அதில் தரமானதைத்தான் இன்றைக்கு எடுத்திருக்கிறார்கள். அதன் வாயிலாக அந்தந்த மாவட்டங்களுக்கு இந்தந்த கம்பெனி என்று அந்தக் கமிட்டி ஒதுக்கியிருக்கிறதோ அதன் அடிப்படையிலேதான் இன்றைக்கு அந்த மின் சாதனங்களைப் பெற்றுக்கொண்டிருக்கிறோம் என்று தெளிவாகக் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கே.ஆர். இராமசாமி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற உதிரி சாமான்களை வாங்கிக் கொடுப்பதாலே, அதை பிக்ஸ் பண்ணும்போது அது அதிக நாள் உழைப்பது இல்லை. உடனடியாக பியூஸ் போய்விடுகிறது. ஏதாவது கோளாறு வருகிறது. அதை சீரமைக்க இந்த அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்த படியாக படித்த ஏழைப் பெண்களுக்கு திருமணத்தின்போது நீங்கள் உதவித் தொகை வழங்குகிறீர்கள். அந்த உதவித் தொகைக்கு ஒரு டார்கெட்-ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு இவ்வளவு தொகை என்று பிக்ஸ் பண்ணுகிறீர்கள். அதற்கு மேலாக திருமணம் நடக்கிறபொழுது, அந்தப் பெண்களுக்கு இந்த உதவித் தொகை கிடைப்பது இல்லை. மேலே இருக்கக்கூடிய மேலதிகாரிகளை அணுகிக் கேட்கிறபொழுது எங்களுக்கு இருக்கக்கூடிய டார்கெட் முடிந்து விட்டது, அதனால் கொடுக்க முடியாது என்று கூறுகிறார்கள். அரசாங்கம் இதை மறுபரிசீலனை செய்து நீங்கள் அறிவித்தபடி எல்லா தகுதி வாய்ந்த பெண்களுக்கும் கடன் வழங்க ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்ற நிலைமை தமிழ்நாட்டிலே அநேகமாக அத்தனை ஊராட்சி ஒன்றியங்களிலுமே இருக்கிறது என்று நான் எண்ணுகிறேன்.

முற்பகல் 11–55

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக இப்போது ஏழை ஹரிஜன மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள். இன்றைக்கு அந்தத் தொகுப்பு வீடுகளுடைய நிலை என்ன என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்த வீடுகளிலே பல இடங்களிலே குடிபோக முடியாத நிலை இருக்கிறது. அதில் ஒரு குடும்பம் இருந்து வாழக்கூடிய அளவிற்கு அந்த டிஸைன் கிடையாது. அதற்குக் காரணம் நீங்கள் ஒதுக்கக்கூடிய நிதி போதாது என்று கூறுகிறார்கள். அந்த நிதியை

இன்னும் அதிகப்படுத்தி நல்ல முறையிலே ஏழை ஹரிஜன மக்களுக்கு நீங்கள் கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்குப் பள்ளிக் கட்டிடம் போன்றவற்றிற்கு நீங்கள் நிதி ஒதுக்கி....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்த மானியக் கோரிக்கையிலே பேசுகின்றபோது குறுக்கிடாத அளவுக்குப் பேசினால், நல்ல ஆலோசனைகள் வழங்கினால் நலமாக இருக்கும். அதை விட்டுவிட்டு பேச ஆரம்பித்ததிலிருந்து பொதுவான குற்றச்சாட்டு, ஆதாரமற்ற குற்றச்சாட்டு என்று தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கிறார். ஆகவேதான் அடிக்கடி குறுக்கிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. தற்போது பேசுகின்றபோதுகூட ஒரு பொதுவான குற்றச்சாட்டு... இன்றைக்கு இருக்கின்ற தொகுப்பு வீடுகளிலே மக்கள் குடியேற முடியவில்லை, தரமானதாக இல்லை, அதற்கு நிதி பற்றாக்குறையாக இருக்கிறது என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு தமிழகம்தான் இந்தியாவிலேயே இந்தத் தொகுப்பு வீடுகள் கட்டுகின்ற பணியிலே முதல் நிலையிலே இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் உங்களுடைய மத்திய அரசு ஆய்வுக்குப் பிறகு கொடுக்கப்பட்ட ராங்க் நம்பர் 1. மஹாராஷ்டிரா, குஜராத் போன்ற மாநிலங்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன. இந்தத் தொகுப்பு வீடுகள் கட்டுவதிலே தமிழகம் முதல் நிலையிலே இருந்து வருகிறது. அதற்கெல்லாம் காரணம் இருக்கிறது.

தொகுப்பு வீடுகளுடைய தரம், அதற்குக் கொடுக்கப்பட்டு இருக்கின்ற செலவினம் முறையாகச் செலவழிக்கப்பட்டிருக்கிறதா என்று பார்க்கிறோம். இரண்டாவதாக அவர்கள் கொடுத்திருக்கின்ற இலக்கு. இன்றைக்கு 432%, இந்திய அரசாங்கம் வைத்திருக்கின்ற இலக்குக்கு மேலாகப் பூர்த்தி செய்திருக்கிறோம். கடந்த 1992-93ஆம் ஆண்டு மட்டும் இந்தியத் துணைக் கண்டத்தினுடைய இலக்கு 114%. ஆனால் தமிழகம் 432% எய்தியிருக்கிறது. அதிலே எந்தவிதமான குறைபாடுகளும் இல்லை. இன்றைக்கு ஆதிதிராவிட மக்களுக்காக தமிழகம் மட்டும்தான், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு மட்டும்தான் அவ்வளவு வீடுகளை (மேசையைத் தட்டும் ஒலி) அகில இந்திய

இலக்கை மிஞ்சுகின்ற அளவில் ஒதுக்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள்.

திரு. கே.ஆர். இராமசாமி அம்பலம்: துணைத் தலைவர் அவர்களே, தரமான வீடுகளை அமைத்துக் கொடுத்தால் அங்கே இருக்கக்கூடிய ஹரிஜன மக்கள் நல்ல முறையிலே வாழ்வார்கள் என்பதைத்தான் நான் கூறினேன். பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கி இருக்கிறார்கள். இப்போது பள்ளிக் கட்டிடத்திற்கு 1,80,000 ரூபாய் அளவுக்கு நீங்கள் நிதி ஒதுக்குகிறீர்கள். ஆனால் டெக்னிக்கல் ஸைடிலே இருக்கக்கூடிய என்ஜினியர்கள் அதை அப்ரூவ் பண்ணும்போது அந்தத் தொகையை ஏற்றுக்கொள்வது இல்லை. ஒரு பள்ளிக்கூடத்திற்கு 30,000 ரூபாய் அளவுக்கு கூடுதலாகத்தான் அந்த எஸ்டிமேட்டை அப்ரூவ் பண்ணுகிறார்கள். இந்த இடையிலே இருக்கக் கூடிய தொகையை யார் எந்த வகையிலே செலுத்துவது என்பதிலே பல பிரச்சினைகள் ஏற்பட்டு இருக்கின்றன. அதை நீங்கள் சரி செய்து என்ஜினியரிங் ஸைடிலே சொல்லக்கூடிய தொகையை நீங்கள் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் ஒதுக்கித் தர வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளிக்கூடங்கள் கட்டுகின்றபோது இன்றைக்கு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் வாயிலாகக் கட்டப்படுகின்றன. இன்றைக்கு அப்படி ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் வாயிலாக ஒரு இனத்திற்கு ஒரு கட்டிடம் கட்டப்பட வேண்டும் என்று சொன்னால் அதற்கு என்று மத்திய அரசு தனியாக டைப் டிஸைனும், எந்த அளவுக்கு நிதி ஒதுக்கீடும் செய்யப்பட வேண்டும், ஒரு கட்டிடத்திற்கு எவ்வளவு தொகை தேவைப்படுகிறது என்றெல்லாம் இன்றைக்கு நிர்ணயித்து இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் நாம் நிதியை ஒரு பள்ளிக்கூடத்திற்கு எவ்வளவு தேவையோ அவ்வளவு ஒதுக்கிக்கொண்டிருக்கிறோம். அதற்கு மேலாக இன்றைக்கு ஒரு நார்ம் சொல்லியிருக்கிறோம் என்று சொன்னால் ஒரு பள்ளிக் கட்டிடத்திலே, உதாரணத்திற்கு கேரிடாரை எடுத்துக்கொள்வோம். அந்த வராண்டா என்று சொல்லுகின்றதிலே, இத்தனை அடியிலே கட்ட வேண்டும் என்று சொல்லுகின்றபோது அந்தக் குறிப்பிட்ட அளவிலே கட்டினால்

அதற்குண்டான மதிப்பீடு கொடுக்கப்பட்டிருக்கின்ற தொகை போதுமானதாக இருக்கும். அதைவிட்டுவிட்டு, அது போதுமானதாக இல்லை, பெரிதாகக் கட்டினால் அது நல்லமுறையிலே இருக்கும், சௌகரியமாக இருக்கும் என்ற காரணத்தினால் ஒருசில இடங்களிலே மட்டும் இந்தக் குறைபாடு ஏற்பட்டிருக்கிறது. அதற்குண்டான தொகையை அதிகப்படுத்துகிறோம். இதைக்கூட கட்டுப்படுத்துகின்ற வகையிலே இன்றைக்குத் துறையின் வாயிலாக உத்தரவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

திரு. கே.ஆர். இராமசாமி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த வித்தியாசமான தொகையை உடனடியாக அரசு கொடுத்து அந்தப் பிரச்சினையை முடித்து வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் பஞ்சாயத்து உதவியாளர்களை நியமித்திருக்கிறோம். இன்றைக்கு வீட்டு வரி வசூல் செய்வதிலிருந்து எல்லாப் பணிகளையும் கிராம மட்டத்தில் செய்யக் கூடிய ஊழியர்கள் அவர்கள்.... அவர்களுக்கு ஒரு நபருக்கு 2,3 பஞ்சாயத்துகளில் இன்-சார்ஜ் போட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்னவென்றால் போதிய அளவு உதவியாளர்கள் இல்லை. நீங்கள் ஏன் அதை நியமிக்காமல் இருக்கிறீர்கள் என்பதை நீங்கள் சிந்தித்து உடனடியாக அந்த உதவியாளர்களை நியமித்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு குறிப்பிட்ட பஞ்சாயத்தில் ஒரு உதவியாளர் ஒழுங்காக வேலை செய்யவில்லை என்றால் அவரை யார் அங்கே இருந்து மாறுதல் செய்வது என்பதுகூட-அங்கே இருக்கக்கூடிய ஆணையாளர் மற்றும் அந்த அதிகாரிகளுக்கு அதிகாரம் இல்லை என்று சொல்லுகிறார்கள். அதையும் நீங்கள் சிந்திக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிருஷ்ணா நதிநீரை சென்னை மாநகருக்குக் கொண்டு வருவதற்குத் திட்டம் போட்டு பல கோடி ரூபாயை நீங்கள் செலவு செய்து கொண்டிருக்கிறீர்கள். அதை இன்னும் ஏன் விரைவுபடுத்தி அந்தத் தண்ணீரை இங்கே கொண்டு வருவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்யவில்லை என்று கேட்டு, இந்த மாநகரத்தில் இருக்கக்கூடிய மக்களுக்கு வேகமாக அந்தத் தண்ணீர் கிடைக்கவேண்டும். அப்போது

தான் குடிநீர் பிரச்சினையை சமாளிக்க முடியும் என்று எண்ணுகிறேன். அதை நீங்கள் இன்னும் துரிதமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா நிதி நீர் திட்டத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு இரண்டு மாநிலமும் சேர்ந்து செய்கின்ற திட்டம். தெலுங்கு-கங்கை திட்டம் என்று சொல்லுகின்ற அளவிலே ஆந்திர மாநிலமும், தமிழகமும் சேர்ந்து செய்கின்ற இந்தத் திட்டத்தில் தமிழகத்தைப் பொறுத்தவரையில் எந்தவிதமான காலதாமதமும் இல்லை. ஆண்டுக்கு ஆண்டு ஒதுக்கப்படுகின்ற தொகையையும் இன்றைக்கு பக்கத்து மாநிலமாக இருக்கின்ற ஆந்திராவில் உங்கள் கட்சி ஆளுகின்ற மாநிலத்திலிருந்து கொடுக்கப்படுகின்ற தொகையையும் நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் இந்தத் திட்டம் கடுமையான தேக்கத்தில் இருந்தது. ஆனால் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் கடந்த 2½ ஆண்டுக் காலத்தில் இந்தத் திட்டம் முடுக்கி விடப்பட்டு வருகின்ற 1996 ஆம் ஆண்டு இறுதிக்குள் சென்னை மக்களுக்கு குடிநீர் வழங்கப்படவேண்டுமென்று உத்தரவு வழங்கியிருக்கிறார்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்.

அதோடு மட்டுமல்ல, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் திட்டத்தின் நோக்கத்தை, இந்தத் திட்டத்தின் பயனை கருத்தில் கொண்டுதான் 3 முறை ஆந்திரா மாநிலத்திற்குச் சென்று அங்கேயும் அந்தப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றால்தான்; முறையாக நடைபெற்றால் தான்; நம்முடைய வேகத்திற்கு இணையாக நடைபெற்றால்தான் அந்தப் பணிகள், அந்தத் திட்டம் வெற்றிகரமாக முடியும் என்ற நோக்கத்திலே இன்றைக்கு நீங்கள் ஆளுகின்ற அந்த மாநிலத்திற்குச் சென்று முதலமைச்சரைச் சந்தித்து மூன்று முறை அங்கே கூட்டங்கள் நடத்தி, இதற்கான தீவிர முயற்சிகளை மேற்கொண்டிருப்பதை நீங்கள் மறந்து விடக் கூடாது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. இராமசாமி, அம்பலம் 1 நிமிடத்தில் பேசி முடித்துவிடுங்கள். 22 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. கே.ஆர். இராமசாமி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்தை விரைவாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, நீங்கள் வீராணத்திலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்காக ஒரு திட்டத்தை இப்போது செயல்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். ஆரம்பத்திலே ஏறத்தாழ 80 கோடி ரூபாய் என்று கூறினீர்கள். ஆனால் இப்போது அது 800 கோடி ரூபாய் என்று கூறுகிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரியான விவரங்கள் இல்லாமல் அவையில் தனக்குத் தோன்றியபடி கருத்துக்களை எடுத்துரைக்கக்கூடாது. நான் சொல்லுவது எல்லாம் எந்தக் காலக் கட்டத்திலும் ஆரம்பத்திலே இந்த அரசு 80 கோடி ரூபாய் வீராணம் திட்டத்திற்கு என்று சொல்லவில்லை. எந்தக் காலக் கட்டத்திலும் இந்த அரசு இப்போது 800 கோடி ரூபாயாக அது ஆகியிருக்கிறது என்பதையும் சொல்லவில்லை. ஆகவே, விவரங்கள் இல்லாமல் தயவுசெய்து தெரிவிக்க வேண்டாம். ஆரம்பத்திலே இந்தத் திட்டத்தைப் போடுகின்றபோது ஒரு மதிப்பீடு கொடுக்கப்பட்டது. தற்போது 720 கோடியாக அந்தத் திட்ட மதிப்பீடு உலக வங்கியால் ஒப்புதல் பெறப்பட்டு இன்றைக்கு பணிகள் துவங்குகின்ற நிலை இருக்கிறது. உலக வங்கியினுடைய அந்த அப்ரைசல் கமிட்டி என்று சொல்லுகின்ற அந்தக் கமிட்டிகூட, உலக வங்கி வல்லுநர்கள் கூட இன்றைக்கு மே மாதத்தில் தமிழகத்திற்கு வர இருக்கிறார்கள். இது 80 கோடி, 800 கோடி என்று சொல்லி இதிலே தயவுசெய்து குழப்பத்தை உருவாக்க வேண்டாம் என்று மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே.ஆர். இராமசாமி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்தை நீங்கள் உடனடியாக

முடித்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வீராணம் திட்டத்தைப் பொறுத்தவரையில் பல கோடிகள் இதிலே செலவு செய்வதாகக் கூறியிருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுவதுபோல் பல கோடிகளை செலவு செய்வதாகக் கூறியிருக்கிறீர்கள். அதிலே எந்தவிதமான தவறும் நடக்காமல் நீங்கள் அதை செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து...*(மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. இராசாமி அம்பலம், *(குறுக்கீடு)* பாயின்ட் ஆப் ஆர்டர், திரு. வேலையா.

திரு. டி. வேலையா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது விதிமுறைகளின்படி ஓர் உறுப்பினர் பேசுகிறபோது தலைவரை நோக்கித்தான், தலைவரைப் பார்த்துத்தான் பேச வேண்டுமென்று இருக்கிறது. ஆனால், இந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரடியாகவே மாண்புமிகு அமைச்சரைப் பார்த்து, நீங்கள், நீங்கள் என்று சொல்கிறார்கள். இதை நான் ஒரு பெரிய குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. ஆனால், இப்படித்தான் பதிவாகிறதா என்பதைத் தெரிந்துகொள்வதற்காகத்தான், இதை நான் சொல்கிறேன்.

பிற்பகல் 12–05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. இராசாமி அம்பலம், இனிமேல் நீங்கள் பேசுகின்றபோது இங்கே, தலைவரைப் பார்த்துப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே.ஆர். இராமசாமி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் விதிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் பேசுகிறேன். எந்தவிதமான தவறான நோக்கத்தோடும் நான் பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. இராமசாமி அம்பலம், நீங்கள் ஒரே ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக் கொள்ளுங்கள். இப்போது மணி *12–06* ஆகிறது.

திரு. கே.ஆர். இராமசாமி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைப் பொறுத்த மட்டில் திருவாடனையிலே ஒரு 'E.E., TWAD' ஆபீஸ் இருந்தது. எனது தொகுதிக்குப் பக்கத்திலே, காரைக்குடியிலே ஒரு இ.இ. ஆபீஸ் இருந்தது. இரண்டையும் மாற்றினார்கள். இதுபற்றி சம்பந்தப்பட்ட நமது

மாண்புமிகு அமைச்சர் அவர்களைச் சந்தித்துக் கூறினோம். அந்த இ.இ. ஆபீஸ் எங்கேயோ போய் விட்டது. எங்கே போய்விட்டது என்று எங்களுக்குத் தெரியவில்லை. அது எங்கே இருக்கிறது என்றே எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால், எங்கள் பக்கத்திலே இருக்கக்கூடிய குடிதண்ணீர் பிரச்சினை ரொம்ப மோசமாக இருக்கிறது. ஏறத்தாழ, இந்தச் சபைக்கு வந்ததிலிருந்து நான் இந்தப் பிரச்சினையைக் கிளப்பிக்கொண்டு இருக்கிறேன்.**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. இராமசாமி அம்பலம், சீக்கிரம் பேசி முடித்துக் கொள்ளுங்கள். ** என்ற விவரம் கொடுக்க வேண்டும். சீக்கிரம் பேசி முடியுங்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திலே குடிநீர் பஞ்சம் கடுமையாக இருப்பது உண்மைதான். ஆனால், ** என்று சொல்வது ஒரு சரியான கருத்தாக இருக்காது.

அப்படிப்பட்ட நிகழ்வுகள் இந்த அரசிலே நடைபெறவில்லை. இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகுதான் இன்றைக்கு இராமநாதபுரம் மாவட்டத்திற்கு என்று ஒரு பிரத்யேக திட்டத்தை வழங்கி, கடல்நீரை நன்னீராக்கும் அந்தத் திட்டத்தை இந்த அவையிலே அறிவிக்க இருக்கிறார்கள். அவர்களுடைய ஆணையின் பேரிலே, கட்டளையின் பேரிலே இன்றைக்குச் சுமார் 53 கோடி ரூபாய் மதிப்புள்ள அந்த desalination plant என்று சொல்லுகின்ற, கடல் நீரிலிருந்து உப்பை நீக்கி, இயந்திரத்தின் மூலமாக நீக்கி, கடல்நீரை நன்னீராக்குகின்ற திட்டத்தை இன்றைக்கு அறிவிக்க இருக்கிறோம். ஆனால் ஏற்கெனவே உங்கள் பகுதியிலே இருக்கின்ற திட்டங்களையெல்லாம் செம்மைப்படுத்துகின்ற வகையிலேதான், அந்தத் திட்டங்களிலே இருக்கின்ற பழுதுகளையெல்லாம் நீக்கி, இன்றைக்கு நல்லமுறையிலே உங்களுடைய பகுதியிலே இருக்கிற ஆழ்குழாய்க் கிணறுகளும் சரி; விசைப்பம்பு கிணறுகளும் சரி, இயங்கிக்கொண்டு இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. இராமசாமி அம்பலம், சீக்கிரம் பேசி முடித்துக் கொள்ளுங்கள். ஒரு நிமிடத்தில்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பேசி முடித்து கொள்ளுங்கள். திரு. இராமசாமி அம்பலம், தாங்கள் பேசுகின்றபோது, கடைசியாக **என்று சொல்லி இருக்கின்றீர்கள். அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏதாவது இருந்தால், நீங்கள் அதனையெல்லாம் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கொடுத்திருக்கலாம். அப்படியெல்லாம் கொடுக்காமல், நீங்கள் வெறுமனே பேசி இருக்கின்ற காரணத்தால், அது அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது.

திரு. கே.ஆர். இராமசாமி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை நான் சென்ற ஆண்டே பேசி இருக்கிறேன். அது அவைக் குறிப்பிலே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சென்ற ஆண்டு அவைக் குறிப்பிலே இருந்ததற்கு. அந்தக் கருத்தை நீங்கள் சொல்கின்ற அந்தச் சந்தர்ப்பத்திலே நீங்கள் அதற்கான ஆதாரத்தைக் கொடுத்திருக்கலாம். ** என்ற விவரங்களை எல்லாம் நீங்கள் கொடுத்திருந்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்திருப்பார்கள். எனவே, அது வேண்டாம். அவைக்குறிப்பிலே இருந்து அது நீக்கப்படுகிறது. இப்போது 12.09 ஆகிறது. சீக்கிரம் பேசி முடித்துக்கொள்ளுங்கள். இன்னும் 10, 12 பேர் பேச வேண்டியிருக்கிறது. ஒரே ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

திரு. கே.ஆர். இராமசாமி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற குறைகளை எனது தொகுதியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிவர்த்தி செய்து தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். உள்ளாட்சித் துறையைப் பொறுத்தமட்டில், கடைசியாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பல வேலைகள் தரமாக இல்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்களே எங்களது மாவட்டத்திற்கு வருகை தந்து சில வேலைகளில் தவறு நடந்துள்ளதைக் கண்டுபிடித்து தகுந்த தண்டனையும் வழங்கிவிட்டு வந்திருக்கிறார்கள். இதைப்போல, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் வரவேண்டும். தப்பாக நடப்பவர்களுக்குத் தகுந்த தண்டனை கொடுக்கவேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன், நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மாவட்டத்திற்குச் சென்று இருந்தோம். இப்போது பேசும்போது, என்னைக்கூட குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறார்கள். அவர்களுடைய பகுதிகளிலே அன்றைக்கு மொத்தம் கிட்டத்தட்ட 28 பணிகளை ஆய்வு செய்தோம். அதிலே, ஒரு இடத்திலே ஒரு தவறு நடந்திருக்கிறது. அதற்காக நடவடிக்கை எடுத்திருக்கிறோம். மற்ற 27 இடங்களிலே முறையான பணிகள் நடைபெற்றிருக்கின்றன. ஒரு கட்டிடம் சரியான முறையிலே கட்டப்படாத காரணத்தினாலே, அதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுத்துவிட்டு வந்தோம். ஆகவே, அனைத்து வேலைகளுமே அங்கே சரியாக நடைபெறவில்லை; முறையாக நடைபெறவில்லை; அதிலே தரம் இல்லை என்று சொல்வது முறையாகாது.

திரு. கே.ஆர். இராமசாமி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலே இருக்கிற தேவக்கோட்டை நகராட்சியைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் எடுத்துக்கூறி இருக்கிறேன். ஏறக்குறைய 85–வது ஆண்டிலிருந்து அங்கே விடப்பட்ட ஏலங்களின் தொகை, ஏறக்குறைய 30 இலட்சம் ரூபாய் வசூல் செய்யாமல் இருக்கிறது. அதனுடைய முழுமையான ஆதாரங்களை நான் அமைச்சரிடத்தில் கொடுத்து இருக்கிறேன். ஆனால் இன்னும் நீங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. தயவு செய்து நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். தேவக்கோட்டை முனிசிபாலிட்டியே இன்றைக்கு. . . .

பிற்பகல் 12-10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதுதான் சொல்லி விட்டீர்கள் அல்லவா? அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.

திரு. கே.ஆர். இராமசாமி அம்பலம்: முடித்து விடுகிறேன். தேவக்கோட்டை முனிசிபாலிட்டியே இன்றைக்கு அரசு பொறுப்பில் இருக்கிறது என்பதே சந்தேகப்படக்கூடிய நிலைமையிலே ஒருசிலர் அங்கே தப்பு செய்கிறார்கள். அதற்கு நீங்கள் அவசியம் தகுந்த நடவடிக்கையெடுத்து, தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பைக் கொடுத்தமைக்காக நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் என்னிடத்திலே அந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். மனு மூலமாக எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அதை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி அதன்மீது தற்போது விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தக்க நேரத்தில் அந்த விசாரணை முடிவுற்றபின், தகுதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, நடவடிக்கை எடுக்கவில்லை என்று தவறாகச் சொல்ல வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கு. தங்கமுத்து.

***திரு. கு. தங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கைமீது எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு முதலிலே என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துறையைப் பொறுத்தவரை, நீண்ட நெடுங்காலமாக மன்னர் ஆட்சிக் காலத்திலிருந்து ஊர்ச்சபை என்று கூட்டி, குடவோலை என்ற முறையில் தேர்வு செய்யப்பட்டு நமது நாட்டு மக்களுடைய பாரம்பரியம் மிக்க ஆட்சி முறையை வெளிப்படுத்துகின்ற துறையாக இயங்கக் கூடிய இந்தத் துறையில் இன்றையதினம் தமிழக அரசும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களும், மதிப்பிற்குரிய இந்த நிர்வாகமும் ஒவ்வொரு கட்டத்திலும் கூர்மையாகத் தன்னுடைய பார்வையினைச் செலுத்தி, குடிநீர், சாலை, தெருவிளக்கு, போக்குவரத்து, கல்வி, மருத்துவம் போன்ற அடிப்படை வசதிகளை உருவாக்குவதும், அதை விரிவுப்படுத்துகின்ற தன்மையிலும் எல்லா நிலைகளிலும் 12,612 ஊராட்சிகளிலும், 387 ஒன்றியங்களிலும், இப்படி பேரூராட்சிகள், நகராட்சிகள், எல்லா நிலையிலுள்ள உள்ளாட்சி அமைப்புகளிலும் தன்னுடைய எண்ணங்களை, கருத்துக்களை நிலைநிறுத்தி, பல்வேறு வகையான உயர்வான காரியங்களை, செயல்களைச் செய்து உயர்த்தி இருக்கின்ற தன்மையினை நான் முதலிலே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்; வரவேற்று வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இதைப்போல, இந்த ஆண்டு இந்த மானியத்தைப் பொறுத்தவரை இன்னும் எதிர்காலத்தில் இந்தத் துறையானது, ஊரக வளர்ச்சித் துறை, குடிநீர் வழங்கல், பேரூராட்சி, நகராட்சி என்று எல்லாத் துறைகளிலும் மென்மேலும் உயர்கின்ற பல்வேறு வகையான உயரிய திட்டங்களை இந்த மானியக் கோரிக்கை தாங்கி, உயர்த்துகின்ற சூழ்நிலையை நான் தொடக்கத்திலேயே சுட்டிக்காட்டி வரவேற்று, அதேநேரத்தில் என்னுடைய வேண்டுகோளாகவும், என்னுடைய கருத்தாகவும் தெரிவிக்க விரும்புவது, இந்த ஊரக வளர்ச்சித் துறையை பொறுத்தவரையில், ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் பல்வேறு விதமான வேலைகளை எடுத்து முடிக்க, துரிதமாகப் பல்வேறு நிலையில் கிராமப்பகுதி உயரத் தக்க சூழ்நிலையில் உருவாக்குகின்ற வேலைகளை இந்த அரசானது சீரிய, விரைவான நோக்கத்தோடு செயல்படுத்துகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே அந்த வேலைகள் நடைபெறுகின்றபொழுது அந்தத் துறையிலே நடைமுறைப்படுத்துகின்ற வேலைகள் எந்த அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறதோ, எந்த அளவிற்கு வேலைகள் எடுக்கப்படுகிறதோ அந்த வேலைகளுக்கு ஏற்ப அலுவலர்கள் இருக்கிறார்களா இல்லையா என்பதைப் பார்த்து, அதற்கு அலுவலர்களது எண்ணிக்கையை அதிகப்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் இராமசாமி அவர்கள், இரண்டு ஆணையாளர்கள் இருக்கிறார்கள், எந்த அளவிற்கு அந்த ஆணையாளர்களுக்கு வேலை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, அந்த ஆணையாளர்களைக் குறைக்க முடியுமா என்பதைப் போல தன்னுடைய கருத்தினைத் தெரிவித்தார்கள்.

TRUTH ALONE TRIUMPHS

என்னுடைய கருத்தினை அதற்கு மாறுபட்ட நிலையில் தெரிவிப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், எடுக்கப்படுகின்ற வேலைகள், வேலைத் திறன் இருக்கிறதே, வேலையினுடைய ஒதுக்கீடு அது அதிகமாக இருக்கின்றபொழுது எந்த அளவிற்கு வேலை ஒதுக்கீடு இருக்கிறதோ அந்த ஒதுக்கீட்டிற்கு ஒப்ப அலுவலர்களையும்கூட நியமித்தால்தான் வேலைகள் நடைபெறுவதற்கு வாய்ப்பிருக்கிறது. பொறியாளர்களைப் பொறுத்தவரையில், எல்லா ஒன்றியங்களிலும் ஒரு பொறியாளரை நியமிக்கிறோம். அப்படி நியமிக்கிறபோது, ஒதுக்கீட்டை அதிகப்படுத்துகிறோம். ஒதுக்கீட்டை அதிகப்படுத்துகிற போது, பொறியாளரைக் கூடுதலாக நியமித்தால்தான், அந்தந்த ஒன்றியத்திலே வேலை நடப்பதற்கு வாய்ப்பு இருக்கும். எனவே,

1994 ஏப்ரல் 26] [திரு. கு. தங்கமுத்து]

அப்படி பொறியாளர்களாக இருந்தாலும், ஆணையாளர்களாக இருந்தாலும் ஒதுக்கீட்டைக் கொடுக்கிறபோது, அந்த இரு அலுவலர்களையும் கூட்டுகிறபோதுதான் வேலை வேகமாக நடப்பதற்கு வாய்ப்பு ஏற்படும்; எனவே, அத்தகைய தன்மையில், ஒதுக்கீடு எப்போதெல்லாம் அதிகப்படுத்தப்படுகிறதோ, அப்போதெல்லாம் அலுவலர்களையும் அதிகப்படுத்த வேண்டுமென்ற கருத்தினைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-15

அதேபோல், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில், தஞ்சை மாவட்டம், நாகை–காயிதே மில்லத் மாவட்டம் ஆகிய மாவட்டங்களில், நான்கு மாதங்கள், வேலை மிகமிகத் தாமதமாக நடப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. காரணம், இந்த நான்கு மாதங்களும், மழைக் காலங்களாகும். இந்த மழைக் காலங்களில், வேலை தாமதமாக நடக்கிற காரணத்தினால், மற்ற மாவட்டங்களைப்போல முழுமையாக வேலை நடப்பதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. எனவே, வேலைகளை எடுக்கிறபோதே, மற்ற மாவட்டங்களிலே எடுப்பதைவிட, அதிகமாக, கூடுதலாக விழுக்காடு கொடுத்து, இந்த மாவட்டங்களுக்கு எடுத்தால்தான், மற்ற மாவட்டங்களில் உள்ள அளவிற்கு, இவை முன்னால் வர முடியும். அல்லது சரிசமமாக வரமுடியும். மற்ற மாவட்டங்களில் உள்ள அளவிற்கு வேலைகள் நடைபெற்று சரிசமமாக வரவேண்டுமென்று சொன்னால், இந்த இரு மாவட்டங்களிலும் கூடுதலாக வேலைவாய்ப்பினை எடுத்து, அந்த அளவிற்கு சமன்படுத்திக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த இரு மாவட்டங்களைப் பொறுத்தவரையில், ஜல்லி என்பதே இல்லாத, மலை இல்லாத மாவட்டங்களாகும். மற்ற மாவட்டங்களிலிருந்து ஜல்லியைக் கொண்டு வரவேண்டும். எனவே, இந்த ஜல்லி வேலைகள் நடக்கிற சாலைகளைப் பொறுத்தவரையில், மற்ற மாவட்டங்களைவிட கூடுதலாக 'ரேட்'டை நிர்ணயம் செய்து, வழங்குவதற்கு முயற்சிக்க வேண்டும். அதேபோல், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில், பல்வேறு மெட்டல் சாலைகளை அரசு போடுகிறது. அவ்வாறு அந்த வேலைகளை எடுத்து, அவை போட்டு முடித்துவிட்டதற்குப் பின்னர், தார்ச்சாலையாகப் போடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்காத காரணத்தினால், மறுபடியும் அந்தச் சாலைகள் பழுதாவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இந்த ஆண்டு, இந்த மானியக் கோரிக்கையைப் பொறுத்தவரையில், 1,200 கிலோமீட்டர் தார்ச்சாலையாக உருவாக்குவதற்குத் திட்டமிட்டிருக்கிறோம் என்று அறிவித்திருக்கிறீர்கள். அதை நான் மனமார வரவேற்று, வாழ்த்தக்

கடமைப்பட்டிருக்கிறேன். மீதமுள்ள சாலைகளை, மெட்டல் சாலைகளைப் பொறுத்தவரையில், இனிமேல் எடுப்பதாக அறிவித்திருக்கிறீர்கள். ஆனால் மறுபடியும் இன்னும் ஓராண்டு, ஈராண்டு கழித்து எடுப்பதற்குள், எடுத்து வேலை செய்யப்பட இருக்கிற இந்த மெட்டல் சாலைகள், மறுபடியும், பழுதாவதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே, வேலைகளை எடுக்கிறபோதே, இந்த மெட்டல் சாலைகளையும், தார்ச்சாலைகளாகப் போடுவதற்கு நடைமுறைப்படுத்திவிட்டால், அத்தகைய சங்கடத்திலிருந்து தவிர்ப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொடக்கப் பள்ளிக்கூடங்களின் கட்டிடங்களைப் பொறுத்தவரை, இந்தக் கட்டிடங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிற தொகை, ரூ. 1 இலட்சத்து 80 ஆயிரம். இதற்குக் கூடுதலாக 30 ஆயிரம் ரூபாய் என்று சொல்கிறபோது, அந்தக் கட்டிடத்திற்கு வரையறுக்கப்படுகிற எஸ்டிமேட்டைப் பொறுத்தவரை, வெராந்தாவையும் சேர்க்க வேண்டுமென்று சொல்லி, கூடுதலாக 30 ஆயிரம் ரூபாய் கேட்கிறார்கள். எனவே அதைக் கூடுதலாகக் கொடுத்தால், இன்னொரு கட்டிடம் கூடுதலாகக் கட்டுகிற சூழ்நிலை உருவாகிவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், 'டுவக்ரா' திட்டத்திலே--'ஜெம் கட்டிங்', செயற்கை வைரம் பட்டைத் தீட்டுதலை எடுக்கிறபோது, அதன் மூலப்பொருட்களைக் கொடுக்கிற வியாபாரிகள், மறுபடியும் வாங்கி உடனடியாக அந்தப் பணங்களைக் கொடுத்து விடுவார்களானால், இன்னும் அதிகமாக அந்தத் தொழிலாளர்கள் வளர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இந்த உள்ளாட்சித் துறையிலே எடுக்கப்படுகிற தெருக்கள், சாலைகள் அல்லது கிராமச் சாலைகள், இப்படிப்பட்ட சாலைகள் எல்லாம், தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை, தற்போது உலகத் தமிழ் மாநாடு வருகிற போது, அது நடக்கவிருக்கிற பகுதியை ஒட்டி இருக்கிற தஞ்சாவூர் ஒன்றியம், அதைப்போல அடுத்து இருக்கிற ஒன்றியங்களில் உள்ள அந்தச் சாலைகளை, எப்படி நெடுஞ்சாலைத் துறை சாலைகளை மேம்பாடு செய்கிறார்களோ, அப்படி மேம்பாடு செய்வதற்கு, ஒவ்வொரு சாலையும், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் மற்ற எல்லா திட்டங்களையும் இணைத்து, கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து, அடுத்த ஆண்டிற்கான நிதியைக்கூட, இந்த ஆண்டே சேர்த்து ஒதுக்கீடு செய்து, இந்தத் திட்டத்தினை விரிவுப்படுத்தி, அந்தப் பகுதியிலுள்ள அத்தனை கிராமச் சாலைகளையும் செம்மையாகச் செய்து கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்ற காரணத்தினால்,

அந்தப் பகுதிகளுக்கு அதற்குரிய முன்னுரிமை கொடுத்து வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர் வழங்கல் துறையைப் பொறுத்தவரை, எல்லாவிதமான வேலைகளையும் முறைப்படுத்தி, வேகமாக, விரைவாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிற இந்தத் துறையைப் பொறுத்தவரை, இப்போது இருக்கிற அதன் செயல்கள் அனைத்தையும் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை, பழைய தஞ்சாவூர் மாவட்டம், நாகை-காயிதே மில்லத் மாவட்டம் என்று அது ஒன்றாக இருந்தபோது, மூன்று டிவிஷன்கள் இருந்தன.

பிற்பகல் 12-20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரமாகப் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. கு. தங்கமுத்து: இந்த மூன்று டிவிஷன்களில் இரண்டு டிவிஷன்கள் இப்பொழுது நாகை காயிதே மில்லத் மாவட்டத்திற்குச் சென்றுவிட்டது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் ஒரு டிவிஷன்தான் இருக்கிறது. ஆனால் நிதி ஒதுக்கீடு செய்கிறபோது இந்த ஒரு டிவிஷனக்கு 2 கோடி ரூபாய் என்று ஒதுக்கீடு செய்கிறார்கள். ஒரு டிவிஷனுக்கு 2 கோடி ரூபாய் என்று சொல்கிறபோது, தஞ்சை மாவட்டத்திற்கு 2 கோடி ரூபாயும், நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திற்கு 4 கோடி ரூபாய் என்று ஒதுக்கீடு செய்யப்படுகிறது. எனவே, குறைகின்ற வாய்ப்பு இந்த மாவட்டத்திற்கு இருக்கின்ற காரணத்தால், ஒன்று ஒதுக்கீடு செய்கின்றபோது மேலும் 2 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய வேண்டும், இல்லையென்றால் புதியதாக ஒரு டிவிஷனை உருவாக்கிக் கொடுத்து, இந்த நிலையை நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, இந்த நிலையில் இந்த உள்ளாட்சித் துறையைப் பொறுத்தமட்டில் குடிநீர் வழங்கல் துறையாக இருந்தாலும், உள்ளாட்சி நிர்வாக நிலையாக இருந்தாலும், எல்லா வகையிலும் கிராமத்தினுடைய சாதாரண ஏழை எளிய மக்களுடைய நிலையை உயர்த்துகின்ற வகையில் செயல்படுகின்ற துறையின் மானியக் கோரிக்கையை மனதார வரவேற்று, வாய்ப்புக்கு நன்றி சொல்லி, விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, நகராட்சி நிர்வாகம், மாநகராட்சியினுடைய கொள்கைக் குறிப்பின் மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்த உங்களுக்கு எனது நன்றியை முதலில் தெரிவித்துக்கொண்டு, பொதுவாக

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய, 75 சதவீதம் கிராமங்களில் வாழக்கூடிய மக்களுடைய பிரச்சினைகளுக்கு நேரிடையாகத் தீர்வு காணக்கூடிய ஒரு துறையாக இந்த உள்ளாட்சி அமைப்பினுடைய துறை இருக்கிறது. இது மிக முக்கியமான துறையாகும். குறிப்பாக கிராமப்புறங்களிலே வாழக்கூடிய மக்கள் குடிநீர், சாலை, மின் விளக்குகளை பிரதானமாக எதிர்பார்க்கிறார்கள், இந்தத் துறை மூலமாக. அதற்கு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பிற்கு வந்த பின்னால் 3 ஆண்டுகள் கடந்தும்கூட, இந்த அமைப்புகளுக்காக, ஜனநாயகபூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் இல்லாத காரணத்தால், அதிகாரிகளுடைய மட்டத்திலே இந்த நிர்வாகம் இன்றையதினம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட, மத்தியச் சட்டத்தை இங்கே, பஞ்சாயத்து பாலிகா சட்டத்தை, இந்த மாமன்றத்திலே நிறைவேற்றியிருக்கிறார்கள். அநேகமாக, அந்தச் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது போன்று, 6 மாதத்திற்குள்ளாக, அந்தத் தேர்தல் நடக்குமென்று நான் எதிர்பார்க்கிறேன். அதையும் ஒத்திவைக்க மாட்டார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் சொல்கிறபோது, இந்த மூன்று ஆண்டுகளிலே அதிகாரிகளால் ஊராட்சி ஒன்றியங்கள் நிர்வகிக்கப்பட்ட காரணத்தினாலே ஏதோ முன்னேற்றங்கள் தடைபட்டது போலவும், அப்படி அதிகாரிகள் தொடர்ந்து செயல்படுவதற்கு இந்த அரசுதான் காரணம் போன்றும் தெரிவித்திருக்கிறார்கள். தேர்தலை நடத்தவில்லை என்கிற ஒரு தொனியில் தெரிவித்திருக்கிறார்கள். நான் சொல்வதெல்லாம் ஏற்கனவே இந்த அவையிலே பல்வேறு சந்தர்ப்பங்களில் இதுசம்பந்தமாக விளக்கி எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஏன் உள்ளாட்சித் தேர்தலை நடத்த முடியவில்லை, என்ன காரணத்திற்காக என்பதையும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்களும் அதுசம்பந்தமாக பதிலுரையிலே சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகுதான், ஆட்சிக்கு வந்தவுடன் உள்ளாட்சித் தேர்தல் அறிவிப்புக்கு அறிவிப்பை வெளியிட்டது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற கட்சி அன்றைக்கு இருந்த சூழ்நிலையிலே, இந்தத் தேர்தலை நடத்த வேண்டாம் என்று சொன்னார்கள். பத்திரிகையிலே செய்திகள் எல்லாம் மாண்புமிகு

1994 ஏப்ரல் 26] [திரு. டி.எம். செல்வகணபதி]

மன்ற உறுப்பினர்கள் பார்த்திருப்பார்கள். அன்றைக்கு அதுபோல தமிழகத்திலே இருக்கிற பல்வேறு கட்சிகளும் கோரிக்கைகளை விடுத்தனர், உள்ளாட்சித் தேர்தலைத் தள்ளி வைக்க வேண்டுமென்று. அந்த அடிப்படையிலேதான் உள்ளாட்சித் தேர்தலை அன்றைய காலகட்டத்தில் மாண்புமிகு இதயதெய்வம் முதல்வர் அவர்கள் தள்ளி வைத்தார்கள். அதற்குப் பிறகு வாக்காளர்கள் பதிவு செய்கின்ற நிலைமை, சென்சஸ் எடுக்கின்ற நிலைமை இருந்த காரணத்தினாலே, பல்வேறு சூழ்நிலையில் வழக்காடு மன்றத்திலே வழக்கு நிலுவையில் இருக்கிற காரணத்தினால் அந்தத் தேர்தலை நடத்த இயலவில்லை. இன்றைக்கு பஞ்சாயத்ராஜ் சட்டம் அமலுக்கு வந்துவிட்டது, நாடு முழுவதும். அது சம்பந்தமாக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலும் சட்டத்தை இயற்றியிருக்கிறோம். நிச்சயமாகத் தேர்தல் நடத்தியாக வேண்டும் என்பதுதான் இன்றைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அரசியல் சட்டத்தினுடைய தெளிவான விதி. அந்த விதிப்படி தேர்தலைக் கண்டிப்பாக நடத்தியாக வேண்டும். இந்த அரசைப் பொறுத்தவரையில், உள்ளாட்சித் தேர்தலைச் சந்திப்பதற்குப் பயப்படுகின்ற அரசு அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக உள்ளாட்சித் தேர்தலை இந்த அரசு சந்திக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் வெற்றி பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பழனிசாமி, சீக்கிரமாகப் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

பிற்பகல் 12-25

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இதைச் சொல்லும்போதே பயமாக இருக்கிறது. பாதி விடப்பட்டுவிடும் போல் தெரிகிறது. மக்களைச் சந்திப்பதற்குப் பயம் இல்லை. அச்சம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். வரவேற்கிறேன். ஆனால் இந்த பஞ்சாயத்ராஜ் சட்டம் வருவதற்கு முன்பாகவே தேர்தலை நீங்கள் கொண்டு வந்திருந்தால், தேர்தலைச் சந்தித்து இருந்தால் உண்மையிலேயே வரவேற்க வேண்டியதுதான். ஆனர்ல் இப்போது நீங்களும் மீற முடியாது. மாநில அரசும் மீற முடியாது. ஏனென்றால் இது மாநில அரசுக்கு உட்பட்ட சட்டம் கிடையாது. இது மத்திய அரசுக்கு உட்பட்ட சட்டம். ஆகவே, இந்த அரசு இதை மீற முடியாது என்பது நன்றாகத் தெரியும். எனவே அந்தத் தேர்தல் நடைபெறட்டும். அதேபோன்று மாநகராட்சிகளுக்கான தனிச் சட்டங்களையும் நீங்கள் கொண்டு வருவீர்கள் என்று கருதுகிறேன். அதற்குரிய தேர்தல்களை நடத்தவேண்டும். மதுரை, கோவை, சென்னை

என்று மாநகராட்சிகள் இருக்கின்றன. கோவையிலே அநேகமாக இராமர் வனவாசம் போனது மாதிரிதான். அது அறிவிக்கப்பட்டதிலிருந்து, அந்த மாநகராட்சிக்குத் தேர்தல் நடைபெறவில்லை. அப்படிப்பட்ட மாநகராட்சியாக இன்றைக்குத் தனி அதிகாரி மூலமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே அவைகளுக்கான தேர்தலையும் இத்தோடு சேர்த்து நடத்தவேண்டும் என்றும், அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, குறிப்பாக குடிநீர். கொள்கை விளக்கக் குறிப்பைப் பார்த்தால் ஆண்டுதோறும் பல குடியிருப்புகளுக்கு தண்ணீர் வழங்குவதற்கானத் திட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் ஒன்றை நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். தமிழகத்திலே பிரதானமாக குடிதண்ணீரே இல்லாத பகுதிகள், பஞ்சாயத்துக்கள், கிராமங்கள் எத்தனையோ இருக்கின்றன. அவற்றுக்கெல்லாம் என்ன முன்னுரிமை கொடுத்து என்ன திட்டங்களைச் செய்திருக்கிறோம் என்பதைக் கவனித்து அவற்றை எடுத்துச் செய்யவேண்டும். குறிப்பாக காவேரி பாய்கிற மாவட்டங்களாக தஞ்சை, நாகை-காயிதே மில்லத் மாவட்டங்கள் இருக்கின்றன. குறிப்பாக, கடலோரப் பகுதியில் இருக்கக்கூடிய நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி, திருவாரூர், வேதாரண்யம் போன்ற பகுதிகளில் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அதேபோல் அங்கே ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டினாலும் உப்புத் தண்ணீர்தான் கிடைக்கிறது. அங்கே குடிப்பதற்கு மிகப்பெரிய பற்றாக்குறை இருக்கிறது. அங்கெல்லாம் தண்ணீர் வழங்குவதற்கு என்ன திட்டம் அரசு கொண்டு வந்திருப்பதிலே இருக்கிறது என்று பார்த்தால் அதற்கான எந்தத் திட்டமும் இல்லை. கிராமப்புறங்களுக்கென்று ஒட்டுமொத்தமாகச் சொல்லக்கூடிய கிராமப்புறத்தினுடைய அமைப்புதான் கொள்கை விளக்கக் குறிப்பில் இருக்கிறது. அதேபோன்று, தஞ்சை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதில் ஒன்று நாகையைத் தலைநகரமாகக் கொண்டு இருக்கிறது. அதனுடைய சட்டமன்ற உறுப்பினரும் இங்கே இருக்கிறார். அந்த நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் தண்ணீர்ப் பற்றாக்குறை எவ்வளவு இருக்கிறது ; எப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் ஏதோ நாகை, தஞ்சை மாவட்டங்களில் தண்ணீர் குடிப்பதற்கே இல்லை என்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி, இந்த அரசு

எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் பாராமுகமாக இருக்கிறது என்பதைப் போன்ற குற்றச்சாட்டைச் சொல்லி இருக்கிறார்கள். இன்றைக்கு ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக்கு வந்த பிறகுதான் அவர்களுடைய தொகுதியிலும் சரி, அவருக்கு அருகே இருக்கின்ற மாண்புமிகு திரு. தம்புசாமி அவர்களுடைய தொகுதியிலும் சரி, எவ்வளவு பணிகள் நடைபெற்றிருக்கின்றன என்பதைப் புரிந்துக்கொள்ள முடியும். கடந்த 24-6-91 முதல் 31-3-93 முடிய 34 குடியிருப்புகளுக்கு மின்விசை இறைப்பான் திட்டங்கள் 1,02,00,000 ரூபாய் செலவில் உங்களுடைய தொகுதியில் பணிகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு மட்டுமல்ல. இதனால் பயனடைகிற மக்கள் கிட்டத்தட்ட 50,000 பேர் இருக்கிறார்கள். அதிலே ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் 14,000 பேர் இருக்கிறார்கள், அதேபோல் இன்றைக்கு 1-4-93 முதல் 31-3-94 வரை 14 குடியிருப்புகளுக்கு மின்விசை இறைப்பான் திட்டங்கள் 45 இலட்சம் ரூபாய் செலவில் உங்களுடைய தொகுதியில் பணிகள் முடிக்கப்பட்டு இருக்கின்றன. அந்த அளவுக்கு இந்த அரசு வந்ததற்குப் பிறகு, நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற அந்தத் தொகுதிகளுக்காக இப்படிப்பட்ட திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

இன்றைக்கு திருவாரூரைப் பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். திருவாரூரிலே 1,20,00,000 ரூபாய் செலவில் 46 கிராமக் குடியிருப்புகளுக்கு, அதாவது சுமார் 45,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 18,000 பேர் பயன் அடைகிற வகையில் ஒரு திட்டத்தை இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக்காலத்திலேதான் உருவாக்கிக் கொடுத்திருக்கிறோம்.

அதோடு மட்டுமல்ல, கடந்த ஆண்டு, அதாவது 1993–94–ஆம் ஆண்டில் 6 குடியிருப்புகளுக்கு மின்விசை இறைப்பான் திட்டங்கள் 20 இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் முடிக்கப்பட்டு கிட்டத்தட்ட 10,000 மக்கள் அந்தத் தொகுதியிலே பயன் அடைந்திருக்கிறார்கள். இதைவிட வேறு சாட்சி தேவையில்லை. ஆகவே ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை அவையிலே அள்ளித் தெளிக்கக்கூடாது. இன்னும் பல்வேறு திட்டங்களை உங்களுடைய தொகுதிக்கு இந்த அரசு செய்ய இருக்கிறது. இதை எல்லாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

இன்றைக்கு நாகப்பட்டினம் பற்றிச் சொன்னீர்கள். இதயதெய்வம் புரட்சித் தலைவி ஆட்சிக்கு வந்தபிறகுதான் 8 கோடி ரூபாய்க்கு மேல்

அங்கே ஒரு நல்ல திட்டத்தை உருவாக்கிக் கொடுத்து இந்த நடப்பு நிதியாண்டிலேயே பணிகள் தொடங்க இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னதற்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பழனிசாமி, இரண்டு நிமிடத்திற்குள் பேசி முடித்துவிடுங்கள். நேரம் இல்லை.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் மரியாதைக்குரிய எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியில் இருந்தபோது 13 கோடி ரூபாய்க்கு கூட்டுக் கூடிநீர் திட்டம் உருவாக்கித் தந்தார். தற்போதுகூட 4 கோடி ரூபாய்க்கு மேலும் மேல் நிலை தொட்டிகள் கட்ட, அதற்கான பைப்புகள், அதற்கான அலுவலகம் இத்தனையும் துவக்கப்பட்டு அந்தப் பணிகள் தொடங்கப்பட்டன. ஆனால் பல அரசியல் காரணங்களுக்காக அது இடையிலே நிறுத்தப்பட்டுள்ளது. (குறுக்கிடு) சில அரசியல் காரணங்களுக்காக, வேதாரண்யம் கூட்டுக் குடிநீர் திட்டம் என்கிற பெயரில் வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி, தலைஞாயிறு இவைகளுக்காகத் துவக்கப்பட்டு இன்னும் அதற்காக அளிக்கப்பட்டிருக்கின்ற மேல்நிலைத் தொட்டிகள் எல்லாம் அப்படியே இருக்கின்றன. இருந்தாலும்கூட ஒரு மாற்றுத்திட்டத்தை இங்கே கொண்டு வருவதாகத் திரும்பவும் சொன்னார்கள். ஆனால் குறிப்பாக அமைச்சர் அவர்கள் பல்வேறு விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள். நான் அவருடைய கவனத்திற்கு ஒன்றை சொல்கிறேன். இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஊராட்சிகளுக்கு இன்னும் தரப்படவில்லை. (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருந்தார்கள். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஏதோ இந்த ஆட்சி வந்தபிறகு நிறுத்தப்படவில்லை. அவருக்கே நன்றாகத் தெரியும். அந்தப் பகுதியிலுள்ள நீர் ஆதாரத்திலிருந்து நீர் எடுக்கக் கூடாது என்று ஒரு பெரிய சட்டம் ஒழுங்குப் பிரச்சினை உருவானது. அந்த அளவுக்கு அங்கே ஒரு எதிர்ப்பு இருக்கிற பட்சத்திலேதான் அந்தப் பணியை தற்காலிகமாக நிறுத்தி இருக்கிறோம். மேலும் அதற்கு

1994 ஏப்ரல் 26] [திரு. டி.எம் செல்வகணபதி]

மாற்றுத் திட்டமாக இன்றைக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பல்வேறு திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, ஏதோ இந்த அரசு வந்தபிறகு அதை நிறுத்தி செயல்படுத்தாமல் இல்லை, அதற்குண்டான அனைத்துப் பணிகளும் தொடர்ந்து முயற்சிக்கப்பட்டு வருகின்றன. இதிலே ஏதாவது அதிகமாக நான் சொல்லப்போனால் மீண்டும் அந்தப் பகுதியிலே கலவரங்கள், பிரச்சினைகள் என்ற நிலை உருவாகும் என்ற விதத்திலே இந்த அரசு அதில் ஒரு நல்ல முடிவை எடுக்க இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: (குறுக்கீடு) அமைச்சர் அவர்கள் ஏற்கனவே பதில் சொல்லி இருக்கிறார்கள் இல்லையா? திரு. பி. வி. இராஜேந்திரன்.

திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வேதாரண்யம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு மாற்றாக ஓரிரண்டு இடங்களைக் குடிநீர் வடிகால் வாரியம் ஆய்வு செய்து அந்த இடத்தில் இருக்கிற மக்களிடமிருந்தும் ஆட்சேபணைகள் வந்திருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். பட்டுக்கோட்டை மற்றும் மன்னார்குடி பகுதிகளை எல்லாம் விட்டுவிட்டு இறுதியாக தற்போது இருக்கின்ற அமைச்சரவை முடிவு செய்து, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு தெரிவித்தார். கொள்ளிடத்திலிருந்து நூறு கோடி ரூபாய்க்கு ஒரு திட்டத்தைத் தீட்டி, நரிமணம், நாகப்பட்டினம், வழியாக அங்கே உபயோகத்திற்கு எடுத்துக் கொண்டது போக மீதத்தை திருத்துறைப்பூண்டி, வேதாரண்யத்திற்குக் கொண்டுவர முடியும் என்றும் அந்தத் திட்டத்திற்கு உலக வங்கி அளவில் சொல்லியிருக்கிறோம் என்றும் தெரிவித்தார். அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, பாதுகாக்கப்பட்ட மேல் நிலைத் தொட்டி பற்றிச் சொன்னார்கள். இந்த ஊராட்சி ஒன்றியங்களில் கட்டப்பட்டுள்ள மேல் நிலைத் தொட்டிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. ஆனால் அதற்கான பைப்-லைன் எல்லாம் போடப்பட்டுள்ளது. கிராம மக்கள் பயன்படக்கூடிய விதத்தில் இன்றைக்கு இல்லாததால், அதற்கான உரிய நடவடிக்கையை காலத்தோடு எடுத்து, லட்சக்கணக்கான ரூபாய்க்கான செலவுக் கணக்கை மட்டும் கொடுத்து விட்டால் போதாது. அதை

உடனடியாகச் செயல்படுத்த, மின்சார இணைப்பு கொடுத்து, ,மக்கள் பயன்படக்கூடிய அளவில் அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றி பாதுகாக்கப்பட்ட மேல்நிலைத் தொட்டி திட்டம் இடையிலேயே நின்று கொண்டிருக்கிறது, அதை நிறைவேற்ற வேண்டும். கட்டியது எல்லாம் உண்மைதான். அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதுபோன்று கிராமச் சாலைகள் பற்றிச் சொல்கிறபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமுத்து அவர்கள்கூட இங்கே குறிப்பிட்டார்கள். உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கப்படுகிற தொகை ஒரு கிலோ மீட்டர் சாலைக்கு ஒரு லட்ச ரூபாய் என்று சொன்னால் அதை நாகப்பட்டினம், தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களுக்கும், திருச்சி மாவட்டத்திற்கும் ஒன்றரை லட்ச ரூபாயாக ஒதுக்கினால்தான் அங்கே சாலைகளைப் போடமுடியும். இல்லையென்றால் போட முடியாது. இங்கே இருந்து ஜல்லி போகவேண்டும். ஆட்களின் கூலி கொடுக்கப்படவேண்டும். இதிலே சாயல் பூமி வருகிறது. வெள்ளம் ஆண்டுதோறும் வந்துகொண்டிருக்கிறது. அந்தப் பகுதி சாயல் பூமி பகுதியாக இருக்கும்போது, திருச்சியில் போடுவதற்கு, கோயம்புத்தூரில் போடுவது போன்று ஒரே ரேட்டாக இருந்தால் நீண்டகாலம் அந்தச் சாலைகள் இருக்க முடியாது. ஜல்லிகள் போடப்படுகிறது என்ற பெயரில் ஜல்லிகளை எண்ணித்தான் வைக்க வேண்டியிருக்கிறது. ஒரு ஜல்லியோடு ஒரு ஜல்லி இணைந்து இருப்பதற்கு வாய்ப்பு இல்லை. பல சாலைகள் இதுபோல் இருக்கின்றன. கான்ட்ராக்டர்களை கேட்டால் அதிகமாக செலவு ஆகிறது, இதைத்தான் நான் செய்ய முடியும் என்று சொல்லுகிறார்கள். இன்றைக்கு கான்ட்ராக்ட் வேலைகள் யார் செய்கிறார்கள் என்பதுகூட உங்களுக்குத் தெரியும். அநேகமாக கான்ட்ராக்ட் எடுப்பவர்கள் நம்முடைய ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள்தான் ஊராட்சிகளின் வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் இது ஏதோ ஆளுங்கட்சியினர் காண்ட்ராக்ட் வேலையெல்லாம் எடுத்துக் கொண்டு முழுமையாகச் செய்துகொண்டிருக்கின்றார்கள் என்ற ஒரு ஆதாரமற்ற குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார். இன்றைக்கு அவர் சொல்லியிருக்கின்ற பணிகள் ஜவஹர் வேலை வாய்ப்புத்

திட்டத்திலேதான் அந்தப் பணிகளை நாம் மேற்கொள்ளுகிறோம். ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் என்று சொன்னாலே இன்றைக்கு மனித சக்தி நாட்களை உருவாக்கவேண்டும். அதுதான் அதனுடைய முக்கிய குறிக்கோள். கான்ட்ராக்ட் என்ற பேச்சுக்கே அந்த வேலைவாய்ப்பிலே இடமில்லை. மத்திய அரசு அதற்கு என்று நிர்ணயித்திருக்கிறது. ஒரு கிலோ மீட்டர் சாலைக்கு மெட்டல் சாலையாக இருந்தாலும், கிராவல் சாலையாக இருந்தாலும், இவ்வளவுதான் அதற்கு செலவுத் தொகை ஒதுக்கப்படவேண்டும் என்று இருக்கிறது. அந்தச் செலவினத்திற்கு உட்பட்டுத்தான் அந்தச் சாலைகளை எடுக்கமுடியும். மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசப்படுத்த முடியாது. அது மாநில அரசினுடைய கையிலே இல்லை. ஆக இந்தச் சாலைகள் எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிற வேலைகள், பணிகள் எல்லாம் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்திலே கான்ட்ராக்டிலே விடப்படுவதில்லை. அதிலே ஆளுங்கட்சியினர் யாரும் தலையிடுவதும் இல்லை என்பதை ஆணித்தரமாகச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி, சீக்கிரம் பேசி முடியுங்கள். இன்னும் ஒரே ஒரு நிமிடம்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஊராட்சி ஒன்றியத்தை எடுத்துக் கொள்ளுங்கள். என்னுடைய தொகுதியிலே 3 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. வேறு யாரும் எடுத்ததாகச் சொல்லவில்லை. நீங்கள் ஒரு கமிஷனே போடுங்கள், நான் அதிலே சொல்கிறேன். வேறு யாரும் எடுக்கவில்லை. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பழனிசாமி, ஏற்கனவே இந்தக் குற்றச்சாட்டைச் சொன்னீர்கள். (குறுக்கீடு) முதல் தடவை நீங்கள் சொன்னபோது நான் அனுமதித்ததற்குக் காரணமே, நீங்கள் சொல்லட்டுமே என்பதற்குத்தான். திரும்பவும் அமைச்சர் பதில் சொல்லிவிட்டார். அந்தமாதிரி இருந்தால், காண்ட்ராக்ட் கொடுத்திருந்தால், அங்கே ரெக்கார்ட் இருக்கும் அல்லவா? பஞ்சாயத்து யூனியனிலே கான்ட்ராக்ட் கொடுத்திருந்தால் அதற்கு ஒர்க் ஆர்டர் எல்லாம் இருக்கும். அது எல்லாம் இங்கே கொடுக்க வேண்டும். அப்படி எதுவும் கொடுக்காமல், காரண காரியமில்லாமல் பேசிக்கொண்டு இருந்தால் அது சரியாக இருக்காது. அவையிலே பேசுகின்றபோது, அதற்குத் தகுந்த ஆதாரங்களை, ஒர்க் ஆர்டர் போன்ற சரியான ஆவணங்களை நீங்கள் தரவேண்டும். வேறு பிரச்சினைக்குப் போகவேண்டும்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது நல்ல அறிவிப்புதான். நான் வரவேற்கிறேன். அதே நேரத்திலே ஐ.ஆர்.டி.பி. லோனைப் பொறுத்தவரையில், வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய மக்கள் யார் என்று கண்டறிந்து, அங்கே இருக்கக்கூடிய ஆணையாளர், சட்டமன்ற உறுப்பினர் இவர்கள் எல்லாம் அதை பரிசீலித்து அந்த லோன் வழங்குவதுதான் வழக்கமாகும். அவர்களுக்கு லோன்களை கொடுக்கிற போது சரி பார்க்கப்பட்டு, இந்த இந்த ஊராட்சிகளுக்கு எத்தனை, இன்னின்னாருக்கு இவ்வளவுதான் என்று சொல்லி, கொடுக்கவேண்டும். அநேகமாக என்னிடத்திலே வந்து கையெழுத்து வாங்குவது வழக்கமாக இருந்தது. மூன்று ஆண்டுக்காலமாக, நான் முன்பாக இருந்தக் காலம்-அது வந்து 1989, 1990 ஆம் ஆண்டு நாங்கள் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தபோது நடைமுறையிலே இருந்தது. ஆனால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பின்னால் அந்த ஐ.ஆர்.டி.பி. லோன் எப்படி வழங்கப்படுகிறது; யார் யாருக்கு வழங்குகிறார்கள்; எப்படி நடைபெறுகிறது என்றே தெரியவில்லை. அநேகமாக, ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்கள், அதிலும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மெம்பர் கார்ட் வைத்திருப்பவர்களுக்குத்தான் லோன் என்று சொல்லி.... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் அடிப்படை இல்லாமல், ஆதாரம் இல்லாமல் குற்றச்சாட்டுகளை அடுக்கிக்கொண்டே போகிறார். ஏதோ அந்த ஐ.ஆர்.டி.பி. கடன் தொகை ஆளுங்கட்சியினருக்கு கொடுக்கப்படுகிறது என்று சொல்வது ஒரு தவறான கருத்து, ஆதாரமற்ற ஒரு கருத்தாகும். இங்கே ஒரு உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு ஐ.ஆர்.டி.பி. கடனுதவி ஒரு சர்வே ரிப்போர்ட்டின் அடிப்படையிலே தான் வழங்கப்படுகிறது. இதற்கு என்று தமிழகம் முழுவதும் ஒரு ஆய்வு செய்து யார் எல்லாம் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள் என்பதைத் தேர்ந்தெடுத்து அந்தப் பட்டியல், தேர்தல் வாக்காளர் பட்டியல் இருப்பதுபோல, இந்த ஐ.ஆர்.டி.பி. லோனுக்கு என்றே, வறுமைக் கோட்டிற்கு கீழே இருப்பவர்கள் யார் யார் என்று ஒரு பதிவேடே இன்றைக்குத் தமிழகத்திலே வைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பதிவேடு எப்போது எடுக்கப்பட்டது என்பது மாண்புமிகு உறுப்பினர்

திரு. பழனிசாமி அவர்களுக்குத் தெரியும். அந்தக் காலகட்டத்தில், அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்த காலத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கட்சி கூட்டணி வைத்து, இங்கே அவைக்கு வந்தார்களே அந்தக் காலத்திலே எடுக்கப்பட்ட அந்த ஆய்வு, வறுமைக்கோட்டிற்குக் கீழே யார் யார் என்று எடுத்தார்கள். அதிலே இன்றைக்கும் ஒரு உண்மையைச் சொல்கிறேன். அப்படி எடுக்கப்பட்ட ஆய்விலே பல முறைகேடுகள் நடந்திருக்கின்றன. ஆளுங்கட்சி இன்றைக்கு இருக்கிறதே, அன்றைக்கு இருந்த உறுப்பினர்கள், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், தொண்டர்கள், எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் என்ற காரணத்தினாலேயே அவர்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருந்தாலும் அவர்களுடைய பெயர்கள் எல்லாம் விடப்பட்டிருக்கின்றன. அந்தச் சூழ்நிலையை இன்றைக்கு மாற்றியிருக்கிறோம்.

பொதுவாக, இன்றைக்கு உங்களுடைய ஒன்றியத்தை எடுத்துக் கொள்ளுங்கள். நான் உங்களுக்குப் பட்டியல் தரத் தயாராக இருக்கிறேன், யார் யாருக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்று. உண்மையிலே அவர்கள் எல்லாம் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருப்பவர்களா என்பதையெல்லாம் ஒரு ஆய்வே எடுத்துக்கொள்ளலாம். உங்களுடைய ஒன்றியத்திலே எடுத்துக்கொள்ளலாம். ஆகவே ஆதாரமற்ற குற்றச் சாட்டைத் தயவு செய்து கூறவேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர், சீக்கிரம் பேசி முடித்துக் கொண்டுவிடுங்கள். (குறுக்கீடு)

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, வேண்டாம். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்தில் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எல்லாம் வராது.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது, இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கின்ற தொண்டர்கள், அடிமட்டத் தொண்டர்கள், அப்படி இருக்கக்கூடியவர்கள், ஏழையெளியவர்களாக, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்குக் கொடுக்கவேண்டாம் என்று நான் சொல்லவே இல்லை. நான் அந்த விவாதத்தை எடுக்கவில்லை. அப்படி எல்லா அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களுக்கும், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்றவர்களுக்கெல்லாம் பாகுபாடின்றி

வழங்கவேண்டும் என்பதுதான் என் கருத்து. அப்படி வழங்கப்படவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. அதேபோன்று சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற எங்களுக்கே.... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

பிற்பகல் 12-40

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் இந்தக் குற்றச்சாட்டை, இந்த அவையிலே இன்றைக்கு எழுப்புகிறார். அவர் சொல்லுகின்றபொழுது, அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சிக்கு வந்தபிறகுதான் இப்படிப்பட்ட நிகழ்வுகள் நடைபெறுகின்றன ; எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை ஏற்கப்படவில்லை என்கிறார். இதை எப்பொழுதாவது அமைச்சர்களிடமோ, என்னிடமோ மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் தெரிவித்திருக்கிறார்களா? அல்லது யாருக்காவது கடன் உதவி வழங்கப்படவில்லை, அவர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டு சொல்லியிருக்கிறார்களா? இதை எல்லாம் சொல்லாமல், இன்றைக்கு திடீரென்று 3 ஆண்டுகளுக்குப் பிறகு, இப்படி ஒரு குற்றச்சாட்டு சொல்கிறார். அதோடு மட்டுமல்ல, இன்றைக்கு ஐ.ஆர்.டி.பி. லோனைப் பொறுத்தவரை கலக்டருடைய தொகுப்பிலே மட்டும் 25 சதவிகிதம் டிஸ்கிரீசனரி கோட்டா என்று வைக்கப்பட்டிருக்கிறது. அதிலேகூட மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் தனக்கு யார் வறுமைக்கோட்டுக்குக்கீழே இருப்பவர்கள், ஏழையெளிய மக்கள் என்று அவருக்குத் தெரிந்து கொடுக்கிறார்களோ, அதிலேகூட பயனடைந்திருக்கலாம். அப்படி ஏதாவது லிஸ்டை அங்கே கொடுத்திருக்கிறார்களா? இப்படி அவரை கலந்து கொள்ளாமல், ஆலோசிக்காமல் எடுக்கிறார்கள் என்று ஏதாவது புகாரை கொடுத்திருக்கிறார்களா என்பதை அவர் விளக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதுகுறித்து முழுமையாக எனக்குத் தெரியாது என்றாலும் ஒன்று இங்கே பேசியதிலிருந்து எனக்கு என்ன தோன்றுகிறது

என்று சொன்னால், ஐ.ஆர்.டி.பி. லோனுக்கு எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள் கையெழுத்து கேட்பது என்ற முறை அவ்வளவு சரிதானா என்பதிலே எனக்கு மிகுந்த சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். அதிலே இருக்கிற பிரச்சினைகளை நான் சொல்கிறேன். அதேமாதிரிதான் இங்கே ரேசன் கார்டுக்கு கையெழுத்துப் போட்டுக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, அதிலே மிகப் பெரிய குழப்பமே ஏற்பட்டது. --அடிப்படையிலே வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்கள் என்பதனை கண்டுபிடிப்பது யார்? அதற்குரிய அதிகாரிகள்தான் கண்டுபிடிக்க முடியுமேயொழிய விட்டுப்போனவர்களே, நம்மிடத்திலே வந்து சொல்லக் கூடியவர்களை, இப்படி சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் கொடுக்கலாம். மத்திய அரசாங்கத்திலே அந்த ஜீ.ஓ.-வைப் போட்டிருந்தால்கூட நடைமுறையிலே அது பெரிய சிக்கலை உருவாக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது. துறையிலே எப்படிச் செய்கிறார்கள் என்பதைப் பற்றி அல்ல. எனக்குத் தோன்றுவது ஐ.ஆர்.டி.பி. லோன் இவர்களுக்குத் தான் கொடுக்க வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர் வீடு வீடாக எடுத்துவிட முடியாது. யார் அந்த வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறார்கள் என்பதை கண்டுபிடிப்பதும் நமக்குச் சிரமம். நம்மைப் பொறுத்தவரை, நான் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறேன், அதிகாரிகள் கொடுக்கவில்லை என்று நம்மிடத்திலே வந்து கம்ப்ளைன்ட் செய்தால் அதை செய்கிற பணியை நாம் ஏற்றுக்கொண்டால்தான் நாம் தப்பிக்க முடியும் என்று நான் கருதுகிறேன். இல்லையென்றால் கெட்ட பெயர்தான் மிஞ்சும் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்லப் போவதைத்தான் நான் சொல்ல வருகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்களோ அது எனக்கு நன்றாகப் புரிகிறது. அதாவது இன்றைக்கு மக்களுடைய பிரதிநிதிகளால் கொடுக்கப்படுகின்ற அந்த வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்ற மக்களுக்கு கடனுதவி என்ற வகையிலே அதை ஏற்றுக்கொள்கின்ற நிலையிலேதான் இன்றைக்கு அரசு செயல்பட்டுக் கொணடிருக்கிறது. இதிலே ஏற்கனவே நான் குறிப்பிட்டுச் சொன்னேன், அந்த சர்வே எடுத்ததிலே தவறு நடந்திருக்கிறது. பாரபட்சமாக, ஆட்களைப் பார்த்து, அவர்கள் சார்ந்திருக்கிற இயக்கத்தை எல்லாம் பார்த்து, அன்றைக்கு இருந்த ஆட்சியாளர்கள் அப்பொழுது

ஆய்வு செய்திருக்கிறார்கள். சர்வேயர்களைப் போட்டு எடுத்திருக்கிறார்கள் என்று நான் சொன்னேன். அதைக் களைகின்ற வகையிலேநான் இன்றைக்கு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு யார் எல்லாம் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறார்களோ, சர்வே பதிவிலே அவர்களுடைய பெயர் பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னாலும், அவர்களையும் நேரடியாக அதிகாரிகள் சென்று சந்தித்து உண்மையிலேயே அவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பார்கள் என்று சொன்னால், அவர்களுக்கும் வழங்கலாம் என்று ஒரு சுற்றறிக்கையும் துறை விட்டிருக்கிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஈஸ்வரன்.

திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மக்களுடைய பிரதிநிதி கொடுப்பதிலே பல தொல்லைகள் இருப்பதாக சட்டமன்றத்தில் சொன்னார்கள். ஏற்கனவே முன்னாள் உணவு அமைச்சரும், இப்போது இருக்கக்கூடிய உணவுத் துறை அமைச்சர் அவர்களும் கூட குடும்ப அட்டைகள் வழங்கும்போது சட்டமன்ற உறுப்பினர்களுடைய பரிந்துரையின் பேரில் கொடுக்கலாம் என்று சட்டமன்றத்திலே அறிவித்திருக்கிறார்கள். (குறுக்கீடு) நான் சொல்கிறேன், கொஞ்சம் பொறுங்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: திருத்திவிட்டு சொல்லுங்கள். இப்போது இருக்கிற உணவுத் துறை அமைச்சர் சொல்லவில்லை. ஏற்கனவே இருந்த உணவுத் துறை அமைச்சர் சொன்னார். நடைமுறையிலே மிகுந்த சிக்கல் ஏற்பட்டுவிட்டது. உங்கள் ஊரிலே எவ்வளவு குடும்பங்கள் இருக்கிறதோ, அதைவிட இரண்டு மடங்கு குடும்பத்திற்கு நீங்கள் பரிந்துரை செய்கிற நிலைமை ஏற்பட்டுவிட்டது. நம்மால் வேண்டாமென்று சொல்ல முடியாது. அப்படிச் சொன்னால், அடுத்த முறை உள்ளே போக முடியாது. இப்படிப்பட்ட நிலைமை இருக்கிற காரணத்தால்தான் உண்மை என்ன என்பதை ஆய்வு செய்வதற்கும், பட்டியலைத் தயார் செய்வதற்கும் தகுதியானவர்கள் அதிகாரிகளேயொழிய சட்டமன்ற உறுப்பினர்கள் அல்ல. சட்டமன்ற உறுப்பினர்கள் அதிலே தவறு நடந்திருக்கிறதா என்பதை ஆய்வு செய்து, இவர்கள் விடுபட்டிருக்கிறார்கள் என்பதைப் பரிந்துரை செய்வதற்கு அல்லது இந்தக் குறைபாடு இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டுவதற்குத்தான் பொருத்தமானவர்களாக இருப்போமேயொழிய முழுக்க முழுக்க தொகுதியிலே போய் இதை

1994 ஏப்ரல் 26] [திரு. சு. முத்துசாமி]

எல்லாம் எடுப்பதற்கு நம்மால் முடியாது. நமக்குத் தேவையான மெஷினரீஸ் இல்லை என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பழனிசாமி, சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) நீங்கள் சொன்னதற்கு அமைச்சரவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு) ஈஸ்வரன், நீங்கள் கேட்டீர்கள், அமைச்சரவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். அது போதும். திரு. பழனிசாமி, பேசுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் பரிசீலிக்கிறபோது வீடு வீடாகச் சென்று பார்ப்பதில்லை. ஏற்கெனவே அதிகாரிகள் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள நபர்களைத் தேர்ந்தெடுத்து, பி.டி.ஓ., நாங்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர் சேர்ந்து இந்தந்த ஊர்களுக்கு இத்தனை, இவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறார்கள், இவர்களுக்குக் கொடுக்கலாம் என்று ஏகோபித்துதான் முடிவு எடுப்போம். இப்போது இதற்கு இடமே இல்லாத வகையிலே நடைபெறுகிறது. இதில் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு எந்தவிதச் சிக்கலும் கிடையாது. என்னைப் பொறுத்தவரையில் எந்தவிதச் சிக்கலும் கிடையாது. நான் தனிப்பட்ட நபர்களுக்கு சிபாரிசே செய்வது கிடையாது. பொதுவாக தகுதி உள்ளவர்களுக்குத்தான் வழங்குவவோம். இன்னொன்றை அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றியங்களில் ஒதுக்கப்படும் வேலைகளைப் பொறுத்தவரையில், இந்த இந்த ஊர்களுக்கு இந்த வேலையைச் செய்யுங்கள் என்று சொல்லுவோமே தவிர, இன்னாருக்கு இந்த வேலையைக் கொடுங்கள் என்று இதுவரையிலும் நான் சொன்னது இல்லை. எந்த விசாரணை வைத்தாலும் அதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களுடைய கூற்றை நான் வரவேற்கிறேன். அவர்கள் சிபாரிசு செய்யவில்லை என்றால் அது வரவேற்கக்கூடிய விஷயம். அவர் செய்யாமல் இருந்திருக்கலாம். அவரை யாரும் அணுகாமல் இருந்திருக்கலாம். அது இப்போது பிரச்சினையல்ல. யாரும் இங்கே

அவரைக் குற்றம் சாட்டவில்லை. அவர் வேலைகளுக்கு சிபாரிசு செய்தார் என்று சொல்லவில்லை. ஐ. ஆர். டி. பி. லோன் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு வங்கி அதிகாரிகள், ஒன்றிய ஆணையாளர்கள், சம்பந்தப்பட்ட எக்ஸ்டன்சன் ஆபீசர் என்று இதற்கு ஒரு குழுவே இருக்கிறது. அவர்கள் நேரடியாகச் சென்று, யார் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறேன் என்று சொல்லி மனு செய்திருக்கிறார்களோ--நீங்களே சிபாரிசு செய்திருந்தாலும் கூட--அந்தப் பட்டியலை வைத்துக்கொண்டு, அந்த முகவரிக்குப் போய் விசாரிக்கிறார்கள். உண்மையிலேயே வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களாக இருந்தால்தான் அந்தக் கடன்கள் வழங்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பழனிசாமி, கடைசியாக ஒரு கோரிக்கை வைத்து, பேச்சை முடியுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி பேரூராட்சி நகராட்சியாக மாற்றப்பட்டிருக்கிறது. நகராட்சியாக மாற்றப்பட்ட பின்பு அங்கே நிதி நிலைமையில் முன்னேற்றம் இல்லை. அங்கே தனி அதிகாரி நியமிக்கப்பட்டிருந்தாலும், அவர் அங்கே தங்குவதில்லை. இன்னும் சொல்லப்போனால் குடியரசு தினத்தன்று அங்கே தேசியக் கொடி ஏற்றுவதற்குக்கூட தனி அதிகாரி இல்லை. அவர் முறையாக வருவது கிடையாது. நான் தொகுதி சட்டமன்ற உறுப்பினர். நகராட்சி அலுவலகத்திற்குப் பக்கத்திலேயே என்னுடைய கட்சி அலுவலகம் இருக்கிறது. இருந்தாலும் என்னால் அவரைப் பார்க்க முடியவில்லை. எந்த நேரத்திலும் ஊரிலே இல்லை என்று சொல்கிறார்கள். அவர் வேறு ஊரிலே இருந்து வருகிறார். பேரூராட்சி நகராட்சியாக மாறிய பிறகும் சாலை வசதி, குடிநீர் வசதி, சாக்கடை வசதி செய்யப்படாத மிகப் பெரிய குறைபாடு இருக்கிறது. இது புதிதாகப் பிறந்திருக்கிற குழந்தை, தத்தித் தத்திப் பிழைத்துக் கொண்டிருக்கிறது. அந்த நகராட்சியில் மாண்புமிகு அமைச்சரவர்கள் சாலை வசதிகளை உடனடியாகச் செய்ய வேண்டும். திருத்துறைப்பூண்டி நகராட்சியில் தண்ணீரை விலை கொடுத்து வாங்க வேண்டிய அபாயகரமான நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. 10 கிலோமீட்டருக்கு அப்பால் இருக்கிற மேட்டுப்பாளையம் என்னும் ஊரிலிருந்து வண்டிகளிலே தண்ணீரைக் கொண்டு வந்து வியாபாரம் செய்கிறார்கள். அந்தப் பகுதியில் உள்ள மக்கள் தண்ணீரை விலை கொடுத்து வாங்கும் அபாயம் இருக்கிறது. இதற்கு உடனடியாக தற்காலிகமாக ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1994 ஏப்ரல் 26] [திரு. ஜி. பழனிசாமி]

அடுத்து, அந்த நகராட்சியில் புதிதாக பேருந்து நிலையம் கட்டி ஓராண்டு ஆகிறது. நான் வெட்டுத் தீர்மானம்கூட கொடுத்திருக்கிறேன். அங்கே சாலை போட வசதியில்லாமல், மிகவும் நெருக்கடியாக இருக்கிறது. கட்டிய பேருந்து நிலையத்தைத் திறப்பதற்கும், புதிதாக சாலை போடுவதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தொகுப்பு வீடுகள். ஏழை எளிய, தாழ்த்தப்பட்ட அரிசன மக்களுக்கு தொகுப்பு வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறோம். நான் என் வாயால் சொல்கிறேன், அந்த வீடுகள் கட்டுவதை தற்காலிகமாக நிறுத்தி வையுங்கள். அந்த வீடுகள் ஏழை எளிய அரிசன மக்கள் குடியிருக்க முடியாத அளவுக்குக் கட்டப்படுகின்றன. என்னுடைய மாவட்டத்தில் ஒரு திறனாய்வு பண்ணுங்கள். பூமியினுடைய அமைப்பு எப்படி இருக்கிறது, அங்கே வீடுகள் கட்டினால் எப்படி இருக்கும் என்று ஒரு திறனாய்வு செய்யுங்கள். அந்தக் கட்டிடங்கள், கான்க்ரீட் பாளம் பாளமாகப் பிளந்து விடுகிறது. அந்தச் சுவர்கள் எல்லாம் பிளந்து விடுகின்றன. குடியிருக்க முடியாத ஒரு அபாயம் இருக்கிறது. அதற்குப் பின்னாலும் கூட குடிசைகளிலிருந்து போய் மாடி வீட்டில் குடியிருக்கலாம் அல்லது கான்கிரீட் வீட்டில் குடியிருக்கலாம் என்று எண்ணிய அந்த அரிசனக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், 6 மாதங்களுக்குள் அதற்கு எதிரிலேயே கொட்டகை போட்டு தங்கும்படியான சூழ்நிலையில் இருக்கிறார்கள்.

பிற்பகல் 12-50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது பொதுவான குற்றச்சாட்டைச் சொன்னார்கள். மாவட்டம் முழுவதும் அப்படியிருக்கிறது என்று சொன்னார்கள். இதுவரையில், தஞ்சை மாவட்டத்திலும் சரி, நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திலும் சரி, அங்கேயுள்ள அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும் என்னைச் சந்திக்கிறார்கள். நானும் பல்வேறு இடங்களில் அந்த மாவட்டத்தில் ஆய்வு செய்திருக்கிறேன். அப்படிப்பட்ட நிலை அந்த மாவட்டங்களில் இல்லை. அவர் சொல்கிற ஏதாவது ஒரு பகுதி இருக்கும் என்றால் என்னிடத்திலே அதைக் குறிப்பிட்டுச் சொன்னால் அந்தக் கட்டிடங்கள் பழுதடைந்திருக்கின்றன. தரமானதாக இல்லை என்று குறிப்பிட்டுச் சொன்னால் இந்த அரசு

நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். அப்படிப்பட்ட குற்றச்சாட்டை ஏதோ உள்நோக்கத்தோடு சொல்வதாகத் தெரிகிறது. ஆகவே தயவுசெய்து எங்கு அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொல்வார்களானால் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேசியது போதும். அடுத்து உங்கள் தோழர் தம்புசாமி அவர்கள் பேச இருக்கிறார். நிறையப் பேசுவதற்குக் காத்துக்கொண்டிருக்கிறார். அவர் பேசுவார். (குறுக்கீடு) பேசியது போதும், முடித்துக் கொள்ளுங்கள். (குறுக்கீடு) அடுத்து திரு. பே. தர்மலிங்கம். (குறுக்கீடு) நேரம் இல்லையே. சரி, சீக்கிரம் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி. அப்படியாவது முடிப்போம். (குறுக்கீடு) ஏனென்றால் அரைகுறையாக முடிக்கக்கூடாது, பாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பழனிசாமிக்கு எவ்வளவு நேரம் கொடுத்தாலும், ஒரு மணி நேரம் கொடுத்தாலும்கூட திருப்தியில்லை. இருந்தாலும்கூடப் பரவாயில்லை. இந்த அளவில் முடித்ததற்கு அவருக்கும் நன்றி. திரு. பே. தர்மலிங்கம்.

திரு. பே. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் காவல் தெய்வம், நாங்கள் நித்தம் வணங்குகிற தமிழகத்தின் நிரந்தர முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, எனது உரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த மானியத்தை வரவேற்று நான் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலில் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட வாய்ப்பளித்து, என்னை வெற்றி பெறச் செய்து, முதன்முதலாக இந்த மாமன்றத்தில் எனது கன்னிப் பேச்சில் நான் வேண்டிக் கேட்டுக் கொண்டதற்கிணங்கி, பாளையங்கோட்டை நகராட்சி, திருநெல்வேலி நகராட்சி மற்றும் மேலப்பாளையம் நகராட்சி ஆகிய இந்த மூன்று நகராட்சிகளையும் இணைத்து திருநெல்வேலி மாநகராட்சியாக ஆக்கவேண்டுமென்ற எங்கள் கோரிக்கைக்கு இன்று முழு வெற்றியைக் கொடுத்த தமிழக முதலவர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக

1994 ஏப்ரல் 26] [திரு. பே. தர்மலிங்கம்]

நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோன்று, என்னுடைய தொகுதியான பாளையங்கோட்டையில் மேலப்பாளையத்தை உள்ளடக்கிய வெய்யில்காத்தான்குளத்தில் சர்வே எண் 982-ல் மத்திய பேருந்து நிலையம் அமைக்க வேண்டும் என்று இந்த மாமன்றத்திலே என்னுடைய கன்னிப் பேச்சிலே வேண்டிக் கேட்டிருந்தேன். அதை இன்றையதினம் 1994–95 கொள்கை விளக்கக் குறிப்பில் திருநெல்வேலி, மேலப்பாளையம் மற்றும் பாளையங்கோட்டை ஆகிய நகராட்சிகளில் அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய நவீனப் பேருந்து நிலையம் கட்டப்பட முன்மொழியப்பட்டுள்ளது. நிலம் மாற்றும் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டபின் இத்திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. அதற்கும் முதற்கண் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, ஒரு நல்ல பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சுமார் 15 ஏக்கர் நிலம் மேலப்பாளையம் நகராட்சி ஆணையாளரால் பரிந்துரை செய்யப்பட்டு அந்த நிலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கூடிய விரைவில் அந்த மேலப்பாளையம் வெய்யில்காத்தான்குளத்தில் அந்த 15 ஏக்கரில் புதிய பஸ் ஸ்டாண்ட் அமைப்பதற்கான பணியைத் துவக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். பாளையங்கோட்டை வளர்ந்து வருகின்ற ஒரு நகரம்.

பிற்பகல் 12-55

அங்கே ஏராளமான குடியிருப்புகள் வந்து கொண்டு இருக்கின்றன. ஆனால், சிறிது குடிநீர்ப் பற்றாக்குறை உள்ளது. அதனால், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ரூபாய் 6 கோடி செலவில் சாந்தி நகர், தியாகராய நகர் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய ஒரு பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை பாளையங்கோட்டையில் ஆய்வு செய்வதற்காக பொறியாளர்களை நியமித்து, ஆய்வுகள் முடிக்கப்பட்டு உள்ளன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் டெக்னிகல் சேங்ஷனும் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, இந்த நிதி ஆண்டில் அந்தக் குடிநீர்த் திட்டத்திற்கு பண ஒதுக்கீடு செய்து, அந்தப் பணியை விரைவில் தொடங்க வேண்டும் என்று அன்புடன் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று எனது தொகுதியில் பர்கீட் மாநகரம், பாளையம்செட்டி குளம், மேலகுளம், அரியகுளம் ஆகிய 14 சிறிய கிராமங்களை உள்ளடக்கிய ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் சுமார் 60 லட்சம் ரூபாய்க்கு

எஸ்டிமேட் சேங்ஷன் செய்யப்பட்டுள்ளது. அதற்கும் இந்த நிதி ஆண்டில் பண ஒதுக்கீடு செய்து, அந்தத் திட்டத்தை விரைவில் தொடங்க வேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எனது தொகுதியில் பாளையங்கோட்டை, மேலப்பாளையம் பகுதிகளில் சாலைகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. காரணம் சமீபத்தில் ஏற்பட்ட கடும் புயல், மழையால் மேற்கண்ட ஊர்களில் சாலைகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திருநெல்வேலி மாநகராட்சியாக உயர்த்திய பெருமையோடு, முதல்வரின் சீதனமாக சாலை வசதி, தெரு விளக்கு வசதி, வடிகால் வசதி, கழிப்பிட வசதி போன்ற அடிப்படை வசதிகளைச் செய்ய சுமார் 2 கோடி சிறப்பு ஒதுக்கீடாக அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நகராட்சியில் புதிதாக உருவாகும் காலனிகளுக்கு தெரு விளக்கு அமைக்க மின்சார வாரியத்தின் அனுமதியைப் பெறுவதற்குமுன் விளக்கு ஒன்றுக்கு 740 ரூபாய் கட்டப்பட்டும் பணியை நிறைவேற்ற பல ஆண்டுகள் ஆகிறது. அந்த அனுமதியை முன்னுரிமை அடிப்படையில் வழங்கக் கேட்டால், சிறப்புக் கட்டணமாக 3,240 ரூபாய் கட்ட வேண்டி உள்ளது. அந்த சிறப்புக் கட்டணத்தைத் தளர்த்தி, தெரு விளக்குகள் அமைக்கும் பணிக்கு அவசர கால அனுமதி கொடுத்து மின்விளக்குகளை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று அன்புடன் வேண்டுகிறேன்.

நகராட்சியில் குடிநீர்க் குழாய் அமைப்பதற்கு நகராட்சிப் பொறியாளர் அனுமதி வழங்கினாலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் அனுமதியோடு தான் நிறைவேற்ற வேண்டியுள்ளது. இதனால் குடிநீர்க் குழாய் அமைக்கும் பணி தாமதம் ஆகிறது. எனவே, குடிநீர் வடிகால் வாரியத்தில் உள்ள பொறியாளர் நிலையில், நகராட்சி நிர்வாகத்திலும் பொறியாளர்கள் உள்ளனர். எனவே, அனுமதிக்காக நகராட்சியிலிருந்து குடிநீர் வடிகால் வாரியத்துக்கு அனுப்பாமல், இந்தத் துறையிலுள்ள பொறியாளர்களின் ஒப்புதலோடு விரைந்து பொது மக்களுக்கு குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று வேண்டுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிப் பணிகள் சிறப்பாகவும் செம்மையாகவும் நடைபெற ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு எழுத்தர் தேவைப்படுகிறது. தற்சமயம் காலியாக உள்ள எழுத்தர் பதவிகளை

உடனடியாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் அன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப குடிநீர்ப் பம்பு பழுது பார்க்கும் ஃபிட்டர்கள் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். ஊராட்சிகளின் தெரு விளக்குகளைப் பராமரிக்க மின் பணியாளர்களை நியமித்துத் தர வேண்டும். ஊராட்சி தெரு விளக்குகள் அமைக்கவும், பராமரிக்கவும், அந்தப் பணியினை தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் ஒப்படைக்க வேண்டும். அல்லது வட்டார வளர்ச்சி அதிகாரியின் ஆளுகைக்குட்பட்டு லைன்மென், ஒயர்மென் போன்ற பணியாளர்களை நியமிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கொண்டு திருநெல்வேலி மாநகராட்சியாக உத்திரவிட்ட மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், அதற்கு சிறப்பு நிதியாக கூடுதலாக 2 கோடி ரூபாயை அளித்து அந்தப் பகுதியிலுள்ள குறைகள் போக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே வேண்டிக் கேட்டுக்கொண்டு, இந்த இனிய வாய்ப்பைக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தா. வேடியப்பன்.

*திரு. தா. **வேடியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பானதொரு தலைமையின் கீழ் சிரித்து எழும் மக்கள் ஆட்சியை பொங்கும் பொலிவுடன் எதிலும் கணிப்பொறி கண்ட தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, ஊரக வளர்ச்சி, உள்ளாட்சி மற்றும் குடிநீர் வழங்கல் மானியக் கோரிக்கைகளின் மீது சில கருத்துக்களைக் கூற விழைகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு பொறுப்பு ஏற்ற பிறகுதான் ஒரு மனிதனின் தனித் தேவையை நிறைவேற்றும் வண்ணம், அதேபோல் தனி கிராமம், தனி நகரம், தனி மாநகரம் போன்ற தனித் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற அரசாக இன்று இயங்கி வருகிறது நம்முடைய புரட்சித் தலைவி அரசு என்பதைத் தெளிவாகக் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன். 'யாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக' என்ற உள்ள உணர்வோடு, தனக்கு வாக்களித்த மக்கள் எல்லாம் தன்னைப்போல சிறப்பாக வாழ வேண்டுமென்று, சிறப்பான தன்னிறைவுத் திட்டத்தின் மூலம், மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய, ஒரு ஒன்றியத்திற்கு கோடி ரூபாய் அளித்து, தான் பெற்ற கல்வியைப் போல . . (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 1-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்அனுமதியோடு பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இப்போது ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் பேரவை பிற்பகல் 3.30 மணிக்குக் கூடும் என்று அறிவிக்கப்படுகிறது. 3.30 மணிக்கு உறுப்பினர்கள் அனைவரும் சரியான நேரத்தில் அவையில் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திரு. வேடியப்பன், 3.30 மணிக்கு உங்களுடைய உரையைத் தொடரலாம். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.01 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 3-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் பிற்பகல் 3.30 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கோரப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் மீது விவாதம்-தொடர்ச்சி. திரு. தா. வேடியப்பன் அவர்கள் தனது பேச்சைத் தொடருவார்.

***திரு. தா. வேடியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தான் பெற்ற கல்வியைப்போல் மக்களும் கற்கவேண்டும், தான் நல்ல குடிநீர் அருந்துவதுபோல் மக்களும் நல்ல குடிநீர் அருந்த வேண்டும், தான் நகரில் வாழ்வதைப்போல கிராமங்கள் எல்லாம் நகரங்களாக மாறவேண்டும் என்ற உன்னத உணர்வோடு, அதனை நடைமுறைப்படுத்தியவர் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள், இதற்கு முன்னுதாரணமாகக் கூறவேண்டுமானால் நம்முடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில் 1980-83--ல் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்திற்கு 35 லட்சம் ரூபாய் ஒதுக்கி, அன்று புரட்சித் தலைவர் அவர்கள் அடித்தள மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்தார்கள். அதேவழியில் நின்று, இன்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசுக்குப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள், ஏழை எளிய மக்கள் அடித்தளத்தில் வாழும் மக்கள் மீது அதிக அக்கறை கொண்டு ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ஒதுக்கி சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தை அமல்படுத்தி, ஏழை எளிய மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து உள்ளார்கள்.

இந்தச் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில் 1 கோடியில் சாலைத் திட்டத்தில், 7502 கிலோ மீட்டர் மேம்பாட்டிற்கு 159.47 கோடி செலவிலும், ஊரகப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க, 8972 பகுதிகளுக்கு 108.23 கோடி செலவிலும், தெரு விளக்குகள், மின் விளக்குகள் 1,94,000 எண்ணிக்கைக்கு, 41.75 கோடி செலவிலும், 3231 கசிவு நீர்க்குட்டைகள் அமைக்கவும், சிறுபாசனக் கால்வாய்களை 2910 கிலோ மீட்டருக்கு ஆழப்படுத்துவதற்கு 24.17 கோடி செலவிலும், பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்காக, 2198 எண்ணிக்கைக்கு 30.46 கோடி செலவிலும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்களுக்கு 2879--க்கு, 20.40 கோடி செலவிலும், 1861 தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைக்க 2.76 கோடி செலவிலும், ஆக ஒட்டுமொத்தமாக 387.24 கோடி செலவில், 387 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் திட்டங்கள் நிறைவேற்றப்பெற்று அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்த நம்முடைய சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் புரட்சித் தலைவி அவர்களால் முடிக்கப்பட்ட சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் என்பதை எல்லோரும், எல்லா ஒன்றியத்திலும் உள்ள மக்கள் எல்லாம் அறியும் வகையில், கற்பலகை அமைத்து பதியப்பெற வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில், ஒவ்வொரு கிராமத்திற்கும் சாலை வசதிகள் செய்யப்பட்டன. மின் விளக்கு வசதிகள் செய்யப்பட்டன. பாதுகாக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்து, ஆழ்துளைக் கிணறுகளும் அமைத்து சீரான, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டன. ஏழை விவசாய மக்களுடைய அன்றாடம் உபயோகப்படும் ஏரிகள் எல்லாம் ஆழப்படுத்தப்பட்டன. கசிவு நீர்க் குட்டைகள் எல்லாம் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டன. விவசாயிகளின் தேவைக்காக நெற்களங்கள் அமைத்து, அடித்தள மக்களுடைய-- அதாவது ஒரு மனிதனுக்கு எப்படி அவனுக்கு அடிப்படைத் தேவைகளான உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் வேண்டுமோ, அத்தனையும் வழங்கி நடைமுறைப்படுத்தியதைப் போல, ஒரு கிராமம் என்று எடுத்துக் கொண்டால், மக்களின் பயனுக்காக நல்லமுறையில் உள்ள சாலை வசதிகள், நல்லமுறையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் பகல் மட்டுமின்றி இரவைப் பகலாகக் காட்சி அளிக்கும் வகையில் மின் விளக்கு வசதிகள் போன்றவற்றைப் பெற்றுக்கொண்டால், அந்தக் கிராமம் தனி மனிதனின் தேவையைப் பூர்த்தி செய்ததைப் போல தன்னிறைவு அடைந்ததாகக் கருதப்படும்.

இப்படிப்பட்ட தேவைகளை ஆய்வு செய்து, நிவர்த்தி செய்தது தான் நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு என்பதைப்

பெருமையாகக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு மேலும் உதாரணமாகக் கூறவேண்டுமானால், எங்களுடைய போளூரைப் பொறுத்தவரையில், 3 ஆண்டுக் காலத்தில் சுமார் 27 கிலோ மீட்டருக்கு கப்பிச் சாலையும், சுமார் 10 கிலோ மீட்டருக்கு தார்ச் சாலையும், 700 மின் விளக்குகளும்--மின் விளக்கு இல்லாத பகுதிகளுக்கு எல்லாம் மின் விளக்கு வசதி செய்தும்--40 ஊராட்சிகளில் 47 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்தும், அடித்தள மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்த அரசாக இருக்கிறது.

அதேபோல் ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு விளையாட்டு அரங்கத்தை 5 லட்சம் ரூபாயில் அமைத்த--(சென்னை நேரு விளையாட்டு அரங்கம் போல அமைத்து)--பெருமை நம்முடைய புரட்சித் தலைவி அவர்களைச் சாரும். அதுமட்டுமின்றி, ஒவ்வொரு கிராமத்திலும் தண்ணீர்க் குறை வராத அளவிற்கு, கூடுதலாக ஆழ்துளைக் கிணறுகளையும், கைப் பம்புகளையும் அமைத்து, குடிநீர் வழங்கிய சிறப்பினைப் பெற்ற அரசு நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசு, இந்த 3 ஆண்டுக்கால சரித்திர சாதனையை வரலாற்றின் பொற்காலம் என்றே கூறலாம்.

மேலும் இதற்குக் காரணம் ஒரு கிராமத்தினுடைய கல்வி வசதி முன்னேற்றம் அடைய, அனைத்துக் கிராமங்களிலும் கல்விக் கூடங்களுக்கான பள்ளிக் கட்டிடங்கள், மைய அரசு பஞ்சாயத்து ராஜ் சட்டத்தை அறிமுகப்படுத்தினாலும், அதற்கு முன்கூட்டியே நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் எல்லாக் கிராமங்களிலும் ஊராட்சி ஒன்றியக் கட்டிடங்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கூடக் கட்டிடங்கள், கிராமப்புறப் பகுதிகளிலே கால்நடை மருத்தகக் கட்டிடங்கள், கிராமப் பகுதிகளிலே நியாயவிலைக் கடைகளுக்கு புதிய கட்டிடங்கள் போன்று எல்லாக் கிராமங்களிலும் எந்த ஒரு கிராமத்தை எடுத்துக் கொண்டாலும் இன்றைய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு சார்பில் கட்டிடம் கட்டாத கிராமமே இல்லை என்பதை தெள்ளத்தெளிவாக என்னால் கூறமுடியும்.

பிற்பகல் 3-35

கிராமப் பகுதிகளில் எல்லாம் உள்ள நியாய விலைக் கடைகளுக்கும் புதிய கட்டிடங்கள் போன்று எந்தக் கிராமத்திலும் கட்டிடங்கள் கட்டாத கிராமமே கிடையாது.

1994 ஏப்ரல் 26] [திரு. தா. வேடியப்பன்]

அதேபோன்று காலனி வாழ் மக்கட்கு அது கிராமமானாலும் சரி, நகரமானாலும் சரி, அவர்கட்கு காங்கிரீட் தளம் அமைத்த தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுத்திருப்பது ஆதிதிராவிட மக்களிடத்தில் பெற்றுள்ள பற்றுதலைத் தெரிவிக்கிறது.

இதுபோன்று மற்றுமொரு ஒன்றியமான கணியம்பாடியிலும் அனைத்து வசதிகளையும் அளித்ததுதான் நம் உள்ளாட்சித் துறை. எனது தொகுதி போல்தான் தமிழகம் முழுவதும் சிறப்பான பணியாற்றி அனைத்து கிராம, நகரப் பகுதிகளில் தேவையைப் பூர்த்தி செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் பெண்கள் சமுதாய மேம்பாட்டிற்காக டோக்ரா திட்டத்தில் அனைத்து மாவட்டங்களும் பயனடையும் வகையில் செயல்படுத்தப்பட்டு, மேலும் இவ்வாண்டு ரூ. 69.87 இலட்சம் ஒதுக்கீடு செய்து மேலும் ஐந்து மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளதற்கு பாராட்டுகிறேன்.

ஊரக கைவினைஞர்களுக்கு மேம்படுத்தப்பட்ட கருவிகள் வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் ரூ. 2000 பெறுமான கருவிகள் வழங்க உத்தரவிட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் 1300 கைவினைஞர்கள் வீதம் 6500 நபர்க்கு, மேலும் ஏழு மாவட்டங்களுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்தியுள்ளதை மனமாரப் பாராட்டுகிறேன்.

சமூகக் காடுகள் திட்டத்தில் தரிசாக உள்ள அரசுக்குச் சொந்தமான நிலங்களில் மரக்கன்றுகளை நடவு செய்து அதன்மூலம் அங்கே ஏழை மக்கட்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்படுகிறது. அது மட்டுமின்றி மரம் வளர்த்து பின் பயன்தரும்போது அந்த ஊராட்சிக்கு அந்தப் பணம் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய உதவுகிறது. இத்திட்டத்தினை மனதார வரவேற்கின்றேன்.

அதேபோன்று தொகுப்பு வீடுகள். வீடுகள் அமைப்பதால் அங்கே மக்களுக்கு உழைப்பு ஊதியம் வழங்கப்படுகிறது. அதே நேரத்தில் நிலையான கட்டிடம் கட்டுவதால் மக்கட்கும் பயன் கிடைக்கிறது. இத்திட்டத்தில் 385 லட்சம் வீடுகள் கட்டியுள்ளதை மனதாரப் பாராட்டுகிறேன். தொடர்ந்து இவ்வாண்டும் 25000 வீடுகள் கட்ட ஒதுக்கியுள்ளதை நான் மனமாரப் பாராட்டுகின்றேன்.

மில்லியன் கிணறு திட்டத்தில் ஏழை ஆதிதிராவிடர்கட்கு, நிலம் வைத்திருப்போர் அனைவருக்கும் ஜீவன்தாரா கிணறு வெட்டப்பட்டுள்ளது. இருப்பினும் அதனை விரிவு செய்து நலிவுற்ற மிகவும் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளும் பயன்

பெறும் வகையில் 6000 கிணறுகள் 2520 லட்சம் மதிப்பீட்டில் இவ்வாண்டு அமைத்திருப்பதை மனமார வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கசிவுநீர்க் குட்டைகள் அமைத்து ஆங்காங்கே விவசாயிகளின் நீராதாரத்தினை உருவாக்கும் வகையில் 270 பணிகள் ரூ. 406.80 லட்சம் ஒதுக்கியுள்ளதையும், ரூ. 6676.80 லட்சம் செலவில் மில்லியன் கிணறு தோண்டும் திட்டங்களை செயல்படுத்துவதையும் நான் உளமார மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்.

தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள் கட்ட 6559 என்று உத்தேசித்து, 4991 பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பட்டும், மேலும் 1563 பள்ளிகள் தேவையில், இவ்வாண்டு 667 பள்ளிக் கட்டிடங்களும் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளதை மனமார வரவேற்கின்றேன். மீதமுள்ள பள்ளிகளும் நம் புரட்சித் தலைவி ஆட்சியில் இன்னும் இரண்டு ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டு, ஆரமபப் பள்ளிகட்கும் கட்டிடங்கள் இல்லை என்ற குறை இல்லாமல் தன்னிறைவு அடையச் செய்வதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

அதேபோன்று 4906 ஊராட்சிகளுக்கும் கட்டிட வசதி செய்து தரப்படும் என அறிவித்து 1766 கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு இவ்வாண்டு 100 லட்சம் மதிப்பீட்டில் 100 கட்டிடங்கள் கட்ட உத்தேசித்து இருப்பதை நான் மனமார வரவேற்கிறேன்.

அதேபோன்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கூடங்களும், 300 கட்டிடங்கள் 255 லட்சம் செலவில் கட்டத் திட்டமிட்டிருப்பதை நான் மனமாரப் பாராட்டுகிறேன். அதே போன்று கடந்த இரண்டு ஆண்டுகளில் 6128 கிலோமீட்டர் சாலைகள் சரளைக் கற்கள் மூலம் மெக்கடம் சாலை அமைத்தும், அத்தோடு 1200 கி. மீ. தார்ச்சாலை அமைக்க 3000 இலட்சம் ஒதுக்கி இருப்பதையும் நான் மனதார வரவேற்கின்றேன். இதனால் கிராமப் பகுதிகளில் எல்லாம் பஸ்வசதி செய்து கிராமப் பகுதி மக்களெல்லாம் நகரப் பகுதிகட்கு தங்களின் தேவைகளை பெற்றுச் செல்ல வசதி செய்து நகரங்களில் உள்ளவர்கள் போல் தாங்களும் வாழ்வதற்கு பெரும் வசதிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

இதுவரையில் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்கள் பராமரிப்பின்றிக் கிடந்தன. எந்த ஒரு ஆட்சியிலும் இதுவரையிலும் பார்த்தது கிடையாது. ஆனால் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு 10 சதவீதம் ஒதுக்கீடு செய்து, பழைய கட்டிடங்கள், குளங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், வானொலி அமைத்தல், மயானப் பாதை வழிகள், கால்நடை உதவி நிலையங்கள், ஆதிதிராவிட

1994 ஏப்ரல் 26] [திரு. தா. வேடியப்பன்]

மக்கட்கு சாலைகள், சிறு பாலங்கள், ஆழ்துளைக் கிணறுகள், தரைப் பாலம் போன்றவைகளைக் கவனிக்க ரூ. 2171.30 லட்சம் ஒதுக்கியுள்ளதை நான் மனதார வரவேற்கின்றேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள் வீட்டுவசதி மானியக் கோரிக்கையின் மீது 8-4-94 அன்று பேசும்போது பழைய நகரம் சென்னை என்று குறிப்பிட்டார். இதற்காகத்தான் நம் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் எழில்மிகு சென்னை-2000 என்பதனை ஜொலிக்கும் பொலிவுடன் கம்ப்யூட்டர் உலகம் என்பதனை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் சாதனைகளை கம்ப்யூட்டர் மூலம் நம்முடைய அரசின் சார்பில் உள்ள நலத் திட்டங்களை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் வெளிப்படுத்தினார்கள். இதற்காக 4000 கோடி பணம் ஒதுக்கி இந்தத் திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்தும்போது இந்த சென்னை மாநகரம் மட்டுமல்ல, அனைத்து மாவட்டங்களுமே அழகு ஜொலிக்கும் பூங்காக்களாக, வண்ணம் ஜொலிக்கும் பொலிவுடன் காணப்படும் என்பதைத் தெள்ளத் தெளிவாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 3-40

எனது போளூர் தொகுதியைப் பொறுத்தவரையில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு உரிய கட்டிடம் ஏறக்குறைய 60 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. அதேபோல கணியம்பாடி ஊராட்சி ஒன்றியக் கட்டிடமும் 40 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. இரண்டு கட்டிடங்களும் மோசமான நிலையில் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சரிடத்திலே இந்த இரண்டு கட்டிடத்தைப் பற்றிக் கேட்டால் நெடுஞ்சாலைத் துறை மூலமாகப் பராமரிக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். நெடுஞ்சாலைத் துறை மூலமாகவோ அல்லது ஊராட்சி வளர்ச்சித் துறை மூலமாகவோ, இந்த இரண்டு கட்டிடங்களையும் கட்டித் தரவேண்டுமாய் நான் கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு போளூரில் இருக்கக்கூடிய சாலை உருளை சக்கரங்கள் பழுதடைந்து பல ஆண்டுகள் ஆகின்றன. அதற்கு செலவு 3 லட்சம் ஆகும் என்று தெரிவிக்கிறார்கள். தயவு செய்து அந்தச் சாலை உருளையையும் சீர் செய்து கொடுக்க வேண்டுமாய் நான் கேட்டுக் கொள்கிறேன். போளூரிலே குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கடந்த 3 நாட்களுக்கு முன்பு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 67 லட்சம் ரூபாய் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்கள். அதையும் துரிதப்படுத்தி எங்களுடைய போளூர் மக்களுடைய குறைகளான

குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் அல்லிநகர் பகுதியிலேயும், சிவராஜ் நகர் பகுதியிலேயும் தனித் தனியாக மேட்டுப் பகுதியிலே ஒன்றும், பள்ளப் பகுதியிலே ஒன்றுமாக குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளை கூடுதலாக அமைத்து அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை நிறைவு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். அது மட்டும் இன்றி போளூர் மக்கள் தன்னிறைவு அடைய வேண்டுமென்றால் நம் புரட்சித் தலைவியினுடைய அரசு சார்பில் போளூரிலே ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலையையும் ஏற்படுத்த வேண்டும். அடுத்தாற்போல போளூரிலே பொதுப்பணித்துறை மூலம் செண்பகத் தோப்பு அணையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை ஒன்றும் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல பால் குளிரூட்டும் நிலையத்தையும் போளூரிலே அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த 4 திட்டங்களும் நிறைவேற்றப்படுமானால் எங்களுடைய போளூர் தொகுதி தன்னிறைவு பெற்ற தொகுதியாக அமையும் என்று கூறி இந்த உள்ளாட்சி மானியக் கோரிக்கையில் 600 கோடிக்குமேல் ஒதுக்கியும் அதில் குடிநீர் வசதிக்காக 203½ கோடி அளவுக்கு மேல் ஒதுக்கியுள்ள நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு மனதாரப் பாராட்டுக்களை நல்கி, இவ்வளவு நேரம் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த நமது பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி, கூறி விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சித் துறை மானியக் கோரிக்கை மீது கருத்துக்களைக் கூற வாய்ப்புத் தந்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஊராட்சி, நகராட்சி என்பது மக்களுக்கு அன்றாடம் ஏற்படக் கூடிய தேவைகளை நிறைவேற்றுவதற்குரிய ஒரு அடிப்படை சாதனமாகச் செயல்படுகிறது என்பது நம் அனைவருக்கும் தெரியும். அந்த வகையில் இந்த வேலைகளை நிறைவேற்றுகிறபொழுது அல்லது நிறைவேற்றுவதற்கான திட்டங்களை உருவாக்குகிறபொழுது அந்தந்தத் தொகுதிக்குள்ளான சட்டமன்ற உறுப்பினர்களை--மற்ற தொகுதிகளில் எப்படியோ எனக்குத் தெரியாது, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் 3 ஒன்றியங்கள் செயல்படுகின்றன. அந்த 3 ஒன்றியங்களிலும் பணிகளையோ, திட்டங்களையோ நிறைவேற்றுகிறபொழுது சட்ட மன்ற உறுப்பினர்களைக் கலந்து கொள்கிற போக்கு இல்லை என்பதை இந்த

நேரத்திலே சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், ஐ.ஆர்.டி.பி. கடன் வழங்குகிறபோது யாருக்குக் கொடுக்கப்படுகிறது, எப்படி பட்டியல் தயாரிக்கப்படுகிறது என்பதில் எங்களைக் கலந்து கொள்ளவில்லை. இதை நான் இங்கே மட்டும் குறிப்பிடவில்லை, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயே இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்று கூறுகிறபொழுது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே யார் யாருக்குக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது என்ற பட்டியலை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கவேண்டும் என்று கூட அவர்கள் கூறியிருக்கிறார்கள். இதைக் குறிப்பிட்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கடிதம் எழுதி அப்படிப்பட்ட பட்டியல் 15 நாளைக்குள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று அவர்கள் நினைவூட்டியும் கூட அந்தப் பட்டியல் கொடுக்கப்படுவது கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் ஐ.ஆர்.டி.பி. பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கிற முறை சரியாக இல்லை என்றும், அதற்கான பட்டியல் வழங்கப்படவில்லை என்றும், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் எடுத்துச் சொல்லியும் வழங்கவில்லை என்றும் தெரிவிக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவிப்பது எல்லாம் ஐ.ஆர்.டி.பி. பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு முறையான சில விதிமுறைகளை மத்திய அரசு நமக்கு வகுத்துக் கொடுத்திருக்கிறது.

பிற்பகல் 3-45

அப்படி மத்திய அரசு வகுத்துத் தந்திருக்கின்ற விதிமுறைகளின் அடிப்படையிலே தான் ஐ.ஆர்.டி.பி. பயனாளிகளை நாம் தேர்ந்தெடுக்க முடியும். அந்த அடிப்படையில் ஒவ்வொரு மாநிலத்திலும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற ஏழைக் குடும்பங்களைக் கண்டறிவதற்காக ஒரு சர்வே செய்யப்பட்டு அந்த ஆய்வின்படி கண்டறியப்பட்டு தகுதி வாய்ந்த, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற குடும்பங்களுடைய பட்டியல் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலும் ஊர் நல அலுவலரிடம் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் இந்தப் பட்டியலிலே இருக்கின்ற குறைந்த வருமானத்தை முன்னுரிமையாக வைத்து கிராமக் கூடங்கள் மூலமாக ஒவ்வொரு ஆண்டும் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அந்தப் பயனாளிகளைத்

தேர்ந்தெடுப்பதற்காக டாஸ்க் ஃபோர்ஸ் என்ற ஒரு கமிட்டி மத்திய அரசினுடைய ஆணையின்படி நிறுவப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் இதிலே வட்டார அலுவலர்கள், வங்கி அலுவலர்கள், அந்தக் கிராமத்திலே இருக்கின்றவர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், மக்களுடைய பிரதிநிதிகளைக்கூட அங்கத்தினர்களாகக் கொண்டிருக்கின்ற வகையிலேதான் அது வகுக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் இந்த டாஸ்க் ஃபோர்ஸ் குழுக்கள்தான் ஐ.ஆர்.டி.பி. பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கிறது. வேறு யாரும் தேர்ந்தெடுப்பது இல்லை. அதிகாரிகளும் கடனை வழங்குகின்ற வங்கியும், கிராமத்திலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற மக்கள் பிரதிநிதிகளையும் சேர்த்துத்தான் அந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. தங்களுக்கு அப்படி உங்களுடைய ஒன்றியத்திலிருந்து பட்டியல் கிடைக்கவில்லை என்று சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அந்தப் பட்டியல் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். உதாரணத்திற்குச் சொன்னால் பொள்ளாச்சி ஊராட்சி ஒன்றியத்திலே ஆணையர் அவர்கள் நீங்கள் வேண்டுமானால் பரிசீலித்து ஒரு பட்டியல் கொடுங்கள், பரிசீலிக்கிறோம் என்று சொன்னார்கள். நானும் தயாரித்து பட்டியலைக் கொடுத்தேன். ஆனால் ஒரு நபருக்குக் கூட வழங்கப்படவில்லை. சாதாரண, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள்தான். நான் கட்சி வித்தியாசமோ, மற்ற வித்தியாசமோ பார்க்கவில்லை. யாருக்கு வேண்டுமானாலும் வறுமைக் கோட்டிற்கு கீழே இருப்பவர்களுக்கு வழங்க வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கமே தவிர.........

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நல் எண்ணத்தை வரவேற்கிறேன். நான் ஏற்கெனவே சொன்னது போல இந்த டாஸ்க் ஃபோர்ஸ் திட்டம் கடந்த ஏழாவது திட்ட ஆண்டுவரை அது நிலுவையிலே இருந்தது. அந்த டாஸ்க் ஃபோர்ஸ் அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர்களும் அதிலே அங்கத்தினர்களாக இருந்தார்கள். ஆனால் சமீபகாலமாக மத்திய அரசிலே சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த டாஸ்க் ஃபோர்ஸ் குழுக்களிலே இடம் பெற வேண்டியதில்லை என்ற ஒரு முறையை வகுத்து இருக்கின்ற காரணத்தினாலும் அந்தக் குழுக்கள் எட்டாவது திட்ட காலத்திலே நீக்கப்பட்டுவிட்ட காரணத்தினாலும் தற்சமயம் சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து அந்தப் பட்டியலைப் பெறுகின்ற நிலையை மாற்றியிருக்கிறோம். இருந்தாலும் கூட இந்த அரசு சட்டமன்ற உறுப்பினர்கள்

1994 ஏப்ரல் 26] [திரு. டி.எம். செல்வகணபதி]

பொதுமக்களுடைய பிரதிநிதிகள் என்ற அடிப்படையிலே, அவர்களிடமிருந்து தகுதியான பட்டியலைப் பெறலாம் என்றும் அறிவித்திருக்கிறது. இந்த அடிப்படையில் நான் ஏற்கெனவே சொன்னேன். ஒரு ஆய்வு நடத்தியிருக்கிறது. ஒரு சர்வே பட்டியல் வைத்து இருக்கிறோம். அந்தப் பட்டியலிலே இடம் பெற்றிருக்கின்ற வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்கு மட்டும்தான் அந்த நிதி வழங்கப்படுகிறது என்ற நிலையை ஏற்கெனவே இருந்த ஆட்சியாளர்கள் உருவாக்கியிருந்தார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அந்தப் பட்டியலிலே இடம் பெறாதவர்கள் உண்மையிலேயே வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களாக இருந்தால் அவர்களையும் ஆய்வு செய்து-நேரடி ஆய்வு செய்து அவர்களையும் ஐ.ஆர்.டி.பி. பயனுக்குக் கொண்டு வரலாம் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். சுற்றறிக்கையும் அனுப்பியிருக்கிறார்கள்.

அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் பட்டியலைக் கொடுப்பார் என்று சொன்னால் அந்த மனுதாரர்கள்—பயனாளிகள் மீதும் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோன்று வீடு கட்டுகின்றபோது பொதுவாக முன்னாலே எல்லாம் எப்படி எந்தந்தப் பகுதியிலே வீடு கட்டப்படவில்லையோ அல்லது எந்தந்தப் பஞ்சாயத்திலே வீடு கட்டப்படவில்லையோ, இதுவரையில் கட்டப்படாத அதுபோன்ற பஞ்சாயத்துக்களுக்கு முன்னுரிமை கொடுத்து வீடுகள் கட்டப்பட்டன. ஆனால் இப்போது என்ன நடக்கிறது என்று சொன்னால் ஆளும் கட்சி யாருக்குச் சொல்கிறார்களோ அங்கேதான் கொடுக்கின்ற ஒரு கட்டாயம் ஏற்படுகிறது.

பிற்பகல் 3-50

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய குற்றச்சாட்டை மறுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏதோ ஆளும் கட்சி உறுப்பினர்கள் மட்டும் சொல்லுகின்ற இடத்திலே கட்டுகின்ற நிலைமை அல்ல. இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தவரை மத்திய அரசு தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு ஒரு இலக்கு நிர்ணயித்து இருக்கிறது. அந்த இலக்கை மிஞ்சுகின்ற வகையிலே நான் ஏற்கனவே சொன்னேன். சுமார் 400%க்கு மேல் தமிழகத்திலே கட்டியிருக்கிறோம். அந்த அளவுக்கு ஆதிதிராவிடர் மக்கள், பழங்குடி மக்கள் எங்கு வசித்துக் கொண்டிருந்தாலும்

அவர்களுக்கு கூரை வீடுகளை மாற்றியமைக்கின்ற ஒரு நல்ல எண்ணத்தோடுதான் இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதிலே வாக்கு பெறுவதிலே எங்களுக்கும் அக்கறை உண்டு. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய 3 ஆண்டு ஆட்சிக் காலத்திலே எப்படிப்பட்ட பணிகள் எல்லாம் ஆதி திராவிடர் மக்களுக்கு, பழங்குடியின மக்களுக்கு செய்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் மனசாட்சியோடு உணர்ந்து பார்க்க வேண்டும். அந்த அடிப்படையில்தான் நாங்கள் யாரையும் ஒதுக்க விரும்பவில்லை. அப்படிப்பட்ட எந்தவிதமான எண்ணமும் இந்த அரசுக்கு இல்லை. அந்த அடிப்படையில் யார் இருந்தாலும், தகுதியானவர்கள் இருந்தால், ஆதி திராவிடர் மக்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இருந்தால் அவர்களுக்கு இந்தப் பயனை அளித்துக் கொண்டு தான் இருக்கிறோம்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். உதாரணத்திற்குக் கூறுகிறேன். திருவாரூர் ஊராட்சி ஒன்றியம். இந்த ஒன்றியத்திலே அலிவலம் பஞ்சாயத்து. இந்த அலிவலம் பஞ்சாயத்திலே முன்னால் தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒரு ஆதி திராவிடர் தெருவில் தொகுப்பு வீடுகள் கட்ட வேண்டுமென்று அங்கே இருக்கக்கூடிய ** *(மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு பஞ்சாயத்தில் ஏற்கனவே கட்டப்பட்டிருக்கிறது. அந்தப் பஞ்சாயத்திலேயே திரும்பக் கட்டியிருக்கிறார்கள் அப்படி என்கிற குற்றச்சாட்டு வரைக்கும் நீங்கள் சொல்லலாம். அதற்காக ** என்பது போல் வருவது சரியல்ல.

திரு. வே. தம்புசாமி: காரணத்தைச் சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காரணம் எதற்கு? நீங்கள் சொல்லலாம், அந்தக் குறிப்பிட்ட பஞ்சாயத்தில் ஏற்கனவே வீடுகள் கட்டியிருந்தும், திரும்பவும் அதே பஞ்சாயத்தில் கட்டியிருக்கிறீர்களே, இது எப்படி என்று அமைச்சரைக் கேளுங்கள். ** அது எல்லாம் வேண்டாம். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சிறிய விளக்கத்தை இதிலே

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1994 ஏப்ரல் 26] [திரு. டி.எம். செல்வகணபதி]

தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தொகுப்பு வீடுகளைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். இன்றைக்கு தமிழகத்தில் அவ்வளவு டிமாண்டு இருக்கிறது. ஆதிதிராவிடர் மக்கள் மத்தியில் இந்தத் தொகுப்பு வீடுகளைப் பெறுவதற்காக பெறுகின்ற மனுக்கள் என்று சொல்லுகின்றபோது, 5 ஆண்டுகள் ஆனாலும் முழுமையாகக் கட்டித்தர முடியாத நிலைமை தமிழகத்தில் இருக்கிறது. காரணம் மத்திய அரசு இதிலே ஒரு இலக்கு வைத்திருக்கிறார்கள், இவ்வளவு விழுக்காட்டுக்கு மேலே தொகுப்பு வீடுகளுக்குப் பயன்படுத்தக் கூடாது என்று. தமிழக அரசு அதில் ஒரு வீட்டுக்கு 6400 ரூபாயை தன்னுடைய பங்காக செலுத்துகிறது. அந்த அடிப்படையில் கடந்த ஆண்டு மட்டும் 30 ஆயிரம் வீடுகளை தமிழகத்தில் கட்டியிருக்கிறோம். இந்த ஆண்டு இந்த விளக்க உரையில் அளிக்க இருக்கிறேன். எவ்வளவு வீடுகள் தமிழகத்தில் கட்டப் போகிறோம் என்பதை. அப்படி 30 ஆயிரம் வீடுகள் கொடுத்தும், மத்திய அரசு 7 ஆயிரம் தான் இலக்கு நிர்ணயித்தது. நாம் 30 ஆயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுத்து இருக்கிறோம். 30 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுத்து இருந்தும் கூட இந்த டிமாண்டு என்று சொல்லப்படுவது நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. இதிலே எந்தவிதமான மாறுபாடும் இல்லை. உங்களுடைய ஒன்றியத்திலே பல பகுதிகளுக்கு-இந்த டிமாண்டு ஆதிதிராவிட மக்களிடமிருந்து கோரிக்கைகள் நிறைய பெறப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் ஒவ்வொன்றாகத்தான் செய்ய முடியும். இந்த 30 ஆயிரம் வீடுகளில் யூனியனுக்கு 100 வீடுகள், 200 வீடுகள் என்று பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதிலே இங்கு தற்போது இந்த ஆண்டு செயல்பட்டால் அடுத்த இடத்திலே அடுத்த ஆண்டு செயல்படும் என்ற முறையைத் தான் நாங்கள் வைத்து இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் சொன்னது வேறு. நீங்கள் சொன்ன 'ஒரே பஞ்சாயத்தில் திரும்பக் கட்டியிருக்கிறார்கள்' என்பது வரைக்கும் உங்களுடைய பேச்சு இருக்கலாம். அது ** என்று வருவது நன்றாக இருக்காது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. **அது எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. உங்களுடைய அந்த ஒரு பகுதி இருக்கட்டும். கட்டிய பஞ்சாயத்திலேயே திரும்பக் கட்டப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டுமானால் விளக்கம் கேளுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு இடத்திற்குக் கேட்கப்பட்டு அந்த வீடுகளை எல்லாம் பிரிக்கச் சொல்லி, அது அங்கே கட்டக்கூடாது என்று மறுபடியும் வந்து வேறு இடத்திலே கட்டியிருக்கிற இடத்திற்கே திரும்பக் கட்டுவது என்று போய் என்னிடத்தில் அந்தப் பகுதியில் இருப்பவர்கள் அனைவரும் வந்து கேட்டு, நான் ஆணையாளர் அவர்களோடு தொடர்புகொண்டு கேட்கிறபோது நான் என்ன செய்வது நிர்பந்திக்கிறார்கள், வேறு ஒன்றும் வழியில்லை. இப்படி அவர்கள் சொல்லி, நான் முடியாது முன்னாடி எங்கே நிர்ணயித்தீர்களோ அந்த இடத்திலே தான் கட்டப்படவேணடும்; கட்டியிருக்கிற இடத்திலே மீண்டும் கட்டக்கூடாது என்று....

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது இதே பிரச்சினையை வேறு மாதிரியாகச் சொல்லுகிறார். நான் அவரைக் கேட்கிறேன், இப்படி ஏற்கனவே ஒரு இடத்திற்கு ஒதுக்கப்பட்டு அங்கே கடைக்கால் எல்லாம் எடுக்கப்பட்டு அந்த இடத்திலே கட்டாமல் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு இருக்கிறது என்று சொன்னால் இது சம்பந்தமாக என்னிடத்திலோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலோ, அல்லது வேறு உயர் அதிகாரிகளிடத்திலோ இதைத் தெரிவித்து இருக்கலாம். அப்படி தெரிவிக்கிறபட்சத்தில் நிச்சயமாக நாங்கள் நடவடிக்கை எடுப்போம். இது ஒரு பெரிய பிரச்சினை அல்ல.

பிற்பகல் 3-55

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நடந்து கொண்டிருக்கிற நிகழ்ச்சி அது. அடுத்து, கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றியத்திலே கடந்த ஓராண்டு காலத்திற்கு முன்னால் வீடுகட்டுவதற்கு திட்டமிடப்பட்டு, அந்த வீடுகள் பிரிக்கப்பட்டு, இன்னமும் கூட அந்த வீடுகள் கட்டப்படாமல் இருக்கின்றன. இன்னும் இரண்டு இடங்களில் வீடுகள் ஓராண்டுக்குப் பிறகுகூட பூர்த்தி செய்யப்படாத நிலைமையிலே அந்த வீடுகள் அப்படியே இருக்கின்றன. அதை விரைவாக முடிக்கவேண்டுமென்று சொல்வதுதான் என்னுடைய நோக்கமே தவிர, வேறு ஒன்றும் கிடையாது. ஆகவே, நான் இப்போது கூறுவது, இதுவரையில் கட்டாத பஞ்சாயத்துக்களுக்கு, யாருக்கு வேண்டுமானாலும் அந்த வீடு இருக்கட்டும்

TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 26] [திரு. வே. தம்புசாமி]

அந்தப் பகுதியிலே முன்னுரிமை கொடுத்து கட்டுவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஓராண்டாகக் கட்டப்படாமல் அப்படியே, பாதியிலே நிற்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நான் அவருக்கு ஒரு உண்மையைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த ஆண்டு, 1993-94–ஆம் ஆண்டு, தமிழக அரசு ஒதுக்கியிருந்த 30 ஆயிரம் வீடுகளும் கடந்த மார்ச் இறுதியிலே கட்டி முடிக்கப்பட்டு விட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, சாலை வசதிகள் என்று கூறுகிறபோது, பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள சாலைகள் என்று பிரிக்கப்படுகின்றன. பஞ்சாயத்துக்களிலே போதுமான நிதி இல்லாத காரணத்தால் அந்தப் பஞ்சாயத்து சாலைகள் பராமரிக்க முடியாமல் இருப்பதால், போக்குவரத்துக்கு, மழைக்காலங்களிலும் சரி, வெள்ளக் காலங்களிலும் சரி, பொதுமக்கள் ஒரு பாதுகாப்பான இடத்திற்கு வந்து சேருவதுகூட சிரமமாக இருக்கிறது. அப்படிப்பட்ட பஞ்சாயத்துச் சாலைகள் முழுமையும், ஒன்றியச் சாலைகளாக எடுத்துக்கொண்டு, ஒன்றியத்திலே பராமரிக்கிறபோது, அந்தச் சாலைகளையும் சேர்த்துப் பராமரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று சாலைகளுக்கு நிதி ஒதுக்குகின்றபோது, நாகை–காயிதே மில்லத் மாவட்டம் முழுமையும்-கடைமடைப்பகுதி என்பது தொடர்ந்து மழை பெய்யக்கூடிய பகுதி: ஆண்டு தோறும் வெள்ளம் வரக்கூடிய பகுதி. அந்தப் பகுதிகளிலே இருக்கக்கூடிய, இதுபோன்ற சாலைகளைச் சீர் செய்வதற்கு நிதியில்லாத காரணத்தால், பூர்த்தி செய்ய முடியவில்லை. ஆகவே, அந்த மாவட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து, அந்தச் சாலைகளைச் சீர் செய்வதற்கு அதிகமான நிதி ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் சாலைகளைச் சீர் செய்யவேண்டுமென்று சொல்கிறபோது, இங்கே எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமுத்து அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். நாகைக்கு, அந்த சாலைகளைப் போடுவதற்கான பொருள்களை எடுத்து வருகின்ற வாடகைச் செலவும், மற்ற மாவட்டங்களில் இருக்கின்ற

[திரு. வே. தம்புசாமி] [1994 ஏப்ரல் 26

செலவும் ஒரே நிலையாக இருக்கிற காரணத்தால் வந்து சேருவதிலே அதிகமான செலவாகி, சாலைகள் போட முடியாத ஒரு நிலைமை இருக்கிறது. ஆகவே, மாவட்ட நிலைமைகளுக்குத் தகுந்தவாறு அதனுடைய போக்குவரத்துச் செலவுகள், அதனுடைய பொருள்கள் முழுமையும் வந்து சேருவதற்கு அதிகமான நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி, சாலைகள் போடுகிறபோது, எது முக்கியமான சாலை, எதை அவசரமாகச் செய்ய வேண்டும் என்பதை தெரிந்துகொள்வதற்காக சட்டமன்ற உறுப்பினர்களையும் கலந்து கொண்டு அந்தச் சாலைகளைப் போடுவது என்பது எதிர்காலத்திற்கு, பின்தங்கிய பகுதிகளில் சாலைகள் அமைப்பதற்கு உதவியாக இருக்கும்.

அதேபோன்று, எங்களது மாவட்டம் அதிகமான வாய்க்கால்களைக் கொண்ட பகுதியாக இருக்கிறது. அந்த வாய்க்கால்கள் என்று கூறுகின்றபோது, ஜனங்கள் முழுமையும் இன்னும்கூட வயல்வெளிகளில் குடியிருக்கிறார்கள். வயல்புறங்களிலே இருக்கிற களங்களில்தான் உற்பத்திப் பொருளான நெல்லை கண்டுமுதல் செய்து கொண்டு வந்து சேர்க்க வேண்டி இருக்கிறது. ஆகவே, அந்த வாய்க்கால்களுக்கு, அந்தக் களங்களை அடையக்கூடிய வாய்க்கால்களுக்கு, குடியிருப்புகளை இணைக்கக்கூடிய வாய்க்கால்களுக்கு இதுவரையிலும் பாலம் கட்டப்படவில்லை. அந்தப் பாலம் கட்டுவதற்கு அதிகச் செலவாகும் என்று சொன்னாலும்கூட, சிமெண்ட் குழாய்கள் வாங்கிப் போடுவதற்கு, ஊராட்சி ஒன்றியங்களுக்கு அனுமதி வழங்க வேண்டும். நாம் அதுபோன்ற இடங்களுக்கு குழாய்களைப் போட்டு போக்குவரத்தை ஏற்படுத்த வேண்டும். விளைந்த நெல்லைக் கொண்டுவரவேண்டும். குடியிருப்புகளிலுள்ள ஜனங்கள் செல்வதற்கு ஒரு பெருவழிப்பாதை ஏற்படுத்த வேண்டுமென்று கூறுகிறபொழுது, சிமெண்ட் குழாய்களை வாங்குவதற்கு ஊராட்சி ஒன்றியத்திலே அனுமதி கிடையாது. அதனால் அவைகளை வாங்கிப் போட முடியவில்லை என்று ஆணையர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். ஆகவே, அந்தமாதிரி வாய்க்கால்களிலே குழாய்கள் போடுவதற்கு அனுமதி அளிக்க வேண்டும். சிமெண்ட் குழாய்களை வாங்கிப் போடுவதற்கு அனுமதித்து ஆக வேண்டும். பாலம் கட்டுவதைவிட குறைந்த செலவிலே அதைப் பூர்த்தி செய்ய முடியும். அந்த வகையிலே எதிர்காலத்திலே ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 4-00

திருமணக் கடன் வழங்குகின்றபோது இப்படி ஒரு குழுவின் மூலம் வழங்குவது எதிர்காலத்திற்கு நல்லது என்பதை நான் தெரிவித்துக்

கொள்ள விரும்புகிறேன். உண்மையிலேயே அப்படிக் கடன் வழங்கப்படும்பொழுது, யாருக்கு வழங்கப்படுகிறது, எப்படி வழங்கப்படுகிறது, உண்மையிலேயே வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக் கூடியவர்களுக்கு வழங்கப்படுகிறதா என்பது ஒரு கேள்விக் குறியாகவே இருக்கிறது. ஆகவே, அது எதிர்காலத்திலே தவிர்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதுவரையிலும்கூட, கிராமப்புறத்திலே இன்னும் குடியிருப்புகளுக்குக்கூட முழுமையாக மின்சாரம் சேர முடியாத சில பகுதிகள் இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொன்னால், திருக்கரவாசல் பஞ்சாயத்திலே மின்சாரத்திற்குப் பணம் கட்டப்பட்டு ஏழெட்டு ஆண்டுகள் ஆகியும்கூட பூர்த்தி செய்ய முடியவில்லை. அதுபோல தண்டலம் பஞ்சாயத்திலே பணம் கட்டப்பட்டு ஏழெட்டு ஆண்டுகள் இருந்தும்கூட மின்சாரம் கொடுக்க முடியவில்லை. ஆகவே, கிராமப்புறத்திலே தட்டுப்பாடு இல்லாமல் மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆதி திராவிடர் குடியிருக்கின்ற பகுதிகளுக்கு இந்தப் புயலுக்குப் பிறகு இதுவரையில் கூட கிராமத்திற்கு மின்சாரம் செல்லாத நிலைமை இருக்கிறது. விரைவாக அந்த மின்சாரத்தை வழங்குவதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

மின்சாரம் என்று கூறுகிறபொழுது அதைப் பராமரிக்கிற நிலைமை பஞ்சாயத்திலே இருக்கிறது. அந்தப் பஞ்சாயத்திலே, கேட்டால் பணம் இல்லை என்று கூறப்படுகிறது. மின்சார வாரியத்திடம் கேட்டால் பல்பு போடவில்லை என்று கூறப்படுகிறது. அப்படியான நிலைமைகளை மாற்றி, அந்த நிர்வாகத்தை யாரிடம் ஒப்படைப்பது என்று முடிவு செய்ய வேண்டும். அதற்காக மின்சாரச் சாமான்கள் பொருத்தக்கூடிய ஊழியர்களைச் சரியாக நியமிப்பதுதான் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுமாதிரி ஒரு புறத்திலே மின்சாரத் துறையைச் சாக்கு சொல்வதும், ஒரு புறத்திலே சாமான் வாங்கிக் கொடுக்கவில்லை என்று அவர்கள் கூறுவதும், இப்படிப்பட்ட நிலைமையை மாற்றி, ஊராட்சி ஒன்றியத்திற்குக் குறைந்தபட்சம் *(மணியடிக்கப்பட்டது).*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடித்து விடலாம். இருபது நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. வே. தம்புசாமி: ஊராட்சி ஒன்றியத்திற்கு குறைந்தபட்சமாக ஊழியர் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று குடிநீர். குடிநீர் என்று கூறுகிறபொழுது, குடிநீர் குழாய்கள் பொருத்துகிறபொழுது பெரும்பகுதியாக ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு அந்தக் குழாய் பொருத்துவது கிடையாது. உதாரணத்திற்குச் சொன்னால், திருவாரூர் ஒன்றியம் புதூர் என்ற கிராமத்திலே ஆதிதிராவிடர் பகுதிக்குக் குழாய்கள் செல்லவில்லை. இதற்குக் குடிநீர் வாரியத்தில் பேசுகிறபொழுது, இதுவரையில்தான் எங்களுக்கு மதிப்பீடு தயாரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது; இதற்கு மேல் முடியவில்லை என்று கூறப்படுகிறது. அந்த நிலைமைகளைத் தவிர்த்து, குடிநீர்--அதற்கான குழாய்கள் பொருத்துவதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கிறபொழுது அந்தப் பஞ்சாயத்து எல்லை முழுமையும் எங்கெங்கே குடியிருக்கிறார்களோ அதுவரையிலும் முழுமையாக அங்கே கொண்டு செல்வதற்கான திட்டங்களை எதிர் காலத்தில் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கு முன்னால் முழுமையும் எல்லாப் பஞ்சாயத்திலும் ரேடியோக்கள் இருந்தன. அந்த ரேடியோக்கள் மூலம் மாநிலச் செய்திகள், அல்லது அகில இந்தியச் செய்திகள், இதுபோன்ற செய்திகளைக் கேட்கக் கூடிய நிலைமைகள் இருந்தன. ஆனால் இப்பொழுது எந்தப் பஞ்சாயத்திலும் ரேடியோ என்பது கிடையாது. ரேடியோ வைப்பதற்கான துரித நடவடிக்கையை அமைச்சரவர்கள் எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, எல்லா ஊராட்சிகளுக்கும் டி.வி. வழங்குவதாக ஒரு திட்டம் உருவாக்கப்பட்டது. அந்தத் திட்டம் அதோடு நின்று விட்டது. ஆகவே, அந்தப் பஞ்சாயத்துக்களுக்கு அதுபோல டி.வி. வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, தொகுப்பு வீடுகள்.......

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற பொழுது. . . .

திரு. கி. பாலசுப்பிரமணியன்: பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரவர்கள், திரு. பாலசுப்பிரமணியன் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்கிறார். அவர் சொல்லட்டும்.

1994 ஏப்ரல் 26]

திரு. கி. பாலசுப்பிரமணியன்: பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு நமது உறுப்பினர் தம்புசாமி அவர்கள், பஞ்சாயத்துக்களிலே ரேடியோ இல்லை, டி.வி. இல்லை என்று சொல்கிறார். அது முற்றிலும் தவறான செய்தி. ஒரு குறிப்பிட்ட இடங்களிலே அவைகள் கொடுக்கப் பட்டிருந்தாலும் முந்தைய ஆட்சிக் காலத்திலே அந்த டி.வி.க்களையும் அந்த ரேடியோக்களையும் அவர்கள் அவர்களுடைய வீட்டுக்கே எடுத்துச் சென்று விட்டார்கள் என்பதை டி.டி.சி. மீட்டிங்கிலே நானும் சொல்லி, அதைத் திருப்பிப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டி ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. ஆனால் தம்புசாமி சொல்வது போல் இல்லை என்பதைச் சொல்லிகொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்பொழுது இருக்கிற கணக்குப்படி, எல்லாப் பஞ்சாயத்துக்களிலும், ஊராட்சிகளிலும் வானொலிப் பெட்டி இருந்துகொண்டிருக்கிறது.

இன்றைக்கு நவீன யுகத்திலே, எல்லா ஊராட்சிகளிலும் எல்லாக் குக்கிராமத்திலேயும் தொலைக்காட்சிப் பெட்டியைக் கேட்கிறார்கள். அந்த அடிப்படையிலே, இதுவரையிலே நாம் சுமார் 12,612 ஊராட்சிகள் தமிழகத்திலே இருக்கிற ஊராட்சிகளில் 8,331 தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கியிருக்கின்றோம். மீதம் இருக்கின்ற 4,281 ஊராட்சிகளுக்கும் இந்த ஆண்டே தொலைக்காட்சிப் பெட்டி வழங்க வேண்டுமென்று இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 4-05

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் இடிந்து, குடியிருக்க முடியாத நிலைமை இருக்கிறது. அதுபோன்ற நிலைமை, தமிழ்நாடு முழுமையும் இருக்கிறது. அவையெல்லாம் ஓட்டு வீடுகளாகக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள். ஆகவே, அந்த ஓட்டு வீடுகளைத் திரும்பப் பராமரிப்பதற்கோ, அல்லது புதிதாகக் கட்டிக் கொடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, இந்தக் குடியிருப்புகள் என்று சொல்கிறபோது, திருவாரூர் ஊராட்சி ஒன்றியத்தில். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 25 நிமிடங்கள் ஆகிவிட்டன; நீங்கள் தினசரி பேசுகிறீர்கள். நேற்றெல்லாம் பேசி முடிக்கும்போது இரவு 10 மணி ஆகிவிட்டது.

திரு. வே. தம்புசாமி: ஒரே நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

திருவாரூர் ஊராட்சி ஒன்றியத்தில், மாவூரில் கேணி கட்டப்பட்டு, மூன்றாண்டுக் காலம் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. அந்தக் கேணியைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதனைப் பயன்படுத்துவதற்கு எங்கெங்கு குழாய்களைப் பொருத்த வேண்டுமோ, அங்கங்கு அவற்றைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், திருவாரூர் நகரத்தில் ஒரு குடிநீர்த் திட்டத்தை ஏற்படுத்துவதற்கு, 60.5 இலட்சம் ரூபாய் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அதன் ஆய்வுப் பணிக்கு பணமும் செலுத்தப்பட்டு விட்டது. ஆனால், இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆகவே, திருவாரூர் நகரத்திலே, குடிநீர்த் தட்டுப்பாடு தொடர்ந்து இருக்கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து டாக்டர் ஜி.ஆர். மாலா. (குறுக்கீடு) உறுப்பினர்கள் நிறைய பேர் பேச வேண்டியிருக்கிறது. இன்னொரு மானியமும் இருக்கிறது. ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடியுங்கள்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் நகராட்சிக்கு ஆணையர் போடவில்லை. இதனால், அங்கு பணிகள் முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பணிகள் முழுமையும் பாதிக்கப் பட்டிருப்பதால், விரைவாக அங்கே ஆணையரைப் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருவாரூர் நகரப் பேருந்து நிலையத்தில், நவீன கழிப்பிட வசதி இல்லாமல், சுகாதாரக் கேடு ஏற்படுகிறது. நகரத்தினுடைய சாக்கடை முழுவதும் ஆற்றிலே விழுகிறது. ஏறத்தாழ, 2,000 கிராமங்களுக்கு அந்த ஆற்றினுடைய நீர் செல்கிறது. அதனால், சுகாதாரக் கேடு ஏற்பட்டு, நோய் பரவுவதற்கு காரணமாக இருக்கிறது. எனவே, அந்த ஆற்றிலே, அந்தச் சாக்கடை விழாமல் தடுப்பதற்கான ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, எனது உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஜி. ஆர். மாலா.

டாக்டர் ஜி.ஆர். மாலா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'Care for your people. Then they will care for you and the company' என்ற David Freemantle அவர்களின் வரிகளுக்கிணங்க, தமிழக மக்களின் நலனுக்காக அன்றாடம் பாடுபட்டுவரும் நமது இதயதெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை,

"நாட்டின் அரசிலே உனைக் காண்கிறோம்;
தாயினை மறக்கும் பிள்ளை தாயகமெங்கும் இல்லை;
தூயநின் உள்ளம் எங்கள் தோளினைக் காக்கும்;
மக்கள் உள்ள வரைக்கும் நின் பேர் வகையுற வாழ்த்தும்"

என்று வாழ்த்தும் 5½ கோடி தமிழ் மக்களின் உன்னதத் தலைவியாக விளங்கும் இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைச் சமர்பித்து, இம்மானியக் கோரிக்கை மீது பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, எனது உரையைத் தொடங்குகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

வீரத்திற்கும், விவேகத்திற்கும் தெய்வீகச் சிறப்பிற்கும், கலைத் திறனுக்கும் பெரும் சிறப்பு சேர்த்த வரலாற்றுச் சிறப்புமிக்க சோழ நாட்டின் தலைநகரமாக விளங்கிய உறையூரைக் கொண்ட சிறப்பு மிகுந்த திருச்சி நகரம், இன்று நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பொற்பாதம்பட்டு, மாநகரமாக மாற இருப்பதும், வரலாறு என்பது காலத்தினாலும் அழியாத ஒன்று; அந்த வரலாற்றுக்கே அழியா வரலாறாக, பெண்களைப் பாதுகாக்க பெண்களாலும் இயலும் என்பதை உலகம் அறியும்வண்ணம், திருச்சி இரண்டாவது தொகுதியில், அனைத்து மகளிர் காவல் நிலையம் அமைத்து அதனைத் தனது திருக்கரத்தால் திறந்ததற்கும், அரசியலில் தந்தை பெரியார் காலத்தில் இருந்தே பல திருப்பங்களை ஏற்படுத்தி சிறப்புச் சேர்த்த திருச்சி மாநகரத்தில், எனது தொகுதியில், தில்லை நகரில், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் மூலம் பெண்களுக்கென்று அறிவியல் மற்றும் கலைக் கல்லூரியை, தமிழ்நாட்டிலே முதன்முதலாக அமைக்கும் திட்டத்திற்கும் எனது தொகுதிவாழ் மக்களின் சார்பாக எங்களது மனமார்ந்த நன்றியை, இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுக்குக் காணிக்கையாக்குகிறோம்.

தமிழ்நாட்டில், 34.15 சதவிகிதம் மக்கள் தொகையைக் கொண்ட நகர்ப்பகுதிகளை மேம்படுத்த, நகர்ப்பகுதி வாழ் ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, உலகவங்கி உதவியுடன் ஏற்படுத்தும் தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கிய ரூ.150 கோடி நிதியில், திருச்சி நகரம், மாநகராட்சியாகும் திட்டத்திற்கு அதிக நிதி ஒதுக்கி, அனைத்து வசதிகளிலும் அது முதன்மையான இடம் பெறுவதற்கு உதவ வேண்டும் என்று மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

சமீபத்தில் ஏற்பட்ட புயல் சீற்றத்தினால், திருச்சி நகர்ப்பகுதியில் முக்கிய பிரதான சாலைகள் மற்றும் குறுக்குச் சாலைகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. நிவாரண நடவடிக்கையில் போர்க்கால வேகத்தில் முக்கியச் சாலைகள் சிலவற்றைச் சீர்செய்து, புதிதாக அமைத்துக் கொடுத்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, மேலும் சில சாலைகள் திருச்சி ஜங்ஷன் பகுதி, புத்தூர், உறையூர், மெயின்கார்டு கேட், சிந்தாமணி பகுதிகளில் உள்ள சாலைகள் மற்றும் பல குறுக்குச் சாலைகளைப் புதிதாகச் சீரமைத்துத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சி நகர்ப்பகுதியில் ஊடுருவிச் செல்லும் பாசனக் கால்வாய்கள் தற்பொழுது கழிவுநீர் வடிகால்களாக இருந்துவரும் இவற்றில், பல வருடங்களாக தூர் எடுக்காமல் சாக்கடை நீர் வழிந்து சுற்றுப்புறத்தை மாசுபடுத்தி, சுகாதார சீர்கேடுகளை ஏற்படுத்தி வருகிறது. என் தொகுதியில் மட்டும் 3 கழிவுநீர் வடிகால்கள் உள்ளன. இவற்றை Mass Cleaning Programme -ஆக எடுத்துக் கொண்டு, இக்கோடைக் காலத்தில் தூர் எடுத்து, சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கையினால், வடிகால்களின் ஆக்கிரமிப்புகளை அகற்றி, சீரான வடிகால் அமைப்பை ஏற்படுத்த மாண்புமிகு அமைச்சர் உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 4-10

தமிழ்நாட்டின் மத்தியப் பகுதியில் உள்ள தொழில், கல்வி, சுற்றுலாத் துறைகளில் சிறந்து விளங்கும் திருச்சி மாவட்டம் நாள்தோறும் சந்தித்துக்கொண்டிருக்கும் போக்குவரத்து வாகனங்கள் கணக்கில்லாதவை. எனவே, திருச்சி மாநகரத்தின் மிக முக்கியமான மத்தியப் பேருந்து நிலையம் மற்றும் நகர்புறத்தின் வெளியில் உள்ள சிந்தாமணி பேருந்து நிலையம் இரண்டையும் பொது மக்களுக்கும், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கும் வசதியாக, தங்களது பேருந்து பயணத்தை மேற்கொள்ள மிகச் சிறந்த முறையில் சீரமைத்துத் தருவதோடு, சிந்தாமணி பேருந்து நிலையத்துக்காக மாண்புமிகு புரட்சித்

தலைவர் அவர்கள் காலத்தில் தீட்டப்பட்ட திட்டத்திற்காக கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் மிக நவீன முறையில் புதியதாக அமைத்து அப்பேருந்து நிலையத்திற்கு நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பெயரைச் சூட்ட வேண்டுமென்று பணிவுடன் இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் இனாம்தார், வக்ஃப்போர்டு, வாய்க்கால் புறம்போக்கு என்று அரசாங்கப் பதிவேடுகளில் இருந்தாலும், இப்பகுதிகளில் 50, 100 ஆண்டுகளாக எந்தவித அடிப்படை வசதிகளும் கிடைக்காமல் மிகவும் துர்பாக்கிய நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் வாழ்வில் ஒளி ஏற்றும் வண்ணம் நகராட்சியே அப்பகுதிகளை கையகப்படுத்தி, மின்விளக்கு, சாலை வசதி, கழிவு நீர் வடிகால்கள் அமைத்துக் கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உய்யக்கொண்டான் வாய்க்கால் கரையை உயர்த்தி அண்டகுண்டான் பகுதிக்குச் செல்லும் கரையோரச் சாலையைச் சீர்படுத்தித் தருவதோடு வாய்க்காலையும் ஆழப்படுத்தித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

உய்யக்கொண்டான் வாய்க்கால் குறுக்கே பீமநகர் பகுதியையும் அண்டகுண்டான் பகுதியையும் இணைக்கும் மரப்பாலத்தை அகற்றி புதியதாக உறுதியான பாலம் அமைத்துத் தந்து உதவிட கேட்டுக் கொள்கிறேன்.

கோ. அபிஷேகபுரம் பேரூராட்சி வாழ்மக்களின் நீண்ட நாள் குடிநீர் பிரச்சினைக்கு நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தனது திருக்கரத்தால் ரூ.145 இலட்சம் அளித்து கோ. அபிஷேகபுரம் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அறிவித்தார்கள். தற்போது அதற்கு ரிவைஸ்டு எஸ்டிமேட்டும் போடப்பட்டுள்ளது, சுமார் 242 இலட்சமாக. எனவே, தமிழக மக்களுக்கு வாரி வழங்கும் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நடப்பாண்டில் இத்திட்டத்திற்கு அதிக நிதி ஒதுக்கி துரித நடவடிக்கையின் மூலம் 1995-ஆம் ஆண்டு தமிழ் புத்தாண்டு நற்செய்தியாக காவிரி நீரை பகுதி வாழ் மக்களுக்கு வழங்கி உதவ வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

சமீபத்திய வெள்ளத்தினால் அதிக பாதிப்புக்கு உள்ளான கோ. அபிஷேகபுரம் பகுதியைச் சார்ந்த குமரன் நகர், சீனிவாச நகர், அம்மையப்ப நகர், இராமலிங்க நகர் போன்ற குடியிருப்புப் பகுதிகளைச் சூழ்ந்த வெள்ள நீர் வடிகால்களின் வழியாக விரைந்து வெளியேற

முடியாமல் வடிகால்களின் அகலத்தைக் குறைத்தும் குறுக்கேயும் அமைந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி வடிகால்களை உலக வங்கி நிதியுதவியுடன் சீரமைத்து உதவி எதிர்காலத்தில் வெள்ளத்தினால் பாதிப்பு இல்லை என்ற உன்னத நிலையை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

உறையூர் பாண்டமங்கலம் பகுதியைச் சார்ந்த பாத்திமா நகர், பெங்கிநகர், தியாகராஜ நகர் போன்ற..... (மணியடிக்கப்பட்டது) குடியிருப்பு பகுதிகள் மழைக்காலங்கள் தோறும் குடமுருட்டி ஆற்றில் வெள்ளம் பெருக்கு எடுத்து, வெள்ள நீர் சூழ்ந்து மக்களின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு இல்லா வண்ணம் இருந்து வருகிறது. எனவே, இக்குடமுருட்டி ஆற்றை ஆழப்படுத்தி, கரையை உயர்த்தி குடியிருப்புப் பகுதிகளில் தடுப்புச் சுவர் எழுப்பி, இப்பகுதி வாழ் மக்களின் வாழ்வின் பாதுகாப்புக்கு உதவும்படி மிகப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சி மேலம்புதூர் பகுதியில் உள்ள குட்செட் மேம்பாலம் புதியதாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக முடிக்கப்படாமல் இருந்த மேம்பாலம் நமது தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு உலகம் போற்றும் நம் இதயதெய்வத்தை, தமிழகத்தின் காவல் தெய்வத்தை ஈன்று நமக்கு அளித்த வணக்கத்துக்குரிய அன்னை சந்தியா அவர்களின் பெயரைச் சூட்டி திருச்சி நகரத்திற்கு மென்மேலும் சிறப்புச் சேர்த்து உதவ வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக எதிர்காலத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் செயல், அறிவு, ஆற்றல் திறனால் தமிழகத்தை நோக்கி இந்தியாவே வந்துகொண்டிருக்கும் இவ்வேளையில் பாலர் மீள் தினம், பாரும் மீள் தினம், சீலர் யாவரும் சேர்வோம் அத்தினம் என்று விடுதலை முழக்கமிட்ட சிங்கத் தமிழன் வ.உ.சி-யைப் போல, பெண் விடுதலைக்காகவும், பெண்களின் வளர்ச்சிக்காகவும், சம உரிமைக்காகவும் போராடும் வீரமுழக்கமிடும் நம் சிங்க நிகர் தலைவியின் பின் தமிழக மக்கள் மட்டும் அல்லாது இந்திய மண்ணின் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டுள்ளார்கள். வெற்றியும் கண்டுள்ளார்கள் என்று கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி.கே. சின்னசாமி): திரு. த.க. இராதாகிருஷ்ணன்.

1994 ஏப்ரல் 26]

திரு. த.க. இராதாகிருஷ்ணன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல், நகராட்சி நிர்வாகம் ஆகிய மானியக் கோரிக்கைளில் எனது கருத்துக்களைக் கூற வாய்ப்பு அளித்தமைக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"தூங்காமை கல்வி துணிவுடமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு".

என்ற வள்ளுவரின் வாக்குக்கு ஒப்ப, எந்த ஒரு காரியத்திலும் காலம் தாழ்த்தாத தன்மை, சிறந்த அறிவுக்கூர்மை, எந்த ஒரு சக்தியைக் கண்டும் பயப்படாமல் துணிந்து எதிர்நோக்கும் வல்லமை ஆகிய அத்தனை இயல்புகளும் உடைய, முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக, பிறருக்கு வழிக்காட்டக்கூடிய ஒரு மாபெரும் தலைவராக புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தில் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் அனைத்துக் கிராமங்களிலும் அடிப்படை வசதிகளை அனைத்தையுமே திறம்பட நடத்திக் கொண்டுருப்பதை கடந்த இரண்டு ஆண்டுகாலமாக எந்த ஒரு கிராமத்தை எடுத்துக் கொண்டாலும், ஒரு சிறப்பான, முன்னேற்றகரமான ஒரு பணியை நாம் கண்கூடாகக் காண முடிகிறது. அந்த வகையிலே அந்தப் பணி இன்னும் சிறப்புடன் நடத்தப்பட வேண்டுமென்று சென்ற நிதியாண்டிலே 126 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ததை, இந்த நிதியாண்டில் 160 கோடியாக உயர்த்தியுள்ள புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 4-15

ஆழ்துளை பம்ப், விசைப்பம்ப் ஆகிய பம்புகளுக்கு பராமரிப்புக்காக இந்த ஆண்டு 5.6 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தது உண்மையிலேயே வரவேற்கத் தகுந்ததாகும். பல ஊராட்சிகள் அடங்கிய கூட்டுக் குடிநீர் திட்டப் பராமரிப்பைத் திறம்படச் செய்வதற்காக இந்தப் பராமரிப்புப் பணிகளைக் குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கிறேன். குடிநீர் வடிகால் வாரியத்தில்தான் அந்த டெக்னிக்கல் நாலெட்ஜ் என்று சொல்லப்படுகின்ற அதாவது மென் அன்ட் மெட்டீரியல்ஸ் என்பார்களே அந்த வகையில் அத்தனை தகுதிகளும் அந்த வாரியத்திடம் இருக்கிறது. ஆகவே பல ஊராட்சிகளை ஒன்றிணைக்கக் கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கவேண்டும் என்ற எனது வேண்டுகோளை விடுக்கிறேன்.

அடுத்ததாக பல ஊராட்சிகளில் இருக்கின்ற பிரச்சினை. தெருவிளக்குகள் சரியாக எரியாத பிரச்சினைதான். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஒரு கோ-ஆர்டினேட்டிங் கமிட்டி உருவாக்கவேண்டும். மின்சார வாரியத்திற்குச் சென்றால் அந்த வயர்மேன்களை அனுப்புவதில் காலதாமதம் செய்கிறார்கள். எனவே மின்வாரிய அமைச்சர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் இதுபற்றி கலந்தாலோசித்து இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு காணவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு ஒரு ஆலோசனையாக நான் கூறிக்கொள்வது என்னவென்றால் மின் வாரியத்திலிருந்து ஒரு பொறியாளர் இரண்டு, நான்கு வயர்மென், லைன்மென் என்ற வகையில் ஒரு கூட்டமைப்பாக உள்ளாட்சித் துறைக்கு டெப்யூட் செய்யவேண்டும் என்பது ஒரு யோசனை. அல்லது மின்சார வாரியத்திடமே இந்தப் பராமரிப்பை ஒப்படைக்க வேண்டும். ஆக இந்த இரண்டு கருத்துக்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறேன்.

இன்னும் ஒரு முக்கியமான பிரச்சினை, பொதுவான பிரச்சினை என்னவென்றால், தமிழகத்தில் அனைத்து கிராமங்களில் இருக்கின்ற பிரச்சினை சாக்கடைப் பிரச்சினை. சாக்கடை வசதி இல்லாமல் சுகாதாரமற்ற நிலைமை பல கிராமங்களில் இருக்கின்றன. சாக்கடையைக் கட்ட வேண்டும் என்றால் அந்தந்த உள்ளாட்சிகளிலே நிதிநிலைமை இருக்க வேண்டும். நிதி நிலைமை போதிய அளவில் இல்லாத காரணத்தால் பல உள்ளாட்சிகளில் சாக்கடைகள் கட்ட முடியாத நிலைமை இருக்கிறது. அந்த நிலைமை போக்கப்படவேண்டும் என்றால் சாக்கடைகள் கட்டும் பணிகள் ஜே.வி.பி. திட்டப் பணிகளில் சேர்க்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

இதுவரையில் கிராமங்களில் உள்ள பாசன ஏரிகள் கேட்பாரற்றுக் கிடந்தன. அந்தப் பாசன ஏரிகளுக்கு எல்லாம் ஒரு புனர்வாழ்வு வருகிற வகையில் அவற்றைச் சீரமைக்கின்ற பணியில் இந்த நிதியாண்டில் நல்ல அமைப்பை ஏற்படுத்தித் தந்த மாண்புமிகு அமைச்சர் பெருமகனாருக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

நீரின்றி அமையாது உலகு என்பார்களே அதற்கேற்ப மனித உயிருக்கு மிகவும் அத்தியாவசிமாக இருக்கின்ற குடிநீரின்

1994 ஏப்ரல் 26] [திரு. த.க. இராதாகிருஷ்ணன்]

முக்கியத்துவத்தை உணர்ந்து நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் குடிநீர்த் திட்டத்திற்காக சென்ற நிதியாண்டைக் காட்டிலும் 112 கோடி அதிகமாக ஒதுக்கீடு செய்து தமிழகத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரம் இன்றி ஒரு குடியிருப்புக் கூட இல்லை என்ற வகையில்....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி.கே. சின்னசாமி): இன்னும் ஒரே நிமிடத்தில் பேசி முடித்துவிட வேண்டும்.

திரு. த.க. இராதாகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, அந்த வகையில் வழி செய்த புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன். தமிழகத்தில் ஒட்டுமொத்தமாக குடிநீர்ப்பிரச்சினைக்கு தீர்வுகாணவேண்டும் என்றால் நதிகளை தேசியமயமாக்குவது ஒன்றுதான் சரியான வழி என்று நான் கருதுகிறேன். அது ஒன்றுதான் இதற்குத் தீர்வு என்று நான் கருதுகிறேன். எனது மதுரை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் குடிநீர்ப்பிரச்சினை கண்டிப்பாக இருக்கிறது. குறிப்பாக எனது திருமங்கலம் தொகுதியில் கள்ளிக்குடியில் குடிநீர்ப்பிரச்சினை அதிகமாக இருக்கிறது. மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளான பம்பா, அச்சுக்குழி போன்ற ஆறுகளைப் பொறுத்தவரையில் பல நூற்றுக்கணக்கான டி.எம்.சி. நீர் கடலில் வீணாகப் போகிறது. அந்த உபரி நீரைத் தமிழகம் நோக்கித் திருப்பி விட்டால் குடிநீர்ப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும். ஆக இந்தக் கூட்டத் தொடரிலேயே மைய அரசை வற்புறுத்துக்கிற வகையில் நாம் அத்தனை ஆறுகளையும் தேசியமயமாக்கவேண்டும் என்று ஒரு தனித் தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டுமென்று எனது வேண்டுகோளை விடுக்கிறேன்.

எனது திருமங்கலம் தொகுதியிலிருக்கின்ற ஒருசில குறைகளைக் கோரிக்கையாக வைக்க நான் விரும்புகிறேன். கல்லிகோயில் ஒன்றியத்தில் நான் ஏற்கனவே கூறியதைப் போல குடிநீர்ப் பிரச்சினை இருக்கின்ற காரணத்தால் ஒரு கூட்டுக் குடிநீர் திட்டத்தினை உருவாக்க வேண்டுமென்று அமைச்சர் பெருமகனார் அவர்களை நான் வேண்டிக்கேட்டுக் கொள்கிறேன். திருமங்கலம் பகுதிக்கு பை-பாஸ் திட்டம் (குறுக்கீடு)

பிற்பகல் 4–20

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி.கே. சின்னசாமி): காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசாமல் இருந்தால் நல்லது. அவர் பேசிக்கொண்டிருக்கிறார். *(சிரிப்பு)*

திரு. த.க. இராதாகிருஷ்ணன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, திருமங்கலம் நகருக்கு பை-பாஸ் வேண்டுமென்ற கோரிக்கை ஒரு நீண்ட நாள் கோரிக்கையாகும். இன்றைய நிலையில் அந்தத் திட்டம் மைய அரசின் ஒப்புதலுக்காக டில்லிக்கு அனுப்பப்பட்டுள்ளது. அமைச்சர் பெருமகனார் அவர்கள் அதற்குரிய நடவடிக்கை எடுத்து திருமங்கலம் நகர மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பை-பாஸ் திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். வைகையிலிருந்து வருகின்ற நிலையூர் கால்வாய் வாய்க்கால் திட்டத்தை கம்பிக்குடி வரை நீட்டித்து புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் திட்டம் தீட்டப்பட்டு அதற்குப்பின் வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினர் அந்தத் திட்டத்தைக் கிடப்பில் போட்டுவிட்டார்கள். அந்தத் திட்டம் மீண்டும் புரட்சித் தலைவி அவர்களது காலத்தில்தான் கண்டிப்பாக வரும் என்று புரட்சித் தலைவியை தெய்வமாக வணங்கும் அந்தப் பகுதி மக்கள் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆக இந்தத் திட்டத்திற்கு அங்கீகாரம் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று எனது ஒரு சில கருத்துக்களைக் கூற வாய்ப்பளித்த பேரவை மாற்றுத் தலைவருக்கு என்னுடைய நன்றிதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி.கே. சின்னசாமி): திரு. குப்பன். 5 நிமிடங்கள் பேசவும்.

திரு. க. குப்பன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்களுடைய எழுச்சி மிக்க தலைவியாக இருக்கின்ற மாண்புமிகு தமிழக நிரந்தர முதலமைச்சர் எனது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்திருக்கிற உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய திருவொற்றியூர் தொகுதியைப் பொறுத்தவரையில், அந்தத் தொகுதியிலே சென்னையிலே ஒன்று மற்றும் இரண்டு வட்டங்கள் அடங்கியிருக்கின்றன. அந்த வட்டங்களைப் பொறுத்தவரையில் குறிப்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் என்னுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் 2½ கோடி ரூபாய் தொகையில் சாலைகள் மற்றும் மின் விளக்குகள்

அமைக்கப்பட்டது தொடர்பாக அந்தப் பகுதி மக்கள் பாராட்டுகின்ற வகையிலே அமையப்பெற்றிருக்கின்றன என்பதை நான் இந்த நன்னாளிலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல மாதவரம் நகராட்சி நகரியப் பகுதியில் 3 கோடி ரூபாய் செலவில் சாலைகள், குடிநீர் மற்றும் மின் விளக்குகள் அமைத்துக் கொடுத்திருக்கின்ற எனது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே ஒரு சில கோரிக்கைகளை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். திருவொற்றியூர் நகராட்சி பகுதியில் குறிப்பாக 1970 ஆம் ஆண்டு போடப்பட்ட கழிவு நீர் அகற்று ட்ரெயினேஜ் அன்றைக்கு இருந்த மக்கள் தொகைக்கு ஏற்ப போடப்பட்டது. ஆனால் இப்போது குறிப்பாக 3 லட்சம் மக்களுக்கு மேலாக வாழ்கின்ற இந்த திருவொற்றியூர் நகராட்சி பகுதியில் 3 கழிவுநீர் அகற்று நிலையங்கள் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்றும், அதை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக அல்லது சென்னை பெருநகர குடிநீர் வாரியத்தின் மூலமாக அமைத்துக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே ஒன்று எரனாவூர் பகுதியிலும், இரண்டாவது திருவொற்றியூர் மேற்கு லேலண்ட் குடியிருப்புப் பகுதியிலும், 3-வது சாத்துமாநகர் பகுதியிலும் அமையவேண்டும். சென்னை பெருநகர குடிநீர் வடிகால் வாரியத்தின் பொறுப்பில் சென்னையைச் சுற்றியுள்ள பெருநகர்ப் பகுதிகளிலே இப்படிப்பட்ட கழிவுநீர் பணிகள், கழிவுநீர் அகற்றுகின்ற நிலையத்தை ஏற்படுத்திக் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். திருவொற்றியூரும் சென்னையைச் சுற்றி இருக்கின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தால் அதனையும் எடுத்துக் கொண்டு செய்ய வேண்டும் என்பதையும், அப்படி இல்லையென்றால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செய்து கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னை 2 ஆம் கோட்டம் மற்றும் கொடுங்கையூர் பகுதியில் இன்றைக்கு சென்னையிலே மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடுமையான குடி தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டபோது அதனைப் போக்குகின்ற வகையிலே போர்க்கால அடிப்படையில் அந்தப் பணிகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் மேற்கொண்டு தமிழகத்தில் இதுவரை எப்போதும் ஏற்படாத அளவுக்கு கடுமையான குடிநீர் பஞ்சம் ஏற்பட்டபோது அதனைப் புரட்சித் தலைவி அவர்கள் மிகவும் சாதுர்யமாகத் தீர்த்து வைத்தார்கள் என்பதை நான் இந்த நல்ல நாளிலே தெரிவித்து தொகுதி மக்களின் சார்பாக நான் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 4-25

இப்போது நல்ல குடி தண்ணீர் குழாய்கள் மூலமாக கொடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள். ஆனால் என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற 1-வது வட்டத்திலே பல்வேறு நகரங்கள் இருக்கின்றன. எருக்கஞ்சேரி, கென்னடி நகர், கண்ணதாசன் நகர், கொடுங்கையூர் காலனி, முத்தமிழ் நகர், எம்.ஜி.ஆர். நகர், வாசுகி நகர், விவேகானந்தா நகர் போன்ற 50-க்கு மேற்பட்ட நகரங்கள் இருக்கின்றன. ஆனால் அந்த நகரங்களிலே குடிநீர் இணைப்புகள் இதுவரை இல்லை. ஆக மாண்புமிகு தமிழக முதல்வர் எங்களுடைய டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் இந்தக் குடிநீர் இணைப்புகளை எல்லா நகர்களுக்கும் சென்னையிலே எல்லா இடத்திலேயும் இருப்பதுபோல என்னுடைய தொகுதியிலே ஏற்படுத்தித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல சென்னை மாநகராட்சியின் மூலமாக மின் விளக்குகள் சோடியம் வேப்பர் விளக்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்னும் அங்கே மின் இணைப்பு கொடுக்காமல் இருக்கின்ற அந்த மின்விளக்குகளுக்கு மின் இணைப்புகளைக் கொடுக்கவேண்டும் என்று நான் இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி.கே. சின்னசாமி): உரையை முடித்து விடுங்கள். நேரம் ஆகிவிட்டது. 5 நிமிடங்கள்தான் ஒவ்வொருவருக்கும். சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள்.

திரு. க. குப்பன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, அது மட்டுமல்லாமல் என்னுடைய தொகுதியிலே புழல் ஊராட்சி ஒன்றியப் பகுதியிலே ஒருசில பஞ்சாயத்துக்களில், குறிப்பாக சடையங்குப்பம் பஞ்சாயத்து, கடப்பாக்கம் பஞ்சாயத்து, அரியலூர் பஞ்சாயத்து, விரியம்பாக்கம் பஞ்சாயத்து என்ற 4 பஞ்சாயத்துக்களிலே, அங்கே அருகாமையிலே தொழிற்சாலைகள் இருக்கின்றபடியால் தொழிற்சாலைகளில் இருந்து வருகின்ற கழிவு நீர் தரையிலே இறங்குவதால் அங்கே நிலத்தடிநீர் உப்பு நீராகவும், மாசு கலந்த நீராகவும் இருக்கின்றபடியால் எங்களுடைய பகுதியிலே இருந்துதான் அந்த பஞ்சட்டி வாட்டர் சென்னைக்கு வருகின்றது. அந்தத் தண்ணீரை முறையாக புழல் ஊராட்சி ஒன்றியத்தினுடைய ஒப்புதலோடு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி நாங்கள் அரசுக்கு அனுப்புகிறோம். சென்னை பெருநகர் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக அந்தப் பகுதியிலே

இருக்கின்ற ஆண்டார்குப்பம், சடையங்குப்பம், பர்மா நகர், கொடுங்கையூர் போன்ற பகுதிகளுக்குத் தண்ணீர் கிடைப்பதற்கான ஏற்பாடுகளை, நல்ல பஞ்சட்டி நீரை கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துதரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, மணலி பேருராட்சி பகுதியிலே குடிநீர் வசதி, மின்விளக்கு வசதிக்காக, சாலை வசதிக்காக என்று 19 லட்சம் ரூபாய்க்குத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சியாளருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. நான் டி.டி.சி.யிலே மாவட்ட ஆட்சி மன்றக் கூட்டத்திலேகூட இருமுறை எடுத்து வைத்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து இந்தத் தொகையை அந்த மணலி பேரூராட்சிக்குக் கிடைப்பதற்கு ஆவனசெய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல எண்ணூர் கத்திவாக்கம் நகராட்சி, நகரியம் பகுதியிலே குறிப்பாக ஒரு லட்சம் லிட்டர் தண்ணீர்தான் இன்றைக்கு சென்னைப் பெருநகர் குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து கொடுக்கிறார்கள். இன்னும் ஒரு லட்சம் லிட்டர் தண்ணீர் அந்த எண்ணூர் கத்திவாக்கம் நகராட்சி நகரிய பகுதிக்கு கொடுக்கவேண்டும் என்று நான் இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போல ஒரு கழிவு நீர் அகற்றுகின்ற நிலையத்தையும் எண்ணூர் பகுதியிலே நீங்கள் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல (குறுக்கீடு)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி.கே. சின்னசாமி): உரையை முடித்து கொள்ளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. செல்லதுரை.

***திரு. ஆ. செல்லதுரை:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஏழாயிரம் ஆண்டுகள் தமிழ் அன்னை தவம் இருந்து பெற்றெடுத்து அருள் ஆட்சி நடத்துகின்ற, எங்களை எல்லாம் காத்து வருகின்ற அன்னை புரட்சித் தலைவியினுடைய புனித பொற்பாதங்களை என்னுடைய ஆனந்தக் கண்ணீரால் துடைத்து, தூய்மைப்படுத்தி என்னுடைய நெஞ்சத்து மலர் தூவி வாழ்த்தி வணங்கி என்னுடைய உரையைத் துவக்க முன்வருகிறேன்.

அசுரர்களை வென்று, வெற்றிக்கொடியாம் சேவல் கொடி நாட்டி, அருளாட்சி புரியும், முருகப்பெருமான் வீற்றிருக்கும் திருச்செந்தூரில்

TRUTH ALONE TRIUMPHS

தன்னுடைய அரசியல் வாழ்க்கைக்கு பிள்ளையார் சுழிபோட்டு, தன்னுடைய அரசியல் வாழ்க்கையில் அசுரர்களையும், அரசியல் எத்தர்களையும் வென்று, எதிரிகளை புறமுதுகிட்டு ஓடச்செய்து புறநானூற்று வீராங்கனையாய் *(மேசையைத் தட்டும் ஒலி)* உலக வரலாற்றில் தனிமதிப்பைப் பெற்றுத் திகழும் அன்னை தெரசாவே வியந்து போற்றும் அளவுக்கு, கழகத் தலைவியாய் உயர்ந்து நின்று அருளாட்சி புரியும் எனது காவல் தெய்வம், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களை வணங்கி உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையின் மீது எனது உரையை ஆரம்பிக்கிறேன்.

பண்டைய ஆட்சிக் காலத்தில், சிறந்த இயற்கைத் துறைமுகமாய் விளங்கி, பெருமளவில் ஏற்றுமதி, இறக்குமதி தொழில் செய்த நகரம் குலசேகரன்பட்டணம் ஆகும். இவ்வூர் தொழிலில் நலிவடைந்து மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தது. இந்தநிலையில், குலசேகரன் பட்டணத்தில் வீற்றிருக்கும் அருள்மிகு முத்தாரம்மனே நேரில் வந்து அருள் வாக்கு தந்தாற்போல், குலசேகரன் பட்டணத்தில் உலகிலேயே முதன்முறையாக கடல்நீர் வெப்பத்திலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தை வெளிநாட்டினரின் உதவியோடு அவர்களுடன் இணைந்து ரூ.800 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப் போவதாக அறிவித்து, அதற்கான அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட்டிருக்கும் எங்கள் காவல் தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு, திருச்செந்தூர் தொகுதி மக்களின் சார்பில் எனது பணிவான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் *4-30*

திருச்செந்தூர் தொகுதி, புன்னக்காயல் பகுதி முழுக்க முழுக்க மீனவ சமுதாய மக்கள் வசிக்கும் பகுதியாகும். இக்கிராமம் இரண்டு பக்கம் கடலாலும், ஒரு பக்கம் தாமிரபரணி ஆறாலும் சூழப்பட்டுள்ளது. இக்கிராமத்திற்கு ஒரே ஒரு தரை வழிப் பாதைத்தான் உள்ளது. இச்சாலை, தாமிரபரணி ஆற்றின் குறுக்கே செல்கிறது. இதனால், ஆண்டுதோறும் ஆற்றில் வெள்ளம் வரும் போதெல்லாம், புன்னக்காயல் கிராமம் வெள்ளத்தால் சூழப்பட்டு விடுகிறது. இதனால், தரை வழிப்பாதை முற்றிலும் துண்டிக்கப்படுகிறது. எனவே, இக்காலங்களில் இப்பகுதி மக்கள் தங்களின் அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமலும், மாணவ, மாணவியர்கள் கல்விச் சாலைகளுக்கு செல்ல முடியாமலும், தங்களது தொழிலான மீன்பிடி தொழிலை நடத்த

முடியாமலும் அவதிப்படுகின்றனர். இந்தத் துயரச் சம்பவங்கள் ஆண்டுதோறும் சுமார் மூன்று மாதங்கள் தொடர்கிறது. இக்காலங்களில் அரசு எந்திரங்கள் மூலமாக இப்பகுதி மக்களுக்கு வெள்ள நிவாரணமாக பல லட்ச ரூபாய் ஆண்டுதோறும் செலவழிக்கப்படுகிறது. எனவே, புன்னக்காயலில் இருந்து வெளியே செல்லும் சாலையில், தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுவதன்மூலம், ஆண்டுதோறும் இன்னல்படும் புன்னக்காயல் மக்களின் நீண்ட நாளைய கோரிக்கை, தேவை நிறைவேற்றப்படுவதுடன், ஆண்டுதோறும் செலவழிக்கப்படும் நிவாரணத் தொகையும் மிச்சப்படுகிறது. எனவே, அம்மா அவர்கள் நடப்பாண்டில் புன்னக்காயல் சாலையில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட உத்தரவிட வேண்டுமென பணிந்து வேண்டுகிறேன்.

திருச்செந்தூர் தொகுதி, உடன்குடி பகுதி மிகவும் வறட்சியான பகுதியாகும். இப்பகுதியில், கடந்த பத்தாண்டு காலமாக பருவமழை பொய்த்து வந்த காரணத்தால், இப்பகுதியில் குடிநீர் எல்லாம் உப்புநீராக மாறிவிட்டது. இதனால், இப்பகுதி மக்கள் குடிநீரை, குடம் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் கொடுத்து வாங்க வேண்டிய சூழ்நிலை இருந்து வருகிறது. இதனால், இப்பகுதி மக்கள் குடிநீருக்காக மிகவும் கஷ்டப்படுகின்றனர். எனவே, இப்பகுதி மக்களின் குடிநீர் பிரச்சினை தீர ஸ்ரீவைகுண்டம் அருகே, பொன்னன்குறிச்சியிலிருந்து குடிநீர் கொண்டுவரும், உடன்குடி-சாத்தான்குளம் கூட்டுக் குடிநீர் திட்டம் ரூபாய் 18¾ கோடி மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்டது. ஆனால், இத்திட்டத்திற்கு இதுவரை நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே அம்மா அவர்கள் இத்திட்டத்திற்கு நடப்பாண்டில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென இப்பகுதி மக்கள் சார்பில் பணிந்து வேண்டுகிறேன்.

திருச்செந்தூர் முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் ஒன்றாகும். இப்புண்ணிய பூமியின் முக்கிய பிரச்சினை, குடிநீர் பிரச்சினை ஆகும். திருச்செந்தூர் பகுதிக்கு, குடிநீர் தற்போது, ஆத்தூர் நீர் தேக்கத்திலிருந்து விநியோகிக்கப்படுகிறது. இருப்பினும், இந்நீர் தேக்கத்திலிருந்து விநியோகிக்கப்படும் குடிநீர் (மணியடிக்கபெற்றது) ஆறுமுகநேரி, ஆத்தூர், காயல்பட்டணம் உட்பட, பல கிராமப்பகுதிகளுக்கும் விநியோகிக்கப்படுவதால், திருச்செந்தூர் பகுதிக்கு போதிய குடிநீர் கிடைப்பதில்லை. கோடை காலங்களில், குடிநீர் பிரச்சினை திருச்செந்தூரை பெரிதும் பாதிக்கிறது. எனவே, ஸ்ரீவைகுண்டம் அணையிலிருந்து திருச்செந்தூருக்கு குழாய் மூலம் நேரடியாக குடிநீர் கொண்டு வரும் திட்டம், தற்போது தயார் செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இத்திட்டத்திற்கு அனுமதி அளித்து நடப்பாண்டிலேயே நிதி ஒதுக்கீடும் செய்ய வேண்டுமென வேண்டுகிறேன்.

திருச்செந்தூர் பகுதியில் விவசாயத்திற்குத் தேவையான தண்ணீர், தற்போது கடையனோடை கால்வாயிலிருந்து, கடம்பாகுளம் நிறைந்து அதன் பிறகு, பல குளங்கள் நிறைந்த பிறகே திருச்செந்தூர் பகுதிக்கு வருகிறது. இதனால், கால்வாயில் தண்ணீர் குறைவாக வரும் காலங்களில், தண்ணீர் திருச்செந்தூர் பகுதியை எட்டுவதில்லை. இதனால், இப்பகுதி விவசாய மக்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். எனவே, இப்பகுதி விவசாய மக்களின் நலன் கருதி, கடையனோடை கால்வாயிலிருந்து நேரடியாக திருச்செந்தூர் பகுதிக்குத் தண்ணீர் கொண்டுவர, திருச்செந்தூர் தனிக் கால்வாய்த் திட்டம் ஒன்று தயார் செய்யப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம் நிறைவேறினால் கிட்டத்தட்ட 18 குளங்களைச் சேர்ந்த (மணியடிக்கப்பெற்றது) விவசாயப் பகுதி முழுமையான பாசன வசதி பெறும். எனவே, அம்மா அவர்கள் இத்திட்டத்திற்கு நடப்பாண்டிலேயே ஒப்புதல் அளித்து, நிதி ஒதுக்கீடு செய்ய உத்தரவிட வேண்டுமென பணிந்து வேண்டுகிறேன்.

திருச்செந்தூர் தொகுதி, உடன்குடி பகுதி மிகவும் வறட்சியான பகுதியாகும். இப்பகுதியில் கடந்த பத்தாண்டு காலமாக பருவமழை பொய்த்து வந்த காரணத்தால், இப்பகுதியில் குடிநீர், உப்புநீராக மாறிவிட்டது. நிலத்தடி நீர் உப்புநீராக மாறிவிட்டதன் காரணமாக, விவசாயத் தொழில்கள் மிகவும் பாதிக்கப்பட்டுவிட்டன. தென்னை மரங்கள் எல்லாம் கருகிய நிலையில் உள்ளன. எனவே, இப்பிரச்சினை தீர, இப்பகுதி மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கும், சடையநேரி வாய்க்காலை ஆழப்படுத்தி, அகலப்படுத்தி, தாங்கைகுளம் வரை நீட்டிக்க, ரூபாய் 5¾ கோடி மதிப்பீட்டில் தயார் செய்து, அரசு ஒப்புதலும் வழங்கியுள்ளது. ஆனால், இதுவரை நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

எனவே, அம்மா அவர்கள், இத்திட்டத்திற்கு நடப்பாண்டிலேயே நிதி ஒதுக்கீடு செய்ய உத்தரவிட வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையிலே எனக்குப் பேசுகின்ற வாய்ப்பைத் தந்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

1994 ஏப்ரல் 26]

பிற்பகல் 4-35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஏ.டி. செல்லசாமி.

திரு. ஏ.டி. செல்லசாமி: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கைமீது எனக்குப் பேச வாய்ப்பு அளித்த மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியத் துணைக் கண்டத்தின் ஒரே தலைவி, ஒப்பற்ற தலைவி, கொடியவர்களை இரும்புக்கரம் கொண்டு அடக்கும் வல்லமை கொண்ட தலைவி, தமிழகத்தின் பல கோடி மக்களுடைய இதயத்தில் குடிகொண்டுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் திருப்பாதங்களைத் தொட்டு வணங்கி என் உரையைத் தொடங்குகிறேன்.

நேர்மையாக நடந்து கொண்டிருக்கும் இந்த ஆட்சியில் குழப்பத்தை உண்டு பண்ண சிலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கனவு என்றும் நிறைவேறாது. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இருக்கும்வரை இத்தமிழகத்தின் நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவிதான். மற்றவர்கள் ஒருவருக்கொருவர் தலைமுடியைப் பிய்த்துக்கொண்டும், சட்டையைக் கிழித்துக்கொண்டும் இப்பொழுது நடப்பதைப்போல் ரோட்டில் அலைய வேண்டியதுதான். வீண்பழி சுமத்தி தமிழகத்தின் நிரந்தர ஆட்சியை மாற்ற எவராலும் முடியாது. புரட்சித் தலைவியின் ஆட்சி தமிழகத்தின் பொற்காலமாகும். இன்றையதினம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கொண்டு வந்திருக்கும் இந்த மானியக் கோரிக்கையை முதற்கண் வரவேற்கிறேன்.

தமிழகம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு விளங்கும் மாநிலமாகும். நாடு திறம்பட விளங்க ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி சிறப்பாக அமைந்திருக்க வேண்டும். இந்தச் சட்ட மன்றக் கூட்டத் தொடரிலே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவந்து சட்டமாக நிறைவேற்றி, இன்று அமுலுக்குக் கொண்டு வந்திருக்கும் தமிழக ஊராட்சிச் சட்டம் ஒரு சிறப்பு அம்சமாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டம் 73-வது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் தமிழ்நாடு பஞ்சாயத்து ஆக்ட் இன்றையதினம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இன்றைய தினம் தமிழகத்திலே கிராமப்புறங்களில் திருத்தி அமைக்கப்பட்ட போக்குவரத்து, சாலைகள்,

மின்சார வசதி, பொதுச் சுகாதாரம் முதலியன நகர்ப்புறங்களில் மட்டுமல்லாமல் சிறு குக்கிராமங்களில்கூட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அரசால் நல திட்டங்களின் வாயிலாக நிறைவேற்றப்பட்டு வருகிறது.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் கேட்டுத்தான் கிடைக்கும் என்பதில்லை. கேட்காமலேயே ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் கொடுத்து பல்வேறு திட்டங்களின் மூலமாக ஏழை மக்கள் பயன் பெறுகின்ற நிலையைத் தந்த தங்கத் தலைவிதான் நமது புரட்சித் தலைவி அவர்கள்.

எனது தொகுதியில் உள்ள ஒட்டன்சத்திரம் பேரூராட்சிக்கு சுமார் 100 சோடியம் விளக்குகள் அமைத்து ஒட்டன்சத்திரம் முழுவதும் ஒளிமயமாக இருக்கின்றது என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் வருடத்திற்கு சுமார் 40 கிலோமீட்டர் கல் ரோடுகள் போடுவதற்கு நம்முடைய இதய தெய்வம் தங்கத் தலைவி அவர்கள் உத்தரவு பிறப்பித்து, கடந்த 3 ஆண்டுகளில் ஒரு ஒன்றியத்திற்கு 120 கிலோமீட்டர் என்று, இரண்டு ஒன்றியங்களில் 240 கிலோமீட்டர் ரோடுகள் அமைத்துக்கொடுத்த தங்கத் தலைவி அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதேபோன்று ஒவ்வொரு கிராமத்திற்கும் தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர், தெரு விளக்குகள், சாலை வசதிகள், சாக்கடைகள் போன்ற அனைத்துத் திட்டங்களையும் சிறப்பாகச் செயலாற்றி, ஏழை எளிய மக்கள் பயன்படுகின்ற வகையில் ஆவன செய்து, அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டுகின்ற நிலையில் ஆட்சி செய்கின்ற எங்களுடைய தங்கத் தலைவியின் ஆட்சியில் இன்று ஏழை எளிய மக்களுக்கு எந்த ஒரு திட்டமாக இருந்தாலும், உடனுக்குடன் செய்து கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-40

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கொடைக்கானல் வந்தபோது அண்ணா மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்து,

1994 ஏப்ரல் 26] [திரு. ஏ.டி. செல்லசாமி]

குறைகளைக் கேட்டபோது, எனது தொகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினைகளை எடுத்துச் சொல்கின்றபோது, அதை உடனே நிறைவேற்ற ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, எனது தொகுதியில் உள்ள மார்க்கம்பட்டி, சின்னக்கரட்டுப்பட்டி, பெரியகோட்டை, சாலைப்புதூர், அத்திக்கோம்பை, தொப்பம்பட்டி மற்றும் பல கிராமங்களுக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்து, அந்தப் பணிகள் இன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் மற்றும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் துரித நடவடிக்கையினால் விரைவில் முடியும் தருவாயில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒட்டன்சத்திரம் வளர்ந்து வரும் ஒரு நகரம். அதன் மக்கள் தொகை சுமார் 50 ஆயிரம் பேர் ஆகும். தினமும் சுமார் 25 ஆயிரம் வியாபாரிகள் வந்து செல்கின்றார்கள். குடிநீர் அங்கு மிகவும் தட்டுப்பாடாக உள்ளது. எனவே, ஒட்டன்சத்திரம் அருகில் உள்ள எருமைக்கரடில் ஒரு நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து அதன் மூலம் குடிநீர் வழங்கவேண்டும். அங்கே குடிநீர் விநியோகம் செய்யும் திட்டம் சுமார் 1 கோடி ரூபாயில் போட்டு அது இப்போது அரசின் பரிசீலனையில் உள்ளது. அந்தத் திட்டத்தை இந்த ஆண்டு நிறைவேற்ற ஆவன செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஒட்டன்சத்திரம் ஒன்றியம் கடும் வறட்சிப் பகுதியாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்குள்ள ஒவ்வொரு கிராமத்தையும் நன்கு அறிந்தவர். ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள இடையகோட்டை, நங்காஞ்சி நீர்த்தேக்கத் திட்டத்தின் கீழ் அமைந்துள்ள நங்காஞ்சி நீர்த்தேக்க அணையின் அருகில் மிகப்பெரிய ராட்சத ஆழ்குழாய்க் கிணறு அமைத்து, அதிலிருந்து மார்க்கம்பட்டி, மார்க்கம்பட்டிபுதூர், அத்தாம்பட்டி, ராயக்காவலசு என்ற பல கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைத்துக் கொடுத்தால், குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒட்டன்சத்திரம் பேரூராட்சிக்கு உட்பட்ட காந்தி காய்கறி சந்தை தமிழகத்தைப் பொறுத்த அளவில் மிகவும் பெரிய சந்தையாகும். அதனுடைய வருமானம் அதிகப்படியாக உள்ளது. இன்னும் பேரூராட்சியின் வருமானத்தை அதிகமாகப் பெருக்க, அந்தச் சந்தையில் பேரூராட்சிக்குச் சொந்தமான இடத்தில் ஒரு ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் அமைத்து, பொதுமக்கள் அனைத்துப் பொருட்களையும் ஒரே இடத்தில் வாங்கிச் செல்கின்ற வகையில் மிகப் பெரிய காம்ப்ளக்ஸ் கட்டிடம்

ஒன்று கட்டிக்கொடுக்க ஆவன செய்ய அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியைச் சேர்ந்த கீரனூர் பேரூராட்சியில் சுமார் 2000 குடும்பத்தை சேர்ந்த சுமார் 10 ஆயிரம் இஸ்லாமிய மக்கள் வசித்து வருகின்றார்கள். மற்றும் அருகில் உள்ள கிராமங்களில் இருந்தும், கீரனூர் வந்து பஸ் ஏறிச் செல்ல வேண்டியுள்ளது. ஆனால் கீரனூருக்கு நிரந்தரமான பேருந்து நிலையம் கிடையாது. எனவே அங்கு நிலையான பேருந்து நிலையம் அமைத்து, மக்கள் பயன்பெறுகின்ற வகையில் அமைத்துக் கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் அந்தப் பேரூராட்சியின் வருமானத்திற்கு வழி செய்கின்ற வகையில், உள்ளாட்சித்துறையின் மூலமாக ஒரு ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் அமைத்து, பேரூராட்சிக்கு நிரந்தர வருமானத்தை ஏற்படுத்திக் கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் உள்ள தொப்பம்பட்டி ஒன்றியம், கீரனூர், ஒட்டன்சத்திரம் பேரூராட்சிக்கு உட்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்ட கிணறுகள் கடந்த மழையின் காரணமாக மணல் மூடி பழுதடைந்துள்ளன. எனவே குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு மக்கள் சிரமப்படுகிறார்கள். அதைச் சீர்செய்து குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அந்தக் கிணறுகளுக்கு அருகில் மணல் நிரம்பியிருக்கிறது. அங்கே தடுப்புச் சுவர் கட்டிக் கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். ஒட்டன்சத்திரம் ஒன்றியம் இடையகோட்டை ஊராட்சி ஒன்றியம் பெரிய ஊராட்சி ஒன்றியம் ஆகும். அதன் மக்கள் தொகை சுமார் 20,000 பேர். அருகில் உள்ள கிராமங்களில் இருந்தும் மக்கள் இடையகோட்டைக்கு வந்து செல்கின்றனர். ஆனால் இடையகோட்டைக்கு நிரந்தரமான பேருந்து நிலையம் கிடையாது. இதனால் பொதுமக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். அவர்களுடைய சிரமங்களைக் கருத்தில் கொண்டு இடையகோட்டையில் பேருந்து நிலையம் அமைத்துக் கொடுக்க ஆவன செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் போடப்படுகின்ற சாலைகள் அனைத்தும் மெட்டல் சாலைகளாகவே போடப்படுகின்றன. இரண்டு மூன்று ஆண்டுகள் ஆனால் அந்த ரோடுகள் பழுதடைந்துவிடுகின்றன. அவற்றைத் தார்ச்சாலைகளாக மாற்றினால் நன்றாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். மேலும் ஊராட்சி ஒன்றியங்களில்

1994 ஏப்ரல் 26] [திரு. ஏ.டி. செல்லசாமி]

உள்ள கசிவுநீர்க்குட்டைகள் பல ஆண்டு காலமாக தூர் எடுக்காமல் உள்ளன. அவைகளை உடனுக்குடன் தூர் எடுத்தால் அங்கே குடிநீர் வசதி பெறமுடியும். விவசாயத்திற்கும் ஏதுவாக இருக்கும். ஒட்டன்சத்திரம் தொகுதியின் வளர்ச்சி காரணமாகவும், மக்கள் தொகை வளர்ந்து வருவதாலும் நகரின் பல குடியிருப்புப் பகுதிகளிலும், நெடுஞ்சாலைகளிலும் கழிவுநீர் தேங்கி நின்று சுகாதாரத்தைப் பாதித்து வருகின்றது. எனவே கழிவுநீர் தேங்காமல் சென்று சுகாதாரம் பாதிக்காத வண்ணம் ஒட்டன்சத்திரம் நகரில் பாதாளச் சாக்கடை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமாய் அன்புடன் வேண்டுகிறேன்.

ஒட்டன்சத்திரத்தைப் பொறுத்தவரையில் அங்கே பழனி வட்டத் தலைநகராக இருக்கிறது. ஒட்டன்சத்திரம் தாலுக்கா இன்னும் பிரிக்கப்படாமல் உள்ளது. நம்முடைய புரட்சித் தலைவி அரசு பொறுப்பேற்ற பிறகு ஒட்டன்சத்திரம் தாலுக்கா பிரிக்கப்பட வேண்டுமென்று அதை முதல் வினாவாக இந்த மாமன்றத்தில் எழுப்பியுள்ளேன். ஒட்டன்சத்திரம் தாலுக்கா பிரிக்கப்பட வேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்கள் கொடைக்கானல் வந்தபோது உத்தரவிட்டார்கள். அதற்கு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரும் நிதி அமைச்சரும் இந்த ஆண்டு நடவடிக்கை எடுத்து ஒட்டன்சத்திரத்தை தாலுக்கா தலைமையிடமாக வைத்து பிரித்துக் கொடுக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொண்டு மானியக்கோரிக்கையை வரவேற்று அமைகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எஸ். அன்பழகன்.

* **திரு. எஸ். அன்பழகன்:** மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக்கண்டத்திலே மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாகத் திகழக்கூடிய அளவுக்கு நல்லாட்சி நடத்திவரும் புரட்சித் தலைவியின் ஆட்சியிலே உள்ளாட்சித்துறையின் ஊரக வளர்ச்சித்துறை, குடிநீர் வடிகால் வழங்கு துறை, நகராட்சி நிர்வாகம் ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். "It is better to be faithful than famous."- புகழ் பெற்றவனாக இருப்பதைவிட விசுவாசம் உள்ளவனாக இருப்பதே மேல் என்ற ஒரு ஆங்கிலப் பழமொழிக்கு ஏற்ப, நன்றியை மறந்தவர்களுக்கு விசுவாசம் இருக்கிறதோ இல்லையோ, கோடிக் கணக்கான மக்களுக்குத் தங்கள் மேல் விசுவாசம் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். உங்கள் மேல் நாங்கள் காட்டும் விசுவாசம்தான்

எங்களுடைய சுவாசம் என்று பெருமையோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

பிற்பகல் 4-45

ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம் என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். கிராமப்புறம் வளர்ச்சி அடைந்தால்தான் ஒரு நாடு வளர்ச்சி அடைந்ததாகக் கருதப்படும் என்றார் மகாத்மா காந்தி அவர்கள். கிராமங்கள் சிறு நகரங்களாக மாற வேண்டும் என்று சொன்னார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். ஆக இந்த 3 பெரும் தலைவர்களுடைய அடியொற்றி சமுதாய வளர்ச்சியையும் சமுதாய உணர்வையும் ஏழை எளியோர்க்கு நல்வாழ்வு கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் பாடுபட்டு வரும் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் நல்ல சீரிய திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு வருகிறார். அதன் விளைவாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம், இணைப்புச் சாலைகள் போடுதல், சிறு பாலங்கள் கட்டுதல், வடிகால் அமைத்தல், சாலை விளக்குகள் பொருத்துதல், மயான சாலைகள் அமைத்தல், பாசன வசதி செய்து கொடுத்தல், தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்குதல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கூடம் கட்டுதல் போன்ற திட்டங்களை நிறைவேற்றிவரும் இந்த நேரத்தில், அதற்கு முன்னோடியாக பஞ்சாயத்துராஜ் சட்டத்தை நிறைவேற்றி மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்கிறார்கள். இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன். இந்த பஞ்சாயத்துராஜ் சட்டம், நகர்பாலிகா சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லையே என்று அன்று வெளியே வந்தார்கள் ராஜீவ் காந்தி. அந்த ராஜீவ் காந்தியினுடைய கனவு நனவாக அந்தச் சட்டம் இந்த மன்றத்திலே வந்தபோது, அந்தச் சட்டம் எங்களுக்குத் தேவையில்லை, எங்களுக்கு உண்ணாவிரதம்தான் தேவை என்று சொன்ன அந்த எதிர்க்கட்சியினுடைய பொறுப்பாளர்களை எண்ணிப் பார்க்கிறேன். அவர்கள் ராஜீவ் காந்தியின் மீது உண்மையில் விசுவாசம் இருந்திருந்தால் அன்று இங்கு கலந்துகொண்டு அந்த பஞ்சாயத்துராஜ் சட்டத்தை வரவேற்று இருக்க வேண்டும். நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள், அவர்கள் இல்லாதது பற்றியோ இருப்பதுபற்றியோ கவலைப்படவில்லை. இந்த மன்றத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முக்கியமான இந்த பஞ்சாயத்துராஜ் சட்டத்தின் மீது எந்த அளவுக்கு மதிப்பு மரியாதை வைத்து இருக்கிறது என்பதைக் காட்டிவிட்டார்கள். அதன்

1994 ஏப்ரல் 26] [திரு. எஸ். அன்பழகன்]

பிறகுதான், சேலத்தை மாநகராட்சியாக்கி இன்று அதற்கு ஒரு நல்ல மரியாதை கொடுத்துள்ள புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். அந்த சேலத்தை மாநகராட்சியாக ஆக்குவதற்கு முன்பாக, அந்த மாநகராட்சியில் உள்ள பகுதிகள் அனைத்திலும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுகிறேன். அதேபோல் அனைத்துப் பகுதிகளுக்கும் காவிரிநீர் வழங்க வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதேபோல் ஐ.ஆர்.டி.பி. கடன் வழங்கும் திட்டத்தில் கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சர்வே எடுத்ததில் குளறுபடி ஏற்பட்டுவிட்டது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். எனவே, புதிய சர்வே விரைவில் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதற்கு முன்பாக வறுமைக் கோட்டில் இருக்கும் ஏழை எளியோர்க்கும் கடன் வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக எஸ்.சி./ எஸ்.டி. மக்களுக்குத் தேசிய வங்கியிலிருந்து சரிவர கடன் கொடுப்பது இல்லை என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். அதேபோல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கடன் வழங்கும்போது ஜாமீன் கேட்கிறார்கள். அந்த ஜாமீன் முறையை அறவே நீக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் நகராட்சி கடன் கேட்கும்போது அந்த வங்கிகள் சரிவர தருவது இல்லை. நகராட்சியின் அக்கவுண்ட் எந்த வங்கியில் இருக்கிறதோ, அந்த வங்கி கொடுக்கவில்லை என்றால், அந்த அக்கவுண்ட்டை அந்த வங்கியிலிருந்து எடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களை நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

ஜே.வி.வி.டி. வீடுகள் இந்த ஆண்டு (1994-95-ல்) 25 ஆயிரம் கட்டப்படும் என்று கொள்கை விளக்கக் குறிப்பேட்டில் கூறி உள்ளார்கள். இது போதாது. இதற்கு மத்திய அரசு உதவி கொடுத்தாலும், இன்னும் அதிகப்படியாகக் கொடுக்க வேண்டும். ரிசர்வ் தொகுதிகளுக்கு அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மக்கள் அந்த ரிசர்வ் தொகுதியில் அதிகமாக இருக்கிறார்கள். கிராமங்களும் அதிகமாக இருக்கின்றன. எனவே, அந்தத் தொகுதிக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களுக்கு வீடுகள் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த நேரத்தில் என்னுடைய தொகுதியினுடைய சில கோரிக்கைகளையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நாமக்கல் பெரிய முக்கியமான நகரம் ஆகும். தேசிய நெடுஞ்சாலை-7-ல் நாமக்கல்லில் மட்டும்தான் பை-பாஸ் சாலை இல்லை. எனவே நாமக்கல்லுக்கு புறவழிச் சாலையை விரைவில் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவி அவர்கள் கடந்த ஆண்டு இங்கே அறிவித்த நாமக்கல்லில் ஆட்டோ நகர்-அதற்கு மானியம் வழங்கி, அந்த ஆட்டோ நகரை விரைவில் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாமக்கல் பெரிய நகரமாக இருப்பதால் அங்கேயுள்ள காவல் நிலையத்தை அர்பன், ரூரல் என்று இரண்டாகப் பிரித்து இரண்டு காவல் நிலையங்களை அமைத்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

காவிரி ஆற்றிலிருந்து 37 வழியோரக் கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தைப் புரட்சித் தலைவி அவர்கள் கடந்த ஆண்டு சேலத்திலே அறிவித்தார்கள். அது மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த வேளையிலே, விரைவில் அந்தத் திட்டத்தை முடித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுவதோடு, அந்த காவிரி ஆற்றிலிருந்து வரும் தண்ணீரை எருமைப்பட்டி வரை நீட்டித்து இருப்பதை, மேலும் பவுத்திரம் கிராமம் வரை நீட்டித்துத் தர வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நாமக்கல் நகராட்சி தொடங்கப்பட்டு, 25 ஆண்டுகள் இந்த ஆண்டுடன் முடிவடைகிறது. எனவே, வெள்ளி விழா சிறப்பாகக் கொண்டாடப்படும் இந்த ஆண்டிலே, வெள்ளி விழா கட்டிடம் அங்கே கட்டப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நாமக்கல்லைச் சுற்றியுள்ள 6 கிராமங்களுக்கு நகராட்சியில் இருந்துதான் குடிநீர் தரப்படுகிறது. அந்த 6 கிராமங்களையும் நகராட்சியுடன் சேர்த்தால் இன்னும் வருவாய் அதிகமாகும். அதுமட்டுமல்ல, அந்தத் தண்ணீருக்குத் தேவையான மின் கட்டணத்தை

1994 ஏப்ரல் 26] [திரு. எஸ். அன்பழகன்]

அந்தக் கிராமங்கள் கட்டடவும் வசதி இல்லாத நிலையில் இருப்பதால் அதை நகராட்சியுடன் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு ஆண்கள் கல்லூரியும், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பெண்கள் அரசு கல்லூரியும் தொடங்கப்பட்டு 25 ஆண்டுகள் முடிந்து, 26 ஆண்டுகள் ஆகிறது. எனவே, அந்த இரண்டு கல்லூரிகளுக்கும் வெள்ளி விழா கொண்டாட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4–50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரையை முடித்து விடலாம்.

திரு. எஸ். அன்பழகன்: முடித்து விடுகிறேன். வரகூர் உயர்நிலைப் பள்ளியும், எருமைப்பட்டி மகளிர் உயர்நிலைப் பள்ளியும் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பவுத்திரம் நடுநிலைப் பள்ளியையும், தணிகை நடுநிலைப் பள்ளியையும் உயர்நிலைப் பள்ளிகளாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வலையப்பட்டி மேல்நிலைப் பள்ளியில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக விடுதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாமக்கல் நகரத்தின் மையப் பகுதியில் உள்ள கமலாலய குளக்கரையைச் சீர்படுத்தி, காவிரி நீரை விட்டு, படகு விட்டு, நகராட்சியின் வருவாயைப் பெருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதைப் பயன்படுத்தி வரும் சலவைத் தொழிலாளிகளுக்கு டோபி கானாவை வேறு இடத்தில் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாமக்கல்லில் உள்ள 5 கோர்ட்களும் தனித்தனியாக இரண்டு பிரிவாக இருக்கின்றன. எனவே, ஐந்து கோர்ட்களையும் ஒன்றாக இணைத்து, ஒரு வளாகமாக, ஒரே இடத்தில் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாமக்கல் நகரத்தில் பெங்களூர்–திருச்சி சாலையும், பெங்களூர்–மதுரை சாலையும் செல்வதால் ஒரு நாளைக்கு ஆயிரக்கணக்கான லாரிகள் செல்கின்றன. எனவே, அங்கே ஒரு மோட்டல்–சாலை ஓர விடுதி ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[திரு. எஸ். அன்பழகன்] [1994 ஏப்ரல் 26

நிர்வாக வசதிக்காக சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும்போது நாமக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்ட மாவட்டத்தை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரையை முடித்து விடுங்கள். (குறுக்கீடு) உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையில் பேசுகிறபோது மாவட்டத்தை எல்லாம் பிரிக்க வேண்டுமென்று கேட்டால் சரியாக இருக்காது.

திரு. எஸ். அன்பழகன்: துணைத் தலைவர் அவர்களே, இப்போது தான் நேரம் கிடைத்தது. எருமைப்பட்டி பேருந்து நிலையம் கடந்த ஆண்டு புரட்சித் தலைவி அவர்களால் தொடங்கப்பட்டது. அதை விரைவில் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாமக்கல் மருத்துவமனை கேஷுவாலிட்டி பிளாக் இடிந்து விழுந்து ஓராண்டுக்கு மேலாகிறது. அதைச் சீர்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வடவத்தூர் தளமலை அடிவாரத்தில் புதியதாகப் பொதுப்பணித் துறையால் 21 லட்சம் ரூபாயில் ஒரு ஏரி கட்ட திட்டம் தயாரிக்கப்பட்டு, அனுப்பி ஓராண்டு ஆகிவிட்டது. அதைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாமக்கல் பகுதி வளர்ந்து வரும் பகுதி. 60,000 ஜனத்தொகை கொண்ட பகுதி. தினசரி தண்ணீர் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஆர். ஈஸ்வரன்.

திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் குடிநீர் வடிகால் வாரியம் ஆகிய மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பளித்த உதவி சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியச் சாலைகள் 38,100.08 கிலோமீட்டர் அளவுக்கு இருக்கின்றன. இந்த ஊராட்சி ஒன்றியச் சாலைகளில் சில சாலைகளுக்கு மட்டும் நிதியுதவி இருக்கிறது. சில சாலைகளைப் பொறுத்தவரையில் நிதி இல்லாமல் கஷ்டப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, ஊராட்சி ஒன்றியத்தினுடைய ஜெனரல் பண்டிலிருந்து போதிய நிதியுதவி இல்லாத காரணத்தால் அந்த ஊராட்சி ஒன்றியச் சாலைகளுக்கு நிதியை அதிகமாக உயர்த்திக் கொடுக்க வேண்டும். அதுமாதிரி ஊராட்சி

1994 ஏப்ரல் 26] [திரு. ஆர். ஈஸ்வரன்]

சாலைகள் 51,634.45 கிலோமீட்டர் நீளத்திற்கு இருக்கின்றன. இந்த ஊராட்சி சாலைகள் பொறுத்தவரையில் சில ஊராட்சி மன்றங்களில் தான் நிதி நிலைமை இருக்கிறது. ஒரு 40 சதவீத ஊராட்சி மன்றங்களில் நிதிநிலைமை சரியாக இல்லாத நிலை இருக்கிறது. அப்படி நிதிநிலைமை சரியாக இல்லாத ஊராட்சி மன்றங்களுக்கு எப்படியாவது பொது நிதியிலிருந்து, ஊராட்சி மன்றத்தின் ஜெனரல் பண்டிலிருந்து அந்தச் சாலைகளைப் பராமரிப்பதற்கு நிதியுதவி அளிக்க வேண்டும். ஏனென்றால் கிராமப் புறங்களில் இருக்கக்கூடிய ஊராட்சி மன்றங்களுக்குச் சாலை வசதி இல்லாமல் கஷ்டப்படுகிற நிலைமை இருக்கிறது.

அதைப்போல கல்விக் கூடங்களுக்கு பழுதடைந்தவைகளைச் சரி செய்வதற்கு ரூ.1000.50 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் சுமார் 387 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. எனவே, இந்த நிதி போதுமானதாக இருக்காது. ஏனென்றால் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு சுமார் 27,000 ரூபாய் வீதம் தான் கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு சுமார் 25 அல்லது 30 ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. இந்த நிதி 20,000 அல்லது 25,000 ரூபாயை வைத்து பழுதடைந்த கல்விக்கூடங்களைப் பழுது பார்ப்பதற்குப் போதுமானதாக இல்லை. ஆகவே, அதிகப்படியான நிதி ஒதுக்கவேண்டும். ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு சுமார் 1 இலட்சம் ரூபாய் இருந்தால்தான் பழுது அடைந்த கல்விக் கூடங்கள், ஊராட்சி ஒன்றியக் கல்விக் கூடங்களைப் பழுதுபார்க்க முடியும்.

பிற்பகல் 4-55

அதேபோன்று தெருவிளக்குகள் என்று எடுத்துக் கொண்டால், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சி மன்றங்கள்தான் தெருவிளக்குகள் எரிவதையும் மற்றும் பழுது பார்ப்பதையும் பார்க்கக்கூடிய நிலைமை இருக்கிறது. பேரூராட்சியாக இருந்தாலும் சரி, ஊராட்சி மன்றங்களாக இருந்தாலும் சரி, சில ஊராட்சி மன்றங்களில் நிதிநிலைமை இருப்பதற்கு ஏற்றவாறுதான் தெருவிளக்குகளைப் பராமரித்து பூர்த்தி செய்ய முடிகிறது. அந்த ஊராட்சி மன்றங்களில் நிதிநிலைமை இல்லாவிட்டால், அந்தக் கிராமத்தில் தெருவிளக்கு எரிய முடியாத சூழ்நிலை இருக்கிறது. உங்களுடைய அறிக்கையில்கூட இதைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. நிதிநிலைமை இல்லாத கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு ஊராட்சி ஒன்றியத்தினுடைய பொது நிதியிலிருந்து எடுத்து சரி செய்யப்படும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அப்படி இருப்பதால், இது பெரிய பிரச்சினைக்குரியதாக இருக்கிறது. இதற்கு முன்னால், தமிழகத்தில்

[திரு. ஆர். ஈஸ்வரன்] [1994 ஏப்ரல் 26

இருக்கக்கூடிய அனைத்து மின்சாரத் தெருவிளக்குகள் எல்லாமே, மின்சார வாரியத்திடம் இருந்தது. மீண்டும் நீங்கள் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து தெருவிளக்குகள் அனைத்தையுமே மின்சார வாரியத்திடம் ஒப்படைக்கவேண்டும். அப்படி மின்சார வாரியத்திற்கு நீங்கள் ஒப்படைத்தால்தான் தெருவிளக்குகள் சரியாக எரியமுடியும். தெருவிளக்குகள் எரியவில்லை என்று சொன்னால் ஊராட்சி மன்றத்திடம் நிதி இருந்தால், ஆணையாளரிடம் சொல்லி - அங்கே ஸ்டாக் இருந்தால்- டியூப்லைட்டுகளையோ அல்லது பல்புகளையோ எடுத்துக் கொண்டு போட முடியும். நிதிநிலைமை இல்லாவிட்டால், கிராமத்தில் தெருவிளக்குகள் முழுமையாக எரிய முடியாது. ஆகவே, இந்த நிலைமையை மாற்றி, தமிழகம் முழுவதுமாகத் தெருவிளக்குகளை மின்சார வாரியத்திடமே நீங்கள் ஒப்படைக்கவேண்டும். இந்த மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில், தமிழகத்தில் முழுமையாக மின்சார வெட்டே இல்லை என்று மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் ஒரு நாளைக்கு 5 தடவை, 10 தடவை மின்சாரத்தடை ஏற்படுகிறது. படிக்கின்ற மாணவர்கள் இரவு நேரங்களில் படிக்க முடியவில்லை...

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஈஸ்வரன் அவர்கள் சொல்கிறபோது, ஒரு நாளைக்கு 5 முறை, 6 முறை மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படுகிறது என்று சொன்னார்கள். தமிழகத்திலே இந்த நிலை கடந்த ஆட்சிக் காலத்திலே இருந்தது. இதய தெய்வம், புரட்சித் தலைவியினுடைய ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகுதான், மின்வெட்டே இல்லை என்ற நிலையை இன்றைக்கு உருவாக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு இன்றைக்குக் கிராமத்திலே தெருவிளக்குகள் எரிவதைப் பற்றிச் சொன்னார்கள். நிதி நலிந்த ஊராட்சிகள் இப்படிப்பட்ட தெருவிளக்குகளை எரிய வைக்க முடியவில்லை, ஆகவே மின்சார வாரியத்திடம் ஒப்படைக்கவேண்டும் என்று சொன்னார்கள். இதை எல்லாம் உணர்ந்துதான், இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளிலேமட்டும் நிதி நலிந்திருக்கின்ற ஊராட்சிகளுக்குத் தேவைப்படுகின்ற மின்சார சாதனங்களை வாங்குவதற்காக 2 ஆண்டுகளிலே மட்டும் 4 கோடியே 50 லட்சம் ரூபாயை மானியமாக வழங்கியிருக்கிறார்கள், நிதி நலிவு அடைந்த ஊராட்சிகளுக்கு. அந்த அடிப்படையில் இந்த ஆண்டு கூட, இதற்கு மொத்தமாக மின்சார சாதனங்களை வாங்குவதற்குத் தேவையான செலவு 5 கோடியே 55 இலட்சம் என்று மதிப்பிடப்பட்டு இருக்கிறது. அதிலும் கூட கடந்த ஆண்டு கொடுத்த 2 கோடியே 25 லட்சம்

1994 ஏப்ரல் 26] [பேரவைத் துணைத் தலைவர்]

மானியத்தை உயர்த்தி இந்த ஆண்டு 3 கோடியாக வழங்குவதற்கு இதயதெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் கருணையோடு ஆணையிட்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி).*

திரு. ஆர். ஈஸ்வரன்: தெருவிளக்குகள் பராமரிப்பு போன்றவைகள் எல்லாம் ஊராட்சி மன்றங்களிலே வருகிறது அல்லவா, அதனால் உள்ளாட்சித்துறை மானியக்கோரிக்கையிலே தான் பேச முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தெருவிளக்கு பராமரிப்பு எல்லாம் இதில் வரும். ஆனால் மின்வெட்டெல்லாம் இதிலே வராது. *(குறுக்கீடு)* நீங்கள் பொதுப்பணித்துறை அமைச்சருடைய மானியக் கோரிக்கையிலே அன்றைக்குப் பேசாமல் கோட்டை விட்டுவிட்டு, இன்றைக்கு வந்து எல்லாப் பிரச்சினைகளையும் கிளப்பிக் கொண்டு இருக்க முடியும் என்றால், அதை அனுமதிக்க முடியாது. *(குறுக்கீடு).* இதற்குச் சம்பந்தப்படாததை எல்லாம் பேச முடியாது. *(குறுக்கீடு).* ஈஸ்வரன், உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையிலே மட்டும் பேசி முடித்துவிடுங்கள். *(குறுக்கீடு)*

திரு. எஸ். டேனியல்ராஜ்: கோட்டைவிட்டோம் என்று சொல்கிறீர்கள். அது பார்லிமென்டரியா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. டேனியல்ராஜ், கோட்டை விட்டது என்பது it is not unparliamentary, *(குறுக்கீடு)* ஏன் என்று கேட்டால், காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் அன்றைக்கு அவைக்கு வருவதற்கான வாய்ப்புக்கள் இருந்தும், அந்த வாய்ப்பை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டு, இப்போது வந்து எதையாவது பேசவேண்டும் என்பதற்காகப் பேசினால், அதை எல்லாம் அனுமதித்துக் கொண்டிருக்க முடியாது. எனவேதான் கோட்டைவிட்டீர்கள் என்று சொன்னேன். அதில் ஒன்றும் தவறு இல்லை. *(குறுக்கீடு).* இதில் ஒன்றும் தவறில்லை. It is not unparliamentary. The hon.Member can be proceed. இந்த மானியத்தில் மட்டும் பேசுங்கள்.

பிற்பகல் 5-00

திரு. ஆர். ஈஸ்வரன்: சரி. தெருவிளக்குகளைப் பொறுத்த அளவில் உள்ளாட்சியில் வருகிறது. உள்ளாட்சி மன்றத்தில் இருப்பதை மின்சார வாரியத்திடம் ஒப்படையுங்கள் என்று சொல்கிறேன். இதிலே என்ன தப்பு இருக்கிறது? *(குறுக்கீடு)* சரி சார், ஸ்பீக்கர் சொல்லட்டும், ஸ்பீக்கருக்கு பதில் நீங்கள் ஏன் எழுந்து நின்று சொல்கிறீர்கள்?

[1994 ஏப்ரல் 26

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் ஈஸ்வரன் அவர்கள் சொல்கின்றபோது மின் தடை ஒரு நாளைக்கு 5,6 தடவை ஏற்படுகிறது என்று குறிப்பிட்டுச் சொன்னார். ஆகவேதான் நான் தெளிவாகச் சொன்னேன். தமிழ்நாட்டிலே இந்த நிலைமை இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இல்லை என்று தெளிவாகக் குறிப்பிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது தெரு விளக்குகள் எரிவிப்பதைப் பொறுத்து, மின்சாரத் துறைக்கும் சம்பந்தப்பட்டதுதான். அதிலே உங்களுடைய ஆலோசனையாக மின் வாரியத்திடம் அதைப் பராமரிப்பதற்கு ஒப்படைக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். அதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் தெரு விளக்குகளே எரிவதில்லை என்று சொல்வதற்குத்தான் நான் தெளிவாக எனது பதிலைச் சொன்னேன். நிதி நலிவடைந்த ஊராட்சிகளுக்கு மானியமாக இவ்வளவு கொடுத்திருக்கிறோம். இந்த ஆண்டு இவ்வளவு கொடுக்கப் போகிறார்கள் என்று தெளிவுபடச் சொல்லியிருக்கிறேன். அத்தோடு இந்த விவாதம் முடிந்துவிட்டது. உங்களுடைய ஆலோசனையைப் பரிசீலிப்பது அரசினுடைய விருப்பம். அதை ஏற்றுக்கொள்ள முடியுமா, முடியாதா என்பது வேறு. எனவே வேறு விஷயத்திற்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஈஸ்வரன், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. ஆர். ஈஸ்வரன்: சார், என் கட்சி சார்பில் ஒருவர்தான் பேசிக் கொண்டிருக்கிறேன். எனக்கு 20 நிமிடம் கொடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏற்கெனவே ராமசாமி நிறையப் பேசியிருக்கிறார்.

திரு. ஆர். ஈஸ்வரன்: மதிய உணவுக் கூடங்களுக்கு கிட்டத்தட்ட ரூ.255 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் அந்தக் கட்டிடங்களை எல்லாம் ரொம்பப் பெரியதாகக் கட்டியிருந்தார்கள். ஆனால் இப்போது அதைக் குறைத்திருக்கிறார்கள். ரூ.255 இலட்சம் என்று சொன்னால் 255 கட்டிடங்கள்தான் கட்டமுடியும். ரூ.1 லட்சம் கொடுத்தால்கூட அவ்வளவுதான் வரும். அதிலே நீங்கள் நிதியை அதிகப்படுத்தவேண்டும்.

அதேமாதிரி ஊராட்சி ஒன்றியங்களிலே குளங்கள் இருக்கின்றன. சம்பந்தப்பட்ட குளங்களிலே மீன்பாசி....(குறுக்கீடு)

1994 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்.

* மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு கூடத்திற்கு 70,000 ரூபாய் அளவில்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். அதுமட்டுமல்லாமல் சத்துணவுக் கூடங்கள் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் மட்டுமல்ல. சிடா திட்டத்தில் கூட இன்றைக்கு நிறைய கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் மட்டும் சிடா திட்டத்தின் கீழ் ஏறக்குறைய 275 கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

திரு. ஆர். ஈஸ்வரன்: அதாவது வட மாவட்டங்களில் அதிகப்படியாகக் கட்டுகிறார்கள். தென் மாவட்டங்களில் எங்களுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுங்கள். ஆகவே கட்டுவதற்கு எங்களுக்கு நிதியை ஒதுக்கி கட்டிடங்களை விரிவுபடுத்துங்கள்.

அதேமாதிரி ஊராட்சி ஒன்றியத்தினுடைய குளங்கள் இருக்கின்றன. இந்த ஊராட்சி ஒன்றியத்தினுடைய குளங்களில் மீன்பாசி இருக்கின்றது. இந்த மீன்பாசியைத் தனிப்பட்ட நபர்கள் இன்னும் ஏலம் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் மீன்பாசியைப் பாரம்பரியமாய் வைத்துக்கொண்டு பத்திரங்கள் இருப்பதாகச் சொல்லி, ஊராட்சி ஒன்றியத்தினுடைய ஆணையாளர்கள் இன்னும் ஏலம் விடமுடியவில்லை. ஏனென்றால் அவர்கள் கோர்ட்டிற்குப் போய் விடுகிறார்கள். அந்த மீன்பாசி எல்லாம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வரவு வந்தால், அந்த ஊராட்சி ஒன்றியத்தினுடைய நிதியை வைத்து, பல நல்ல காரியங்களைச் செய்யமுடியும். அமைச்சரவர்கள் அந்தத் தனிப்பட்ட நபருக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி ஊராட்சி ஒன்றியத்தில் கரிவேலந் தோட்டங்கள் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியத்தில் புறம்போக்கு நிலங்கள் இருந்தால் அந்த கரிவேலந் தோட்டங்களுக்கு ஏலம் விட்டு 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏலம் விட்டு அதில் வரக் கூடிய வருமானம் அரசாங்கத்திற்கு 40 சதவீதமும், அந்த ஊராட்சி மன்றங்களுக்கு 60 சதவீதமும் இப்போது வருகின்றன. அதை நலிவடைந்த ஊராட்சி மன்றங்களுக்கு நிதிப் பற்றாக்குறையாக இருக்கக்கூடிய ஊராட்சி மன்றங்களுக்கு நீங்கள் முழுமையாக வரவு வைக்கவேண்டும். ஏனென்றால் அங்கேயிருக்கக் கூடிய தெருவிளக்குகள் போடமுடியவில்லை. சிப்பந்திகளுக்குச் சம்பளம் கொடுக்க

[திரு. ஆர். ஈஸ்வரன்] [1994 ஏப்ரல் 26

முடியவில்லை. அப்பேர்ப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. இங்கே உங்களுடைய அறிக்கையில் சொல்லியிருக்கிறீர்கள். கிட்டத்தட்ட 40 சதவீதத்தில் இருக்கக் கூடிய ஊராட்சி ஒன்றியங்கள் நிதி நிலைமை இல்லாமல் மோசமான நிலைமையில் இருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அப்பேர்ப்பட்ட ஊராட்சி மன்றங்களுக்கு அந்தக் கரிவேலத்தில் வரக் கூடிய நிதியை முழுமையாக வரவு வைத்தால் அந்த ஊராட்சி மன்றங்கள் வேலைகள் செய்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும்.

அதேமாதிரி ஐரோப்பிய நிதியுதவித் திட்டத்தில் ஊராட்சி ஒன்றியத்தினுடைய குளங்கள் 250 ஏக்கரிலிருந்து 500 ஏக்கர் வரை எடுக்கப்படுகின்றன. அதேமாதிரி ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கக் கூடிய சில குளங்கள் பெரிய குளங்கள் இருக்கின்றன. 500 ஏக்கரிலிருந்து 1000 ஏக்கர் வரை இருக்கின்றன. அதுதான் இன்றைக்கு ஒரு கேள்வியிலே வந்தது. கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டதனால் நான் கேட்கமுடியவில்லை. அதை நான் இப்போது சொல்கிறேன். ஒன்றியத்தினுடைய குளங்கள்...(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

பிற்பகல் 5.05

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவல்களை அவைக்கு தந்து கொண்டிருக்கிறார்கள். அந்த குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பில் உள்ள ஏரிகளை மட்டும்தான் நாம் எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆயிரம் ஏக்கர், ஆயிரத்திற்கு மேல் என்றெல்லாம் சொல்வது தவறானது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நூறு ஏக்கருக்கு மேலே இருந்தால் அது பி.டபிள்யூ.டி.யிலே வரும்.

திரு. ஆர். ஈஸ்வரன்: சில ஒன்றியங்களிலே குளங்கள் 500 ஏக்கருக்கு மேலே இருக்கின்றன. 100 ஏக்கரிலிருந்து 500 ஏக்கர் வரை கூட இருக்கின்றன. சில குளங்கள் கூடுதலாகவும் இருக்கின்றன. அப்படி இருந்தால் அதற்கு ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்து ஆயிரம் ஏக்கர் வரைக்கும் எடுங்கள். அது பி.டபிள்யு.டி.யிலே இருக்கிறதோ என்னவோ தெரியவில்லை. தமிழகத்தில் இருக்கக் கூடிய 387 ஊராட்சி ஒன்றியங்களிலே

1994 ஏப்ரல் 26] [திரு. ஆர். ஈஸ்வரன்]

இருக்கக் கூடிய ஜீப்புகள் சில ஒன்றியங்களில் பழுதடைந்து இருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எப்படியாவது அந்த ஜீப்புகளை மாதம் 3 தடவையாவது கொடுக்க வேண்டும். ஒரு ஒன்றியம் இருந்தால் கண்டிப்பாக 3 தினமாவது கொடுக்க வேண்டும். கொடுத்தால்தான் சுற்றுப்பிரயாணம் செய்வதற்கு நன்றாக இருக்கும். சில தொகுதிகளில் 2 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. இதற்கு நீங்கள் ஒரு உத்திரவே போடவேண்டும். இதற்கு முன்னாலே சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிக்குப் பிரயாணம் செய்யும்போது அந்த ஊராட்சி ஒன்றியத்தினுடைய ஜீப்புகள்..(குறுக்கீடு) ஒன்று பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேளுங்கள். அதை ஸ்பீக்கர் சொல்லட்டும். பஞ்சாயத்திலே பேசுவது போல எதிர் எதிராகப் பேசிக் கொண்டிருந்தால் எப்படிச் சரியாக இருக்கும்? (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சின்னசாமி, உட்காருங்கள். ஈஸ்வரன், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. ஆர். ஈஸ்வரன்: ஒன்றியத்திலே இருக்கக் கூடிய ஜீப்புகளை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் மாதம் ஒன்றுக்கு 3 தினங்களுக்குக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் அந்தத் தொகுதியில் சுற்றுப் பிரயாணம் செய்யும்போது வசதியாக இருக்கும். அதற்கு நீங்கள் ஒரு ஆணையே பிறப்பிக்க வேண்டும்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்த வாய்ப்பைப் பொறுத்தவரை அந்த ஒன்றியத்திலே நடைபெறுகின்ற நலத் திட்டப் பணிகளைப் பார்வையிடுவதற்காக அந்த ஜீப்புகளை ஊராட்சிகளில் பயன்படுத்தலாம் என்று இருக்கிறது. தொகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்வதற்கு அல்ல. ஒரு மாதத்திற்கு 3 முறை என்று சொல்வது எவ்வளவு செலவினங்களை ஏற்படுத்தும் என்பதையெல்லாம் நீங்கள் அறிவீர்கள். நீங்கள் எல்லாம் நலிந்த ஊராட்சிகளைப் பற்றிப் பேசுகிறீர்கள். செலவினத்தைப் பற்றிப் பேசுகிறீர்கள். வருமானத்தைப் பெருக்குவது பற்றிப் பேசுகிறீர்கள். இதையெல்லாம் சிந்தித்துப் பார்த்துச் சொல்ல வேண்டும். அந்தப் பணிகளைப் பார்வையிடுவதற்காக ஆய்வு செய்வதற்கு மட்டுமே அதைப் பயன்படுத்திக்கொள்ள தற்போது அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

[1994 ஏப்ரல் 26

திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாதம் 3 தடவை என்று சொன்னால் மத்திய மாநில அரசுகள் கொடுக்கக் கூடிய நலத் திட்டங்களைப் பார்வையிடுவதற்காகத்தான். சுற்றுப் பிரயாணம் என்றால் தொகுதிகளிலே எந்தெந்த வேலைகள் சரிவர நடைபெறுகின்றன என்று பார்வையிடுவதற்காகத்தான் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கேட்டேன். சும்மா சுற்றுவதற்கு எப்படிப் போக முடியும்? (சிரிப்பு) நீங்கள் 50 லிட்டர் டீசல் கொடுக்கிறீர்கள். அது கமிஷனர்களுக்குத்தான் எங்காவது பேமிலி பிளேனிங் என்று காரணம் சொல்லி ஜீப்பை எங்காவது எடுத்துக் கொண்டு போய்விடுகிறார்கள். நீங்கள் கண்டிப்பாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலேயும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாதம் 3 தடவை ஜீப்புகளைக் கொடுக்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்க வேண்டும். ஏனென்றால் நாங்கள் கேட்கும்போது ஒன்று ஜீப் ரிப்பேர் என்று சொல்லி விடுகிறார்கள். இல்லையென்றால் பேமிலி பிளானிங்குக்குப் போயிருக்கிறது என்று சொல்லிவிடுகிறார்கள். பேமிலி பிளான் என்று எல்லாத் துறைகளிலும் உபயோகப்படுத்துகிறார்கள். ஆகையினாலே இதையெல்லாம் மாற்றி தொகுதியிலே நடைபெறுகின்ற பணிகளைப் பார்ப்பதற்கு நிச்சயமாக மாதம் 3 தடவை கொடுப்பதற்காக நீங்கள் ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஒன்றியத்தில் இருக்கின்றன. அங்கே கட்டிடம்தான் இருக்கிறதே ஒழிய வேறு எதுவும் இல்லை. சில இடங்களில் கட்டிடங்கள் கட்டியும் கூட ரொம்ப மோசமான நிலையில் அந்தக் கட்டிடம் இருக்கிறது. அது மாதிரி தற்போது ஊராட்சி ஒன்றியத்திற்கு அலுவலகம் கட்டுதலுக்காக 1994-95-ல் சுமார் 100 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அந்தக் கட்டிடங்கள் சில ஒன்றியத்தில் 75 சதவீதம்தான் கட்டப்பட்டிருக்கிறது. இன்னும் 25 சதவீதம் ஊராட்சி மன்றங்களுக்கு அங்கே கட்டிடம் இல்லாத நிலை இருக்கிறது. பழைய காலியான கட்டிடத்தில் அல்லது வாடகைக் கட்டிடங்கள் இருக்கக் கூடிய சூழ்நிலைதான் இருக்கிறது. அதை முழுமையாக மாற்றி அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் கிராமப் புறத்தில் கட்டிடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்க வேண்டும்.

பிற்பகல் 5-10

எனவே நீங்கள் 100 லட்சம் ஒதுக்கியிருக்கிறீர்கள். அது போதுமானதாக இல்லை. (மணியடிக்கப்பெற்றது) அதுமாதிரி, இந்த மாதிரி கிராமம் ஒன்று ஒரு மாவட்டத்திற்கு ஒரு கிராமம் நீங்கள் ஆரம்பிப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அப்படி ஆரம்பிக்கும்போது அந்தக் கிராமத்திற்கு 3 லட்சம் ரூபாய் நீங்கள் செலவு பண்ணுவதாக உங்களுடைய அறிக்கையிலே

1994 ஏப்ரல் 26] [திரு. ஆர். ஈஸ்வரன்]

இருக்கிறது. எல்லாச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் எல்லாத் திட்டங்களும், அந்தக் கிராமத்தில் எந்தக் குறையும் இல்லாதபடி இருக்க வேண்டும் என்று உங்களுடைய அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. அது மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பெயரால் அதாவது மாண்புமிகு முதல்வர் செல்வி ஜெயலலிதா நகர் என்று பெயர் வைக்க வேண்டும் என்றும் அதற்கு இந்த 3 லட்சம் ரூபாயில் அந்தத் திட்டங்கள் நடைபெற வேண்டும் என்றும் உங்களுடைய அறிக்கையில் சொல்லப்பட்டு இருக்கிறது. இதுவரைக்கும் எந்தெந்த மாவட்டங்களில் அந்தத் திட்டங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன? எந்த வழியில் அந்தத் திட்டங்கள் எடுக்கப்படுகின்றன? ஏனென்றால் நான் ஊராட்சி மன்றத்தில் தலைவராக இருக்கின்ற நேரத்தில் நெல்லை மாவட்டத்தில் என்னுடைய பஞ்சாயத்து அப்போது இருக்கின்ற அரசால் மாதிரி கிராமமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இம்மாதிரியான அறிக்கைகளும் அப்போது விடப்பட்டன. உங்களுக்கு அந்தக் கிராமத்தில் என்ன தேவைகள் என்று கேட்கப்பட்டது. நானும் 2 கோடி, 3 கோடி ரூபாய்க்கு அறிக்கைகள் எல்லாத் துறையிலும் கொடுத்திருந்தேன். கைவிடப்பட்டன. ஆகவே இந்தத் திட்டம் இதுவரையில் எத்தனை மாவட்டங்களில் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது? அந்த முறைகள் எப்படி எடுக்கப்படுகின்றன என்ற விவரத்தை இறுதியாகச் சொன்னால் நலமாக இருக்கும். ஏனென்றால் அமைச்சர் அவர்கள் வேண்டிய ஆளுக்கு தவறான முறையில் ஏதாவது எடுத்துவிடக் கூடாது. ஆகையினால் எங்கள் மாதிரி பின் தங்கிய நல்ல கிராமத்தைத் தேர்வு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஈஸ்வரன், உரையை முடித்துக் கொள்ளுங்கள். 20 நிமிடம் முடிந்துவிட்டது. மீண்டும் இன்னொரு டிமாண்ட் எடுக்க வேண்டியிருக்கிறது.

திரு. ஆர். ஈஸ்வரன்: ஒரே ஒரு நிமிடம். குடிநீர்த் திட்டத்திற்கு 1993-94, 1994-95-க்கு 100 லட்சம் வீதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது போதுமானதாக இல்லை. எங்கெங்கேயெல்லாம் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இந்தமாதிரி பழுதடைந்ததற்கெல்லாம் இந்த நிதியை வைத்துப் பழுதுபார்க்க வேண்டும் என்று இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அநேகமாக 20 சதவீதம் கிராமப் புறங்களில் குடிநீர் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் பழுதடைந்து இருக்கின்றன. இந்த 100 இலட்சம் ரூபாயை வைத்து 1 கோடி ரூபாயை வைத்து 387 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ளவற்றைப் பழுது பார்க்க இந்த நிதி போதுமானதாக இல்லை. என்னுடைய தொகுதியில் நகராட்சிகள் இருக்கின்றன. புளியங்குடியிலே

[திரு. ஆர். ஈஸ்வரன்] [1994 ஏப்ரல் 26

ஒரு நகராட்சி, மூன்று பேரூராட்சி மன்றங்கள் இருக்கின்றன. சிவகிரிக்கு 90 இலட்சம் குடிநீருக்காக ஒதுக்கப்பட்டு அந்தக் கிணறு வேலை மட்டும் நடந்துகொண்டிருக்கிறது. அதேமாதிரி ராய்கிரி பேரூராட்சிக்கு 55 இலட்சம் ஒதுக்கப்பட்டு அங்கு அந்தக் கிணறு மட்டும் தோண்டப்படுகிறது. வாசுதேவநல்லூரில் 85 இலட்சம் ஒதுக்கப்பட்டு அந்தக் கிணறு வேலை மட்டும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இன்னும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, பைப்லைன் இவற்றிற்கு இதுவரைக்கும் நிதி இல்லை என்று சொல்லப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம்கூட நான் நேரடியாக வாசுதேவநல்லூர் பஸ் நிலையம் திறப்பு விழாவிற்கு வரும்போது அவருடைய கவனத்திற்கு இதைச் சொல்லி இருக்கிறேன். அதற்குப் பிறகு நேரடியாகவும் சொல்லியிருக்கிறேன். அதற்குத் தேவையான பைப்லைன், அதற்கு ஏற்றவாறு நிதி உதவியும் கூடுதலாக ஒதுக்கி, வருகின்ற நிதியாண்டுக்கு உட்பட்டாவது இந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேமாதிரி மத்திய–மாநில அரசு கொடுக்கக் கூடிய திட்டங்களைச் சரியாக நடத்தவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஈஸ்வரன், உரையை முடித்துக்கொள்ளுங்கள். அடுத்த முறை பேசுங்கள், இப்போது உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

பிற்பகல் 5-15

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி, குடிநீர் வழங்கல் மற்றும் நகராட்சி நிர்வாகம் ஆகிய மூன்று துறைகளும் ஒரு அரசுக்கு முதுகெலும்பாகப் பணியாற்றுகின்ற துறைகள் என்பதை எடுத்துரைப்பதில் நான் பெருமைகொள்கிறேன். தமிழ் மண்ணின் கோடிக்கணக்கான மக்களுக்கு அன்றாடம் தேவைப்படுகிற அடிப்படை வசதிகளை, அன்றாடப் பிரச்சினைகளைக் கவனிக்கின்ற, பூர்த்தி செய்கின்ற ஒரு துறையாகத்தான் இந்தத் துறை தொடர்ந்து தன் பணிகளில் கவனம் செலுத்துகிறது என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். இந்தியத் துணைக் கண்டம் சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து இத்துறையை நிர்வகித்தவர்கள் அனைவருமே முதியவர்கள்; மிகுந்த அனுபவம் மிக்கவர்கள். ஆனால் ஒரு சாதாரண குடும்பத்து இளைஞனை, படிப்பு அறிவற்ற ஏழை மக்கள் மத்தியில் பிறந்த என்னை உள்ளாட்சித் துறை அமைச்சர் பொறுப்புக்கு தேர்ந்தெடுத்து, தன்னுடைய ஆற்றல்மிகு தலைமையின் கீழ் பணியாற்றுகின்ற வாய்ப்பை எனக்கு நல்கிய மாண்புமிகு முதலமைச்சர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை வணங்கி இந்த மானியக் கோரிக்கைகளுக்கு பதில் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1994 ஏப்ரல் 26] [திரு. டி. எம். செல்வகணபதி]
(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

எந்த எண்ணத்திலே இந்தத் துறையை நிர்வகிக்கின்ற பொறுப்பை எனக்கு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கினார்களோ அந்த எண்ணத்தை நிறைவு செய்கின்ற வகையில் தான் இந்தியத் துணைக் கண்டத்திலேயே தனிப்பெரும் சிறப்பை இந்தத் துறைப் பெறுகின்ற வகையில் இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய மேலான தலைமையின் கீழ், அவர்களுடைய சீரான வழிகாட்டுதலோடு, நல்லாசியோடு, பீடு நடை போட்டுக்கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டியாக வேண்டும்.

மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் இந்த 3 மானியக் கோரிக்கைகள் மீதும் இந்த மாமன்றத்தில் தங்களது மேலான கருத்துக்களை தெரிவித்ததற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிலர் போற்றியிருக்கிறார்கள்; சில பேர் தூற்றியிருக்கிறார்கள்; பலர் நல்ல பல கருத்துக்களை, ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார்கள். ஆனால் ஆதாரம் இல்லாமல் சிலர் வெளியிலே போடும் சத்தம்தான் அதிகமாக இருக்கிறதே தவிர எங்களுடைய இதய தெய்வத்தை வாழ வைக்கின்ற, நம்புகின்ற பொது மக்களிடையே எந்த சத்தமும், குழப்பமும் இல்லை என்று ஆணித்தரமாக எடுத்துரைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு கிராமப்புற மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதிலே தானே நேரடியாக தனிக் கவனம் செலுத்துகின்ற ஒரு முதலமைச்சரைத் தான் இன்றைக்கு தமிழகம் பெற்றுள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த அடிப்படையில்தான் நாடு போற்றும் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் மாவட்ட வாரியாக பொதுமக்களை, குறிப்பாக ஏழை எளிய மக்களை, வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்ற மக்களை, கோட்டையிலே சந்தித்தும், அவர்களுடைய மனுக்களை பெற்றும், லட்சக்கணக்கானவர்களுக்கு தன்னுடைய பொற் கரங்களாலேயே நலப் பணி உதவிகளை நேரடியாக வழங்கியும் சரித்திரம் படைத்து வரும் ஒரே முதலமைச்சர் இந்தியத் துணைக் கண்டத்திலேயே இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, மாவட்டம்தோறும் நேரடியாகச் சென்று, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கோடிக்கணக்கிலே நலத் திட்டப் பணிகளை உருவாக்கி, ஒவ்வொரு மாவட்டத்திலும் பல்லாயிரக்கணக்கான வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்ற மக்களை அரசு செலவிலேயே விழா மேடைக்கு அழைத்து வந்து தன்னுடைய தங்கக் கரங்களாலே வாரி வழங்கிய ஒரே முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஒருவர் தான். ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நாளிலிருந்து இன்று வரை தமிழகத்தினுடைய

[திரு. டி. எம். செல்வகணபதி] [1994 ஏப்ரல் 26

ஈடு இணையற்ற முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய மாவட்ட சுற்றுப் பயணத்திலேயும், இங்கு கோட்டையிலேயும் தமிழகத்தில் இருக்கின்ற மொத்தம் 22 மாவட்டங்களில் நீலகிரி மாவட்டம் நீங்கலாக சுமார் 4 லட்சத்து 46 ஆயிரத்து 175 பயனாளிகளுக்கு ரூபாய் 485 கோடியே 91 லட்சத்து 77 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நலப் பணி உதவிகளை தன்னுடைய நேரடிப் பார்வையிலே வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதில் நான் வகிக்கின்ற இந்த உள்ளாட்சித் துறையில் மட்டும் ஒரு லட்சத்து 37 ஆயிரத்து 845 பயனாளிகளுக்கு வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்ற ஏழை, எளிய மக்களுடைய ஓலைக் குடிசைகளில் விளக்கு ஏற்றியவர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒருவர் தான். அதன் அடிப்படையில் சுமார் 80 கோடியே 13 இலட்சத்து 96 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நலத் திட்ட உதவிகளை மட்டும் நாடு போற்றும் தங்கத் தலைவி இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த நாட்டு மக்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். இந்தியத் துணைக் கண்டத்திலே நான் கேட்கிறேன், எந்த முதலமைச்சர் இதைச் செய்து இருக்கிறார்கள்? இதைக் கேட்கின்றபோது பல்வேறு நிலைகளிலே மக்கள் ஆட்சியை தன்னுடைய ஆதாரமற்ற விமர்சனங்களினால் தூக்கி எறிய முனைப்போடு செயல்பட்டுக்கொண்டிருக்கிற ஜனநாயக விரோத சக்திகளைப் பார்த்துக் கேட்கிறேன். இவ்வளவு நலப் பணிகளை, நேரடியாகக் கோட்டையிலும், மாவட்டத் தலைநகரங்களிலும், மக்களைத் தன்னிடம் அழைத்து, இந்தியத் துணைக் கண்டத்திலே எந்த முதலமைச்சர் செய்திருக்கிறார்கள்? தமிழக வரலாற்றிலே யார் செய்திருக்கிறார்கள்? மனசாட்சியோடு எண்ணிப் பார்க்க வேண்டும். இதற்கும் மேலாக, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான் கிராம மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த வேண்டுமென்ற கனிவான சிந்தையோடு தன்னுடைய அமைச்சர்கள் தொடர்ந்து அடிக்கடி கிராமங்களுக்குச் செல்லவேண்டுமென்ற உத்தரவை வழங்கி இருக்கிறார்கள். மாதத்தில் 15 நாட்கள் வெளியூர் செல்ல வேண்டும்; அப்படி செல்கின்றபொழுது, எங்காவது மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருப்பது தெரிய வந்தால், உடனடியாக அதைத் தீர்த்து வைக்க உரிய நடவடிக்கைகளை அங்கேயே மேற்கொள்ள வேண்டுமென்று எல்லா அமைச்சர்களுக்கும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கட்டளை இட்டிருக்கிறார்கள் என்பதை அன்போடு இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1994 ஏப்ரல் 26] [திரு. டி. எம். செல்வகணபதி]

பிற்பகல் 5-20

மாநிலங்களுடைய உரிமைகள் பாதிக்கப்படும்போதெல்லாம் போர்க்குரல் எழுப்பும் நெஞ்சுறுதியும், துணிவும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது ஒரு பக்கம் என்று சொன்னால், ஏழைகளது வாழ்வில் ஏற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற கனிவான சிந்தனை, ஈரமான இதயம் அவரது இன்னொரு பக்கமாகத் திகழ்கிறது. இதய தெய்வத்தினுடைய கனிவான சிந்தனையில்தான், இன்று முதலமைச்சர் அவர்களுடைய தனிப் பிரிவு கணிப்பொறி மயமாக்கப்பட்டு, சட்டமன்ற உறுப்பினர்கள், குறிப்பாக ஆளுங்கட்சி வரிசையிலே இருக்கிறவர்கள்; எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்கள், மக்களிடமிருந்து தங்களால் பெறப்படுகின்ற கோரிக்கைகளை, மனுக்களை, தன்னுடைய தனிப் பிரிவிலே சமர்ப்பிக்கவேண்டுமென்ற கட்டளையைப் பிறப்பித்து இருக்கிறார்கள் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். அந்த மனுக்கள் இன்றைக்குத் துறை வாரியாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு துறையினுடைய மனுக்களையும் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க, ஒவ்வொரு துறைக்கும் ஒரு பிரிவு அதிகாரியை நியமித்து, 15 நாட்களுக்குள் பதில் பெறவேண்டுமென்ற நிலையை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்திலே உருவாக்கி இருக்கிறார்கள். நான் கேட்கிறேன். எந்த முதல்வரது ஆட்சிக் காலத்தில் இப்படிப்பட்ட சீரிய சிந்தனையோடு மக்கள் பிரச்சினையில் நாட்டம் செலுத்துகின்ற, அக்கறை செலுத்துகின்ற திட்டங்களை வழங்கி இருக்கிறார்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைக்கு, ஊரக வளர்ச்சித் துறை என்று எடுத்துக்கொண்டால், நாடு போற்றும் நல்லாட்சி செய்யும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், ஊரக வளர்ச்சித் துறைக்கு 583 கோடியே 12 லட்ச ரூபாயை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிதி ஒதுக்கீடு கடந்த நிதி ஆண்டைவிட ரூபாய் 132 கோடியே 32 லட்சம் அதிகம் என்பதையும் பெருமையோடு சொல்லிக்கொள்வேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 1993-94-ஆம் ஆண்டின் ஒதுக்கீடாகிய ரூபாய் 450 கோடியே 80 லட்சத்திற்கு மேலாக இந்த ஆண்டு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளது 29.35 விழுக்காடு அதிகரிக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே குறிப்பாக திட்டம் சாராத ரூபாய் 178 கோடியே 70 இலட்சம் ஒதுக்கப்பட்டதிலே, ரூபாய் 110 கோடியே 80 இலட்சம் பல்வேறுபட்ட ஊராட்சி வேலைகளுக்கு வழங்கப்படும் மானியம் என்பதை

[திரு. டி. எம். செல்வகணபதி] [1994 ஏப்ரல் 26

குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஊரக வளர்ச்சித் துறையின் மொத்த ஒதுக்கீடான 583.12 கோடியில் தமிழக அரசின் பங்கு மட்டும் ரூபாய் 320.33 கோடியாகும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் மைய அரசினுடைய பங்கு அதைவிட குறைவாக, மிகவும் குறைவாக ரூபாய் 256 கோடியே 79 லட்சம் என்ற அளவிலேதான் இன்றைக்கு இருந்து வருகிறது என்பதை மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு மொத்தம் தமிழகத்திலே உள்ள 12,612 கிராம ஊராட்சிகளில் 3 கோடியே 68 லட்சம் மக்கள் இருக்கிறார்கள். அந்த மக்களுக்காக 89.128 கிலோ மீட்டர் தூரமுள்ள சாலைகளையும், அதேபோல, 8,45,713 மின் விளக்கு கம்பங்களையும், 26,920 குடிநீர் விசைப் பம்புகளையும் பராமரிக்கின்ற, நிர்வகிக்கின்ற மாபெரும் பொறுப்பை இத்துறை, கிராம மக்களுடைய அடிப்படை வசதிகளை மேற்கொள்கின்ற பணியையும் மேற்கொண்டிருக்கிறது, இந்த மாபெரும் பணியை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 5-25

இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் தமிழக அரசு இருபது அம்சத் திட்டத்தின் கீழ் தனக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற, மைய அரசு இட்டிருக்கின்ற, கொடுக்கப்பட்டிருக்கின்ற இலக்குகள் அனைத்திலும் அதிக பட்சம் விழுக்காடுகளும், அதேபோல 100 சதத்திற்கு மேலாகப் பெற்று இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகம் முதலிடத்தை வகித்துள்ளது என்பதை பெருமையுடன் இந்த மாமன்றத்திற்கு அறிவிக்கக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் இந்த ஆண்டு இந்த இருபது அம்சத் திட்டத்திலே, கிராமத்தில் 100 சதவீதத்திற்கு மேலாகத் தன்னுடைய பணிகளை மேற்கொண்டு, இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதல் மாநிலமாகப் பெருமை பெற்றிருக்கிறது தமிழகம் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டம் ஆகியவற்றில் மைய அரசால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற, நிர்ணயிக்கப்

1994 ஏப்ரல் 26] [திரு. டி. எம். செல்வகணபதி]

பட்டிருக்கின்ற நிதி இலக்கைக் காட்டிலும் கூடுதலான அளவில் செலவினத்திலும் சரி, மனித சக்தி நாட்களை உருவாக்குவதிலும் சரி, தமிழகம் அனைத்திலும் விஞ்சி நின்று சாதனையை ஏற்படுத்தியிருக்கிறது என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு 1991-92 ஆம் ஆண்டு இந்த வேலைவாய்ப்புத் திட்டத்திலே செலவினத்திலே மட்டும் இலக்காக நமக்கு 17,223.66 இலட்சத்தை மைய அரசு கொடுத்திருந்தது. ஆனால், நாம் எட்டிய அந்த இலக்கிற்கு மேலாகச் செய்திருக்கின்ற செலவினம் மட்டும் சுமார் 123 விழுக்காடுகளுக்கு மேலாக 21,120.510 என்ற அளவிலே இன்றைக்கு விஞ்சி நிற்கின்றோம்.

அதேபோலத் தொடர்ந்து 1992-93 ஆம் ஆண்டும் சரி, கடந்த ஆண்டு 1993-94 ஆம் ஆண்டும் சரி, மத்திய அரசு நமக்கு இட்டிருக்கின்ற இலக்கு 21,527.54 இலட்சமாக இருந்திருக்கிறது. ஆனால் நாம் செய்திருக்கின்ற சாதனை அதற்கு மேலாக இன்றைக்கு 26,521.670 இலட்சத்தை நாம் செலவினமாக மேற்கொண்டிருக்கிறோம். இது இந்திய சாதனையை எடுத்துப் பார்க்கின்றபொழுது தமிழகத்தினுடைய சாதனை 123 விழுக்காடாக இருந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு ஒரு சிலர் வெளியிலே ஓலமிடுகிறார்கள். இந்த மன்றத்திலே கூடச் சொன்னார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரை மத்திய அரசு சுட்டிக்காட்டுகின்ற அந்த விதிமுறைகளைக் கடைபிடிப்பதில்லை என்றெல்லாம் குற்றச்சாட்டாக எடுத்துச் சொன்னார்கள். அப்படிப்பட்ட நண்பர்களுக்கு இந்த இலக்கும், தமிழக அரசு செய்திருக்கின்ற சாதனையும் நன்றாகப் புரியும் என்று சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோலத்தான் இன்றைக்கு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்திலேயெல்லாம் மனித சக்தி நாட்களை உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையில் இந்த தேசீய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திலும்கூட மனித உழைப்பு நாட்களில்கூட தமிழகம் மற்ற மாநிலங்களைவிட விஞ்சி நிற்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1991-92 ஆம் ஆண்டிலே 110 சதவீதமும், 1992-93 ஆம் ஆண்டிலே 114 சதவீதமும், கடந்த ஆண்டிலே 103 சதவீதமும் பெற்று இன்றைக்கு நல்லவர்கள் பாராட்டுகின்ற வகையிலே தமிழகம் தலைசிறந்து இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. டி. எம். செல்வகணபதி] [1994 ஏப்ரல் 26

அதேபோல தொகுப்பு வீடுகளைப் பற்றிப் பல்வேறாக மாமன்ற உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். பல குறைபாடுகளைக் கூடச் சுட்டிக் காண்பித்தார்கள். அவர்களுக்கெல்லாம் பதில் கூறுகின்ற வகையிலேதான் இன்றைக்கு நான் சொல்லவில்லை, மத்திய அரசு தன்னுடைய குறிப்பிலே சொல்லியிருக்கிறது. அன்னை இந்திரா நினைவுக் குடியிருப்புகள் கட்டுவதில் இன்றைக்குச் சாதனைச் செம்மல் புரட்சித் தலைவியினுடைய தமிழகம் இந்தியாவிலேயே முதலிடம் வகிப்பதாக மைய அரசு தன்னுடைய அறிக்கையிலே தெளிவுபடுத்தியுள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-30

இன்றைக்கு, மத்தியிலே இருக்கின்ற புரோகிராம் இம்பிளிமென்டேஷன் துறை என்ற துறை - அதிலே கணக்கெடுக்கிறார்கள். மத்தியத் தொகுப்பிலிருந்து 19 செலக்டட் ஐட்டம்ஸ் என்று சொல்லுகின்ற குரூப் ஹவுஸ் கட்டுகின்ற நிலைமை, அதேபோல, டிரைசம் பணிகள், டோக்ரா திட்டங்கள் என்று 19 தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் இருந்து இன்றைக்கு ஒரு மாநிலம் எந்த அளவிலே இருக்கிறது என்பதைத் தேர்வு செய்கிறார்கள். அந்த அடிப்படையிலே அந்த டிபார்ட்மெண்ட் ஆஃப் புரோகிராம் இம்பிளிமென்டேஷன் என்ற துறை தெளிவாக அளித்திருக்கின்ற அறிக்கையை இங்கு நான் வாசிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். "The ranking of the States done on the basis of performance in 19 selected items shows that Tamil Nadu stood first, followed by Gujarat and Maharashtra at the second place," என்று பெருமையோடு சொல்லியிருக்கிறார்கள் என்பதை, இன்றைக்கு மாண்புமிகு காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, 1992-93-ஆம் ஆண்டை எடுத்துக் கொள்ளுங்கள். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, மத்திய அரசு, குடியிருப்புக்காக வழங்கப்பட்டிருக்கிற இலக்கு 7,044 வீடுகள்தான். ஆனால், இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய சாதனை, தமிழகத்தில் இன்றைக்கு, அந்த ஆண்டிலே 30 ஆயிரம் வீடுகள் கட்டி முடித்து, 426 விழுக்காடுகள் என்ற அளவில் சாதனைப் படைத்து, அகில இந்திய அளவிலே தமிழகம் தனிச் சிறப்பை அடைந்து, இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதல் மாநிலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது,

1994 ஏப்ரல் 26] [திரு. டி. எம். செல்வகணபதி]

அகில இந்திய சாதனையை, நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்தாக வேண்டும். அகில இந்திய அளவிலே, இன்றைக்குச் சாதனை 144.36 விழுக்காடுகள் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. நாம் எட்டி இருப்பது, 426 விழுக்காடுகள். ஆனால், மத்திய அரசு – இன்றைக்கு நமக்குப் பல்வேறு விதிமுறைகளைச் சுட்டிக்காட்டுபவர்கள் ஆள்கிற அரசு– இன்றைக்கு எட்டி இருப்பது, 144.36 விழுக்காடுகள் மட்டுமே. 1992-93-இல், அகில இந்திய இலக்கு 1,17,133 வீடுகள். சாதனை என்னவென்று சொன்னால், இந்திய அளவிலே, 1,69,095 வீடுகள் மட்டும்தான் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். 1,69,095 வீடுகளிலே, 1992-93-ஆம் ஆண்டு மட்டும், தமிழகம், 30 ஆயிரம் வீடுகளைக் கட்டிமுடித்து, சாதனை புரிந்திருக்கிறது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சோதனைகளை எல்லாம் சாதனைகளாக ஆக்குகிற இதயதெய்வம் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இந்த ஆண்டு, கிராம மக்களின் மேம்பாட்டிற்காக, முக்கியமான பல்வேறு ஆணைகளை, கட்டளைகளைப் பிறப்பித்திருப்பதை, நான் இந்த மாமன்றத்திற்கு அறிவிப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தவகையில், இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர், அன்பிற்குரிய மாமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. ஈஸ்வரன் அவர்கள் சொல்கிறபோது, கல்விக் கட்டிடங்கள், பள்ளிக் கட்டிடங்கள் சரியாகக் கட்ட முடியவில்லை; இன்றைக்கு நிறைய பள்ளிக் கூடங்கள் கட்ட முடியாமல், ஓலைக் குடிசையிலும், ஓட்டு வீட்டிலும் இருந்து கொண்டிருக்கின்றன என்று சொன்னார்கள். நான் அவருக்குச் சொல்லிக் கொள்வேன். இதையெல்லாம் ஏற்கெனவே மனதில் வைத்துத்தான், இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்கள், இதுவரை கட்டிடம் இன்றி வெயிலிலும், மழையிலும், இட நெருக்கடியிலும் அல்லலுற்று வந்த ஊராட்சி ஒன்றிய மற்றும் ஆதிதிராவிடர் நலத் துறையின் ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குத் தேவைப்படும் 2,431 கட்டிடங்கள் அனைத்தையும் கட்டித் தருவதற்கு ஒரு ஆணையை வழங்கியிருக்கிறார்கள் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையிலே, இந்த ஆண்டு மட்டும், 1,200 நிரந்தரக் கல் கட்டிடங்களை, சுமார் 18 கோடி ரூபாய் செலவில் கட்டித் தரப்படும் என்பதைப் பெருமையோடு, இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு, கிராமத்திலே, சமுதாய நலக் கூடமோ, திருமணக் கூடமோ இல்லாத நிலை இருக்கிறது. கிராம மக்கள் பல மைல்கள் கடந்துவந்து, தங்களுடைய வீட்டு நிகழ்ச்சிகளை, அந்த ஏழை எளிய மக்கள், நகரங்களிலே நடத்துகிற நிலைமை இருக்கிறது. வீடுகளிலே

[திரு. டி. எம். செல்வகணபதி] [1994 ஏப்ரல் 26

இடவசதி இல்லாதவர்கள், அண்டை வீட்டை நாட வேண்டி இருக்கிறது. இதையெல்லாம் எண்ணிப்பார்த்துத்தான், இதயதெய்வம் தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதல்வர், டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், 1994-95-இலே மட்டும் 2,500 சமுதாய நலக் கூடங்களை, ரூ.50 கோடி மதிப்பீட்டிலே கட்டித் தருவதற்காக, ஒவ்வொரு ஒன்றியத்திலேயும் திருமணக் கூடம் கட்டித் தருவதற்காக, ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த சமுதாய நலக் கூடங்கள், சமூகக் காரியங்களுக்காகக் கட்டப்பட இருக்கின்றன என்று சொன்னேன். இதை மனதிலே வைத்துத்தான், நாட்டு மக்கள், குறிப்பாக கிராமத்து மக்கள் நகரங்களிலே வந்து அதிக தொகை கொடுத்து, தங்களுடைய நிகழ்ச்சிகளை நடத்த வேண்டிய கட்டாயச் சூழ்நிலையை மாற்றுகிற வகையிலே, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், ஒவ்வொரு சமுதாயக் கூடமும், ரூ.2 இலட்சம் மதிப்பீட்டிலே இருக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். இந்த நல்ல எண்ணத்தை எண்ணிப் பார்க்கிற வகையிலே, அதைச் சீர்தூக்கிப் பார்க்கிற வகையிலே, அவ்வாறு ஆணையிட்டிருக்கிற அந்தச் சமுதாய நலக் கூடங்களுக்கு, நாங்கள் போற்றி வணங்குகிற இதயதெய்வம் புரட்சித்தலைவி அவர்களுடைய பெயர் சூட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அதேபோல 15 கோடி ரூபாய்க்கு சமூக நலக் கூடங்கள் சுமார் 3 கோடிக்கு மேலாக இருக்கின்ற மக்கள் தொகைக்குப் பயன்படுகின்ற வகையிலே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

பிற்பகல் 5-35

அதேபோல, இன்றைக்கு ஜமீன் ஒழிப்புச் சட்டத்திற்குப் பிறகு 4,720 ஏரிகள் கிராமங்களில் சீர்கெட்டுக் கிடக்கின்றன. ஆனால், சீர்கெட்டு, பாழ்பட்டுக் கிடக்கின்ற ஏரிகளைச் சீர் செய்கின்றவகையிலேதான் பாசனத்திற்கு பயன்படச் செய்ய வேண்டுமென்ற ஒரு தொலைநோக்குப் பார்வையோடு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நடப்பாண்டிலே 728 பாசன ஏரிகளை ரூ.11 கோடி செலவிலே மேம்படுத்த ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்பட்ட சிறப்புமிக்க ஆணைகளின் வாயிலாக இன்றைக்கு தமிழகத்திலே கிராமப்புறங்களிலே 32,488 ஏக்கர்கள் பாசனம்பெற, விவசாயப் பெருங்குடி மக்கள் உணவுப் பொருள்களைப் பெருக்குவதற்கு உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

1994 ஏப்ரல் 26] [திரு. டி. எம். செல்வகணபதி]

அதேபோல, இன்றைக்கு வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம். நமது மாநிலத்திலே சிறப்பாக இந்தப் பணிகள் நடைபெறுகின்றன. இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களை விஞ்சி நிற்கின்றவகையிலே இந்தப் பணி நம்முடைய மாநிலத்திலே நடைபெறுகின்றது என்று சொன்னால் அது மிகையாகாது. அதை வெளிப்படுத்துகின்ற வகையிலேதான் இன்றைக்கு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு, அரசின் முழு நிதியுதவியுடன் 1994-95-ஆம் நிதியாண்டிலே ரூ.8 கோடியே 28 இலட்சம் மதிப்பீட்டில் திருவண்ணாமலை–சம்புவராயர், காமராசர், சிதம்பரனார் மற்றும் திருநெல்வேலி–கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில் விவசாய பருவமற்ற காலத்தில், நிலமற்ற விவசாயக் கூலிகள் வேலைவாய்ப்பினை பெறுகின்ற வகையிலே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது, குறிப்பாக திரு. ஈஸ்வரன் அவர்கள் சொன்னார்கள். சாலைகள் எல்லாம் பராமரிக்க முடியாத நிலையிலே ஜல்லி சாலைகளாக, குண்டும் குழியுமாக காட்சியளிக்கின்றன என்று சொன்னால், இது ஏதோ இந்த ஆட்சிக் காலத்திலே ஏற்பட்டதல்ல. தமிழகத்திலே இன்றைக்கு பஸ் போக்குவரத்து செல்கின்ற கிராமச் சாலைகூட, ஜல்லி போட்டிருக்கின்ற சாலைகளாகவே இருந்து வருவது பல நெடுங்காலமாகவே இருந்து வருகிறது. அப்படி இருக்கின்ற சாலைகளைப் பார்க்கின்றபோது, மழைக்காலங்களில், ஒவ்வொரு மழைக்காலத்திலும் இந்தச் சாலைகள் குண்டும், குழியுமாக காட்சியளிப்பதைதான் தமிழகம் கண்டிருக்கிறது. இந்த அவல நிலையை களைவதற்காக இப்படிப்பட்ட மோசமான நிலையைப் போக்குவதற்காகத்தான் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நடப்பு நிதியாண்டில் இன்றைக்கு விவசாயப் புரட்சி மற்றும் கிராமிய தொழில்மயத்தை எல்லாம் கணக்கிலே எடுத்து, மொத்தமுள்ள 7,650 கிலோ மீட்டர் நீளமுள்ள கிராம மற்றும் ஒன்றிய ஜல்லி சாலைகளில் 2,500 கிலோ மீட்டர் சாலைகளை, ரூ. 25 கோடி செலவில் தார் சாலைகளாக மாற்ற ஆணை வழங்கியிருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் இன்றைக்கு போக்குவரத்துக் கழகங்களிலே பேருந்துகள் பராமரிப்புச் செலவு கணிசமான அளவுக்குக் குறையும் என்ற நல்ல எண்ணத்தோடு மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த உத்தரவை வழங்கியிருக்கிறார்கள் என்று அன்போடு நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. டி. எம். செல்வகணபதி] [1994 ஏப்ரல் 26

அதேபோல, இன்றைக்கு கிராமப்புற இளைஞர்கள், பொதுவாக தமிழகத்திலே இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றப் பிறகுதான், விளையாட்டுத் துறைக்கு என்று ஒரு தனிப் பெரும் சிறப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே இன்றைக்கு சர்வதேச சாதனைகள் எல்லாம் புரிகின்ற வகையிலே, ஸ்டேடியம் கட்டுவதிலிருந்து தமிழகத்திலே இருக்கின்ற இளைஞர்களை விளையாட்டுத் துறையிலே மேம்படுத்துகின்ற நிலை எல்லாம் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு உருவாக்கியிருக்கின்றது. இதை மனதிலே எண்ணித்தான் இன்றைக்கு கிராமப்புற இளைஞர்கள் அவர்களுடைய உடல் வலிமையை வெளிக்கொண்டுவரும் நோக்கத்தோடு அவர்களின் ஆர்வத்தை மேம்படுத்துவதற்காகவும் தமிழகத்திலே இருக்கின்ற 387 ஊராட்சி ஒன்றியங்களிலே, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு விளையாட்டு வளாகம் என்ற அடிப்படையில் அரும்பெரும் திட்டத்தை விளையாட்டிற்கு என்று, கிராம மக்களுக்கு என்று திட்டத்தை, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டே அறிமுகப்படுத்த உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பணியைப் பொறுத்தமட்டில் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ரூ. 19 கோடியே 2 இலட்சம் மதிப்பீட்டிலே இன்றைக்கு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இந்த விளையாட்டு வளாகத்தை ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் வாயிலாக செயல்படுத்த வேண்டுமென்று ஆணை வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, நடப்பாண்டிலே 11 மாவட்டங்களிலே ரூ. 44 இலட்சம் மொத்தச் செலவில் மகளிர்மீது தனிப் பெரும் அக்கறை கொண்டிருக்கிற இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஊராட்சிப் புறம்போக்கு நிலங்களில் பழ வகைகள் மற்றும் தென்னங் கன்றுகளை உருவாக்குகின்ற, தென்னம் பிள்ளைகள், மரங்களை எல்லாம் உருவாக்குகின்ற நிகழ்ச்சியை இந்த மகளிருக்கு என்று தனியாக, முழுவதும் பெண்களே அடங்கிய மொத்தம் 10 பேர் கொண்ட குழுவிடம் 5 ஏக்கர் நிலத்தை ஒப்படைத்து காய்கறி, கீரைகள் மற்றும் கிராம மக்களுக்குப் பயன்படுகின்ற உணவுப் பொருட்கள் மற்றும் இந்த மரங்களில் இருந்து வருகிற விளைச்சலை எல்லாம் வைத்து அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மகளிர் குழு மர வளர்ப்புத் திட்டத்தைத் தமிழகத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு நான்

1994 ஏப்ரல் 26] [திரு. டி. எம். செல்வகணபதி]

சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் கிராம மகளிர் மீது என்றென்றைக்கும் அக்கறை கொண்டுள்ள நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கிராம மகளிர் தங்களை சமூக சகவாழ்வில் ஈடுபடுத்திக்கொள்வதற்கும், வேலைவாய்ப்பைப் பெருக்கிக் கொள்வதற்கும் குடும்ப வருவாயைப் பெருக்குவதற்கும் இந்த உன்னதத் திட்டத்தை அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள் என்பதை பேரவைக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பிற்பகல் 5-40

அதேபோல் கிராம மகளிருக்கென தனியாக மரப்பட்டா வழங்குகிற திட்டத்தையும் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு அறிவித்து இருக்கிறார்கள். ஏழ்மை நிலையில் உள்ள கிராம மகளிர் வேலைவாய்ப்பைப் பெற்று தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்கிற வகையில் தமிழகத்தினுடைய தாயுள்ளம் படைத்த முதல்வர் அவர்கள் 1994--95 ஆம் நிதியாண்டில் மொத்தம் ரூபாய் 1,68,00,000 செலவில் ஊராட்சிகளின் குளம், குட்டை புறம்போக்கு நிலங்களில் மரப்பட்டாக்களை மகளிருக்கு வழங்குகிற திட்டத்தை அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் வாயிலாக இந்த நிலங்களைப் பெற இருக்கின்ற மகளிர் பயன்தரக்கூடிய மரங்களை வளர்த்து இந்தத் திட்டத்தின் வாயிலாகப் பயனடையலாம் என்ற வகையில் இந்த உன்னதத் திட்டத்தை புரட்சித் தலைவி இந்த நாட்டுக்குக் கொடுத்து இருக்கிறார்கள். இந்தத் திட்டத்திலே கிடைக்கின்ற வருவாயில் மகளிர் 10 சதவீதத் தொகையை ஊராட்சிக்குச் செலுத்தியதுபோக மீதி 90 விழுக்காட்டை அவர்களே அனுபவித்துக்கொள்ளலாம் என்ற உத்தரவை இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கி இருக்கிறார்கள்.

அதுபோல் இன்றைக்குக் கிராமத்தில் இன்னொரு பெரும் பிரச்சினையாக இருந்துவருவது தமிழகத்தில் குடிநீர்ப் பிரச்சினை. இன்றைக்கு தமிழகத்தினுடைய குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குவதுதான் தன்னுடைய தலையான கடமையாகக் கொண்டுள்ளார் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள். கிராமங்களில் பயனற்ற நிலையில் சுமார் 42,90,000 மீட்டர் நீளம் உள்ள குடிநீர்க் குழாய்கள் பழுதடைந்திருக்கின்றன, அப்படிப்பட்ட குழாய்களைச் செப்பனிடுவதற்குரிய வகையில் உடனடியாகக் குழாய்களை எல்லாம் செப்பனிடுவதற்கு, கிராம மக்களுக்கு முறையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவேண்டும் என்ற உன்னத எண்ணத்தோடு 7,34,54,000 ரூபாயை இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கி பழுதடைந்த நிலையில் இருக்கின்ற, பயனற்ற நிலையில் இருக்கிற குடிநீர்க்

[திரு. டி. எம். செல்வகணபதி] [1994 ஏப்ரல் 26

குழாய்களை மாற்றுவதற்கு ஆணை பிறப்பித்து இருக்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு ஒவ்வொரு ஊராட்சியிலும் மின்னிறைப்பான் இருக்கிறது என்று சொன்னால், அந்த மின்னிறைப்பான்கள் பழுதடைந்துவிட்டால், செயல் இழந்துவிட்டால் அதைச் செப்பனிடுகிற வரையில் அந்த மக்களுக்கு குடிநீர் கிடைக்காது. அந்த மக்களுக்கு வாரக் கணக்கில், மாதக் கணக்கில், மின்சார மோட்டார் பழுதடைந்துவிட்டால் குடிநீர் வழங்க முடியாத சூழ்நிலை தமிழகத்தில் இருந்திருக்கிறது. இதை எல்லாம் எண்ணிப்பார்த்து இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், 12612 ஊராட்சிகளில் இருக்கின்ற சுமார் 26,462 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டபோதிலும், அந்த மின்னிறைப்பான்கள் பழுதடைந்துபோகிற நேரத்தில் தொடர்ந்து நீரை வழங்குவதற்காக 10 சதவீதம் உபரி மின்னிறைப்பான்கள் எப்போதும் தயார் நிலையில் வைத்திருப்பதற்கு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இதில் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்றால் கோடையின் கடுமையை மனதில் வைத்து இன்றைக்கு 1,258 மின்னிறைப்பான்களை உடனடியாக வாங்கி வழங்கிட வேண்டுமென்று ரூபாய் 2 கோடியை இந்தச் செயலுக்காக, இந்தப் பணிக்காக இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு அதே நிலைமைதான் சேலம், பெரியார், கோவை, தர்மபுரி, காமராஜர் மற்றும் இராமநாதபுரம் போன்ற வறட்சிமிக்க, குறை மழை கொண்டிருக்கின்ற மாவட்டங்களில் உள்ளது. குடிநீர் கோடையில் ஆழமான பகுதிக்குச் சென்றுவிடுகிற காரணத்தால் அங்கேயுள்ள மின்னிறைப்பான்களால் நீரை வெளியே கொண்டுவர முடியாத நிலைமை இருக்கிறது. அதைக் களைகிற வகையிலே இன்றைக்கு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அதிக அழுத்த மின்னிறைப்பான்களை அதாவது கம்ப்ரஸ்ஸர்களை வாங்கி வைக்கிற நிலையில் சுமார் 14 கோடி ரூபாய் செலவில் இந்த கம்ப்ரஸ்ஸர்களை வாங்கி வழங்கிட வேண்டுமென்ற கருத்துருவை, ஆணையை வழங்கி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

1994 ஏப்ரல் 26] [திரு. டி. எம். செல்வகணபதி]

பிற்பகல் 5-45

அதேபோல கிராம மக்களுடைய சுகாதாரம் என்று வருகின்றபோது குடிநீர் மூலமாக பல்வேறு வியாதிகள் மக்களுக்கு பரவுகின்றன, இதையெல்லாம் போக்குகின்ற வகையிலே இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தப் பழைய முறையை மாற்றி, அந்த நீரிலே குளோரின் செலுத்தப்பட்ட நல்ல நீராக வழங்கவேண்டுமென்று, குளோரின் கலந்த நீராக வழங்க வேண்டுமென்ற நல்ல அடிப்படையில் அதைச் செம்மைப்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில், கிராமங்களிலே இருக்கின்ற 26,462 மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளுக்கும் தானியங்கி குளோரின் ஏற்றிகள் பொருத்தப்பட வேண்டும் என்ற ஒரு ஆணையை இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கி இருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி). இப்படி பழைய முறையிலே வழங்குகின்ற போது ஏற்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளை போக்கி இந்த ஆட்டோமெடிக் குளோரின் ஏற்றும் ஒரு கருவியைப் பொருத்துகின்றபோது முறையாக மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு திரு. ஈஸ்வரன், சட்டப் பேரவை உறுப்பினர் பேசுகிறபோது இன்றைக்கு மின்சாரத் துறையிலே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன என்று தெரிவித்துள்ளார்கள். தெரு விளக்குகள் எரியவில்லை என்று சொன்னார்கள். அப்போதுகூட என்னுடைய பதிலில் சொல்கிறபோது இந்த நிலையைப் போக்குகின்ற வகையிலே, நலிவடைந்த ஊராட்சிகளை கைத்தூக்கி விடுகின்ற வகையில், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆண்டு ஒன்றுக்கு குறிப்பாக ரூ.2,25,00,000 இந்த மின் சாதனங்களை வாங்குவதற்காக வழங்கி இருந்தார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளிலே மட்டும் மானியமாக 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் இந்த அரசு மானியமாக நலிவடைந்த ஊராட்சிகளுக்கு வழங்கியிருக்கிறார்கள். மேலும் இதை செம்மைப்படுத்தும் வகையிலே, இன்னும் நலிவடைந்த ஊராட்சிகளாக இருக்கின்றவைகளை எல்லாம் சீர்செய்கின்ற வகையிலேதான், இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ரூபாய் 3 கோடியை இந்த ஆண்டிலே இருந்து மானியமாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). இந்த மின் சாதனங்களை வாங்குவதற்காக 2.25 கோடியிலிருந்து அந்தத் தொகை 3 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதேபோல இன்றைக்கு கிராமங்களிலே தெருவிளக்குளைப் பராமரிப்பதிலே ஒரு பெரும் பிரச்சினை இருக்கிறது. நலிவடைந்த ஊராட்சிகள் மின் கட்டணத்தைக்கூட செலுத்த முடியாத நிலை இருந்து வருகிறது. அப்படி அவைகள் மின் கட்டணத்தைச் செலுத்த

[திரு. டி. எம். செல்வகணபதி] [1994 ஏப்ரல் 26

முடியாத பட்சத்தில் மின்சாரத்திற்கான செலவினங்கள் அமையும்போது மின்வாரியம் அதை ஈடுகட்ட முடியாத சூழ்நிலை இருக்கிறது. இந்தச் சமயத்திலே கிராமங்கள் இருள் சூழ்கின்ற நிலைமை கூட பல்வேறு இடங்களில் உருவாகின்றன. இதை எல்லாம் மனதிலே வைத்துத்தான் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு நலிவடைந்த ஊராட்சிகள் வாயிலாக இருக்கின்ற மின் கட்டண நிலுவை சுமார் 4 கோடியே 8 லட்சம் ரூபாயை அரசே ஏற்கும் என்று உத்தரவு வழங்கி இருளற்ற கிராமங்களை உருவாக்குகின்ற சீரிய எண்ணத்தோடு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மெத்தப் பணிவுடன் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். இந்த மன்றத்திலே தொலைக்காட்சிப் பெட்டியைப் பற்றி பேசினார்கள். இன்றைக்கு சுமார் 12,612 ஊராட்சிகள் தமிழகத்தில் இருக்கின்றன. அதிலே இந்த ஆண்டு வரை சுமார் 8,331 ஊராட்சிகளுக்கு இந்தத் தொலைகாட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மீதம் இருக்கின்ற 4,281 ஊராட்சிகளுக்கும் இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கவேண்டுமென்றும் அதற்கு உண்டான 5 கோடியே 16 இலட்சம் நிதியை ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டுமெனவும் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள் என்பதை மெத்தப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்திலே இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாத ஊராட்சிகளே இல்லை என்ற நிலையை இந்த ஆண்டு உருவாக்க இருக்கிறோம் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று கடந்த ஆட்சி காலத்திலே கிராமங்களிலே பெண்கள் வசதியை முன்னிட்டு பல்வேறு இடங்களில் கிராமக் கழிப்பிடங்களைக் கட்டி இருக்கிறார்கள். அந்த வகையில் இன்றைக்கு கிராமப்புறங்களிலே 11,036 கிராமக் கழிப்பிடங்கள் இருக்கின்றன. ஆனால் நீர்வரத்து இல்லாமல் பழுதடைந்த நிலையில் கேட்பாரற்று கிடக்கின்ற நிலைமைதான் இன்றைக்கு நாம் கிராமங்களில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த நிலையை மாற்ற வேண்டும், அங்கு இருக்கின்ற மகளிருக்கு நல்ல நிலையை உருவாக்கித்தர வேண்டும் என்கிற நிலையிலேதான், அதேபோல கிராமச் சுகாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற நிலையிலே, அவைகளை மாற்ற, இப்படி ஒதுக்கப்பட்டிருக்கின்ற, பராமரிக்கப்படாமல் விடப்பட்டிருக்கின்ற, நீர் ஆதாரம் இல்லாமல் இருக்கின்ற 11,036 கிராமக் கழிப்பிடங்களுக்கு உடனடியாக நீர் வசதி செய்து தரவேண்டுமென்று உன்னத ஆணையை

1994 ஏப்ரல் 26] [திரு. டி. எம். செல்வகணபதி]

இன்றைக்கு வழங்கியிருக்கிறார்கள் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-50

இன்றைக்கு இந்த மாமன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் சத்துணவு மையங்களைப் பற்றி பேசினார்கள். தமிழகத்திலே இன்று சுமார் 36,928 சத்துணவு மையங்கள் இருக்கின்றன. இதிலே 14,928 சிறார் மையங்களிலே மட்டுமே கழிப்பிடம் மற்றும் குடிநீர் வசதி இருந்து வருகிறது. நீண்டகால எண்ணத்தோடு, தொலை நோக்குப் பார்வையோடு இதை மாற்ற வேண்டும் என்ற எண்ணத்திலே தான் அந்த மையங்களிலே இருக்கின்ற குழந்தைகளுக்கு நீர் சார்ந்த நோய்கள் வரக்கூடாது என்பதற்காக ரூ.44 கோடி நிதி ஒதுக்கத்திலே ஆண்டு ஒன்றுக்கு 440 மையங்கள் வீதம் ரூ.8 கோடியே 80 லட்சம் செலவில் இவ்வசதிகளை சத்துணவு மையங்களுக்கு உருவாக்கவேண்டும் என்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி கழிப்பிடம் மற்றும் நீர் வசதி இல்லாத சத்துணவு மையங்களை மாற்றி அமைப்பதற்கு ஏற்கனவே இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் 15 அம்ச குழந்தைகள் நலத் திட்டத்தின் வாயிலாக இந்தத் திட்டம் 10 அம்ச திட்டமாக இருந்து வருகிறது. இந்தத் திட்டத்தை செம்மைப்படுத்துவதை இன்று இருக்கின்ற உள்ளாட்சித் துறையே ஏற்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு கால்நடை மருந்தகம் என்பது ஒரு பெரிய பிரச்சினையாக இருந்துவருகிறது. அதை எண்ணிப்பார்த்து தான், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தையும் ஒட்டி 387 ஊராட்சி ஒன்றியங்களிலே 387 நிரந்தர கால்நடை மருந்தகக் கட்டடம் கட்டித் தரும் திட்டத்தை ரூபாய் 25 கோடி மதிப்பீட்டிலே நிறைவேற்ற தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்திற்கு வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோலத்தான் இன்றைக்கு பேரூராட்சிகள். தமிழகத்திலே இருக்கின்ற பேரூராட்சிகள் மின்சார உபயோகக் கட்டணமாக சுமார் ஒரு கோடியே அறுபது லட்சம் ரூபாயை மின் வாரியத்திற்குச் செலுத்திக்கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட அதிகத் தொகையை கட்டுப்படுத்துகின்ற வகையிலே, மின்சாரச் சிக்கனத்தைக் கருத்திலே

[திரு. டி. எம். செல்வகணபதி] [1994 ஏப்ரல் 26

கொண்டு, தெரு விளக்குகளை உரிய நேரத்திலே எரிய வைக்கவும், தேவையில்லாத நேரத்தில் நிறுத்தி வைக்கவும் புதியதாக தானாக இயங்கக்கூடிய சுவிட்சுகளை அமைக்க நடவடிக்கை எடுக்கச் சொல்லி மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த அடிப்படையிலே அதிகச் செலவினம் மின்சார செலவினத்திற்காக செலுத்தப்பட்டது குறைக்கப்பட்டு இந்த தானியங்கி, ஆட்டோமேடிக் சுவிட்ச் பொருத்துகின்றபோது மின்சாரக் கட்டணம் குறையும் வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு பேரூராட்சியிலே துப்புரவுப் பணி என்று சொன்னாலே பழைய நிலையிலே காளை மாட்டு வண்டிகளை வைத்து அங்கே இருக்கின்ற தெருக்களை சுத்தம் செய்கின்ற நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அதையெல்லாம் போக்குகின்ற வகையிலே இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்திலே இருக்கின்ற 645 பேரூராட்சிகளிலே சாதாரண அளவிலே கூட ஒரு பவர் டிரில்லர் வாங்கி பயன்படுத்தவேண்டும் துப்புரவுப் பணிக்கு என்று ஆணையிட்டார்கள்.

அதேபோல பேரூராட்சிகளிலே கொசுத் தொல்லைகளைப் போக்குவதற்காக பல்வேறு முறைகளை, பழைய முறைகளை கையாண்டுக்கொண்டிருக்கிறோம். அதையெல்லாம் மாற்றுகின்ற வகையிலே இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பாக் ஜெனரேட்டிங் மெஷின்ஸ் வாங்கப்படவேண்டும் என்று, அந்த பாக் ஜெனரேட்டிங் மெஷின்ஸ் என்று சொல்லக்கூடிய புதிய விசைக் கருவிகளை பேரூராட்சியிலே இந்த ஆண்டு முதல் அறிமுகம் செய்யவேண்டும் என்ற உத்தரவை வழங்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மெரினா கடற்கரைக்குச் செல்கின்றபோது பார்க்கிறார்கள். அந்த அளவுக்கு அழகாக சிறுவர்களுக்காக குழந்தைகள் உடல் வலுவை, அவர்களுடைய நலத்தைப் பேணுகின்ற வகையிலே ஒரு விளையாட்டு மையம் அங்கு அமைக்கப்பட்டிருக்கின்றது. அதேபோன்று, சென்னை மெரினா கடற்கரையில் அமைக்கப்பட்டிருக்கின்ற அந்த விளையாட்டு மையத்தைப் போன்று, அரசு நிதி உதவியுடன் இந்த ஆண்டிலே திருச்செந்தூர், கோத்தகிரி, கன்னியாகுமரி, வால்பாறை, இராமேஸ்வரம் ஆகிய பேரூராட்சி மற்றும் நகரியங்களிலே இந்த விளையாட்டு மையத்தை உருவாக்கித்

1994 ஏப்ரல் 26] [திரு. டி. எம். செல்வகணபதி]

தரவேண்டும் என்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.

ஊரக வளர்ச்சி மானியக் கோரிக்கையிலே 78 வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கொடுத்திருக்கிறார்கள். அவற்றில் ஏழு பேர்கள் கொள்கை பற்றி விவாதிக்க வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். இந்த மானியக் கோரிக்கையைப் பற்றி கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அவற்றிலே முழு விவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக்கொண்டு, 30 சட்டமன்ற உறுப்பினர்கள், சாலை, இணைப்புச் சாலை, மயான சாலை செப்பனிடுதல், புதிய சாலை வசதி ஏற்படுத்துதல், வகுப்பறைகள் கட்டுதல், கூடுதல் பள்ளிக்கூடங்கள் கட்டுதல், நவீன கழிப்பிடங்கள் கட்டுதல், சமுதாயக் கூடங்கள், திருமண மண்டபம் கட்டுதல், நிழற்குடை போன்ற வசதிகள், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் செய்வது குறித்து வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்து இருக்கிறார்கள்.

பிற்பகல் 5-55

வெட்டுத் தீர்மானங்களைப் பொறுத்தவரை சட்டமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்ட கோரிக்கைகள் குறித்து பரிசீலனை செய்து தேவை அடிப்படையில் நிதிநிலைமையைப் பொறுத்தும் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்களில் சொல்லப்பட்ட கருத்துக்களின் அடிப்படையிலும் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு குடிநீர் வழங்கல் துறை தமிழக அரசிலே ஒரு முன்னோடித் துறையாக விளங்கிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி தலைமையிலான இந்த அரசு குடிநீர்ப் பணிகளை தனது முதற் பொறுப்பாகவும், முக்கிய பொறுப்பாகவும் ஏற்று நடத்திக்கொண்டிருக்கிறது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். அந்தத் துறையில் ஒரு புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில்தான் இந்த அரசு முனைப்போடு பல்வேறு திட்டங்களை இன்றைக்கு தமிழகத்திலே செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்றப் பிறகு தான் குடிநீர்ப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்பட வேண்டுமென்ற வகையில் உடனடியாக இன்றைக்குச் செய்ய வேண்டிய நிவாரணப் பணிகளை அவர்கள் செய்கின்ற நிலையிலே தான் பல்வேறு திட்டங்களை வழங்கியிருக்கிறார்கள். இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றப் பிறகு ஒரு நல்ல

[திரு. டி. எம். செல்வகணபதி] [1994 ஏப்ரல் 26

மகிழ்ச்சிகரமான செய்தியை நான் இந்தப் பேரவைக்கு அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய சீரான வழிகாட்டுதலாலே இன்று மத்திய அரசினுடைய 20 அம்சத் திட்டத்தின் கீழ் கிராமக் குடிநீர் வழங்கும் பணிகளில் இந்தியத் துணைக் கண்டத்திலே இந்த ஆண்டு தமிழகம் தலைசிறந்த மாநிலமாக முதல் இடத்தை கைப்பற்றியுள்ளது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை பெரு மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். 1993-94 ஆம் ஆண்டில் 3500 கிராமக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் பணியை இலக்காக ஏற்று 3500 குடியிருப்புகளுக்கு மேலாக இன்றைக்கு 3751 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்து கொடுத்து 107 விழுக்காடுகளைப் பெற்று, இந்த சாதனைச் செம்மலினுடைய அரசு சாதனைப் புரிந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். இன்றைக்கு தமிழகத்திலே பல்வேறு திட்டங்களை, குடிநீர்த் திட்டங்களை வழங்கியிருந்தாலும்கூட, மைல்கள் பல கடந்து, குடம் சுமந்த தலையோடு குடிநீர் தேடிச் செல்லும் பெண்களின் அவல நிலையில் மாற்றம் காண வேண்டும் என்பதுதான் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் எங்களுக்கு எடுத்துரைக்கின்ற கட்டளையாகும். அந்தக் கட்டளையை ஏற்று இதுநாள்வரையிலே தமிழகத்திலே குடிநீர் வசதி பெறாத அனைத்து கிராமக் குடியிருப்புகளுக்கும் குறைந்தபட்சம் ஒரு நீர் ஆதாரமாவது அமைத்துக் கொடுக்க வேண்டுமென்ற சீரிய திட்டத்தை புரட்சித் தலைவி அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இன்றைக்கு அத்தனை கிராம குடியிருப்புகளும் குடிநீர் வசதி பெற்ற கிராம குடியிருப்புகளாக இந்த ஆண்டு உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்தத் திட்டத்தின் வாயிலாக தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வசிக்கும் 472 குடியிருப்புகள் பயனடைய இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, இன்றைக்கு குடிநீர் வசதியே இல்லாத கிராமங்கள், பகுதி அளவு பெற்று இருக்கின்ற கிராமங்கள், முழுமையாக குடிநீர் வசதி பெற்றிருக்கின்ற கிராமங்கள் என்று இன்று 3 வகையாக குடிநீர்ப் பிரச்சினை பிரித்து வைக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே, குடிநீர் வசதி அறவே இல்லாத கிராமங்களுக்கு நான் ஏற்கெனவே இந்தத் திட்டத்தை புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்ததைச் சொன்னேன். அதேபோல பல்வேறு இடங்களிலே பகுதி அளவு கிடைக்கப்பெற்றிருக்கின்ற கிராமங்கள் இருக்கின்றன. இதையெல்லாம் ஒட்டுமொத்தமாக சேர்த்து தமிழகத்திலே நடப்பு நிதியாண்டில் 3 ஆயிரம் கிராம குடியிருப்புகளில் 79 கோடி ரூபாய்

1994 ஏப்ரல் 26] [திரு. டி. எம். செல்வகணபதி]

செலவிலே குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையை வழங்கி இருக்கிறார்கள் என்பதை மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 3 ஆயிரம் குடியிருப்புகளிலே தாழ்த்தப்பட்ட மற்றும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் செல்லத்துரை, உங்கள் இடத்திற்கு வந்தால் நல்லது. ஏன் ராஜுவிடத்திலே போய் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்? இத்தனை பேரிலே உங்களுக்கு கே.பி. ராஜு தான் கிடைத்தாரா? (சிரிப்பு) மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 3 ஆயிரம் குடியிருப்புகளிலே ஆயிரம் குடியிருப்புகள் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்கள் வசிக்கின்ற குடியிருப்புகளாகும். இதற்கு மட்டும் ஆகின்ற செலவினம் இந்த ஆண்டு 19 கோடியே 75 ரூபாய் என்று சொல்லி, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் எந்த அளவிற்கு தாழ்த்தப்பட்ட மக்களின் மீது பொறுப்புணர்வும், கடமை உணர்வும் கொண்டிருக்கிறார்கள், பாசத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல இன்றைக்கு புதிய திட்டங்களைத் தொடங்குகின்றபொழுது, ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட திட்டங்களிலே, முறையான செயல்பாட்டில் அக்கறை செலுத்துகின்ற வகையிலே தான் இந்த மாமன்றத்தினுடைய பல்வேறு உறுப்பினர்கள் பல சமயங்களிலே கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டு, தமிழகத்தின் பல பகுதிகளில் பயனற்ற நிலையில் இருக்கும் சுமார் 2145 மேல் நிலைத் தொட்டிகளை மீண்டும் பயனுக்குக் கொண்டுவர வேண்டுமென்று இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள்.

பிற்பகல் 6-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, வனத் துறை அமைச்சர் அவர்களுக்கு 5 அல்லது 5.30 மணிக்கு விவாதத்திற்குப் பேரவை தயாராக இருக்குமென்று உறுதி அளித்திருந்தேன். எனவே கொஞ்சம் வேகமாக முடிக்கலாம்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. விரைவிலே முடித்துக்கொள்கிறேன். இந்த நடப்பு

[திரு. டி. எம். செல்வகணபதி] [1994 ஏப்ரல் 26

ஆண்டுக்கு மட்டும் இந்தத் திட்டத்திற்காக 4 கோடி ரூபாயை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராம மற்றும் நகரப் பேரூராட்சிகளில் மட்டும் மொத்தம் 51 பேரூராட்சிகளில் குடிநீர்த் திட்டப் பணிகளை முடிக்கச் சொல்லி ஆணை வழங்கியிருக்கிறார்கள். நடப்பு நிதி ஆண்டில் 64 திட்டங்கள் ஏற்கெனவே இருக்கிற திட்டங்களைத் தொடரவும், அவற்றில் 33 திட்டங்களை முடித்து வைப்பதற்கும், நகரப் பேரூராட்சிகளில் 50 நகரங்களில் நடைபெறுகின்ற திட்டங்களைத் தொடரவும், 18 நகரங்களில் பணிகளை முடித்து பயனுக்குக் கொண்டுவருகிற வகையிலும் 42 கோடியே 50 லட்சம் ரூபாயை இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கி இருக்கிறார்கள் என்பதை மெத்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

20 ஆயிரம் மக்கள் தொகைக்குக் குறைவாக உள்ள சிறிய நகரங்களுக்கு குடிநீர் வழங்கும் பணியை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே தமிழகத்திலே இருக்கிற 97 நகரங்களுக்கு குடிநீர் வசதி அமைத்துத் தருவதற்கு 54 கோடி ரூபாய் மதிப்பில் ஒரு திட்டத்தை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள். இந்தத் திட்டம் மத்திய அரசினுடைய விரைவுபடுத்தப்பட்ட நகர குடிநீர்த் திட்டத்தின்கீழ் வருகிறது. அந்த அடிப்படையில் முதல் கட்டமாக 16 குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்ற 72 இலட்சத்து 8 ஆயிரத்திற்கு அனுமதி அளித்து தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு தமிழக மக்களின்பால் அன்பும், ஆதரவும், பரிவும் இதயதெய்வம் அவர்கள் எந்த அளவுக்கு வைத்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லாலும் சொல்ல முடியாது, எழுத்திலும் அது அடங்காது. அந்த அடிப்படையிலே இன்றைக்கு சான்றாக விளங்குகிற தங்க நிகர் தலைவியின் ஆணையின்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஒரு திட்டத்தைத் தீட்டி இருக்கிறது. தமிழகத்தில் அமைந்துள்ள பல கிராமப் பகுதிகளில் கோடை மாதங்களில் குடிநீர் ஆதாரம் வற்றிப் போகும் நிலைமைதான் வருகிறது. கோடைக் காலத்தில் பல்வேறு இடங்களிலே குடிநீர் வற்றி விடுகிறது. இத்தகைய பகுதிகளுக்கு சீரிய முறையில் நிரந்தரக் குடிநீர் வசதி அமைத்துத் தரவேண்டுமென்ற கட்டளையின்பேரில் தமிழ்நாடு குடிநீர்

1994 ஏப்ரல் 26] [திரு. டி. எம். செல்வகணபதி]

வடிகால் வாரியம் 9000 குடியிருப்புகளில் வாழும் 40 இலட்சம் மக்கள் பயன் பெறுகின்ற வகையிலே ரூபாய் 530 கோடி மதிப்பீட்டிலே ஒரு திட்டத்தைத் தயாரித்து, உலக வங்கியினுடைய உதவியைப் பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறது. இதுகுறித்து மத்திய அரசுடன் நமது அரசு தொடர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் இராமசாமி அவர்கள் பேசுகிறபோது, ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஒரு சொட்டு குடிநீர்கூட இல்லாத காரணத்தால் ஒரு குழந்தை இறந்துவிட்டது என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட நிகழ்வு இன்றைக்கு இல்லை என்றாலும்கூட பல்வேறு நிலைகளிலே சிவகங்கை மாவட்டத்திலே ராஜகம்பீரம் என்ற இடத்திலே இருந்து ஒரு பெரிய குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்தி, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு குடிநீர் வழங்கிக் கொண்டிருக்கிறோம். இந்த மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலே குடிநீர் வடிகால் வாரியம் திட்டங்களை கண்ணும் கருத்துமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. இருந்தாலும்கூட இராமநாதபுரம் மாவட்டத்தில் குடிநீர் இன்றைக்கு ஒரு பிரச்சினையாகத்தான் இருந்து வருகிறது. சுதந்திரம் அடைந்து 47 ஆண்டுகள் ஆகியும் இந்த நிலை களையப்படாமல் இருக்கிறது என்று தாயுள்ளத்தோடு, மனித நேயத்தின் மொத்த உருவாய் விளங்கிக்கொண்டிருக்கிற எங்கள் திராவிடத்தினுடைய தாய், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் கடல் நீரிலிருந்து உப்பை நீக்கும் இயந்திரங்களை நிறுவி, குடிநீர் வழங்க வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு சுமார் 53 கோடி ரூபாய்க்கான திட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) அரசு ஆணை எண். 3(டி)74, நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் துறை, நாள் 12.7.93 என்ற ஆணையை வழங்கியிருக்கிறார்கள். இந்த மாபெரும் 53 கோடி ரூபாய் திட்டத்தில் 40 உப்பு நீக்கும் இயந்திரங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் நிறுவப்பட வேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆணை தெளிவுபடுத்தி இருக்கிறது.

பிற்பகல் 6-05

இத்திட்டத்தைப் பயனுக்குக் கொண்டு வருகிறபோது சுமார் 6 லட்சம் மக்கள் பயன் பெறுவார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்த முயற்சியினால் 3 ஆண்டுகளில் இராமநாதபுரம் மாவட்டத்தின் தீர்க்கமுடியாத பெரும் பகுதி பிரச்சினையான குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்படும் என்பதைத்

[திரு. டி. எம். செல்வகணபதி] [1994 ஏப்ரல் 26

திட்டவட்டமாக இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கடந்த 1985 ஆம் ஆண்டிலிருந்து உலக வங்கி நிதி உதவியுடன் ரூ.32 கோடியே 86 லட்சம் செலவில் திட்டம் ஒன்றைச் செயலாக்கிக் கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தின் வாயிலாக கோவை, மதுரை, சேலம் போன்ற பெரிய நகரங்களுக்கு குடிநீர் வழங்குகின்ற பணியை மேற்கொண்டு இருக்கிறோம். அந்தத் திட்டம் பல்வேறு ஆண்டுகளாக உறங்கிக் கொண்டிருந்த நிலையைத்தான் தமிழகம் கண்டிருந்தது. அப்படி உறங்கிக் கிடந்த இந்தத் திட்டப் பணிகள் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே உசுப்பிவிடப்பட்டிருக்கிறது என்பதைப் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் அறிவுரையை ஏற்று அயராது ஆற்றிய பணிகள் உலகெங்கும் பாராட்டுகளைப் பெற்று, இன்றைக்கு இத்திட்டத்தின் பணிகள் இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதல் முறையாக 31.12.1994 வரை உலக வங்கியால் நீட்டிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பெருமிதத்துடன் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் மற்றவர்கள் ஆளுகின்ற குஜராத், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களிலே உலக வங்கி உதவி பாதியிலேயே நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1985-லே தொடங்கப்பட்ட இத்திட்டம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆணைக்கிணங்க 31.12.94க்கு முன்னரே முழுமையாக முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்படும் என்பதை மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தர்மபுரி மாவட்டம் முக்கியமான மாவட்டமாக இருக்கிற இன்றைக்கு இந்த மாவட்டத்திலே குடிநீர்ப் பிரச்சினை ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. இதைக் களைகின்ற வகையிலேதான் ஒகனேக்கல் காவிரியாற்றுப் படுகையிலிருந்து தர்மபுரி மாவட்டத்தின் மூன்றில் இரண்டு பங்கு பயன் அடைகின்ற வகையிலே 400 கோடி ரூபாய் திட்டத்தை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். அதுவும் இன்றைக்கு மத்தியில் நிலுவையில் இருக்கிறது. மக்கள் பணியிலே இந்த அரசுடைய ஆவலையும் அக்கறையையும் செயல் வடிவமாக்குவதில் நிதிப் பற்றாக்குறை ஒரு தடைக்கல்லாக இருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டு என்பதைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல தர்மபுரி மாவட்டத்தில் ப்ளோரைடு அதிகமாகக் கலந்திருக்கிற காரணத்தால், அந்தக் குடிநீரைப் பருகுகின்றவர்களின் உடல் உறுப்புகள் பாதிக்கின்ற நிலையைக் காண்கிறோம். அதைப் போக்குகிற வகையிலேதான்

1994 ஏப்ரல் 26] [திரு. டி. எம். செல்வகணபதி]

இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் பாசத்திற்கும் நேரடிப் பார்வைக்கும் பரிவிற்கும் உரிய பர்கூர் மக்கள் பயன் பெறுகின்ற வகையிலே ரூபாய் 3 கோடியே 46 லட்சம் மதிப்பீட்டிலே deflouridation plant அமைக்கின்ற திட்டத்தை புரட்சித் தலைவி அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அடுத்த நிதியாண்டு 1995-96-க்குள் தமிழகத்தில் ப்ளோரைடால் பாதிக்கப்பட்ட பகுதிகளே இல்லை என்ற நிலையை உருவாக்குவோம் என்பதைத் தெள்ளத் தெளிவாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அதாவது flouride-free Tamil Nadu என்ற நிலையை அடைய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய சீரிய சிந்தனைக்கும் தொலைநோக்குப் பார்வைக்கும் எடுத்துக்காட்டாகத்தான் இந்தியத் துணைக் கண்டத்திலே மட்டும் அல்ல, இன்றைக்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய திட்டமாக முதல் முறையாக தமிழகத்திலே ஆற்றுப் படுகையிலே கிடைக்கக்கூடிய நீரின் அளவு, அதை சேமித்து வைக்கின்ற தன்மை, சேமித்து வைக்கின்ற குடிநீரை பல்வேறு பகுதிகளுக்கு பகிர்ந்தளிக்கின்ற முறை, எதிர்காலத்திலே அதை அபிவிருத்தி செய்கின்ற முறை ஆகியவற்றைக் கண்டறிவதற்காக உலக வங்கி உதவியுடன் sector plan study என்கின்ற ஒரு ஆய்வு, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆணையின் பெயரால், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த ஆய்வுப் பணிகள் முடிவுற்றவுடன் ஒட்டுமொத்தமாக மாநிலத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் தேவையான குடிநீர்த் திட்டங்களைத் தயாரிக்க உத்தேசித்துள்ளோம் என்பதையும் இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்றைக்கு கிருஷ்ணா நதிநீர்த் திட்டம், புதிய வீராணம் திட்டம் ஆகியவை எல்லாம் நிறைவேற்றப்படுகிறபோது, சென்னையைச் சுற்றியிருக்கிற 20 நகரப் பகுதிகளுக்குப் போதிய அளவுக்குக் குடிநீர் வசதி செய்து தரவேண்டும். அந்த உயர்ந்த எண்ணத்திலேதான் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் சென்னையைச் சுற்றியுள்ள 20 நகரங்களுக்கு ரூ.140 கோடி மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடு தயார் செய்து உலக வங்கி உதவியுடன் செயலாக்குகின்ற நிலையை வழங்கியிருக்கின்றார்கள். இத்திட்டம் நிறைவேற்றி முடிக்கப்படும்பொழுது சென்னைப் பெருநகர்ப் பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடே கிடையாது என்ற நிலைமை உருவாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கின்றேன்.

[திரு. டி. எம். செல்வகணபதி] [1994 ஏப்ரல் 26 பிற்பகல் 6 -10

இன்றைக்கு இப்படிச் செயலாக்கப்பட்ட திட்டங்களை எல்லாம் பராமரிக்கின்ற நிலையிலே பல்வேறு முடிவுகளை இந்த அரசு மேற்கொண்டு இருக்கிறது. இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள்— இன்றைக்கு பராமரிப்பு, செயலாக்கப்பட்ட திட்டங்கள், கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் என்று சொன்னால், இனி வருங்காலங்களிலே கூட்டுக் குடிநீர் பராமரிப்பு பொறுப்பு அனைத்தும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் முறையாக செயல்படுத்துவதற்காக தங்கத் தலைவி அவர்களுடைய அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது என்பதைப் பெருமையுடன் இந்த அவையில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இன்றைக்கு கோவை, மற்றும் சேலம் வடிகால் திட்டம் பன்நெடுங்காலமாக நிலுவையில் இருந்து வருகிறது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, எப்படியாவது இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற வகையிலே பல்வேறு வழக்குகள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதிலே சிக்கலாக இருந்தாலும்கூட, இன்றைக்கு ரூபாய் 3 கோடி நிதியாக ஒதுக்கி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

சேலம் வடிகால் திட்டத்தைப் பொறுத்தவரை கழிவுநீர் உலர்த்தும் படுகைக்கு தேவைப்பட்ட நிலத்தினை கையகப்படுத்துவது ஒரு தடையாக இருந்தது. இத்தடைகள் அகற்றப்பட்டு திட்டமிட்ட படி பனமரத்துப்பட்டிக்கு அருகில் கழிவுநீர் உலர்த்தும் படுகை அமைப்பதற்கான ஏற்பாடுகள் விரைவிலே செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). இந்தத் திட்டப் பணிகளை விரைவில் முடிக்க சேலம் வடிகால் திட்டத்திற்காக 1 கோடியே 50 லட்சம் ரூபாயை இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கி உள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோலத்தான் இன்றைக்கு சென்னை பெருநகரில் குடிநீர்ப் பிரச்சினை என்பது ஒரு பெரும் பிரச்சினையாக இருக்கிறது. கடந்த ஆண்டு 1992-லே வடகிழக்கு பருவமழை பொய்த்ததன் காரணத்தால் சென்னையின் புறநகரில், உலகத்திலே எந்த மாநகரத்திலும் இல்லாத அளவிற்கு ஒரு கொடிய பஞ்சத்தை நாம் சந்திக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையை நாம் சந்தித்தோம் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். சென்னை மாநகர வரலாற்றிலேயே, முன்பு எப்போதும்

1994 ஏப்ரல் 26] [திரு. டி. எம். செல்வகணபதி]

போல கண்டிராத அளவுக்கு நகரில் ஏற்பட்ட குடிநீர் தட்டுப்பாட்டைக் களைகின்ற நோக்கத்தோடுதான் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தானே முன்நின்று போர்க்கால அடிப்படையில், அனைத்து நீர் ஆதாரங்களையும் ஒன்று திரட்டி எந்த அளவிற்கு மக்களுடைய பிரச்சினைகளைக் களைந்தார்கள் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள்; இந்த நாடும் அறியும். ஆனால், இதற்கு முன்னால் ஒரு பெரிய மனிதர் தமிழ்நாட்டில் ஆட்சி நடத்தினார்; நீண்ட நெடிய பாரம்பரியத்துக்கு, பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரர் என்று வெளியே சொல்லிக் கொண்டு இருக்கிறவர். ஆனால், உலகத்தில் எந்த முதலமைச்சரும், எந்த ஆட்சியாளரும் செய்யாத ஒரு பாவ காரியத்தை அவர்தான் செய்தார். அந்தப் பாவத்தின் சின்னங்கள்தான் இன்றைக்கும் பழைய வீராணம் ஆக, அடையாளமாக காட்சி அளித்துக் கொண்டு இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி). பொது மக்களுக்கு குடிநீர் கொடுக்கின்ற திட்டத்தில் கூட ஊழல் செய்து சுருட்டியவர்களை தமிழகம் கண்டு இருக்கிறது. ஆனால், இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு குடிநீர்ப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்ற நிலையிலே பலமுனைகளில் சிந்தித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கி ஒரு தொலைநோக்குப் பார்வையோடு புதிய வீராணம் திட்டத்தை இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் நாட்டிற்கு அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள் என்பதை இந்த நாடு அறியும். கோடை காலத்தில் குடிநீர்த் தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடம் இல்லாத வகையிலேதான் முன்கூட்டியே சிந்தித்து இந்த அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்ததன் விளைவாக சென்னை மாநகருக்கு தினசரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

புரட்சித் தலைவி அவர்களின் தாய் உள்ளத்திற்கும், மனித நேயத்திற்கும் சிறந்த எடுத்துக்காட்டாக ஒரு அறப் பணியைப்பற்றி நான் இந்த மாமன்றத்திலே எடுத்துரைப்பேன். கோடை காலத்திலே கோடை வெயிலில் பாதசாரிகளை எந்த அளவிற்கு வெயில் துன்புறுத்தும் என்பதை எண்ணிப் பார்த்துத்தான், அவர்களுடைய குறைகளைத் தீர்க்க இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆங்காங்கே பந்தல் அமைத்து குடிநீரும், குளிர் பானங்களும் வழங்கப்பட ஆணை பிறப்பித்ததைத் தொடர்ந்து இன்றைக்கு ஒரு கோடி அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் இந்த சமூகப் பணியிலே, அறப் பணியிலே ஈடுபட்டு இருக்கிறார்கள் என்பதை மெத்த மகிழ்ச்சியோடு இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

[திரு. டி. எம். செல்வகணபதி] [1994 ஏப்ரல் 26

மாநகர மக்களினுடைய குடிநீர் தேவைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்ற அடிப்படையில் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு அறிவிப்புகளை இன்றைக்கு வழங்கி இருக்கிறார்கள். அதில் ஒன்றாக, தமிழக அரசு-கிருஷ்ணா குடிநீர்த் திட்டம். கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள்கூட சொன்னார்கள். சென்னைக்கு கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக நீரைக் கொண்டுவந்து, விநியோகிக்கும் திட்டத்திற்காக ரூபாய் 505 கோடியே 46 லட்சம் மதிப்புக்கு கொள்கை அளவிலே ஒப்புதல் அளித்து, இதற்கான பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் மூலமாக முதல் கட்டமாக செங்குன்றத்தில் இருந்து நாள் ஒன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் நீரை எடுத்து வந்து, சுத்திகரிக்கப்பட்டு பிரதான குழாய்கள் மூலமாக நகரத்திற்குக் கொண்டுவந்து விநியோகிக்கப்பட வேண்டும் என்பதுதான் இன்றைக்கு நமக்குக் கொடுக்கப்பட்டு இருக்கின்ற கடமை.

பிற்பகல் 6-15

இன்றைக்கு நகரில் குடிநீர் வழங்கும் அமைப்பு மற்றும் கழிவுநீர் அகற்றும் அமைப்புகள் அத்தனையையும் அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலையில் சென்னை மாநகரம் இருந்து வருகிறது. அந்த அடிப்படையில் இந்தத் திட்டத்திற்கான முன் ஆய்வு அத்தனையும் உலக வங்கியால் முடிக்கப்பட்டு, விரைவில் இந்த ஆண்டு ஆய்வுகள் நடைபெற்று இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்திற்கான முக்கிய பணிகள் அனைத்தும் 1996 ஆம் ஆண்டிற்குள் முடிக்கப்பட்டு கிருஷ்ணா நதிநீரை விநியோகிக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்த கிருஷ்ணா நதிநீர் திட்டத்தில் செங்குன்றத்தில் நாளொன்றுக்கு 300 மில்லியன் லிட்டர் திறனுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை தமிழக அரசு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பணிகளைத் தொடங்கியிருக்கிறது. அதைப்போல அதைத் தொடர்ந்து இந்த ஆண்டில் நீரேற்று இயந்திரங்களை அமைக்கிற பணியும், அறைகளைக் கட்டுகிற பணியும் இந்த ஆண்டு எடுத்துக் கொள்வதற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை வழங்கி இருக்கிறார்கள்.

அதைப்போல செங்குன்றத்திலிருந்து போரூருக்கு சுத்திகரிக்கப்பட்ட நீரைக் கொண்டு செல்ல பிரதான குழாய்கள் அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தப் பணியை பொறுத்தவரையில் 41 கோடியே 87 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 5 பகுதிகளாகப்

1994 ஏப்ரல் 26] [திரு. டி. எம். செல்வகணபதி]

பிரிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு பகுதிகளில் ஒப்பந்தங்கள் எல்லாம் முடிக்கப்பட்டு, இன்றைக்கு குழாய்கள் தயாரிப்பதற்கான தொழில்கூடங்கள்கூட கட்டப்பட்டு, குழாய் தயாரிக்கிற பணி தொடங்கப்பட்டுவிட்டது. மற்ற இரண்டு பகுதிகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு ஆவடி மற்றும் அம்பத்தூர் நகரங்களுக்கு நீர் கொண்டு செல்வதற்கு கிளை குழாய்கள் அமைப்பதற்கான 5-வது பகுதிப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நடப்பு நிதியாண்டில் தொடங்கப்பட மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் வாயிலாக இந்தப் பணி முடிவடைகிறபோது ஆவடி, அம்பத்தூர் பகுதிகளின் நீண்ட நாள் குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்படும் என்பதை இந்தப் பேரவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அடிப்படையில் இந்தத் திட்டத்தின் வாயிலாக கிருஷ்ணா நதிநீர் எப்போது வரும் என்று கேட்கிறார்கள். பணிகள் முடக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்த அளவுக்கு இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தின்கீழ் சென்னை மாநகரத்தில் வள்ளுவர் கோட்டம், திருவல்லிக்கேணி பகுதிகளில் மட்டும் ரூபாய் 10 கோடியே 55 இலட்சம் மதிப்பில் மண்டல நீர்த்தேக்க நிலையங்களைக் கட்டி முடித்தாக வேண்டுமென்ற ஒரு ஆணையை இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு பிறப்பித்து இருக்கிறார்கள்.

சென்னை மாநகரில் பல்வேறு பகுதிகளில் குடிநீர் வரவில்லை என்ற பிரச்சினை இருக்கிறது. மேடான பகுதிகள், தாழ்வான பகுதிகள் என்று பிரிக்கப்பட்டு, மேடான பகுதிகளுக்கு தண்ணீரில் அழுத்தம் குறைவாக இருக்கிறபோது, அந்தத் தண்ணீர் டெய்ல் எண்ட் என்று சொல்லப்படுகிற பகுதிகளுக்குச் செல்லவில்லை என்ற புகார்கள் கிடைத்ததை எண்ணிப்பார்த்துதான் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு சென்னை மாநகர மக்களுக்காக அனைத்து பகுதிகளுக்கும் சம அளவில் குடிநீர் விநியோகம் செய்கிற அளவில் சுமார் 130 கோடி மதிப்பில் 12 மண்டலங்களுடைய புதிய நீர்த்தேக்க அமைப்புகளை உருவாக்கி ஆணையிட்டு இருக்கிறார்கள் என்பதை மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்களுக்கு புதிய வீராணம் திட்டத்தைப் பற்றி நன்றாக தெரியும். இன்றைக்கு சென்னை மாநகர மக்களுக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில்தான் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ரூ.720 கோடி மதிப்புள்ள இந்தத் திட்டத்தை

[திரு. டி. எம். செல்வகணபதி] [1994 ஏப்ரல் 26

1996 ஆம் ஆண்டிற்குள் முடிக்கப்பட்டு, நாள் ஒன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் கூடுதல் குடிநீர் சென்னைக்கு வழங்கப்பட வேண்டுமென்று ஆணை பிறப்பித்து இருக்கிறார்கள். இது சம்பந்தமாக உலக வங்கி தன்னுடைய ஒப்புதலை ஏற்கெனவே வழங்கியுள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொண்டு, வருகிற மே மாதம் உலக வங்கியினுடைய நிபுணர் குழு சென்னை வரவுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் வாரியத்திலிருந்து கழிவுநீர் அகற்றுவதற்காக மட்டும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இன்றைக்கு பெருகிவரும் மக்கள் தொகையை கணக்கில் கொண்டு, பழமையான கழிவுநீர்க் குழாய்களை மாற்றியமைக்கிற வகையில் கொடுங்கையூர், கானகம்-தரமணி, இராதாகிருஷ்ணன் நகர், வியாசர்பாடி, முத்தமிழ் நகர் ஆகிய பகுதிகளில் கழிவுநீர் அகற்றும் திட்டம் அமைப்பதற்கு ரூபாய் 28 கோடியே 66 இலட்சம் மதிப்பில் திட்டங்களை வழங்கி, இந்தப் பகுதியினுடைய நெடுநாளைய கழிவுநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இன்றைக்கு பத்திரிகைகளில் ஒருசில இடங்களில் பார்க்கிறோம். கழிவுநீர் குடிநீரில் கலக்கிற நிலை இருப்பதைப் போல ஒரு நிலைமையை சொல்லி இருக்கிறார்கள். சென்னை நகரில் உள்ள அந்த கழிவுநீர்க் குழாய்கள் எல்லாம் பல ஆண்டுகளுக்கு முன்னால் பதிக்கப்பட்டு பழுதடைந்த நிலையில் ஒருசில இடங்களில் இருக்கின்றன. அதையெல்லாம் போக்குகிற வகையில் நடவடிக்கையெடுக்கப்படுகிறது. மக்கள் தொகை அதிகரித்து இருக்கிறது. தொழில் வளம் பெருகி இருக்கிறது, நகரமும் வளர்ந்திருக்கிறது என்ற நிலையிலேதான், இந்தப் பிரச்சினையை முழுவதுமாகக் களைவதற்காக, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் உடனடி கழிவு நீர் அகற்று நிவாரண மேம்பாட்டுத் திட்டத்திற்காக மட்டும் நடப்பு நிதி ஆண்டிலே அந்தப் பணிகளைத் தொடங்குகின்ற வகையிலே ரூ.26 கோடியே 14 லட்சத்தை வழங்கியிருக்கிறார்கள் என்பதை மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 6-20

தெற்கு ஆசியாவிலேயே இன்றைக்கு முதன்முறையாக சென்னை நகரிலே கழிவு நீரை சுத்திகரித்து நல்ல நீராக தொழிற்சாலைகளுக்கு நாள்

1994 ஏப்ரல் 26] [திரு. டி. எம். செல்வகணபதி]

ஒன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் தண்ணீரை வழங்குவதற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவை வழங்கியிருக்கிறார்கள் என்பதை மெத்தப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் குடிநீரை மீதப்படுத்தி, நகரின் குடிநீர் விநியோக அளவை அதிகப்படுத்துகின்ற நிலையில் ஜப்பான் வல்லுநர்களோடு வருகிற ஜனவரி, 1995 ஆம் ஆண்டிலே இந்த மாபெரும் கழிவு நீரை நன்னீராக்கும் திட்டம் தொடங்கப்படும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

குடிநீர் வழங்கல் துறையிலே பல்வேறு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த வெட்டுத் தீர்மானங்களில் பல வசதிகளைக் கேட்டும், பல்வேறு பிரச்சினைகளைப் பற்றியும் எழுப்பப்பட்டு இருக்கின்றது. அந்த வெட்டுத் தீர்மானங்களைப் பொறுத்த வரையில், அவர்களுடைய கோரிக்கைகள், அதிலே எழுப்பப்பட்டு இருக்கிற பிரச்சினைகளை எல்லாம் பரிசீலனை செய்து, தேவைகளின் அடிப்படையிலே நிதிநிலையைக் கருத்தில் கொண்டு, நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மெத்த பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளகிறேன்.

இன்றைக்கு நகராட்சி நிருவாகம் மாநகராட்சிகள் என்று தலைப்பைப் பார்க்கும்போது, நகராட்சிகளிலே மட்டும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், பல்வேறு அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். நகரத்திலே பிரதான பிரச்சினையாக இருப்பது மக்களுடைய சமூகப் பணிகளுக்காக பல்வேறு திருமண நிகழ்ச்சிகளுக்காக, தங்களுடைய சொந்த நிகழ்ச்சிகளுக்காக, திருமணக் கூடங்களுக்காக தனியாரிடத்திலே செல்லுகின்றபோது, ஆயிரக்கணக்கிலே செலவிட வேண்டியதாக இருக்கிறது. இதை மனதிலே எண்ணித்தான், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், அனைத்துப் பெரிய நகராட்சிகளிலும் திருமண மண்டபங்கள் மற்றும் சமுதாயக் கூடங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்று இன்றைக்கு உத்தரவை வழங்கியிருக்கிறார்கள். நடப்பாண்டிலேயே அந்தப் பணிகள் தொடங்க இருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வருகின்ற காலகட்டத்திலே தமிழகத்தில் இருக்கிற அனைத்து நகராட்சிகளிலும், நவீன வசதிகள் கொண்ட, அனைத்து வசதிகள் கொண்ட, நல்ல திருமண மண்டபங்கள், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரிலே கட்டப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

[திரு. டி. எம். செல்வகணபதி] [1994 ஏப்ரல் 26

இன்றைக்கு தமிழகத்திலே இருக்கிற 108 நகராட்சிகளிலே பூங்காப் பகுதிகள் மட்டும் பல்வேறு நகராட்சிகளிலே இருக்கின்றன. அந்த நகராட்சிகள் அதை அழகுபடுத்துவதற்கான வகையிலே, பராமரித்துக் கொண்டிருந்தாலும், அதை நல்ல நிலையில் உருவாக்குகின்ற வகையில் இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகராட்சிப் பகுதிகளிலும் சிறுவர் சிறுமியர்களுக்காக தனி விளையாட்டு அரங்கங்களை ஏற்படுத்தவேண்டும் என்று ஆணை பிறப்பித்து இருக்கிறார்கள். நான் ஏற்கெனவே சொல்லியதைப் போல, சென்னை மெரினா கடற்கரையில் விளையாட்டு அமைப்புகளோடு கூடுதல் வசதிகளுடன் சுமார் 6 லட்சம் செலவீட்டிலே ஒவ்வொரு சிறுவர் பூங்காவும் அமைக்க நடப்பு நிதி ஆண்டிலே அந்தப் பணிகள் தொடங்கவேண்டும் என்று புரட்சித் தலைவி அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு நகராட்சி நிர்வாகத்திலே சேலம், திருச்சி, திருநெல்வேலி நகராட்சிகளை மாநகராட்சிகளாக உயர்த்தும் பொருட்டு, மாநகராட்சிகளாக மாறுவதற்குரிய சட்டங்களை இந்தக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவருவதற்காக புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டபின், - இதற்கு முன்னர் கோவை மாநகராட்சி 13 ஆண்டுகளுக்கு முன்பு தோற்றுவிக்கப்பட்ட பிறகு, இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்திலேதான் 3 மாநகராட்சிகள் உருவாக்கப்பட இருக்கின்றன என்பதை மகிழ்ச்சியுடனும், பெருமையுடனும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு கரூர், தஞ்சாவூர், பொள்ளாச்சி நகராட்சிகளிலும் மற்றும் மதுரை, கோவை போன்ற மாநகராட்சிகளிலும் மக்களுடைய நெடுநாளைய கோரிக்கையாக, அங்கே கூடுதலாக மின்கட்டணம் உள்ளாட்சி நிறுவனங்களிலே வசூலிக்கப்படுவதை மாற்றுகின்ற வகையிலே அந்தக் கூடுதல் மின் கட்டணத்தைத் தவிர்க்கின்ற வகையிலே, மின்சாரப் பகிர்மானத் திட்டங்களைப் பராமரிக்கின்ற வகையிலே, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அந்தப் பராமரிப்பையும் அந்த மின் திட்டங்களையும் மின்சார வாரியமே ஏற்று நடத்தவேண்டும் என்று, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் முடிவு செய்து ஆணை வெளியிட்டு இருக்கிறார்கள் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்

1994 ஏப்ரல் 26] [திரு. டி. எம். செல்வகணபதி]

கொள்கிறேன். பல ஆண்டுகளாக, தீர்க்கப்படாத, அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட காலக் கோரிக்கை, இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே தீர்க்கப்பட்டு இருக்கிறது என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி).*

தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்க்க *1.1.95* முதல் *5.1.1995* வரை எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை தஞ்சை நகரிலே நடத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் முடிவு செய்து உத்தரவிட்டதின் பேரில், பல்வேறு சிறப்பு ஏற்பாடுகளை இந்த அரசு செய்திருக்கிறது. இதில் முக்கியமாக தஞ்சை நகராட்சியிலே உள்ள சாலைகளை மேம்பாடு செய்யவும் நடைபாதை, கழிவுநீர் கால்வாய்களை சீரமைக்கவும், பூங்காக்களை அழகுபடுத்தவும், கூடுதல் பொதுக் கழிப்பிடங்கள் கட்டவும், தற்போதுள்ள கழிப்பிடங்களை நவீனப்படுத்தி, கூடுதல் வசதிகள் செய்யவும், கூடுதல் சோடியம் ஆவி விளக்குகளை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது என்பதை இந்தப் பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி).*

பிற்பகல் 6-25

தஞ்சை நகரத்திலே ஏற்கெனவே நடைமுறையில் இருக்கின்ற குடிநீர்த் திட்டத்தின் மூலம் ஒரு பகுதி மக்களுக்கு மட்டுமே பாதுகாக்கப்பட்ட குடிநீர், குழாய்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மீதிப் பகுதி மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக ரூ. *6 1/2* கோடி மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு அந்தப் பணிகள் வருகின்ற *30.6.94*-க்குள் நிறைவேற்றப்படும் என்று பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்தப் பணிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் விரைவாக முடிக்க எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.

மேலும் உலகத் தமிழ் மாநாட்டிற்கு வரும் பிரதிநிதிகள், அழைப்பாளர்கள், மற்றும் பொதுமக்களின் தேவைகளை நிறைவு செய்கின்ற வகையிலேதான் மாநாடு நடக்கும் பகுதிகளுக்கும் இதர முக்கிய அரங்குகளுக்கும் கூடுதல் குடிநீர் வசதி ஏற்படுத்தித் தருகின்ற வகையிலே ரூ.*95* இலட்சம் செலவில் குடிநீர் வடிகால் வாரியம் திட்டம் ஒன்றை நிறைவேற்றி அதை இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக முடித்து வைப்பதற்கு திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, தற்போது தஞ்சை மாநகரிலே பேருந்து நிலையம் உள்ள பகுதி மிகவும் நெருக்கடியாக இருக்கின்ற காரணத்தால், உலகத் தமிழ் மாநாட்டை முன்னிட்டு

[திரு. டி. எம். செல்வகணபதி] [1994 ஏப்ரல் 26

ரூ.3 கோடி மதிப்பீட்டிலே ஒரு நவீன பேருந்து நிலையத்தை தஞ்சை மாநகருக்கு வழங்குவதற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்று சொல்லி, அதேபோல் தஞ்சை, நாகப்பட்டினம், கும்பகோணம் சாலைகள் வழியாக திருச்சி சாலையை அடையும் வகையில் தஞ்சை நகரைச் சுற்றி ஒரு சுற்றுச் சாலையை விரைவில் ஏற்படுத்த வேண்டுமென்று உலகத் தமிழ் மாநாட்டை முன்னிட்டு, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதையும் மெத்த பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டிலே உள்ள நகராட்சிகளில் 59 நகராட்சிகளில் ரூ.116 கோடி செலவில் வளர்ச்சிப் பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் - அந்த அடிப்படையிலே அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலே உள்ள ஊராட்சிகளிலே சாலை வசதியும், கழிவு நீரகற்று வசதியும் மற்ற அடிப்படை வசதிகளையும் நிறைவு செய்கின்ற வகையிலே சிறப்புத் திட்டமாக நகராட்சி நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.50 கோடி மதிப்பீட்டில் ஒரு மாபெரும் திட்டத்தை நிறைவேற்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருச்சியிலே பாழடைந்து கிடக்கின்ற தேவர் கலையரங்கம் ரூ.1.07 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திருப்பூர், கிருஷ்ணகிரி, திருநெல்வேலி நகரங்களுக்கு அனைத்து வசதிகளும் கூடிய ரூ.4.92 கோடி மதிப்பீட்டிலே புதிய பேருந்து நிலையங்கள் அமைக்க ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்திலேதான் தற்போது நகராட்சிகள் எல்லாம் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டிற்கு வருகின்ற குடிநீர்த் திட்டப் பணிகளை மட்டும்தான் நகராட்சிகள் மேற்கொள்ளமுடியும். ஆனால் இதையெல்லாம் உயர்த்தவேண்டுமென்ற எண்ணத்தோடு நல்ல நிலையிலே இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும். பிற துறைகளினுடைய உதவியின்றி சிறிய மற்றும் அவசர குடிநீர்த் திட்டங்களை நகராட்சிகளே விரைந்து செயல்படுத்தவேண்டுமென்ற அடிப்படையிலே இதய தெய்வம் புரட்சித்

1994 ஏப்ரல் 26] [திரு. டி. எம். செல்வகணபதி]

தலைவி அவர்கள் இந்தக் குடிநீர்த் திட்டப் பணிகளின் வரம்பை ரூ. 5 இலட்சத்திலிருந்து ரூ. 50 இலட்சமாக உயர்த்தி ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திருச்சியிலே இருக்கின்ற பாதாளச் சாக்கடை சுமார் 524 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலே 121 ஏக்கர் நிலம் நீங்கலாக மீதமுள்ள 403 ஏக்கர் நிலத்திலே நகராட்சி நிதியாதாரத்தைப் பெருக்குவதற்காக விலையுயர்ந்த தேக்கு, சவுக்கு மற்றும் யூகலிப்டஸ் மரங்களை உருவாக்க அரசு முடிவு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் நகராட்சி ஊழியர்களுக்கு வீடு கட்டுவதற்காக அரசு ஒதுக்கும் தொகையோடு சேர்த்து தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்ளமைப்பு மேம்பாட்டுக் கழகம் - TUFIDCO மூலமும் முன் பணம் வழங்க இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை மெத்த பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் எழில்மிகு சென்னை 2000 என்ற உன்னத திட்டத்தை வழங்கியிருக்கிறார்கள். அன்றைக்கு ரூ. 1250 கோடி செலவிலே ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம் இன்றைக்கு மேலும் பல புதிய வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்காக புரட்சித் தலைவி அவர்கள் 4,000 கோடியாக இந்தத் திட்டத்தினுடைய அளவை உயர்த்தி 5 ஆண்டுகளுக்குள், வருகின்ற 2000 ஆம் ஆண்டுக்குள் முடித்து வைக்கவேண்டுமென்று ஆணை வழங்கியிருப்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அறிவர். அந்த அடிப்படையிலே முன்பு மாநகராட்சியினுடைய மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்காக ரூ. 135 கோடியாக இருந்தது. இந்த நிலையில் ரூ. 435 கோடியாக உயர்த்தப் பட்டிருக்கிறது என்பதைப் பெருமையோடு சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்ல ஆலோசனையின் பேரிலும் அறிவுரைகளின் பேரிலும் இன்றைக்கு மாநகராட்சியினுடைய நிதி ஆதாரம் பெருக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. சென்னை மாநகராட்சியினுடைய வருவாய்க் கணக்கிலே 1990-91 ஆம் ஆண்டில் ரூபாய் 79 கோடியாக இருந்தது, இன்றைக்கு இதய தெய்வம் புரட்சி தலைவியினுடைய ஆட்சிக் காலத்திலே 1994-95 ஆம் ஆண்டிலே சுமார் ரூபாய் 204 கோடியாக அதிகரிக்கின்ற திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[திரு. டி. எம். செல்வகணபதி] [1994 ஏப்ரல் 26 பிற்பகல் 6-30

எழில்மிகு சென்னை 2000-ஐ கணக்கிலே வைத்துத்தான் சென்னை நகரம் இந்தியாவிலேயே சிறந்த நகரமாக விளங்குவதற்காக சர்வதேச தரத்திலே இன்றைக்கு தமிழகத்தினுடைய ஒளிவிளக்கு, கடந்த ஆண்டு ரூபாய் 17 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் 6,000 சோடியம் விளக்குகளை பேருந்து சாலைகளில் அமைக்க ஆணையிட்டிருந்தார்கள். அதே அடிப்படையிலே நடப்பு ஆண்டிலே 1,200 சோடியம் விளக்குகளை ரூபாய் 2 கோடி மதிப்பீட்டிலே அமைப்பதற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். இதைத் தவிர 100 முக்கிய சந்திப்புகளிலே சென்னை நகரத்தின் முக்கிய சந்திப்புகளிலே பல்முறை விளக்குகள் ரூபாய் 50 லட்சத்திலே உருவாக்கப்படும் என்பதையும் இம்மாமன்றத்திலே தெரிவித்துக்கொண்டு சென்னை நகரம் இந்தப் பணிகள் எல்லாம் முடிவடைகின்ற போது உலகத்திலேயே ஒளி மயமான நகரங்களில் ஒன்றாக தலை நிமிர்ந்து நிற்கும் என்பதை மகிழ்ச்சியோடு, பெருமிதத்துடன் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு தெரு விளக்குகளைப் பொறுத்த வரையில் சென்னை மாநகரத்திலே இந்த நிதி ஆண்டுக்குள்ளாக விரிவு படுத்தப்பட்ட பகுதிகளுக்கு உட்புறச் சாலைகள் அனைத்திலும் தெருவிளக்குகள் அமைக்கும் பணி முடுக்கிவிடப்பட்டிருக்கிறது. விரிவு படுத்தப்பட்ட பகுதிகள் மற்றும் உட்சாலைகளிலே கடந்த ஆண்டு 3 கோடியே 22 லட்சம் ரூபாய் செலவிலே 4,600 விளக்குகள் அமைக்கப்பட்டன. அதேபோல இந்த ஆண்டு 1994-95 ஆம் ஆண்டிலே 10 ஆயிரம் விளக்குகள் 6 கோடி ரூபாய் செலவிலே அமைக்க வேண்டும் என்று புரட்சித் தலைவி அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள் என்பதை பெருமையுடன் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு சென்னை நகரத்திலே 250 கிலோ மீட்டர் சாலைகள் பராமரிக்கப்படுகின்ற நிலையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்தச் சாலைகளின் மேம்பாட்டிற்காக மட்டும் 1994-95 ஆம் ஆண்டு 16 கோடி ரூபாய் செலவிலே பேருந்து சாலைகளை மேம்படுத்துகின்ற உத்தரவை இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அதேபோல இன்றைக்கு சென்னை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள பஞ்சாயத்து பகுதிகள் விருகம்பாக்கம், சாலிக்கிராமம், திருவான்மியூர், சுங்கம், தரமணி போன்ற பகுதிகளில் வசிக்கும் மக்களின் நீண்டகால தேவையினை நினைவூட்டுகின்ற வகையிலே அந்தப் பகுதிகளிலே சாலைகள் அமைக்கப்படும் என்பதை பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு இந்த உட்புறச் சாலைகளை அமைப்பதற்காக மட்டும் இதய தெய்வம்

1994 ஏப்ரல் 26] [திரு. டி. எம். செல்வகணபதி]

புரட்சித் தலைவி அவர்கள் நடப்பு ஆண்டிலே 2,100 உட்புறச் சாலைகளை மேம்படுத்துவதற்கு 3 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோலத்தான் இன்றைக்கு சென்னையிலே பல்வேறு இடங்களிலே பாலங்கள் கட்டுகின்ற பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நடப்பு ஆண்டிலே மாவட்ட ஆட்சியர் குடியிருப்பு, ரயில்வே குடியிருப்பு, கோவிந்தன் தெரு, மற்றும் சுங்குவார் தெரு, பள்ளியரசு தெரு ஆகிய இடங்களில் சிறு பாலங்கள் அமைக்க திட்டமிட்டிருக்கிறார்கள். நேப்பியர் பாலத்தின் அருகிலே ஒரு புதிய பாலம் கட்டுகின்ற பணியும் நடப்பு ஆண்டிலே மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, 1994-95 ஆம் ஆண்டு 6 இடங்களில் சுரங்கப் பாதை அமைக்கின்ற பணியும் சென்னை மாநகராட்சி மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒன்று, இரயில்வேயின் உத்தரவைப் பெற்று சைதாப்பேட்டையிலே உள்ள பஜார் சாலையும், தெற்கு உஸ்மான் சாலையும் மகாலிங்கபுரம் பிரதான சாலையும் இணைக்கும் மேம்பாலமும், கோடம்பாக்கம் சாலையில் சுரங்கப் பாதையும், மீனாட்சிக் கல்லூரியின் எதிரில் என்.எஸ்.கே. சாலை பாத சாரிகளுக்கான சுரங்கப் பாதையும், சேப்பாக்கத்தில் எழிலகத்திற்கு எதிரில் வணிக வளாகத்துடன் இணைந்த பாதசாரிகளுக்கான சுரங்கப் பாதையும், சட்டக் கல்லூரியின் எதிரில் வணிக வளாகத்துடன் இணைந்த பாதசாரிகளுக்கான சுரங்கப் பாதையும் சுமார் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே நடப்பு நிதி ஆண்டிலே உருவாக்கப்படும் என்பதை பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு உலகிலேயே மிக நீளமான 2 வது கடற்கரையாக விளங்கிக் கொண்டிருக்கும் மெரினா கடற்கரை எந்த அளவுக்கு அழகு படுத்தப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மறுக்க முடியாது. அந்த அடிப்படையிலே சென்னை மாநகரத்தினுடைய வரலாற்றிலே முதல் முறையாக மெரினா கடற்கரைக்கு மேலும் மெருகூட்டும் வகையிலே காமராசர் சாலையை ரூபாய் 5 கோடி செலவிலே சிமெண்ட் கான்கிரீட் சாலையாக மாற்றுகின்ற திட்டத்தை இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் செயல்படுத்த ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மாநகரிலே இந்த அளவுக்கு மதிப்பு மிக்க 5 கோடி செலவில் சிமெண்ட் கான்கிரிட் சாலை உருவாக்கப்படுவது இதுதான் முதல் தடவை என்பதையும் சொல்லிக் கொண்டு, எலியட்ஸ் கடற்கரையிலும் இதேபோல சில பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு பொதுமக்கள் வசதிக்காக ஸ்கேட்டிங் விங் அமைப்பதற்கு உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும்

[திரு. டி. எம். செல்வகணபதி] [1994 ஏப்ரல் 26

தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல அடிக்கடி வெள்ளம் ஏற்படக் கூடிய வியாசர்பாடி, பேசின் பாலம், கொளத்தூர், கொடுங்கையூர், அரும்பாக்கம், அடையாறு ஆகிய பகுதிகளில் ரூபாய் 6 கோடி செலவில் மழை நீர் வடிகால்கள் அமைப்பதற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள்.

பிற்பகல் 6-35

மாநகராட்சியிலே துப்புரவுப் பணி என்று சொல்கின்றபோது கடந்த ஆண்டிலே துப்புரவுப் பணி மேம்பாட்டிற்கு 70 புதிய லாரிகளை மாநகராட்சி வாங்குவதற்கு புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருந்தார்கள். அதேபோல இன்றைக்கு மாட்டு வண்டிகள், ட்ராக்டர்களுக்குப் பதிலாக சிறிய லாரிகளும் 3 சக்கர வண்டிகளும் வாங்கி நல்ல நிலையில் துப்புரவுப் பணிகளை ஏற்படுத்த வேண்டும் என்று இந்த ஆண்டிலே இதைச் செயல்படுத்த வேண்டும் என்று இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் நகரிலிருந்து அகற்றப்படுகின்ற குப்பைகளைப் பயன்படுத்தி எரிபொருள் துகள்கள், அதாவது பில்லட்ஸ் தயாரிப்பதற்கும் அதிலிருந்து மின் உற்பத்தி செய்கின்ற திட்டத்தையும் தமிழகத்திலே வழங்கியிருக்கிறார்கள். அது பரிசீலனையிலே இருக்கிறது. மின் உற்பத்தி திட்டத்தை கூட்டுத் துறையிலேயும், உரம் தயாரிக்கும் திட்டத்தை தனியார் துறையிலேயும் செய்ய அரசு திட்டமிட்டு உள்ளது என்பதையும் இது இந்தியாவிலேயே ஒரு முன்னோடி திட்டம் என்பதையும் இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு கல்வியை பொறுத்தவரையில் அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாறாயிரம் கட்டுதலைவிட ஏழைக்கு எழுத்தறிவித்தல் மிகவும் மேன்மையானது என்ற அடிப்படையிலே கடந்த 2 ஆண்டுகளிலே, பாழ்பட்டுக் கிடந்த மாநகராட்சிப் பள்ளிகள் எல்லாம் ரூ.8 கோடியே 20 இலட்சம் செலவிலே கூடுதல் வகுப்பறைகளோடு, புதிய கட்டிடங்களோடு, ஆய்வகங்களோடு, மேஜைகள் நாற்காலிகளோடு பொலிவுற்றிருப்பதை நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அடிப்படையில் இந்த மாநகராட்சியிலே நட்சத்திர பள்ளிகள் என்று தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தப் பள்ளிகளுக்குத் தேவையான - ஸ்டார்ஸ் ஸ்கூல்ஸ் என்று சொல்லப்படுகின்ற அந்தப் பள்ளிகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் முழுமையாக செய்து கொடுக்கப்பட வேண்டும் என்று இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். நடப்பு நிதியாண்டிலே 1994-95லே

1994 ஏப்ரல் 26] [திரு. டி. எம். செல்வகணபதி]

மட்டும் அனைத்து உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் நட்சத்திரப் பள்ளிகளில் மட்டும் 77 இலட்சம் ரூபாய் செலவிலே கம்ப்யூட்டர் கல்வி வசதி ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தின் வாயிலாக சென்னை மாநகராட்சியிலே 50 மாநகராட்சிப் பள்ளிகளிலே கம்ப்யூட்டர் கல்வி வசதி தொடரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு மாநகராட்சியிலே உடல் நலத்தையும் பொதுச் சுகாதாரத்தையும் பேணுகின்ற ஒரு நல்ல நிலையை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் இந்த ஆண்டு ரூ.6 கோடி செலவிலே மாநகராட்சிப் பள்ளிகளில் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக 500 கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். சென்னையிலே இருக்கின்ற கொசுத் தொல்லையைப் போக்குவதற்காக இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்கெனவே 2 வாகனங்களை புகை பரப்பும் இயந்திரத்தோடு வாங்கியிருக்கிறார்கள். மேலும் 155 கையினால் இயக்கக்கூடிய கொசு புகை பரப்பும் இயந்திரத்தை ரூ.20 இலட்சம் செலவிலே வாங்குவதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். எலும்பு உருக்கி நோயைத் தடுக்கின்ற வகையிலே மாநகராட்சி ஒரு பைலட் திட்டத்தை சைதாப்பேட்டை பகுதியிலே தொடங்கியிருக்கிறது. அதே போல 4 கோடி ரூபாய் செலவிலே உலக வங்கி உதவியுடன் இந்த பைலட் திட்டம் எலும்புருக்கி நோயைத் தடுப்பதற்காக நகரின் பிற பகுதிகளுக்கும் விரைவில் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். தற்போது சென்னை மாநகரத்திலே மின்சாரத்தால் இயங்கக்கூடிய மயானம் ஒன்றே ஒன்று மட்டும்தான் இருக்கிறது. இந்த மின்சார மயானம் நல்ல நிலையிலே இயங்கி வருகின்ற காரணத்தாலே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இதை வேலங்காடு மூலக்கொத்தனம். கண்ணம்மாப்பேட்டை ஆகிய இடங்களில் ரூ.2 கோடி செலவிலே 3 மின்சார மயானங்களை உருவாக்க நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களது ஆணைய்யை ஏற்று கடந்த ஆண்டு மட்டும் 2 இலட்சத்து 50,000 மக்கள் பயன் அடைகின்ற வகையிலே மாநகராட்சி வாயிலாக ஒரு இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. அதேபோல இந்த ஆண்டும் இரண்டே முக்கால் இலட்சம் மக்கள் பயன் பெறுகின்ற வகையிலே இலவச மருத்துவ முகாம் மாநகராட்சியினுடைய மருத்துவ துறையின் சார்பாக நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. டி. எம். செல்வகணபதி] [1994 ஏப்ரல் 26

இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய தொலைநோக்குப் பார்வையோடு ஒவ்வொரு நல வாழ்வு மையத்திலும் கண், காது, மூக்கு, தொண்டை தொடர்பான நோய்களுக்கு சிகிச்சை அளிக்கக்கூடிய பகுதியைத் தொடங்குவதற்கு ஆணையிட்டிருக்கிறார்கள். அதிலே மருத்துவர்கள் பயன்படுத்துவதற்கான நூலகம் ஒன்றை அமைப்பதற்கும், நோயாளிகள் ஊர்திகள் வாங்குவதற்கும், குளிர்சாதன வசதியுடன் கூடிய தடுப்பு ஊசி போடும் மையங்கள் ஏற்படுத்துவதற்கும் இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 6-40

அதேபோல் இன்றைக்கு பூங்காக்கள், விளையாட்டு மைதானங்களை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால் சென்னை மாநகராட்சி நல்ல நிலையில் அதை மேம்படுத்திக் கொண்டிருக்கிறது. அதிலே 1994-95 ஆம் ஆண்டிலே மட்டும் பூங்காக்களைப் பராமரிப்பதற்காக . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேட்ட நேரத்தைவிட கூட போய்க் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 நிமிடத்தில் முடித்துக் கொள்கிறேன். இன்றைக்கு பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால் நடப்பு நிதி ஆண்டிலே மட்டும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பூங்காக்களை மேம்படுத்துவதற்காக 1 கோடியே 50 லட்சம் ரூபாயை வழங்கியிருக்கிறார்கள்.

அதேபோல் அன்றைக்கு பாரதி 'ஓடி விளையாடு பாப்பா; நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா' என்று பாடினான். அந்தப் பாரதியினுடைய கூற்றை வலியுறுத்தும் வகையில் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1994-95 ஆம் ஆண்டு விளையாட்டு திடல்களில் அடிப்படை வசதிகளைப் பெருக்கவும், குழந்தைகள் விளையாட்டுக் கருவிகளை நிறுவவும் இன்றைக்கு ஆணையிட்டிருக்கிறார்கள்.

எழும்பூரில் உள்ள மேயர் இராதாகிருஷ்ணன் விளையாட்டு அரங்கம் 'ஹாக்கி' விளையாடுவதற்காக 4 கோடி ரூபாய் செலவில் செயற்கை புல்வெளி, ஒளி விளக்குகள், பார்வையாளர்கள் அமருவதற்கான இருக்கைகள் கொண்ட ஒரு சர்வதேச தர 'ஹாக்கி' ஸ்டேடியமாக இந்த ஆண்டு உருவாக்கப்படும் என்பதை மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1994 ஏப்ரல் 26] [திரு. டி. எம். செல்வகணபதி]

அதேபோல் நுங்கம்பாக்கத்தில் இருக்கிற திறந்தவெளி விளையாட்டு மைதானத்தில் இருக்கின்ற டென்னிஸ் மற்றும் ஸ்கேட்டிங் ஆகிய விளையாட்டுகள் விளையாடுவதற்காக இன்றைக்கு விரிவான வசதிகள் செய்ய ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் அரசு உதவியுடன் ஒரு விளையாட்டு அரங்கம் சர்வதேச தரத்தில் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த வசதிகள் எல்லாம் தெற்கு ஆசிய நாட்டின் போட்டிகளை சென்னையில் வெற்றிகரமாக நடத்துவதற்காக முனைப்போடு இந்தப் பணிகள் மாநகராட்சியால் செய்யப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில் சென்னையை பசுமையாக்குகின்ற திட்டத்தின் கீழும் இன்றைக்கு 30 லட்சம் ரூபாய் செலவிலே மரக் கன்றுகள் உருவாக்குவதற்கு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.

அதேபோல் கோவை மாநகராட்சியை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவுக்கு பல்வேறு பணிகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அன்றைக்கு 9 கோடியாக இருந்த வருமான வரவு, இன்றைக்கு 18 கோடியே 97 லட்சமாக மாற்றப்பட்டிருக்கிறது. இந்த வரவு கடந்த ஆண்டைக் காட்டிலும் 86.3 சதவீதம் அதிகம் என்பதை இந்தப் பேரவையில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அடிப்படையில் நடப்பு நிதி ஆண்டில் 10 கிலோ மீட்டர் சாலைகளை மேம்படுத்துகின்ற வகையில் மாநகராட்சிக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது.

அதேபோல் 2 கோடியே 30 லட்சம் ரூபாய் செலவிலே மாநகரில் இருக்கின்ற பள்ளிக்கூடங்கள், புதிய கட்டிடங்கள், மராமத்துப் பணிகளும் உருவாக்கப்படும். அதேபோல் ஒரு கோடியே 25 லட்சம் ரூபாய் செலவிலே கோவை வ.உ.சி. பூங்கா வளாகத்தில் சர்வதேச தர அளவில் ஒரு நவீன நீச்சல் குளம், சறுக்கு விளையாட்டு மைதானம், சுற்றுப்புற சூழ்நிலையில் பூங்கா, மற்றும் உயிரியல் பூங்கா அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும். இந்த நிதி ஆண்டிலே ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டிலே கோவை பிரதான சாலைகளில் சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கப்படும். 85 லட்ச ரூபாய் செலவிலே ஒரு மின்சார மயானம் மாநகராட்சிக்கு உருவாக்கப்படும். அதேபோல் கோவை பெரிய கடை வீதியிலுள்ள மாநகராட்சி இடங்களில் வாகனங்களை நிறுத்துவதற்காகவும் வாகன மையமும், ஒரு வணிக மையமும் அமைப்பதற்கு மாநகராட்சி நடவடிக்கையை இந்த ஆண்டில் மேற்கொள்ள இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. டி. எம். செல்வகணபதி] [1994 ஏப்ரல் 26

அதேபோல் இன்றைக்கு மருத்துவத் துறையிலும் சரி, பல்வேறு கல்வி வசதியிலும் சரி, கோவை மாநகராட்சி ஒரு தன்னிறைவு பெற்ற மாநகராட்சியாக திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இது தவிர பல்வேறு பணிகளும் இந்த ஆண்டு பல கோடி ரூபாய் கணக்கில் கோவை மாநகராட்சியால் ஆரம்பிக்கப்பட உள்ளன என்று சொல்லி நேரம் இன்மை காரணமாக இன்றைக்கு மதுரை மாநகராட்சியில் இருக்கின்ற பணிகளை மட்டும் எடுத்துச் சொல்லி முடிக்க இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவர் நேரத்தின் அருமை கருதித்தான் வற்புறுத்துகிறார் என்ற நிலைதான் இருக்கிறது.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரத்தின் அருமை கருதி, மதுரை மாநகராட்சிக்கு மட்டும் 63 கோடி ரூபாய் அளவிலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இருந்து வருகின்ற அந்தப் பகுதி (மேசையைத் தட்டும் ஒலி)— இன்றைக்கு மதுரை மாநகராட்சிக்கு மட்டும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 63 கோடி ரூபாய் அளவிலே திட்டங்களைத் தீட்டி மதுரை மாநகராட்சிக்கு வணிக வளாகங்கள், நவீன பேருந்து மையங்கள், அவைகளை மேம்படுத்துகின்ற அனைத்துப் பணிகளையும் வழங்க இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுரையிலே ரூபாய் 20 கோடி மதிப்பீட்டிலே, தமிழ் நாட்டிலேயே மிகப் பெரிய நவீன, மையப் பேருந்து நிலையம் அமைக்கும் பணி நடப்பு ஆண்டிலே ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, மதுரை மாநகரத்திலே இருக்கின்ற முக்கியப் பிரச்சினை, போக்குவரத்து நெரிசல். அதை மாற்றுவதற்காக மேலூர் சாலையிலே, 33 கோடியே 64 இலட்சம் ரூபாய் செலவிலே ஒரு மொத்த காய்கறி வணிக வளாகமும், அதேபோல 11 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவிலே ஒரு மொத்த நெல் வ்ணிக வளாகமும், இரண்டு கோடி ரூபாய் செலவிலே லாரி நிறுத்துவதற்கான ஒரு நவீன மையமும் மதுரை மாநகராட்சி உருவாக்கும் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1994 ஏப்ரல் 26] [திரு. டி. எம். செல்வகணபதி]

பிற்பகல் 6-45

மதுரை மாநகரிலே சிறுமழை பெய்தாலும்கூட, எந்த அளவுக்கு மதுரை மாநகரத்தினுடைய பிரதான சாலைகள் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றன என்பதைக் கடந்த ஆண்டு நாம் கண்ணுற்று இருந்தோம். அந்த அடிப்படையிலே அதைப் போக்குகின்ற வகையிலே, பிரதானமாக இருக்கின்ற மதுரை வாய்க்கால்களை தூர் எடுக்கின்ற வகையிலே, அங்கே நீர் தேங்குவதைத் தடுக்கின்ற வகையிலே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 7 கோடியே 72 இலட்சம் ரூபாயை அனுமதித்து இருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் இப்படிப்பட்ட பல்வேறு அரும்பெரும் பணிகளை மதுரை மாநகராட்சி நடப்பு நிதியாண்டிலே மேற்கொள்ள இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொண்டு, நகராட்சி நிர்வாகம் மானியக் கோரிக்கையிலே 71 வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கி இருக்கிறார்கள். அவர்கள் கொடுத்திருக்கின்ற கோரிக்கைகளையெல்லாம் அரசு பரிசீலித்து, நிதிநிலைக்கு ஏற்ப நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைச் சொல்லி, கற்றவர்கள் நிறைந்த இந்த மாமன்றத்திற்கு இறுதியாக நான் தெரிவிப்பதெல்லாம், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையிலான இந்த அரசு ஏழை எளியவர், வாழ வழியற்றோர், திக்கற்றோர் வாழ்விலே மலர்ச்சியைக் காண விழையும் அரசாக விளங்குகிறது என்பதை அனைத்து உலகும் அறியும் என்ற வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்றார் பேரறிஞர் அண்ணா. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வழியிலே மாண்புமிகு முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் வகுத்துத் தந்த பாதையிலே பீடுநடை போடும் இந்த நூற்றாண்டின் இணையில்லாத எங்களது தலைவி அவர்களின் தலைமையிலான (மேசையைத் தட்டும் ஒலி) அரசின் திட்டங்களுக்கு டெல்லியிலே ஆளுபவர்கள் நிதியுதவி செய்யாமல் வஞ்சிக்கின்ற சூழ்நிலை தொடர்கிறது என்றாலும், எடுத்த காரியத்தை, கொடுத்த சத்தியத்தை, நிறைவேற்றுகின்ற ஆற்றல் மிக்க தலைவியாக டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு இந்தக் கோரிக்கையிலே, எவ்வளவு திட்டங்கள் எல்லாம் மைய அரசிலே நிலுவையிலே இருக்கின்றன என்பதை நான் எடுத்துரைத்தேன். ஆட்சியை இழந்து 25 ஆண்டுகள் ஆகிவிட்டதே என்று

[திரு. டி. எம். செல்வகணபதி] [1994 ஏப்ரல் 26

புலம்புகிற கட்சியினர், இன்றைக்குக் குறுக்கு வழியிலே கோட்டைக்கு வர முடியாதா என்று துடித்துக்கொண்டு இருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள், மக்களுடைய நம்பிக்கையை பெறும் வகையில் நடந்து கொள்ளாதவர்கள், அந்தக் கட்சியின் தலைவர்களாக இருக்கும் சிலபேர், அறிக்கைகளால் மட்டுமே உயிர் வாழ்ந்து கொண்டு இருப்பவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) வெளியிலே என்ன சொல்லி இருக்கிறார்கள் என்றால் இந்த ஆட்சியை இறக்குவதற்காக பாதயாத்திரையாகக்கூட டெல்லிக்குப் போவார்களாம். காவிரிப் பிரச்சினையில் தமிழகத்தின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்; இந்த தேசத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்ற பயங்கரவாதிகள் பிரச்சினையில் தமிழகத்திற்கு உதவ வேண்டும்; மத்தியிலே நிலுவையிலே இருக்கின்ற தமிழகத்தின் கோடிக்கணக்கான திட்டங்களுக்கு நிதியுதவிகளைச் செய்ய வேண்டும் என்றெல்லாம் டெல்லிக்கு கோரிக்கைகளை முன் வைத்து பாதயாத்திரை போவோம் என்று அவர்கள் சொன்னால், வாக்களித்த மக்களுக்கு நன்றி உணர்ச்சியோடு நடந்து கொள்கிறார்கள் என்று நினைக்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், மக்களின் ஏகோபித்த ஆதரவை, செல்வாக்கைப் பெற்றிருக்கின்ற ஒரே முதலமைச்சரை குறுக்கு வழியில் வீழ்த்த வேண்டுமென்பதற்காக ஒரு பாத யாத்திரை என்றால், மக்கள் அவர்களை மன்னிப்பார்களா? (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்குச் சொல்லிக்கொள்கின்றேன். ஆணித்தரமாகச் சொல்லிக்கொள்வேன். பாத யாத்திரை மட்டுமல்ல; நீங்கள் டெல்லிக்கு அங்கப்பிரதட்சணமாக, உருண்டே போனாலும் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் ஒருநாளும் நீங்கள் ஆட்சிக்கு வர முடியாது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இன்றைய பல்வேறு விளக்கங்கள் மற்றும் அறிவிப்புகளுக்குப் பின்பும் மாண்புமிகு உறுப்பினர்கள் முன்மொழிந்துள்ள வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தத் தேவையில்லை என்று கருதுகின்றேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு எனது துறை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கையில் கோரப்பட்டுள்ள தொகைகளை அரசுக்கு வழங்கவேண்டுமென்று கோரி, (மேசையைத் தட்டும் ஒலி) என்னை ஈன்றெடுத்த தாய்க்கும் தந்தைக்கும் மேலாக தமிழகத்தின் நலன் காக்கும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் புனிதப் பணிக்கு என்னால் தினையளவு நலமேதும் கிடைக்குமேயானால், என் கடன் பணி செய்து கிடப்பதே; ஆம். என் கடன் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு பணி செய்து கிடப்பதே என்று கூறி (மேசையைத் தட்டும்

1994 ஏப்ரல் 26] [திரு. டி. எம். செல்வகணபதி]

ஒலி) இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை வணங்கி, அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஜெயக்குமார், சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டு காலத்திலே, சென்னை மாநகரத்தையே ஒரு எழுச்சி மாநகரமாக மாற்றிக் கொண்டிருக்கிற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அத்தோடு, கடந்த இரண்டாண்டு காலத்திலே என்னுடைய தொகுதியிலே சுமார் 794 ரோடுகளை எட்டரை கோடி ரூபாயிலே போட்டுக் கொடுத்த புரட்சித் தலைவிக்கு நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

அதேபோல, இந்தத் திட்டத்திலே உஸ்மான் ரோடு - மகாலிங்கபுரம் மேம்பாலம் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டதற்கு மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களுக்கும் நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

பிற்பகல் 6-50

என்னுடைய தொகுதியிலே கட்டி முடிக்கின்ற தறுவாயிலே இருக்கின்ற மேட்லி பாலம் எப்பொழுது திறக்கப்படும்?

அதேபோன்று மாண்புமிகு சட்டத் துறை அமைச்சரவர்கள் தொகுதியில் கட்டப்பட்டு முடித்திருக்கின்ற இரண்டு கல்யாண மண்டபங்களும், சுமார் 30 இலட்சம் செலவிலே கட்டப்பட்டிருக்கின்ற கல்யாண மண்டபம் எப்பொழுது திறக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட அமைச்சரவர்களுக்காகவும் கேட்டிருக்கிறார்!

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்த அந்த மேட்லி பாலம் இன்றைக்கு ஒரு ரிக்கார்ட் டயத்திலே பணிகள் முடிக்கப்படுகின்ற நிலையிலே இருக்கின்றது. அதையும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள் தெரிவித்த அந்தத் திருமணக் கூடத்தையும் விரைவில் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவைப் பெற்று பயனுக்குக் கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1994 ஏப்ரல் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஆண்டித்தேவர்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சென்னை மாநகராட்சியைப் பற்றிச் சொல்லுகின்றபொழுது, புதிதாகச் சேர்ந்த பகுதிகளிலே அடுத்த ஆண்டிலேயே அத்தனை வசதிகளும் செய்து தரப்படும் என்று சொன்னார்கள்.

மதுரை மாநகராட்சியிலே, எனது தொகுதியில், 16 வார்டுகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அது முன்னால் பஞ்சாயத்தாக இருந்தது. 18 ஆண்டுகள் வரை மாநகராட்சியில் செய்யப்படுகின்ற வசதிகள் செய்யப்படவில்லை. 18 ஆண்டுகளுக்குப் பிறகாவது சென்னைக்குச் சேர்க்கப்பட்ட பகுதி, கிராமப் பகுதிகளுக்குச் செய்கின்ற நன்மை, வசதிகளைப் போன்று எனது தொகுதியிலாவது அந்த 16 கிராமப் பகுதிகளிலிருந்து மாநகராட்சியில் சேர்க்கப்பட்ட அந்தப் பகுதிகளுக்குச் செய்து தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு அரசினுடைய ஆவலும், ஆர்வமும் இப்படிப்பட்ட பணிகளைப் பல்வேறு நிலைகளிலே எடுத்து முடிக்க வேண்டுமென்றிருந்தாலும்கூட, நிதி ஒரு பெரிய தடைக்கல்லாக இருக்கின்ற காரணத்தினால், நிதிநிலையைக் கருத்திற்கொண்டு, நிதிநிலையை அனுசரித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அவையில் அறிவிக்கின்றபொழுது, கோவை மாநகராட்சியில் பல கோடி திட்டங்களை இரண்டாண்டுகளில் செய்ததைச் சொன்னார்கள். பல ஆண்டுகளாகச் செய்யாத பணிகளை இந்த ஆட்சியில் செய்தமைக்காக மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நன்றியைக் கூறிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கோவை மாநகராட்சியில் எல்லாப் பகுதிகளிலும் சிறந்த முறையில் ரோடுகள் போடப்பட்டிருக்கின்றன; லைட் வசதிகள் செய்யப் பட்டிருக்கின்றன. அதற்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

1994 ஏப்ரல் 26] [திரு. கே. செல்வராஜ்]

எனது தொகுதியில், என்னைத் தேர்ந்தெடுத்த மக்களுக்கு வாக்குறுதி சொன்னதை நிறைவேற்றிக் கொடுத்த மாண்புமிகு அமைச்சருக்கும், நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

கோவை மாநகராட்சியை மாநகராட்சியாக அறிவிக்கின்றபொழுது அதோடு இணைக்கப்பட்ட கிராம, நகரப் பஞ்சாயத்துக்களிலிருந்த லே அவுட் பகுதிகளிலுள்ள வீட்டுமனைப் பிரிவுகளை அங்கீகரிக்கப்படாத பிரிவு எனக் கூறி, அந்தப் பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்கு மாநகராட்சியில் இப்பொழுது அதிகாரிகள் மறுக்கிறார்கள். அந்தப் பகுதிகள் மாநகராட்சியோடு இணைந்து 13 ஆண்டுகள் ஆகிறது; அந்தப் பகுதிகளுக்கு அங்கீகாரம் அளித்து, அவர்களுக்கு முழு உரிமையை, அதாவது தெரு விளக்கு வசதிகள், ரோடு வசதிகள், குடிநீர் வசதிகளை மாநகராட்சி செய்து கொடுப்பதற்கு அவர்களிடத்திலிருந்து டெவலப்மெண்ட் சார்ஜ் வசூல் செய்து, செய்து கொடுப்பதற்கு இந்த ஆண்டிலேயே மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா எனக் கேட்டுக் கொள்கிறேன்.

மாநகராட்சியிலுள்ள பள்ளிகளில்--இப்பொழுது தனியார் பள்ளிகளைவிட கோவை மாநகராட்சியினுடைய பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்கள் கோவையில் சிறந்த மதிப்பெண்களைப் பெறுகிறார்கள். அந்த மதிப்பெண்கள் பெறுகின்ற மாணவர்களையும், சிறந்த முறையில் கல்வி நிறுவனங்களில் பணிபுரிகின்ற ஆசிரியர்களையும் ஊக்குவிக்கின்ற விதத்தில் மாண்புமிகு முதலமைச்சரவர்களின் பெயரில் அவர்களுக்கு மாநகராட்சியின் சார்பாக நினைவுப் பரிசுகள் வழங்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வராஜ் அவர்கள் எனக்கு நன்றி தெரிவிப்பதைவிட இத்துனை திட்டங்களையும் இரண்டு, மூன்று நாட்களாக இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அலசி, ஆராய்ந்து இதைப் பேரவைக்கு அறிவிக்கச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் செல்வராஜ் அவர்கள், தமிழகத்தினுடைய ஈடு இணையற்ற முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்திற்குக் கிடைக்கப் பெற்றிருப்பது(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொன்னார். முதலமைச்சருக்கும் சொன்னார்; அமைச்சருக்கும் சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: இன்றைக்குத் தமிழகம் பெற்றிருக்கின்ற பெரும் பாக்கியம் என்று சொல்லி, அவர் பல்வேறு கோரிக்கைகளை இங்கே வைத்திருக்கிறார்கள். அவை முறையாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 6-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. கே. லட்சுமணன்.

திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா நதியிலிருந்து, சென்னைக்கு எவ்வளவு டி.எம்.சி. குடிநீர் வரும்; அந்தத் தண்ணீரைத் தேக்கி வைக்கிற அளவுக்கு, நம்முடைய ஏரிகளின் கொள்ளளவு இருக்கிறதா என்பதை உங்கள் மூலமாக அமைச்சரிடம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்திலே வர இருக்கிற தண்ணீரின் கொள்ளளவைக் கருத்தில் கொண்டுதான், அந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே, செங்குன்றத்திலே இருக்கிற ஏரியையும், புழல் ஏரியையும் மற்றும் சோழவரம் ஏரியையும் சுற்றி, அதன் கரைகளை மேம்படுத்துகிற பணியும் மற்றும் விரிவாக்கப் பணிகளும் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி கோ. மல்லிகா.

செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து, மாயவரம், கும்பகோணம், தஞ்சாவூர் போன்ற இடங்களுக்குச் செல்லும் பேருந்துகள் எல்லாம் சேத்தியாத்தோப்பு வழியாகத்தான் செல்ல வேண்டும். அதேபோன்று, விழுப்புரத்திலிருந்து செல்லும் பல்வேறு பேருந்துகள், சேத்தியாத்தோப்பு வழியாகத்தான் செல்ல வேணடும். இவ்வாறு பல்வேறு இடங்களிலிருந்து பேருந்துகள் வந்து செல்லும் இடமாக இருக்கும் சேத்தியாத்தோப்பில் பேருந்து நிலையம் இல்லாமல் இருக்கிறது. இக்குறையைப் போக்கி, சேத்தியாத்தோப்பில், ஒரு பேருந்து நிலையம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோரிக்கையைப் புதிது புதிதாக வைக்கக் கூடாது. அமைச்சர் பேசியதில் அல்லது மற்றவர்கள் பேசியதில் விளக்கங்களைக் கேட்கலாம். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

1994 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. க. பழனிசாமி.

திரு. க. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி-ராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், 1986 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, இன்னும் பாதி வேலைகூட நடைபெறாமல் இருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டு இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது; இத்திட்டம் எப்போது முடிக்கப் பெறும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிப் பற்றாக்குறையின் காரணமாகத்தான், அந்தத் திட்டத்திலே சிறிது சுணக்கம் ஏற்பட்டிருந்தது. இன்றைக்கு, இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆணையின்பேரில், அந்தப் பணிகள் இந்த ஆண்டிலேயே வெகுவிரைவாகச் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 27 - ஊரக வளர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 27 - ஊரக வளர்ச்சி. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை. பேரவையின் அனுமதியுடன் வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பெறுகிறது.

திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. பேரவையின் அனுமதியுடன் வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பெறுகிறது.

"ஊரக வளர்ச்சி பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், ரூ.591,95,44,000-க்கு மேற்படாத தொகை, அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

[1994 ஏப்ரல் 26

(ஆ) கோரிக்கை எண் 48 - குடிநீர் வழங்கல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 48 - குடிநீர் வழங்கல்; வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப் பெறுகிறது.

"குடிநீர் வழங்கல் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், ரூ.203,41,37,000/-க்கு மேற்படாத தொகை, அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

(இ) கோரிக்கை எண் 49 - நகராட்சி நிருவாகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 49 - நகராட்சி நிருவாகம்; வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப் பெறுகிறது. திரு. வி. கே. லட்சுமணன்.

திரு. வி. கே. லட்சுமணன்: இல்லை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.7,68,12,000/-க்கு மேற்படாத தொகை, அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

1994 ஏப்ரல் 26] [பேரவைத் தலைவர்]

ஏற்போர். 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஈ) கோரிக்கை எண் 44 - காட்டு வளத் துறை

(உ) கோரிக்கை எண் 58 - காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த மானியக் கோரிக்கையின் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

மானியக் கோரிக்கை எண் 44 - காட்டு வளத் துறை; மாண்புமிகு வனத் துறை அமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி)

இரவு 7 -00

* மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"காட்டுவளத் துறை பற்றிய 44-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.49,17,18,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதல் முறையாக தன்னுடைய மானியக் கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, உறுப்பினர்களோடு சேர்ந்து என்னுடைய வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2594, திரு.எச்.எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நீலகிரி மாவட்டத்திலுள்ள எல்லா பள்ளிக் கூடங்களும் மாணவர்களுக்கு வனவளம் காக்கும் அவசியத்தை உணர்த்தும் வகையில் வனத் துறையின் மூலமாக அதிக அளவில் மரங்களை வளர்க்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

ஏற்போர். 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஈ) கோரிக்கை எண் 44 - காட்டு வளத் துறை

(உ) கோரிக்கை எண் 58 - காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த மானியக் கோரிக்கையின் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

மானியக் கோரிக்கை எண் 44 - காட்டு வளத் துறை; மாண்புமிகு வனத் துறை அமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி)

இரவு 7 -00

* **மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"காட்டுவளத் துறை பற்றிய 44-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.49,17,18,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதல் முறையாக தன்னுடைய மானியக் கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, உறுப்பினர்களோடு சேர்ந்து என்னுடைய வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2594, திரு.எச்.எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நீலகிரி மாவட்டத்திலுள்ள எல்லா பள்ளிக் கூடங்களும் மாணவர்களுக்கு வனவளம் காக்கும் அவசியத்தை உணர்த்தும் வகையில் வனத் துறையின் மூலமாக அதிக அளவில் மரங்களை வளர்க்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. எச். எம். ராஜு] [1994 ஏப்ரல் 26

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.49,17,18,000/-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 58 - காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.39,40,75,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2630, திரு.எச்.எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நீலகிரி மாவட்டத்திலுள்ள வன வளத்தை முழுமையாக பாதுகாக்கும் அளவில் சட்டத்திற்கு விரோதமாக எந்தவிதமான மரங்களும், மாவட்டத்திலிருந்து வேறு மாநிலத்திற்கோ அல்லது வேறு மாவட்டத்திற்கோ கடத்தப்படாமல் இருக்கும் பொருட்டு வனத் துறைச் சோதனைச் சாவடிகளிலுள்ள அதிகாரிகள், பணியாளர்கள் தீவிரமாகக் கண்காணிக்கும் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,40,75,000/-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும், பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் அவைமுன்னர் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில்

1994 ஏப்ரல் 26] [திரு. கு. லாரன்ஸ்]

கொடுக்கப்பட்டுள்ளவற்றை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாக ஏற்றுக்கொண்டு, அதைக் குறிப்பேட்டில் பதிய வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்த பிறகு என்னுடைய பதிலுரையில் விரிவான விளக்கங்களைத் தர இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வனத் துறையிலேயிருந்து பெற்ற சில பொருள்களை உங்களுக்குத் தர வேண்டுமென்று வழங்கியிருக்கிறார்கள். (குறுக்கீடு) நூலக அறையிலே போய் வாங்கிக்கொள்ள வேண்டும். நல்ல டீ, நல்ல மிளகு, எது, எது, திரு. வி. கே. சின்னசாமிக்குத் தேவையோ அதுபோன்றவையெல்லாம் கொடுத்திருக்கிறார்கள். முந்திரிப் பருப்பு போன்றவையெல்லாம் கொடுத்திருக்கிறார், வாங்கிப் பயன்படுத்துங்கள். (குறுக்கீடு) அவர் கொடுத்திருக்கிறார், நன்றாக இருக்கிறது, வாங்கிப் பார்த்துவிட்டு நீங்கள் அமைச்சருக்கு நன்றி சொல்லுங்கள். திரு. எச். எம். ராஜு.

* திரு. எச். எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுவளத் துறை, காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு மானியக் கோரிக்கைகளில் எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றி தெரிவித்து என்னுடைய ஓரிரு கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நமது தமிழ்நாட்டின் மொத்தப் பரப்பளவு 1,30,057 சதுர கிலோ மீட்டராகும். இதில் வனப் பகுதியின் சதுர கிலோ மீட்டர் சுமார் 22,699 ஆகும். மொத்தப் பரப்பளவில் குறைந்தது மூன்றில் ஒரு பங்கு காடுகள் அடங்கியிருந்தால், அந்த நாடு செழிப்பான முறையில் வளரும் என்பது நாம் எல்லோரும் அறிந்தது. ஆனால், தற்போது நாம் ஆறில் ஒரு பங்குதான் வனத் துறையிலே முன்னேற்றம் அடைந்துள்ளோம். ஆகவே, இன்னும் ஆறில் ஒரு பங்கு காடுகளை புதியதாக நாம் உருவாக்க வேண்டும் என்பதை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். செயின்ட் ரிச்சர்ட் பார்பே பேக்கர் என்பவர் Man of the Trees, Father of the Trees, என்று வழங்கப்பட்டவராவார். வன வளத்தின் முக்கியத்துவத்தையும் வனச் செல்வம் காப்பாற்றப்பட வேண்டிய அவசியத்தையும் காடுகள் எவ்வாறு வளர்க்கப்பட வேண்டும், காடுகள் எவ்வாறு காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்கு முக்கியத்துவம் கொடுத்து அவர் வாழ்நாள் முழுவதையும் வன வளத்திற்காக அர்ப்பணித்தவராவார். வன வளத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் பேக்கர் அவர்களை என்றும் மறக்க முடியாது.

@. 393 முதல் 447 வரையிலான பக்கங்களில், இணைப்பு IV-ஆக அச்சிடப்பெற்றுள்ளது

[திரு. எச். எம். ராஜு] [1994 ஏப்ரல் 26

காடுகள், சோலைகள், அதிக அளவில் இருப்பதால்தான் மழை பெருகும்; மழை பெருகினால் பயிர் செழிக்கும்; பயிர் செழித்தால் நாடு வளம் பெறும்; மக்கள் நன்றாக வாழ்வார்கள். நல்ல காடுகள், நல்ல சோலைகள் நிறைந்திருந்தால் குடிநீர்த்தட்டுப்பாடு இருக்காது. தண்ணீர் அடித்துச் செல்லாமல் காடுகள், சோலைகள் நீரைத் தேக்கி வைக்க உதவுகின்றன. எப்போதும் குடிநீர்தருவதற்கு அவை உதவுகின்றன. நமக்குப் பிராண வாயுவைக் கொடுத்துவிட்டு மரங்கள், நாம் வெளிவிடும் கரியமில வாயுவை சுவாசிக்கின்றன என்பதை நாம் அறிவோம். ஒரு மரம் பல கோடி தீக்குச்சிகளைச் செய்ய உதவினாலும், ஒரு தீக்குச்சி பல கோடி மரங்களை அழிக்கவும் வழி செய்துவிடுகின்றன என்பதையும் நாம் அறிவோம். ஆகவே Prevention is better than cure என்பதற்கேற்ப இருக்கின்ற காடுகள், சோலைகள் மேலும் அழிக்கப்படாமல் எவ்வாறு பாதுகாத்துக்கொள்ளப்படவேண்டும் என்பது நமது முக்கியமான கடமையாகும்.

இரவு 7-05

1992 ஆம் ஆண்டு நடந்த ஐக்கிய நாடுகள் மாநாட்டில் காடுகள், சோலைகள் அழிக்கப்படுவதற்கு மிகவும் முக்கியமான 3 காரணங்களைக் கண்டறிந்தார்கள். காடுகள், சோலைகள் மக்கள் தங்களுடைய அன்றாட வாழ்க்கைக்கு விறகாக உபயோகப்படுத்தப்படுவது ஒன்று. காடுகள், சோலைகள் மக்களால் மரச் சாமான்கள் செய்வதற்குப் பயன்படுத்தப்படுவது இரண்டு. காடுகள், சோலைகள் அழிக்கப்பட்டு மக்கள் விவசாயத்திற்காக அந்த இடத்தைப் பயன்படுத்திக்கொள்வது மூன்று. மரச் சாமான்கள் மூலமாகக் கட்டப்படும் தொழிற்சாலைகளுக்கு நாம் அனுமதி மறுக்கலாம். மூன்றில் ஒரு பங்கு பரப்பளவு வனவளத்தை விஸ்தரிக்கும் வரையில் மரத்தை நாம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தாலும்கூட எந்தவிதமான தவறும் கிடையாது. அந்தமாதிரி காடுகள் அழிக்கப்படாமல் பாதுகாப்பதற்குரிய வகையில் மாற்றுப் பொருள்களை உபயோகப்படுத்தியாக வேண்டும். விவசாயத்திற்காகக் காடுகளை அழிப்பது நல்லதல்ல. சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பதில் முக்கியத்துவம் தந்து அதன்மூலமாக மக்கள் அடையும் நன்மைகள் பற்றி முதன்முதலில் 1972-ல் உலக மக்களின் கவனத்தை ஈர்த்தவர் அன்னை இந்திரா காந்தி ஆவார். ஆகவே நம்முடைய தமிழ்நாட்டில் மாநில அளவில் சுற்றுப்புறச் சூழல் கவுன்சில் ஒன்று அமைக்கவேண்டும். மாண்புமிகு முதலமைச்சர், வனத்துறை அமைச்சர், மற்ற அமைச்சர்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மற்ற உயர் அதிகாரிகள், ஓய்வுபெற்ற வனத்துறை அதிகாரிகள்

1994 ஏப்ரல் 26] [திரு. எச். எம். ராஜு]

ஆகியோரை அங்கத்தினர்களாகக் கொண்டு அது செயல்பட வேண்டும். சுமார் 30 பேர் கொண்ட இக்குழு ஆண்டுக்கு 3 முறை கூட்டப்பட்டு அரசுக்குத் தகுந்த பரிந்துரைகள் செய்யவேண்டும் என்ற கோரிக்கையை நான் வைக்கிறேன்.

மேலும் ஆந்திரப்பிரதேசம், கர்நாடக மாநிலம் போன்ற மாநிலங்களில் வனவள மேம்பாட்டுக் கழகங்கள் அமைத்திருப்பதுபோல் தமிழ்நாட்டிலும் உருவாக்கப்பட வேண்டும். அதாவது ஸ்டேட் பாரஸ்ட் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன். அரசுத் துறையில் எவ்வளவு செய்தாலும் இந்த இரண்டு மாநிலங்களிலும் வெற்றிகரமாக இந்தக் கார்ப்பரேஷன்கள் செயல்பட்டுக்கொண்டிருப்பதால் அதேமாதிரி கார்ப்பரேஷனை நமது மாநிலத்திலும் அமைத்துத் தந்தால், நல்ல வகையில் செயல்படும் என்ற கருத்தை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநில வனத்துறை மேம்பாட்டுக்காக மாநில வன மேம்பாட்டு நிதி கார்ப்பரேஷன் உருவாக்கப்பட வேண்டும். அதாவது ஸ்டேட் பாரஸ்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷன் அமைத்து அதன்மூலமாக நமது வனச் செல்வத்தை அதிக அளவில் சீரும் சிறப்புமாக ஆக்கவேண்டும். அந்த வகையில் இந்த நிதி கார்ப்பரேஷன் உதவும் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் வருவாய்த்துறை, வனத்துறை, பஞ்சாயத்து நிர்வாகம் ஆகியவை அடங்கிய கூட்டுக் குழுக்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட வேண்டும். இக்கூட்டுக்குழுக்கள் மாதம் ஒருமுறை கூடி அரசுக்குத் தகுந்த பரிந்துரைகளைச் செய்யவேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசினுடைய புறம்போக்கு நிலங்களில் அந்தந்த மாவட்ட சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப தகுந்த மரங்களை வளர்த்தாகவேண்டும். அவ்வாறு செய்தால்தான் வனச் செல்வம் மேலும் சீரும் சிறப்புமாகச் செழித்தோங்கும் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நீலகிரியிலுள்ள முதுமலைக் காடானது சுமார் 10,323.69 ஹெக்டேர் ஆகும். அங்கேயுள்ள மூக்குர்த்திக்காடானது 7,846 ஹெக்டேர் ஆகும். ஆக மொத்தம் நீலகிரியில் 18169.69 ஹெக்டேர் உள்ள காடுகள் மிகவும் முக்கியமான உலகத்திலேயே தலைசிறந்த காடுகள் ஆனபடியால் சிறந்த முறையில் காக்கப்பட வேண்டும்.

இரவு 7-10

ஆயிரக்கணக்கான மக்களும், ஆயிரக்கணக்கான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் இந்த ஸ்தலங்களை வந்து பார்த்து மகிழ்ந்து இந்த ஸ்தலங்கள்

[திரு. எச். எம். ராஜு] [1994 ஏப்ரல் 26

கோடிக்கணக்கான ஆண்டுகள் நல்ல வகையிலே சீரான வகையிலே சிறப்பான வகையிலே வாழவேண்டுமென்று வாழ்த்திச் செல்லுகிறார்கள். ஆகவே அந்த இரண்டு முக்கியமான காடுகளையும் மேலும் சிறப்பாக நாம் எவ்வாறு காக்க வேண்டும் என்ற வகையிலே அரசு சிறப்பான திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அடர்ந்த காடுகளில் கேரள மாநிலத்தில் உள்ளதுபோல் ஃபையர் ஸ்டேசன்களை அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை இங்கே நான் வைக்கிறேன். நம் மாநிலத்திலுள்ள 5 தேசிய பூங்காக்களில் ஸ்டேட் பாரஸ்ட் ஸ்டேசன் அமைத்து, முதலில் சொன்னது ஃபயர் ஸ்டேசன்; இப்போது சொல்வது பாரஸ்ட் ஸ்டேசன் (வனக்காவல் நிலையங்கள்) முதல் முதலாக ஆரம்பித்து வைக்கவேண்டும். அதன் மூலமாக இந்த வனச் செல்வங்களை பாழடையாமல் நாம் காப்பாற்ற முடியும் என்ற ஒரு கருத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மிருகங்கள், மரங்களையும் நீர் பகுதிகளையும் அழிக்காமல் இருக்கும் வகையில் மிருகங்களுக்கு அந்த அடர்ந்த காடுகளில் குடிநீர்த் தொட்டிகள் கட்டிக் கொடுக்க வேண்டும். மிருகங்கள் சில சமயங்களில் நமது குடிநீர் பகுதிகளிலுள்ள மரங்களை அழிக்கும் சமயத்திலே அவை அழிக்கப்படாமல் இருக்க இந்தக் குடிநீர் தொட்டிகள் அவைகளுக்கு முக்கியமாக, ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் சிறந்த முறையில் வழிவகை செய்யப்பட வேண்டும். அந்த நீர் பகுதிகளை காக்கும் வகையிலே மிருகங்களுக்கு நீர் தொட்டிகளை அமைத்துக் கொடுப்பது அவசியம். காட்டுத் தீயைக் கண்டுபிடிக்கும் வகையில் முக்கிய இடங்களில் 'ஃபையர் டவர்கள்' அமைக்க வேண்டும். அநேக இடங்களில் நாம் இந்த ஃபயர் டவர்களை அமைத்தால்தான் அதன் மூலமாக காவலர்கள் உடனடியாக தீயைக் கண்டுபிடித்து அந்தந்த இடத்திற்குச் சென்று உடனடியாக அந்தத் தீயை அணைக்கும் பணியில் செயல்படுவார்கள். கோடைக்காலங்களில் காட்டுத் தீ பரவாமல் இருக்க ஃபையர் லைன் முறையைக் கையாள வேண்டும். என்னுடைய வெட்டுத் தீர்மானத்தில் தவறுதலாக (Fine line) ஃபைன் லைன் என்று அச்சிடப்பட்டுள்ளது. பையர் லைன் முறையை மேலும் தீவிரமாகக் கடைபிடிக்க வேண்டும். நமது தமிழ்நாட்டில் ஒரு சில குறிப்பிட்ட பரப்பளவுக்கு மட்டுமே ஃபையர் லைன் என்று வைத்திருக்கிறார்கள். அது போதாது. ஆகவே இன்னும் அதிக பரப்பளவுக்கு அந்த ஃபையர் லைன் முறையை தீவிரமாகவும் அதிக பரப்பளவிலும் அமல் செய்வோமேயானால் கண்டிப்பாக வனச் செல்வத்தைக் காக்க முடியும். அந்த லைன் அளவுக்கு தாண்டி தீ செல்லாது என்ற ஒரு கருத்தை இங்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசுக்குச் சொந்தமான

1994 ஏப்ரல் 26] [திரு. எச். எம். ராஜு]

சிற்றோடைகளின் இருபுறங்களிலும் குடிநீர் உற்பத்திக்கு உதவும் மரங்களை மேலும் அதிக அளவில் வளர்க்க வேண்டும். சில மரங்கள், உதாரணத்திற்கு கற்பூர மரம் என்று எடுத்துக் கொண்டால், விவாதத்திற்கு இரண்டு பக்கமும் சொல்கிறார்கள்; கற்பூரமரம் தண்ணீரை இழுத்துக் கொள்கிறது என்று சொல்லுகிறார்கள்; சில வல்லுநர்கள் கற்பூரமரம் தண்ணீரை இழுப்பது இல்லை, தண்ணீரைத் தருகிறது என்று சொல்லுகிறார்கள். ஆகவே அந்த விவாதத்திற்குச் செல்லாமல் நீர்ப்பகுதிக்கு அதிக அளவிலே உற்பத்தியைப் பெருக்கும் மரங்களை அரசுக்குத் தெரிந்த வகையில் அந்த மரங்களை வளர்த்துக் கொடுத்தால் எந்த ஒரு காலத்திலும் கண்டிப்பாக தண்ணீர் தட்டுப்பாடு அந்தப் பகுதிகளுக்கு வராது என்பது உண்மை என்பதை சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சமூகக் காடுகள் துறைக்கு, நீலகிரி மாவட்டத்தில் பல இடங்களில் ஒப்படைப்பு செய்திருந்தும், அங்குள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்படாமல் மரங்கள் வளர்க்கப்படாமல் இருந்து வருவதை கருத்தில் கொண்டு அரசு உடனடியாக ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்த வேண்டும். அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். உதாரணமாக, நீலகிரி மாவட்டத்தில் இருக்கின்ற இத்தலார் கிராமம் பேலிதலா, முள்ளிகூர்கிராமம், அட்டுபாயில், கீழ்குந்தா கிராமம், கெரப்பாடு இந்தமாதிரி ஊர்களில் ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தாமல் அங்கே சமூகக் காடுகள் அமைப்பதற்கு மக்கள் வசதி இல்லாமல் இருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாநிலத்திலுள்ள அரசு பள்ளிக்கூடங்களைச் சுற்றி மரங்களை வளர்த்து - மாணவ மாணவியர்களை இத்திட்டத்தில் பிணைக்கவேண்டும், இன்வால்வ்மென்ட் என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். அவர்களுக்கு விழிப்புணர்ச்சி வரும் வகையில் மரங்களுக்கு மாணவ மாணவியர்களின் பெயரைச் சூட்டலாம். அந்த மாணவ மாணவியர்களின் பெயரை வைத்தால், அது என்னுடைய மரம், அது என்னுடைய செடி என்ற வகையிலே அவர்கள் கண்டிப்பாக விழிப்புணர்ச்சியுடன் அந்த மரங்களை வளர்ப்பார்கள். ஆகவே அவர்கள் பெயரை வைத்து முக்கியத்துவம் கொடுத்தால் அவர்கள் அந்த மரத்தைப் பாதுகாத்துக் கொள்வார்கள் என்ற கருத்தைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்த விஷயத்தில் ஆசிரியர்களும், பெற்றோர்–ஆசிரியர் கழகங்களும் முக்கிய பங்கேற்கவேண்டும். மாநில அளவில் சிறப்பாக மரங்கள் வளர்த்த பள்ளிக் கூடங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சருடைய வருடாந்திர சிறப்புப் பரிசும் ஊக்கத் தொகையாக ரூபாய் 5 ஆயிரமும் அந்தப் பள்ளிக்குக் கொடுக்கப்படவேண்டும் என்ற ஒரு கருத்தையும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சில கிராமங்களில் காடுகளிலும், சோலைகளிலும் விறகுகளை பொறுக்குகிற

[திரு. எச். எம். ராஜு] [1994 ஏப்ரல் 26

மக்களுக்கும் அந்த விறகுகளை வாங்க இருக்கும் மக்களுக்கும் காய்ந்த மரங்கள், வயது மிகவும் முதிர்ந்த மரங்கள், இயற்கையாகச் சாய்ந்த மரங்கள் மூலமாகப் பயன்படும் வகையில் வன இலாகா கூட்டுறவுத் துறையின் மூலம் டிப்போக்கள் வைத்து அவர்களுக்கு விநியோகம் செய்யலாம். உதாரணமாக, நீலகிரி மாவட்டத்தில் பிக்கட்டி கிராமத்திலும், எடக்காடு, தலையட்டி, நடுஅட்டி, சூண்டட்டி போன்ற பகுதிகளிலும் கேத்தி கிராமம், சாந்தூர், அட்சனகசல் போன்ற பகுதிகளிலும் விறகுத் தட்டுப்பாடு இருந்தாலும் நான் சொன்ன இந்தக் கருத்தை வனத்துறையினர் பின்பற்றினால் கண்டிப்பாக மக்கள் காட்டுச் செல்வத்தை அழிக்கச் செல்ல மாட்டார்கள் என்ற ஒரு கருத்தை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரவு 7-15

தனியாருக்குச் சொந்தமான பூமியில் வனத்துறை-, இலவச மரக்கன்றுகளை நட்டுக்கொடுத்து உதவுவதுடன் சுமார் 10 வருடங்களுக்கு ஒரு முறை மரங்களை உபயோகிக்கும் நிலையில் மக்களுக்கு 75 சதவிகிதம் வருமானத்தை அவர்களுக்குக் கொடுத்தும், வனத்துறைக்கு 25 சதவிகிதம் வருமானத்தையும் பங்கிட்டுக்கொள்ளவேண்டும் என்ற வகையிலே வனச் செல்வத்தை தீவிரமாக அதிகரித்து செயல்படுத்தமுடியும்.

அந்தந்தப் பகுதி மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தச் செய்யும் வகையிலே 10 ஆண்டுகளுக்கு அரசே அவர்களுக்கு உதவும் வகையிலேயும் மேலும் அவர்களுக்கு 75 சதவிகிதம் வருமானம் வரும் என்ற நம்பிக்கையில் வனச் செல்வத்தை, அந்த மரங்களை, அந்த நாற்றுக்களை அவர்கள் செவ்வனே பார்த்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையின் மூலமாக அவர்களின் விழிப்புணர்ச்சியை ஈர்க்கமுடியும் என்ற வகையினை இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், மக்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் வானொலி, டி.வி., சினிமா தியேட்டர்கள் வாயிலாக முக்கியமான விளம்பரங்கள் தினமும் நாம் செய்ய வேண்டும். அப்போதுதான் மரத்தினுடைய மகிமை தெரியும். வனச்செல்வத்தினுடைய மகிமையை மக்கள் எவ்வாறு காக்கமுடியும் என்ற வகையிலே இந்த விளம்பரங்களை நாம் கண்டிப்பாக செய்தே ஆகவேண்டும்.

நீலகிரி மாவட்டத்தில் வனத்துறை ஆரம்பப்பள்ளி (School) ஒன்று நடப்பு ஆண்டிலே ஆரம்பித்து வைக்கவேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே வைக்கிறேன். காரணம் என்னவென்றால் நீலகிரி மாவட்டத்தில்

1994 ஏப்ரல் 26] [திரு. எச். எம். ராஜு]

அதிக அளவிலே அடர்ந்த காடுகளும், சோலைகளும் இருப்பதனால் மாணவர்கள் அங்கே வந்து இந்த ஆரம்பப்பள்ளிகளிலே படிப்பதன் மூலமாக மாணவர்க்கும், மக்களுக்கும் முறையே அறிவும், விழிப்புணர்ச்சியும் அதிகமாகும். அங்கு வந்து படிப்பவர்களுக்கும் நீலகிரியினுடைய முக்கியத்துவம் தெரியும் வகையிலே இந்த ஆரம்பப்பள்ளியை நடப்பாண்டில் எங்களுக்கு அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவையிலே உள்ள வன நல ஆராய்ச்சி மையத்தின் காட்டு வளர்ப்பு ஆராய்ச்சிக் கிளை ஒன்று நமது நீலகிரி மாவட்டத்தில் உதகையில் அமைக்கவேண்டும் என்ற கருத்தையும் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கோவையில் வன நல ஆராய்ச்சி மையம் சிறப்பாகச் செயல்பட்டாலும் காடுகள் நிறைந்த நமது நீலகிரி மாவட்டத்தில் அதனுடைய கிளை ஒன்று அமைத்தால் மேலும் நல்ல வகையிலே இந்த வனச்செல்வத்தைக் காக்கமுடியும். இதன் மூலமாக பல ஆராய்ச்சிகளை செய்து மேலும் மேலும் எவ்வாறு சிறப்பான முறையிலே இந்த வன வளத்தைக் காக்கமுடியும் என்ற வகையிலே செய்வதற்குத்தான் அந்தக் கிளையை நமது மாவட்டத்திற்கு நாங்கள் கேட்கிறோம். வனவளம் சரிவர பாதுகாக்கப்பட்டிருப்பின் நம் நீலகிரி மாவட்டத்தில் நமது குன்னூரில் உள்ள மரப் பாலத்தில் நிலச் சரிவே ஏற்பட்டிருக்காது. வன வளம் சரிவர காக்கப்படவில்லை. அதனால்தான் நிலச்சரிவு ஏற்பட்டது. அந்த வகையிலே அடர்த்தியான மரங்கள் சோலைகள் இல்லாததனாலே 160 வருடமாக இருந்த ஒரு அருமையான ஆங்கிலேயர் காலத்தில் போட்ட ஒரு சாலை இயற்கைச் சீற்றத்தால் அழிந்து இப்போது ரோடு சரியில்லாத நிலையிலும் 45 நாட்களுக்குள்ளாக நமது அரசு ஒரு பெய்லி பாலம் போட்டு இப்போது மக்கள் - வண்டிகளும் செல்லும் வகையிலே செய்திருக்கிறார்கள். அப்போதும் கூட எப்போதாவது ஒரு பெரிய மழை வந்தாலும் அந்த ரோடுக்கு ஆபத்து என்ற நிலை உருவாகியிருக்கிறது. அந்த வகையிலே நமது வனச்செல்வத்தை இந்தமாதிரி இடங்களில் கண்டிப்பாக அதிக அளவிலே நாம் வளர்க்கவேண்டும் என்ற கருத்தை நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இயற்கைச் சீற்றங்களினால் அடிக்கடி காடுகள் அழிவதைத் தடுக்கும் வகையில் உள்நாட்டு, வெளிநாட்டு சீஸ்மோலாஜிஸ்ட்டுகள், வல்லுநர்களின் ஆலோசனைகளை ஏற்று காடுகள் பாதுகாக்கப்படவேண்டும். நம் நாட்டிலே இருந்தாலும் சரி, வெளிநாட்டிலே இருந்தாலும் சரி, அந்த சீஸ்மோலாஜிஸ்ட்களை எல்லாம் வரவழைத்து அவர்கள் மூலமாக இனிமேல் நம் வனச் செல்வங்கள் அழியக்கூடாத அளவுக்கு அவற்றை

[திரு. எச். எம். ராஜு] [1994 ஏப்ரல் 26

எப்படி காக்கமுடியும் என்ற வகையிலே நாம் ஒரு கருத்தரங்குக்கு ஏற்பாடு செய்து அதன் மூலம் செயல்படவேண்டும். ஆனால் இதன் அடிப்படையில் கண்டிப்பாக நாம் வனச்செல்வத்தை சிறப்பான முறையில் காக்கமுடியும். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், 1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலே நமது நீலகிரி மாவட்டத்தில் மேல் குந்தா கிராமத்திலேயுள்ள சின்னக்கொறை பகுதியிலுள்ள 6 ஊர்களில் சுமார் 30 ஏக்கர் காட்டு வனச்செல்வங்கள் அழிந்துவிட்டன. இன்னும் அதைப் பூர்த்தி செய்யாமல் இருக்கிறோம். இயற்கை சீற்றத்தினால் அழிய அனேக வகைகள் இருந்தாலும்கூட ஒரு செல்வத்தை அழித்த பிறகு, அழிக்கும்போது அது ஒரு நிமிடம் அல்லது 2 நிமிடத்தில் அழிந்துவிடுகின்றன. ஆனால் அந்த செல்வம் மீண்டும் அந்த பழைய ஸ்தானத்திற்கு வருவதற்கு ஆயிரம்கோடி வருடம் அல்லது 2 ஆயிரம் கோடி வருடம் என்ற அளவிலே உருவாவதால்தான் இந்தமாதிரி கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதை உடனடியாக நாம் செயல்படுத்தவேண்டும் என்ற வகையிலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

காடுகளிலே கூட மண் சரிவு, மண் அரிப்பு ஏற்படுவதையும் தடுக்கலாம். தடுப்புச்சுவர் அமைத்து மண் வளம் காக்கப்படவேண்டும். H.A.D.P. - நமது மலை மேம்பாட்டு திட்டத்தின் மூலமாக கோடிக்கணக்கான ரூபாய்களை மத்திய அரசு நமக்குத் தந்துகொண்டு இருக்கிறார்கள். சுமார் 18 கோடி ரூபாய் அளவிலே ஒவ்வொரு வருடமும் நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். அதன் மூலமாக நமது காட்டு வளத்திற்கு அதை எவ்வாறு நல்ல வகையிலே பயன்படுத்த முடியும் என்று பார்க்க வேண்டும். எந்தெந்த இடத்தில் மண் அரிப்போ மண் சரிவோ ஏற்படும் என்ற நிலை உள்ளது என வல்லுனர்கள் சொல்வார்களேயானால் அந்த இடங்களிலே உடனடியாக தடுப்புச் சுவரை ஏற்படுத்தி அந்தமாதிரி இனிமேல் அரிப்பு ஏற்படாமல் தடுக்கமுடியும் என்ற கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரவு 7-20

இயற்கைச் சீற்றத்தினால் அழியப்பட்ட காடுகள் உடனடியாக விதை தூவுவதன் மூலமாகவும், ஹெலிகாப்டர் மூலமாக விதைகள் தூவப்பட்டு, மரங்கள் நடப்பட்டு, புதுப்பித்து புதிய காட்டை நாம் உருவாக்க வேண்டும். 1988 ஆம் ஆண்டு நீலகிரி மாவட்டம் கூடலூரில் சுமார் ஒரு லட்சத்து 75 ஆயிரம் மரங்களை நாம் இழந்துவிட்டோம். அதற்கு

1994 ஏப்ரல் 26] [திரு. எச். எம். ராஜு]

ஹெலிகாப்டர் மூலமாக விதைகளைத் தூவினோம். அது சுமார் 10 சதவிகிதம் தான் வெற்றி தந்திருக்கிறது. அந்த வெற்றி போதாது. குறைந்தது 50 சதவிகிதமாவது ஹெலிகாப்டரில் விதை போடும்போது வெற்றியைத் தந்தால்தான் பழைய அளவிலே அந்தக் காட்டை நாம் புதுப்பிக்க முடியும் என்ற கருத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். வனத் துறைக்கு நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப துறை மூலம் வரும் வருவாய் அதிகரிப்பதற்கு அரசு இன்னும் சிறப்புத் திட்டங்கள் வகுக்க வேண்டும். நம் நிதி ஒதுக்கீட்டிற்கும், வருமானத்திற்கும் அநேக வித்தியாசங்கள் வருகின்றன. அதனால்தான், ஒரு அளவிற்கு சரிவர செய்வதற்காக நாம் அந்த வருவாயை அதிகரிக்கும் வழிகளிலே சிறப்புத் திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்ற கருத்தை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சில முக்கியமான இடங்களில் மருந்துச் செடிகளையும், மூலிகைச் செடிகளையும், சிங்கோனா மருந்து வகை செடிகளையும் அதிக அளவிலே வளர்க்கப்பட வேண்டும். தரமான உயர் ஜாதி விதைகளை உபயோகிக்க வேண்டும். சிங்கோனா மருந்து சுமார் 130 வருடங்களாக நமது நீலகிரி மாவட்டத்திலே சிறந்த முறையிலே பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கு என்று சுமார் 100 எக்டேர் நிலத்தை வனத் துறை ஒதுக்கிக் கொடுத்து இருக்கிறது. அங்கு முன்பு வேலை செய்து வந்த அந்தப் பணியாளர்கள் எல்லாம் பணியில்லாமல் தற்போது இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் சிறப்பான வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையிலே சிங்கோனா மருந்துச் செடிகளை அங்கு போட்டு அதன்மூலமாக நம் வனச் செல்வத்தை அதிகரிக்க முடியும் என்ற கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) எல்லா மலைப் பகுதி அடிவாரங்களிலும் செக்-போஸ்ட்கள் மிகவும் முக்கியம். எல்லா உபகரணங்களுடன், பாதுகாப்புக் கூண்டுகளுடன் 24 மணி நேரமும் அதிகாரிகள், பணியாளர்கள் கண்காணிக்க வேண்டும். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், இன்றையதினம் ஏற்கெனவே நான் நமது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் இன்றைய தினமலர் செய்திப் பத்திரிகையின் 4-ம் பக்கத்தைக் காண்பித்தேன்.** என்று போட்டிருக்கிறார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், நமது பொதுமக்கள் மலைப் பகுதி அடிவாரத்திலே, கொல்லப்பட்டி, வேலாயுதபாளையம், செங்குறிச்சி ஆகிய இடங்களிலே செக்-போஸ்ட்கள்.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ராஜு, ஏற்கெனவே உங்களுக்கு சட்டமன்ற புரசிஜர் எல்லாம் நன்றாகத் தெரியும். இந்தமாதிரி

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எச். எம். ராஜு] [1994 ஏப்ரல் 26

ஏதாவது குற்றச்சாட்டுகளைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அதை முதலிலே அமைச்சரிடத்திலே சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகளிலே வருகிற செய்தியை வைத்துக் கொண்டு, அதுதான் ஒரு ஆதாரம் என்று உறுப்பினர் காட்டுகிறார்களே, அது அவைக் குறிப்பிலே இருக்க வேண்டுமா என்பதை உங்கள் மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பெரும்பாலும் சட்டமன்றத்தினுடைய நடைமுறைகளின்படி, விதிகளின்படி இந்தமாதிரி பத்திரிகைச் செய்திகளை முழுமையான ஆதாரமாக வைத்து எதையும் பேச முடியாது. அதை இந்த அவையிலே எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டிருக்கின்ற காரணத்தினாலே திரு. எச். எம். ராஜு அவர்கள் சொன்ன அந்தக் குற்றச்சாட்டுகளை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் செக்-போஸ்ட்கள் வேண்டும் என்றுதான் கேட்டிருக்கிறேன். வேறு ஒன்றும் இல்லை. பொதுமக்கள் 3 இடங்களைச் சொல்லி, அங்கு மரங்கள் கடத்தப்படாமல் இருப்பதற்காக செக்-போஸ்ட்கள் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதைத்தான் சொல்கிறேன். வேறு ஒன்றும் சொல்லவில்லை. அந்த மர வளங்களைக் காப்பாற்றுவதற்காக அந்த 3 இடங்களில் அந்த செக்-போஸ்ட்கள் வேண்டும் என்று தான் நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நமது அரசு விளக்கக் குறிப்பில் பார்த்தால், வன விலங்குகளில் புலிகள் 95 தான் இருக்கிறது என்றும் 2,541 யானைகள், 215 சிங்கவால் குரங்குகள், 119 சிறுத்தைகள், 400 நீலகிரியைச் சேர்ந்த குரங்குகள், 1,500 காட்டுப் பன்றிகள் உள்ளன என்று தான் இருக்கிறது. இங்கு சிங்கம் எவ்வளவு என்று இல்லை. உலகப் பிரசித்திப் பெற்ற நீலகிரிமான், தார் (TAHR) என்ற மானைப் பற்றியும் ஒன்றையும் காணவில்லை. நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், அவை எல்லாம் இருக்கின்றனவா, இல்லையா ? வன வளம் சரிவர சிறப்பாகக் காக்கப்பட்டால் கண்டிப்பாக இவை எல்லாம் இருக்கும் என்பதற்காகத் தான் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் நீலகிரி, கோவை, பெரியார் மாவட்டங்கள்

[திரு. எச். எம். ராஜு]

1994 ஏப்ரல் 26]

பயன்படும் வகையில் கோவையில் வன வள சிறப்பு நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் என்னவென்றால் மக்கள் எல்லோரும் திருப்பத்தூருக்குச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. ஆகையால் கோயம்பத்தூரில் அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இரவு 7-25

தமிழ்நாட்டில் உள்ள வனக் காப்பாளர்கள் மற்றும் வனக் காவலர்கள் 14 அம்சக் கோரிக்கையை வைத்து இன்று உண்ணாவிரதம் இருந்தார்கள் என்பதை நாம் எல்லோரும் அறிகிறோம். அவர்களது ஊதிய முரண்பாட்டைத் தவிர்த்து, அவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கலாம். நமது மாண்புமிகு அமைச்சரவர்களும் அவர்களை அழைத்து, கூப்பிட்டுப் பேசலாம் என்ற கருத்தைச் சொல்வதோடு அவர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்துகொடுத்தும் சிறப்பான முறையில் பணியாற்றுபவர்களுக்கு 5,000 ரூபாய் மதிப்புள்ள விருதுகளும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காவல் துறையினருக்கு வழங்குவதுபோல் இவர்களுக்கு மானிய விலையில் அத்தியாவசியப் பண்டங்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காவல் துறையினர்போல் இவர்களுக்கு பஸ் பாஸும், வாரண்டும் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டு (மணியடிக்கப்பெற்றது) கடைசியாக வனத்துறை மேலும் சிறப்பான வகையில் பணி புரியவும், மக்களுக்குச் சேவை செய்யவும், அதிகாரிகள் பணியாளர்கள் வாழ்க்கைத் தரம் மேம்பாடு அடையவும் புதிதாக வனத்துறை கமிஷன் – பாரஸ்ட் கமிஷன் – ஒன்று அமைக்க வேண்டுமென்று கேட்டு, இதுவரையில் எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், நல்ல உள்ளங்களுக்கும் நன்றி கூறி, விடை பெறுகிறேன். ஜெய்ஹிந்த்.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். எம். ராஜு அவர்கள் ஒவ்வொரு முறையும் பேசி அமருகின்றபோது 'ஜெய்ஹிந்த்' என்ற கோஷத்தை எழுப்பி அமருகிறார். சட்டமன்றத்திலே அப்படிப்பட்ட கோஷத்தை எழுப்பலாமா என்று அறிய விரும்புகிறேன்.

[1994 ஏப்ரல் 26

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ராஜு, நீங்கள் ஒவ்வொரு முறையும் பேசுகிறபோது, இறுதியாக 'ஜெய்ஹிந்த்' என்று சொல்லுகிறீர்கள். அதை கோஷம் என்று திரு. வி. பி. சந்திரசேகர் சொல்லியிருக்கிறார். இருந்தாலும்கூட பாராளுமன்றத்தினுடைய நடைமுறைகள் என்ற புத்தகத்திலே, கவுல் அண்ட் ஷக்தர் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். அவையிலே உறுப்பினர்கள் எந்த அளவுக்கு நடந்துகொள்ள வேண்டுமென்பதை எல்லாம் பல்வேறு வகைகளிலே சொல்லிக்கொண்டு வரும்போது, புகைப் பிடித்தல் கூடாது, ஜெய்ஹிந்த், வந்தேமாதரம் என்ற சொற்றொடர்களை எல்லாம் பயன்படுத்தக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, அந்த நடைமுறைகளை இனிமேல் மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். எம். ராஜு அவர்களும் பின்பற்றலாம் என நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'ஜெய்ஹிந்த்' என்றால் 'வாழ்க பாரதம்' என்றுதான் பொருள். அதில் தவறு ஒன்றும் இல்லை. நன்றி, வணக்கம் என்று சொல்லுவது போல 'வாழ்க பாரதம்' என்று சொல்லுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களைத் தவறு என்று நான் சொல்லவில்லை. நம் பாராளுமன்றத்திலே உள்ள நடைமுறைகளில் இப்படி எல்லாம் மரபுகளைக் கடைபிடிக்க வேண்டுமென்று சொல்லி, உறுப்பினர்களுக்கு சில நடைமுறைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த நடைமுறைகளின் பிரகாரம் நீங்களும் நடந்துகொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். உங்களுக்கு இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்றால், I can quote the portion in Kaul & Shakdher – ``.. In keeping with Parliamentary conventions and etiquette, Members are forbidden: – to enter the Chamber with a coat hanging on the arm;" என்று ஆரம்பித்து அதைப்போல நிறைய சொல்லிக் கொண்டு வருகிறார்கள். ."– to smoke in the chamber;" இதெல்லாம் ஒரு கண்டிஷன். அதற்குப் பிறகு ``.. – to say 'Jai Hind' or 'Vante Matharam' or anything of the kind in the House." என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே அதனுடைய அடிப்படையில் இனிமேல் நீங்களும் இதனைத் தவிர்க்கலாம் எனக் கேட்டுக்கொள்கிறேன். அதற்குப்பதிலாக தூய தமிழில், இனிய தமிழில் நன்றி, வணக்கம் என்று சொல்லுவது உறுப்பினருக்கு நன்றாக இருக்கும். அடுத்து, டாக்டர் எம். கருப்புசாமி.

டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வனத்துறை பற்றிய 44 மற்றும் 58ஆம் எண் மானியக்

[டாக்டர் எம். கருப்புசாமி]

1994 ஏப்ரல் 26]

கோரிக்கைகளின் மீது பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கும், எங்களுடைய குல தெய்வம் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பின்புதான் மரக் கடத்தல்கள் பெருமளவுக்குத் தடுக்கப்பட்டிருக்கின்றன. 1993-94 ஆம் ஆண்டில் இதுவரை 3,350 சந்தன மரக் கடத்தல் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, 804 டன் எடையுள்ள சந்தனக் கட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளன உண்மையிலேயே அதைச் சிறந்த சாதனை என்று நான் வரவேற்கிறேன். சந்தன மரக் கொள்ளைக்காரன் வீரப்பன், தான்தோன்றித்தனமாக, வெறி பிடித்த நிலையில் வன அதிகாரிகளையும், பொது மக்களையும் சித்திரவதை செய்து, கொன்று வந்த அந்தக் கொடுஞ்செயலைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஒரு காலத்தில் இருந்தது. ஆனால் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்புதான், சிறப்புப் படை ஒன்று அமைக்கப்பட்டு வீரப்பன் கூட்டாளிகள் பலர் கொல்லப்பட்டு, வனத் துறை அதிகாரிகளும், பொதுமக்களும் பயப்படாத நிலையில் நடமாடும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

இரவு 7-30

மழைக்காலங்களிலும் புயலாலும் வனத்திற்குள் வீழ்ந்து, மக்கி வீணாகின்ற மரங்களை எல்லாம் ஏலம் விட்டு அதன் மூலம் கிடைக்கும் வருவாயை அரசு எடுத்துக்கொள்ளவேண்டும். வானுயர்ந்த மரங்களையும், குதித்தோடும் ஆறுகளையும், பசுமை நிறைந்த பள்ளங்களையும், மலர்ச் சோலைகளையும், மயிலினங்கள் கொஞ்சித் தவழும் மாமலைகளையும் எண்ணிலடங்கா வன வளங்களையும் தன்னகத்தே கொண்ட இயற்கை அன்னையின் எழில் மிக்க குழவியாய், ஆண்டவன் படைப்பில் அற்புதத்தின் பிரதிபலிப்பாய் 2,538 சதுர கிலோ மீட்டர் வனப்பகுதியைத் தன்னகத்தே கொண்டிருக்கும் நீலகிரி மாவட்டத்தின் வனப்பு பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படவேண்டுமென்றால், மரங்கள் வெட்டப்படுவது நிறுத்தப்படவேண்டும். மண் சரியாமல் இருக்கவேண்டுமானால் மரங்கள் வளர்க்கப்படவேண்டும்; மழை அதிகமாகப் பொழியவேண்டுமென்றால் அந்த மரங்கள் வெட்டப்படுவதும் வீழ்த்தப்படுவதும் கடத்தப்படுவதும் தடுத்து நிறுத்தப்படவேண்டும் என்பதை நன்குணர்ந்த இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி நீலகிரி மாவட்டத்தில் மரங்களை வெட்டக் கூடாது என்ற ஒரு சட்டத்தைக் கொண்டுவரவேண்டும். என்று கூறியிருந்தும் கூட நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மரங்கள் வெட்டப்பட்டு இரவோடு இரவாக தார்ப்பாய் போட்டு கடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

[டாக்டர் எம். கருப்புசாமி] [1994 ஏப்ரல் 26

ஒரு முறை கோத்தகிரிக்கு அருகில் நானே செக்போஸ்டில் அந்த மரங்களைப் பிடித்திருக்கிறேன். ஆனால் நீலகிரி மாவட்டத்தில் முஞ்சப்பாறை என்ற இடத்தில் அமைந்திருந்த அந்த செக்போஸ்ட் 6 மாதத்திற்கு முன்பு ஏதோ ஒரு காரணத்தினால் எடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் 3 முறை நான் விண்ணப்பத்தைக் கொடுத்து இருக்கிறேன். மாவட்டத்தின் வளர்ச்சி மன்றக்கூட்டத்தில் நீலகிரி மாவட்டத்தின் எல்லையில் மாமரத்திற்கு எல்லையில் ஒரு செக்போஸ்ட் அமைக்கப்பட்டால் இவ்வாறு கடத்தப்படுகின்ற மரங்களின் எண்ணிக்கை குறைந்துவிடும் என்று கூறியிருக்கிறேன். அதற்கு உடனடியாக நீங்கள் ஆவன செய்யவேண்டும் என்று கூறியும்கூட இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. உடனடியாக அந்த இடத்தில் செக்போஸ்ட் அமைத்துத் தரவேண்டுமென்று மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பழங்குடி மக்களுக்காக இயங்கிவரும் லாம்ப் சொசைட்டி நீலகிரி மாவட்டத்தில் மசினகுடியில் அமைந்திருக்கிறது. ஆனால் மலைவாழ்மக்களும் பழங்குடி மக்களும் பன்னெடுங்காலமாக வனத்திற்குள் சென்றுதான் காய்கள், கல்பாசம் மற்றும் ஜாதிக்காய் போன்றவற்றை சேகரித்து வருவார்கள். ஆனால் இப்போது கல்பாசம் போன்றவற்றை எடுக்கக்கூடாது என்று தடை விதித்து இருக்கிறார்கள். அந்த மலைவாழ் மக்கள் நலன் கருதி அவற்றை எடுப்பதற்கும், சேகரிப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அனுமதி வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் மசினகுடியில் உள்ள லாம்ப் சொசைட்டியாகப்பட்டது மலைவாழ் மக்கள் அங்குள்ள மூங்கில்களைக் கொண்டு கூடை போன்றவைகளைப் பின்னி வாழ்ந்து கொள்வதற்காக அமைக்கப்பட்டது. கடந்த மூன்றாண்டுகளாக அங்கே விழுந்த மூங்கில்கள் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அவை வீணாகின்றன. ஆகவே இதை உடனடியாக கவனத்தில் எடுத்துக்கொண்டு அந்த லாம்ப் சொசைட்டியில் மக்கள் பயன்படும் வகையில் மூங்கில்களையும், ரிஜெக்டட் ஃபயர்வுட் என்று சொல்லக் கூடிய விணாகிப்போன எரி பொருள்களை அந்த மலைவாழ் மக்களுக்குக் குறைந்த விலையில் வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே அவர்கள் அப்படி பெற்றுக்கொண்டு இருந்தார்கள். 2, 3 ஆண்டுகளாக அது நிறுத்தப்பட்டுவிட்டது. அதைப் பரிசீலனை செய்து அந்த மக்களுக்கு மீண்டும் குறைந்த விலையில் விறகுகள் கிடைக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வனத்துறையின் சார்பாக சாலையோரங்களில் மரக்கன்றுகள் நடப்படும்போது பாதுகாப்புக்காக இரும்பு வளையங்கள், மரத்தடுப்புகள் வைக்கிறோம். மரங்கள் வளர்ந்த பிறகும் அவை எடுக்கப்படுவதில்லை. அதனால் அந்த வளையத்தில் உள்ள இரும்புகள் மரத்தின் உள்ளே ஊடுருவி இருக்கின்ற காட்சி மேட்டுப்பாளையத்திலேயிருந்து குன்னூர் வரையில் 150 இடங்களில் இருக்கின்றன. எந்த மரங்களின் பாதுகாப்புக்காக அந்த வளையங்கள் வைக்கிறோமோ அந்த வளையங்கள் மரத்தின் வளர்ச்சியைப் பாதிக்கின்ற அளவுக்கு இருக்கின்றன. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இரும்பு வளையங்களையும் மரத் தடுப்புகளையும் உடனடியாக நீக்கி, அந்த மரங்கள் நன்றாக வளருவதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியாருக்குச் சொந்தமான பட்டா நிலங்களில் உள்ள மரங்கள், ஈட்டி மரங்களாக இருந்தாலும் தேக்கு மரங்களாக இருந்தாலும் அவற்றை வெட்டுவதற்கு அனுமதி கொடுப்பதில்லை. ஆனால் எப்படியோ அந்த மரங்கள் வெட்டப்பட்டு விடுகின்றன. பின்னர் அவை அழிக்கப்படுகின்றன. அண்டையில் உள்ள கேரள மாநிலத்தின் காடுகளில் இப்படி உதிர்ந்த அந்த மரங்கள் போன்றவற்றை தனியாரிடமிருந்து அரசாங்கமே குறிப்பிட்ட விலையில் வாங்கி பொது ஏலத்தில் விடுவதால் கிட்டத்தட்ட 25 முதல் 30 கோடி ரூபாய் அவர்களுக்கு கடந்த ஆண்டு கிடைத்திருக்கிறது. அதேபோல் தமிழகத்திலும் தனியாரிடத்தில் பட்டா நிலத்தில் உள்ள ஈட்டி, தேக்கு, சந்தன மரங்கள் போன்றவற்றை அரசே எடுத்து ஏலத்தில் விடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் தேயிலை பயிரிடப்படும்போது அங்கே மிக அதிகமான அளவில் சிறு செடிகளை வைக்கிறார்கள். 10 வருடம் கழித்து ஷேடோ ட்ரீஸ் என்று சொல்லக்கூடிய அந்த மரங்களை அகற்றினால்தான் அந்தத் தேயிலை நன்றாக வளரும். ஆனால், இன்று தனியார் இடத்தில் உள்ள அந்தச் சவுக்கு மரங்களை அகற்றுவதற்குக்கூட நாம் அனுமதி கொடுப்பது இல்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள்—ஒரு குறிப்பிட்ட ஏக்கரில் எத்தனை சவுக்கு மரங்கள் இருக்கலாம் என்று நிர்ணயித்து, அதிகப்படியான மரங்களை எல்லாம் வெட்டுவதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

இரவு 7-35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேசி முடியுங்கள்.

டாக்டர் எம். கருப்புசாமி : இன்னும் என்னுடைய தொகுதிக்கே போகவில்லை. தென் இந்தியாவிலேயே அதிகமான நிலப் பரப்பைக் கொண்டு கிட்டத்தட்ட 6,100 ஹெக்டேர் நிலப் பரப்பைக் கொண்டுள்ள டான் டீ என்று சொல்லக்கூடிய தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகத்தில் உள்ள அதிகாரிகளுக்கு அங்கே தனியாக ஒரு பயிற்சி தர வேண்டும். அங்குள்ள தோட்டத் தொழிலாளர்கள் அத்தனை பேரும் கொத்தடிமைகளாக மாற்றப்பட்டு இருக்கிறார்கள். உதாரணமாக, கடந்த 6 மாதங்களுக்கு முன்பு, அடுத்த வீட்டுக்காரன் பக்கத்து வீட்டில் உள்ளவருடன் வாய்ச் சண்டை போட்டதால் அவர்கள் இருவருக்கும் அங்கே பணி கொடுக்கப்படவில்லை. இதைப்பற்றி அங்குள்ள அதிகாரிகளிடம் நான் கூறியும்கூட, தொழிலாளர்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள். ஒரு வாய்ச் சண்டைக்காக அவர்கள் பழி வாங்கப்படுகிறார்கள் என்றால், அங்குள்ள தொழிலாளர்களை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். தோட்டத் தொழிலாளர்கள் எல்லாம் தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள். அவர்களைப் பழி வாங்கும் நோக்கத்தோடு, அவர்களை அடுத்துள்ள பகுதிகளுக்கு அடிக்கடி இட மாற்றம் செய்கிறார்கள். தொழிலாளர்களை அவ்வாறு பணி இடம் மாற்றம் செய்யக் கூடாது என்று ஒரு கொள்கையை நீங்கள் எடுக்க வேண்டும். மேலும், சேரம்பாடி, நெல்லியாளம், சேரன்கோடு ஆகிய டிவிஷன்களில் கிட்டத்தட்ட 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட நன்கு வளர்ந்த வசதியுள்ள மிளகுக் கொடிகள் உள்ளன. ஆனால், அந்த மிளகு மூலம் அரசுக்கு முறையான வகையில் வருமானம் வருகிறதா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேரம்பாடி என்ற இடத்தில் 70 படுக்கை வசதி கொண்ட ஒரு மருத்துவமனையும், கோத்தகிரி குயின்ஸ் சோலை பகுதியில் 38 படுக்கை வசதி கொண்ட ஒரு மருத்துவமனையும், மேலும் கோத்தகிரி, நெல்லியாளம் போன்ற இடங்களில் 3 மிகப் பெரிய தேயிலைத் தொழிற்சாலைகளையும் அமைத்துக் கொடுத்த மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரம் ஆகிவிட்டது, உரையை முடித்து விடுங்கள்.

டாக்டர் எம். கருப்புசாமி : நீலகிரி மாவட்டத்தில் வீடுகள் கட்டுவதற்கு அரசின் அனுமதி பெறுவதில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன. ஆகவே அதை மறு பரிசீலனை செய்து ஏழை எளியவர்கள், நடுத்தர மக்கள் பயன்பெறும் வகையில் ஒரு சட்டத் திருத்தம் கொண்டுவந்து, அங்குள்ள

மக்கள் வீடுகள் கட்டிக்கொள்வதற்கு நீங்கள் உதவ • வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பச்சைத் தேயிலை விலை மிகவும் குறைவாக உள்ளதால், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு குழு அமைத்து, அந்த விவசாயிகள் பயன்பெறும் வகையில் பச்சைத் தேயிலைக்கு நீங்கள் விலையை நிர்ணயம் செய்ய வேண்டும்.

என்னுடைய நீண்டநாள் கோரிக்கையான தோட்டத் தொழிலாளர்களுக்கும் மில் தொழிலாளர்களைப் போல் சம்பளம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், வனத் துறையில் ரேஞ்சர்ஸ், கார்ட்ஸ், பாரஸ்டர்ஸ் போன்றவர்கள் நடு காட்டுப் பகுதியில் ஜீப்போ, மோட்டார் சைக்கிளோ செல்ல முடியாத நிலையில் இருப்பதால், நீலகிரி மாவட்டத்திற்குத் தனிக் கவனம் செலுத்தி, அவர்கள் மலை உச்சிகளிலும் காடுகளிலும் செல்வதற்கு ஒரு ரேஞ்சுக்கு 2, 2 குதிரைகளாவது கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

டான் டீ தலைமை அலுவலகத்தில் பல்வேறு இலாகாக்களை கவனித்துக் கொண்டு இருப்பவர்கள் கிட்டத்தட்ட 20, 25 வருடங்களாக ஒரே இடத்தில் இருப்பதால் அவர்கள் தவறு செய்வதற்கு வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன. எனவே, 15 வருடம் அல்லது 20 வருடம் ஒரே இடத்தில் பணியாற்றும் அதிகாரிகளை அமைச்சர் அவர்கள் பல்வேறு இடங்களுக்கு மாறுதல் செய்து முறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரம் இல்லை, உரையை முடியுங்கள்.

டாக்டர் எம். கருப்புசாமி : மதுரை கோட்டம் வன அலுவலகத்தில் 5-5-1992-ல் வனக் காவலர் பணிகளுக்கான நேர்முகத் தேர்வு நடந்தும், டான் டீ-யில் பல்வேறு இடங்கள் காலியாக இருப்பதால், அந்த காலியான இடங்களில் உடனடியாக அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏழை விவசாயிகள் நிறைந்துள்ள வனப் பகுதியின் நடுப் பகுதியில் உள்ள தெங்குமராட்டா என்ற பகுதியில் இன்னும் 100 ஏக்கர் நிலம் குத்தகைக்குக் கொடுத்து அங்குள்ள ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் நீங்கள் உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[டாக்டர் எம். கருப்புசாமி] [1994 ஏப்ரல் 26

ஊட்டி முதல் ஆர்க்குச்சி, தூதுமட்டம், கொலக்கொம்பை, தைமலா, பால்மரா, பில்லூர், நெல்லித்துறை வழியாக மேட்டுப்பாளையம் வரைக்கும் ஒரு சாலை அமைத்துக் கொடுத்தால், புயல் போன்ற காலங்களில், நீலகிரி மாவட்டத்திற்குள்ளே செல்லுகின்ற அந்தச் சாலைகள் எல்லாம் பழுதுபடும்போது, அந்த மக்களுடைய வசதிக்கு பயன்படும் என்று கூறிக்கொள்கிறேன்.

கூடலூரிலிருந்து தெங்குமராட்டா வழியாக பவானிசாகருக்கு செல்வதற்காக ஒரு சாலை அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு, ஒரு பகுதி நிறுத்தப்பட்டுள்ளது. அதுகுறித்து வனத் துறையினுடைய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தி, ஒப்புதல் வாங்கிக் கொடுத்து, அந்தச் சாலை அமைக்கப்பட வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி கே. பஞ்சவர்ணம்.

இரவு 7-40

திருமதி கே. பஞ்சவர்ணம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜாதி மத வேறுபாடின்றி, மக்களுக்காக, மக்களாகவே, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் தலைவியின் இந்த மக்களாட்சியில் என்னை மறுபிறவி கண்டு இந்த மன்றத்தில் பேசுவதற்கு, என்னை வாழ வைத்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு இதயதெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதம் தொட்டு வணங்கி, வனத் துறை மானியக் கோரிக்கையில் என்னுடைய கருத்துக்களை முன்வைக்கிறேன்.

வனத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் சிறந்த செயல்திறனை உடையவராகவும், பதவியேற்ற குறுகிய காலத்திலேயே திறம்பட செயலாற்றிக் கொண்டு வருகிறார் என்பதையும் எங்கள் பகுதியில் வனங்கள் அதிகமாக இருக்கிற காரணத்தால், அதிலும் என்னுடைய தொகுதியில் இந்த டெப்போவை அமைத்திருக்கிற காரணத்தால் நான் அறிகிறேன். என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய இந்த டெப்போ, பணப்பொருளாக இருக்கக்கூடிய தேக்கு மரங்களை மையமாக வைத்திருக்கக்கூடிய இந்த இடத்திலே ஒரு பாதுகாப்புள்ள டெப்போவாக இதுவரையில் நிலவவில்லை என்பதைச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அந்த மரங்கள் அனைத்தும் எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல் திறந்தவெளியில் கிடக்கின்றன என்பதோடு மின்சார வசதி, டெலிபோன் வசதி, அங்கே பணிபுரியக்கூடிய அலுவலர்கள் தங்கியிருக்கக்கூடிய வகையில் அவர்களுக்கு இருப்பிட வசதிகள்,

1994 ஏப்ரல் 26] [திருமதி கே. பஞ்சவர்ணம்]

இதெல்லாம் இல்லாமல், பக்கத்திலே இந்த டெப்போவுக்கு அருகில் பெரிய ஆறு ஒன்று ஓடுகிறது. சமூகவிரோதிகள் இந்த டெப்போவில் அடுக்கி வைத்திருக்கிற மரங்களை வெள்ளம், புயல் வரக்கூடிய காலங்களில், அருகில் உள்ள ஆற்றில் நீர் அதிகமாக வருகிறபோது, மரத்தை அதிலே தள்ளிவிட்டு கடத்திச் செல்கிறார்கள் என்பதை நான் பல தகவல்களின் மூலம் அறிவேன். ஆகவே, உடனடியாக இந்த டெப்போவுக்கு ஒரு சிறந்த பாதுகாப்பு அளிக்கக்கூடிய வகையில் சுற்றுப்புறங்களில் எல்லாம் மதில் சுவர் எழுப்பி, அங்கு மின்சார வசதி, திடீரென்று ஏதாவது பிரச்சினைகள் வருகிறபோது தொடர்பு கொள்வதற்கு டெலிபோன் வசதி, தங்குவதற்கு இருப்பிட வசதி ஆகியவற்றை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், தனியார்கள் தேக்கு மரங்களை உற்பத்தி செய்கிறார்கள். அவர்கள் வெட்டிக் கொள்வதற்கு லைசென்ஸ் வழங்கப்படுகிறது. அப்படி பெர்மிட் வழங்கக்கூடிய நேரத்தில் இதையே ஒரு மையமாக வைத்து அருகில் இருக்கிற மரங்களை வெட்டக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதை நான் என்னுடைய கருத்தாகச் சொல்கிறேன். இப்போது எப்படி அந்தத் துறையில் இருக்கிறது என்று புரியவில்லை. அவர்கள் உற்பத்திச் செய்யக்கூடிய அந்த மரத்திற்கும் நம்பர் போட்டுதான் வெட்ட வேண்டுமென்று ஒரு முறையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நிலை அவர்களுக்குத் தொடர்ந்து இருப்பதாக எனக்குத் தகவல் வந்து கொண்டிருக்கிறது. அவர்கள் ஒரு 25 மரங்கள் வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், அதையே வைத்துக் கொண்டு அருகில் இருப்பதையும் கடத்துவதாகத் தகவல் வருகிறது. மேலும் இந்தத் துறையினைப் பொறுத்த வரையில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்திருக்கிற காரணத்தால் இதுபற்றிய கருத்துக்களை இதோடு நிறுத்தி, என்னுடைய தொகுதியில் இருக்கிற பிரச்சினைகள் பற்றி சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

வலங்கைமான் தொகுதியில் வலங்கைமான் மாரியம்மன் கோவில் பிரசித்தி பெற்ற ஸ்தலமாக இருக்கிறது. அருகில் ஆலங்குடி குரு ஸ்தலமாக இருக்கிறது. இந்தப் பெரிய ஊர், தாலுக்கா தலைநகரமாக, தொகுதியினுடைய தலைநகரமாக இருக்கிறது. இந்த ஊரின் பக்கத்தில் கும்பகோணம் இருக்கிறது. இந்தப் பகுதியில் இதுவரையில் ஒரு பேருந்து நிலையம் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த நல்ல நேரத்தில் தமிழகத்தினுடைய ஒப்பற்ற தலைவி, தாயுள்ளத் தலைவி, தட்டுங்கள் திறக்கப்படும் என்று சொல்வதற்கேற்ப, கேட்ட மாத்திரத்தில்

[திருமதி கே. பஞ்சவர்ணம்] [1994 ஏப்ரல் 26

கொடுக்கக்கூடிய நம்முடைய தலைவியினுடைய ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பேருந்து நிலையத்தை அமைத்துத் தர வேண்டுமென்று மரியாதைக்குரிய நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். மேலும் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்று இருக்கிறது. அதை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கித்தர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு அருகில் சுல்லனாறு என்று ஒரு ஆறு ஓடுகிறது. அந்த ஆற்றின் நீர் முழுவதும், தண்ணீர்த் தேக்கமான நிலையில் வெள்ளம் வருகிறபோது, அந்தப் பள்ளியே தண்ணீரில் மூழ்கிவிடுகிறது. ஆகவே, பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்தில் கொண்டு, அந்தப் பகுதியில் தடுப்புச் சுவர் ஒன்றைத் தற்காலிகமாக அமைத்துக் கொடுக்கவேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இரவு *7-45*

மேலும், வலங்கைமான் தொகுதி மிகவும் தாழ்த்தப்பட்ட தொகுதி என்பது மட்டுமல்லாமல், அந்தத் தொகுதியில் எந்தவிதமான தொழிற்கூடங்களும் இல்லை என்பதால், இந்த நடப்பு ஆண்டிலே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியில் விசேஷ கவனம் செலுத்தி, இதுவரையில் செய்யாத செயல்களை, திட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டு இருக்கிற இந்த நல்ல வேளையில், தொழிற்கூடம் ஒன்றை அமைத்துத் தரவேண்டும் என்று நான் மெத்தப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, அந்தப் பகுதியில் வடிகால் வசதியும், அதேநேரத்தில் பாசன வசதியும் மையமாகக் கொண்டு இருக்கிற ஒரே ஆறு சுல்லனாறு. அந்தச் சுல்லனாறு என்கிற பகுதியில் ஆற்றின் இரு கரைகளிலுமே, அதிகமாக மக்கள் குடியிருக்கிறார்கள். சுல்லனாறு ஆற்றில் வெள்ளம் வருகிறபோது, பக்கத்திலே இருக்கக்கூடிய வீடுகளெல்லாம் மூழ்கி, பெருத்த அளவிற்கு சேதம் ஏற்பட்டுவிடுகிறது. போன வெள்ளத்தின்போதுகூட தஞ்சை மாவட்டத்திலே வலங்கைமான் தொகுதிதான் அதிகமாகப் பாதிக்கப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே, அந்தச் சுல்லனாற்றை அழகுபடுத்தக்கூடிய வகையில், ஆழப்படுத்தக்கூடிய வகையில் புல்டோசர் வைத்துச் செய்வதோடு, இரு கரைகளிலுமே, ரிவிட்மென்ட் கட்டித் தரவேண்டும் என்றும் கரைப் பாதுகாப்பு வசதியைச் செய்து கொடுக்கவேண்டும் என்றும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

1994 ஏப்ரல் 26] [திருமதி கே. பஞ்சவர்ணம்]

மேலும், வலங்கைமான் பேரூராட்சி, அம்மாபேட்டை பேரூராட்சி, மெலட்டூர் பேரூராட்சி போன்ற பகுதிகளிலே எல்லாம் சாக்கடை வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையில் இதை நிறைவேற்றுவார்கள் என்று நினைத்திருந்தேன். எனவே, சிரமேற்கொண்டு, சாக்கடை வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்று நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், வலங்கைமான் பேரூராட்சியில் எந்தவிதமான சர்ப்லஸ் ஃபண்ட் இல்லாத ஏழை பேரூராட்சியாக இருக்கிறது. நீங்கள் அதற்குக் கொஞ்சம் பண உதவி செய்தால்தான் எல்லாக் காரியங்களையும் செய்ய முடியும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன் (மணியடிக்கப்பெற்றது).

அம்மாபேட்டை ஒன்றியத்தில் திருமண மண்டபம் கட்டுவதற்காக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும் - வலங்கைமான் தொகுதியில், அம்மாபேட்டை ஒன்றியத்தில், மாரியம்மன் கோவிலுக்கு அருகில் திருமண மண்டபம் கட்டுவதற்காக வளர்ச்சிமன்றக் கூட்டத்தில் 10 லட்சத்திற்குக் குறைவு இல்லாமல் எஸ்டிமேட் போடப்பட்டும் இதுவரையில் கட்டப்படாமல் இருக்கிறது. அதை உடனடியாகக் கட்டித் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் கூறி, பேச வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வே. பெரியசாமி.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வனத்துறை மானியக் கோரிக்கையின் மீது பேசக்கூடிய நல்வாய்ப்பினை வழங்கிய உங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் சிறப்போடு, மாட்சிமை பொருந்திய ஆட்சியை, செம்மையாக அமைத்து, யான் பிறர்க்கு அஞ்சி வாழமாட்டேன், யான் பிறரை கெஞ்சியும் ஆளமாட்டேன் என்று சொல்லி, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கிஞ்சிற்றும் யாரையும் நாடி கெஞ்சி வாழாத உத்தமத் தலைவி அவர்கள், நேர்மைத் திறத்துடனும் செயலாற்றி; வறியவர்களின் வாட்டம் போக்கும் வற்றாத ஜீவநதியாக, ஜீவ ஊற்றாக விளங்கும் எங்களின் அன்னை, புரட்சித்தலைவி அவர்கள் இருக்கும் இடம் நோக்கி வணங்கி என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன்.

[திரு. வே. பெரியசாமி] [1994 ஏப்ரல் 26

இரவு 7-50

நம் தங்கத் தலைவியின் அரசு, ஏழை எளியவர்கள் நலம் பல பெற, வறியோர்கள் வாழ்வு பெற, புதிய புதிய திட்டங்கள், மகளிர் மேம்பாட்டிற்காகப் புதிய புதிய உத்திகள், பெண் குழந்தைகள் வாழ்விற்கு புதியத் திட்டங்கள், வேளாண்மைத் துறையில் விவேகமானத் திட்டங்கள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினுடைய வளர்ச்சிக்காக மிகப் பெரிய சாதனைகள், உலகத்திலே யாருமே செய்யாத சாதனைகள், வனத்துறையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற திட்டங்கள், ஏராளமான திட்டங்கள், இந்த வனத்துறையில் 1991-92-ல் ரூ. 64.81 கோடி கொடுத்தார்கள். 1992-93-ல் ரூ. 79.61 கோடியை வன உற்பத்தி, பாதுகாப்பு, மேம்பாடு ஆகியவற்றுக்காக வழங்கினார்கள். 1994-95-ல் ரூ. 88.55 கோடி வழங்கி மிகச் சிறப்பான முறையில் இந்த வனத் துறையை நல்ல அதிகாரிகளை வைத்து இன்றைக்குப் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். 1994-95-ஆம் ஆண்டில் ரூ. 53.93 கோடி வருவாய் ஈட்டக் கூடிய அளவிற்கு பல்வேறு வகைகளிலே இந்த அரசுக்கு வருவாயைத் தேடித் தந்து கொண்டிருக்கின்றது நம்முடைய வனத்துறை. இன்னும் அதிகமாகக் கூட வருமானத்தை ஈட்டித் தரமுடியும். கடந்த காலத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் இந்த நாட்டை ஆண்டபோது நான் இந்த அவையிலே பேசினேன். வனத்திலே ஒரு வீரப்பன் இருக்கிறான். அவனைப் பிடித்துத் தடுப்போமேயானால் ஆயிரக்கணக்கான, கோடிக்கணக்கான சொத்துக்கள் அரசுக்கு மிச்சமாகும் என்று பேசினேன். அந்த வீரப்பனைப் பிடிப்பதற்கு மத்திய அரசு இராணுவத்தை அனுப்ப வேண்டும், தமிழக அரசு சிறப்பான ஒரு படையை அமைக்க வேண்டும். வனத்துறையும், காவல்துறையும் சேர்ந்து அதைத் தடுக்கவேண்டும். அருகிலுள்ள கர்நாடக மாநிலத்தினுடைய வனத்துறையும், காவல் துறையும் ஒருங்கே சேர்ந்து ஒரே சமயத்தில், ஒரே நேரத்தில் எல்லோரும் சேர்ந்து உள்ளே புகுந்து அடித்தால், அவன் ஓடிவிடுவான். பல கோடி பெறுமானமுள்ள சந்தன மரங்கள் பாதுகாக்கப்படும் என்று சொன்னேன். சாதாரணமாக அட்டி என்று சொல்வார்கள். காடுகளிலே உள்ள மரங்களை எல்லாம் வனத்துறை அதிகாரிகள் அங்கே அமர்ந்து ஏலத்திலே விடுவார்கள். ஏலம் விடுகின்றபோது ஏலத்திற்குச் சொந்தக்காரர்களே வெட்டி அடுக்கி, அடுக்கு அடுக்காகப் போட்டு அடுக்கிவைத்து வனத்துறை அதிகாரிகள் பார்த்து மார்க் போட்டு பின்னாலே அவர்கள் எடுத்துச் செல்லலாம். அப்படிச் சாதாரணமாக அந்த மரங்களை எல்லாம் காட்டுக்குள்ளே உட்கார்ந்துகொண்டு, அந்த வீரப்பன் அவற்றையெல்லாம் வெட்டி வெட்டி லாரியிலே மெதுவாக, முன்னாலே ஒரு லாரியிலே துப்பாக்கி

1994 ஏப்ரல் 26] [திரு. வே. பெரியசாமி]

வைத்துக்கொண்டு, அப்படியே குளத்தூர் வழியாக - நான் அந்தியூர் பகுதியைச் சார்ந்தவன் - குளத்தூர் வழியாகச் சென்று, கேரளாவிலே விற்றுக்கொண்டு இருந்தான். அன்றிருந்த முதலமைச்சரிடத்திலே நான் எடுத்துச் சொன்னேன். இந்தச் சட்டப் பேரவையிலேயும் பேசினேன். அவைகளைத் தடுங்கள் என்று கேட்டேன். காதிருந்தும் செவிடர்களாக, வாயிருந்தும் ஊமைகளாகக் காட்சியளித்தார்கள் என்றால் எனக்கு மனம் வேதனை அளித்தது. ஆனால் நன்றி மறப்பது நன்றன்று என்று சொல்வதைப் போன்று எங்கள் இதய தெய்வம், நான் வணங்கும் கடவுள் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னாலேதான் (மேசையைத் தட்டும் ஒலி) அதிரடிப் படையை காவல்துறையிலே ஏற்பாடு செய்தார்கள். வனத்துறையிலே ஏற்பாடு செய்தார்கள், மிக வேகமாக அவர்கள் பணியாற்றிய காரணத்தினாலேதான் பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள வனச் சொத்துக்கள் இன்றைக்கு பாதுகாக்கப்படுகிறது. பிஞ்சுக் குழந்தைகளாக இருக்கின்ற அந்தச் சந்தன மரங்கள் மிகவும் சாதாரணமாக *(சிரிப்பு)*. . . . *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வேறு ஒன்றுமில்லை. திரு. பெரியசாமி நீங்கள் இருந்த அவசரக் கோலத்தைப் பார்த்துச் சிரிக்கிறார்கள். வீரப்பனை நானே பிடிப்பதற்காகச் செல்கின்றேன் என்று வேஷ்டியை வரிந்து கட்டிக் கொண்டிருப்பதால், சிரிக்கிறார்கள். வேறு ஒன்றுமில்லை. *(சிரிப்பு)*

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த வீரப்பனைப் பிடிப்பதற்காக நம்முடைய புரட்சித் தலைவி அதிரடிப் படையை ஆரம்பித்த நேரத்தில் 22 பேரை அந்தச் சண்டாளன் வெடிகுண்டு வைத்துக் கொலை செய்தான். என்னுடைய தாயுள்ளங்கொண்ட அன்னை, நான் வணங்குகின்ற கடவுள் நன்றி விசுவாசத்தோடு எங்கள் பகுதியைச் சார்ந்த இறந்துபோன நான்கு பேருக்கு அள்ளி வழங்கினார்கள். வள்ளல்தன்மைப் போன்று. நான் பாரி வள்ளலைப் பார்த்ததில்லை. பாரி, ஓரி, காரியைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் எங்கள் அன்னை அவர்கள் அந்தக் குடும்பத்தைப் பார்த்து நீங்கள் கலங்காதீர்கள் என்று வனத்துறையில் எத்தனை பேர் இறந்தார்களோ, அத்தனை பேருக்கும் ரூ.10 இலட்சத்தை வழங்கியிருக்கிறார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சத்தியமங்கலத்திலே ஒருவர் இறந்தார். வனத்துறையைச் சார்ந்த ஒரு கார்டு இறந்தார். ஒரு வாட்சர் இறந்தார். அந்தியூர் தொகுதியில் சுப்பிரமணியம் என்ற வாட்சர் இறந்தார். பழனிசாமி என்ற கார்டு

[திரு. வே. பெரியசாமி] [1994 ஏப்ரல் 26

இறந்தார். நான்கு பேரும் வனத்திலே இந்த வீரப்பனால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். அன்றிருந்த ஆட்சியாளர்களிடம் நானும் தான் கேட்டுப் பார்த்தேன். வனத்திற்குச் செல்கின்றவர்களில் இறந்தவர்களுக்கு, அந்தக் குடும்பங்களில் உள்ள பெண்டு பிள்ளைகளுக்கு ஏதாவது கொடுங்கள் என்று சொன்னேன். ஆனால் ஒன்றுமே தரவில்லை. அரசாங்கத்தின் வாயிலாக முறையாக வரவேண்டிய பணம்தான் கிடைத்ததே தவிர, வேறு எதுவுமே கொடுக்கப்படவில்லை. ஆகவேதான் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியை, எங்கள் பகுதியிலே உள்ள மக்கள் எல்லாம் பாராட்டுகிறார்கள், வாழ்த்துகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏறத்தாழ எங்களுடைய பெரியார் மாவட்டத்திலே 10,000 பேரை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இன்றைக்கு நாங்கள் சேர்ந்திருக்கிறோம் என்று சொன்னால், இதய தெய்வம் இப்படி எல்லாம் அள்ளி வழங்குகிறார்கள் என்பதால்தான்.

இரவு *7-55*

அது மட்டும் அல்ல. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைப்பற்றி நான் சொல்லவேண்டும். நிறையபேச வேண்டும் என்றிருந்தேன். வனத்துறையிலே நிறைய காரியங்களைச் செய்திருக்கிறீர்கள். என்னுடைய தொகுதியிலே காளக்கரை முதல் செங்குளம் வரைக்கும் ரோடு மிக மோசமாக இருந்தது. அதிகாரிகளிடத்திலே கேட்டேன், அமைச்சரிடத்திலே கேட்டேன். அள்ளிக் கொடுத்திருக்கிறார்கள். பேருந்தே போகாத இடம். 2, 3 கிலோ மீட்டருக்கு இந்த ஆண்டு கொடுத்திருக்கிறார்கள். இன்னும் 10 கிலோ மீட்டர் தூரம் சாலையைத் தார்ச் சாலையாகப் போட வேண்டும். ஒரே சமயத்திலே போட்டால் போக்குவரத்து வசதி சிறப்பாக அமையும். ஏறத்தாழ அந்தியூர் தொகுதியில் பர்கூர் ஊராட்சிக்கு சேர்ந்த செங்குளம், பொன்கடை என்ற பகுதியிலே ஆதிவாசி மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆதிவாசி மக்களுக்கு அள்ளி அள்ளி வழங்குகின்ற வள்ளல்தன்மை பொருந்திய அன்னையின் ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல அதிகாரிகளைப் பெற்றிருக்கிறார்கள். ஒரே சமயத்தில் 10 கிலோ மீட்டர் தூரம் தார்ச் சாலை அமைத்தால் எங்களுக்கு உடனடியாக பேருந்து வசதி கிடைக்கும். ஆகவே அதைச் செய்து தாருங்கள். அதேபோல மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களும் இங்கே அமர்ந்திருக்கிறார்கள். எங்கள் பகுதியிலே குடிநீர் அதிக பற்றாக்குறையாக இருந்த நேரத்தில் நீங்கள்தான் செய்தீர்கள். கடந்த காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில் என்ன கேட்டாலும் கிடைக்காது. நான் அப்போது தேர்தலிலே ஜெயித்து எம்.எல்.ஏ.வாக இருந்தேன். அந்தக் காலத்திலே எனக்கு ஒன்றுமே

1994 ஏப்ரல் 26] [திரு. வே. பெரியசாமி]

செய்யவில்லை. நீங்கள் வந்தபிறகுதான் அம்மாப்பேட்டை, நெருஞ்சிப்பேட்டை கூட்டுக் குடிநீர் திட்டத்தை எங்களுக்குச் செய்து கொடுத்திருக்கிறீர்கள். மிக்க நன்றி. உங்களுக்கும், நான் வணங்கும் தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும் நன்றி. ஆனால் வழியோர கிராமங்கள் பல விடுபட்டிருக்கின்றன. அந்த மக்கள் எல்லாம் என்னைப் பார்த்து நல்ல அமைச்சரும் நல்ல முதலமைச்சரும் இருக்கிறபோது தயவுசெய்து செய்து தாருங்கள் என்று கேட்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம் வளையன்காடு ஒன்றியத்தில், அம்மாப்பேட்டை, நெருஞ்சிப்பேட்டை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் வழியோர கிராமங்களையெல்லாம் சேர்த்து, இந்த ஆண்டு பூர்த்தி செய்வதற்கு உதவி செய்ய வேண்டுமாய் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல, நான் பல விஷயங்களைப் பற்றி, எனது தொகுதியினைப் பற்றிப் பேசுவதற்கு வாய்ப்பு இல்லாமல். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பெரியசாமி, நீங்கள் இரயிலுக்குப் போகவேண்டும் என்று சொல்லித்தான் உங்களுக்கு வாய்ப்பு முன்னதாகக் கொடுத்திருக்கிறேன். உங்களுக்கு இரயிலுக்கு நேரம் ஆகிக் கொண்டிருக்கிறது. எனவே, சீக்கிரம் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. வே. பெரியசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரயிலுக்கு நான் போக வேண்டும்.** ஆகவே குறைந்தது 5 நிமிடங்கள் கொடுத்தால் விரைவாக முடித்து விடுகிறேன்.

எங்கள் பகுதியிலே பவானி ஆற்றிலேயிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் சின்னத்தம்பிபாளையம், மைக்கேல்பாளையம், நாங்குனேரி போன்ற ஊர்களுக்கு போட்டிருக்கிறார்கள். ஏறக்குறைய 8 கோடி ரூபாய் சேங்ஷன் என்று சொன்னார்கள். 2 ஆண்டுகளாக கேட்டுக் கொண்டிருக்கிறேன். புரட்சித் தலைவி அவர்கள் எவ்வளவோ ஏராளமாக செய்திருக்கிறார்கள். நீங்களும் செய்திருக்கிறீர்கள். தயவுசெய்து அந்தத் திட்டத்தை விரைவாக செய்து கொடுக்குமாறு மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். 8-வது ஐந்தாண்டு திட்டத்தில் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: துணைத் தலைவர் அவர்களே, ** என்று தவறான தகவல்களைச் சொல்கிறார். அது அவைக் குறிப்பிலேயிருக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1994 ஏப்ரல் 26

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் பெரியசாமி மற்றும் அமைச்சர் பேசிய அந்த வரிகள் அவைக்குறிப்பிலே இருந்து நீக்கப்படுகின்றன.

திரு. வே. பெரியசாமி : 8-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் காப்பு காடு வளர்ப்பு, மீட்பு காடுகள் வளர்ப்பு, முல்லைக்காடுகள் வளர்ப்பு என்று ஏறக்குறைய காடு வளர்ப்பு திட்டத்திலே நல்ல பல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள் நம்முடைய மரியாதைக்குரிய வனத் துறை அதிகாரிகள், வனத் துறை அமைச்சர் அவர்கள். வனத் துறையிலே உத்தேச வருவாய் நமக்கு 50.36 கோடி கிடைத்திருக்கிறது. நம்முடைய தரம் குறைந்த காடுகளில் மீண்டும் காடுகளை வளர்க்கவேண்டும் என்று சொல்லி— நம்முடைய விறகு தேவை மற்றும் கால்நடைத் தீவனங்களுக்காக சிலர் காடுகளை அழித்திருக்கிறார்கள்— அந்த இடங்களிலே நல்ல மரங்களை வளர்ப்பதற்கு ஏராளமான திட்டங்களைக் கொண்டு வந்து பணத்தை ஒதுக்கியிருக்கிறீர்கள். விறகு மரத் திட்டங்கள் 1994-95-இல் 2,500 ஏக்கர் ஒதுக்கி அதில் காடுகளை வளர்ப்பதற்காக 232.54 லட்சத்தை ஒதுக்கியிருக்கிறார்கள் மற்றும் கோவையிலே இன்றைக்கு வன ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றை ஆரம்பித்து உயரிய, தரம் உயர்ந்த விதைகளை அங்கே கொடுக்கிறார்கள். அதற்காகப் பூச்சி மருந்துகளும் கொடுக்கிறார்கள். தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் காடுகள் வளர்ப்புத் திட்டத்திற்காக 1994-95-ஆம் ஆண்டு ரூபாய் 9 கோடியை நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சிறப்புக் காடுகள் வளர்ச்சித் திட்டத்திற்காக 1994-95–ஆம் ஆண்டில் 3 கோடி செலவில் 1,375 ஏக்கர் பரப்பளவு நிலத்தில் காடு வளர்ப்பு செய்து கொண்டிருக்கிறார்கள். இவையெல்லாம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இந்த நாட்டிற்கு, வனச்செல்வத்தை நன்றாக வளர்க்க வேண்டும் என்று கொடுத்த நிலையாகும். 1994-95-ஆம் ஆண்டில் மேற்கு தொடர்ச்சி மலை சரிவில் 6,250 ஏக்கர் பரப்பில் 2.40 கோடி ரூபாய் செலவில் காடு வளர்ப்பு மற்றும் மண்வளப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வதற்கானத் திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். நான் நிறைய குறிப்புகளை எடுத்து வந்திருக்கிறேன். தயவுசெய்து ஒன்றிரண்டு மட்டும் பேசி முடித்துவிடுகிறேன்.

இரவு 8-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் பேசி முடித்து விடுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1994 ஏப்ரல் 26]

திரு. வே. பெரியசாமி: வனத்தைப் பாதுகாத்தால்தான் மழை வரும் என்று சொல்லி இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் உலக நாடுகளை எல்லாம் கேட்டு, உலக வங்கிகளையெல்லாம் கேட்டு ஏராளமானத் திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் சிறப்புத் திட்டத்தின் கீழ் 6 கோடி ரூபாய் செலவில் புதிதாக 2 தேயிலைத் தோட்டங்களை இந்த ஆண்டு கொண்டுவர இருக்கிறார்கள். 1994-95-ஆம் ஆண்டில் 1.20 கோடி ரூபாய் திட்டச் செலவில் 1,500 ஏக்கர் பரப்புத் திட்டத்தின்கீழ் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இந்த வனத்தைப் பாதுகாக்க வைத்திருக்கிறார்கள். தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் மூலமாகக் காகிதக் கூழ் மரங்கள் நடும் பணியை 1994-95-ஆம் ஆண்டில் 12,500 ஏக்கர் நிலத்தை எடுத்து மரக்கூழ் தயார் செய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. இப்படி இந்த நாட்டினுடைய வனம் சிறப்படைய வேண்டும் என்று புரட்சித் தலைவி அவர்கள் பாடுபடுகிறார்கள். புரட்சித் தலைவி அவர்கள் பல்லாண்டு, பல்லாண்டு வாழ வேண்டும், அவர்கள் என்றென்றும் ஆல்போல் தழைத்து, அருகுபோல் வேர்கொண்டு வளர வேண்டும் என்று வாழ்த்தி, எல்லாம் வல்ல இறைவன், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும், அத்தனை அதிகாரிகளுக்கும் நல்ல ஆயுளைக் கொடுக்க வேண்டும் என்று வேண்டி, நீங்கள் நீண்ட நேரம் கொடுத்தீர்கள், உங்களுக்கும் நன்றியைச் சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள், இன்றையதினம் உங்களுடைய மானியக் கோரிக்கைகள் நடைபெறுவதால் இங்கு இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு கேக்குகள் மற்றவைகள் எல்லாம் கொடுத்தீர்கள் என்று நினைத்தேன். திரு. பெரியசாமி அவர்கள் அதிக நேரம் பேசியதைப் பார்த்தால் நிறைய ஐஸ்கிரீம்கள் கொடுத்திருக்கிறீர்கள் போல் தெரிகிறது. அடுத்து, டாக்டர் வெ. புருஷோத்தமன்.

டாக்டர் வெ. புருஷோத்தமன்: துணைத் தலைவர் அவர்களே, சுதந்திரக் காற்று தமிழகத்தில் தென்றலாய் வீசிடச் செய்திட்ட தெய்வத்தாய் நீங்கள், ஏழ்மைக்கு விடை கொடுக்க கொடை கொடுக்கும் வள்ளலின் வாரிசு நீங்கள், மகான்களே போற்றிடும் மனித மக்களாட்சியில் நீங்கள் புனிதம், பெண் குலத்தின் காவல் தெய்வம், மெய்ஞானத்தின் ஞான பீடம், ஞானப் பழத்தைப் பெற்றிட்ட எங்கள் வெற்றித் தலைவியின் பொற்பாதங்கள் இருக்கும் திசை நோக்கி என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கம்பீரமான உருவம், கனிவான பார்வை,

[டாக்டர் வெ. புருஷோத்தமன்] [1994 ஏப்ரல் 26

கொஞ்சும் குமரித் தமிழ்ப் பேச்சு இவைகளால் இந்த அவையின் உறுப்பினர்கள் அனைவரின் அன்பை பெற்ற நம்முடைய வனத்துறையின் அமைச்சர் அவர்களுடைய. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. செழியன், திரு. தேனி பன்னீர்செல்வம் இரண்டு பேரும் கொஞ்சம் அமைதியாக இருந்தால் பரவாயில்லை.

டாக்டர் வெ. புருஷோத்தமன்: .. வனத்துறை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துகளை இம்மாமன்றத்தில் கூற விழைகின்றேன். தர்மபுரி மாவட்டத்திலே மிகவும் பின்தங்கிய தொகுதியான பெண்ணாகரம் தொகுதியில் பாதிக்கு மேற்பட்ட பகுதிகள் வனங்களைக் கொண்ட பகுதி. மலைகளைக் கொண்ட பகுதி. ஆறுகளைக் கொண்ட பகுதி, காட்டு வீரப்பனால் கடந்த காலத்திலே சூழப்பட்ட பகுதி. மக்கள் மிகவும் பயந்து நடுங்கிக் கொண்டு வாழ்ந்த பகுதி என்னுடைய பகுதி. ஆனால் நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் நல்லாட்சியிலே பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக அந்தப் பகுதி இன்று அமைதியான பகுதியாக இருந்து வருகிறது. அதற்காக அந்த மக்களுடைய சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் நம்முடைய இதய தெய்வத்திற்குக் காணிக்கையாக்குகிறேன். என்னுடைய பகுதியிலே பல்வேறு காட்டு வளங்கள் கடந்த காலத்திலே திருட்டுப் போய் அதன்காரணமாக காட்டு வளங்கள் எல்லாம் அழிக்கப்பட்டன. கடந்த 3 ஆண்டுகள் பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக அந்த மழை மறைவு பிரதேசம் இன்று மழை வரக்கூடிய பிரதேசமாக இருக்கிறதென்றால் அதற்கு நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அவர்களுடைய நல்லாட்சிதான் காரணம்.

இரவு 8-05

மேலும், என்னுடைய பகுதியில் சுமார் 300 மக்களைக் கொண்ட குடும்பங்கள் அந்த மூங்கில் காடுகளைக் கொண்டு கூடைகளைப் பின்னிக் கொண்டு வருகிற தொழிலை காலம் காலமாகச் செய்து வருகிறார்கள். இந்த மக்கள் காட்டுப் பகுதியில் உள்ள மூங்கில்களை அரசுக்கு விரோதமாக வெட்டி தங்களுடைய தொழிலைச் செய்து வருவது அரசுக்கும் தெரியும். மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்ளுவது எல்லாம் இப்படிப்பட்ட மக்களுக்குக் காட்டு இலாகாவின் மூலமாக இந்த மூங்கில் மரங்களை வழங்கவேண்டும். இதன்மூலம் காட்டுப் பகுதியில் உள்ள மரங்கள் அழிக்கப்படுவது தவிர்க்கப்படும், அந்த மூங்கில்கள் யானைகளின் உணவாக இருக்கிறது.

1994 ஏப்ரல் 26] [டாக்டர் வெ. புருஷோத்தமன்]

ஆகவே அந்த மூங்கில்கள் இல்லாமல் யானைகள் எல்லாம் அழிந்து விடக்கூடிய அபாய நிலையில் உள்ளன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காடுகளில் பல்வேறு திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆங்காங்குள்ள மக்களுக்கு, அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு, அதன் காரணமாகத்தான் பல்வேறு திட்டப் பணிகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன. அப்படிப்பட்ட திட்டப் பணிகள் மூலம் அந்தப் பகுதி மக்களுக்கு அந்த வேலைகள் வழங்க வேண்டும், அப்படி வேலைகள் வழங்கினால்தான் அந்தப் பகுதி மக்களிடையே பொருளாதார ஏற்றத் தாழ்வு இல்லாத நிலை ஏற்படும். ஆகவே, அந்தப் பகுதி மக்களுக்கு கொடுக்கவேண்டுமென்று அரசினுடைய உத்தரவு இருந்தும் அதைச் சரியான முறையில் அதிகாரிகள் கடைபிடிக்காத காரணத்தால்தான் சில இடங்களிலே சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படுகிறது. அதன்காரணமாக திட்டங்கள் பாதிக்கப்படுகின்றன. ஆகவே, இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். உடனடியாக சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கு தக்க அறிவுரை வழங்கிட கேட்டுக் கொள்கிறேன்.

ஒகனேக்கலில் வனத் துறைக்குச் சொந்தமான ஒரு முதலைப் பண்ணை இருக்கிறது. அதில் வயது முதிர்ந்த முதலைகள் இருக்கின்றன. எந்த நோக்கத்திற்காக இந்த முதலைப் பண்ணையை ஆரம்பித்தார்களோ அந்த நோக்கமே தோல்வி அடைகின்ற ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, இந்த வயது முதிர்ந்த முதலைகளை இந்தப் பகுதியிலிருந்து அப்புறப்படுத்தவேண்டுமென்று கேட்டு, சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாக்கவேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பெண்ணாகரம் பேரூராட்சி எல்லைக்கு உட்பட்ட இந்தப் பகுதியில் ஒரு ரோடு போகிறது. அந்த போடூர் ரோடு நீளம் சுமார் 3 கிலோ மீட்டர். அது வன இலாகாவிற்கு சொந்தம் என்று காலங் காலமாகக் கூறி வந்த காரணத்தால்தான் அந்தப் பகுதிக்கு ரோடு போட முடியவில்லை. அந்த ரோடு வன இலாகாவிற்குத் தேவையில்லை. இருந்தும்கூட, அந்த ரோடு போட முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, வன இலாகா 'நோ-அப்ஜெக்க்ஷன்' கொடுக்கவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

[1994 ஏப்ரல் 26

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுங்கள்.

டாக்டர் வெ. புருஷோத்தமன்: அடுத்து, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளதில் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு சேரங்கோடு தேயிலைப் பண்ணை, சேரம்பாடி, பாண்டியாறு மற்றும் புதிதாக ஆரம்பிக்கப் பட்டிருக்கின்ற கோத்தகிரி, நெல்லியாளம், ஆனைமலை இவைகளில் கழகத்தினுடைய இந்த பேக்டரிகள் இருந்தும், கடந்த 3 ஆண்டுக் காலமாக இது நஷ்டத்தில் நடந்து வருகிறது. ஒரு கழகம் ஆரம்பிக்கவேண்டும் என்றால் அது சிறப்பாகச் செயல்படவேண்டும்.

ஒரு வருடத்திலே நஷ்டம் இருக்கலாம். ஆனால் 3 ஆண்டுகள் தொடர்ந்து நஷ்டம் ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே தெரியாமல் அங்கே பல்வேறு நடவடிக்கைகள் இருக்கலாம் என்று எங்களுக்குச் சந்தேகம். நாங்கள் பொது நிறுவனங்கள் குழு சார்பாக அந்தப் பகுதியை பார்வையிட்டபோது பல்வேறு கோரிக்கைகளை எங்களிடத்தில் வைத்தபோது, அந்த நஷ்டம் உண்டாவதற்கான காரணங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே தெரியாமல் அங்கே பல்வேறு வேலைகள் நடப்பதாக, அரசுக்குத் தெரியாமல் பல்வேறு வேலைகள் நடப்பதாக, அதிகாரிகள் மூலமாக தெரியவருகிறது. எந்த அதிகாரிகள் தவறு செய்கிறார்களோ அவர்களை நீங்கள் கண்டுபிடித்து களை எடுக்கவேண்டுமென்று நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு ரப்பர் தோட்டக் கழகம். கீரிப்பாறை, பெருஞ்சாணி மற்றும் மைலாறு இந்த 3 பகுதிகளில் இதன் தொழிற்சாலைகள் இருக்கின்றன. இதுவும் கடந்த 3 ஆண்டுக் காலமாக நஷ்டத்தில் இயங்கி வருகிறது. என்ன காரணம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்—இவர்கள் திறமை வாய்ந்தவர்கள். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

*** மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நஷ்டத்தில் இயங்கி வந்தாலும் கழிந்த ஆண்டுகளை விட நஷ்டம் இன்றைக்கு குறைக்கப்பட்டு வந்திருக்கிறது. இந்த கார்ப்பரேஷன்களுடைய செயல்பாடுகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும். டான்டீ-ஐ பொறுத்தவரையில் புதிதாக சின்கோனா இத்தோடு இணைக்கப்பட்ட காரணத்தால், இப்போது

1994 ஏப்ரல் 26] [திரு. கு. லாரன்ஸ்]

தான் பிளான்டேஷன் நடந்து கொண்டிருக்கிற காரணத்தால்தான் அது ஏற்படுகிறது. ரப்பர் கார்ப்பரேஷனைப் பொறுத்தவரையில், அங்கே நடப்பட்ட மரங்கள் எல்லாம் வயது முதிர்ந்த நிலையில் இன்றைக்கு ஸ்லாட்டர் என்ற அளவிலே வெட்டி, மாற்றப்பட வேண்டிய சூழ்நிலை.

எனவே அங்கே இருக்கின்ற மரங்களெல்லாம் வெட்டப்பட வேண்டியதிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அங்கே ஈல்டு அதிகமாக இல்லாமல் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். 'டான்டீ'-யைப் பொறுத்தவரையில் இப்போது புதிதாக பிளான்டேஷன் இருக்கிற காரணத்தால்தான் அது ஏற்படுகிறது. முழுமையான பிளான்டேஷனாக அது ஏற்படுத்தப்பட்ட பின்னர், இந்த நஷ்டங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இரவு 8-10

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் புருஷோத்தமன், கடைசியாக ஒரே ஒரு நிமிடத்தில் பேசி 8.11-க்கு சரியாக முடித்துக் கொள்ளுங்கள்.

டாக்டர் வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மலைப் பிரதேசங்களில் மரங்களைக் கடத்துகின்றார்கள். இப்படிக் கடத்துபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படிக் கடத்துபவர்களுக்கு உடந்தையாக இருக்கின்ற அதிகாரிகள்மீதும் கடுமையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். அப்படி நடவடிக்கை எடுக்கும்போது, அந்த அதிகாரிகள், அவர்களுக்கே உண்டான பாதுகாப்பான அந்த டிரிப்யூனலுக்குச் சென்று, அவர்கள் ஸ்டே ஆர்டர் வாங்குகின்றார்கள். ஆகவே, இதனுடைய நோக்கமே தோல்வி அடைகின்றது. வனக் குற்றங்களைச் செய்பவர்களுக்கு உடந்தையாக இருக்கின்ற அதிகாரிகளுக்குக் கடுமையான தண்டனை வழங்க வேண்டும். அவர்கள் அந்த டிரிப்யூனலுக்குச் சென்று ஸ்டே ஆர்டர் வாங்கிக்கொண்டு வந்தாலும் அவர்களைச் 'சஸ்பண்ட்' செய்யவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்வது மட்டுமல்லாமல், வனங்களிலே அருகிலே உள்ள கிராமங்களிலே விறகுகளுக்காக ஏழை தாய்மார்கள் சென்று அந்த விறகுகளைப் பொறுக்கிக் கொண்டு வந்து அவர்கள் வாழ்க்கை நடத்துகின்ற ஒரு துர்ப்பாக்கிய சூழ்நிலை உள்ள இடங்களிலே அவர்களின்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. வெ. புருஷோத்தமன்] [1994 ஏப்ரல் 26

என்னுடைய தொகுதியினுடைய ஒரே ஒரு கோரிக்கையினை மட்டும் இந்த மாமன்றத்திலே வைக்க மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்அவர்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே மத்தாளப்பள்ளம் என்று ஒரு இடம் இருக்கிறது. ஏற்கெனவே நம்முடைய பொதுப் பணித் துறை என்ஜினியர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு, அரசினுடைய பரிசீலனையிலே சுமார் 4 கோடி ரூபாய் திட்டத்திலே, சுமார் 700 ஏக்கர் நிலங்களிலே பாயக்கூடிய, விளைச்சல் நிலங்களாக வரக்கூடிய, ஒரு அருமையான திட்டம் அரசின் பரிசீலனையிலே உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தை என்னுடைய தொகுதிக்கு இந்த நிதி ஆண்டிலே கொடுத்து உதவவேண்டுமென்று இந்தப் பேரவையின் வாயிலாகக் கேட்டுக் கொண்டு, எங்களுடைய பரந்து, விரிந்துள்ள பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, பாப்பாரப்பட்டி ஊராட்சி ஒன்றியம் என்ற புதிய ஊராட்சி ஒன்றியத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு இங்கு வாய்ப்புக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய பணிவன்பான நன்றியையும் வணக்கத்தையும் கூறி, அமர்கிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் வெ. புருஷோத்தமன் அவர்களுக்கு முன்பாக பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியசாமி அவர்கள் ** என்று சொன்ன அந்த வரிகளை அவைக்குறிப்பிலே இருந்து நீக்கவேண்டுமென்று சொன்னேன். அதிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன அந்த வார்த்தைகளையும், இப்போது நான் சொன்ன அந்த வார்த்தைகளையும் சேர்த்து அவைக்குறிப்பிலே இருந்து நீக்க உத்தரவிடுகின்றேன். அடுத்து திரு. வி. கே. லட்சுமணன்.

திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக நிலப் பகுதியை 5 விதமாகப் பிரித்து, காடும் காடு சார்ந்தவற்றுக்கு முல்லை நிலம் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். உலகம் முழுவதும் உள்ள மொத்த நிலப்பரப்பிலே காடுகள் 30 சதவீதம் இருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. தேசிய வனக் கொள்கை– National Forest Policy-கூட இந்தியா முழுமையுமாக இருக்கிற மொத்த நிலப்பரப்பிலே 33 சதவீதம் காடுகள் இருக்க வேண்டுமென்று சொல்கிறது. ஆனால், தமிழ்நாட்டிலே இன்றைக்கு இருக்கிற நிலைமை 17.45 சதவீதம்தான்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1994 ஏப்ரல் 26] [திரு. வி. கே. லட்சுமணன்]

காடுகள் இருக்கின்றன. அந்தக் காடுகள்கூட சிறிய முட்செடிகளை எல்லாம் சேர்த்துத்தான் இந்த 17.45 சதவீதம் இருக்கிறதேயொழிய, அடர்ந்த காடுகள் மட்டுமே எவ்வளவு இருக்கிறது என்று கணக்குப் பார்த்தால், 8.3 சதவீதம்தான் இருக்க முடியும் என்று விஷயம் தெரிந்தவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, அந்தக் காடுகளை மிக வேகமாகவும், விரைவாகவும் பெருமளவில் வளர்த்தாக வேண்டும், காடுகள் எதற்கு என்று சொன்னால், ஒன்று, மழை வளம் செழிப்பதற்காக காடுகள் வேண்டும், இரண்டாவது இன்றைக்கு உலகம் முழுவதும் இருக்கிற ஒரு கூக்குரல் என்ன என்று சொன்னால்—'we want carbohydrate, not hydrocarbons' என்று மக்கள் கூக்குரல் எழுப்புகின்றார்கள், அதற்கு என்ன பொருள் என்று சொன்னால், Fossil fuels என்று சொல்லப்படுகிற பெட்ரோல், டீசல், நிலவாயு போன்றவைகளை எரிப்பதன் மூலமாகத் தோன்றுகின்ற அந்த வாயுக்கள் நிலத்தினுடைய வெப்பத்தை அதிகரிக்கச் செய்கின்றன. அதை "குளோபல் வார்மிங்" என்று சொல்கிறார்கள். "கிரீன் ஹவுஸ் எஃபெக்ட்" மூலமாக—பசுமைக் குடில் விளைவு மூலம் இன்றைக்கு உலகத்தினுடைய வெப்பம் அதிகரித்து, கடல் தண்ணீர் நிலத்திற்குள்ளே வரவும், துருவத்திலே இருக்கிற பனி மலைகள் உருகி வெள்ளப் பெருக்கு எடுக்கவும் வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தினாலே மரத்தை அதிகமாகப் பயிர் செய்து, அந்த மரங்கள் இந்த பாஸில் ப்யூயல் மூலமாக வருகிற அந்தக் கரியமில வாயுவை எடுத்துக் கொள்ளும் என்று சொன்னால், இந்த விளைவுகள் தடுக்கப்படும் என்ற ஒரு காரணத்திற்காகவும், இன்றைக்கு மரங்களைப் பெருமளவில் வளர்க்க வேண்டுமென்ற கருத்து அதிகமாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

இரவு 8-15

இன்றைக்குத் தமிழ்நாட்டிலே இருக்கிற வன வளத்தைப் பார்க்கிற போது, அதை நாம் காப்பாற்றுவது மட்டுமல்ல; அதை வேகமாக இன்னும் பல மடங்கு அதிகரிக்கச் செய்ய வேண்டும்.

மரத்தைப் பயன்படுத்துவதை நாம் எந்த அளவிற்குக் குறைக்கின்றோமோ அந்த அளவிற்கு வன வளம் பெருகுவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஏற்கனவே சொல்லப்பட்டதைப்போல், மரத்தை இறக்குமதி வேண்டுமானால் செய்யலாமேயொழிய மரத்தை அதிகமாகப் பயன்படுத்துவதை நாம் தவிர்க்க வேண்டும். அதற்குப் பதிலாக எஃகை உபயோகப்படுத்தலாம் அல்லது வீடு கட்டுவதற்காக பிளாஸ்டிக் பொருட்களைகூடப் பயன்படுத்தலாம். கதவு, ஜன்னல் போன்றவைகளுக்குக் கூட பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்த முடியும். அப்படிப்பட்ட நிலையிலே

[திரு. வி. கே. லட்சுமணன்] [1994 ஏப்ரல் 26

மரத்தினுடைய தேவையைக் குறைக்க வேண்டியது மிக மிக இன்றியமையாதது.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு ஜவுளித் தொழில் என்று சொன்னால், எத்தனையோ விதமான இழைகள் இருக்கின்றன. ரேயான் இருக்கிறது; பிளாஸ்டிக் இருக்கிறது; சாதாரண பஞ்சு இழைகள் இருக்கின்றன. இப்படிப் பல இழைகள் இருக்கின்றன.

ஆனால், இன்றைக்கு ரேயான் தொழில் ஊக்குவிக்கப்படுவதால் அதன் மூலமாக இந்தக் கூழ் மரங்கள் அதிகமாக வெட்டப்பட்டு, அந்தக் காடுகள் எல்லாம் அழிக்கப்படுவதைப் பார்க்கிறோம். கூழ் மரங்கள் வெட்டப்படுகின்றபொழுது காடுகள் அழிவது மட்டுமல்ல; ரேயான் தொழிலினாலே அந்தப் பகுதியிலே இருக்கிற ஆற்று நீர் மாசு படுத்தப்படுவதைப் பார்க்கிறோம். ஆகவே, இந்தத் தொழிலுக்கு அதிகமான ஊக்கம் தருவதைத் தவிர்த்து, அதற்காக இந்த ரேயான் இழைக்காக வேண்டி கூழ் மரங்கள் வெட்டப்படுவதை நாம் தவிர்ப்பதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு காகிதம் செய்வதிலேகூட பல சமயங்களிலே இந்தக் கற்பூர மரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் காகிதம் செய்வதற்கு வேறு சில மூலப் பொருட்கள் இருக்கின்றபொழுது அதிகமாக மரங்களை, கற்பூர மரங்களையும் பயன்படுத்துவதன் மூலமாகக் காடுகள் அதிக அளவிலே அழிக்கப்பட்டு வருகின்றன என்பதை நாம் கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

கோவையிலே ஒரு வனக் கல்லூரி இருக்கிறது. பழைய காலத்திலே கிராமத்து மக்கள் அந்தக் கல்லூரிப் பக்கம் வருகின்றபொழுது அதற்கு ஒரு பெயர் சொல்லி அழைப்பார்கள். செத்த காலேஜ் என்று சொல்லுவார்கள். ஏன் அப்படிச் சொல்கிறார்கள் என்று தெரியாது. ஆனால் அந்தக் கல்லூரி பெயர் செத்த காலேஜ். என்னுடைய வேண்டுகோள் எல்லாம், அந்தக் கல்லூரி நகரத்தினுடைய மையப் பகுதியிலே இருக்க வேண்டுமென்று அவசியமில்லை. அந்தக் கல்லூரியிலே இருக்கிற மரங்களே குறைவு; கட்டிடங்கள்தான் அதிகம். ஆகவே, அந்தக் கல்லூரியை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ராஜு அவர்கள் கேட்டதுபோல நீலகிரிக்கோ அல்லது சிறுவாணிக்கோ அல்லது ஆளியாறுக்கோ மாற்றினோம் என்று சொன்னால் அந்தப் பகுதியை மிகவும் விலை உயர்ந்த நிலத்தை நல்ல காரியங்களுக்காகப் பயன்படுத்த முடியுமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 26] [திரு. வி. கே. லட்சுமணன்]

இன்றைக்குக் காடு என்று சொல்கிறபொழுது நமக்கு நினைவுக்கு வருவது சந்தன மரம்தான். நான் சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பற்றிச் சொல்ல வரவில்லை. ஆனால், சந்தன மரம் என்பது தமிழ்நாட்டிலே விளைகின்றது; கேரளாவிலே விளையவில்லை. கேரளாவிலே சந்தன மரத்தை வைத்துக்கொள்வதற்கோ அல்லது ஓரிடத்திலேயிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு செல்வதற்கோ எந்தவிதமான தடையும் கிடையாது. கேரளாவிலே சந்தன மரத்தைப் பயன்படுத்தி சந்தனத் தைலம் எடுக்கப்படுகிறது. என்னுடைய கேள்வியெல்லாம் இந்தச் சந்தன மரத்தைப் பயன்படுத்தித் தமிழ்நாட்டிலே தைலத்தை எடுக்க முடியும் என்று சொன்னால், இந்தத் தடைகளையெல்லாம் நீக்கிவிட்டு, தாராளமாக சந்தன மரத்தை வளர்க்கலாம், யார் வேண்டுமானாலும் வளர்க்கலாம் என்றால், அதன் மூலமாக இந்தச் சந்தன மரக் கடத்தல் பிரச்சனைகளுக்கு நாம் எளிதாகத் தீர்வு காண முடியும் என்று நம்புகிறேன். எனவே, சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பற்றி, கவலைப்படாமல் நாம் இந்த முடிவினை எடுக்க முடியும் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இரவு 8-20

அடுத்தாக, மரங்களை வளர்ப்பதிலே, இன்றைக்கு பல நவீன விஞ்ஞான முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. குறிப்பாக, 'டிஷ்யூ கல்ச்சர்' மூலமாக நல்ல மரங்களை வளர்ப்பதற்கு விஞ்ஞானிகள் முயற்சிகள் மேற்கொண்டு, வெற்றி கண்டிருக்கிறார்கள். நாம் அந்த முறையைக் கையாண்டு, பெரிய அளவிலே, 'டிஷ்யூ கல்ச்சர்' மூலமாக மரங்களை வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நம்முடைய மாணவர்களிலே பல பேர், பி.எஸ்.சி., பாரஸ்ட்ரி படித்திருக்கிறார்கள். அவ்வாறு படித்த மாணவர்கள் பலபேருக்கு உரிய வேலை கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே, இந்த அரசு அந்த மாணவர்களுக்கு, அவர்கள் படித்த கல்விக்கேற்ப, உரிய வேலைகளைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

வனக் காவலர்களும், வனக் காப்பாளர்களும் பல கோரிக்கைகளை இந்த அரசுக்கு வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகள், இங்கே ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தக் கோரிக்கைகளைப் பார்க்கிறபோது, அவை மிக நியாயமான கோரிக்கைகள் என்றே தெரிகிறது. அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு, எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லி, இந்த வாய்ப்புக்கு நன்றிகூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

[1994 ஏப்ரல் 26

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்:* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"எட்டும் அறிவினில், ஆணுக்கு இங்கே பெண் இழப்பில்லை காண்" என்று கனவு கண்டார் பாரதி. அந்தக் கனவுகளை நனவாக்கும் எங்கள் பாட்டுடைத் தலைவியே, திராவிடத் திருநாட்டின் போர் முரசே, விந்தியத்திற்குத் தெற்கே, விரியாமல் குறுகிப்போன, இந்திய மண்ணின் இணையற்ற தலைவியே, அன்புத் தாயே, புரட்சித்தலைவி அவர்களே, உங்களை வணங்கி, என் உரையைத் துவங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடையது அரண்"

என்று தெய்வப் புலவர் திருவள்ளுவர், தன்னுடைய திருக்குறளில், 742-வது பாடலில் சொல்கிறார். நம்முடைய நிதித்துறை அமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், "அழகான நீர் நிறைந்த அகழியும், வெட்டவெளியான பரந்த நிலமும், உயர்ந்த மலையும், அழகிய குளிர்ந்த நிழல் தரும் அடர்ந்த காடும் ஆகிய இந்நான்கினை உடையதே அரணாகும்" என்று அவர்கள் தன்னுடைய கருத்தினை எடுத்து வைத்திருக்கிறார்கள்.

இந்த "மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல் காடும் உடையது அரண்" என்ற திருக்குறளை வனத்துறையினுடைய அனைத்து வன அலுவலகங்களிலும், பொதுமக்கள் மற்றும் அலுவலர்கள் பார்வையில் படும்வண்ணம் பிரதான இடங்களில் பொறிக்கப்பட வேண்டும் என நம்முடைய இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை இந்த அவையில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கை வளங்களில் வன வளம், மனித வாழ்க்கைத் தரத்தையும், பொருளாதாரத்தையும் மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதைத் தெரிந்துகொண்ட தமிழக அரசு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையில் பல்வேறு நல்ல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை இங்கே மெத்தப் பணிவன்போடு எடுத்து வைக்கிறேன்.

1994 ஏப்ரல் 26] [திரு. கு. லாரன்ஸ்]

வனத்துறையைப் பொறுத்தவரையில், வனத் துறையினர் வனத்தினுடைய வளத்தையும், உயிரினங்களையும் பாதுகாப்பது, அதுபோன்று வன வளத்தையும், வன உயிரினங்களையும் பெருக்குவது, இவற்றிற்கெல்லாம் மேலாக, மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக உழைப்பது என்கிற அள்வுக்கு 3 மிக முக்கியக் குறிக்கோள்களோடு செயல்பட்டு வருகிறார்கள். இன்றைக்கு, மத்திய-மாநில அரசுகள் குறித்து, சர்க்காரியா கமிஷன் மாநில அரசுகளுக்கு அதிகாரத்தினைப் பிரித்து அளிப்பது குறித்த செயற்குறிப்பை ஆய்வு செய்த பின்னர், 5 ஹெக்டேர் பரப்பு வரையிலான வன நிலங்களை வனம் சாரா நோக்கங்களுக்குப் பயன்படுத்த மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்க வேண்டுமென்று பரிந்துரை செய்துள்ளது. எனினும், மேற்சொன்ன பரிந்துரைகளை ஆய்வு செய்த இவ்வரசு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏதோ, காங்கிரஸ் கட்சியின் பெயரைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவாவது, இரண்டு உறுப்பினர்கள் வந்து விட்டார்கள்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: பொது நோக்கங்களுக்கு அவசரமாக தேவைப்படும்போது ஒரு ஹெக்டேர் பரப்பு வரையிலான நிலத்தை மத்திய அரசின் முன் அனுமதியின்றி பயன்படுத்த இந்த அரசு அனுமதி கோரியிருந்தது.

எனவே, அவசரப் பொதுத் தேவைகளைக்கூட இன்றைக்குச் செயலாக்க முடியாத சூழ்நிலை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒருவரும் இல்லையென்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். இரண்டு பேர், காங்கிரஸ் மானத்தைக் காப்பாற்றி விட்டார்கள் என்று சொன்னேன். திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* எதிர்க் கட்சிக்காக இப்போது நாங்கள் வந்திருக்கிறோம்.

இரவு 8-25

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: எனவே, மாநில அரசினுடைய கோரிக்கையை மத்திய அரசு ஏற்று செயல்படுத்த வேண்டுமென்று இங்கே எடுத்து வைக்கிறேன்.

அதேபோன்று, மத்திய அரசு நிதி ஒதுக்கீடுகளில், மாநிலங்களின் வன மேம்பாட்டிற்காக அதிகமான நிதி ஒதுக்கீடுகள் செய்ய வேண்டும் என்பதை கோரிக்கையாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. கு. லாரன்ஸ்] [1994 ஏப்ரல் 26

அண்மையில் வீசிய புயல் மற்றும் வெள்ளத்தினால் தஞ்சாவூர், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் ஆகிய மாவட்டங்களில் சுமார் 1,04,000 தேக்கு மற்றும் சிசு மரங்கள் அழிந்துவிட்டன. இவை காற்றில் வேருடன் சாய்ந்துவிட்டன. இந்தப் பகுதிகளிலே மட்டும் மரங்களை வளர்க்கவும், இம்மாவட்டங்களில் ஒரு புதியத் திட்டம் புரட்சித் தலைவி அவர்களால் உருவாக்கப்பட்டு 5 ஆண்டுக்கால நடவடிக்கையாக ரூ.281.18 இலட்சம் நிதி ஒதுக்கீட்டுடன் ஒருங்கிணைந்த காடு வளர்ப்புத் திட்டம் மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று இங்கே வேண்டுகிறேன்.

அதேபோன்று, தமிழகத்தில் வனப்பாதுகாப்பு தொடர்பாக புதிய முறைகளைக் கொண்டு வரவும் சதுப்பு நிலக் காடுகளைப் பாதுகாக்கவும், தகவல் தொடர்பை மேம்படுத்தவும், சட்டவிரோதமாக மரங்கள் வெட்டப்படுவதைத் தடுக்கவும், உலக வங்கியிடம் அல்லது நன்கொடை வழங்கும் ஏனைய முகவரமைப்புகளிடம் நிதியுதவி பெற ரூ.300 கோடி செலவில் தமிழ்நாட்டிலுள்ள காடுகளில் உயிரின வாழ்க்கைச் சூழலைப் பாதுகாக்கும் முக்கியத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை மத்திய அரசு நிறைவேற்றித் தருமாறு இம்மன்றத்தில் வேண்டுகிறேன். இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதன் மூலமாக மலைப் பகுதிகளைச் சுற்றியுள்ள சுமார் 800 கிராமங்களில் வசிக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவுவதோடு, 1.80 இலட்சம் ஹெக்டேர் பரப்புள்ள வனப் பகுதியைப் புதியதாக உருவாக்க முடியும் என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்கிறேன்.

இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு தமிழ்நாடு கல்வித் திட்டத்தில் வனங்கள், காட்டு விலங்குகள் சம்பந்தமாக பாடத் திட்டத்தினை இணைத்திருப்பது, தமிழக அரசின் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய கல்வித் திட்டத்தில் இது ஒரு புதிய திருப்புமுனையாகும் என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், 22,669 சதுர கிலோ மீட்டர் வனப் பகுதியில் 1,185 பீட்கள் உள்ளன. தற்போது 3,000 முதல் 10,000 ஹெக்டேர் வரை ஒரு பீட் பகுதியாகும். இதை ஒரு பீட்டுக்கு 1,000 முதல் 2,500 வரையாக குறைப்பதற்கு இவ்வரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இவ்வாண்டு 30 புதிய பீட்கள் உருவாக்கப்பட்டு அதன் மூலம் 30 வனக்காவலர்கள் மற்றும் வனக்காப்பாளர்கள் பணியமர்த்தப்

படவிருக்கிறார்கள். இன்றைக்கு தமிழகத்தில் 17 வகையான வன உயிரினங்கள், அதுபோன்று 123 வகையான தாவர வகைகள் அழிந்து வருவதை இந்த அரசு தெரிந்துகொண்டு அவைகளைக் காப்பாற்றுவதற்கு, உற்பத்தி அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருநெல்வேலி, குற்றாலம், நீலகிரி மற்றும் பழனி மலைகள், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, சேலம் மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களில் இவ்வைகளைப் பேணிப்பாதுகாக்கின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தர்மபுரி மாவட்டத்திலே சித்தேரி அமைந்திருக்கிறது. இப்பகுதியில் சுமார் 45 இலட்சங்கள் செலவில் சந்தன மர ஜீன்பூல் ஒன்று அமைக்க இந்த அரசு முடிவு எடுத்து, இந்த ஆண்டு அதற்கென ரூ.15 இலட்சங்கள் செலவிடத் திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் அந்தப் பகுதியில் வாழ்கிற மலைவாழ் மக்கள் 5,455 பேரில் 1,500 பேருக்கு ஆண்டுதோறும் வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்கிறேன்.

அதைப்போன்று கொடநாடு ஜீன்பூல், கோத்தகிரி ஜீன்பூல் போன்ற ஜீன்பூல்கள் அமைக்கப்பட்டு அழிந்து வருகிற பல்வேறு தாவர பொக்கிஷங்கள் இன்றைக்கு காப்பாற்றப்பட்டு வருகின்றன. அவைகள் நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டம், கோத்தகிரி, கொடநாடு போன்ற பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, ஜீன்பூல்கள் எல்லாம் அழிந்து வருகின்ற வனப் பொக்கிஷங்கள், மரங்கள் காப்பாற்றப்பட்டு வருகின்றன. இதில் இன்றைக்கு விஞ்ஞான ரீதியான அணுகுமுறையோடு ஆண்டுதோறும் ரூ. 5 முதல் ரூ. 8 இலட்சங்கள் வரை செலவு செய்யப்பட்டு வருகிறது. அவைகளை எல்லாம் இன்றைக்கு சர்வதேச அளவில் இருக்கின்ற வனச் சம்பந்தப்பட்ட ஆய்வு செய்கிற மாணவர்கள் வந்து பார்த்து மிகுந்த பயனடைகிறார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் வனப் பகுதியிலிருந்து திருட்டுத்தனமாகச் சந்தன மரம் வெட்டிக் கடத்தப்படுவதை இந்த அரசு கடுமையான சட்டங்கள் மூலமாகத் தடுத்திருக்கிறது. இந்த அவையில் இருக்கிற குறிப்புகளில்கூட 15.3.1994 வரை உள்ள குறிப்புகள்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், 31.3.1994 வரை 3,544 சந்தன மர வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, 843 டன் சந்தன மரம் கைப்பற்றப்பட்டது. அதன் மதிப்பு ரூ.14.75 கோடியாகும். 661 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. 350 வாகனங்கள் அரசால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்பதையும், இதனால் இதுகாறும் நடைபெற்ற நடவடிக்கைகளில் இந்த ஆண்டு அதிகமான அளவு சந்தனக் கடத்தல்

தடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரவு 8-30

சந்தனமரக் கடத்தலை தமிழ்நாடு அரசும், கர்நாடக அரசும் மட்டும் தான் தீவிரமாகத் தடுத்து வருகின்றன. எனவே மத்திய அரசும் தேசிய அளவில் சந்தன மரக் கடத்தலைத் தடுக்க சரியான சட்டங்களைக் கொண்டுவர வேண்டும் என்று மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம். இவ்வாறு தொடர்ந்து நாம் வற்புறுத்தி வருகிறோம். எனவே சந்தன மரத்தை தேசிய மரமாகக் கருதி மத்திய அரசு அந்தக் கடத்தலைத் தடை செய்வதற்கு உரிய வகையில் மற்ற மாநிலங்களும் ஒத்துழைக்கவேண்டிய வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சந்தன மரங்களைப் பொறுத்தவரையில் நாம் ஒன்றும் வெட்டுவதில்லை. மாறாக இறந்துபட்ட சந்தன மரங்களை நாம் வைத்திருக்கிறோம். இதை நாம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவோ அல்லது வியாபாரிகள் ஏற்றுமதி செய்யவோ மத்திய அரசு அனுமதிக்கவேண்டும். இல்லையெனில் மிகுந்த விலைமதிப்புள்ள சந்தனக் கட்டைகள் மக்கி இற்றுப் போகக்கூடிய வாய்ப்புள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அது போன்று திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள களக்காடு பகுதியில் வனக்குற்றங்களைக் கடுமையாகத் தடுத்து இருக்கிறோம். சிவகிரி மலைப்பகுதியில் கஞ்சா பயிரிடப்படுவது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட வனக் குற்றங்கள் எல்லாம் தமிழகத்தின் எல்லையோரத்தில் இருக்கிற கேரளா பார்டரில் நடைபெறுகின்றன. அதற்குக் காரணம் என்ன என்று சொன்னால் நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் அது உயர்ந்த மலைப் பகுதியாகும். கடுமையான காட்டுப்பகுதியாகவும் இருக்கிறது. ஆனால் கேரளாவைப் பொறுத்த வரையில் அங்கேயிருந்து அவர்கள் வருவதற்கு எளிதான வாய்ப்பு இருக்கிறது. சிவகிரியைப் பொறுத்தவரையில் கஞ்சா பயிரிடுவதை நாம் பல நேரங்களில் ரெய்டு செய்து அழித்திருக்கிறோம். 4.10.93-ல் அந்தப் பகுதியில் சென்று அங்கே இருக்கிற குற்றவாளிகளைக் கைது செய்திருக்கிறார்கள். இரண்டு நாட்டுத் துப்பாக்கிகள், வெடி மருந்துப்பொருட்கள், கஞ்சா விதைகள் ஆகியவற்றைக் கைப்பற்றி இருக்கிறார்கள். ஒரு குடிசையும், ஒரு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கஞ்சா செடியையும் தீயிட்டுக் கொளுத்தியிருக்கிறார்கள். அதுபோன்று சங்கரன்கோயில் வனப்பகுதியில் 5.1.94-ல் ரெய்டு செய்யப்பட்டுள்ளது.

1994 ஏப்ரல் 26] [திரு. கு. லாரன்ஸ்]

4.1.94-லும் ரெய்டு செய்யப்பட்டிருக்கிறது. சென்ற முறை இந்தச் சட்டமன்றத்தில் பேசுகிறபோதுகூட மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரன் அவர்கள் 18.3.94-ல் பேசுகிறபோது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால் 28.1.94-ல் அந்தப் பகுதியில் ரெய்டு செய்து கஞ்சாப் பயிர்கள் அழிக்கப்பட்டு கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் 18.3.94-ல் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னார். ஆனால் அந்தப் பகுதியில் பொறுப்பு அதிகாரியாக இருக்கின்ற இம்மானுவல் என்ற வாட்சர் 6.1.94-ல் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். முத்தையா என்ற கார்ட் 6.1.94-ல் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். குமாரவேலு என்கிற பாரஸ்டர் 22.2.94-ல் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். லட்சுமணன் என்ற ரேஞ்சர் 24.2.94-ல் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். இவர்கள் எல்லாம் அந்தக் குற்றத்தைச் செய்தார்கள் என்பதல்ல. இவர்கள் அந்தப் பகுதியில் இருக்கின்ற காரணத்தால் இவர்களுக்கு அந்தப் பொறுப்பு உண்டு என்ற காரணத்தால் இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவர்னர் உரையின்போது கூறியது சரியானதல்ல என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் 25 இலட்சம் ரூபாய் செலவில் வாகனங்கள், ஆயுதங்கள், ஒயர்லெஸ் கருவிகள் வாங்க ஆணை பிறப்பித்து இருக்கிறார்கள். புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சி வருகிற நேரத்தில் 319 துப்பாக்கிகள்தான் இந்தத் துறை வசம் இருந்தன. தற்போது 457 துப்பாக்கிகள் இருக்கின்றன. 320 வாகனங்கள்தான் இருந்தன. இன்றைக்கு 499 வாகனங்கள் துறை வசம் உள்ளன. இதன்மூலம் வனத்துறையின் பாதுகாப்பு இன்றைக்கு செம்மைப்படுத்தப்பட்டு இருக்கிறது. இதற்குமேல் இன்றைக்கு 25 இலட்சம் ரூபாயை மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் தந்திருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் வனத்துறைக்கு எதிராக சிவில் கேஸஸ் இன்றைக்கு 1020 உயர்நீதிமன்றத்திலும், டெல்லி உச்சநீதிமன்றத்தில் 18 வழக்குகளும் இருக்கின்றன. ஒட்டுமொத்தமாக இன்றைக்கு 82602.77 ஹெக்டேர் நிலங்கள் அடங்கிய பகுதியைப் பொறுத்த வரையில் சிவில் கேஸஸ் இருக்கின்றன. எனவே நீலகிரி மாவட்டதைப் பொறுத்தவரையில் 81067 ஹெக்டேரும், கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 1482 ஹெக்டேரும்தான் வழக்கில் இருக்கின்றன. இவைகள்தான் அதிகமான நிலங்களைப் பொறுத்தவரையில் உள்ள வ்ழக்குகள் ஆகும். அந்த வழக்குகளை எல்லாம் இன்றைக்கு ஒழுங்காக நடத்துவதற்கு, அவற்றில்

[திரு. கு. லாரன்ஸ்] [1994 ஏப்ரல் 26

உள்ள ஓட்டை உடைசல் என்ன என்பதைத் தெரிந்து கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கும் வகையில் வனத்துறை அலுவலகத்திலேயே ஒரு கன்சர்வேட்டர் இதற்குப் பொறுப்பேற்கிற வகையில் ஏற்பாடு செய்து தமிழகத்தில் இருக்கிற வனங்களைப் பொறுத்தவரையில் உள்ள சிவில் வழக்குகளைக் கவனிக்கவும், ஆக்கிரமிப்புகள் இருக்கின்ற இடத்தில் இருந்து வெளியேற்றுவதற்காக நீதிமன்றத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதைக் கவனிக்கவும், நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோன்று இன்றைக்கு சைதாப்பேட்டையில் வனத்துறைக்கென பனகல் கட்டிடத்தில் 39573 சதுர அடிகள் கொண்ட 4 மாடிப் பகுதிகள் உருவாக்க புரட்சித்தலைவி அவர்கள் அனுமதித்து இருக்கிறார்கள். அதாவது 3.91 கோடி ரூபாய் விலையில் வாங்குவதற்கு அனுமதித்து இருக்கிறார்கள்.

இரவு 8-35

எனவே விரைவிலே அந்த வனத்துறை அலுவலகம் ஒரு புதிய கட்டிடத்தில் வர இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். 1995-96-ம் ஆண்டு முதல் 5 ஆண்டுகளுக்கு சுவீடன் நாட்டு உதவியுடன் ரூ.60 கோடி பெற்று சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்பட இருக்கிறது. தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ரூ.8.00 இலட்சம் செலவில் மாவட்ட வன அலுவலகக் கட்டிடமும், ரூ.2.00 இலட்சம் செலவில் வனக்காவலர்/ வனக்காப்பாளர்களுக்கு வீட்டு வசதியும் செய்து அளிக்கவும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி). திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் நாங்குநேரி அம்பாசமுத்திரம் பகுதியில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடர் சரகங்களில் 817 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் புலிகள் சரணாலயம் அமைந்துள்ளது. இதைச் சுற்றி உயிரின வாழ்க்கைச் சூழல் மேம்பாட்டுத் திட்டத்திற்கு உலக வங்கி உதவியுடன் ரூபாய் 7 கோடியே 53 இலட்சம் அளவில் ஒரு திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது. இதன் மூலம் 57 கிராமங்களை ஒட்டியுள்ள காடுகளிலுள்ள 4500 குடும்பத்தினர் பயனடைய 6,33,140 மனித உழைப்பு நாட்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கப்படும். இவற்றுடன் மண் வளப்பாதுகாப்பு, மரம் நடுதல், நீர்வரத்து மேம்பாடு, குடிநீர் வழங்கல், எரிபொருள் வசதிகள், வீட்டு வசதி, புனர்வாழ்வு போன்ற ஒருங்கிணைந்த பகுதி மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதன் மூலமாக அப்பகுதியினுடைய சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு இதய தெய்வம்

1994 ஏப்ரல் 26] [திரு. கு. லாரன்ஸ்]

புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்கு எடுத்து வைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் தற்போது 101 வனச் சோதனைச் சாவடிகள் அமைந்துள்ளன. வணிகவரித்துறை, போக்குவரத்துத் துறை, வருவாய்த்துறை மற்றும் வனத்துறை இணைந்து பூந்தமல்லி, களியக்காவிளை, ஒசூர் ஆகிய ஊர்களில் ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிகள் அமைக்க மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன் மூலமாக வனப் பாதுகாப்பை பலப்படுத்த முடியும் என்று இந்தத் துறை மிகச் சிறப்பாகக் கருதுகிறது. அதுபோன்று வனப் பொருட்களை இதர பொருட்களுக்கிடையே மறைத்து வைத்துக் கடத்துவதைக் கண்டுப்பிடிப்பதற்காக முதன்முதலாக 1990-91 ஆம் ஆண்டு கோவையில் வனத்துறைக்கென பிரத்யேகமான ஒரு மோப்ப நாய்ப்படை அமைக்கப்பட்டது. இப்படையின் உதவியால் தமிழ்நாட்டிலிருந்து கேரளாவுக்கு கடத்தப்படும் சந்தனக் கட்டைகள் பல வழக்குகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இத்தகைய மோப்ப நாய்ப்படை இதர சந்தன மரப் பகுதிகளுக்கும் தேவையென்பதை உணர்ந்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சென்னை, சேலம் மற்றும் வேலூரில் மூன்று மோப்ப நாய்ப்படை அமைக்க மொத்தம் ரூ.2.57 இலட்சம் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். விரைவில் சேலம், வேலூர் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் மோப்ப நாய்ப் படைகள் அமைக்கப்பட உள்ளன என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன் (மேசையைத் தட்டும் ஒலி). இது போன்று மலைவாழ் மக்களுக்காக இன்றைக்கு வேலை வாய்ப்புக்களை புரட்சித் தலைவி அளித்திருக்கின்றார்கள். விதிகளை எல்லாம் தளர்த்தி, வனக் காப்பாளர்களை வனக்காவலர்களாக இன்றைக்கு தமிழகத்தில் 181 பேருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் இது நடைபெற்றிருக்கிறது. எனவே தமிழகம் இந்த அளவில் முன்னோடி மாநிலம் என்பதையும் இந்தியாவிலே வேறு எந்தப் பகுதியிலும் இதுபோல் மலைவாழ் மக்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்படவில்லை என்பதையும் இந்த அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி). இதுபோன்று இன்றைக்கு சமூகக் காடுகள் திட்டத்தின் கீழ் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு II-C பட்டா வழங்குகிறது. இதன் முன்னோடியாக சென்ற ஆண்டு சிவகங்கைப் பகுதியிலே நாம் உருவாக்கினோம். அங்கே 4111 மரங்கள் 575 பேருக்கு நாம் II-C பட்டாவாகப் போட்டுக் கொடுத்திருக்கிறோம். மீண்டும் 3237 மரங்களை 472 பேருக்கு நாங்கள் வழங்க இருக்கிறோம். அதுமட்டுமல்ல ஏழை எளிய

[திரு. கு. லாரன்ஸ்] [1994 ஏப்ரல் 26

மக்கள் பயன்படும் அளவுக்கு புளி, வேம்பு, புங்கன், நெல்லி, கடுக்காய் போன்ற நல்ல மரங்கள் வளர்ப்பதற்கு ஏழை எளிய மக்களுக்கு இன்றைக்கு II-C பட்டா கொடுப்பதற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதுபோன்று ஏழை மக்கள் குறிப்பாக பெண்கள் காய்ந்த விறகுகளைச் சேகரித்து அருகில் உள்ள நகரங்களில் விற்று அவர்களின் வாழ்க்கையினை நடத்தி வருகின்றனர். எனவே காய்ந்த விறகுகளைச் சேகரம் செய்யவும் தலைவாதுகள் போன்றவைகளைக் குறைந்த விலைக்குக் கொடுத்து அதில் கிடைக்கும் லாபத்தை மகளிர் பகிர்ந்து கொள்ள ஏதுவாக பல்வேறு இடங்களில் மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படும். முதற் கட்டத்தில் நீலகிரி மாவட்டம், பெரியகுளம், கொடைக்கானல் மற்றும் குற்றாலம் போன்ற பகுதிகளில் இச்சங்கங்கள் உருவாக்கவும் புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

சென்ற ஆண்டு வாரிசு அடிப்படையில் இந்தத் துறையில் 19 பேருக்கு வேலை வழங்கப்பட்டது. இதனைப் பெறத் தகுதி உடையவர்களாக இருந்த அத்தனை பேருக்கும் நாங்கள் இன்றைக்கு வேலை வழங்கி இருக்கிறோம். வருமானச் சான்றிதழ், இறப்புச் சான்றிதழ், வாரிசுச் சான்றிதழ் கொடுக்காதவர்களுக்கு இன்னும் வேலை வழங்கப்படவில்லை. எனவே அவர்கள்கூட உரிய சான்றிதழ்களைக் கொடுப்பார்களேயானால், வாரிசுகளுக்கெல்லாம் வேலை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 8-40

அது போன்று சென்ற ஆண்டு அருள்மிகு திருக்கோயில்களுக்கு மட்டும் 1993-94 ஆம் ஆண்டு 17 கொடி மரங்களை இந்த துறைக் கொடுத்து இருக்கிறது. 1991-92 ஆம் ஆண்டில் 3, 1992-93 ஆம் ஆண்டில் 5, இப்போது 1993-94 ஆம் ஆண்டில் 17 திருக்கோயில்களுக்குக் கொடிமரங்கள் என உயர்த்திக்கொடுக்கப்பட்டிருக்கிறது. அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில், அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் போன்ற பல்வேறு திருக்கோயில்களுக்கு கொடி மரங்கள் வழங்கி இருக்கிறோம். அதுகூடக் குமரி மாவட்டத்தில் வேலிமரியில் செல்வந்துருத்தி என்ற பீட்டில் தான் இருக்கிறது. இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கின்ற எல்லா மனுக்களுக்கும் இன்றைக்குக் கொடுத்திருப்பவர்களுக்குக் கூட நாம் கொடிமரம் வழங்க இருக்கிறோம். இந்த கொடிமரங்கள் வேறு எந்தப் பகுதியிலும் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை. எனவே குறைந்த விலையில் இந்த அரசு வழங்கிக்கொண்டிருக்கிறது.

1994 ஏப்ரல் 26] [திரு. கு. லாரன்ஸ்]

தமிழக வனத்துறையில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 400 இலட்சம் மரக்கன்றுகள் உருவாகின்றன. எனவே இன்றைக்கு ஒரு நவீன நாற்றங்கால் அமைக்க ரூபாய் 33.50 லட்சம் அளவில் உருவாக்க, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள். அதை திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் செங்கத்தில் அமைக்கவேண்டும் என்று புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

விழுப்புரம் இராமசாமி படையாச்சி மாவட்டத்தில் 600 சதுர கிலோ மீட்டர் பரப்பில் கல்ராயன் மலை அமைந்துள்ளது. இந்த மலைப் பகுதியில் 50 வருவாய் கிராமங்களில் 151 குடியிருப்புகள் போக்குவரத்து வசதியின்றி அந்த இடங்களுக்கு சுலபமாக செல்லமுடியாத நிலையில் அமைந்துள்ளது. இப்பகுதிகளில் மக்களுக்கு அத்தியாவசிய வசதிகள் செய்து தரவும், குடிநீர் வழங்கும் திட்டம், அரசு இணைப்புச் சாலைகளை அபிவிருத்தி செய்தல், தோட்டக்கலைப் பயிரை ஊக்குவித்தல் போன்ற பணிகளுக்காக ரூ.81.50 இலட்சம் ஒதுக்கி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் ஆணைபிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அங்கே இருக்கிற ஏழை மலைவாழ் மக்கள் இதன்மூலமாக வளர்ச்சி பெறுவதற்கு இது வாய்ப்பாக இருக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அபூர்வ மூலிகைச் செடிகளைப் பாதுகாக்கவும், வளர்க்கவும், மூலிகைத் தயாரிப்பு தொழிற்சாலைகளை அமைக்கவும், 1650 ஹெக்டேர் பரப்பில் 11 மையங்கள் அமைக்க புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். இவை கோவை மாவட்டத்தில் ஆனைமலை, திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டத்தில் குற்றாலம், மதுரை மாவட்டத்தில் அழகர்கோவில், நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் கோடிக்கரை (ராமர்பாதம்), கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் முண்டந்துறை, காமராஜர் மாவட்டத்தில் தண்ணிப்பாறை, திண்டுக்கல்- அண்ணா மாவட்டத்தில் கொடைக்கானல், சேலம் மர்வட்டத்தில் கொல்லிமலை, படையாச்சியார் மாவட்டத்தில் மரக்காணம், தர்மபுரி மாவட்டத்தில் சிங்காரப்பேட்டை ஆகிய பகுதிகளில் உருவாக இருக்கின்றன.

அது போன்று, சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறை அரசு ஆணையின் நாள் 17.9.1992 படி 5 ஆண்டுகளுக்கு கோயில்கள் மற்றும் இதர நிறுவனங்களுக்கு யானை வழங்கத் தடை செய்யப்பட்டது. அந்த விதி 19.1.1994 நாளிட்ட அரசாணையின்படி மாற்றி அமைக்கப்பட்டு அருள்மிகு

[திரு. கு. லாரன்ஸ்] [1994 ஏப்ரல் 26

சுவாமிநாத சுவாமி திருக்கோயில், சுவாமிமலை, அருள்மிகு துர்க்கையம்மன் ஆலயம், தருமபுரி ஆதீனம், மயிலாடுதுறை, ஸ்ரீ இராமகிருஷ்ணா பால விருத்தாலயா திருக்கோயில் குலசேகரம், அருள்மிகு தாயுமானவர் திருக்கோயில், திருச்சி, ஆகிய நான்கு கோயில்களுக்கு யானை வழங்க ஆணை 19.1.1994-ல் பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, அட்லாண்டிக் சமுத்திரத்தில் உள்ள ரியோடி தீவிற்கு யானை ஒன்று வழங்க புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்து அந்த யானை தயாரான நிலைமையில் இருக்கிறது. எனவே இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் மிகுந்த பரிவோடு ஒரு சர்வதேச அளவுக்கு ஒரு சிறிய குட்டித் தீவுக்கு ஒரு நல்ல யானை வழங்க இன்றைக்கு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் வனத்துறையில் பணிபுரியும் அலுவலர்களுக்கு நடப்பு ஆண்டில் 10 வனப் பாதுகாவலர்கள், 6 மாவட்ட வன அலுவலர்கள், 5 வனச் சரகர்களுக்கு ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, மலேசியா, ஜெர்மனி போன்ற நாடுகளில் பயிற்சி பெற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள். இந்த முறை தான் வனச் சரகர்களை இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் வெளிநாட்டிற்கு அனுப்புகிறார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதன் மூலமாக சர்வதேச அளவுக்கு அவர்கள் தெரிந்து கொண்டு, வனங்களுடைய நிலைமைகளைப் புரிந்துகொண்டு தமிழகத்தின் வனத்துறையைச் செம்மைப்படுத்துவதற்கு இது உதவியாக இருக்கும்.

இன்றைக்கு தமிழ்நாடு வனத்துறையில் சீருடைப் பணியாளர்களான வனச்சரகர், வனவர், வனக் காப்பாளர் மற்றும் வனக்காவலாளி ஆகியோர்களுக்கு வாரம் ஒருமுறை 30 நிமிடங்களுக்கு காலை 6 மணியிலிருந்து 7 மணிக்குள் அணி வகுப்பு பயிற்சிக்காக ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்று வருகிறது. அதுபோன்று அவர்களுக்கு ஆயுதப் பயிற்சியும் காவல் துறை மூலமாக செய்து கொடுப்பதற்காக இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதன் மூலமாக வனத் துறையினுடைய காவலர்களுடைய திறமை, பணி வேகம் இன்றைக்கு அதிகரித்துள்ளது. சந்தன மரக் கடத்தலைத் தடுக்கும் பணியில் ஈடுபடும்போது உயிர்நீத்த பணியாளர் குடும்பங்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் சிறப்பு அதிரடிக் குழுவில் பணிபுரிந்து, வீரப்பன் குழுவினரின் கண்ணிவெடியால் கொல்லப்பட்ட

1994 ஏப்ரல் 26] [திரு. கு. லாரன்ஸ்]

வனக்காவலர்கள் திரு. வி. சி. ரங்கன் மற்றும் திரு. கே. சண்முகம் குடும்பத்தினருக்கு தாயுள்ளத்துடன் இன்றைக்கு தலா ரூபாய் பத்து லட்சங்கள் வழங்கி உள்ளார்கள். அதுபோன்று, 1989-ல் வீரப்பன் குழுவால் கொலை செய்யப்பட்ட பழனிசாமி மற்றும் எம். எஸ். சுப்பிரமணியம், இவர்களுக்கு எல்லாம் அன்றைக்கு 10 ஆயிரம் ரூபாய்தான் வழங்கப்பட்டது. இன்றைக்கு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள்கூட இதுகுறித்துச் சொன்னார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் மீண்டும் அவர்களுக்கு விதிகளை எல்லாம் கூடத் தளர்த்தி தலா 40 ஆயிரம் ரூபாய் அந்தக் குடும்பங்களுக்கு, 1989-ல் இறந்து போனவர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோன்று, சிறப்பு அதிரடிக் குழுவில் பணியாற்றும்போது வீரச் செயல் புரிந்த அழகேசன் என்கிற ஒரு வனக்காப்பாளருக்கு வனவராக, அவுட் ஆப் டர்ன் முறையில், விதிகளைத் தளர்த்தி புரட்சித் தலைவி அவர்கள் பதவி உயர்வு அளித்திருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

இரவு 8-45

சென்னை, மதுரை, நீலகிரி, வடாற்காடு-அம்பேத்கார், திருநெல்வேலி-கட்டபொம்மன், தஞ்சாவூர், திண்டுக்கல்-அண்ணா ஆகிய மாவட்டங்களில் சுற்றுப்புறச் சூழல் படை அமைக்கப்படும். 20 உறுப்பினர்கள், ஒவ்வொருவருக்கும் ரூ. 200/- படியாக வழங்குகிற அளவில் இது உருவாக்கப்படும். இது ஒரு கௌரவப் பணியாகும். சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு சம்பந்தமாக மக்களுக்கு அறிவுறுத்துவதற்கு இப்படை அமைக்கப்படுகிறது என்பதையும், இதற்கு 1.26 லட்சம் ரூபாய் புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதையும் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு வனத் துறையைப் பொறுத்தவரையில் 705 வனச் சரகர்கள், 2,025 வனவர்கள், 1,699 வனக் காப்பாளர்கள் மற்றும் 1,049 வனக் காவலர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இதுகாறும் இவர்களுக்கு யூனிபார்ம் - சீருடை - வழங்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டு புரட்சித் தலைவி அவர்கள் பணியாளர்களுடைய கோரிக்கைகளை ஏற்று வனச் சரகர், வனவர், இவர்களுக்கு சீருடைக்குப் பதிலாக ரூ.1,500-ம், வனக் காப்பாளருக்கு 1,000 ரூபாய் எனவும், வனக் காவலருக்கு ரூ.800 என்றும் வழங்க ஆணையிட்டுள்ளார்கள். இதன்மூலம் அரசுக்கு 68.34 லட்சம் ரூபாய் ஆண்டொன்றுக்கு செலவாகிறது என்பதை இந்த அவைக்குத்

தெரிவிக்கிறேன். எனவே, நீண்டகாலமாக இருந்த அவர்களுடைய கோரிக்கை இன்றைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதுபோன்று, வன மேம்பாட்டு நிதி என்கிற ஒரு நிதி இருக்கிறது. அந்த நிதியிலிருந்து இன்றைக்கு 50 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, வனச் சிப்பந்திகளுக்கு வீடுகள் கட்டுவதற்காக இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். முதலாவதாக இந்த ஆண்டு அது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதையும், இதுகாறும் இப்படி வனத் துறையிலுள்ள சாதாரணமான வாச்சர்ஸ், கார்ட்ஸ் இவர்களுக்கு இவ்வளவுதூரம் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதையும், இந்த ஆண்டு புரட்சித் தலைவி அவர்கள் 50 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பது என்பது ஒரு மிகப் பெரிய சாதனை என்பதையும் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதைத் தொடர்ந்து அடுத்த ஆண்டுகளில் இதன் மூலமாக வனச் சிப்பந்திகள் பயன் அடைவதற்கு வாய்ப்பாக இருக்கும். மேலும், மேற்படி மேம்பாட்டு நிதியிலிருந்து ஆண்டுதோறும் சுமார் ரூ. 1,00,000 ஒதுக்கி, மாநில அளவில் வனத் துறை விளையாட்டுப் போட்டிகள் நடத்துவது என மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள்.

வனத் துறையில் நரிக்குறவர் இனத்தைச் சேர்ந்த திருமதி இந்திரா காந்தி என்ற சமூக வன ஊழியரை விதிகளைத் தளர்த்தி வனக்காவலராக தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பணியமர்த்தியிருக்கிறார்கள். ஒரு பெண் முதன் முதலாக வனக் காவலராக பணி அமர்த்தப்பட்டிருப்பது இந்தியாவிலேயே தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) வனத் துறையிலுள்ள மாதக் கூலி பெற்றுவரும் சமூக வன ஊழியர்கள், தோட்டக் காவலர்களை படிப்படியாக அரசுப் பணியில் அமர்த்துவது என்ற கோட்பாட்டின்படி 250 தோட்டக் காவலர்களை வனக்காவலர், வனக் காப்பாளர், மாலி என்ற பணிகளில் இவ்வாண்டில் அமர்த்துவதற்கு தமிழக முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். இப்பணியில் பெண்களை வனக் காவலர்களாக தகுதியுடையவர்களை நியமிக்கவும் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். எனவே, வனத் துறையில் வனக் காவலர் பணியை இந்தியாவில் தமிழகத்தில் தான் பெண்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதை இன்றைக்கு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1994 ஏப்ரல் 26] [திரு. கு. லாரன்ஸ்]

இரவு 8-50

அதுபோன்று விருதுகள், வெகுமதிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் –அவார்ட்ஸ் & ரிவார்ட்ஸ் – 50 வன அலுவலர்களுக்கு இந்த ஆண்டு வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இவர்களுடைய பட்டியல் இன்றைக்குத் தயாரிக்கப்பட்டுள்ளது. வெகுமதிகள் 2,500 முதல் 3,000 ரூபாய்வரை வழங்கப்படும். சிறப்பாக வனத் தோட்டத்தை வளர்த்தவர்கள், உயிரைப் பணயம் வைத்து வனக் குற்றங்களைத் தடுத்தவர்கள், வன நிலங்களை ஆக்கிரமிப்பு செய்தவர்களை அகற்றியவர்கள், தடுத்தவர்கள் ஆகியோருக்கு இவ்விருதுகள், வெகுமதிகள் வழங்கப்பட வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம் வனத் துறையிலே சீரிய பணிகள் ஆற்றுகின்ற வன ஊழியர்கள் மிகச் சிறப்பான இடத்தைப் பெறுவதற்கு வழிவகுக்கப்படுகிறது.

அடுத்து, இந்த ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் கழகத்தில் கருணைத் தொகையும், போனசும் வழங்க ரூ. 46.25 இலட்சங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வழங்கினார்கள். 1990-91க்குப் பிறகு, இந்த முறை இங்கே இருக்கிற தொழிலாளர்களுக்கு பெட்ஷீட், குடைகள் வழங்க இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள்.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் சின்கோனா பகுதி தொழிலாளர்கள் தேயிலைத் தோட்டக் கழகத்தில் இருக்கும் தொழிலாளர்களுக்கு இணையான சம்பளம் பெறாமல் இருந்த காரணத்தால், அவர்களும் இணையான சம்பளம் பெற வேண்டுமென்பதற்காக, 2,500 தொழிலாளர்கள் பயனடைகிற அளவுக்கு 30 இலட்சம் ரூபாய் வழங்கி சம்பளத்தை உயர்த்திக் கொடுப்பதற்கு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.

இதன் மூலமாக அங்கே இருக்கிற 2,500 தொழிலாளர்களின் நீண்டகால கோரிக்கையை இன்றைக்கு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்றதன் மூலமாக அவர்கள் பயனடைந்திருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று தமிழகத்தில் பல புதிய சரணாலயங்களை அமைப்பதற்கு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஈரோடு கோட்டத்திலும், பெரியார் சத்தியமங்கலம் கோட்டத்திலும்,

[திரு. கு. லாரன்ஸ்] [1994 ஏப்ரல் 26

பவானிசாகர் வெளிமான் புகலிடம்; தென் ஆற்காடு மாவட்டத்தில் பிச்சாவரத்தில் மான்குரோவ் சரணாலயம்; தருமபுரி மாவட்டத்தில் காவிரி வனவிலங்கு சரணாலயம்; நாகப்பட்டினத்தில் கோடிக்கரைப் பகுதியில் சதுப்பு நிலக் காடுகள் சரணாலயம்; திருச்சியில் காரவெட்டி பறவைகள் சரணாலயம்; திருநெல்வேலி மாவட்டத்தில் கூத்தங்குளம் பறவைகள் சரணாலயம்; கன்னியாகுமரி மாவட்டத்தில் சுசீந்திரம் குளம் பறவைகள் புகலிடம் ஆகியவைகளை உருவாக்குவதற்கு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் அந்தப் பகுதிகளில் பறவைகள் மற்றும் உயிரினங்களைப் பாதுகாக்கின்ற சரணாலயங்கள் மற்றும் புகலிடங்கள் அமைக்கப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலகப் பிரசித்தி பெற்ற நீலகிரி மாவட்ட முதுமலை வன உயிரின உய்விடம் மற்றும் தேசியப் பூங்கா ஊட்டியிலிருந்து 65 கிலோமீட்டர் தூரத்தில் ஊட்டி-மைசூர் சாலையில் உள்ளது. இது இந்தியாவில் மட்டுமல்ல, சர்வதேச அளவில் புகழ்பெற்ற சரணாலயம். இது இந்தியாவிலே முதன்முதலாக அமைக்கப்பட்ட முதல் வன உயிரின மண்டலமாகிய நீலகிரி வன உயிரின மண்டலத்தில் ஒரு பகுதியாகவும் அமைந்துள்ளது சிறப்பிலும் சிறப்பு. இதன் மொத்தப் பரப்பளவு 32100 ஹெக்டேர் ஆகும். அவற்றில் வன உயிரின உய்விடம் மட்டும் 21776 ஹெக்டேர் ஆகும். மீதியுள்ள தேசியப் பூங்கா 10324 ஹெக்டேர் பரப்பில் உள்ளது. ஈரமுள்ள இலையுதிர் காடுகள் மற்றும் வறண்ட இலையுதிர் காடுகளைக் கொண்ட பகுதியாக உள்ளது. இங்கு யானை, காட்டெருமை, கடமான், புள்ளிமான், சிறுத்தை, கரடி, புலி, மலைப்பாம்பு, கேளையாடு, நான்கொம்புமான், அனுமான்குரங்கு, நீர்நாய், முதலை முதலியன உள்ளன. இங்கு சுமார் 3,299 வன விலங்குகள் உள்ளன. யானை 325, புலி 35, சிறுத்தை 23, மலபார் பெரிய யானை 80, காட்டெருமை 218, புள்ளி மான் 914, காட்டுப் பன்றி 114.

இரவு 8-55

தமிழகத்தைப் பொறுத்தவரையில் இது சிறப்புமிக்க ஒன்று என்பது மட்டுமல்ல, இந்தியாவிலேயே மிகச் சிறப்பான சரணாலயம். எனவே சர்வதேச அளவுக்கு மக்களை அதிகமாக ஈர்க்கும் இந்தப் பகுதிக்கு சுமார் 1 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். நம்மை எல்லாம் வாழவைத்த தமிழகத்தினுடைய ஆற்றல் மிக்க தலைவியாக இருந்து, சிறப்புறப் பணியாற்றி வருகிற, சுற்றுப்புறச்சூழல் மற்றும் புதிய விஞ்ஞான அணுகுமுறைகளை எல்லாம் தெரிந்துகொண்டு இந்த நாட்டின் சமூக,

1994 ஏப்ரல் 26] [திரு. கு. லாரன்ஸ்]

கலாச்சார, பொருளாதார உயர்வுக்காக தன்னால் ஆன பணிகளை எல்லாம் சீரோடும் சிறப்போடும் செய்து, திராவிட இனத்தினுடைய தன்மானத் தலைவியாக இருக்கிற டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய திருப்பெயர் இந்த வன உயிரின உய்விடத்திற்கு சூட்டப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மெத்தப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். எனவே இந்த வன உயிரின உய்விடம், 'டாக்டர் ஜெ. ஜெயலலிதா வன உயிரின உய்விடம், முதுமலை' என்று அறிவிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி). அதுபோன்று அங்கே அமைந்திருக்கின்ற தேசியப் பூங்கா, 'டாக்டர் ஜெ. ஜெயலலிதா தேசியப் பூங்கா, முதுமலை' என்று இன்று முதல் அழைக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி). இந்தியாவைப் பொறுத்த வரையில் தமிழகத்தில் பொள்ளாச்சி டாப்சிலிப் பகுதியில் இருக்கிற சரணாலயத்தையும் தேசியப் பூங்காவையும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் திராவிட இயக்க ஆட்சியின்போது 'இந்திரா காந்தி தேசியப் பூங்கா' என்று அறிவித்தார்கள். அதுபோன்று தேசியத் தலைவர்கள் ராஜீவ் காந்தி, ராஜாஜி போன்றவர்களுக்கு பல்வேறு இடங்களில் தேசியப் பூங்காக்கள் இருக்கின்றன. எனவே தமிழ் மக்களுடைய ஏகோபித்த, மக்களுடைய தன்மான சக்தியாக இருக்கிற புரட்சித்தலைவி அவர்களுடைய திருப்பெயர் சர்வதேச அளவில் தெரிகிற அளவுக்கு, தேசிய அளவில் தெரிகின்ற அளவுக்கு, நம்மையெல்லாம் வாழவைக்கிற அந்தத் தெய்வத்தினுடைய திருப்பெயரைச் சூட்டுவதில் உள்ளபடியே மெத்த மகிழ்ச்சியடைகிறேன். என்னுடைய வாழ்க்கையில் கிடைத்த வரப்பிரசாதமாகக் கருதுகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இந்த ஆண்டு அந்த சரணாலயப் பகுதியில் யானைகளுடைய அணிவகுப்பையும், யானைக் கண்காட்சி மற்றும் திருவிழா ஒன்றையும் நடத்துவதற்கு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அதற்காக 2.5 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த மாதம் அங்கே யானைகளுடைய மிகப்பெரிய திருவிழா, ஒரு அணிவகுப்பு நடக்க இருக்கிறது. கேரளா போன்ற மாநிலங்களில் செய்வதைப் போல இங்கேயும் செய்ய இருக்கிறார்கள். இந்த யானைகள் என்ன செய்யும் என்றால், யானை பூஜை செய்தல், யானைகளுக்கு அன்னம் அளித்தல், யானைகளைக் குளிப்பாட்டுதல், யானைகள் கால்பந்து, கூடைப் பந்து விளையாடுதல், ஓட்டப்பந்தயம், யானை அலங்கார அணிவகுப்பு போன்றவை எல்லாம் இந்த மாதம் நடக்கும். இதற்கு பிப்ரவரி மாதத்திலிருந்து அந்த யானைகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. அந்த சரணாலயத்தில் இந்தத் திருவிழா நடைபெறுவதன்மூலம் இதயதெய்வம் திருப்பெயரைச் சூட்டிய பின்னர் நடைபெறுகிற மிகச் சிறப்பான விழா அது. இதற்குச் சர்வதேச அளவில்

[திரு. கு. லாரன்ஸ்] [1994 ஏப்ரல் 26

எல்லோரும் விரும்பி வருகிற அளவில் அது அமையும் என்பதையும் அந்தப் பகுதி மக்கள், உல்லாசப் பயணிகள் அதிக அளவில் செல்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதையும் இந்த அவைக்கு எடுத்து வைப்பதோடு..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த மாதம் என்கிறீர்கள். மே மாதமா?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மே மாதம்தான். (குறுக்கீடு) ஒரே வரிதான். முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த யானை ஊர்வலமும் திருவிழாவும் நடத்த இருப்பதாகக் கூறினார்கள். சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் அங்கே அழைத்துச் செல்வதற்கு ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் நானும் கேட்டேன். மே மாதம்தான் நீங்கள் போகலாம்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: எனவே சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அங்கே செல்வதற்குரிய அளவில்தான் மே மாதம் ஏற்பாடு செய்திருக்கிறோம். சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, அவர்கள் குடும்பத்தோடு, குழந்தைகளோடு சென்று உல்லாசமாக இருப்பதற்கு எல்லாவிதமான ஏற்பாடுகளையும் அங்கே செய்து தருவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில் அங்கே வேலை செய்கிற ஊழியர்களின் குழந்தைகள் பள்ளி செல்வதற்கு போதிய வசதியில்லை என்பதை இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களிடத்திலே தெரிவித்தபின்னர், அவர்கள் 5 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் மூலமாக ஒரு மினி பஸ் அங்கே ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எனவே அந்தப் பகுதியில் இருக்கின்ற ஊழியர்களுக்கு இது சிறப்பாக அமைய இருக்கிறது.

இன்றைக்கு நான் தெரிவித்த பல்வேறு கருத்துக்கள் எல்லாம், மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த பல வினாக்களுக்கு பதிலாக அமைந்து முற்றுப்பெற்றிருக்கும் என்று கருதுகிறேன். அதோடு இந்த மானியக் கோரிக்கையிலும் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். இன்றைக்கு 78 வெட்டுத் தீர்மானங்களைப் பல்வேறு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிறார்கள். அவைகளுக்கெல்லாம் ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

1994 ஏப்ரல் 26] [திரு. கு. லாரன்ஸ்]

வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்த உறுப்பினர்களில் மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். எம். ராஜு மட்டும்தான் இங்கே இன்றைக்குப் பேசினார்கள். அவருடைய ஒவ்வொரு தீர்மானத்திற்கும் நாங்கள் நடவடிக்கை எடுத்து இருக்கிறோம். அதற்கு நடவடிக்கைகள் எடுத்து இருக்கிறோம் என்பதோடு மட்டுமல்லாமல் மற்றும் பல்வேறு உறுப்பினர்கள் இந்த அவையிலே தெரிவித்த பல்வேறு கருத்துக்களை ஏற்றுக்கொண்டு, அவைகளுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் இருக்குமேயானால், அவைகளுக்கும் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

இரவு 9-00

இன்றைக்கு நான் எடுத்து வைத்த கருத்துக்கள், இந்த மானியக் கோரிக்கையில் நான் சொல்லி இருக்கிற கருத்துக்களை எல்லாம் ஏற்றுக்கொண்டு, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கொடுத்த பாராட்டுதல்களுக்கும் அன்போடு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாழ்த்துக்கள், திரு முனிவெங்கடப்பன்.

திரு கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கிருஷ்ணகிரி தொகுதியிலே 1982 ஆம் ஆண்டு கட்டப்பட்ட ஏரிக்கு கால்வாய் வெட்ட வேண்டும் என்பதற்காக 3/4 ஏக்கர் நிலத்தில் அனுமதி கொடுக்க வேண்டும் என்று அன்றிலிருந்து இன்று வரைக்கும் வனத் துறையைக் கேட்டுக்கொண்டு இருக்கின்றோம். இன்று வரை அது கொடுக்கப்படவில்லை. அதனால் 1982 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட ஏரி 12 ஆண்டுகளாக விவசாயிகளுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் இருக்கிறது. அதை உடனடியாகச் செய்து, அனுமதி கொடுப்பார்களா என்று கேட்டுக்கொண்டு, மேலும் அலேசியம் என்ற கிராமத்திலே ஒரு புதிய ஏரி கட்டுவதற்கு வனத் துறையின் அனுமதியைக் கோரி இருக்கின்றோம். பல ஆண்டுகளாகக் கோரியும் இன்னும் அதற்கு அனுமதி கிடைக்காமல் இருக்கிறது. அந்த இரண்டையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நிறைவேற்ற அனுமதி வழங்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைகளுக்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எம். கருப்புசாமி

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில், பள்ளி மாணவர்களைப் பள்ளிக்கு அழைத்துச் செல்வதற்காக பேருந்துகள் விடப்பட்டு இருக்கின்றன. ஆனால், அந்தத் தோட்டத் தொழிலாளர்களுடைய குழந்தைகளை அதில் ஏற்றுவது இல்லை. அந்தத் தொழிலாளர்களுடைய குழந்தைகளையும் அந்த பஸ்ஸில் பள்ளிக்கூடத்திற்குச் செல்ல அனுமதிப்பார்களா? மேலும் கோத்தகிரி பகுதியில் மாமரத்தில் மிக முக்கியமான ஒரு இடத்தில் செக்போஸ்ட் அமைக்க வேண்டும் என்று கூறினேன். அதுபற்றி அமைச்சர் அவர்களுடைய பதிலுரையில் ஏதும் கூறப்படவில்லை. செக் போஸ்ட் உடனடியாக அமைத்துத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த செக் போஸ்ட்டைக் கொஞ்சம் மாற்றி, ஏற்கெனவே இருந்த இடத்தைவிட மிகுந்த பாதுகாப்பாக இருக்கிற அளவில் மேட்டுப் பாளையத்தில் அமைத்து இருக்கிறோம். எனவே, மலையில் இருந்து வருகிற பொருட்கள் அல்லது ஏதேனும் கடத்துவதாக இருந்தால் அவற்றை தடுப்பதற்கு, இப்போது மேட்டுப்பாளையம் பகுதி மலையினுடைய அடிவாரத்தில் இருக்கின்ற காரணத்தால் சரியாக இருக்கும் என்று கருதி இந்தத் துறை செய்து இருக்கிறது. நிதிநிலையைப் போன்று பல்வேறு சூழ்நிலைகளை மையமாக வைத்து இதை கடத்துகிறவர்களைத் தடுப்பதற்காகவே மேட்டுப்பாளையத்தில் வைத்து இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று டான் டீ-யில் இருக்கிற சாதாரணமான தொழிலாளர்களின் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதற்கு வண்டி வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்பது ஒரு நியாயமான கோரிக்கை. அந்தக் கோரிக்கை, தேயிலைத் தோட்டக் கழகத்தின் மூலமாக நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பெரியவீரன் (குறுக்கீடுகள்). கொடைக்கானல் திட்டம் குறித்து அவர் சொல்லட்டும்.

திரு. எம். பெரியவீரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று கொடைக்கானல் பகுதியிலே கிராமப்புற சாலைகள் அமைப்பதன் மூலமாக, வன இலாகாவுக்கு சொந்தமான ஏரியிலே சில பாதைகள்

1994 ஏப்ரல் 26] [திரு. எம். பெரியவீரன்]

அமைக்க வேண்டிய சூழ்நிலைகள் இருக்கிற காரணத்தால், வன இலாகா அதிகாரிகள் தடுத்து, பல வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அதை, அந்தப் பகுதியில் வாழ்கின்ற மக்களுக்காக, மலைவாழ் மக்களுக்காக, ஏதேனும் நிபந்தனை அடிப்படையிலேயாவது வன இலாகா மூலமாக அந்தச் சாலைகளை அமைத்துத் தருவதற்கும் மற்றும் வன இலாகா மூலமாக எடுத்துச் செல்கின்ற பல்லாயிரக் கணக்கான மரங்கள் மற்றும் லோடுகள் ஆகியவற்றை அப்புறப்படுத்தும் காரணத்தால் அந்த கிராமப்புற சாலைகள் எல்லாம் நொறுங்கி சேதம் அடைந்துவிடுகிறது. எப்படி விவசாயத் துறை மூலமாக சுகர்கேன் சம்பந்தப்பட்ட சாலைகளுக்கு..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. எம். பெரியவீரன்: கேள்விதான், அவர்கள் ஈட்டுத் தொகை கொடுக்கிறார்களோ அதுபோன்று, வன இலாகா மூலமாக இந்த மரங்களை அப்புறப்படுத்தும் அந்த சாலைக்கு ஏதேனும் நஷ்ட ஈடாக பணம் கொடுத்து அந்தச் சாலையை அமைப்பதற்கு ஏதேனும் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ரோடுகளுக்கு சேதம் ஏற்பட்டால் யாரும் தனியார் செய்வது இல்லை. ஒன்று வனத் துறை அல்லது பொதுப் பணித் துறை அல்லது ஊராட்சித் துறை போன்ற துறைகள் மூலம் அரசாங்கமே செய்கிறது. எனவே, அரசாங்கமே அதைப் பார்த்துக்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெயக்குமார்.

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிவிக்கையிலே நான்கு கோயில்களுக்கு யானைகள் வழங்கப்பட இருப்பதாகச் சொன்னார்கள். சென்னையிலேயே எந்தக் கோயிலிலுமே யானை கிடையாது. கடந்த ஒரு வருடத்துக்கு முன்பு யானை ஒன்று வழங்க வேண்டும் என்று என்னுடைய தொகுதியில் உள்ள வடபழனி ஆண்டவர் கோயில் நிர்வாக அதிகாரி வனத் துறைக்கு கடிதம் எழுதி இருக்கின்றார். எனவே, அது என்னுடைய தொகுதிக்கு வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

இரவு 9-05

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு யானைகள் திருக்கோவில்களுக்கு வழங்க

[திரு. கு. லாரன்ஸ்] [26 ஏப்ரல் 1994

வேண்டுமென்று ஆணையை மாற்றி யானைகளை வழங்கி வருகிறோம். உண்மையில் சொல்லப்போனால் வனத்துறைக்கு போதிய அளவு யானைகளே இல்லை. இருப்பவை 44 பெரிய யானைகள், 14 சிறிய யானைகள்தான். 5 வயதிற்கு மேற்பட்ட யானைகளைத் தான் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். எனவே, பழைய காலங்களில் யானையை ட்ராப் பண்ணி பிடிப்பது போல இப்போது பிடிப்பது கிடையாது. யானைகள் தாமாக வந்து சிக்குமேயானால்தான் கிடைக்கிறது. சர்வதேச அளவில் என்ன சட்ட திட்டங்கள் இருக்கின்றனவோ அதற்கேற்ப அவைகள் எல்லாம் நம்முடைய சரணாலயங்களிலும் வனங்களிலும் காப்பாற்றப்படுகின்றன. தமிழக அரசுக்கே தேவையான அளவு யானைகள் இல்லை. இருக்கிற யானைகளில் இன்றைக்கு நான்கைக் கொடுப்பதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்து இருக்கிறார்கள். நாம் பல்வேறு மாநிலங்களில் யானைகளைப் பெற்று வர முயற்சித்தோம். கர்நாடகாவில் முயற்சித்த நேரத்தில் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். வெஸ்ட் பெங்காலில் யானை தரலாம் என்று சொன்னார்கள். ஆனால் ஒரு யானைக்கு அவர்கள் 2–1/2 இலட்சம் ரூபாய் கேட்கிறார்கள். நாம் தமிழகத்தில் இதுகாறும் திருக்கோவில்களுக்கு கொடுத்த யானை என்பது 20,000 ரூபாய் அளவுக்குக் கொடுத்து வந்தோம். எனவே, 2–1/2 இலட்சம் ரூபாய்க்கு யானைகளைப் பெற்று திருக்கோவில்களுக்கு கொடுப்பது என்பது சரியாக இருக்காது என்று கருதுகிறேன். எனவே நாம் வருகிற மனுக்களின் அடிப்படையில் முன்னுரிமை கொடுத்து ஒவ்வொரு திருக்கோவிலுக்கும் வழங்குவோம் என்பதை இந்த அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசுவதற்குப் பெயர் கொடுத்து, வாய்ப்புப் பெறாத உறுப்பினர்களுக்கு மட்டும் அனுமதி. திரு. ஆ. கு. சீனிவாசன்.

திரு. ஆ. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு முதல் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏதாகிலும் ஒரு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்கள் மிக அக்கறை கொண்டு தொகுதி நலன் கருதி உறுப்பினர் கேள்வி கேட்க வேண்டுமென்று இருப்பதால் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ஆ. கு. சீனிவாசன்: அரசுக்கு நிதிநிலை நெருக்கடி என்று அடிக்கடி எல்லோரும் பேசுகிறோம். அதேசமயத்தில் காட்டு இலாகாவில்

TRUTH ALONE TRIUMPHS

26 ஏப்ரல் 1994] [திரு. ஆ. கு. சீனிவாசன்]

சந்தனக் கட்டைகள், அதிக விலை உயர்ந்த மரங்கள் இருக்கின்றன. அவை பாதுகாப்பு இல்லாமல் இருப்பதால், கடத்தப்பட்டு அரசுக்கு அதிகமான வருமானத்தை இழந்து விடுகிறோம். அதற்கு ஈடுசெய்கிற அளவுக்கு தனியார்கள் பண்ணை வைத்து சந்தன மரங்களை வளர்ப்பதற்கு அனுமதி வழங்கினால், அதன்மூலம் அரசுக்கே அந்த சந்தன மரங்களை அவர்கள் வழங்கினால், நிதிநிலையை சரிசெய்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதால் அரசு அதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசே இன்றைக்கு சந்தன மரங்களை காப்பாற்ற கடுமையாகப் போராடி வருகிறது. தனியார் சந்தன மரங்களை உருவாக்குவார்களானால் தனியாருக்கும் சேர்த்து பாதுகாப்பு கொடுக்க வேண்டிய சூழ்நிலை தான் ஏற்பட்டு கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை பரிசீலனை செய்துதான் ஏற்றுக் கொள்ள வேண்டும். பரிசீலிக்கப்படும் என்பதை இந்த அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தேனி பன்னீர்செல்வம்.

திரு. தேனி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் சாக்குலத்து மெட்டு ரோடு, இராமக்கல் மெட்டு ரோடு என்று இரண்டு ரோடுகள் கடந்த 40 ஆண்டு காலமாக அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டு, மத்திய அரசாங்கம் வனத்துறையினுடைய ஒப்புதலை வழங்காத காரணத்தால், அந்தச் சாலைகள் இரண்டும் அடிவாரத்திலேயே நின்று கொண்டிருக்கின்றன. அந்தச் சாலையை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசை வற்புறுத்தி, இந்த ஆண்டாவது அங்கீகாரம் பெற்றுத் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோல ஆண்டிப்பட்டி தொகுதி கடமலைக்குண்டு - வெள்ளிமலை ரோட்டிலே பிரச்சினை. அந்த ரோடு வனத்துறைக்கு சொந்தமான ரோடு. அந்த ரோடு சரியான முறையில் பராமரிக்கப்படாமல் மிக மோசமான நிலையில் இருக்கிறது. அந்த ரோட்டைப் பராமரிப்பதற்கு நெடுஞ்சாலைத் துறை பல முறை முன்வந்து அந்தத் துறைக்கு எழுதிய போதிலும், அந்தத் துறைக்கு ஒப்படைக்கப்படாமல் வனத்துறையே அந்த ரோட்டை வைத்துக் கொண்டிருக்கிறது. எனவே, அந்த ரோட்டை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு ரோடுகளை குறித்து சொன்னார்கள். அந்த இரண்டு ரோடுகளைப் பற்றி தெரிந்து கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, அதற்குரிய நடவடிக்கையெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இராம. இராமநாதன்.

இரவு 9-10

திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் என்னை அருள்மிகு சுவாமிநாத ஸ்வாமி திருக்கோவில் அறங்காவல் குழுத் தலைவராக நியமித்துள்ளார்கள். 15 ஆண்டுகளாக யானை இல்லாத அந்த திருக்கோவிலில் இன்றைக்கு - ஆலயங்களுக்கு எல்லாம் புத்துயிர் ஊட்டிக்கொண்டிருக்கின்ற தமிழகத்தினுடைய முதல்வர், புரட்சித் தலைவி அவர்களுடைய புனித நல்ல ஆட்சியில் - கணபதியையும், யானையும் அங்கே கொடுத்திருக்கிற மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர், புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைச் சொல்லி, அந்தப் பகுதியிலே முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரைத் தாங்கியிருக்கிற வனச்சோலைத் திட்டத்தையும் துவங்கி, நீங்கள் நல்லமுறையில் செயல்படுத்தித் தருவீர்களா என்பதைப் பணிவோடு அறிய விரும்பி . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறிய விரும்புகிறீர்கள். (சிரிப்பு)

மாண்புமிகு திரு கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய நல்ல உள்ளத்திற்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். வனச்சோலைத் திட்டத்தை தமிழகம் முழுவதும் நிறைவேற்றவும், எல்லாப் பகுதிகளிலேயும் மிகுந்த ஆர்வத்தோடு நிறைவேற்றவும், இன்றைக்கு வனத்துறை ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. இதய தெய்வம் புரட்சித் தலைவி வனச்சோலைத் திட்டம் என்று அறிவித்த பின்னர், தமிழகத்தில் சுமார் 500 இடங்களிலே நாம் அதற்கு விழா எடுத்து வனச்சோலைத் திட்டத்தை உருவாக்கினோம். புரட்சித் தலைவி அவர்களுடைய பெயர் கொண்ட அந்த விழாவில் நாட்டுமக்கள் மிகுந்த ஆர்வத்தோடு ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள் என்பது மட்டுமல்ல, வனத்துறை கூட அன்றைக்குத்தான் பொதுமக்களோடு

1994 ஏப்ரல் 26] [திரு. கு. லாரன்ஸ்]

தொடர்பு வைக்கிற ஒரு நல்ல சந்தர்ப்பம், ஏற்பாடு அன்றைக்கு நடைபெற்றது. அதேபோன்று மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியான கும்பகோணத்தில் மிகச் சிறப்போடு வனச்சோலைத் திட்டத்தை உருவாக்குவதற்கு வனத்துறை சீரிய பணிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(ஈ) கோரிக்கை எண் 44 – காட்டு வளத்துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 44-காட்டுவளத்துறை. வெட்டுத் தீர்மானம் வலியுறுத்தப்படுகின்றதா என்று அறிய விரும்புகிறேன். திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"காட்டுவளத் துறை பற்றிய 44 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.49,17,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(உ) கோரிக்கை எண் 58 – காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 58 – காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானம் வலியுறுத்தப்படுகின்றதா என்று அறிய விரும்புகிறேன். திரு எச். எம். ராஜு.

திரு எச். எம். ராஜு: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 39,40,75,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (27.4.1994) காலை 10.00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 9.12 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

ஏதுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

115. கோரிக்கை எண் 27 - ஊரக வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

116. கோரிக்கை எண் 48 - குடிநீர் வழங்கல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

117. கோரிக்கை எண் 49 - நகராட்சி நிர்வாகமும் மாநகராட்சிகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

திரு எச். எம். ராஜு: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 39,40,75,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (27.4.1994) காலை 10.00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 9.12 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

ஏதுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

115. கோரிக்கை எண் 27 - ஊரக வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

116. கோரிக்கை எண் 48 - குடிநீர் வழங்கல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

117. கோரிக்கை எண் 49 - நகராட்சி நிர்வாகமும் மாநகராட்சிகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

திரு எச். எம். ராஜு: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 58 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 39,40,75,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (27.4.1994) காலை 10.00 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 9.12 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

ஏதுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

115. கோரிக்கை எண் 27 - ஊரக வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

116. கோரிக்கை எண் 48 - குடிநீர் வழங்கல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

117. கோரிக்கை எண் 49 - நகராட்சி நிர்வாகமும் மாநகராட்சிகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

1994 ஏப்ரல் 26]

118. கோரிக்கை எண் 44 - காட்டு வளத்துறை மற்றும் கோரிக்கை எண் 58 - காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

119. கோரிக்கை எண் 30 - ஆதி திராவிடர் - பழங்குடியினர் நலத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

120. ஊரக வளர்ச்சி பற்றிய செயலாக்க வரவு - செலவுத் திட்டம், 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

121. பேரூராட்சிகள் நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை பற்றிய செயலாக்க வரவு - செலவுத் திட்டம், 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

122. நகராட்சி நிருவாகமும் மாநகராட்சிகளும் பற்றிய செயல்திறன் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்)

123. காட்டுவளத் துறை பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 1994-95. (ஆங்கிலம்)

124. ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத்துறை பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 1994-95. (ஆங்கிலம்)

125. அரசு உறுதி மொழிக் குழுவின் பதினொன்றாவது அறிக்கை, 1993-94.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

DTP–53/118-38

இணைப்பு — I

[63 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறியைக் காண்க.]

ஊரக வளர்ச்சி.

ஊரகங்களின் ஒருங்கிணைந்த, நிலையான வளர்ச்சி, அரசின் தலையாய நோக்கங்களுள் ஒன்றாக உள்ளது. அதற்கு, ஊரக மக்களின் சமுதாய-பொருளாதார வாழ்க்கைத்தரம் மேம்படுத்தப்பட வேண்டும். ஊரக வளர்ச்சிக்கும் நகர்ப்புற வளர்ச்சிக்கும் இடையே உள்ள வித்தியாசம் மட்டுப்படுத்தப்பட வேண்டும். குடிநீர், சாலை வசதிகள், தெருவிளக்கு வசதி, போக்குவரத்து வசதி, கல்வி வசதி, மருத்துவ வசதி ஆகிய அடிப்படை வசதிகளை ஊரக மக்களுக்கு வழங்கி அவர்களை உன்னதமான வாழ்விற்கு இட்டுச்செல்ல வேண்டும். ஊரகப் பெண்களின் வேலைப்பளு களையப்படவேண்டும். ஊரக நிலமற்ற தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகள் அவர்கள் வாழும் கிராமங்களில் உருவாக்கவும், வழங்கப்படவும் வேண்டும். இம்மக்களின் தொழில்முனைவு ஊக்குவிக்கப்பட வேண்டும். தொழிற்திறன் பயன்படுத்தப்பட வேண்டும், ஊரக மக்களின் தனி நபர் வருமானம் உயர்த்தப்பட வேண்டும். நகர்ப் பகுதிக்கு வேலைவாய்ப்புத் தேடி ஊர்ப்பகுதியை விட்டு வெளியேறும் மக்களின் வெளியேற்றம் மட்டுப்படுத்தப்பட வேண்டும். இந்த கொள்கைகளையே அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது. ஊரகங்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் திட்டங்களை வகுக்கும் அதிகாரம் படிப்படியாக பரவலாக்கப்படுவதும், ஊரக வளர்ச்சித் துறையின் கொள்கையாக உள்ளது.

ஊரக வளர்ச்சித்துறை இக்கொள்கைகளை செயல்படுத்துவதில் முக்கியமான பங்கேற்கிறது. இத்துறையின் நிர்வாகத்தின் கீழ் 12,612 ஊராட்சிகளும், 387 ஊராட்சி ஒன்றியங்களும், 645 பேரூராட்சிகளும் உள்ளன.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒரு அங்கமாக சமுதாய வளர்ச்சித் திட்டம் 1952 ல் புதிதாக தொடங்கி வைக்கப்பட்டபொழுதே, நிலையானதும், ஒருங்கிணைந்ததுமான ஊரக வளர்ச்சி என்னும் கொள்கை உருவாகிவிட்டது. சமுதாய உடைமைகளை உருவாக்குவதும் பராமரிப்பதும் சமுதாய வளர்ச்சித் திட்டத்தில் பல ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது.

மக்களின் தேவைகள் ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்த வண்ணமே இருக்கிறது. ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள்

[1994 ஏப்ரல் 26

ஆகியவற்றின் நிதியுடன் அரசு, 1980-83 ல் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் பெருந்தொகை வழங்கி, உதவி செய்தது. 1992-93–ல் மாண்புமிகு முதலமைச்சரின் சிந்தனைச் செல்வமான, சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் வாயிலாக சுமார் ரூ. 390 கோடி செலவில் அடிப்படை வசதிகளை வழங்கியுள்ளது. இடைப்பட்ட காலத்தில், வறுமை ஒழிப்புத் திட்டங்களான, வேலைக்கு உணவுத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் போன்றவை செயற்படுத்தப்பட்டது.

ஊரக வளர்ச்சித் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருவதால், தமிழகத்தின் ஊரக மக்கள் வாழ்வில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஊரகப் பகுதியில் அடிப்படை வசதிகள் பெருமளவு உயர்ந்துள்ளது. அவற்றில் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

இனம்	**1981**	**1991**
கை-குழாய்கள்	67,699	1,37,513
மின்விசை குழாய்கள்	3,837	25,221
தெருவிளக்குகள்	6,07,138	9,40,981
ஊரகச்சாலைகள்	43,680 கி.மீ.	50,637 கி.மீ.

1991 ம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பு இத்துறையின் செயல்பாட்டை சிறப்பாக சுட்டிக்காட்டுகிறது.

(அ) ஊரக-நகர்ப்புற மக்கட்தொகை விகிதாசாரம் 1981 ல் 67:33 ஆக இருந்தது. 1991 ல் அது 66:34 என மாற்றமடைந்துள்ளது. ஊரக மக்கள் நகர்பகுதியில் குடியேற்றம் செய்வது குறைந்து உள்ளதை இது காட்டுகிறது. நகர்பகுதி குடியேற்றம் கட்டுப்பட்டு இருப்பதற்கு, ஊரகப் பகுதியில் அடிப்படை வசதி, தகவல் தொடர்பு வசதி, ஆகியவை முன்னேற்றமடைந்துள்ளதே காரணமாகும்.

(ஆ) ஊரகங்களில், மக்கட்தொகை பெருக்கம் 13 விழுக்காடு இருந்த போதிலும், ஊரக மக்களின் எழுத்தறிவு 38.5 விழுக்காட்டிலிருந்து 47.5 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

(இ) 1981 கணக்கெடுப்பில், மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கையில் வேளாண் தொழிலாளர்கள், 31.6 விழுக்காடாக இருந்தனர். 1991 ல், வேளாண் தொழிலாளர்கள் 34.6 விழுக்காடாக

1994 ஏப்ரல் 26]

உயர்ந்துள்ளனர். இது வேளாண் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் கணிசமான வளர்ச்சியை காட்டுகிறது.

1981 மற்றும் 1991ஆம் ஆண்டுகளின் மக்கட்தொகை கணக்கெடுப்பை ஒப்பிட்டு பார்த்தால், பயிரிடுவோர், கால்நடைசார் தொழிலாளர்கள் ஆகியோரின் எண்ணிக்கை விழுக்காடு குறைந்து காணப்படுகிறது. இதுவே வேளாண் தொழிலாளர் எண்ணிக்கை உயர்விற்கு காரணமாக இருக்கும்.

இவை அனைத்தும், 1981ல் இருந்ததைவிட 1991ல் ஊரகப் பகுதியில் வேலைதேடுபவர்கள் கணிசமாக உயர்ந்து உள்ளனர் என்பதைக் குறிக்கிறது.

பல அடிப்படை வசதிகள் அளிக்கப்பட்ட போதிலும், சமுதாய சொத்துக்களை ஏற்படுத்தியபோதிலும், ஊரக மக்களின் தேவைகள் தொடர்ந்து அதிகரித்தவாறு உள்ளது.

அரசின் கொள்கைகளுக்கு ஏற்றபடி ஊரக வளர்ச்சித் துறை கீழ்வரும் திட்டங்களை தொடர்ந்து செயற்படுத்தி வருகின்றது:-

(அ) ஊதிய வேலைவாய்ப்பு உருவாக்குதல், சமுதாய/தனிநபர் சார் சொத்துக்கள் ஏற்படுத்தும் பொருட்டு, ஜவஹர் வேலைவாய்ப்பு திட்டம், வேலை உறுதித்திட்டம், தீவிர ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம், வேலைக்கு உறுதி அளிக்கும் திட்டம், சிறப்பு தன்னிறைவுத் திட்டம், பரவலாக்கப்பட்ட மாவட்ட திட்டம் ஆகிய திட்டங்கள்.

(ஆ) சுய வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதற்கான ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம், ஊரக இளைஞர்களுக்கு சுயவேலைவாய்ப்புப் பயிற்சி திட்டம், ஊரக பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்திட்டம், மேம்படுத்தப்பட்ட தொழிற்சாலைகளை, ஊரக கைவினைஞர்களுக்கு வழங்கும் திட்டம் ஆகிய திட்டங்கள்.

(இ) சுற்றுப்புற சுகாதார மேம்பாட்டிற்கான மத்திய ஊரக சுகாதாரத் திட்டம், ஒருங்கிணைந்த சுகாதாரத்திட்டம், உலர் கழிப்பிடங்களை சுகாதார கழிப்பிடமாக மாற்றும் திட்டம், எரிபொருள் சேமிப்பின் பொருட்டு செயற்படுத்தப்படும் தேசிய கரிம வாயுத்திட்டம், மேம்படுத்தப்பட்ட சூளா அடுப்புத் திட்டம் போன்றவைகள்.

(ஈ) வெளிநாட்டு உதவி, தன்னாட்சி நிறுவன உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் சிறப்பு பொதுப்பணித்திட்டம்,

[1994 ஏப்ரல் 26

இந்திய மார்க்-2, கைஅடி குழாய்களை இந்திய மார்க் 3 கைஅடிகுழாய்களாக மாற்றும் திட்டம், தமிழ்நாடு வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின் ஊரக குடிநீர் வழங்கு திட்டம் போன்ற திட்டங்கள்.

(உ) சாலை வசதி, தெருவிளக்கு வசதி, கைஅடி குழாய், மின்விசை குழாய் வசதி போன்ற சமுதாய உடமைகளை பராமரிக்கும் திட்டங்கள்.

1994-95 ம் ஆண்டிற்கு பேரூராட்சிகள் உள்ளிட்ட ஊரக வளர்ச்சிக்கு மானியக் கோரிக்கை எண் 27–ல் ரூ.5,91,95,44,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திட்டங்கள் வாரியான விபரங்கள் கீழ்குறிப்பிடப்பட்டுள்ளன:-

வேலைவாய்ப்பும் சமுதாய உடமைகளும் உருவாக்கும் திட்டங்கள்.

1. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்:

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களின் வருமானத்தைப் பெருக்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் சொத்துக்களை அவர்களே உருவாக்க அரசு மானியம் மற்றும் நிறுவனக்கடன் வழங்க வகை செய்கின்றது. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் ஊரக கைவினைஞர் மற்றும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும் இத்திட்டத்தின் மூலம் உதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான மான்யம், மத்திய மற்றும் மாநில அரசால் சமமாகப் பங்கேற்கப்படுகிறது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், ரூ.6,400–க்கு குறைவாக ஆண்டு வருமானம் பெறும் ஊரக குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் இருப்பதாகக் கொள்ளப்பட்டது. பின்னர் இந்த உச்சவரம்பு ரூ.11,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஆண்டு வருமானம் ரூ.8,500 -க்கு குறைவாகப் பெறும் குடும்பங்களுக்கு மட்டும் முதற்கண் உதவி வழங்கவும் அதில் ரூ.6,000/ வரை வருமானம் பெறும் குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் எனவும் வரையறுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் தாழ்த்தப்பட்டோர் மலை ஜாதியினருக்கான ஒதுக்கீடு மொத்த பயனாளிகளின் எண்ணிக்கையில், 50 சதவீதமாகும். பெண் பயனாளிஞக்காக ஒதுக்கீடு 40 சதவீதமாகும். உடல் ஊனமுற்றவர்களுக்கு 3 சதவீதமாகும்.

1994 ஏப்ரல் 26]

இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளின் வருமானத்தைப் பெருக்கும் உடைமைகளை உருவாக்குவதில் அவர்களின் விருப்பத்திற்கு இடமளிக்கும் வகையில் எல்லா மாவட்டங்களிலும் 50 சதவீத ஒன்றியங்களில் பயனாளிகளிடமே உதவித் தொகை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

குடும்பக் கடன் வழங்கும் திட்டம் (ஊஹறநுகூஙீட் இசுக்ஷகூஞ் டஙீஹநு) தஞ்சாவூர், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மற்றும் பெரியார் மாவட்டங்களில் நடைமுறையிலுள்ளது. இத்திட்டம் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களில் அதன் தகுதிபடைத்த உறுப்பினர்களுக்கு வறுமைக்கோட்டிற்கு மேலே அக்குடும்பங்கள் வர இயலும்வண்ணம், கடனுதவிகள் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பெரியார் மாவட்டத்தில் 200 குடும்பங்களுக்கு கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டங்களில் தலா 100 குடும்பங்களுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது. சாதாரண மான்யம் தவிர உதவி செய்யப்படும் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் கூடுதலாக ரூ.1000 கூடுதல் மான்யமாக வழங்கப்படுகிறது.

1993-94 ஆம் ஆண்டில் 28-2-94 முடிய ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அடைந்த சாதனை பின்வருமாறு:-

நிதித் திறன் இலக்கு	..	ரூ.7,608.00	லட்சங்கள்.
சாதனை	..	ரூ.5,951.58	லட்சங்கள்.
செயல்திறன் இலக்கு	..	184436	குடும்பங்கள்.
சாதனை	..	175055	குடும்பங்கள்.

1994-95 ஆண்டிற்கு ரூ. 2,692.71 லட்சம் பயனீட்டாளர்களுக்கு மான்யம் அளிப்பதற்கான மாநிலப் பங்கிற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. ஊரக இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டம்:

அ. பயிற்சி: ஊரக இளைஞர் சுயவேலை வாய்ப்புத் திட்டம், ஊரக இளைஞர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சியினை அளித்து அதன்மூலம் அவர்கள் தங்களது சொந்தக் கால்களில் நிற்கும் வண்ணம் சுயவேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளவோ அல்லது நிறுவனங்களில் சேர்ந்து கூலிவேலை வாய்ப்பை பெற்றுக்கொள்ளவோ வேண்டும் என்ற நோக்கோடு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தினுடைய ஒரு துணைத் திட்டமாக தொடங்கப்பட்டது.

இத்திட்டம் தொடங்கப்பட்ட 1979 ஆம் ஆண்டிலிருந்து, இதற்குத் தேவையான நிதி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1991-92 ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசு இதனை ஒரு தனித் திட்டமாக ஆக்கி, அதனை நிறைவேற்ற தனியாக நிதியை அளித்தது. பயிற்சிக்கான மற்றும் உள்ளமைப்பு வசதிகளுக்கான செலவினங்களை மத்திய அரசும் மாநில அரசும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன.

1993-94 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.869.06 லட்சம் வழங்கப்பட்டது. 28.2.94 வரை, செயல்திறன் இலக்கான 24,324 இளைஞர்களில் 9,883 இளைஞர்கள் பயிற்சியை முடித்திருக்கிறார்கள். 14,511 இளைஞர்கள் 1,016 நிறுவனங்களில் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

1994 95 ஆம் ஆண்டில் ரூ.799.98 லட்சம் இத்திட்டத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆ. உள்ளமைப்பு வசதி: இத்திட்டத்தின் கீழ், பயிற்சியளிக்கும் மத்திய, மாநில தனியார் மற்றும் சேவை நிறுவனங்களுக்கு அவைகளில் உள்ளமைப்பு வசதிகளை உறுதிப்படுத்திக்கொள்ள உதவித்தொகை வழங்கப்படுகிறது. அரசு நிறுவனங்களுக்கு 100 சதவீத உதவியும், மற்ற நிறுவனங்களுக்கு 50 சதவீத உதவியும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், 3 வருடங்களாகப் பயிற்சி அளித்திருக்கும் நிறுவனங்களுக்கு, வகுப்பறைகள், வேலைப்பட்டறைகள், தங்குமிடங்கள் கட்டுவது, இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் வாங்குவது போன்ற செலவினங்களுக்கு உதவியளிக்கப்படுகிறது.

1993 94 ஆம் ஆண்டில் 63 பயிற்சி நிறுவனங்களுக்கு ரூ.180.00 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1994 95 ஆம் ஆண்டிற்கு ரூ.124.58 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் (டோக்ரா):

கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் என்பது பெண்களின் பொருளாதார நிலையை உயர்த்த வகுக்கப்பட்ட ஓர் உன்னத திட்டமாகும். பெண்கள் குடும்பத்தில் வருவாய் ஈட்டக்கூடியவர்களாகவும், சமூகத்தில் தன்னம்பிக்கையும், செயல்திறனும்,

1994 ஏப்ரல் 26]

ஆடவருடன் சமபங்கு வகிப்பவராகவும் இல்லத்தை உருவாக்கும் அன்னையாகவும் அமைய இத்திட்டம் உருவாக்கப்பட்டது.

இத்திட்டத்தின் நோக்கம்:

பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டத்தில் 10 முதல் 15 பெண்கள் கொண்ட குழு அமைத்து வருமானம் பெறக்கூடிய தொழில்கள் செய்து அதன் மூலம் அவர்கள் தினமும் வேலை பார்க்கவும், உற்பத்தியான பொருட்களை விற்று, அக்குழுவில் உள்ள பெண்களுக்கு வருவாயை பகிர்ந்தளித்து, சமுதாயத்தில் பொருளாதார மறுமலர்ச்சி ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தை நிறைவேற்ற கிராம சேவகிகள் மற்றும் உதவி திட்ட அலுவலர் (பெண்கள் வளர்ச்சி) உதவி புரிகிறார்கள்.

திட்டத்தில் பயன்பெற வழங்கப்படும் நிதி:

இக்குழுக்களுக்கு ஒரே நேரத்தில் ரூ15,000 சுழல் நிதியாக வழங்கப்படுகிறது. இத்தொகையினை மத்திய அரசு, மாநில அரசு மற்றும் யுனிசெப் ஆகியவை சமமாக பகிர்ந்தளிக்கின்றன.

திட்டம் அமுலாக்கப்படும் பகுதிகள்:

1983 84 முதல் இத்திட்டம் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகிறது. தற்போது இத்திட்டம் 17 மாவட்டங்களில் செயலாக்கப்பட்டு வருகிறது. அவைகள் தர்மபுரி, பெரியார், திருச்சி, தென்னாற்காடு, வடாற்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி கட்டபொம்மன், கோயம்புத்தூர், பசும்பொன் முத்துராமலிங்கம், நாகப்பட்டினம் காயிதே மில்லத், செங்கை எம்.ஜி.ஆர். திண்டுக்கல் அண்ணா, காமராசர் மற்றும் நீலகிரி மாவட்டங்களாகும்.

1983 84 முதல் 1993 94 ஆம் ஆண்டு வரை தர்மபுரி, பெரியார், திருச்சிராப்பள்ளி, தென்னாற்காடு (பிரிக்கப்படாத பொழுது), வடாற்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி கட்டபொம்மன், கோயம்புத்தூர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், நாகப்பட்டினம்-காயிதே மில்லத், செங்கை எம்ஜி.ஆர். திண்டுக்கல் அண்ணா, நீலகிரி மற்றும் காமராசர் மாவட்டங்களில் மைய அரசால் அனுமதிக்கப்பட்ட மொத்த 4,678 பெண் குழுக்களில் 28.2.94 முடிய 4591 குழுக்கள் அமைக்கப்பட்டு 78,321 பெண்கள் பயன்பெற்றுள்ளார்கள். இதில் 31,067 தாழ்த்தப்பட்ட மற்றும் 1,283 மலைச்சாதியைச் சார்ந்த பயனாளிகளாகும். மற்றவர்கள் 45,971 ஆகும்.

மேலும் 1994 95 ஆம் ஆண்டு இத்திட்டத்தை மதுரை, கன்னியாகுமரி, ராமநாதபுரம், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் சிதம்பரனார் ஆகிய ஐந்து மாவட்டங்களில் செயல்படுத்த அனுமதி கோரி மைய அரசுக்கு கருத்துரு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

1994 95 ஆம் ஆண்டிற்கு ரூ. 69.87 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. சமுதாய அடிப்படையிலான சேவைகள் ஒருங்கிணைப்புத் திட்டம்:

இந்தியா முழுவதிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 13 மாவட்டங்களில் பெரியார் மாவட்டம் மட்டும் தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த இத்திட்டத்தில் நிறைவேற்ற முன்னோடித் திட்டமாக கீழ்க்கண்ட சேவைகளை ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது:

1. மக்கள் நல்வாழ்வு
2. குடிநீர் விநியோகம்
3. துப்புரவு
4. பெண் முன்னேற்றம்
5. சத்துணவு
6. வயது வந்தோர் கல்வியை மேம்படுத்துதல்
7. தாய் சேய் நலம் காத்தல்

ஒரு கிராமத்தின் தேவையை அந்த கிராமத்தில் வாழும் மக்களே அறிந்துணர்ந்து அங்கு செயல்படும் அரசுத் துறைகளின் அலுவலர்களோடு சேர்ந்து அரசின் திட்டங்கள் முழுமையாக சமுதாயத்திற்கு பயன்படும் வகையில் திட்டமிட்டு அனைத்து அரசுத் தரப்பு இயந்திரங்களும் இணைந்து பணியாற்றுவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்திற்காக மத்திய அரசு ரூ. 5 இலட்சம் 1991 92 ஆம் ஆண்டிற்கும், ரூ. 5 இலட்சம் 1992 93 ம் ஆண்டிற்கும் நிதி வழங்கியுள்ளது. பெரியார் மாவட்டத்தில் இத்திட்டத்தை நிறைவேற்ற கீழ்க்கண்ட வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கபட்டுள்ளன:

1. சத்தியமங்கலம்
2. பெருந்துறை
3. மூலனூர்

1994 ஏப்ரல் 26]

இத்திட்டத்திற்காக மேலும் மேற்படி மாவட்டத்தில் குண்டம், டி.என். பாளையம் மற்றும் தாளவாடி ஆகிய மூன்று வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

மாவட்ட வழங்குதல் மற்றும் விநியோக சங்கங்கள்

ஊரக பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்ட குழுக்களுக்கு விநியோக உதவிகள் அளித்து அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்தி அதனை நிலைநிறுத்துவது மாவட்ட வழங்குதல் மற்றும் விநியோக சங்கங்களின் தலையாய குறிக்கோளாகும்.

புதுக்கோட்டை மற்றும் பெரியார் மாவட்டங்களில் மாவட்ட வழங்குதல் மற்றும் விநியோக சங்கங்கள் அமைக்க மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

5. ஊரக கைவினைஞர்களுக்கு மேம்படுத்தப்பட்ட கருவிகள் வழங்குதல்

ஊரக கைவினைஞர்களுக்கு மேம்படுத்தப்பட்ட கருவிகள் வழங்குதல் திட்டம் 1992 93 முதல் செயல்பட்டு வருகிறது. இது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கிளைத் திட்டமாகும். வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள கருமான், பொற்கொல்லர், தச்சர், குயவர், செருப்பு தைக்கும் தொழிலாளி போன்ற கிராமப்புற கைவினைஞர்களுக்கு ரூ. 2000 பெறுமான மேம்படுத்தப்பட்ட கருவிகள் வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இக்கருவிகளின் மொத்த செலவினத்தில் 90 விழுக்காடு மைய அரசால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. மீதம் உள்ள 10 விழுக்காடு செலவினம் பயனீட்டாளர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. 1992 93 ல் இத்திட்டம் தர்மபுரி மற்றும் நாகை காயிதேமில்லத் மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்டன. இதற்காக மைய அரசு ஒவ்வொரு மாவட்டத்திலும் 2000 கைவினைஞர்களுக்கு மேம்படுத்தப்பட்ட கருவிகள் வழங்குவதற்கு ரூ. 72.00 லட்சங்கள் அளித்துள்ளது. இரண்டு மாவட்டங்களிலுமாக மொத்தம் 4,000 கைவினைஞர்களுக்கு கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

1993 94 ஆம் ஆண்டில் இத்திட்டம் செங்கை எம்.ஜி.ஆர், திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை சம்புவராயர், திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் அமுல்படுத்த மைய அரசு ரூ. 117 இலட்சங்கள் ஒதுக்கியுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 1,300 கைவினைஞர்கள் வீதம் மொத்தம் 6,500 கைவினைஞர்களுக்கு வழங்கப்பட உள்ளது. மேற்கண்ட ஐந்து மாவட்டங்களில் உள்ள ஊரக கைவினைஞர்களுக்கு மேம்படுத்தப்பட்ட கருவிகள் விரைவில் வழங்கப்பட உள்ளது.

[1994 ஏப்ரல் 26

1994 95 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தினை ஏழு மாவட்டங்களில் அமுல்படுத்த மைய அரசு தெரிவித்துள்ளது. அதனை பின்பற்றி சேலம், தென்னாற்காடு வள்ளலார், விழுப்புரம் ராமசாமி படையாச்சியார், மதுரை, திண்டுக்கல் அண்ணா, வடாற்காடு அம்பேத்கார் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் அமுல்படுத்தலாமென கருதுகிறது.

6. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம்

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டமும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டமும் ஒருங்கிணைக்கப்பட்டு 1989 ஏப்ரல் 1-ம் நாளிலிருந்து ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் என்ற பெயரில் செயல்படுத்தப்படுகிறது. ஊரக பகுதிகளில் வேலை வாய்ப்பில்லாத, மற்றும் புதிய வேலை வாய்ப்பு கிடைக்கப்பெறாத ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஆதாயம் கிடைக்கக் கூடிய வகையில் வேலை வாய்பை உருவாக்குதல், ஊரக பொருளாதார அடிப்படை வசதிகளை பெருக்குவதன் மூலம் இடையறா வேலை வாய்பை உருவாக்குதல், ஊரக ஏழை மக்களுக்கு நேரடியாகவும், தொடர்ந்தும் பயன்கள் பெருகும் வகையில் சொத்துக்களை ஏற்படுத்திக் கொடுத்தல், மொத்தத்தில் ஊரக பகுதிகளிலுள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் ஆகியவையே இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ள மக்கள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெற தகுதியுடையவர்கள் ஆவர். வேலை வாய்ப்பில் ஆதி திராவிடர்/ பழங்குடியினருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இத்திட்டத்தின்கிழ் 30 சதவீத வேலை வாய்ப்பு மகளிருக்காக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காகும் மொத்த செலவில் 80 சதவீதம் மத்திய அரசும், 20 சதவீதம் மாநில அரசும் ஏற்றுக்கொள்கின்றன. நாட்டிலுள்ள ஊரக ஏழை மக்களின் எண்ணிக்கையில் மாநிலத்திலுள்ள ஊரக ஏழை மக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மாநிலத்திற்கான நிதி ஒதுக்கீடு அமையும் ஒரு மாநிலத்தில் உள்ள மொத்த ஆதி திராவிடர்/பழங்குடியினர் எண்ணிக்கையில் மாவட்டம் ஒன்றில் உள்ள ஊரக ஆதி திராவிடர்/ பழங்குடியினரின் எண்ணிக்கைக்கு இணங்க ஒரேமாதிரியான சம்பளம் என்ற அடிப்படையில் வகுக்கப்பட்ட பின் தங்கிய நிலை குறித்த குறியீட்டுற்கு இணங்க மத்திய அரசால் மாவட்ட நிதி ஒதுக்கீடுகள் செய்யப்டுகின்றன. வேளாண்மை பணியாளர்களின் நபர் வாரி உற்பத்தி மாவட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யும் கோட்பாடு 1993 94ஆம் ஆண்டில் மத்திய அரசால் திருத்தப்பட்டுள்ளது.

1994 ஏப்ரல் 26]

வரையறுக்கப்பட்ட மொத்த ஒதுக்கீட்டில் 10 சதவீதம் இந்திரா நினைவு குடியிருப்புத்திட்டத்திற்கும் 30 சதவீதம் மில்லியன் கிணறுகள் திட்டத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மொத்த ஒதுக்கீட்டில் 2 சதவீதம் நிர்வாக செலவுகளுக்காக அமைதிக்கப்படுகிறது. எஞ்சியுள்ள நிதியை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளும் ஊராட்சிகளும் 20:80 என்ற அடிப்படையில் பகிர்ந்துக் கொள்கின்றன. ஊராட்சிகளுக்கான நிதி ஆதாரங்கள், மக்கள் தொகையின் குறைந்த அளவு எண்ணிக்கை 1000 ஆகவும் உயரளவு எண்ணிக்கை 10,000 ஆகவும் கொண்டு அதாவது மக்கள் தொகை 1,000-த்திற்கு குறைவாக இருந்தால் 1,000 ஆகவும் 10,000-த்திற்கு கூடுதலாக இருந்தால் 10,000 ஆகவும் கொண்டு ஒதுக்கப்படுகிறது. கிராம ஊராட்சிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வது, அந்த ஊராட்சியின் ஆதி திராவிடர்/பழங்குடியினர் மக்கள் தொகைக்கு இணைங்க 60 சதவீத நிதியும் அந்த ஊராட்சியின் மொத்த மக்கள் தொகையின் அடிப்படையில் 40 சதவீத நிதியும் ஒதுக்கீடு செய்யப்படும்.

தினக்கூலி ஆண் அல்லது பெண் இருவருக்கும் நாளொன்றுக்கு ரூபாய் 20 என்ற வீதத்தில் இரண்டு கிலோ உணவு தானியம் உட்பட வழங்கப்பட்டு வருகிறது.

கிராம ஊராட்சிகள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியைக் கொண்டு திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு அனுமதியளிக்கும் அதிகாரம் கிராம ஊராட்சிகளுடையதாகும். இத்திட்டத்தின் கீழ் ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியைக் கொண்டு திட்டம் தீட்டி பணிகளை ஊராட்சிகளே நிறைவேற்றலாம். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அமைப்புகளில் பங்காக ஒதுக்கப்பட்ட 20 சதவீத நிதியைக் கொண்டு திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அனுமதியளிக்கும். ஒதுக்கீட்டுத் தொகைகள் ஊராட்சி/ஊராட்சி ஒன்றியம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அமைந்துள்ள பகுதியில் மிக அருகிலுள்ள துணை அஞ்சல் அலுவலகத்தில் அந்தந்த ஊராட்சிகளின் பெயரில் வைப்பீடு செய்யப்படுகின்றன.

ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 10 சதவீத நிதியை கிராமங்களில் உள்ள சொத்துக்களை பராமரிப்பதற்காக செலவிடப்படலாம். இச்சொத்துக்களை பராமரிக்கும் பொறுப்பு கிராம ஊராட்சிகளுடையதாகும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பங்கு பின் வருமாறு செலவிடப்படவேண்டும்.

		சதவீதம்.
1) பொருளாதார வகையில் ஆதாயம் தரதக்க சொத்துக்கள்	..	35
2) சமுதாய காடுகள் வளர்ப்பு பணிகள்	..	25
3) ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கான தனி நபர் பயன் திட்டம்	..	22.5
4) சாலைகள் கட்டிடங்கள் உட்பட ஏனைய பணிகள்	..	17.5

தொகுப்பு வீடுகள்.

வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள ஆதி திராவிடர்/பழங்குடியினருக்காக ஊரக மேம்பாட்டுத் துறையால் இலவசமாக வீடு கட்டிக் கொடுக்கும் பணி, ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் பகுதியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு ஊறுதியளிப்புத் திட்டம் மற்றும் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் ஆகியவற்றின் கீழ் 3.85 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

1994 95 ஆம் ஆண்டில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்ட ஒதுக்கிட்டில் 10 விழுக்காடு இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கு 25,000 வீடுகள் கட்டிக் கொடுக்க இவ்வரசு கருதியுள்ளது. (தஇஇ) கூரை அமைப்பதற்காக ஒரு வீட்டிற்கு ரூபாய் 6,500 என்ற வீதத்தில் தமிழக அரசு மாநில நிதியிலிருந்து நிதி உதவி அளிக்கிறது.

மில்லியன் கிணறுகள் திட்டம்.

இது ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் ஒரு துணைத் திட்டமாகும். ஒதுக்கீட்டில் 30சதவீதம் மில்லியன் கிணறுகள் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர்/பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்காக பாசனக் கிணறுகளை தோண்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிறு பாசன ஆதாரங்களை மேம்படுத்துதல் மற்றும் நீர்பெருகு ஏற்பாடுகளை மேம்படுத்துதல் ஆகியவை மில்லியன் கிணறுகள் திட்டத்தில் செயல்படுத்தப்படும் சில பணிகளாகும். 1994 95 ஆம் ஆண்டிற்கு ரூ. 6676.80

1994 ஏப்ரல் 26]

லட்சம் நிதி ஒதுக்கீடு கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் அல்லாத ஏழை மற்றும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு இவ்வொதுக்கீட்டில் 10 சதவீதம் வரை பயன்படுத்தலாம். 1993 94 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 5955 கிணறுகள் தோண்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. நடப்பாண்டிற்கு ஆதி திராவிடர், பழங்குடியினர் அல்லாத விவசாயிகளுக்கு 6,000 கிணறுகள் தோண்ட கருதப்பட்டுள்ளது. இதற்கான மொத்த செலவு ரூபாய் 2520 இலட்சமாக இருக்கும். முன்னாள் ஜமீன் ஏரிகள் உட்பட 2500 சிறு பாசன ஏரிகள் இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 3750 இலட்சம் மொத்த செலவில் நிலைப்படுத்துவதற்காக எடுத்துக் கொள்ளப்படும்.

நீர் பெறும் ஏற்பாடுகள். (Water Harvesting Structure).

நீர் பெறும் ஏற்பாடுகள் (ரஹஞ்க்சு ஏஹசுஞ்க்சூஞ்சூநூகீ நஞ்சுஞிஷஞ்ஞிசுக்) இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படலாம். இவ்வகையிலான பணியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட முக்கிய பணியினங்களில் கசிவு நீர் குட்டைகள் கட்டுதல், கோவில் ஏரிகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் அடங்கும். 1994 95 ஆம் ஆண்டில் மொத்தம் ரூபாய் 406.80 இலட்சம் செலவில் 270 பணிகள் மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. இவ்வாறாக 1994 95 ஆம் ஆண்டில் ரூபாய் 6676.80 இலட்சம் செலவில் மில்லியன் கிணறுகள் தோண்டும் திட்டம் செயல் படுத்தப்படும்.

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1994 95 ஆம் ஆண்டில் மேற்கொள்ள கருதப்பட்டுள்ள சில முக்கியமான பணியினங்கள் கீழே விரிவாக கொடுக்கப்பட்டுள்ளன.

தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள்.

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்ட நிதியைக் கொண்டு தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்விற்கிணங்க கட்டடம் தேவைப்படும் மொத்த தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை 5,014 ஆகும். இத்துடன் 1545 கட்டடங்கள் ஆதி திராவிட தொடக்கப் பள்ளிகளுக்கு தேவைப்படுகின்றன. இவ்வாறாக 1991 92 இருந்து 1993 94 வரையிலான கால அளவில் தேவைப்பட்ட 6559 கட்டங்களில் 4991 கட்டடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1,568 கட்டிடங்கள் கட்டும் பணி எஞ்சியுள்ளது. 1994 95 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 1000.50 இலட்சம் செலவில் 667 தொடக்க பள்ளி கட்டடங்கள் கட்டும் பணி மேற்கொள்ள கருதப்பட்டுள்ளன.

[1994 ஏப்ரல் 26

ஊராட்சி அலுவலக கட்டடம்.

இந்தியா அரசியல் அமைப்பு சட்டத்தின் 73வது திருத்தம் கொண்டுவரப்பட்டதை அடுத்து மூன்றடுக்கு உள்ளாட்சி முறை அதாவது ஊராட்சிகள், இடைநிலை ஊராட்சிகள் மற்றும் மாவட்ட அளவு ஊராட்சிகள் ஏற்படுத்த வேண்டியுள்ளதால் ஊராட்சி அலுவலக கட்டடம் கட்டுவது முக்கியத்துவம் பெற்றுள்ளது. 1993 94 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட உரையில் கட்டடங்கள் இல்லாத 4906 ஊராட்சிகளுக்கு 1993 94 ஆம் ஆண்டில் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டது. 1993 94 ஆம் ஆண்டில் 1,766 கட்டடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டது. 1994 95 ஆம் ஆண்டில் ரூபாய் 100 இலட்சம் செலவில் 100 கட்டடங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய உணவு மையங்களுக்கு கட்டடங்கள் கட்டுதல்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய உணவு மையங்களுக்கு 300 கட்டடங்கள் கட்டும் பணி மொத்தம் ரூ. 255 இலட்சம் செலவில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

பேருந்து செல்லும் சாலைகளுக்கு தார் போடுதல்.

சாலைகளுக்கு தார் போடும் திட்டம் 1990 91, 1991 92 ஆகிய ஆண்டுகளில் ஜவஹர் வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டது. 1992 93, 1993 94 ஆகிய ஆண்டுகளில் நீர் ஊற்றி மெக்கடம் (ர.ஆங) சாலை அமைக்கும் பணி ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. கடந்த இரண்டாண்டுகளில் 6,128 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகளில் இப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்சாலைகள் 2 அடுக்கு மெக்கடம் சாலைகள் அமைத்து மேம்படுத்தப்பட்டுள்ளன. பேருந்துகள் செல்லும் இச்சாலைகளில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படுகையில் இச்சாலைகள் நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கும் வகையில் உறுதியாக அமைக்கப்பட வேண்டியதை கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே, இச்சாலைகள் மோட்டார் வாகன போக்குவரத்துக்கு ஏற்றதாக செய்ய 1,200 கிலோமீட்டர் நீளத்திற்கு தார் சாலை போட கருதப்பட்டுள்ளது. மெக்கடம் சாலைக்கு மேல் ஓர் அடுக்கு தார் சாலை போடுவதற்கு ரூ. 3,000 இலட்சம் மொத்த செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

1994 ஏப்ரல் 26]

கிராமப்புற விளையாட்டு அரங்கம்.

கிராமப்புற இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் விளையாட்டுத் திறன் வளர்ச்சிக்காக ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 388 ஊராட்சி ஒன்றியங்களில் விளையாட்டுத் திடல்கள் அமைப்பது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

பொது விநியோக விற்பனை நிலையங்கள்.

தமிழ்நாட்டில் மொத்தம் 17347 பொது விநியோகக் கடைகள் கிராமப்புறங்களில் உள்ளன. அவற்றில் 4214 கடைகள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. எஞ்சிய 13133 பொது விநியோகக் கடைகள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. வாடகைக் கட்டடம் தரம் உள்ளதாகவும், விஞ்ஞான ரீதியிலும், எலிகளால் தானியங்கள் பாழ்படாத நிலையிலும் அமையவில்லை. எனவே இக்குறையை நீக்கி மற்ற வசதிகளையும் ஏற்படுத்தி உணவு தானியங்களை அளந்து விநியோகிக்கவும், மக்கள் அதற்குண்டான கிரயத்தை செலுத்துவதற்கு வேண்டிய வசதியுடன் இந்த கட்டடங்கள் அமையவேண்டும். 1993 94 ஆம் ஆண்டு 327 கட்டடங்கள் கட்ட திட்டமிடப்பட்டது. எஞ்சிய 12806 கடைகளுக்குக் கட்டடங்கள் படிப்படியாக கட்டப்படும். 1994 95 ஆம் ஆண்டில் ஆண்டு ஒன்றுக்கு வட்டாரம் ஒன்றில் ஒன்று அல்லது இரண்டு பொது விநியோக விற்பனை நிலையக் கட்டடம் வீதம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கதிரடி களங்கள் அமைத்தல்.

தஞ்சாவூர், நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், தென்னாற்காடு வள்ளலார் மாவட்டங்களில் விவசாயிகள் அறுவடை காலங்களில் விளைந்த நெற்கதிர்களிலிருந்து நெல் தானியங்களைப் பிரித்து எடுப்பதற்குப் போதுமான களங்கள் இல்லையென தெரிவித்துள்ளார்கள். எனவே தரமான விதைகள் சேகரிக்கவும் நெல் தானியங்களைப் பிரித்து எடுக்கவும் பொது களங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. 1994 95 ஆம் ஆண்டு 50 கதிரடி களங்கள் ரூ. 50 லட்சம் மூலதனத்தில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பொது வசதிகளுடன் கூடிய பட்டறை.

நெசவாளர்கள், தச்சர்கள், பொற்கொல்லர்கள் போன்ற கைவினைஞர்கள் வாழும் கிராமங்களில் தமது தொழிலுக்குப் பொதுவான பட்டறை வேண்டுமென கோருகிறார்கள். 1994 95 ல் ஜவஹர் வேலை வாய்ப்புத்

திட்டத்தில் ரூ. 50 லட்சம் செலவில் 50 பட்டறைகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

நிறுவனங்களுக்கு துப்புரவுத் திட்டம்.

பொது நிறுவனங்களாகிய துவக்கப் பள்ளிகள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய உணவுக் கூடங்கள் ஆகியவை பெருமளவிற்கு துப்புரவு வசதிகள் இல்லாது இருக்கின்றன. இத்தகைய நிறுவனங்களுக்கு துப்புரவு வசதிகள் அளிக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. 1994 95 ல் இப்பணி 1,000 நிறுவனங்களுக்கு ரூ. 200 லட்சம் செலவில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

கிராமப்புற சொத்துக்களை பராமரித்தல்.

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் சாலைகள், பள்ளிக் கட்டடங்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கூடங்கள், தரைமட்ட நீர் நிலைகள், ஊராட்சி அலுவலகம், மகப்பேறு துணை மையம், கசிவு நீர் குட்டைகள், படிப்பு அறைகள் போன்ற சமூக சொத்துக்கள், பல திட்டங்களை செயல்படுத்தியதால் சில ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் 10சதவீதம் நிதியை கிராமப்புற சொத்துக்களைப் பராமரிக்கப் பயன்படுத்தலாம் என்ற நிலையில் 1994 95 ஆம் ஆண்டு ரூ. 1032 லட்சம் மூலதனத்தில் இத்தகைய பராமரிப்புப் பணிகளை கிராமப் புறங்களில் மேற்கொள்ளலாம்.

கிராமப்புற அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான கீழ்க்குறிப்பிடும் சிறுபணிகளைக் கருத்தில் கொண்டு அவைகளைச் செய்ய ஊராட்சிகள் திட்டமிடலாம்.

(1) குளங்கள்

)2) வெள்ளத் தடுப்புச் சுவர்

(3) தொலைக்காட்சி மற்றும் வானொலிகள் அமைத்தல்

(4) கிராமப்புறச் சாலைகள்

(5) மயானப் பாதைக்கு வழிகள்

(6) கால்நடை உதவி நிலையங்கள்

1994 ஏப்ரல் 26]

(7) விற்பனை நிலையங்கள்

(8) சாலைகள், சிறுபாலங்கள் (ஆதி திராவிடர்/பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு).

(9) ஆழ்துளை கிணறு, கைப்பம்புகளுக்கு பிளாட்பாரம்

(10) தரைப்பாலங்கள்

(11) பம்பு அறைகள்

இவைகளை கிராமப்புறங்களில் ஏற்படுத்த ரூ. 2171.30 லட்சம் மூலதனம் ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டத்தில் கிடைக்கும்.

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு 1994 95 ம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில், மாநில மற்றும் மத்திய அரசுகளின் பங்காக ரூ. 18408.78 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சமூகக் காடுகள் திட்டம்:

தமிழ்நாட்டில் சமூகக் காடுகள் திட்டம் 1985 86 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் ஒரு மக்கள் இயக்கமாகவும் 1989 முதல் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் தொடர்ந்தும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் நோக்கங்களாவன:-

(1) கிராமப்புறங்களில் வேலை இல்லாதோர்க்கு வேலை வாய்ப்பு அளித்தல்.

(2) கிராமப்புற ஏழை மக்களின் தேவைகளான விறகு மற்றும் கால்நடை தீவனம் கிடைக்கச் செய்தல்.

(3) ஊராட்சிகளுக்குச் சொந்தமான நிலங்களில் காடு வளர்ப்பு மூலம் ஊராட்சிகளுக்கு சொத்துக்களை ஏற்படுத்துதல்.

(4) சுற்றுப்புற சூழ்நிலை மேம்படுத்துதல்

சமூகக் காடுகள் திட்டத்தின்கீழ் பயனடைவோர்:

(1) கிராமப்புற நிலங்களில் விறகு மற்றும் கால்நடை தீவனத்திற்கு தேவையான மரக்கன்றுகள் நடுவதன் மூலம் ஊராட்சிகளில் சமுதாயக் காடுகளைச் சொத்துக்களாக உருவாக்குதல்.

[1994 ஏப்ரல் 26

(2) நிலமற்ற, தாழ்த்தப்பட்ட, கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்ட ஏழை மக்கள், ஜீவன்தாரா கிணறு பயனாளிகள் மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் பயனடையும் விவசாயிகளுக்கு இலவசமாக மரக்கன்றுகள் வழங்குதல்.

(3) தொகுப்பு வீடுகளின் பயனாளிகளுக்கு வீட்டுத் தோட்டம் அமைக்க தேவையான பழவகை மற்றும் இதர மரக்கன்றுகள் இலவசமாக வழங்குதல், சாலை கால்வாய் மற்றும் இரயில் பாதை ஓரங்களில் மரக்கன்றுகள் நடுதல்.

நடப்பு ஆண்டில், அதாவது 1994-95—ல் 21000 ஹெக்டேர் பரப்பளவில் 330 இலட்சம் மரம் மற்றும் பழக்கன்றுகள் நட திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காகும் செலவு ரூ. 863.691 இலட்சத்தினை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும். மேலும் 40,000 ஆதி திராவிடர்/ பழங்குடியினர் வாழும் தொகுப்பு வீடுகளில் வீட்டுத் தோட்டம் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் சமூகக் காடுகள் திட்டத்தினை ஆழ்ந்த ஈடுபாட்டுடன் இதர திட்டங்களான அரசு துறையை சாராத நிறுவனங்கள் டானிடா, டோக்ரா மற்றும் டிரைசம் ஆகியவற்றுடன் இணைத்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

முக்கியமான சில மரவகைகள் பின்வருமாறு:.

கருவேல், கூபாபுல், தீக்குச்சி மரம், முந்திரி, மான்காதுவேல், யூகலிப்டஸ், பீகுகம், வேம்பு, புளியமரம், கபாக், முருங்கை, வாகை, சில்வர் ஓக், சவுக்கை, தேக்கு, மூங்கில், வாட்டில், இதர வகைகள் நாவல், வேல்வேல், இலுப்பை, ஒடை, பரம்பை, உசில், தென்னை, கொய்யா, எலுமிச்சை ஆகியன.

சாதனை விபரம் 1993-94, (28-2-94 முடிய):

வ.எண்.	விபரம்	இலக்கு	சாதனை	விழுக்காடு சதவீதம்
(1)	(2)	(3)	(4)	(5)
1.	செடிகள் உற்பத்தி (இலட்சத்தில்)	276.00	281.72	102.07
2.	செடிகள் நடப்பட்டது (இலட்சத்தில்)	276.00	263.85	95.60
3.	மொத்த பரப்பளவு (ஹெக்டேரில்)	179.55	182.00	101.36
4.	மொத்த செலவினம் (இலட்சத்தில்)	608.97	557.62	91.57

TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 26]

7. சிறப்பு தீவிர ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம். (ஜவஹர் ரோஜ்கர் யோஜனா இரண்டாம் திட்டம்) (JRY Second Stream)

சிறப்பு தீவிர ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் (ஜவஹர் ரோஜ்கர் யோஜனா இரண்டாம் திட்டம்) என்ற புதிய திட்டத்தை மைய அரசு நவம்பர் 93 ல் அறிமுகப்படுத்தியது. இந்த திட்டத்தில் நிதி ஆதாரம் மைய அரசும், மாநில அரசும் முறையே 80:20 என்ற விகிதத்தில் பங்கேற்கின்றன. மைய அரசு கீழ்க்காணும் 8 மாவட்டங்களில் மேற்கண்ட திட்டத்தினை அமல்படுத்துமாறு தெரிவித்துள்ளது.

(1) செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்

(2) தென்னாற்காடு வள்ளலார்

(3) விழுப்புரம் இராமசாமி படையாச்சியார்

(4) தஞ்சாவூர்

(5) நாகப்பட்டினம் காயிதே மில்லத்

(6) தர்மபுரி

(7) வ.உ.சிதம்பரனார் மற்றும்

(8) இராமநாதபுரம்

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து மாவட்டங்களிலும் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கூடுதல் ஆதாரங்கள் அளிக்கப்படும்.

இந்த மாவட்டங்களில் வேலையற்றோர் மற்றும் வேலை வாய்ப்பு குறைவாக உள்ள பகுதிகளை கண்டறிந்து அந்த பகுதிகளில் இத்திட்டத்தை அமல்படுத்தி நிலையான சொத்துக்களும் மற்றும் உற்பத்தி பெருக்கும் வகையில் அமையும் சமுதாய சொத்துக்களை ஏற்படுத்துவதுடன் தொடர்ந்து கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கக்கூடிய பணிகள் மேற்கொள்ளலாம். எல்லா காலங்களிலும் பயனுள்ள வகையில் அமையும் சாலைகள், சிறு பாசன ஆதாரங்கள், நிலம் மற்றும் சேகரிப்புத் திட்டங்கள் நீர் பெறும் ஏற்பாடுகள் (Water Harvesting Structures). பயனற்ற நிலங்களை பயனுள்ள நிலங்களாக மாற்றும் திட்டங்கள், பண்ணைக்காடுகள், ஆரம்பப்பள்ளிக் கட்டடங்கள் போன்ற பணிகளை இத்திட்டத்தில் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. 1993 94 ஆம் ஆண்டு, இத்திட்டத்திற்காக ரூ. 1245 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1994-95 ஆம் ஆண்டிற்கு மைய அரசு கூடுதலான ஒதுக்கீடு செய்யும் என

எதிர்பார்க்கப்படுகிறது. 1994 95 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கான மாநில மற்றும் மத்திய அரசின் ஒதுக்கீடு பங்கீட்டுத் தொகைக்காக ரூ. 2490 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8. வேலைக்கு உறுதி அளிக்கும் திட்டம்:
(Employment Assurance Scheme)

மைய அரசும், மாநில அரசும் இணைந்து செயல்படுத்தும் திட்டமாகிய வேலைக்கு உறுதி அளிக்கும் திட்டம் (உநுசிஙீச்நுக்நூஞ் அகுசூஞிசுஹநுஷக் நஷகுக்நுக்) 1.10.1993 முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு தேவையான நிதி ஆதாரத்தை மைய அரசும், மாநில அரசும் முறையே 80:20 என்ற விகிதத்தில் பங்கு ஏற்கின்றன. தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள், பழங்குடியினர் மேம்பாட்டு திட்ட மாவட்டங்கள் மற்றும் மலைப்பகுதி திட்ட மாவட்டங்கள் ஆகியவற்றில் 57 வட்டாரங்களில் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் கிராமத்தில் உள்ள ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த 2 நபர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 100 நாட்களுக்கு விவசாய வேலைகள் இல்லாத காலங்களில் வட்டார எல்லைக்குள் வேலை அளிப்பதற்கு உறுதி அளிக்கிறது. மழை நீர் சேகரித்தல், நில அமைப்பைப் பாதுகாத்தல், தாவர வகைகள் ஏற்படுத்துதல், காடு வளர்ப்பு, வேளாண் தோட்டக்கலை, silvi pastures புல்வெளி நீர் வள மேம்பாடு, சிறு பாசன குளங்கள், கசிவு நீர்க்குட்டைகள், கிராமக் குளங்கள், கால்வாய்கள் அமைத்தல், இணைப்புச்சாலைகள் அமைத்தல், ஆரம்பப் பள்ளி கட்டடங்கள் அமைத்தல் மற்றும் குழந்தைகள் காப்பகங்கள் கட்டுதல் போன்ற பணிகளை மேற்கொள்ளலாம்.

18 வயதிற்கு மேம்பட்டும், 60 வயதிற்குள்ளாகவும் உள்ள ஆண் மற்றும் பெண் இருபாலரும் தங்களுக்கு வேலை வாய்ப்பு வேண்டி, கிராம பஞ்சாயத்து அலுவலகத்தில் தங்களின் பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம். அவர்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.

1993- 94 ஆம் ஆண்டில் ரூபாய் 350 இலட்சம் இத்திட்டத்திற்காக அளிக்கப்பட்டுள்ளது. 1994-95 ஆம் ஆண்டில் மத்திய அரசிடம் இருந்து கூடுதலான நிதி ஒதுக்கீடு கிடைக்குமென எதிர் பார்க்கப்படுகிறது.

1994-95 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை மதிப்பீட்டில், இத்திட்டத்திற்காக ரூ. 1,687.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 26]

9. நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளின் முன்னேற்றத் திட்டம்: (M.Ps Local Area Development Scheme)

மத்திய அரசின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளின் முன்னேற்றத் திட்டம் 1993 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அறிவிக்கப்பட்டது. மேற்கூறிய திட்டத்தின்படி ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் தமது தொகுதிகளில் தமது விருப்பப்படி ஒரு ஆண்டிற்கு ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டப் பணிகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் செயற்குறிப்புகளை அளிக்கலாம். மேற்கூறிய பணி ஒவ்வொன்றும் ரூ. 10 லட்சங்கள் செலவுக்கு மிகாமல் இருக்க வேண்டும். மாநில அரசில் உள்ள எந்த தொகுதியில் இருந்து நாடளுமன்ற/மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் அவர்களுக்கு மேற்கூறிய திட்டத்தில் பணிகளை மேற்கொள்ள மாநில அரசில் உள்ள ஏதேனும் ஒரு மாவட்டத்தை தேர்ந்தெடுக்கலாம்.

2) மேற்கூறிய திட்டத்தின்படி 22 வகை பணிகள் மைய அரசால் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதன்படி சொத்துக்களை தோற்றுவிப்பது முதன்மையானதாக இருக்கும். இத்திட்டத்தின் கீழ் தளவாடங்கள், கருவிகள் வாங்குதல் அல்லது வருவாய் செலவினம் மேற்கொள்ளாமல் பள்ளிக் கட்டிடங்களை கட்டுதல், குடிதண்ணீர் வசதி செய்து தரல், ஊராட்சி சாலை வசதி, பாலங்கள், வயதானவர்களுக்கும் உடல் ஊனமுற்றவர்களுக்கும் தங்குவதற்கு வசதி செய்து தரல். சமுதாய காடுகள், பாசன கால்வாய் வசதி செய்து தரல், பொது சுகாதார மையம், வடிகால், வாரி நீரோடை, கால்நடை மருத்துவ வசதி மையம் போன்றவற்றை அளித்தல் ஆகிய பணிகளை அத்திட்டத்தில் மேற்கொள்ளலாம் என்று மத்திய அரசு வழிநூலில் கூறப்பட்டுள்ளது.

இவ்விதிமுறையின் படி 12 வகை பணிகளை மேற்கொள்ள இயலாது. அவையாவன மாவட்டத் திட்டத்தில் சேர்க்கக் கூடாத மத்திய/மாநில அரசினரின் அலுவலக கட்டிடங்கள், வசிப்பதற்கான கட்டிடங்கள் மத்திய, மாநில அரசு அலுவலகங்கள், வணிக அமைப்பு தொடர்பானவை, அறக்கட்டளை, பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு நிலையம், தனியார் அமைப்புகள் அரசின் நிதி உதவி பெறும் அமைப்புகள் ஆகியவற்றின் பணிகள் பராமரித்தல் மற்றும் பழுது பார்த்தல் தொடர்பான பணிகள், மான்யம் மற்றும் கடன் வழங்கல் நினைவுச் சின்னம் அமைத்தல், நிலம் கையகப்படுத்துதல் அல்லது நிலம் வாங்குவதற்கு இழப்பீடு செய்தல்,

வழிபாடு தொடர்பான இடங்கள், தனியாருக்குப் பயன் தரும் சொத்து ஆகிய பணிகள் ஆகும்.

1993 94 ஆம் நிதியாண்டில் மைய அரசு இத்திட்டத்திற்காக ரூ. 2.85 கோடிகள் வழங்கியுள்ளது. 39 மக்களவை உறுப்பினர்கள் மற்றும் 18 நாடாளுமன்ற மேலவை உறுப்பினர்கள் ஆக மொத்தம் 57 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, ஒருவருக்கு ரூ. 5 லட்சங்கள் என்ற வீதத்தில் மேற்கூறிய தொகை வழங்கப்பட்டன. 1993 94-க்கு மீதமுள்ள தோகை ரூ. 54.15 கோடியை 1994 95 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுடன் சேர்த்து மைய அரசு வழங்கும் என்று கருதப்படுகிறது.

10. வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் (Programme for Assured Employment):

வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. இத்திட்டம், முதல் கட்டமாக வறட்சிக்கு இலக்கான 4 மாவட்டங்களான புதுக்கோட்டை, இராமநாதபுரம், தர்மபுரி மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், உடலுழைப்பை செய்ய விரும்பும் கிராமப்புறங்களில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்குவதாகும். இதற்காக, இத்திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பை வழங்கும் ஆதாரப் பிரிவாக (யூனிட்) ஊராட்சிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் வேலை செய்ய விரும்பும் நபர்கள் ஊராட்சிகளில் தமது பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு பதிவு செய்து வேலை வாய்ப்பு வேண்டி விண்ணப்பித்த நபர்களுக்கு 7 நாட்களுக்குள் வேலை வழங்கப்படாவிடில், நாளொன்றுக்கு நிவாரணமாக ரூ. 2 வீதம் வழங்கப்பட வேண்டும். வேலை, அவர் வசிக்குமிடத்தில் இருந்து 8 கி.மீ. தொலைவிற்குள் வழங்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட அளவிலும், ஒன்றிய அளவில் வட்டார வளர்ச்சி அலுவலர்களும் இத்திட்டத்தை செயலாக்க பொறுப்பாவார்கள். வேலை வேண்டுபவர்களுக்கு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, வேளாண் பொறியியல் துறை போன்ற துறைகளின் மூலம் வேலை வழங்கப்படும். வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் செயல்படுத்தும் மற்றத் துறைகளும், வேலை கோரி பதிவு செய்த தொழிலாளர்களுக்கு வேலை வழங்க வேண்டும்.

1993-94 ஆம் ஆண்டில் இத் திட்டம் திருவண்ணாமலை சம்புவராயர், திண்டுக்கல் அண்ணா, காமராஜர்; வ. உ. சிதம்பரனார் மற்றும் திருநெல்வேலி

1994 ஏப்ரல் 26]

கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு மேற்கூறிய மாவட்டங்களுக்கு ரூ. 10.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய 5 மாவட்டங்களில் உள்ள திருத்தியமைக்கப்பட்ட பொது விநியோக வட்டாரங்களில் ஏற்கனவே மைய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட வேலைக்கு உறுதி அளிக்கும் திட்டம் (உ.அ.ந.) அமுல் செய்யப்படும். வட்டாரங்களைத் தவிர்த்து எஞ்சிய வட்டாரங்களில் மாநில திட்டமான வேலை வாய்ப்பு உறுதித்திட்டம் செயல்படுத்தப்படும்.

11. சிறப்பு தன்னிறைவுத் திட்டம்:

தமிழக அரசு ஊரக பகுதிகளில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தினை செயல்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 1991 92 மற்றும் 1992 93 ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் இரண்டு ஆண்டுகளில் 1 கோடி ரூபாய் வீதம் அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் நிதி மற்றும் செயல்திறன் ஒதுக்கீடு பின்வருமாறு:

பிரிவு (1)	செயல்பாடு (2)	நிதி (ரூ. கோடியில்) (3)
1. சாலை மேம்பாடு	7502 கி.மீ.	159.47
2. ஊரகப் பகுதிகளுக்கு குடிநீர் வசதி	8972 குடியிருப்புகள்	108.23
3. தெருவிளக்குகள்	1,94,000 எண்ணிக்கை	41.75
4. சிறுபாசன குளங்கள் மேம்பாடு-	-	-
(அ) சிறுபாசன திட்டங்கள் மற்றும் கசிவு நீர்க் குட்டைகள்	3231 எண்ணிக்கை	24.17
(ஆ) சிறுபாசன கால்வாய் தூரு எடுத்தல்	2910 கி.மீ	-

DTP–53/118-41

(1)	(2)	(3)
5. பள்ளிக்கூட கட்டிடங்கள் கட்டுதல் (ஆரம்ப பள்ளிகள்)	2198 எண்ணிக்கை	30.46
6. புரட்சித் தலைவர் எம்ஜி.ஆர். மதிய உணவுக்கூடங்கள்	2879 எண்ணிக்கை	20.40
7. தொலைக்காட்சிப் பெட்டிகள்	1861 எண்ணிக்கை	2.76
		387.24

12. பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டம்:

மாநில அளவில் இருந்து வரும் திட்டமிடும் பொறுப்பு மாவட்டங்களுக்கும் அடித்தளத்து ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகளுக்கும் பரவலாக்கப்பட வேண்டும். எனவே சிறுதொகை முதலீட்டில் சில கிராமங்களுக்கோ அல்லது ஒரு மாவட்டத்திற்கு மட்டுமோ பயன்விளையும் பணிகளைச் செய்வதற்கான திட்டங்களை வகுத்து செயற்படுத்தும் பொறுப்பு, முதற்கட்டமாக மாவட்டங்களுக்கு 1993 94-ம் ஆண்டிலிருந்து பரவலாக்கப்பட்டுள்ளது. அதன்படி, மாவட்டத் திட்டம் தீட்டி செயற்படுத்துவதற்கான வழிமுறைகளும் வகுக்கப்பட்டுள்ளன. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் மூலம் பரவலாக்கப்பட்ட மாவட்டத்திட்டம் தயாரிக்கப்பட்டு மாவட்ட வளர்ச்சி மன்ற ஒப்புதல் பெற்று செயற்படுத்தப்பட வேண்டும்.

1993 94 ஆம் ஆண்டுக்கான மாவட்டத் திட்ட வழிமுறைகளின்படி கீழ்க்குறிப்பிடும் வகை பணிகளைச் செயல்படுத்ததலாம்:

1. ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல்.
2. சத்துணவுக்கூடங்கள் கட்டுதல் மற்றும் புதுப்பித்தல்.
3. ஊரக மருந்தகங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள் கட்டுதல்.

1994 ஏப்ரல் 26]

4. குழாய் பாலங்கள் மற்றும் சிறிய பாலங்கள் கட்டுதல்.

5. பொதுக்கிணறுகள், மற்றும் குழாய் கிணறுகளை ஆழப்படுத்ததுதல்.

6. பாசனக் கால்வாய்கள் மற்றும் குளங்கள் தூர் அகற்றுதல்.

7. அரசு நிலங்களில் காடு வளர்த்தல்.

8. அழியக்கூடிய நிலையில் உள்ள காடுகளை புதுப்பித்தல்.

9. ஊரக கால்நடை மருந்தகங்கள் கட்டுதல்.

10. கோழி மற்றும் ஆடுகள் வளர்ப்புத் திட்டங்கள்.

11. கால்நடைத் தீவனங்கள் பெருக்குதல்.

12. உள் நாட்டில் மீன் வளர்ப்பு தொழில் வளர்ச்சி.

13. கடலோர கிராமங்கள் மற்றும் மீன்பிடித் தொழில் கொண்ட கிராமங்களுக்கு அடிப்படை வசதிகள்செய்தல்.

14. காய்கறி மற்றும் பழத் தோட்ட வளர்ச்சித் திட்டங்கள்.

15. பாசனக் குளங்களை மேம்படுத்தி தரம் உயர்த்தல்.

16. பொது பாசனக் கிணறுகள் மற்றும் குழாய்களை பராமரித்தல்.

17. ஊரக சாலைகளை மேம்படுத்துதல் மற்றும் புதிய சாலைகளை அமைத்தல்.

18. பொருளாதார வகையில் நலிவடைந்த பிரிவினர்களுக்கு வீடுகள் கட்டித்தருதல்.

19. கிராமப்புற மக்களுக்கு குடிநீர் வசதி செய்து தருதல்.

20. காதி மற்றும் கிராமத் தொழில்கள்.

21. பட்டுபூச்சி வளர்ப்புத் தொழில் வளர்ச்சி.

22. குடும்ப நலத் திட்டங்கள்.

23. குறைந்த செலவிலான கழிப்பிடங்கள் அமைத்தல்.

24. மயானம் மற்றும் இடுகாடுகளுக்கான பாதைகள் அமைத்தல் மற்றும் அவற்றை மேம்படுத்தல்.

இந்த திட்டத்திற்கு 1993 94 ம் நிதி ஆண்டிற்கு ரூ.20 கோடி ஒதுக்கப்பட்டது. ஊரக வளர்ச்சி முகமைகள் இதற்குண்டான திட்டங்கள் தயாரித்து முடிந்துள்ளன. அவற்றில் சேர்க்கப்பட்டுள்ள பணிகள் கூடிய விரைவில் முடிக்கப்படும். 1994 95 ம் ஆண்டுக்கு ரூ.40 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

LEGISLATURE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1994 ஏப்ரல் 26

13. பன்னாட்டு தொழிலாளர் நல அமைப்பு, டானிடா ஆதரவு பெற்ற தருமபுரி மாவட்டம் தளி வளர்ச்சி வட்டாரத்தில் நடைபெறும் சிறப்புப் பொதுப்பணித் திட்டம்.

ஜெனிவாவிலுள்ள பன்னாட்டு தொழிலாளர் நல அமைப்பு, தருமபுரி மாவட்டத்திலுள்ள தளி வளர்ச்சி வட்டாரத்தில் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக ரூ.2.25 கோடி நிதியுதவிடன் பழங்குடியினர், ஆதிதிராவிடர், ஊரக நிலமற்ற தொழிலாளர்கள், சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் ஆகியோருக்காக வேலை வாய்ப்பைப் பெருக்கி வருமானம் கிடைக்கச் செய்யும் நடவடிக்கைகளுக்காக பன்னாட்டுத் தொழிலாளர் நல அமைப்பின் தொழில் நுட்ப உதவிடன் சிறப்புப் பொதுப்பணித் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. இந்தத் திட்டம் 1989-ம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பமானது. இத்திட்டத்தின் கீழ் சிறுபாசனத் திட்டங்கள், சமூகக் காடு வளர்ப்பு கிராமப்புறச் சாலைகள், கதர்க் கிராமத் தொழில்கள், பட்டுப்புழு வளர்த்தல் முதலிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத் திட்டம் 1993 ஜூன் மாதத்திற்குள் முடிக்க முடியாதென்பதால், 1994 மார்ச் வரை நீட்டிக்கப்பட்டது. வெளிநாட்டுப் பண மதிப்பு குறைந்ததன் காரணமாக ரூ.10 லட்சம் சேமிப்பு ஏற்பட்டதால் இத்திட்டத்தை 30-6-94 வரை நீட்டிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் தலைவராக உள்ள தருமபுரி மாவட்ட ஆட்சியாளர் இத்திட்டத்தை செயல்படுத்தும் திட்ட ஒருங்கிணைப்பாளராக உள்ளார். உதவி மாவட்ட ஆட்சியாளர் ஓசூர், திட்ட அலுவலராக உள்ளார்.

ஊரக குடிநீர்த் திட்டம்.

1. ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செயற்படுத்தும் திட்டங்கள்:

பாதுகாக்கப்பட்ட தூய குடிநீர் வழங்குவது மிகவும் அவசியமானதாகும். இத்திட்டத்தின் கீழ் 1.கி.மீ. தொலைவில் குடிநீர் வசதியில்லாத பகுதிகளுக்கு குடிநீர் அளிக்க திட்டமிடப் பட்டுள்ளது. கிராமங்களிலுள்ள குடிநீர் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு கீழ்க்கண்ட பணிகளுக்கு முதலிடம் அளிக்கப்பட்டுள்ளன.

1. மேல்நிலைத் தொட்டிகள்/தானியங்கி அழுத்தத் தொட்டிகள்.
2. பழுதடைந்த குழாய்களை மாற்றுதல்.

3. கிணறு தோண்டுதல்.

4. குடிநீர் ஆதாரங்கள் இல்லாத மேல்நிலைத் தொட்டிகள்/ தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் ஆகியவற்றிற்கு புதிய குடிநீர் ஆதாரங்களை ஏற்படுத்தல்.

5. தற்போதுள்ள கிணறுகளை ஆழப்படுத்தல்.

இத்திட்டத்தின்கீழ் 1992 93 ஆம் ஆண்டிற்கு ரூ.100 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

சுத்தம் செய்யப்பட்ட குடிநீர் அளிப்பதற்காக ஊராட்சி ஒன்றியங்களில் குளோரினேட்டர்களை உபயோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் தற்போது 21 ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இது பலனளிக்கும் நிலை ஏற்பட்டால், மற்ற மாவட்டங்களிலும் குளோரினேட்டர்களை உபயோகிப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு 1993 94 ஆம் ஆண்டிற்கு ரூ.100 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1994 95 ஆம் ஆண்டிற்கு ரூ.100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிராமப் பகுதிகளில் போதுமான பாதுகாக்கப்பட்ட குடிநீர் தடையில்லாமல் வழங்குவதற்கு கீழ்க்காணும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளது :-

1) ரூ. 734.54 லட்சம் திட்ட மதிப்பீட்டில் பழுதடைந்த குடிநீர் குழாய்களை புதுப்பித்தல்.

2) போதுமான உபரி குடிநீர் மோட்டார் தயார் நிலையில் இருக்க வேண்டும். ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள குடிநீர் மோட்டார்களின் மொத்த எண்ணிக்கையில் 10 விழுக்காடு உபரி மோட்டார் ரூ.200 லட்சம் திட்ட மதிப்பீட்டில் தயார் நிலையில் வைத்திருத்தல்.

3) குடிநீர் மேல்நிலை தொட்டிகள் மற்றும் தரைமட்ட நீர்த் தேக்கங்களில் நீர் சுத்திகரிப்பான்கள் படிப்படியாக அமைத்தல் தேவையாகும். இதற்கு தேவைப்படும் தொகை ரூ.2,400/ லட்சமாகும்.

4) நிலத்தடி நீர் மட்ட அளவு மிகக் குறைந்துள்ள ஆழ் குழாய் கிணறுகளில், ரூ.1,400/ லட்சம் திட்ட மதிப்பீட்டில் காற்றழுத்த கம்பிரஸர்கள் படிப்படியாக அமைத்தல்.

[1994 ஏப்ரல் 26

2. தமிழ்நாடு விவசாய மேம்பாட்டுத் திட்டம் ஊரக குடிநீர் விநியோகம்:

தமிழ் நாடு விவசாய மேம்பாட்டு திட்டத்தின் துணை திட்டமான ஊரக குடிநீர்த் திட்டம் ஊரக வளர்ச்சி இயக்குநர் மூலம் செயல்படுத்தப்படுகிறது. மேற்படி குடிநீர்த் திட்டம் முதலில் சேலம், தருமபுரி மற்றும் ஒருங்கிணைந்த தென்னாற்காடு மற்றும் திருவண்ணாமலை சம்புவராயர் ஆகிய மாவட்டங்களில் செயல் படுத்தப்பட்டது. இத்திட்டம் மேலும் திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, செங்கல்பட்டு, எம்.ஜி.ஆர், வடஆற்காடு-அம்பேத்கார் மற்றும் திண்டுக்கல் அண்ணா மாவட்டங்களில் விரிவு படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 12,414 எண்ணிக்கையுள்ள ஆழ்குழாய்கள், இந்தியா மார்க் ஐஐ கையிறைப்பம்புகள் மற்றும் இந்தியா மார்க் ஐஐஐ கையிறைப்பம்புகள் ரூ.47.68 கோடி மதிப்பீட்டில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. 1994 95 ஆம் ஆண்டில் இதுவரை 3,830 கையிறைப்பம்புகள் அமைக்கப்பட்டுள்ளன. ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் 6896 கையிறைப்பம்புகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

3. குடிநீர் குழாய்கள் மற்றும் விசைக் குழாய்கள் பராமரிப்பு.

தூய்மையான குடிநீர் வழங்குவது மிகவும் இன்றியமையாததாகும். இதை கருத்திற்கொண்டு ஊரக குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் தடையின்றி குடிநீர் கிடைப்பதற்காக குடிநீர் குழாய்கள் கிராம அளவிலும் ஊராட்சி ஒன்றிய அளவிலும், கோட்ட அளவிலும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றைப் பராமரிப்பதற்காக மாவட்ட அளவில் ஒரு குழு உதவிப் பொறியாளரின் உதவியுடன் செயல்பட்டு வருகிறது.

தற்போது 36,325 வடிமுனை குழாய்கள் மற்றும் 26,420 விசைப்பம்புகள் உள்ளிட்ட 1,36,421 கைப்பம்புகள் கிராமப் புறங்களில் இயங்கி வருகின்றன. இவைகள் முறையாக செயல்படுவதை ஒவ்வொரு நாளும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரும், வாரம் ஒரு முறை கோட்ட வளர்ச்சி அலுவலரும் 15 நாட்களுக்கு ஒரு முறை மாவட்ட ஆட்சித் தலைவரும் ஆய்வு செய்து வருகின்றனர். மாநில அளவில் ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்களாலும் ஆய்வு செய்யப்படுகிறது.

1994 ஏப்ரல் 26]

குடிநீர்க் குழாய்கள் முறையாக செயல்படுவதை கவனிக்க முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, இவற்றின் செயல் திறன் அதிகரித்துள்ளது. கடந்த 3 ஆண்டுகளில் பழுதடைந்த குழாய்களின் எண்ணிக்கை 2 சதவிகிதத்திற்கும் குறைவாக குறிக்கப்பட்டுள்ளது.

இவைகள் முறையாக செயல்படுவதற்காக பழுதுகளை சரி செய்வதற்கும், அவைகளுக்குத் தேவையான உதிரி பாகங்களை அளிப்பதற்கும், ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கைப்பம்புகள், விசைப்பம்புகள் பராமரிப்புக்கான செலவை கீழ்க்கண்டவாறு அரசு நிர்ணயித்துள்ளது:

1. கைப்பம்பு வடிமுனை குழாய் .. ரூ. 100
2. கைப்பம்பு ஆழ்துளை கிணறு .. ரூ. 700
3. விசைப்பம்பு .. ரூ. 2,000

இதற்கான செலவை அரசும் ஊராட்சிகளும் கீழ்கண்டவாறு பகிர்ந்து கொள்கின்றன.

ஊராட்சிகளின் ஆண்டு வருமானம்.	அரசு மானியம்.	ஊராட்சியின் பங்கு.
(1)	(2) சதவீதம்.	(3) சதவீதம்.
ரூ.10,000க்கு கீழ்	100	இல்லை
ரூ.10,001 20,000	50	50
ரூ.20,000 க்கு மேல்	25	75

1993 94 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ. 564.51 இலட்சங்கள் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

	(ரூபாய் இலட்சத்தில்)
கைப்பம்புகள் பராமரிப்பு	Rs. 319.07
விசைப்பம்பு பராமரிப்பு	Rs. 245.44
மொத்தம்	**564.51**

1994 95 ம் ஆண்டிற்கும் அதே அளவு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[1994 ஏப்ரல் 26

4. கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களில் இந்தியா மார்க் II கைப்பம்புகளை இந்தியா மார்க் III கைப்பம்புகளாக மாற்றுதல்.

கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்திலும் பெரியார் மாவட்டம் தூக்க நாயக்கன் பாளையம் ஊராட்சி ஒன்றியத்திலும் இந்தியா மார்க் ஐஐ கைப்பம்புகளை இந்தியா மார்க் ஐஐஐ கைப்பம்புகளாக மாற்றிட அரசு உத்திரவிட்டுள்ளது. இதற்காக 55.65 லட்சங்கள் கீழ்க்கண்டவாறு செலவிட அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது:-

மாநில அரசு	ரூ. 13.40 இலட்சங்கள்.
யூனிசெப் நிறுவனம்	ரூ. 28.85 இலட்சங்கள்
ஊராட்சி	ரூ. 13.40 இலட்சங்கள்
மொத்தம்	ரூ. **55.65** இலட்சங்கள்

இம்மாற்றத்தின் மூலம் குடிநீர் விநியோகம் நன்றாக பராமரிக்கவும், கைப்பம்புகள் பழுது ஏற்பட்டால் அவற்றை விரைவில் சரி செய்யவும் இயலும். இது தொடர்பாக தேவைப்படும் கைப்பம்பு உதிரி பாகங்கள் மாற்றவும், கிராமப்புற பெண்களுக்கு பயிற்சி அளிக்கவும் மற்றும் கிராம அளவில் பராமரிப்பு கட்டமைப்பு வசதிகள் செய்யவும் யூனிசெப் நிறுவனம் நிதி உதவி வழங்குகிறது.

5. கிராம அடிப்படையிலான தாரா கையிறைப்பம்புகள் பராமரிப்பு:

1993 94 ஆம் ஆண்டில் முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் மற்றும் திருத்துறை ஊராட்சி ஒன்றியங்களில் கீழ்க்கண்டவாறு ரூ. 7.14 இலட்சம் மதிப்பீட்டில் கிராம அடிப்படையிலான தாரா கையிறைப்பம்புகள் யூனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் பராமரிக்க அரசு உத்தரவு பிறப்பித்தது.

(அ)	கையிறைப்பம்பு பாகங்கள், ஈப்பு ஆகியவைகளுடன் யூனிசெப் நிறுவனத்தின் நிதி உதவி ..	ரூ. 6.00 இலட்சங்கள்

1994 ஏப்ரல் 26]

(ஆ) (1) நில ஆய்வு மற்றும் பிளாட்பாரம் கட்டுதல் ஆகியவவைகளுடன் கையிறைப் பம்புகள் அமைப்பதற்கான மாநில அரசின் நிதியுதவி .. ரூ. 0.60 இலட்சங்கள்

(2) ஓட்டுநர், எரிபொருள் ஆகியவை களுடன் ஈப்பு பராமரிப்பு செலவு .. ரூ. 0.54 இலட்சங்கள்

மொத்தம் ரூ. 7.14 இலட்சங்கள்

6. கைப்பம்புகள் வடிவமைப்பு மற்றும் பராமரிப்பு குறித்த ஆராய்ச்சி திட்டங்கள்:

கோயம்புத்தூர் மாவட்டம் சுல்தான்பேட் ஊராட்சி ஒன்றியத்தில் கிராம அளவிலான கைப்பம்பு பராமரிப்புக்காக ரூ. 50.60 இலட்சங்கள் யுனிசெப் நிறுவன உதவியுடன் கீழ்க்கண்டவாறு செயல்பட உத்தரவிடப்பட்டுள்ளது.

யுனிசெப்	ரூ. 45.60 லட்சம்
மாநில அரசு	ரூ. 5.00 லட்சம்
மொத்தம்	ரூ. 50.60 லட்சம்

மேற்கண்ட திட்டத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தொழில் நுட்ப மற்றும் பிற அலுவலர்களுடன் இரண்டு ஆண்டுகளில் செய்து முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக 1993 94 ஆம் நிதி ஆண்டில் ரூ. 67.000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஊரக சுகாதாரத் திட்டங்கள்.

1. மத்திய கிராமப்பற சுகாதாரத் திட்டம்:

மேற்காணும் திட்டத்தின் கீழ் வீடுகளுக்கான சுகாதார கழிப்பறைகள் கட்டப்படுகின்றன. இத்திட்டம் கிராமப்புறத்திலுள்ள வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ள மக்களுக்கு சுகாதார வசதிகளை அளிக்கிறது. இதில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்துக்கு 1993 94 ம் ஆண்டுக்கு ரூ. 178.40 இலட்சங்கள் வழங்கப்பட்டுள்ளது. மத்திய கிராமப்புற சுகாதாரத் திட்டத்தின் ஒரு

பகுதியாக 1988 89 ம் ஆண்டிலிருந்து 'யூனிசெப்(சஐஇஉஊ) நிறுவனத்தின் உதவியுடன் பெரியார் மாவட்டத்தில் தீவிர சுகாதாரத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்தீவிர சுகாதாரத் திட்டத்தின் கீழ் 1992 93 வரை 37,682 கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1993 94 ம் ஆண்டுக்கு பெரியார் மாவட்டத்தையும் சேர்த்து 10 மாவட்டங்களில் மத்திய கிராமப்புற சுகாதாரத் திட்டத்தின் கீழ் 19490 கழிப்பிடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணிக்கான செலவு பகிர்வு கீழ்வருமாறு பங்கிடப்படுகிறது:-

	பெரியார் மாவட்டம்	இதர மாவட்டங்கள்
பயனீட்டாளரின் பங்கு	20	20
யூனிசெப் (UNICEF) பங்கு	25	-
அரசின் பங்கு	27.5	40
மத்திய அரசின் பங்கு	27.5	40

மத்திய ஊரக சுகாதாரத் திட்டத்தின் கீழ் 1994 95 ம் ஆண்டில் 20,000 கழிப்பிடங்கள் கட்டலாமென கருதப்பட்டுள்ளது. 1994 95 ம் ஆண்டுக்கு, இத்திட்டத்திற்கு ரூ. 178.40 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. டானிடா உதவியுடன் கூடிய ஒருங்கிணைந்த ஊரக துப்புறவு மற்றும் குடிநீர் வழங்கல் திட்டம்:-

டானிடா உதவியுடன் கூடிய ஒருங்கிணைந்த ஊரக துப்புறவு மற்றும் குடிநீர் வழங்கும் திட்டம் தென்னார்காடு மாவட்டம் பரங்கிப்பேட்டை மற்றும் மரக்காணம் ஆகிய இரு ஊராட்சி ஒன்றியங்களில் செயல்பட்டு வருகிறது.

மேற்கண்ட பகுதிகளில் செயல்படுத்தப்படும் இந்த திட்டத்தின் மூலம் ஒட்டு மொத்தமான வளர்ச்சிப் பணிகளை குறிக்கோளாகக் கொண்டு கிராம மக்களின் சுகாதாரத்தினை மேம்படுத்துவதே நோக்கமாகும். இதில் ஒருங்கிணைந்த வளர்ச்சி பணிகளாக, ஊரக குடிநீர் வழங்குதல், சுகாதாரத்தை மேம்படுத்த துப்புரவு திட்டத்தை அமுல்படுத்துதல், மக்களை இத்திட்டத்தில் பங்கேற்க செய்தல், இத்திட்டத்தைப் பற்றி மக்களுக்கு தெரியப்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

கிராம மக்களின் சுகாதார நிலையினை மேம்படுத்துவதற்கு ஒருங்கினைந்த சுகாதாரம் மற்றும் குடிநீர் திட்டம், சமூக நலம், சுகாதார

1994 ஏப்ரல் 26]

மேம்பாடு மற்றும் திட்ட விரிவாக்கம் இவற்றின் அடிப்படையில் செயலாக்கப்படுகிறது. கிராமப்புற மக்களிடையே குறிப்பாக பெண்களிடையே சுகாதார அடிப்படையிலான சமூகநல நல்லுறவு ஏற்படுத்தப்படுகின்றது.

இத்திட்டம் 1990 91 ம் ஆண்டு முதல் ஆண்டுகளில் ரூ. 822 இலட்சம் மதிப்பீட்டில் செய்து முடிக்க அங்கீகரிக்கப்பட்டு பின்னால் இக்காலக்கெடு 31 12 94 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த நீட்டிப்புக்கான திட்டம் ரூ. 308 இலட்சம் மதிப்பீட்டில், ரூ. 94 இலட்சம் டானிடா அரசின் நேரடி உதவியுடன் 1 4 93 முதல் 31 12 1994 வரை ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

ரூ. 85.74 லட்சம், 1994 95 ம் ஆண்டுக்கு இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முறைசாரா எரிசக்தி திட்டங்கள்.

1. தேசிய மேம்படுத்தப்பட்ட சூளாத் திட்டம்

தேசிய மேம்படுத்தப்பட்ட சூளாத் திட்டம் 1983 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசால் நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தமிழ்நாட்டில் ஊரக வளர்ச்சித் துறையினரால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் நோக்கங்கள் கீழ்வருமாறு:

1. கிராமப்புற மற்றும் நகர்புறங்களில் பயன்படுத்தப்படும் விறகினை குறைத்து, எரிபொருள் சேமிப்பு அடைதல், குறைவான விறகினை பயன்படுத்துவதால் கிராம மக்களின் விறகு சேகரிக்கும் நேரம் குறைந்து அந்த நேரத்தை விவசாயத்திற்கு பயன்படுத்த முடிகிறது.
2. காட்டு மரங்கள் அழிப்பதை தடுத்தல்.
3. மேம்படுத்தப்பட்ட சூளாவினால் நல்ல சுகாதாரமான சூழ்நிலையும், குடிசை வீடுகளில் விபத்துக்கள் ஏற்படாமல் தவிர்க்கவும் முடிகிறது.
4. சமையலறையிலிருந்து வெளிப்படும் புகையின் காரணமாக பெண்களுக்கு ஏற்படும் கண் மற்றும் நுரையீரல் தொடர்புடைய நோய்கள் வராமல் பாதுகாத்தல்.
5. கிராமப்புறங்களில் பயிற்சி பெற்ற கைவினைஞர்கள் மூலம் சூளா அடுப்புகள் கட்டப்படுவதால் வேலை வாய்ப்பினை அதிகரித்தல்.

[1994 ஏப்ரல் 26

இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் வீதத்தில் மான்யம் வழங்குகின்றது. 1993 94 ம் ஆண்டிற்கு மத்திய அரசு கீழ்க்கண்டவாறு மான்யவீதம் நிர்ணயித்துள்ளது.

வரிசை எண்ணும் விவரங்களும்.	மத்திய அரசு மான்யம் ஒரு சூளா அடுப்புக்கு.
(அ) சூளா அடுப்பின் விலை-	
(1) நிலையான அடுப்புகள்	நிர்ணயிக்கப்பட்ட விலையில் 50 விழுக்காடு ரூ. 50 க்கு மேற்படாமல்.
(2) எடுத்துச் செல்லத்தக்க அடுப்புகள்.	
(கூ) ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மலைவாழ் மக்களுக்கு	நிர்ணயிக்கப்பட்ட விலையில் 50 வழுக்காடு ரூ. 75-க்கு மிகைப்படாமல்.
(கூகூ)	மற்றவர்களுக்கு
நிர்ணயிக்கப்பட்ட விலையில் விழுக்காடு ரூ. 50 க்கு மேற்படாமல்.	3 3
(கூகூகூ)	சமுதாய சூளா இல்லை. அடுப்புகள்.
(ஆ) சுயபணியாளர்கள், மண்பாண்டம் உற்பத்தியாளர்கள் மற்றும் கொத்தனார்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு போக்குவரத்து மற்றும் பொருத்தும் செலவினங்கள் உட்பட ஊக்கத்தொகை.	
(i) நிலையான அடுப்புகள்	ரூ. 20
(ii) எடுத்துச்செல்லத் தக்க அடுப்புகள்	ரூ. 5
(iii) சமுதாய அடுப்புகள்	ரூ. 25

1994 ஏப்ரல் 26]

(இ) நிர்வாகச் செலவுகளுக்கு

(i) செயற்படுத்தும் நிறுவனங்களின்/ துறைகளின் பணியாளர் செலவு மற்றும் அடிப்படை வசதிகள் ரூ. 4/

(ii) பயனீட்டாளர் பயிற்சி மற்றும் விளம்பரங்களுக்கு ரூ. 2/

(iii) தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு அடிப்படை வசதி ரூ. 2/

1992 93 ம் ஆண்டிற்கு முன்புவரை இதைவிட சற்று கூடுதலான விகிதத்தில் வழங்கப்பட்டு வந்த மானியம் படிப்படியாக குறைக்கப்பட்டு விட்டது. பயனீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டுவரும் மானியத்தொகையை 1 4 95 முதல் நிறுத்திட மைய அரசு உத்தேசித்துள்ளது.

இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 31 3 93 வரை 10,39,652 மேம்படுத்தப்பட்ட சூளா அடுப்புகள் பொருத்தப்பட்டுள்ளன. 1993 94 ம் நிதியாண்டில் தமிழகத்தில் 1,40,000 மேம்படுத்தப்பட்ட சூளா அடுப்புகள் பொருத்த மைய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. பிப்ரவரி'94 வரை 1,28,612 சூளா அடுப்புகள் பொருத்தப்பட்டுள்ளன. நிர்வாகச் செலவு, பயிற்சிகள் மற்றும் விளம்பரங்களுக்கான செலவுகள் உட்படமானியமாக ரூ. 89.25 இலட்சம் ரூபாய் மைய அரசு வழங்கியுள்ளது.

2. தேசிய கரிம வாயுத் திட்டம்-

இத்திட்டம் மத்திய அரசின் முழு நிதி உதவியுடன் 1981 82 ம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் ஊரக வளர்ச்சித் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் எரிசக்தியில் முக்கிய பங்கு வகிப்பதால் இது 20 அம்ச திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்-

1. இயற்கை எரிபொருள் குறையும் பொழுது மாற்று எரிசக்தியாக பயன்படுத்தப்படுகிறது.
2. காடுகளில் உள்ள மரங்கள் அழியாமல் பாதுகாத்தலுடன் இயற்கை சூழல் பாதுகாக்கப்படுகிறது.
3. கலப்படமற்ற சுத்தமான நிலையில் எரிசக்தி உருவாக்குதல்.
4. ரசாயன உர திட்டத்திற்குப் பதிலாக இயற்கையான சக்தி நிறைந்த உரம் கிடைத்தல்.

[1994 ஏப்ரல் 26

5. கிராமத்தில் வாழும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் அன்றாட வாழ்க்கையில் வேலைப் பளுவை எளிதாக்குதல்.

6. கரிம வாயு கலனுடன் கழிப்பறையை இணைப்பதன் மூலம் சுகாதாரத்தை/தூய்மையை மேம்படுத்துதல்.

கரிமவாயுக் கலனுக்கான மானியங்கள் கலன்களின் அளவு மற்றும் பயனீட்டாளர்களின் வகையில் அடிப்படையில் அவ்வப்போது மைய அரசால் நிர்ணயிக்கப்படுவதுபோல் வழங்கப்படுகிறது. கரிமவாயுக் கலன்கள் அமைக்க ஊக்கத் தொகையாக கலன் ஒன்றுக்கு கிராம நல ஊழியர்களுக்கு ரூ. 50 ம், சுழல் சாவி முகவர்களுக்கு ரூ. 500ம் வழங்கப்படுகிறது. பயனீட்டாளர்களுக்கு 1993- 94 ம் ஆண்டில் மானியம் கீழ்க்கண்ட வீதத்தில் வழங்கப்படுகிறது:-

கலன்களின் கொள் அளவு கன மீட்டரில்.	ஆதிதிராவிடர்/ பழங்குடியினர். சிறு, குறு விவசாயிகள், நிலமற்ற கூலித் தொழிலாளர்கள் மற்றும் மலை வாழ் மக்களுக்கு.	மற்ற பிரிவினர்களுக்கு.
(1)	(2)	(3)
	(ரூபாய்)	
1	2,000	1,500
2	2,400	1,800
3 மற்றும் 4	2,600	2,000

பயனீட்டாளர்களுக்கு மானியம் வழங்குவதை 1 4 95 முதல் நிறுத்திட மைய அரசு உத்தேசித்துள்ளது. 4 கனமீட்டருக்கு மேல் கன அளவு கொண்ட கரிமவாயுக் கலன்களுக்கு மானியம் வழங்குவதை மைய அரசு ஏற்கனவே நிறுத்தி விட்டது. ஏற்கெனவே அமைக்கப்பட்டவற்றில் பழுதடைந்த கலன்களை புதுப்பிக்க மானியம் வழங்குவதும் ஏற்கெனவே கைவிடப்பட்டது. பயனீட்டாளர்களுக்கும், கட்டுமானப் பணியில் ஈடுபடும் கொத்தனார்களுக்கும், அலுவலர்களுக்கும் இத்திட்டத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 31 3 93 வரைக்கும் 1,28,988 கரிமவாயுக் கலன்கள் தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ளன. 1993 94 ம் ஆண்டில் ரூ.267.78 லட்ச மதிப்பீட்டில் 10,000 கலன்கள் தமிழகத்தில்

1994 ஏப்ரல் 26]

அமைக்க மைய அரசு இலக்கு நிர்ணயித்தது. பிப்ரவரி' 1994 இறுதிவரை 6,557 கலன்கள் அமைக்கப்பட்டுவிட்டன. இதில் 2,243 கலன்கள் பயனீட்டாளர்கள் தங்கள் சொந்த செலவில் அமைத்துள்ளனர். 1951 கலன்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. இத்திட்டத்திற்கு மைய அரசு 1993 94 ம் ஆண்டு ஒதுக்கீட்டில் இதுவரை 133.89 லட்ச ரூபாய் வழங்கியுள்ளது. மீதி மானியத்தை மைய அரசு வழங்க வேண்டியுள்ளது.

ஊரகப் பணிகள் திட்டம்.

இணைப்புச் சாலைகள்:

இணைப்புச் சாலைகள் மேம்படுத்துதல் போன்ற பணிகளை இத்திட்டத்தின் மூலம் ஊராட்சி ஒன்றியங்கள் நிறைவேற்றுகின்றன. 1993 94 ல் இத்திட்டத்திற்கென ரூ.1,000 மட்டும் வரவு—செலவுத் திட்டத்தில் அடையாள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1989- 90 முதல் இணைப்புச் சாலைப் பணிகள் ஜவஹர் வேலை வாய்ப்புத்திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகின்றது.

தலசாலை மானியம்:

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1958 ஊபிரிவுகள் 63(அ), 65(அ.ன-ல் ஊராட்சிகளும் ஊராட்சி ஒன்றியங்களும் தங்கள் பொறுப்பிலுள்ள சாலைகளைப் பழுதுபார்ப்பது, பராமரிப்பது, அமைப்பது போன்றவை அவைகளின் தலையாய கடமையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது இந்த மாநிலத்தில் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித் துறை, மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகள் பராமரிக்கும் மொத்த சாலையின் நீளம் 1,74,173 கி.மீ. இவற்றில் இம்மாநிலத்தில் உள்ள ஊராட்சிகள் (12,612) மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் (387) சேர்த்து 89,734 கி.மீ. நீளமுள்ள சாலையினைப் பராமரிப்பு செய்கின்றது. இவை மாநிலத்தில் உள்ள மொத்த சாலை நீளத்தில் 51.5 விழுக்காடு ஆகும்.

[1994 ஏப்ரல் 26

சாலையின் வகைப்பாடு	நீளம் (கி. மீட்டரில்)	
	ஊராட்சி ஒன்றியம்.	ஊராட்சி.
(1)	(2)	(3)
1. மண்சாலை	7,536.74	22,282.09
2. சரளைச் சாலை	8,209.52	10,865.07
3. கருங்கற்சாலை (ஓரடுக்கு)	14,154.40	16,298.80
4. கருங்கற்சாலை (ஈரடுக்கு)	4,397.61	..
5. தார்ச்சாலை	3,618.09	2,188.49
6. சிமெண்ட் சாலை	183.72	..
	38,100.08	51,634.45

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 131 ன் படி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒவ்வொரு வருடமும் சாலைகளைப் பராமரிப்பதற்கு அரசு மானியம் வழங்க வகை செய்யப்பட்டு ஊராட்சி வளர்ச்சி வட்டத்தின் மக்கள் தொகை அடிப்படையிலும் சாலையின் வகைப்பாடு மற்றும் நிலத்தின் அடிப்படையிலும் தனது எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றியத்தின் சாலைகளைப் பராமரிக்க மட்டுமே இந்த மானியம் வழங்கப்படுகின்றது. இந்த மானியம் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு தமிழ்நாடு மோட்டார் வாகன வரி சட்டத்தின் படி வழங்கப்பட்டதற்குப் பதிலாக வழங்கப்படுகிறது.

தலசாலை மானியம் நபர் ஒன்றுக்கு 40 பைசா வீதம் வழங்கப்பட்டு வந்தது. பின்பு 1970 -71ம் ஆண்டு முதல் இம்மானியம் மக்கள் தொகை மற்றும் சாலைகளின் நீளத்தைக் கணக்கிட்டு வழங்கப்பட்டு வருகிறது. தற்போது மக்கள் தொகை அடிப்படையில் தனி நபருக்கு 18 பைசா வீதமும் சாலையின் நீளத்திற்கும் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது:

1994 ஏப்ரல் 26]

சாதாரண சாலை : ரூ .535 ஒரு கி.மீட்டருக்கு

கடற்கரை சாலை : ரூ. 715 ஒரு கி.மீட்டருக்கு

மலைப்பாங்கான சாலை : ரூ. 1,340 ஒரு கி.மீட்டருக்கு

தற்போது வழங்கப்படும் விகிதம் 1981 ல் நிர்ணயிக்கப்பட்டது. ஏறக்குறைய 38,000 கி.மீ நீளமுள்ள சாலைகளை ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் பராமரித்து வருகின்றன. தலசாலை மானியம் மேற்கண்ட முறைகளின்படி பகிர்ந்தளிக்கப்படுகின்றது. இம்மானியம் கூடுதலாக ஒதுக்கீடு இருப்பின் அவை சரிசம விகிதப்படி பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

கடந்த 4 வருடங்களில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு கீழ்க்கண்டவாறு தலசாலை மானியம் வழங்கப்பட்டுள்ளது:-

ஆண்டு	(ரூ. இலட்சத்தில்)
1990 91	532
1991 92	900
1992 93	1,200
1993 94	1,500

1994 95 ஆம் ஆண்டுக்கு ரூ. 1,800 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தேசிய சாலை மேம்பாட்டுக் குழுவின் தற்போதுள்ள முறைகளின்படி சாலைகளைப் பராமரிக்க ஆகும் செலவினை சாலையின் மேற்பரப்பை அடிப்படையாகக் கொண்டு ஊராட்சி ஒன்றிய சாலைகளைப் பராமரிக்க ரூ. 66.96 கோடி ஆண்டொன்றுக்கு தேவை எனத் தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை) கணக்கிட்டுள்ள முறைகளின்படி தலசாலை மானியம் வழங்கும் முறைகளை மாற்றி அமைக்கக் கோரி கருத்துருக்கள் அரசுக்கு அனுப்பப்பட்டு அவை அரசின் பரிசீலனையில் உள்ளது. மக்கள்தொகையின் அடிப்படையில் கணக்கிடுவதைத் தவிர்த்து சாலையின் நீளத்தின் அடிப்படையிலும் படிப்படியாக குறையும் அளவுகோல் தொடர்புடையதாக உள்ளதொரு உதவித்தொகையையும் வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

தற்போது ஊராட்சி சாலைகளைப் பராமரிக்க மானியம் வழங்கப்படுவதில்லை. ஊராட்சி ஒன்றியங்களுக்கு தலசாலை மானியம்

DTP–53/118-43

வழங்குவது போல ஊராட்சிகளுக்கும் சாலைகளை பராமரிக்க மானியம் வழங்குவது அரசின் பரிசீலனையில் உள்ளது.

தலப்பாசன மானியம்.

தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் 85(1) பிரிவின் படி 100 ஏக்கர் ஆயக்கட்டுக்குட்பட்டுள்ள சிறுபாசன ஆதாரங்கள் தற்போது ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிற்கு மாற்றப்பட்டுள்ளது. அதன் மூலம் 3,28,076 ஹெக்டேர் ஆயக்கட்டுகளுக்கு 23,761 சிறுபாசன ஏரிகளை ஊராட்சி ஒன்றியங்கள் பராமரித்து வருகின்றன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் உள்ள அனைத்து சிறுபாசன ஏரியையும் ஐந்து வருட சுழற்சி முறையில் பராமரிப்பதற்கு திட்டம் வரையப்பட்டு தலப்பாசன மானியம் வழங்கப்படுகிறது.

1993 94 ம் ஆண்டில் ரூபாய் ஒரு கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல் 1994 95 ம் ஆண்டிற்கும் ரூ. 1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிறுபாசனம்.

மாவட்டங்களில் 23,761 சிறுபாசன ஏரிகளைத் தவிர முன்னாள் ஜமீன்களால் பராமரிக்கப்பட்ட 9,415 ஏரிகளும் உள்ளன. அப்படி முன்னால் ஜமீன்களால் பராமரிக்கப்பட்ட ஏரிகள் அனைத்தும் தரக்கட்டுப்பாடு செய்து ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்படவில்லை. 1993 94 ம் ஆண்டில் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் சிறு பாசனத் திட்டங்களின் கீழ் ரூ.235 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 188 ஏரிகளை தரக்கட்டுப்பாடு செய்ய இயலும். 1994 95 ம் ஆண்டுக்கு 190 ஏரிகளை தர நிர்ணயம் செய்ய ரூ.235 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கால்நடை பராமரிப்பு மானியம்.

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் கால்நடைகளுக்கு மருத்துவ வசதி அளிப்பதற்காக கால்நடை மருந்தகங்கள் கட்டப்படுகின்றன. இக்கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு மானியம் ஒவ்வொரு ஆண்டும் கட்டிடங்களின் மதிப்பீட்டில் முதலாவது கால்நடை மருந்தகத்திற்கு 75 சதவீதமும், இரண்டாவது கால்நடை மருந்தகத்திற்கு 50 சதவீதமும், மூன்றாவது கால்நடை மருந்தகத்திற்கு 25 சதவீதமும் என்ற அடிப்படையில்

1994 ஏப்ரல் 26]

வழங்கப்படுகிறது. இந்த மானியத்தைப் பெற ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும், சம்பந்தப்பட்ட திட்டத்திற்கான பங்குத் தொகையை திரட்ட முன்வர வேண்டும்.

செலவினமானது முதலில் ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து செலவழிக்கப்பட்டு பின்னர் கோட்ட வளர்ச்சி அலுவலர்களால் அரசு மானியம், ஒன்றிய நிதிக்கு திருப்பிக் கொடுத்து ஈடு செய்யப்படும்.

1993 94 ஆம் ஆண்டிற்கு மானியத் தொகையாக ரூ. 7 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1994 95 ம் ஆண்டிற்கும் அதே அளவு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சமூகக் கல்வி மான்யம்.

இது ஒரு ஈடு செய்ய முடியாத மான்யமாகும். சமூகக் கல்வி மையங்கள். தகவல் மையங்கள் மற்றும் கண்காட்சிகள் நடத்துதல் ஆகியவற்றிற்கு பத்திரிகைகள் வழங்குவதற்கு இம்மான்யம் அளிக்கப்படுகின்றது. ஊராட்சிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய சமூகக் கல்வி மையங்களில் இயங்கும் தகவல் மையங்களுக்காக தமிழரசு, திட்டம், பஞ்சாயத்து செய்தி மற்றும் பஞ்சாயத்து ராஜ்யம் போன்ற பத்திரிக்கைகள் வாங்குவதற்கும் மாநிலத் தலைமையிடத்தில் மற்றும் மாவட்ட அளவில் கண்காட்சிகள் நடத்துவதற்கும், குடியரசு தினவிழா அலங்காரத்திற்கும் இம் மான்யம் உபயோகப்படுத்தப்படுகின்றது. இதற்காக 1993 94 ம் ஆண்டுக்கு ரூபாய் 18.00 லட்சம் ஒப்பளிக்கப்பட்டன. மேலும் 1993 94ம் ஆண்டில் ஆறு மாதங்களுக்கு 'மக்கள் குரல்' தமிழ் தினசரி பத்திரிக்கையை மொத்தம் 12,616 சமூகக் கல்வி மையங்களுக்கு வழங்க 100 சதவீத மான்யமாக ரூ.37,44,432 ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

ரூ. 18.00 லட்சம், 1994 95 ம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஊராட்சி தெருவிளக்குகள்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1958 பிரிவுகள் 63(ஆ) மற்றும் 64(ஆ) வின்படி ஊராட்சிகளிலுள்ள தெரு விளக்குகள் பராமரிப்பு அவற்றின் முக்கிய கடமைகளில் ஒன்று, மேற்படி சட்டப் பிரிவு 63 ன்படி ஊராட்சி/ ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தெருவிளக்குகள் அமைக்குமாறு அவற்றுக்கு நெறிமுறை வழங்க அரசு அதிகாரம் பெற்றது.

[1994 ஏப்ரல் 26

ஊராட்சி தெருவிளக்குகளுக்கு தரமிக்க மின் பொருட்களை வாங்கும் பொருட்டும், தொடர்ந்து விநியோகத்தை உறுதி செய்யும் பொருட்டாகவும் முடிவு எடுக்க அரசு ஓர் உயர்மட்டக் குழுவினை அமைத்தது. இக்குழுவில் அரசின் ஊரக வளர்ச்சித்துறைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் துறைச் செயலாளர், நகராட்சி நிர்வாக ஆணையர், பேரூராட்சிகளின் இயக்குநர், தமிழ்நாடு மின்சார வாரிய தலைமைப் பொறியாளர் ஆகியோர் உறுப்பினர்களாகவும், ஊரக வளர்ச்சி இயக்குநர் உறுப்பினர்-செயலாளராகவும் செயற்படுவர். இக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஊராட்சிகளுக்கான மின்சாதனங்கள் வாங்க அரசாணை வழங்கியது.

தற்பொழுதுள்ள ஊராட்சிகளில் 8,44,407 தெருவிளக்குகள் கீழ்க்கண்டவாறு பராமரிக்கப்படுகின்றன.

பல்புகள் ..	29,971
குழல் விளக்குகள் ..	8,10,542
சோடியம் ஆவி விளக்குகள் ..	786
மெர்குரி ஆவி விளக்குகள் ..	3,108
மொத்தம்	**8,44,407**

இவைகளில் 6,62,941 விளக்குகள் (79%) எரிகின்றன.

மொத்தமுள்ள 12,612 ஊராட்சிகளில் 6,655 ஊராட்சிகள் நிதிநிலையில் மிகவும் தாழ்நிலையில் (ஆண்டுக்கு ரூ.20,000 வருமானத்திற்கும் குறைவான) உள்ளன. இவ் ஊராட்சிகள் தெருவிளக்குகள் பராமரிப்புக்கான மின் கட்டணம் செலுத்தவும் இயலாதுள்ளன. எனவே மின் துண்டிப்பைத் தவிர்க்க வேண்டி ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து மின் கட்டணங்கள் முதலில் செலுத்தப்பட்டு, பின்னர் ஊராட்சி நிதிநிலை மேம்பட்டதும் அதன் கணக்கிலிருந்து ஒன்றிய நிதிக்கு வரவு வைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. எனினும் மொத்தமுள்ள 387 ஊராட்சி ஒன்றியங்களில் மூன்றில் ஒரு பங்கு ஒன்றியங்களின் நிதிநிலையையும் வலுவானதாகயில்லாத காரணத்தால் ஊராட்சி தெருவிளக்குகளுக்கான மின் கட்டணம் செலுத்த முடியாத நிலையில் மின் துண்டிப்பு ஏற்படும் நிலை உருவாகிறது.

1994 ஏப்ரல் 26]

1993-94 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்திலும் அரசு ரூ.3.00 கோடி ஒதுக்கீடு செய்தது. இவ்வொதுக்கீட்டிலிருந்து நலிந்த ஊராட்சிகளுக்கு ரூ.2.25 கோடி வழங்கியது. இவ்வொதுக்கீட்டினை நலிவுற்ற ஊராட்சிகளுக்கு வழங்க பொருளாதார அடிப்படையில் மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ளாது,

1. நிதி ஆதாரம் குறைந்த ஊராட்சிகள்.
2. நிதி ஆதாரம் குறைந்த ஊராட்சிகளில் உள்ள தெரு விளக்குகள் எண்ணிக்கை.
3. மேற்படி ஊராட்சிகளில் நிலுவை நிற்கும் மின் கட்டணத் தொகை.
4. அவ்வூராட்சிகளுக்குத் தேவைப்படும் தெருவிளக்கு மின் சாதனங்களை வாங்கத் தேவையான தொகை.

ஆகிய நான்கு காரணங்களை கருத்தில் கொண்டும், மாவட்டந் தோறும் உள்ள நலிவுற்ற ஊராட்சிகளின் எண்ணிக்கையைப் பெற்றும் அரசு மான்யத் தொகை, சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர் மூலம் வழங்கப்படுகிறது.

1994-95-ம் ஆண்டிற்கு ரூ.2.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஊரக தகவல் தொடர்புத் திட்டம்.

கிராமப்புற மக்களிடையே கல்வி அறிவை வளர்ப்பதோடு அமையாது அவர்களிடையே பொழுது போக்கு அம்சமாகவும் ஊரகத் தகவல் தொடர்பு திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் 46,880 சமுதாய வானொலி பெட்டிகள் இத்துறையால் பராமரிக்கப்படுகின்றன. 1975-ம் ஆண்டு தொலைக் காட்சி வந்த பிறகு, தமிழ்நாட்டில் 8,636 ஊராட்சிகளில் 1,898 வண்ண தொலைக்காட்சி சாதனங்கள் உட்பட இன்று வரை 13,327 சமுதாய தொலைக்காட்சி சாதனங்கள் நிறுவப்பட்டுள்ளன. 1991-92 மற்றும் 1992-93-ம் ஆண்டுகளில் சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 2191 ஊராட்சிகளுக்கு 2191 சமுதாய தொலைக் காட்சி சாதனங்கள் ரூ.286 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது. இவை தவிர, ஊராட்சிகளின் நிதியில் இருந்து அனுமதிக்கப்பட்ட தொலைக் காட்சிப் பெட்டிகளை நிர்ணயிக்கப்பட்ட விலையில் ஊராட்சிகளின் விருப்பப்படி வாங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

[1994 ஏப்ரல் 26

சமுதாய தொலைக் காட்சிப் பெட்டிகள் இத்துறையால் பராமரிக்கப்படுகின்றன. 99 கோட்ட பணி நிலையங்கள் இதற்காக அமைந்துள்ளன. ஒவ்வொரு பணி நிலையத்திலும் ஒரு கோட்ட வானொலி மேற்பார்வையாளரும், ஒரு உதவியாளரும் நியமிக்கப்பட்டு உள்ளனர். ஒவ்வொரு பணி நிலையமும் சராசரி 4 முதல் 5 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள சமுதாய வானொலி மற்றும் தொலைக் காட்சிப் பெட்டிகளை பராமரிப்பதற்கு பொறுப்பு வகிக்கிறது.

ஒவ்வொரு ஊராட்சியும் தொலைக் காட்சிப் பெட்டி ஒன்றுக்கு பராமரிப்பு கட்டணமாக ரூ.100 ஆண்டொன்றுக்கு செலுத்திடல் வேண்டும்.

ஒவ்வொரு ஊராட்சியும் சமுதாய வானொலிப் பெட்டிகள் பராமரிப்பதற்காக ஒரு வானொலிப் பெட்டிக்கு ஆண்டொன்றுக்கு ரூ.30 வீதம் முதல் 3 பெட்டிகளுக்கும் அதற்கு கூடுதலாக உள்ள ஒவ்வொரு பெட்டிக்கும் ரூ.10 வீதமும் பராமரிப்பு தொகை செலுத்த வேண்டும்.

அரசிற்கு இதன் மூலம் ரூ.28.00 இலட்சம் வருமானம் ஆண்டு தோறும் கிடைக்கிறது.

மாதிரி கிராமம் அமைக்கும் திட்டம்:

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கிராமத்தில் "மாதிரி கிராமம்" "புரட்சித் தலைவி ஜெயலலிதா நகர்" என்ற பெயரில் ஏற்படுத்த அரசு தீர்மானித்துள்ளது. இந்த திட்டத்தின் கீழ் 250-300 வீடுகள் வெவ்வேறு அளவு மற்றும் மதிப்பீட்டுடன், அடிப்படை வசதிகளுடன், அதாவது குடிநீர், தெருவிளக்குகள், பள்ளிக் கட்டிடங்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய உணவு மையக் கட்டிடம், துணை நலவாழ்வு மையம், நூலகம், சமுதாய சாண வாயுக் கலங்கள், அங்காடி வளாகம், புறக் காவல் நிலையம், பூங்கா மற்றும் பல, சமுதாயத்தில் பலவித பிரிவினர்களுக்கு அமைத்து, அதன்மூலம் பலவித சாதி மற்றும் இன மக்களை ஒருங்கிணைத்து ஒரு குடையின் கீழ் கொண்டு வருவதற்காக, அரசின் பல்வேறு திட்டங்களின் மூலமாக கட்டப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு நகருக்கும் ரூபாய் மூன்று கோடிக்குள் செலவீனம் ஆகும்.

2. 18 மாவட்டங்களிலிருந்து "மாதிரி கிராமம்" அமைக்க வரபெற்ற செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளது. மீதி 3 மாவட்டங்களிலிருந்து செயற் குறிப்புகள் பெறுவதற்கு அரசு துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

1994 ஏப்ரல் 26]

3. எல்லா மாவட்டங்களிலும் இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கு தேவையான நிலத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு அரசு, ஊரக வளர்ச்சி இயக்குநர் மற்றும் நில நிர்வாக ஆணையருடன் கலந்து ஆலோசித்து வருகிறது.

தமிழ்நாடு ஊரக வளர்ச்சிக் குழுமம்:

அயல் நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் மற்றும் தனியார்களை அணுகி, ஊக்குவித்து அவர்களிடமிருந்து தாராளமாக நிதிகளைப் பெற்று, அவற்றைப் பயன்படுத்தி, நிதியளித்தோர்களின் பிறந்த ஊர்களில் அடிப்படை வசதிகளை வளர்ச்சியடையச் செய்து கிராமப் பெருமக்களின், அதனினும் சிறப்பாக பொருளாதாரத்திலும், சமூக நிலையிலும், பின் தங்கிய மக்களின் பொது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் பெருநோக்குடன், தமிழக அரசு ஒரு புதிய நிறுவனத்தை உருவாக்க ஆணையிட்டுள்ளது. அதற்கு "தமிழ்நாடு ஊரக வளர்ச்சி குழுமம்" என பெயரிடப்பட்டுள்ளது.

இந்த "தமிழ்நாடு ஊரக வளர்ச்சி குழுமத்தின்" தலைவராக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், துணைத் தலைவராக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் பொறுப்பேற்பார்கள்.

பயிற்சித் திட்டங்கள்:

ஊரக வளர்ச்சித்துறை பணியாளர்களுக்கு அவர்கள் பணியினை திறம்பட செய்வதற்கும் புதிய செயல்திறனை உருவாக்குவதற்கும் கீழ்கண்டவாறு ஐந்து ஊரக விரிவாக்க பயிற்சி நிலைய மையங்கள் இயங்கிக் கொண்டிருக்கிறது:

1. பவானிசாகர்	...	பெரியார் மாவட்டம்
2. கிருஷ்ணகிரி	...	தர்மபுரி மாவட்டம்
3. பட்டுக்கோட்டை	...	தஞ்சாவூர் மாவட்டம்
4. டி. கல்லுப்பட்டி	...	மதுரை மாவட்டம்
5. எஸ்.வி.நகரம்	...	திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம்.

மேலும், மாநில அளவிலான பயிற்சி நிலையம் ஒன்று செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள பெரமனூர் கிராமத்தில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இப்பயிற்சி

[1994 ஏப்ரல் 26

நிலையத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நிலைக்கு மேலான பதவியில் உள்ளவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

1993-94-ம் ஆண்டுகளில் ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் நடத்தப்பட்ட பயிற்சிகள்:

பயிற்சியின் பெயர்.	பயிற்சி காலம்	அணிகள்	பயிற்சி பெற்றவர் எண்ணிக்கை
(1)	(2)	(3)	(4)
1. ஊரக விரிவாக்க அலுவலர் (பஞ்சாயத்து)	30 நாட்கள்	2	390
2. ஊரக விரிவாக்க அலுவலர் அல்லாத இதர விரிவாக்க அலுவலர் களுக்கான ஒருங்கிணைந்த பயிற்சி.	30 நாட்கள்	3	420
3. ஒருங்கிணைந்த விரிவாக்க அலுவலர்களுக்கான பயிற்சி.	30 நாட்கள்	1	170
4. துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பயிற்சி.	15 நாட்கள்	2	235
5. தொழில் நுட்ப விரிவாக்க அலுவலர்.	15 நாட்கள்	2	243
6. பேரூராட்சி அலுவலர்கள்	15 நாட்கள்	3	395
7. ஊர்நல அலுவலர் (பயிற்சி) (பெண்கள்)	3மாதம்	1	35
			1888

1994-95 ஆம் ஆண்டுகளில் ஊரக விரிவாக்க பயிற்சி நிலையங்களில் கீழ்க்கண்ட பயிற்சிகள் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது:

1. ஊர்நல அலுவலர் மற்றும் அமைச்சுப் பணியாளர் பயிற்சி.

2. விரிவாக்க அலுவலர் பயிற்சி (பஞ்சாயத்து) தொழில்நுட்ப விரிவாக்க அலுவலர், பேரூராட்சி அலுவலர்களுக்கான பயிற்சி மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பயிற்சி.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 26]

3. டோக்ரா குழு - குழுத் தலைவர்களுக்கான பயிற்சி பிரிவுகள்.

4. ஊர்நல அலுவலர் பயிற்சி (பெண்கள்)

1993-94 ஆம் ஆண்டிற்கு மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிலையத்தால் கீழ்க்கண்ட பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளது:

பயிற்சியின் பெயர். (1)	பயிற்சி காலம் (2)	அணிகள் (3)	பயிற்சி பெற்றவர் எண்ணிக்கை. (4)
1. வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கான பயிற்சித் திட்டம்.	15 நாட்கள்	7	211
2. கோட்ட வளர்ச்சி அலுவலர்களுக்கான பயிற்சித் திட்டம்.	15 நாட்கள்	4	42
3. தே.ஊ.வி.ப.நிலையத்தார் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் சமூகக் காடுகள் திட்டத்தின்கீழ் முகாந்திர பயிற்சி (Off-campus Training)	10 நாட்கள்	2	36
4. ஊரக மேம்பாட்டிற்கான யூனிசெப் நிறுவனத்தின் மூலம் நடத்தப்படும் பயிற்சி.	2 நாட்கள்	1	25
5. பன்முகப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் பயிற்சி.	27 நாட்கள்	3	60
			374

பட்டறை பயிற்சி மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்படுவதைத் தவிர மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தில் 1994-95-ம் ஆண்டிற்கு கீழ்கண்ட பயிர்ச்சித் திட்டங்கள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளன:

1. வட்டார வளர்ச்சி அலுவர், கோட்ட வளர்ச்சி அலுவலர், மாவட்ட பேரூராட்சி அலுவலர்களுக்கான பயிற்சி.

2. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் உள்ள உதவி திட்ட அலுவலர்கள், மற்றும் மாவட்ட விரிவு அலுவலர்கள் மற்றும் மகளிர் செயற்குழுக்கான பன்முகப்படுத்தப்பட்ட பயிற்சி பிரிவுகள்.

3. ஊராட்சி ஒன்றிய கணக்குகளை கணிப்பம் செய்ய பயிற்சி.

4. பயிற்சி அலுவலர்களுக்கான பயிற்சி.

5. தொண்டு நிறுவனங்களுக்கான பயிற்சித் திட்டங்கள்.

6. திட்ட மதிப்பீட்டிற்கான மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவன விரிவுரையாளர்கள் ஆய்வு படிப்பு மேற்கொள்ள பயன்படுத்தப்படுகிறார்கள்.

டிரைசம் திட்டத்தின்கீழ் நடைபெறும் பயிற்சிகள்:

ஊரக விரிவாக்க பயிற்சி நிலையங்கள், கிராமங்களில் உள்ள இளைஞர்களுக்கு கீழ்க்கண்ட தொழில், பயிற்சிகளை நடத்துவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

(1) வானொலி மற்றும் தொலைக்காட்சி பழுது பார்த்தல்.

(2) மின்மோட்டார் காயில் கட்டுதல்.

(3) பொருத்துனர், மின்பணியாளர்.

(4) சாதாரண மின் கம்பியிடல்.

(5) ஆயில் மற்றும் எரியெருள் இயந்திரங்கள் பழுது பார்த்தல்.

(6) இரண்டு சக்கர வண்டி பழுது பார்த்தல்.

(7) ஆட்டோ மொபைல் மற்றும் கார் ஓட்டுநர் பயிற்சி.

(8) கணிப்பொறி திட்டம்.

(9) வெல்டிங்.

(10) தையல் மற்றும் ஆடை தயாரித்தல்.

மேலும் 1994-95-ஆம் ஆண்டில் அனைத்து ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் கணிப்பொறி பயிற்சி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

1994 ஏப்ரல் 26]

ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் விவசாயப் பண்ணைகள்:

ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் விவசாய பண்ணை மற்றும் பால் பண்ணைகளும் இயங்கி வருகின்றன. கிருஷ்ணகிரி மற்றும் பவானிசாகர் ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களிலுள்ள பண்ணைகள் இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மேலும் வருமானம் தரக்கூடிய பயிற்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தி இப்பண்ணைகளை மாதிரி பண்ணைகளாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மறைமலைநகரிலிருக்கும் மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்திற்கு 1993-94-ம் ஆண்டில் 1991-92, 92-93 மற்றும் 93-94-ம் ஆண்டிற்கான தனி மான்யமாக ரூ. 28,03,000/- (ரூபாய் இருபத்தெட்டு இலட்சத்து மூவாயிரம் மட்டும்) இந்திய அரசால் தொடர் செலவினமாக கீழ்கண்டவாறு ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

வருடம்.	தொகை.
1991-92	ரூ. 7,97,000
1992-93	ரூ. 9,48,500
1993-94	ரூ. 10,57,500
	ரூ. 28,03,000

மேலும் இம் மாநிலத்திலுள்ள ஊரக விரிவாக்க பயிற்சி நிலையங்களில் பயிற்சியினை மேம்படுத்துவதற்கு மறுவடிவமைப்புக்குழு ஒன்று தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம் மறுவடிவமைப்புக் குழு ஊரக விரிவாக்க பயிற்சி நிலையங்களை வலுப்படுத்துவதற்கு எட்டாவது ஐந்து ஆண்டு திட்டக் காலத்தில் கீழ்கண்ட பணிகளுக்கு ரூ. 367.4270 லட்சம் ஒதுக்கீடு செய்யும்படி மத்திய அரசிற்கு பரிந்துரை செய்துள்ளது.

	(ரூ. இலட்சம்.)
(1) புதிய கட்டிடங்களை கட்டுவதற்கு	78.1000
(2) பழைய கட்டிடங்களை கட்டுவதற்கு	33.7725
(3) தளவாடப்பொருட்கள் வாங்குவதற்கு	26.2045
(4) ஒலி, ஒளி சம்பந்தப்பட்ட உபகரணங்கள் வாங்குவதற்கு	27.5500

[1994 ஏப்ரல் 26

(ரூ. இலட்சம்.)

(5) தொடரும் செலவினம்	*47.8000*
(6) புதிய பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்துவதற்கு.	*154.0000*
மொத்தம்	***367.4270***

மேற்கண்ட பணிகளுக்கான முன்மொழிவுகள் தேசிய ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம், ஹைதராபாத் மூலமாக மத்திய அரசிற்கு பரிந்துரைக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் ஒவ்வொரு வருடமும் தொடர் செலவினமாக ரூபாய் ஐந்து இலட்சம் ஒவ்வொரு ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையத்திற்கும் ரூ. ஒரு இலட்சம் வீதம் மத்திய அரசால் ஒப்பளிக்கப்படுகிறது. *1992-93*-ம் ஆண்டிற்கு தொடர் செலவினமாக மத்திய அரசால் ரூ. ஐந்து இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. *1993-94*-ம் ஆண்டிற்கான தொடரும் செலவினத்திற்கான தொகை ரூபாய் ஐந்து இலட்சத்திற்கு இந்திய அரசின் ஒப்பளிப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

டீசலில் இயங்கும் விவசாய பம்புசெட்டுக்களில், திறனற்ற புட்வால்வுகளை புதுப்பித்தல்.

சேலம், பெரியார், திருவண்ணாமலை-சம்புவராயர் திருநெல்வேலி கட்டபொம்மன், செங்கல்பட்டு-எம்ஜிஆர், திண்டுக்கல்-அண்ணா, தருமபுரி மற்றும் தென்னாற்காடு-வள்ளலார் ஆகிய *8* மாவட்டங்களில், டீசலில் இயங்கும் விவசாய பம்பு செட்டுகளில், *10000*, திறனற்ற புட்வால்வுகளை புதுப்பிக்கும் திட்டம் முதல் முதலாக பெட்ரோலியம் சிக்கன ஆய்வுக் கழக (பி.சி.ஆர்.ஏ)-த்துடன் கூட்டாக ஆரம்பிக்கப்பட்டது.

ஒவ்வொரு புட்வால்வுக்கும் ரூ. *300* செலவாகும் என மதிப்பிட்டு, அதனை கீழ்க்கண்டவாறு *3* பிரிவினர் பகிர்ந்துக் கொள்வார்கள்:-

பி.சி.ஆர்.ஏ.	..	புட்வால்வின் உண்மையான மதிப்பில் *50* சதவிகிதம் போக்குவரத்து மற்றும் புட்வால்வுகளை மாற்ற ஆகும் செலவில் *50* சதவிகிதம்.
பயனடைவோர்	...	புட்வால்வின் உண்மையான மதிப்பில் *50* சதவிகிதம்.

1994 ஏப்ரல் 26]

மாநில அரசு	..	போக்குவரத்து மற்றும் புட்வால்வுகளை மாற்ற ஆகும் செலவில் 50 சதவீதம் மற்றும் ஒரு புட்வால்வுக்கான விளம்பர செலவு ரூ. 50 க்குள்.

இத்திட்டன் கீழ் (1) புட்வால்வுகளை புதுப்பித்த பின்பு, மாநில அரசு பயனடைவோர் பங்குத்தொகையை வசூலிக்கும் (2) பழையபுட் வால்வுகளைப் பெற்று அவற்றை பயனற்றதாக்கி விற்பதன் மூலம் ஒரு புட்வால்வுக்கு தோராயமாக ரூ. 15 கிடைக்கும். இத்தொகையை செயல்படுத்தும் நிறுவனத்தின் கணக்கில் வைக்கப்படும். (3) பயனடைவோர்கள் 13 மாதங்களில் திருப்பி செலுத்திய தொகை குறித்து விவரமான செலவுப்பயன் ஆய்வினை, பி.சி.ஆர்.ஏ. நிறுவனம் நடத்தும். (ஒரு புட்வால்வு மதிப்பு ரூ. 450) ஒரு புட்வால்வின் தோராயமான ஆயுட்காலம் 2 வருடங்களாகும். ஒரு புட்வால்விற்கு ரூ. 300 குறைந்த செலவு ஏற்படுமானால், பயனடைவோர் அத்தொகையை 11 மாதங்களில் திருப்பி செலுத்துவர். எனவே பயனடைவோர் நன்மை அடைவர். (4) ஒரு புட்வால்விற்கு மாநில அரசின் பங்கு சுமார் ரூ. 30 இது உண்மையான செலவின் அடிப்படையில் ரூ. 50 வரை அதிகமாகும். இதன் மதிப்பு 50 x 10,000 = ரூ. 5,00,000.

இதனைச் செயல்படுத்துவதற்கான ஒருங்கிணைப்பாளராக ஊரக வளர்ச்சி இயக்குநர் செயல்படுவார்.

இத்திட்டத்தின் மொத்த செலவு ரூ. 40.00 இலட்சமாகும்

இத்திட்டம் செயல்படுத்துவதற்காக, மாநில அரசின் பங்கு தொகையான ரூ. 5.00 இலட்சத்தை ஏற்கனவே அரசு வழங்கியுள்ளது.

பேரூராட்சிகள் நிர்வாகம்

தமிழ்நாட்டில் மக்கள் தொகையில் 1/5 பங்கான சுமார் ஒரு கோடி மக்கள் 645 பேரூராட்சிகளில் வாழ்கின்றனர். பேரூராட்சிகள் 4 நிலைகளைத் கொண்டுள்ளது.

1.	இரண்டாம் நிலை	76
2.	முதல் நிலை	252
3.	தேர்வு நிலை	301

நகரியம்:

1. தேர்வு நிலை	3
2. சிறப்பு நிலை	13
	645

பேரூராட்சிகளின் கடமைகள்:

பேரூராட்சிகளின் முக்கியமான பணி பொதுமக்களுக்கு இன்றியமையாத அடிப்படை வசதிகளைச் செய்வதாகும்:-

பேரூராட்சிகளின் நிதி ஆதாரங்கள்:-

வீட்டு வரி, தொழில் வரி மற்றும் வாகன வரி ஆகியவை பிரதான வருவாயாகும். முத்திரைக் கட்டணம் மீதான வரி, கேளிக்கை வரி, பலன்தரத்தக்க இனங்களிலிருந்து கட்டணம் வசூலித்தல், தண்ணீர் வரி, தண்ணீர் கட்டணம், கட்டிடங்களுக்கு அனுமதி வழங்க கட்டணம் மற்றும் அருவருக்கத்தக்கதும் அபாயகரமானதுமான தொழில்களுக்கு விதிக்கப்படும் உரிமைக் கட்டணம் ஆகியவை பேரூராட்சிகளின் இதர முக்கிய வருவாய்களாகும்.

குடிநீர் வழங்கல்:

645 பேரூராட்சிகளில் 392 பேரூராட்சிகளில், பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் 180 பேரூராட்சிகளில் திட்டப் பணிகள் முன்னேற்றத்தில் இருந்து வருகின்றன. மீதமுள்ள பேரூராட்சிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும்.

மேற்கண்ட திட்டங்கள் தவிர பேரூராட்சிகள் 20,023 கைப்பம்புகளையும், 3797 விசைப் பம்புகளையும் மக்களின் உடனடித் தேவைகளைக் கவனிக்க பராமரித்து வருகின்றன. இவை தவிர அதிக எண்ணிக்கையில் திறந்த வெளிக் கிணறுகளும் உள்ளன. மேற்படி பம்புகளை பராமரிக்க ஆண்டு தேவை ரூ. 100.00 லட்சம் ஆகும்.

1993-94-ம் ஆண்டில் சிறிய அளவிலான குடிநீர் திட்டம் செயல்படுத்த ரூ. 14.00 லட்சம் 7 பேரூராட்சிகளுக்கு அரசு மான்யமாக

அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அதாவது ஒன்று (அல்லது) இரண்டு ஆழ்துளைக் கிணறு அமைத்தல், தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன. 1994-95-ம் ஆண்டிற்கு ரூ. 14.01 லட்சம் அரசு மான்யம் வழங்கப்பட்டுள்ளது.

குடிநீர் குழாய்களை புதுப்பிக்கவும், பழுதடைந்த பைப்லைன்களை மாற்றியமைக்கவும், 1993-94-ம் ஆண்டிற்கு ரூ. 16.00 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, இப்பணிகளை மேற்கொள்ள 14 பேரூராட்சிகளுக்கு தொகை பிரித்தளிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1994-95-ம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் ரூ. 16.01 லட்சம் ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

துப்புரவு மற்றும் வடிகால் திட்டம் :

முறையாக துப்புரவு செய்தலும், கழிவுநீர் மற்றும் வடிகால் நீரை அகற்றுவதும், பேரூராட்சிகளின் தலையாய கடமைகளில் ஒன்றாகும். இந்நிலை பேரூராட்சி பகுதிகளில் ஏற்படும் பலவிதமான நோய்களைத் தடுக்கும். பேரூராட்சிகளில் உள்ள 13695 கிலோ மீட்டர் நீளமுள்ள தெருக்களில் 5289 கிலோ மீட்டர் நீளத்திற்கு வடிகால் அமைக்கப்பட்டுள்ளது. 1993-94-ம் ஆண்டிற்கு ரூ.10.00 லட்சம் அரசு மான்யம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பேரூராட்சிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. 1994-95-ம் ஆண்டிற்கு ரூ.10.00 லட்சம் அரசு மான்யம் வழங்கப்பட்டுள்ளது.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழகத்தின் கடனுதவியுடன் கூடிய ஒருங்கிணைந்த குறைந்த செலவிலான கழிப்பிடம் அமைக்கும் திட்டம் 10 பேரூராட்சிகளில் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் 2454 உலர் கழிப்பிடங்கள் சுகாதாரக் கழிப்பிடங்களாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. கீழ்க்காணும் நிதி அடிப்படையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

		தரைமட்டம்	மேற்கூரைக்கு
1.	மைய அரசு நிதி உதவி	45%	..
2.	வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழக கடனுதவி	50%	90%
3.	பயனடைவோர் பங்கு	5%	10%

[1994 ஏப்ரல் 26

இத்திட்டம் தவிர, சென்னை பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத்தின் மூலம் உலக வங்கி நிதியுதவியுடன் சென்னை பெருநகரைச் சுற்றி அமைந்துள்ள பேரூராட்சிகளில் 20 சமுதாயக் கழிப்பிடங்கள் ரூ.30.00 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் முன்னேற்றத்தில் உள்ளன.

சாலைகள்:

பேரூராட்சிகளில் கீழ்க்கண்ட சாலைகள் பராமரிக்கப்படுகிறது:-

	கிலோ மீட்டர்.
1. கான்கிரீட் சாலைகள்	325
2. தார் சாலைகள்	2743
3. கருங்கல் சாலைகள்	4059
4. சரளைக்கல் சாலைகள்	1749
5. மண்சாலைகள்	4568

பேரூராட்சிகளின் நிதி நிலை நலிவடைந்து உள்ளதால் சாலைகள் பராமரிப்பதில் சிரமங்கள் ஏற்படுகின்றன. பேரூராட்சிகளில் சாலைகளின் தரம் உயர்த்த, 1993-94ம் ஆண்டிற்கு ரூ.40.00 லட்சம் அரசு மானியமாக அனுமதிக்கப்பட்டு அனைத்து மாவட்டங்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது. 1994-95ம் ஆண்டிற்கு ரூ.40.00 லட்சம் அரசு மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், பேரூராட்சி பகுதியில் தூசி படியாத சாலை அமைக்கும் திட்டத்தின் கீழ் ரூ.50.00 லட்சம் 1993-94ம் ஆண்டிற்கு மானியமாக அனுமதிக்கப்பட்டு, பேரூராட்சி பகுதியில் இத்திட்டத்தின் கீழ் பணிகளை மேற்கொள்ள 20 மாவட்டங்களுக்கு பிரித்தளிக்கப்பட்டுள்ளது. 1994-95ம் ஆண்டிற்கு ரூ.50.00 லட்சம் அரசு மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தெருவிளக்குகள் பராமரிப்பு:

நிதி வசதியற்ற நலிவடைந்த பேரூராட்சி பகுதியில் உள்ள தெருமின்விளக்குகளை சரிவர பராமரிக்கவும், நிலுவை மின் கட்டணத்தைச்

1994 ஏப்ரல் 26]

செலுத்தவும், பழுதடைந்த மின்சாதனங்களை புதுப்பிக்கவும், 1993-94-ம் ஆண்டிற்கு அரசு மானியமாக ரூ.75.00 லட்சம் அனுமதிக்கப்பட்டது. 1994-95-ம் ஆண்டுக்கும் ரூ.75 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் பேரூராட்சிகளில் புதிதாக உருவாகியுள்ள குடியிருப்பு பகுதிகளுக்கு 1993-94ம் ஆண்டில் ரூ.25.00 லட்சம் தெரு விளக்குகள் அமைக்க வழங்கப்பட்டுள்ளது. 1994-95-ம் ஆண்டுக்கு இத்திட்டத்திற்காக ரூ.42 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பயன்தரத்தக்க முயற்சிகள்:

ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்:

பேரூராட்சிகளின் நிதி ஆதாரத்தினைப் பெருக்கவும், அந்நிதியினைக் கொண்டு தாமாகவே செயல்படவும், அரசு ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தைப் பேரூராட்சிகளில் அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ் பேருந்து நிலையங்கள் கட்டுதல், கடைகள் வளாகம், அங்காடிகள், தங்குமிடங்கள் கட்டுதல் போன்ற பயன்தரத்தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டம் இதுவரை 236 பேரூராட்சிகளில் ரூ.2247.36 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர நகர் மேம்பாட்டுத் திட்டம்:

இத்திட்டத்தின் கீழ் இதுவரை பேரூராட்சிகளில் ரூ. 732.41 லட்சம் மதிப்பீட்டில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. பேருந்து நிலையம்
2. கடைகள்
3. சிறிய கடைகள் மற்றும் தங்குமிடங்கள்

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

நீலகிரி மாவட்டத்தில் மலைப் பகுதியில் அமைந்துள்ள பேரூராட்சிகளுக்கு 1993-94-ம் ஆண்டில் கீழ்க்காணும் வேலைகள் மேற்கொள்ள ரூ. 42.50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.	தடுப்பு சுவர் கட்டுதல்	21.00
2.	குடிநீர் திட்டம்	19.00
3.	துப்புரவு திட்டம்	2.50
		42.50

ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம்:

இத்திட்டத்தின் கீழ் 1993-94-ம் ஆண்டில் ரூ. 977.713 லட்சம் அனுமதிக்கப்பட்டு கீழ்க்காணும் சமுதாய சொத்துக்கள் உருவாக்கும் வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

		எண்ணிக்கை.
1.	தொகுப்பு வீடுகள்	1604
2.	சாலைகள்	1168
3.	சிறு பாலங்கள்	149
4.	வடிகால்கள்	401
5.	இதர வேலைகள்	806

சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்:

பேரூராட்சிகளில் சிறப்பு தன்னிறைவுத் திட்டம் 1992-93-ம் ஆண்டு முதல் 3 ஆண்டு கால கட்டத்திற்குள், ரூ. 150.00 கோடி ஒதுக்கீட்டில் வேலைகள் நிறைவேற்றும் வகையில் தொடங்கப்பட்டது.

இதற்கேற்ப, மாநிலத்திலுள்ள 645 பேரூராட்சிகளில் 1992-93-ம் ஆண்டு முதல் கட்டமாக மூன்றில் ஒரு பங்கான 221 பேரூராட்சிகளில் (221/645) சிறப்பு தன்னிறைவுத் திட்டம் ரூ.50.00 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஆண்டு ஒன்றுக்கு ரூ.50.00 கோடி வீதம், 92-93, 93-94, 94-95 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கு ரூ.150.00 கோடி ஆகும்.

இத்திட்டம் கீழ்க்குறிப்பிட்டுள்ள நிதி ஆதாரத்தின் அடிப்படையில் உள்ளது:-

		(ரூ. கோடி)
1.	ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் (மாநில ஒதுக்கீட்டிலிருந்து 10%)	17.00

1994 ஏப்ரல் 26]

		(ரூ. கோடி)
2.	அரசு பங்குத் தொகை	4.00
3.	பேரூராட்சி நிதி மூலம் தொகை	4.00
		25.00
4.	பயன்பெறத்தக்க இனங்களுக்கான நிதியுதவி அளிக்கும் நிறுவனங்கள் மூலம் ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டங்கள் மூலம்	25.00
	மொத்தம் ..	50.00

1993-94-ம் ஆண்டிற்கு மேற்படி திட்டத்தின் கீழ் அரசு மானியம் ரூ.4.00 கோடி அ.ஆ.எண்.(2டி) 32/ஊ.வ.து./நாள் : 9.3.94-ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. 214 பேரூராட்சிகளில் வேலைகள் மேற்கொள்ளப்படுகிறது. இறுதி கட்டமாக எஞ்சிய பேரூராட்சிகளில் இத்திட்டம் 1994-95-ல் மேற்கொள்ளப்படும். அதற்காக ரூ.400 லட்சம் அரசின் பங்காக வழங்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு II

[63 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

மானியக் கோரிக்கை எண்.48

குடிநீர் வழங்கல்

1994-95

ரூ. 203.4137 கோடி

தமிழ்நாடு குடிநீர் - வடிகால் வாரியம்

1. முகவுரை

மக்கள் நல்வாழ்வுக்கும், தூய்மைக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இன்றியமையாததாகும். பொது மக்களுக்குத் தேவையான பாதுகாக்கப்பட்ட குடிநீரைப் போதுமான அளவிற்கு வழங்குவது அரசின் பொறுப்பாகும். இந்த பொறுப்பினை நன்கு உணர்ந்து தமிழக அரசு ''தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்'' என்னும் அமைப்பை ஏற்படுத்தியுள்ளது. சென்னைப் பெருநகருக்குக் குடிநீர் வழங்கும் பொறுப்பை சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் ஏற்றுள்ளதால், சென்னைப் பெருநகர் நீங்கலாக, அதன் எல்லைக்குட்பட்ட தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும், குடிநீர்வழங்கல் வடிகால் அமைக்கும் பணிகள் குறித்து தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியம் ஆய்வுசெய்து திட்டங்கள் வகுத்துச் செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 14.4.1971 அன்று தோற்றுவிக்கப்பட்டது. அது இத்தனை ஆண்டு காலங்களில், குடிநீர் - வடிகால் திட்டங்களுக்கான ஆய்வுப் பணிகளை ஏற்றல், திட்டங்களை வடிவமைத்தல், திட்டங்களை செயலாக்குதல் ஆகிய பணிகளில் சிறப்பான முன்னேற்றம் எய்தியுள்ளது. இவ்வாரியம், விமானத்திலிருந்து ஆய்வுசெய்து வரைபடம் தயாரித்தல், தொலையுணர்வு போன்ற வகைகளில் குடிநீர் ஆதாரங்களைக் கண்டறிவதில் ஏற்பட்டுள்ள நவீன தொழில்நுட்ப உத்திகளைப்

[1994 ஏப்ரல் 26

பயன்படுத்தி வருகிறது. வாரியம் ஏற்றுக்கொண்ட பெருமுயற்சியின் காரணமாக, இம்மாநிலத்தின் அனைத்துக் குடியிருப்புப் பகுதிகளுக்கும் முற்றிலுமாகக் குடிநீர் வழங்குவது என்னும் குறிக்கோளை நோக்கி தமிழகம் சீராக முன்னேறிச் செல்கிறது.

2. ஊரகக் குடிநீர் வழங்கல்

ஊரக மக்களுக்கு குடிநீர் வழங்கும் பணி முன்னுரிமைப் படுத்தப்பட்டு, ஊரகப்பகுதிகளுக்கான குடிநீர் வழங்குதிட்டங்கள் மத்திய அரசு வழங்கும் முழு நிதி உதவியைக் கொண்டு ''விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் வழங்குதிட்டத்தின்'' கீழும் மற்றும் மாநில அரசின்'' குறைந்தபட்சத் தேவைத் திட்டத்தின்'' கீழும் முழு மானியமாக செயல்படுத்தப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக, இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் ஊரகக் குடிநீர்த் திட்டத்திற்குக் கடனாக நிதியுதவி அளித்து வருகிறது.

ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு, முழுமையாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் (நாளொன்றிற்கு ஒருவருக்கு 40 லிட்டர்) வழங்கவேண்டுமென்பதே ஊரகக் குடிநீர் வழங்கு திட்டத்தின் குறிக்கோளாகும். ஆனால், விரைவான மக்கள் பெருக்கம், குடியிருப்புகள் அதிகரிப்பு, தேவையான ஆதாரங்களின் பற்றாக்குறை ஆகியவை போன்ற இடர்ப்பாடுகள் காரணமாக இந்த இலக்கை அடைய முடியவில்லை. எனினும் ஊரகப் பகுதிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எய்தப் பெற்றுள்ளது.

அவ்வப்போது நடத்தப்பெறும் ஆய்வுகளின் அடிப்படையிலும் ஊரகக் குடிநீர் வழங்கல் கோட்பாடு களுக்கிணங்கவும் ஊரகப் பகுதிகளுக்கு நீர் வழங்கும் திட்டம் வகுக்கப்படுகிறது. 1992 ஆம் ஆண்டு நடத்தப்பெற்ற ஆய்வு முடிவுகள் 1.2. 94ல் உள்ளபடி கிராம மக்களின் நிலை ஆகியவை தற்போதைய திட்டத்திற்கு அடிப்படையாக உள்ளன.

நிலை	குடியிருப்புகளின் எண்ணிக்கை
குடிநீர் வசதி பெறாதவை	1216
ஓரளவு குடிநீர் வசதி பெற்றவை	39393
முழுமையாக குடிநீர் வசதி பெற்றவை	26022
மொத்தம்	66631

இந்திய அரசின் கோட்பாடுகளுக்கிணங்க 1992 ஆம் ஆண்டில் மறு கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்த வரையறுக்கப்பட்ட கோட்பாடுகளுக்கிணங்க குடியிருப்புகளின் எண்ணிக்கை திருத்தப்பட்டது. முந்தைய கணக்கெடுப்பின்போது முழுவதும் குடிநீர் வசதிபெற்ற குடியிருப்புகளாகக் காட்டப்பெற்றவை, பருவமழை தவறியதாலும், நிலத்தடிநீர் குறைந்ததாலும், மக்கள் பெருக்கத்தாலும், வறட்சியாலும் இன்னபிற காரணங்களாலும் ஓரளவு குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகளாகக் குறிக்கப்பெற்றுள்ளன.

1994-95 நிதியாண்டில், குடிநீர் வசதிபெறாத, ஓரளவு குடிநீர் வசதிபெற்ற 3000 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.79.4866 கோடி செலவில் குடிநீர் வசதிசெய்து தர திட்டமிடப்பட்டுள்ளது. இதில், ஆதிதிராவிடர், பழங்குடியினர் வசிக்கும் 1000 சிறு குடியிருப்புகளுக்கு ரூ. 19.75 கோடி செலவில் சிறப்பு கூறு திட்டத்தின் கீழ் குடிநீர் வசதி செய்து தரும் பணியும் அடங்கும். செயலற்றுகிடந்த 350 திட்டங்கள் ரூ. 4 கோடி செலவில் புத்துயிர் பெறும். ரூ. 2 கோடி செலவில் புதிய ஈட்டுக் குடிநீர் ஆதாரங்கள் ஏற்படுத்தப்படும்.

[*1994 ஏப்ரல் 26*

தொழில்நுட்ப செயல்முறைத் திட்டம்

ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் செயலாக்கத்தில் குறைந்த செலவிலான வழிமுறைகளை கண்டறியும் குறிக்கோளோடு, மத்திய அரசு ''தொழில்நுட்பச்செயல்முறைத்திட்டம்'' என்னும் அமைப்பினை ஏற்படுத்தி, இந்த அமைப்பின் கீழ், தமிழகத்தைச் சார்ந்த இராமநாதபுரம், தென்னாற்காடு, சேலம் மாவட்டங்களை முன்னோடித் திட்டப் பகுதிகளாகத் தேர்வு செய்தது.

இம்மாவட்டங்களில் இத்திட்டப்பணிகளின் செயலாக்கத்தில் எய்திய முன்னேற்றம் குறித்த விவரம் வருமாறு:-

		பணி				நிதி	
வரிசை எண்	மாவட்டத்தின் பெயர்	நீராதாரம் உருவாக்கும் பணி		திட்டம் நிறைவேற்றுதல்		இலக்கு (ரூ.இலட்சத்தில்)	சாதனை (ரூ.இலட்சத்தில்)
		இலக்கு	சாதனை	இலக்கு	சாதனை		
1.	இராமநாதபுரம்	496	496	179	179	419.259	407.389
2.	தென்னாற்காடு	451	451	100	100	230.850	305.185
3.	சேலம்	725	725	117	115	460.060	390.677
	மொத்தம்	1672	1672	396	394	1110.169	1103.251

இவையன்றி, தொழில்நுட்பச் செயல்முறைத் திட்டத்தின் கீழ், உவர்நீரை குடிநீராக்கும் இயந்திரம் இருபதும், நீரிலிருந்து அதிக அளவு ஃபுளோரைடு நீக்கும் இயந்திரம் பதினொன்றும், நீரிலிருந்து அதிக அளவு இரும்புச் சத்து நீக்கும் இயந்திரம் ஆறும் முன்னோடி முயற்சியாக நிருவப்பட்டன.

வறட்சி நிவாரணப் பணிகள்

பருவமழை தவறியதன் காரணமாக, மாநிலத்தின் சில பகுதிகளில் வறட்சிப்பணி மேற்கொள்ளப்பட்டது. 1993-94 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணிகளின் கீழ் சுமார் ரூ. 5.112 கோடி செலவில் மக்களின் பயனுக்காக 2248 ஆழ்துளைக் கிணறுகள்

தோண்டப்பட்டன. மாவட்டங்களில் நிலவக்கூடிய தேவைக்கேற்ப நிவாரணப் பணிகள் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

எதிர்காலத் திட்டங்கள்

ஏறத்தாழ 9,000 ஊரகக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கத்தக்க வகையில் ரூ. 530.00 கோடி மதிப்பில் ஓர் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, உலக வங்கியின் உதவியைப் பெறுவதற்காக இந்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

உலக வங்கியின் நிதி உதவிக்காக இதனை அனுப்புவதற்கு ஒப்புக்கொள்கையில், இந்திய அரசு சில மாற்றங்களைத் தெரிவித்துள்ளது. அம்மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உலக வங்கியிடமிருந்து நிதி உதவியைப் பெறுவதற்கு, இத்திட்டம் குறித்து தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இத்திட்டம் நிறைவேற்றப்படுமானால் கிட்டத்தட்ட 40 இலட்சம் மக்கள் பயனுறுவர்.

இந்திய அரசு, 1 மில்லியன் லிட்டர் கொள்ளளவுள்ள உப்புநீரைக் குடிநீராக்கும் இயந்திரத்தை இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நரிப்பையூர் என்னுமிடத்தில், ரூ. 10.75 கோடி செலவில் நிறுவ அனுமதி வழங்கியுள்ளது. இந்த இயந்திரத்தை நிறுவும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும். இது சுமார் 71,000 மக்கள் வாழும் 125 குடியிருப்புப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க வகைசெய்யும்.

3. நகர்ப்பகுதி குடிநீர் வழங்கல்

நகர்ப் பகுதி குடிநீர் வழங்கல் திட்டங்கள், கடன், மற்றும் மானிய அடிப்படையில் செயல்படுத்தப்படுகின்றன. நகர்ப்பகுதி குடிநீர் வழங்கு திட்டங்களுக்கு நிதி வழங்கு முறைகள் வருமாறு:-

நகராட்சிகளுக்கு:

ஆயுள் ஈட்டுறுதிக் கழக உதவியுடன் நிறைவேற்றப்படும் திட்டங்கள்	*2/3 ஆயுள் ஈட்டுறுதிக் கழகக் கடன்* *1/3 அரசுக் கடன்*

பேரூராட்சிகளுக்கு:

ஆயுள் ஈட்டுறுதிக் கழக உதவியுடன் 2/3 ஆயுள் ஈட்டுறுதிக் கழகக் கடன்

நிறைவேற்றப்படும் திட்டங்கள் 1/3 அரசு மானியம்

நகர்ப் பகுதிகளில் 1-4-1994 ஆம் நாளன்றுள்ளபடி நிலவக் கூடிய நிலைமை பற்றிய விவரம் வருமாறு:-

தொடர் எண்	நகர நிலை	மொத்த நகரங்கள்	1-4-94 அன்றுள்ளவாறு குடிநீர் வசதி பெற்ற நிலையில் உள்ளவை	குடிநீர் வசதி செய்து தர வேண்டிய நிலையில் உள்ளவை
1.	மாநகராட்சிகள் (கோயம்புத்தூர் மற்றும் மதுரை)	2	2	--
2.	நகராட்சிகள்	101	99	2
3.	நகராட்சி நகரியங்கள்	7	5	2
4.	ஊராட்சி நகரியங்கள்	16	14	2
5.	பேரூராட்சிகள்			
	ஊரகம்	266	124	142
	நகரம்	364	273	91
	மொத்தம்	756	517	239

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 26]

1994-95 ஆம் ஆண்டில், 50 நகரங்களில் (18 நகராட்சிகள் மற்றும் 32 நகர்ப்பகுதி பேரூராட்சிகளில்) நடைபெற்று வரும் குடிநீர் வழங்கல் திட்டப்பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்காக ரூ.26.35 கோடி வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 18 நகரங்களில் இத்திட்டப் பணிகள் நடப்பு நிதி ஆண்டில் முடிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

குடிநீர் வழங்கு திட்டங்களின் செயல் நோக்கத்திற்காக 266 பேரூராட்சிகளை ஊரகத் தன்மை வாய்ந்தவையாக அரசு வகைபடுத்தியுள்ளது. 1992-93 ஆம் ஆண்டில் 88 கிராமப் பேரூராட்சித்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வந்தன. இவற்றில் 30 திட்டங்கள் 1993 மார்ச்சில் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆகவே, 1993-94 ஆம் ஆண்டு, எதிர்-பார்க்கப்படும் எஞ்சியிருக்கும் திட்டங்கள் 58 என்று எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆனால், முடிப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த 30 திட்டங்களில் 19 கிராமப் பேரூராட்சித் திட்டங்கள் மட்டுமே முடிக்கப்பட்டன. எனவே, 1993-94ல் எடுத்துக் கொள்ள வேண்டியிருந்த எஞ்சியிருந்த திட்டங்கள் 69 ஆகும். இத்துடன் 1993-94ல் மேலும் 12 புதிய கிராமப் பேரூராட்சித் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. மேற்சொன்ன 81 கிராமப் பேரூராட்சித் திட்டங்களில் (69 + 12) 17 திட்டங்கள் 1993-94 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டன. எனவே, 1994-95 ஆம் ஆண்டு முடிக்க வேண்டியிருக்கும் கிராமப் பேரூராட்சி திட்டங்கள் 64 ஆகும். இத்திட்டப்பணிகளை தொடர ரூ.16 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது.

''விரைவுபடுத்தப்பட்ட நகர்ப்பகுதி குடிநீர் வழங்கு திட்டத்தின்'' கீழ் 20,000க்கும் குறைவான மக்கள்தொகை கொண்ட நகர்ப்பகுதியிலுள்ள நகரங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டங்களுக்கு மத்திய அரசு 50 சதவீத மானிய ஒதுக்கீடு செய்யக்

கருதியுள்ளது. 97 நகரங்களுக்கு, ரூ.54.00 கோடி செலவில் குடிநீர் வழங்குவதற்குரிய செயற்குறிப்பு ஒன்று மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு மத்திய அரசிடமிருந்து தேவையான நிதியுதவி பெறப்படும்.

4. நகர்ப்பகுதி வடிகால் திட்டங்கள்

2 மாநகராட்சிகள், 12 நகராட்சிகள் 1 நகராட்சி நகரியம் 1 பேரூராட்சி ஆக 16 நகரங்களில் முற்றிலுமாக அல்லது ஓரளவு நிலத்தடி வடிகால் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் வடிகால் திட்டம் தொடர்பான பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. சேலம் வடிகால் திட்டம் தொடர்பான பணிகள் நடைபெற்று வருகின்றன. நடப்பாண்டில் ரூ.3.2657 கோடி வரவு செலவுத்திட்ட நிதியொதுக்கத்துடன் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

5. வருங்காலத் திட்டம்

சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்களைப் பெருக்கும் நோக்குடன், தென்ஆற்காடு வள்ளலார் மாவட்டம், சேத்தியாத்தோப்பிற்கு அருகே உள்ள வீராணம் ஏரியை ஆதாரமாகக் கொண்டு, ''புதியவீராணம்'' திட்டத்தைச் செயல்படுத்த தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. உலக வங்கி கேட்டுக்கொண்டதற்கிணங்க இத்திட்டம் சுற்றுச் சூழல் மீது ஏற்படுத்தும் விளைவைக் குறித்த மதிப்பீட்டு ஆய்வுகளை நாகபுரியிலுள்ள தேசிய சுற்றுச் சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. வீராணத்திலிருந்து மங்கலம் வரை மென்னுருக்காலான நீர் வழங்கு முதன்மைக் குழாய்களால் ஆன அமைப்புப் பணியையும் நீரேற்று நிலையப் பணியையும்

1994 ஏப்ரல் 26]

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொள்ளும். சம்பந்தப்பட்ட மற்ற பணிகளையும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நிறைவேற்றுகின்றது.

6. உலக வங்கி திட்டம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உலக வங்கிக் கடனுதவியுடன் ரூ.321.86 கோடி செலவிலான திட்டமொன்றைச் செயல்படுத்தி வருகிறது. கோயம்புத்தூர், மதுரை, சேலம் ஆகிய மூன்று பெரிய நகரங்களுக்கு குடிநீர் வழங்கு நிலையில் அபிவிருத்தி செய்யவும், 85 நடுத்தர சிறிய நகரங்களுக்கு, 955 கிராமக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்கும் புதியத் திட்டங்களுக்கு, 14 நகராட்சிகள் மற்றும் 17 நடுத்தர நகரங்களுக்கு குறைந்த செலவில் துப்பரவு வசதிகளைச் செய்து கொடுக்கவும் இத்திட்டம் வகைசெய்கிறது.

இத்திட்டத்தின் கீழ், 44 நகரங்களுக்குக் குடிநீர் வழங்கல் வசதிகளும், 14 நகரங்களுக்குக் குறைந்த செலவிலான துப்புரவு வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் ஒட்டுமொத்தப் பணிகளும், திட்டம் முடிவுறும் நாளான 31-12-1994 ஆம் நாளுக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பாண்டிற்கான வரவு-செலவுத் திட்ட நிதியொதுக்கம் ரூ.35.00 கோடியாகும்.

7. நிறுவன நிதி:

குடிநீர்வழங்கல் திட்டங்களைச்செயல்படுத்துவதற்கு இந்திய ஆயுள் ஈட்டுறுதி நிறுவனம் கடன்கள் வழங்கியுள்ளது. நகரப் புறத் திட்டங்களுக்குக் கடன் வசதிகளை அளிக்கின்ற ஆயுள் ஈட்டுறுதி நிறுவனம், அண்மைக்காலத்தில் கடனுதவி அளிப்பதற்காக பல ஊரகத் திட்டங்களையும் பரிசீலித்துள்ளது. 1969-70 ஆம் ஆண்டு

முதல் 1993-94 ஆம் ஆண்டு வரையிலான கால அளிவில், இந்திய ஆயுள் ஈட்டுறுதி நிறுவனம், ரூ.300.13 கோடி அளவிற்குக் கடன்களை வழங்கியுள்ளது. 1994-95 ஆம் ஆண்டில், ஆயுள் ஈட்டுறுதி நிறுவனம், குடிநீர் வழங்கல் திட்டங்களுக்கு ரூ.43.40 கோடி கடனுதவி வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்

8. சென்னை மாநகர் குடிநீர் வழங்கல் - கழிவு நீரகற்றுப் பணிகள், கிட்டத்தட்ட 39 இலட்சம் மக்களின் தேவையை நிறைவு செய்வதற்காக, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் - கழிவு நீரகற்று வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவ்வாரியம், இரண்டு முக்கியமான திட்டங்களைச் செயல்படுத்துகிறது. அவையாவன

(i) சென்னைக் குடிநீர் வழங்கல் - துப்பரவுத் திட்டம்

(ii) கிருஷ்ணா குடிநீர் வழங்கல் திட்டப்பணிகளின் கீழ் நீர் கொணர்ந்து, வழங்கல் திட்டம்.

9. சென்னைக் குடிநீர் வழங்கல் - துப்புரவுத் திட்டம்

உலக வங்கி நிதியுதவி அளிக்கும் இத்திட்டம் மொத்தம் ரூ.150.803 கோடி திட்டச் செலவில் 1986-87 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. 1993 ஆம் ஆண்டு வரையிலும் ஏற்பட்ட செலவு ரூ.137.02 கோடியாகும். புதிய நிலத்தடிநீர் வளத்தைப் பெருக்கும் பணிகள் தொடர்பாக, அதாவது, கொடுதயையாற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டும் பணி தொடர்பாக, 2 தடுப்பணைகள் கட்டும் பணி முடிவடைந்துள்ளது. மூன்றாவதாக, மேல் செம்பேட்டில் ஒரு தடுப்பணை கட்டும் பணி 1994-95 ஆம் ஆண்டில்

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

மேற்கொள்ளப்படும். குடிநீர்விநியோக அமைப்பிலுள்ள பழைய, அடைப்பு ஏற்பட்ட குடிநீர் முதன்மைக் குழாய்த் தொடர் படிப்படியாக மாற்றப்பட்டு வருகின்றன. குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படாத பகுதிகளில், தேவையான இடங்களிலெல்லாம், புதிய குடிநீர் வழங்கல் முதன்மை குழாயத் தொடர் போடப்படுகின்ன. 1994-95 ஆம் ஆண்டில் இப்பணிகள் தொடர்ந்து நடைபெறும். செங்குன்றத்தில் நாளொன்றுக்கு 300 மில்லியன் லிட்டர் தண்ணீர் சுத்திகரிக்கும் திறன் கொண்ட சுத்தகரிப்பு நிலையம் கட்டும் பணி நடைபெற்றுவருகிறது; கழிவு நீரகற்றல் பிரிவின் கீழும், எம்.ஜி.ஆர். நகர், சாலிகிராமம், ஜி.கே.எம். காலனி மற்றும் ஏனைய புதிய குடியிருப்புகளுக்கும் கழிவு நீரகற்று வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மாநகரிலுள்ள தனியார் மற்றும் பொதுத் தெருக்களில் கழிவு நீரகற்றுக் குழாய்த் தொடர் அமைக்கும் பணி, 1994-95 ஆம் ஆண்டில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். பழைய செங்கல் வளைவு கழிவுநீர் கால்வாய்கள் சீரமைக்கப்படுகின்ன. முக்கியமான கழிவு நீரகற்று நிலையங்களில் கூடுதலாக நீரிறைக்கும் திறன் வசதி ஏற்படுத்தப்படுகிறது; தவிரவும், பல்வேறு பகுதிகளில் கழிவுநீர் சேகரிக்கும் ஏற்பாட்டு வசதியும் மேம்படுத்தப்பட்டுள்ளது. கழிவுநீர்க் குறுக்குக் குழாய்த் தொடர், செங்கல் வளைவு கழிவுநீர் கால்வாய்கள் ஆகியவற்றில் கசடுகளைத் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்படும். கழிவுநீர்சேகரிப்பு ஏற்பாட்டின்படி, குறுகிய கால மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையங்களை மேம்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்படும். மாநகரில் முக்கியமான இடங்களிலுள்ள கழிவு நீரேற்று நிலையங்களிலும் மேம்பாட்டுப் பணி மேற்கொள்ளப்படும்.

[1994 ஏப்ரல் 26

10. சென்னைக்கு குடிநீர் கொண்டு வந்து விநியோகிக்கும் திட்டம்

சென்னைக்கு குடிநீர் கொண்டு வந்து விநியோகிக்கும் திட்டப் பணிகள் 1991-1992ல் மேற்கொள்ளப்பட்டன. தற்போதுள்ள 4 மண்டல நீர் சேமிப்புமுனைகள் மூலம் குடிநீர் விநியோகிக்கப் பட்டு வருகிறது. கிருஷ்ணா நதியிலிருந்து வரப்பெறவிருக்கின்ற கூடுதல் நீரைச் சமமாக விநியோகிப்பதை உறுதிசெய்ய 12 புதிய மண்டல நீர்சேமிப்பு முனைகள் உட்பட, குடிநீர் விநியோகத் திட்டத்தில் போதிய மேம்பாடுகளைச் செய்ய உத்தேசிக்கப் பட்டுள்ளது.

மேற்சொன்ன திட்டத்திற்குத் தேவையான நிலம் கண்டறியப்பட்டுள்ளது. 12 புதிய நீர் சேமிப்பு முனைகளில், வள்ளுவர் கோட்டம், கண்ணப்பர் திடல், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர் ஆகிய இடங்களிலுள்ள 4 நீர் சேமிப்பு முனைகளுக்கு அரசு அனுமதியளித்துள்ளது. இந்த ஆண்டில் அவற்றிற்கான கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

1994-95ஆம் ஆண்டில், கீழ்க்காணும் திட்டங்களில் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் இருக்கும்:

(i) செங்குன்றத்திலிருந்து போரூருக்கு நீரைக் கொண்டு வரும் முதன்மைக் குழாய்த் தொடர் அமைப்பைச் சுத்தம் செய்தல்.

(ii) வள்ளுவர் கோட்டம், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், கண்ணப்பர் திடல் ஆகிய இடங்களில் குடிநீர் வழங்கல் சேமிப்பு முனைகளுக்கான கட்டுமான பணியை மேற்கொள்ளுதல்.

(iii) விருகம்பாக்கம், கொளத்தூர், வேளச்சேரி ஆகிய இடங்களுக்கு கழிவு நீரகற்று திட்டங்கள்.

1994 ஏப்ரல் 26]

அரசு அனுமதியளிப்பதின்பேரில், கனகம்-தரமணி, கொடுங்கையூர் ஆகிய பகுதிகளில் கழிவுநீரகற்றுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்திற்கு நிதியுதவியளிக்க உலக வங்கி இத்திட்டத்தை முன் மதிப்பீடு செய்துள்ளது. இந்த மதிப்பீடு 1994 ஆம் ஆண்டு மத்தியில் எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கூறிய இரண்டு பெரிய திட்டங்களுக்கு வீட்டு வசதி நகர்ப்பகுதி வளர்ச்சிக் கழகத்தின் கடனுதவி தவிர 1994-95 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.39.00 கோடி ஆகும்.

11. புதிய வீராணம் திட்டம்

சென்னையில் நிலவிய கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டைக் கருத்திற்கொண்டு, தமிழ்நாடு அரசு 1993 ஆகஸ்டு திங்களில், ''புதிய வீராணம்'' திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம், நாளொன்று 180 மில்லியன் லிட்டர் நீர், தற்போதுள்ள வீராணம் ஏரியிலிருந்து சென்னை மாநகருக்கு வழங்கப்படும். நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் சுத்தகரிப்புத் திறனுடன் மங்கலத்தில் அமைக்கப்படவுள்ள புதிய சுத்தகரிப்பு நிலையத்தின் வழியாக வீராணம் ஏரி நீர் 220 கி.மீ. நீளமுள்ள குழாயத் தொடர் மூலம் சென்னை நகருக்குக் கொண்டுவரப்படும். உலக வங்கி இப்பெருந்திட்டத்திற்கு நிதியுதவியளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் குறித்து 1993 ஆம் ஆண்டு ஜூலை மற்றும் அக்டோபர் மாதங்களில் முன்மதிப்பீடும் செய்துள்ளது. இத்திட்டத் தயாரிப்பு எந்நிலையில் உள்ளது என்பதை ஆராய உலக வங்கிக் குழு, 1994 ஜனவரி

மாதத்தில் மீண்டும் சென்னைக்கு வருகை தந்தது. இத்திட்டத்திற்கு 1994-95 ஆம் ஆண்டில், ரூ.110.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வீராணம் ஏரியிலிருந்து கொண்டுவரப்படும் நீர் தற்போதுள்ள குடிநீர் பகிர்வுமுறை அமைப்பின் மூலம் வழங்கப்படும். இதற்காக, சென்னைக்கு குடிநீர் கொண்டு வந்து விநியோகிக்கும் திட்டத்தின் கீழ், அடிப்படை வசதிகளை விரிவான முறையில் மேம்படுத்தவும் வலுப்படுத்தவும் திட்டமிடப் பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு III

[63 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

நகராட்சி நிர்வாகம்

1. நகராட்சிகளில் நிதிநிலைமைகளைப் பெருக்க வேண்டியுள்ளது. 1992-93 புள்ளி விவரப்படி அனைத்து நகராட்சிகளின் மொத்த ஆண்டு வருமானம் ரூபாய் 219 கோடி. அரசிடமிருந்தும், ஆயுள்காப்பீட்டு நிருவனத்திடமிருந்தும் பெற்ற கடன் தொகைகளுக்காக குறிப்பிட்ட காலத்தில் கட்டவேண்டிய தவணைகள் கட்டப்படாமல் ரூ.63 கோடி நிலுவையில் உள்ளது. அந்நிலுவைத் தொகைகளைக் கணக்கிற் கொண்டால் 1992-93ல் நிகரப் பற்றாக்குறை ரூ.56 கோடி ஆகும். நகராட்சிகளில் செலவில் சுமார் 56 சதவீதம் நகராட்சி பணியாளர்களின் சம்பள செலவாகும்.

2. நகராட்சிகள், நகராட்சி நகரியங்கள் அனைத்தின் 1992-93ஆம் ஆண்டு மொத்த வரவு செலவு குறித்த தோராய புள்ளி விவரங்கள் வருமாறு:

	வரவு	ரூபாய் (கோடியில்)	செலவு	ரூபாய் (கோடியில்)
அ.	சொத்துவரி ..	45.58	பொது நிர்வாகம் ..	29.39
ஆ.	தொழில்வரி ..	4.48	பொதுப் பணிகள் ..	28.73
	பிற வரிகள் ..	6.35	குடிநீர் வழங்கல் .. வடிகால் ..	24.80
ஆ.	சொத்துவருமானம் ..	8.48	நகரமைப்புத் திட்டம் ..	2.79
இ.	வருமானம் தரும் திட்டங்கள் மூலம் வருவாய் ..	16.54	இன்றியமையாச் செலவுகள் ..	65.28
ஈ.	பலவகை வரவுகள் ..	12.68	பிறசெலவகள் ..	3.45

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

உ. வரிகளிலிருந்து நகராட்சிகளுக்கு அரசு தரும் பங்கு		வருமானம் தரும் திட்டங்கள் ..	4.15
கேளிக்கை வரி ..	18.34	குறித்த செலவு கடன்கள் ..	12.60
உந்துவண்டி வரி ..	0.18	வைப்புத்தொகைகள் ..	49.55
சொத்து விற்பனை வரி	23.00		
பிற இனங்கள்	9.96		
	51.58		
ஊ. அரசு மானியங்கள்	14.63		
எ. அரசு கடன்கள்	9.21		
ஏ. வைப்புத் தொகைகள்	50.06		
மொத்தம்	219.49	மொத்தம்	211.74

3. 1993-94 விவரங்களின்படி மொத்த நகராட்சி பணியாளர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

1.	பொது நிர்வாகம்	2709
2.	பொது சுகாதாரம் மற்றும் துப்புரவு பணியாளர்கள்	20857
3.	வரி வசூலிப்பவர்கள்	1542
4.	மருத்துவப் பணியாளர்கள்	1018
5.	பொறியியல் பணியாளர்	1722
6.	நகரமைப்புப் பணியாளர்	600
7.	குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் பணியாளர்	1955
8.	தெருவிளக்கு பணியாளர்கள்	570
9.	பிற பணியாளர்கள்	2493
	மொத்தம்	33466

4. நகராட்சிப் பணியாளர்கள் நலன் மேம்பாட்டிற்காக அரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 26]

1. பணிக்காலத்தில் இறந்துவிடும் நகராட்சி ஊழியர்களின் வாரிசுகளுக்கு காலத்தாழ்வின்றி கருணை அடிப்படை நியமனம் கிடைக்கும் வகையில் அனைத்து நகராட்சிகளிலும் ஏறபடும் காலியிடங்களை ஒருசேரக் கருதி நியமனம் செய்வதற்கான புதிய நடைமுறை.

2. பாதாள சாக்கடைக்குள் இறங்கி பணி செய்யும் சுகாதார ஊழியர்களுக்கு ரப்பர் காலணிகள், விஷவாயு முகமூடிகள் ஆகியவையும், நகராட்சி ஓட்டுநர்களுக்கு காலணிகளும், மின் பணியாளர்களுக்கு ரப்பர் கையுறைகளும் நகராட்சிகள் தருவதற்கான ஏற்பாடு.

நகராட்சி சாலைப் பணிகள்

5. நகராட்சிகள் பராமரித்து வரும் சாலைகளின் மொத்த நீளம் 6,709 கிலோ மீட்டர். அதில் மண் சாலைகளாகவும், ஜல்லி சாலைகளாகவும் உள்ள 2,086 கிலோ மீட்டர் சாலைகளை தார் சாலைகளாக மாற்ற வேண்டியுள்ளது. நகராட்சிகளின் நிதி நெருக்கடியைக் கருத்திற்கொண்டு, ஆண்டுதோறும் படிப்படியாக சில சேவைகளை மேற்கொண்டு 1999-2000க்குள் இவையனைத்தையும் தார் சாலைகளாக மாற்றும் 10 ஆண்டுத் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

6. நகராட்சிகளில் நிதி நிலைமை சரியில்லாத காரணத்தினால் அரசு 50 சதவீத மானியம் மற்றும் 50 சதவீதம் கடன் அடிப்படையில் நகராட்சிகளுக்கு சாலை அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள உதவுகிறது. 1993-94ம் வருடத்திற்கு மானியம் ரூபாய் 50 லட்சமும் கடன் ரூபாய் 50 லட்சமும் வழங்கப்பட்டுள்ளது. 1994-95ம் வருடத்திற்கு நகராட்சிகளில் சாலை அபிவிருத்திப பணிகளுக்கு அரசு ரூபாய் 50 லட்சம் மானியமும் ரூபாய் 50 லட்சம் கடனும் வழங்கும். ஏற்கனவே உள்ள தார்சாலையை புதுப்பிக்கவும், ஜல்லி சாலையை தார் சாலையாக மாற்றவும் இந்த திட்டத்தில் மொத்தம் 38 கிலோ மீட்டர் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

7. அரசு நிதிபற்றாக்குறையுள்ள நகராட்சிகளுக்கு 100% கடனாக, நிதியுதவி அடிப்படையில் வழங்கியுள்ளது. இந்த நிதியுதவி முன்பத்தியில் குறிப்பிட்டுளள நியுதவியுடன் சேராததாகும்.

8. 1994-95ஆம் ஆண்டிற்கு சுமார் 60 நகராட்சிகள் பயன்பெறும் வகையில் ரூபாய் 300 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

விரைவுபடுத்தப்பட்ட குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

9. 1993-94ம் வருடத்திற்கு குடிசைப் பகுதிகளில் சாலை மேம்பாடு, பொதுக்கழிப்பிடம், மழைநீர் வடிகால், குடிநீர் வசதி போன்ற வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள ரூபாய் 65.40 லட்சம் மான்யமாக அரசால் வழங்கப்பட்டது. 1993-94ம் வருடத்திற்கு இத்திட்டத்தின் கீழ் 25 நகராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு பயன் அடைந்தன. 1994-95ம் வருடத்திற்கு இத்திட்டத்தின் கீழ் ரூ.72/- லட்சம் அரசு முழு மான்யமாக வழங்கும்.

பேருந்து நிலைய வளர்ச்சி:

10. கிருஷ்ணகிரி, வேலூர், விழுப்புரம், திருப்பூர் மற்றும் மேலப்பாளையம் (திருநெல்வேலி, மேலப்பாளையம் மற்றும் பாளையங்கோட்டைக்காக) ஆகிய நகராட்சிகளில் அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய நவீனப் பேருந்து நிலையம் கட்டப்பட முன் மொழியப்பட்டுள்ளது. நில மாற்றப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்ட பின் இத்திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்படும்.

ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்:

11. ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சேவை மற்றும் பயன்தரும் திட்டங்கள் 1994-95 ஆண்டில் 3 நகரங்களில் செயல்படுத்தப்படும்.

1. கடலூர்	ரூ.442.6	இலட்சம்

2. கொமாரபாளையம் ரூ.175.7

3. பவானி ரூ.121.6

நகராட்சிகளால் தற்போது பராமரிக்கப்பட்டு வரும் தெரு விளக்குகளின் விவரங்கள், எரியும் மற்றும் எரியாத விளக்குகள், சதவீதம் ஆகியவை கீழ்க்கண்டவாறு உள்ளன.

12. நகராட்சி மற்றும் நகரியங்களில் தெரு விளக்கு பராமரிப்பு:

அரசு ஆணை எண் 344, நநி & குவ துறை நாள் 9.6.89ல் மின்வாரியத்திலிருந்து நகராட்சிகளே மேற்படி தெரு விளக்கு பராமரிப்பை ஏற்றுக்கொள்ள ஆணை இடப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர்ப்புற வளர்ச்சி திட்டம்:

நகராட்சி நகரியங்களில் பராமரிக்கும் விளக்குகளின் விவரம்

1. மொத்த விளக்குகள்	2,01,009
2. எரியும் விளக்குகள்	1,76,463
3. எரியும் விளக்குகள் சதவீதம்	87.80%
4. எரியாத விளக்குகள்	24,546
5. எரியாத விளக்குகள் சதவீதம்	12.20%

குறைந்த செலவிலான கழிப்பறை கட்டும் திட்டம்

13. நகராட்சிகளில் நிதி நிலை பற்றாக்குறையின் காரணமாக பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் செயல்படுத்த இயலவில்லை. இத்திட்டம் அமைப்பதால் ஏற்படும் அதிகப்படியான செலவை நகராட்சி ஏற்க இயலவில்லை. பாதாள சாக்கடைத் திட்டம் இயங்கும் இடங்களில் கீழ்க்கண்ட குறைபாடுகள் காணப்படுகின்றன.

1. நகர் முழுமைக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்பட முடியவில்லை.

2. இடப்பற்றாக்குறை மற்றும் விலையேற்றத்தின் காரணமாக கழிவு நீர்ப்பண்ணை அமைக்க இயலவில்லை.

3. இத்திட்டம் முழுமையாக முடிவடைந்தாலும், கழிவுநீர் குழாய்களில் ஏற்படும் குறைபாடுகளைநீண்ட கால அளவில் நிவர்த்தி செய்ய இயலவில்லை.

14. நகராட்சிகளில் பலதரப்பட்ட வருவாய்ப் பிரிவினருக்கு, உதவுமவகையில் குறிப்பாக வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளோர் மற்றும் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு உபயோகமாக இருக்கும் வகையில் குறைந்த செலவில் கழிப்பிடம் என்னும் புதிய திட்டத்தை நகரங்களுக்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் இரு நோக்கங்களாவது: 1. மனித மலத்தை கையில் எடுத்தும், தலையில் சுமந்து செல்லும் துப்புரவு பணியாளர்களை இப்பணியிலிருந்து விடுவிப்பது, 2. நகர்ப்புற துப்புரவு கேடுகளிலிருந்து நீக்கி துப்புரவான சுற்றுப்புற சூழ்நிலையை ஏற்படுத்துவதும் ஆகும்.

15. தற்போது நகர முழுமைக்கும் மூன்று கட்டங்களில் அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மத்திய அரசில் மானியம் மற்றும் ஹட்கோ நிறுவனத்தின் கடனுதவி பெற்று செயல்படுத்தப்படுகிறது.

இலக்கு				28.2.94 சாதனை	
தனியார் கழிப்பிடங்கள்	சமுதாய கழிப்பிடங்கள்	ஹட்கோ கடன்	மைய அரசு மானியம்	மலம் எடுக்கும் பணியிலிருந்து விடுவிக்கப்படும் துப்புரவுப் பணியாளர் எண்ணிகை	கட்டப்பட்ட தனியார் கழிப்பிடங்கள் எண்ணிக்கையும் மொத்த செலவும்
கட்டம் 1 (28 நகராட்சிகள் ; 17.67 கோடி) 1991 மார்ச் முதல் செயல்படுவது:					
65216 (திருத்தியது)	179	11.71	3.36	1716	35228 கழிப்பிடங்கள் ரூ.8.78 கோடி
கட்டம் 2 (37 நகராட்கிள் ரூ.35.18 கோடி)					
114818 (திருத்தியது)	189	23.45	7.94	1619	29014 கழிப்பிடங்கள் (ரூ. 9.25கோடி)
கட்டம் 3 (31 நகராட்சிகள் ரூ.32.68 கோடி)					
68094	254	21.36	7.45	1723	3499 கழிப்பிடங்கள் (ரூ. 00.85கோடி)

16. 1994-95ஆம் ஆண்டிற்குள் நகராட்சிகளின் உலர் கழிப்பிடங்கள் அறவே அகற்றப்படும். மலமெடுக்கும் பணியிலிருந்து துப்பரவுப் பணியாளர்கள் விடுவிக்கப்பட்டு அவரவர் வேலை செய்யும் நகராட்சியிலேயே மாற்றுப் பணியில் அமர்த்தப்படுவர்.

[*1994 ஏப்ரல் 26*

நேரு வேலைவாய்ப்புத் திட்டம்

17. நகர்ப்புறங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள நலிவுற்ற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கோடு நேரு வேலைவாய்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இது கீழ்க்கண்ட மூன்று திட்டங்களைக் கொண்டதாகும்.

அ. நகர்ப்புறங்களில் நலிவுற்ற மக்களுக்கு சிறுதொழில் மூலம் சுயவேலை வாய்ப்புக்கு நிதியுதவி அளித்தல்:

சிறுதொழில் தொடங்க 25 சதவீதம் மான்யமும் 75 சதவிகிதம் வங்கிக் கடனும் வழங்கப்படுகிறது. மானியத்தொகை பெண்கள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் ஆகியோருக்கு ரூ.*5000*/- ஏனையோருக்கு ரூ.*4000*/- என்னும் உச்சவரம்பிற்குட்பட்டது. மொத்த மானியத்தில் *60%*ஐ மத்திய அரசு ஏற்கிறது. மீத *40%*ஐ மாநில அரசு ஏற்கிறது.

ஆ. நகர்ப்புற ஏழைகட்கு சிறு தொழில்களில் பயிற்சி அளித்தல்:

நகராட்சிப் பகுதிகளில் மக்களுக்குப் பயன்படுவனவும் வருவாய் தருவனவும் ஆன கட்டடம் முதலிய பொதுப்பணிகளைச் செய்வதன் மூலம் நலிவுற்ற மக்களுக்கு வேலைவாய்ப்புத் தருதல். 1991 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, ஒரு இலட்சத்துக்குக் குறைவான மக்கள் தொகை கொண்ட நகராட்சிகளில் இது செயல்படுத்தப்படும். மானியத் தொகையில் *60%*ஐ மத்திய அரசு ஏற்கிறது. மீதி *40%*ஐ மாநில அரசு ஏற்கிறது.

இ. நலிவுற்ற மக்களின் குடியிருப்புக்களை மேம்படுத்துவதற்கு நிதிஉதவி அளித்து அதன் மூலம் வேலைவாய்ப்பினை அளித்தல் - குடியிருப்பு மற்றும் கட்டுமானத் தொழில்களில் பயிற்சி அளித்தல்.

18. தாழ்த்தப்பட்ட/பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்களும், மகளிரும் சிறப்பாகப் பயன்பெறுவர். மகளிருக்கு 30 சதவிகிதமும்,

1994 ஏப்ரல் 26]

தாழ்த்தப்பட்ட/பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்களுக்கு அந்தந்த நகரின் மக்கள் தொகையில் அவர்கள் விகிதாசாரப்படியும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

19. சிறுதொழில்களுக்கு நிதியுதவி அளித்தல்:

இத்திட்டம் அனைத்து நகராட்சிகள், நகரியங்களிலும் மாநகராட்சிகளிலும் செயல்படுத்தப்படுகிறது. 1993-94ஆம் ஆண்டுக்கான மத்திய அரசின் மானியம் ஒதுக்கீடு ரூ.197.55 இலட்சம் ஆகும். மாநில அரசின் பங்கு ரூ.131.70 இலட்சம் ஆகும். இது 1994-95ம் வருடத்திலும் தொடரப்படுகிறது.

20. மேற்கண்ட திட்டத்தின்கீழ் நகர்ப்புற ஏழைகளுக்கு தக்க பயிற்சியினை அளித்து அதன்மூலம் அவர்கள் பல்வேறு சிறுதொழில்கள் தொடங்கவோ அல்லது போதுமான வருவாயுடன் கூடிய வேலைவாய்ப்பைத் தேடிக் கொள்ளவோ வாய்ப்பளிக்கப்படுகிறது. சராசரி நபருக்கு ரூ.1200/- செலவில் இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. இதற்காக 1993-94ஆம் ஆண்டுக்கு மத்திய அரசின் மானியம் ரூ.45.70 இலட்சம் மாநில அரசின் பங்கு ரூ.30.47 இலட்சம்.

21. மேற்கண்ட திட்டம் 1989-90ல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 28.2.94 வரை, 57,307 நபர்கள் சிறுதொழில்கள் தொடங்குவதற்கான நிதிஉதவியைப் பெற்று இருக்கிறார்கள். இவர்களில் 20,000 பெண்களும் அடங்குவர். 1994-95ல் சுமார் 11,000 நகர்ப்புறங்களில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்கள் இத்திட்டத்தினால் பயனடைவர். இவர்களில் 30 சதவிகிதம் பெண்கள் ஆவர். இதுவன்றி, 6,350 நகர்ப்புறங்களில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளோரும், இத்திட்டங்களின் மூலமாக பயன் அடைவர். இதில் பெண்களும் அடங்குவர்.

நகராட்சிப் பொதுப்பணிகளைச் செய்வதன் மூலம் நலிவுற்ற மக்களுக்கு வேலைவாய்ப்பு

22. 1993-94ஆம் ஆண்டுக்கு மத்திய அரசின் மானியம் ரூ.167.80 இலட்சம். மாநில அரசின் பங்கு ரூ.111.86 இலட்சம். சுமார் 7.17

இலட்சம் மனித வேலைநாட்கள் 1993-94ஆம் வருடத்தில் உருவாக்கப்பட்டது. சுமார் 1352 வேலைகள் இந்த ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது. 1994-95ஆம் ஆண்டில் 4.40 இலட்சம் மனிதவேலை நாட்கள் உருவாக்கப்பட்டு, 1500 வேலைகள் முடிக்கப்படும்.

குடியிருப்பு மேம்பாட்டின் மூலம் வேலைவாய்ப்பினை அளித்தல்:

23. இத்திட்டத்தின் கீழ் நகர்ப்புறங்களில் வாழும் நலிவுற்ற மக்களின் குடியிருப்புகளை கூரை, சுவர்கள், தரை கூடுதல் அறைகள் போன்ற வகைகளில் மேம்படுத்துவதற்காக அல்லது புதிய குடியிருப்புகளை அமைத்துக் கொள்வதற்கோ ரூ.4000/- நிதியுதவி வழங்கப்படுகிறது. இதில் ரூ.3000/- ஹட்கோ நிறுவனத்தின் கடன். மத்திய அரசின் மானியம் ரூ.600/- மாநில அரசின் மானியம் ரூ.400/-. 1989-90ல் இருந்து 28.2-94 வரை, 86,990 குடியிருப்புகள் ரூ.34.79 கோடி செலவில் மேம்படுத்தப்பட்டன. 1992-93 மற்றும் 1993-94ஆம் ஆண்டுகளுக்கு மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து இத்திட்டத்திற்காக ஒதுக்கியுள்ள தொகை ரூ.3.20 கோடி ஆகும். இத்திட்டத்தினால் 32,000 குடியிருப்புகள் மேம்படுத்தப்படும்.

24. சிறு தொழில்களில் பயிற்சி அளிப்பதைப் போன்றே, கட்டிடத் தொழில்களிலும் நகர்ப்புற ஏழைகட்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. சராசரி நபர் ஒருவருக்கு ரூ.1500/- செலவிடப்படும். 1993-94ஆம் ஆண்டுக்கான மத்திய அரசின் மானியம் ரூ.19.90 இலட்சம். மாநில அரசின் மானியம் ரூ,13.27 இல்டசம். 1994-95ல் செயல்படுத்தப்படும். சுமார் 670 மகளிர் உட்பட 2225 நபர்கட்கு பயிற்சி அளிக்கப்படும்.

நகர்ப்புற ஏழைமக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் திட்டம்

25. நகர்ப்புற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் திட்டம் 15 நகராட்சிகளிலும், 3 செயல் விளக்க

1994 ஏப்ரல் 26]

நகரங்களாகிய கடலூர் நகராட்சி, கோயம்புத்தூர் மாநகராட்சி மற்றும் மதுரை மாநகராட்சி ஆகியவைகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. செயல்விளக்க நகரங்களுக்கு யூனிசெப் நிறுவனம் நிதி உதவி அளிக்கிறது.

தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின் மூலம் ரூ.421.30 லட்சங்களில் 15 நகராட்சிகளில் 3.71 லட்சம் நகர்ப்புற ஏழைமக்கள் இத்திட்டம் மூலம் பயனடைகிறார்கள். இத்திட்டம் 1994-95ம் நிதி ஆண்டில் மேலும் 10 புதிய நகராட்சிகளில் ரூ.186.50 இலட்சங்களில் 3.21 லட்சம் நகர்ப்புற ஏழைமக்கள் கூடுதலாக பயனடையும் விதத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டம் கீழ்க்காணும் 15 நகராட்சிகளில் தற்பொழுது செயல்படுத்தப்படுகிறது.

1. திருப்பூர்
2. மேட்டுப்பாளையம்
3. விழுப்புரம்
4. சிதம்பரம்
5. தேனி அல்லி நகரம்
6. போடிநாயக்கனூர்
7. திண்டுக்கல்
8. பழனி
9. கும்பகோணம்
10. தஞ்சாவூர்
11. மயிலாடுதுறை
12. நாகப்பட்டினம்
13. விருதுநகர்
14. ராஜபாளையம்
15. சிவகாசி

26. 1994-95ம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட புதிய நகராட்சிகளும் கொண்டு வரப்படும்.

1. ஆலந்தூர்

2. ஆவடி

3. அம்பத்தூர்

4. காஞ்சிபுரம்

5. சேலம்

6. திருச்சிராப்பள்ளி

7. பல்லவபுரம்

8. திருச்செங்கோடு

9. குமாரபாளையம்

10. வேலூர்

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

27. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் 95 நகராட்சிகள் மற்றும் 5 நகரியங்கள் நடத்தி வரும் பள்ளிகளில் 5-9 வயது வரம்பினருக்கும் (1-5 வகுப்புகள்) 10-15 வயது வரம்பினருக்கும் (6-10 வகுப்புகள்) செயல்பட்டு வருகிறது. அப்பள்ளிகளில் மொத்தம் 1095 சத்துணவு மையங்கள் செயல்படுகின்றது. அமைப்பாளர்கள் 1095 அமைப்பாளர்கள், 1139 சமையல்காரர்கள் 1139 உதவியாளர்கள் இவற்றில் பணி செய்கின்றனர்.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் - நகராட்சி நகர்ப்புற வங்கி நிதி

28. உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் ஒரு பிரிவாக நகர்ப்புற வளர்ச்சி நிதி

1994 ஏப்ரல் 26]

திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.167.20 கோடியாகும். இத்திட்டம் 1995ல் முடிவு பெறும். இத்திட்டத்தின் கீழ் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் வருவாய் தரத்தக்க திட்டங்கள் மற்றும் மேம்பாட்டு வளர்ச்சி திட்டங்கள் ஆகியவைகளை செயல்படுத்த நிதி உதவி அளிக்கப்படுகிறது. 1989-90 முதல் 1993-94 பிப்ரவரி முடிய) 59 நகராட்சிகள் மற்றும் 3 மாநகராட்சிகளில் பல்வேறு திட்டங்களை எடுத்து செயல்படுத்த ரூ.116.10 கோடிக்கான திட்டங்களுக்கு நிர்வாக அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது.

29. 1993-94 முடிய மாநில வரவு செலவு திட்டத்தில் ரூ.120.50 கோடி இந்நிதிக்கு அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்காணும் தொகையில் ரூ.110.50 கோடி இந்நிதிக்கு 1993-94 முடிய மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அத்தொகையும் மற்றும் நகராட்சிகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட கடன் மற்றும் வட்டி தொகையிலிருந்தும் நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் திட்டங்கள் செயல்பட ரூ.86.55 கோடி வழங்கப்பட்டு (நகராட்சி 50.99 கோடி + மாநகராட்சி 35.56 கோடி) திட்டங்கள் பல்வேறு முன்னேற்ற நிலையில் உள்ளது.

30. எதிர்வரும் 1994-95ம் ஆண்டில் நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதி திட்டங்களை செயல்படுத்த ரூ.35 கோடிக்கு திட்டங்கள் வரையறை திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம், நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதி திட்டத்தின் கீழ் இதுவரை உதவிகள் பெறாத கடனை திரும்ப செலுத்த தகுதி படைத்த அனைத்து நகராட்சிகளையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

இதை தவிர மாவட்ட தலை நகரங்களில் உள்ள நகராட்சிகளுக்கு சாலைகள், தெரு விளக்குகள், கழிவு நீர் வடிகால் மற்றும் குடிநீர் விநியோக திட்டங்கள் இரண்டாண்டுகளில் நிறைவேற்ற ரூ.50 கோடி மதிப்பீட்டில் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்:

31. பொருளாதாரத்தில் நலிந்த நகராட்சிகள் தங்கள் பகுதியில்

பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை செயல்படுத்துவதற்கு நிதி உதவி செய்வதை நோக்கமாக் கொண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் 21.3.1990ல் தொடங்கப்பட்டது. ஒருங்கிணைந்த குறைந்த செலவில் கழிப்பிடம் மற்றும் துப்புரவுப்பணியாளர் மறுவாழ்வுத் திட்டத்திற்கு ''இணக்க முகவர்'' ஆகவும், நேரு வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் வீடு மற்றும் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்துக்கும் நகராட்சி நகர்ப்புற மேம்பாட்டு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கும் ''நிதி வழிமுறை முகவர்'' ஆகவும் செயல்பட்டு வருகிறது.

இந்நிறுவனம் ஹட்கோ நிறுவனத்திடமிருந்து கடன் பெற்று முன்னுரிமை அடிப்படையில் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வழங்கி வருகிறது.

32. இந்நிறுவனம் துவக்கப்பட்ட நாளிலிருந்து இதுவரை நேரு வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், வீடு மற்றும் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் ஒருங்கிணைந்த குறைந்த செலவிலான கழிப்பறை கட்டுதல் மற்றும் துப்புரவு பணியாளர் மறுவாழ்வுத் திட்டம், இரவு தங்கும் வசதி மற்றும் சென்னையில் அல்லிகுளம் பகுதியில் அங்காடி வளாகம் அமைக்கும் பணி ஆகியவற்றிற்கு கடன் மற்றும் மானியமாக முறையே ரூ.9867.08 இலட்சம் மற்றும் 2877.20 இலட்சம் ஒப்புளித்துள்ளது. இதுவரை இத்திட்டங்களுக்கு கடன் மற்றும் மானியமாக முறையே ரூ.4855.38 இல்டசம் மற்றும் ரூ.1486.99 இலட்சம் வழங்கியுள்ளது.

33. 1994-95ஆம் ஆண்டில் இந்நிறுவனம் நேருவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வீடு மற்றும் குடியிருப்பு மேம்பாட்டிற்கான கடன் மற்றும் மானியமாக முறையே ரூ.504 இலட்சம் மற்றும் ரூ.160 இலட்சம் வழங்கவும் ஒருங்கிணைந்த குறைந்த செலவிலான கழிப்பறை கட்டுதல் மற்றும் துப்பறவுப் பணியாளர் மறுவாழ்வுத்திட்டம் ஆகியவற்றிற்கு கடன் மற்றும் மானியமாக முறையே ரூ.902.48 இலட்சம் மற்றும் ரூ.366.50 இலட்சம் ஒப்பளிக்க திட்டமிட்டுள்ளது. 1994-95ம் ஆண்டில் நேரு

1994 ஏப்ரல் 26]

வேலைவாய்ப்புத் திட்டத்தின் கிழ் வீடு மற்றும் குடியிருபபு மேம்பாட்டு திட்டத்திற்கு கடன் மற்றும் மானியமாக முறையே ரூ.504 இலட்சம் மற்றும் ரூ.160 இலட்சம் வழங்கவும் குறைந்த செலவில் கழிப்பறை கட்டுதல் மற்றும் துப்புறவுப் பணியாளர் மறுவாழ்வு திட்டம் ஆகியவற்றிற்கு கடன் மற்றும் மானியமாக முறையே ரூ.2018.02 இலட்சம் மற்றும் ரூ.782.03 இலட்சமாக வழங்கவும் கணக்கிடப்பட்டுள்ளது

34. அரசு ஆணை எண் 72 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் 22.3.93ல் நகராட்சிகள்/நகராட்சி நகரியங்கள் மற்றும் நகர பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றிடமிருந்து குடிநீர் வழங்கல்/சுகாதாரம் போன்றவற்றிற்கான கடன் நிலுவைகளை வசூலிக்க இந்நிறுவனத்தை அரசு முன்மொழிந்துள்ளது. நகராட்சிகளில் 1.4.92 நிலையிலான நிலுவையிலுள்ள தவணை கடந்த கடன்களின் அசல் தொகையான ரூ.8300.67 இலட்சம் இந்நிறுவனத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. தற்சமயம் நகராட்சிகளில் செலவினங்களை ஒப்பிடும்போது வருவாய் குறைந்து வருவதால் கடன் நிலுவைகளைத் திருப்பிச் செலுத்துவதில் அவை பிரச்சினைகளை சந்தித்து வருகின்றன. நகராட்சிகளின் நிர்வாகச் செலவை குறைப்பதன் மூலமும், சொத்துவரி, தண்ணீர் வரி, தொழில்வரி, குத்தகை வாடகை போன்றவற்றை பொது மக்களிடமிருந்து முனைப்பாக வசூலிப்பதன் மூலமும், வருவாய் ஆதாரங்களை பெருக்குவதன் மூலமும் நகராட்சிகளின் வருவாயையும், செலவினையும் சமன்படுத்த இந்நிறுவனமும் நகராட்சி நிர்வாக இயக்கமும் முயற்சிகள் எடுத்து வருகின்றன.

35. தற்பொழுது நகராட்சிகள் பல்வேறு வழிகளில் இருந்து பல்வேறு வரைமுறைகளின் பேரில் நிதிகளைப் பெற்று வருகின்றன. உலகவங்கி இவ்வனைத்து வழிகளையும் ஒருங்கிணைத்த ''ஒரே முகவர்'' என்ற முறையை எடுத்துரைத்துள்ளது. இவ்வாறு இணைக்கப்பட்ட அமைப்பு தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டு வங்கி எனப்படும். இது கீழ்கண்ட பணிகளை உள்ளடக்கியதாக இருக்கும்.

1. தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் கடன் நடவடிக்கைகள்

2. தமிழ்நாடு நகர மற்றும் கிராம திட்ட வளர்ச்சிப் பணி நிதியின் கீழ் கடன் வழங்குதல்

3. நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதி

4. ஹட்கோ/எல்ஐசி யிடமிருந்து பெற்று குடிநீருக்கு கடனளித்தல். இவ்விணைப்புத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

36. உள்ளாட்சி நிறுவனங்களில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்கும் நோக்கோடு இந்நிறுவனம் நிறுவப்பட்டதிலிருந்து குறைந்தபட்ச இலாபத்தை மட்டும் இருத்திக் கொண்டு, மீதி இலாபத்தை வருமான வரிச்சட்டம் பிரிவு 35 ஏசியின்படி, உள்ளாட்சி நிறுவனங்களின் தகுதியடைந்த திட்டங்களுக்கு மானியமாக வழங்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 26]

இயல் - 3

தமிழ்நாடு நகரவியல் பயிற்சி நிலையம், கோயம்புத்தூர்

1. தமிழ்நாடு நகரியம் பயிற்சி நிறுவனம், நகராட்சி/மாநகராட்சிகளில் பணிபுரியும் பல்வேறு வகை அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கவும், நகராட்சி நிர்வாகத்தில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும் 1981 நவம்பரில் கோயம்புத்தூரில் ஏற்படுத்தப்பட்டது. இந்நிறுவனம் 1975ம் ஆண்டு சங்கங்கள் பதிவு சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. நகராட்சிகள், நகரியங்கள், மாநகராட்சிகள் ஆகியவை ஆண்டுதோறும் தரும் பங்குத் தொகையைக் கொண்டு இந்நிறுவனம் செயல்படுகிறது.

3. இப்பயிற்சி நிறுவனம் இதுவரை 152 விரிவாக்கம் மற்றும் புத்தாக்க பயிற்சிகளை நடத்தியுள்ளது. குடிநீர்கசிவு மற்றும் தடுப்பு நடவடிக்கை நகராட்சிகளின் முறையாக வரவு-செலவு திட்டம், குடிநீர் திட்டம் மற்றும் துப்புரவுப் பணிகளின் மண்டல கருத்தரங்கு ஆகியவற்றில் 23 சிறப்பு பயிற்சிகளை நடத்தியுள்ளது.

4, இதனால் 4250 நகராட்சி பணியாளர் அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர்களும் பயனடைந்துள்ளனர்.

5. 1993-94ம் ஆண்டில் 7 விரிவாக்கப் பயிற்சிகள் நடத்தப்பட்டு 250 பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

6. தமிழ்நாடு அரசு மற்றும் யூனிசெப் நிறுவனம் ஆகியவை இப்பயிற்சி நிலையத்தை நகர்புற ஏழை மக்களுக்காக அடிப்படை தேவைத் திட்டத்தின் கீழ் பயிற்சிகள் நடத்த மாநில அளவிலான பயிற்சி நிலையமாக அங்கீகரித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் கடலூர் நகரில் ஒரு சிறப்புப் பயிற்சி நடத்தப்பட்டது.

7. மேலும் குடிநீர் திட்ட கசிவு தடுப்பு நடவடிக்கை, நகராட்சிகளின் வரவு செலவு திட்ட அறிக்கை தயாரித்து

அமுலாக்குதல் போன்ற பல்வேறு பயிற்சிகளை நகர்ப்புறத்தில் செயல்படும் துறைகளான தமிழ்நாடு நகர்புற நிதி வளர்ச்சி மேம்பாட்டுக் கழகம் மற்றும் நகர் மற்றும் ஊரமைப்பு வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் போன்ற துறைகளின் நிதி உதவியுடன் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

8. 1994-95ஆம் ஆண்டில், பல்வேறு .நிதி வழங்கும் அமைப்புகளில் இருந்து நிதியுதவியை பெற்று இந்நிறுவனம் குடிநீர் கசிவு மற்றும் தடுப்பு நடவடிக்கை, நகராட்சிகளுக்கான வரவு செலவு திட்டங்களை தயாரித்தல் போன்ற பல்வேறு தலைப்புகளில் சிறப்பு பயிற்சி வகுப்புகளை நடத்தும்.

9. இப்பயிற்சிநிறுவனத்தின் கூடுதலாக விடுதிக் கட்டிடமும் 2 விரிவுரைக் கூடங்களும், ஒவ்வொன்றும் ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டிலும். பணியாளர் மற்றும் விரிவுரையாளர்கட்கு ரூபாய் 35.00 லட்சம் மதிப்பீட்டில் குடியிருப்புகளும் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளன.

மேற்கண்ட 3 கட்டுமானப் பணிகளும் ஒவ்வொரு கட்டமாக 3 ஆண்டுகளில் பல்வேறு கட்டங்களில் முடிக்கப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 26]

இயல்-4

சென்னை மாநகராட்சி

சென்னை மாநகராட்சி சுமார் 300 ஆண்டுகளுக்கும் முன் நிறுவப்பெற்று இந்திய துணைக்கண்டத்தில் மற்ற எல்லா நகராட்சி நிறுவனங்களை விட பழமை வாய்ந்ததாகும். இதன் ஆளுகை 174 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிற்கு உட்பட்டது. மேலும் சென்னை நகரத்தில் உள்ள மக்கள் தொகையின் மதிப்பீடு 40 லட்சமும், வந்து போகும் மக்கள் தொகை 10 லட்சமும் ஆகும். தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றத்தின் பணிபுரி காலம் 1973ஆம் ஆண்டுடன் முடிவு பெற்றுவிட்டது. அது முதற்கொண்டு மன்றத்தின் கடமைகளை, அரசு நியமித்த சிறப்பு அதிகாரி மேற்பார்வையிடுகிறார். ஆணையாளர்தான் சென்னை மாநகராட்சியின் தலைமை நிர்வாக அதிகாரி ஆவார். பொது மக்களின் தேவைகளை அறிந்து திறம்பட செயல்படுத்தவும் மேலும் அக்கடமைகளை மேற்பார்வையிடவும் பத்து மண்டல அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2. சென்னை மாநகராட்சியின் 1993-94 ஆம் ஆண்டிற்கான (திருத்திய மதிப்பீடு) வரவு செலவு மற்றும் 1994-95ஆம் ஆண்டிற்கான வரவு செலவு மதிப்பீடு கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

வருவாய் வருமானம்

	மொத்த தொகை 1992-93	திட்ட மதிப்பீடு 1993-94	திருத்திய மதிப்பீடு 1993-94	திட்ட மதிப்பீடு 1994-95
		(ரூபாய் கோடிகளில்)		
சொத்து வரி	39.41	55.00	60.00	65.00
தொழில் வரி	4.74	8.00	12.00	12.50
மற்ற வரிகள்	0.14	0.70	0.70	0.70

முத்திரை வரி	17.23	18.50	19.00	20.00
கேளிக்கை வரி	10.33	12.24	13.00	13.50
விற்பனை வரி மீதான வரி	39.31	60.00	50.85	56.00
மற்ற வருமானம்	22.12	27.20	33.64	36.10
மொத்தம்	133.28	181.64	189.19	203.80

வருவாய் செலவினங்கள்

	மொத்த தொகை 1992-93	திட்ட மதிப்பீடு 1993-94	திருத்திய மதிப்பீடு 1993-94	திட்ட மதிப்பீடு 1994-95
		(ரூபாய் கோடிகளில்)		
பணியாளர் ஊதியம்	60.48	76.17	71.21	77.03
ஓய்வூதியம்	10.89	11.80	13.71	14.76
பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல்	17.71	23.19	27.62	30.99
மற்ற செலவினங்கள்	4.08	4.97	8.11	8.31
கடன்களின்பேரின்வட்டி	4.21	11.02	5.54	6.45
நூலக வரி	1.50	3.00	4.00	4.00
தொடக்கக் கல்விக்கான நிதி அளிப்பு	8.85	10.50	13.29	14.40
மூலதன நிதிக்கான உதவித் தொகை .	--	45.00	45.00	50.00
மொத்தம்	107.72	185.65	188.48	205.94

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 26]

மூலதன வரவினங்கள்

	மொத்த தொகை 199293	திட்ட மதிப்பீடு 1993984	திருத்திய மதிப்பீடு 199394	திட்ட மதிப்பீடு 1994-95
	(ரூபாய் கோடிகளில்)			
அ. மாநில அரசு				
குடிசைப் பகுதிகளின் மேம்பாடு-மானியம்	0.20	0.20	0.20	0.20
தெரு விளக்குகள் மானியம்	0.30	0.30	0.40	0.40
அங்காடிகள்/விற்பனை கூடங்கள் கடன்	0.50	0.50	0.50	
பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் கடன்/மானியம்	0.50	0.50	0.55	0.05
மெரீனா கடற்கரை மேம்பாடு	0.50	--	--	--
வெள்ள நிவாரணம்	5.00	--	--	--
மொத்தம் அ. மாநில அரசு	7.00	1.50	1.65	0.65
ஆ. இந்திய அரசு/வெளிநாட்டு	6.66	20.00	20.00	25.00
நகர்ப்புற மேம்பாட்டு நிதி கடன்				
தமிழ்நாடு புறநகர் அபிவிருத்தி திட்டம்-பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகளை நுண்பட சுருள்களாக்குதல் -மானியம்	--	--	0.43	--
மொத்தம்- ஆ இந்திய அரசு/ வெளிநாட்டு உதவி	6.66	20.00	20.43	25.00
இ. இந்திய அரசு				
சிறப்பு மத்திய உதவி மானியம்	--	5.00	--	--

ஹாக்கி விளையாட்டிற்கான புல்தரை அமைத்தல்	--	--	0.50	--
மொத்தம்- இ இந்திய அரசு	--	5.00	0.50	--
ஈ. நிதி நிறுவனங்கள்				
பெரிய அளவிலான திட்டங்கள்-கடன்	--	--	--	15.00
உ. மாநகராட்சி				
தனியார் தெருக்களின் மேம்பாடு	0.38	1.00	0.40	0.50
அங்காடி கடன்கள் கடன்	2.00	2.00	2.00	
வருவாய் நிதியிலிருந்து மாற்றல்-மானியம்	--	45.00	45.00	50.00
ஆரம்பக் கல்வியிலிருந்து மாற்றல்	--	--	7.00	12.00
மொத்தம்- உ மாநகராட்சி	2.38	48.00	54.40	62.50
மொத்தம்	16.04	74.50	76.98	103.15

மூலதன செலவினம் 1994-95

திட்டம்	மொத்த தொகை 1992-93	திட்ட மதிப்பீடு 1993-94	திருத்திய மதிப்பீடு 1993-94	திட்ட மதிப்பீடு 1994-95
		(ரூபாய் கோடிகளில்)		
மண்டலங்கள்				
உட்புற சாலைகள்	★	23.00	24.00	27.00
நடைபாதை	★	4.00	3.00	5.00
குடிசைப் பகுதிகளின் மேம்பாடு	2.20	5.00	3.00	5.00
மொத்தம் (மண்டலங்கள்)	2.20	32.00	30.00	37.00

1994 ஏப்ரல் 26]

துறைகள்:

பேருந்து சாலைகள்	20.99	14.00	10.00	16.00
போக்குவரத்து மேம்பாடு	0.42	4.00	2.00	5.00
மழைநீர் வடிகால்	2.54	7.00	6.00	6.00
தனியார் தெரு	0.40	2.00	1.00	2.00
பாலங்கள்	2.22	7.00	5.50	10.00
தெரு விளக்குகள்	6.37	10.00	17.50	15.00
திடக்கழிவு நிர்வாகம்	1.75	6.00	10.00	10.00
கட்டிடங்கள்	4.75	11.00	12.00	20.00
பூங்காக்கள், விளையாட்டு	0.30	3.00	1.50	1.50
மைதானங்கள்	--	--	1.50	3.50
பள்ளிகளுக்கான அடிப்படை வசதிகள்	--	3.00	3.00	6.00
சுகாதாரம்	--	1.00	1.00	6.20
இந்திய மக்கள் தொகை திட்டம்	0.40	--	1.00	2.58
மற்ற துறைகள்	--	0.50	1.00	1.80
அலுவலகத்தை நவீனப்படுத்துதல்	--	--	--	1.00
இயந்திரப் பொறியியல் துறை கட்டுமான வேலைகள்	--	--	--	0.25
மொத்தம் (துறைகள்)	40.14	68.50	73.00	106.83
ஆக மொத்தம்	42.34	100.50	103.00	143.83

★ பேருந்து சாலைகளின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நிதி ஆதாரங்கள்:

3. உலக வங்கியின் நகர்புற மேம்பாட்டு நிதியின் மூலமாகவும் வரி வசூலிப்பில் உயர்வு காரணமாகவும் 1994-95ல் ரூ.144.00 கோடிக்கான மூலதன திட்டத்தினை செயல்படுத்த மாநகராட்சி திட்டமிட்டுள்ளது. வரி வருவாய் மற்றும் வரியில்லா வருவாய் இனங்களில் வசூலாகாமல் இருக்கும் தொகைகளை வசூலிக்க பயனுள்ள வழிகளை மாநகராட்சி மேற்கொண்டுள்ளது. சொத்து வரி, மற்றும் தொழில் வரி வசூல் திறமை மிக வெகுவாக அதிகரித்துள்ளது. 1992-93ல் சொத்து வரியின் மூலம் வரவு ரூ.39.40 கோடி ஆகும். அதுவே 1993-94ல் ரூ.60.00 கோடியாகவும் 1994-95ஆம் ஆண்டு ரூ.65.00 கோடியை எட்டும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

தொழில் வரி மூலம் வசூலான தொகை 1992-93ல் ரூ.4.74 கோடியிலிருந்து 1993-94ல் ரூ.12.00 கோடியாக அதிகரித்துள்ளது. அது மேலும் 1994-95ல் ரூ.12.50 கோடியாக அதிகரிக்கும். தமிழ்நாடு அரசு 1992ம் ஆண்டு தொழில், வணிகம், கேட்பு மற்றும் வேலை வாய்ப்பு சட்டத்தில் செய்த மாறுதல்களே இதற்குக் காரணமாகும். விற்பனை வரி மீதான மேல் வரி, கேளிக்கை வரி மற்றும் முத்திரை தாள் வரி ஆகியவற்றின் கீழ் மொத்த ஒதுக்கீடு 1993-94ஆம் ஆண்டு ரூ.82.85 கோடி என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இது 1992-93ஆம் ஆண்டு ரூ.66.88 கோடி ஆகும்) இது 1994-95ஆம் ஆண்டில் ரூ.89.50 கோடியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. உலக வங்கி உதவிடும் நகர்ப்புற மேம்பாட்டு நிதியில் இருந்து 1993-94ஆம் ஆண்டில் 20.00 கோடியும் 1994-95ஆம் ஆண்டில் 25.00 கோடியும் கடனாக எதிர்பார்க்கப்படுகிறது. தேவையற்ற செலவினங்களை கட்டுப்படுத்தியும் எல்லாவிதமான செலவினங்களின் சிக்கனத்தை கடைப்பிடித்தும் 1994-95ஆம் ஆண்டு ரூ.144.00 கோடிக்கான மூலதன திட்டத்தை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

எழில்மிகு சென்னை 2000

4. நகர வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் கழிவு நீர் வாரியம் ஆகிய அமைப்புகளின் மூலம் ''எழில் மிகு சென்னை 2000'' என்பதன் கீழ் பல்வேறு திட்டங்களை 1991-92ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இதற்கு சென்னை மாநகராட்சிக்காக முதலில் ஒதுக்கப்பட்ட திட்ட

அளவு ரூ.135.00 கோடியாகும். மாநகராட்சியில் கூடுதல் நிதி நிலையை கருத்தில் கொண்டு இத்திட்ட அளவு ரூ,435.00 கோடியாக திருத்தி அமைக்கப்பட்டு, 1995-96ஆம் ஆண்டு முடிவடையும். 1994-95ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ.144.00 கோடி ஒதுக்கீடாக இருக்கும்.

நகர்ப்புற மேம்பாட்டு நிதி

5. தமிழ்நாடு புறநகர் அபிவிருத்தி திட்டத்தின் ஒரு பகுதி நகர்புற மேம்பாட்டு நிதியாகும். சாலை அமைத்தல், மழைநீர் வடிகால் அமைத்தல், தெரு விளக்குகள் அமைத்தல் மற்றும் வருவாய் ஈட்டும் திட்டங்கள் ஆகியவற்றை செயல்படுத்த, உலக வங்கி உதவியுடன் இந்நிதி நிறுவப்பட்டுள்ளது. இந்நிதியுதவி நூறு சதவிகிதம் கடன் அடிப்படையில்தான் பெறப்படுகிறது. இந்நிதியிலிருந்து சென்னை மாநகராட்சி 1991-92 மற்றும் 1992-93ஆம் ஆண்டுகளில் ரூ.17.52 கோடி கடனுதவி பெற்றுள்ளது. மேலும் சென்னை மாநகராட்சி 1993-94 ஆம் ஆண்டு ரூ.20.00 கோடி கடன் பெறவும் 1994-95ஆம் ஆண்டு ரூ.25.00 கோடி கடன் பெறவும் திட்டமிட்டுள்ளது. இந்த கடன்கள் ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையைச் சார்ந்த திட்டங்களாக நன்கு ஆராய்ந்தறிந்த பிறகே ஒப்பளிக்கப்படுகிறது.

பேருந்து சாலைகள் மற்றும் உட்புற சாலைகளை மேம்படுத்துதல்:

6. சென்னை மாநகராட்சி 280 கி.மீ. தூரமுள்ள பேருந்து வழிச் சாலைகளையும் 1876 கி.மீ. தூரமுள்ள உட்புற சாலைகளையும் பராமரிக்கின்றது. கீழ் குறிப்பிட்டுள்ளபடி 1994-95ஆம் ஆண்டு ரூ.60.00 கோடி செலவிலான பணிகளை பேருந்து மற்றும் உட்புற சாலைகளை மேம்படுத்த திட்டமிட்டுள்ளது.

	(ரூபாய் கோடிகளில்)
1. உட்புறச் சாலைகள்	27.00
2. நடைபாதை மேம்பாடுகள்	5.00
3. குடிசைப் பகுதிகளில் மேம்பாடு	5.00

4.	பேருந்து சாலைகள்	16.00
5.	போக்குவரத்து மேம்பாடு	5.00
6.	தனியார் தெருக்கள்	2.00
	ஆக மொத்தம்	60.00

சில முக்கிய சாலைகள் சிமெண்ட் சாலைகளாக மாற்றி அமைக்கப்படும். வளர்ந்து வரும் பேருந்து போக்குவரத்தை சமாளிப்பதற்காக மாநகராட்சி தற்போதுள்ள பேருந்து சாலைகளை அகலப்படுத்த திட்டமிட்டுள்ளது. சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதுல் மட்டுமன்றி நடைபாதைகளை சிமெண்ட் பலகைகளால் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னையிலுள்ள இந்திய தொழில் நுட்ப கல்வி மைய குழுவினரின் ஆலோசனை பெற்று நடைபாதைகள் சீர் செய்யப்பட்டுள்ளன. மெரீனா கடற்கரையை மேம்படுத்தும் பணிகளின் ஒரு பகுதியாக அக்கடற்கைரை நடைபாதைகள் அலங்கார கற்களால் அமைக்கப்படும். 1994-95ஆம் ஆண்டில் உட்புறச் சாலைகள், குடிசை பகுதி சாலை, நடைபாதைகள் போன்றவைகளை மேம்படுத்த சுமார் 2100 பணிகள் மேற்கொள்ளப்படும்.

பாலங்கள்

7. 1994-95ஆம் ஆண்டுகளில் பாளையராசு தெரு, மாவட்ட ஆட்சியக குடியிருப்பு, ரெயில்வே குடியிருப்பு, கோவிந்தன் குடியிருப்பு மற்றும் கங்குவார் தெரு ஆகிய இடங்களில் பாலங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நேப்பியர் பாலத்தின் அருகில் ஒரு புதிய பாலமும் கட்டப்படும். கெங்குரெட்டி சாலையிலுள்ள ரயில்பாதைக்குக் குறக்கே நடை மேம்பாலம் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளை 1994-95ஆம் ஆண்டு மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

1. சைதாப்பேட்டையிலுள்ள பஜார் சாலையில் வாகன சுரங்கப் பாதை அமைத்தல்.

1994 ஏப்ரல் 26]

2. தெற்கு உஸ்மான் சாலையையும் மகாலிங்கபுர பிரதான சாலையையும் இணைக்கும் மேம்பாலம் அமைத்தல்.

3. கோடம்பாக்கம் சாலையில் சுரங்கப்பாதை அமைத்தல்

4. மீனாட்சி கல்லூரியின் எதிரில் என்.எஸ்.கே. சாலையில் பாதசாரிகளுக்கான சுரங்கப்பாதை அமைத்தல்.

5. சேப்பாக்கத்தில் எழிலகத்திற்கு எதிரில் பாதசாரிகள் சுரங்கப்பாதை அமைத்தல்.

6. சட்டக் கல்லூரியின் எதிரில் பாதசாரிகள் சுரங்கப்பாதை அமைத்தல்.

இத்திட்டங்களுக்கான செலவு 1994-95ஆம் ஆண்டு ரூ.10.00 கோடி ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மழைநீர் வடிகால்கள்

8. தற்போதுள்ள மழை நீர் வடிகால்கள் மழைக்காலங்களில் பள்ளமான பகுதிகளில் தேங்கியிருக்கும் நீரை வடிக்க போதுமானதாக இல்லை. 1994-95ஆம் ஆண்டில் மேலும் 34 கி.மீ. தூரத்திற்கு ரூ.6.00 கோடி செலவில் மழை நீர் வடிகால் அமைக்கப்படும். கொசுத்தொல்லைகளை களையும்பொருட்டும், ஒருங்கிணைந்த மழை நீர் வடிகால் பேணும் திட்டத்தின் பகுதியாகவும் மாநில அரசின் கீழ் உள்ள பிரதான மழைநீர் வடிகால்களை மேம்படுத்தும் பணிகளை மாநகராட்சியே ஏற்று நடத்தத் திட்டமிட்டுள்ளது. மழைநீரை வீணாக்காமல் பயன்படுத்துவதற்காக உபரி மழைநீரை கோவில் குளங்களில் வடிகால்கள் மூலம் திருப்பிவிடப்படும். இதன் முதல் கட்டமாக 1994-95ஆம் ஆண்டு கபாலிஸ்வரர் கோவில் குளத்தை நிரப்புவற்கு பணிகள்மேற்கொள்ளப்படும். இந்த முறையால் கோவில் குளங்களை சுற்றியுள்ள இடங்களில் நீர் ஊற்று அளவை மேம்படுத்த உதவும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

தெரு விளக்குகள்

9. தற்போதுள்ள தெரு விளக்குகளின் அமைப்பில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியதன் விளைவாக தெரு விளக்குகளின் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. எழில் மிகு சென்னை2000' என்பதன் ஒரு பகுதியாக 1994-95ஆம் ஆண்டு ரூ.15.00 கோடி செலவில் தெரு விளக்குகள் பராமரிக்க கீழ்க்கண்டவாறு திட்டமிடப்பட்டுள்ளது:

(ரூபாய் கோடிகளில்)

1.	சோடியம் ஆவி விளக்குகள்-பேருந்து வழி சாலைகளில் அமைக்க	2.00
2.	சோடியம் ஆவி விளக்குகள் உட்புறங்களில் அமைக்க	0.50
3.	விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளில் தெரு விளக்குகள் அமைக்க	0.50
4.	புதை கம்பிகளை மாற்றியமைக்க	0.50
5.	விளக்குக் கம்பங்களின் வரிசையை மாற்றியமைக்க	6.00
6.	மின்சார துணை மின்நிலையங்களை மேம்படுத்த	0.50

சட்டமன்ற பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திட கழிவு நிர்வாகம்

10. சென்னை நகரத்தில் நாள்தோறும் சுமார் 2600 மெட்ரிக் டன் கழிவுப் பொருட்கள் உற்பத்தியாகிறது. வீடுகளில் இருந்து உற்பத்தியாகும் இந்த மொத்த கழிவுகளை வெளியேற்றி நகரத்தை தூய்மையாக வைத்திருப்பது என்பது ஒரு கடுமையான பணியாகும். திடக்கழிவு நிர்வாகத்திற்காக ரூபாய் 10.00 கோடி 1994-95ஆம் ஆண்டில் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. வாடகை வாகனங்களை களையும் திட்டத்தின் பகுதியாக 1994-95ஆம் ஆண்டு, 55 சிறிய லாரிகள் வாங்கப்படும். மேலும்

1994 ஏப்ரல் 26]

பழைய வண்டிகளுக்குப் பதிலாக 3 டன் கொள்ளளவுள்ள 30 சிறிய லாரிகள் வாங்கப்படும். திடக் கழிவு நிர்வாகத்தின் மேம்பாட்டிற்காக கூடுதல் உபரி வாகனங்கள் வாங்கப்படும். சில பகுதிகளில் திடக்கழிவினை அகற்றும் பணி தனியார் வசம் ஒப்படைக்கவும் திட்டங்கள் உள்ளன. திடக்கழிவு மைதானங்கள் புதிய அறிவியல் முறைப்படி மேம்படுத்தப்படும்.

பொது சுகாதாரம்

11. ரிப்பன் மாளிகையில் உள்ள மருந்தகத்தை சிறப்பு மையமாக உயர்த்த 1994-95ஆம் ஆண்டு ரூ.1.50 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆறு மருந்தகங்களில் கூடுதல் கட்டிடங்கள் கட்ட ரூ.0.50 கோடி செலவிடப்பட உள்ளது. 1993-94ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பள்ளி சுகாதாரத் திட்டம் 1994-95ஆம் ஆண்டும் செயல்படுத்தப்படும். தொற்று நோய் மருத்துவ மனையில் எக்ஸ்ரே கதிர்க் கருவி மற்றும் இ.ஸி.ஜி. கருவிக்கும் கூடுதல் கட்டிடங்கள் கட்டி மருத்துவமனை மேலும் மேம்படுத்தப்படும். மேலும் தொற்றுநோய் மற்றும் உயிர்க்கொல்லி நோய் போன்ற நோய்களுக்கான ஆய்வுக்கூடம் தொற்றுநோய் மருத்துவ மனையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1994-95ஆம் ஆண்டு ரூ.20.00 லட்சம் செலவில் வெறிநாய் கடி நோயைக் கட்டுப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. புதிய கூடுதல் தளவாடங்கள் மூலமும் மற்றும் அதிக அளவில் மருந்துகள் வாங்கியும் மலேரியா நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மலேரியா தடுப்பு முறைகளுக்காக 1994-95 ஆம் ஆண்டு 155 கையினால் இயக்கப்படும் புகை கக்கும் இயந்திரம் ரூ.2.25 கோடி செலவில் வாங்க உத்தேசித்துள்ளது. சென்னை மாநகராட்சியின் பொது சுகாதார ஆய்வுக் கூடம் ரூ.0.25 கோடி செலவில் மேம்படுத்தப்படும். 1994-95ஆம் ஆண்டு ரூ.2.00 கோடி செலவில் வேலங்காடு, மூலகொத்தலம் மற்றும் கண்ணம்மா பேட்டை மயான மைதானங்களில் மின்விசை மயான மேடை அமைக்கப்படும். இந்திய மக்கள் தொகை திட்டம்-5ன் கீழ், பல நவீன இயந்திரங்கள் நல மையங்களில் அமைத்து இத்திட்டம்

செவ்வனே நடத்தப்படும். 50 படுக்கைகள் கொண்ட ஒரு தாய் சேய் நல மருத்துவமனை ஒன்று அமைக்கப்படும். மேலும் மையங்களில் பல், கண், தொண்டை, மூக்கு மற்றும் காதுக்கான சிகிச்சை பெற வசதி செய்து தரவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்திய மக்கள் தொகை திட்டம் 5-இன் கீழ் இந்நல மையங்களின் தரத்தை உயர்த்த 1994-95ஆம் ஆண்டு 3.50 கோடி செலவிடப்பட உள்ளது.

கல்வி

12. மாநகராட்சி பள்ளிகளின் கல்வித் தரத்தை மேம்படுத்த பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கல்வித் தரத்தை உயர்த்த மாணவர்களுக்கு ஊக்கப்பரிசு அளிக்கப்பட்டு வருகிறது. பள்ளிகளின் அடிப்படை தேவைகளை மேம்படுத்தும் பணிகளில் ஒன்றாக மாநகராட்சி பள்ளிகளில் மேஜை, நாற்காலிகள், ஆய்வுக் கூடத்திற்கு வேண்டிய உபகரணங்கள் போன்றவைகளுக்காக ரூ.6.00 கோடி 1994-95ஆம் ஆண்டு செலவிடப்படும். இத்திட்டத்தின் மற்றொரு பகுதியாக கூடுதலாக 500 வகுப்பு அறைகள் கட்டுவதற்காக 1994-95ஆம் ஆண்டு ரூ.6.00 கோடி செலவிடப்பட உள்ளது.

பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள்

13. 1993-94ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தீவிர மரங்கள் நடும் திட்டம் 1994-95ஆம் ஆண்டும் தொடரும். பூங்காக்கள் மற்றும் தோட்டங்கள் ஆகியவற்றை மேம்படுத்த 1994-95ஆம் ஆண்டில் ரூ.1.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் 1994-95ஆம் ஆண்டில் விளையாட்டுத் திடல்களில் அடிப்படை வசதிகள் அளித்து விளையாட்டுத் திடல்கள் மேம்படுத்தப்பட உள்ளன. குழந்தைகள் விளையாடும் கருவிகளும் தேவைப்படும் இடங்களில் நிறுவப்படும். எழும்பூரில் உள்ள மேயர் இராதா கிருஷ்ணன் விளையாட்டு அரங்கத்தில் ஆக்கி விளையாடுவதற்காக ரூ.1.75 கோடி செலவில் உலகத் தரத்திற்குட்பட்ட புல்வெளி அமைத்து மேலும் நவீனப்படுத்தப்படும்.

1994 ஏப்ரல் 26]

இயல் 5

மதுரை மாநகராட்சி

1. தென் தமிழ்நாட்டில் மதுரை மாநகரம் மிகப்பெரிய நகரமாகும். இந்நகர் சுற்றுலா மற்றும் வணிகம் முக்கியத்துவம் பெற்றிருப்பதால், மதுரை மாநகரம் மக்கள் நெருக்கம் மிகுந்து காணப்படுகிறது. இதற்கேற்ப அனைவருக்கும் பல்வேறு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டிய நிலையில் மதுரை மாநகராட்சி இருந்து வருகின்றது. அதே நேரத்தில் முக்கிய நகரங்களுக்கே உரிய பிரச்சனைகளும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வருகின்றன. கடந்த ஒன்றரை ஆண்டு காலத்தில் மிகப்பெரிய பிரச்சனைகளை சரிசெய்ய மதுரை மாநகராட்சி திட்டமிட்டுள்ளது.

2. மதுரை மாநகரை அழகுபடுத்தும் திட்டம் நகரிலுள்ள பல்வேறு பிரச்சனைகளை தீர்க்க திட்டமிடப்பட்டது. இம்மாநகராட்சியில் நிதிநிலையை மேம்படுத்த பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் 10 திட்டங்களாவன:

1. பிரதான மழைநீர் வடிகால் வாய்க்கால்களில் தூர் அகற்றுதல்.

2. போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தி முறைப்படுத்துவது.

3. போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டங்கள்.

4. சாலைகள் அபிவிருத்தி.

5. தெருவிளக்குகளை மேம்படுத்துதல் - மின்விநியோகத்தை மேம்படுத்துதல்.

6. பள்ளிக்கட்டிடங்கள் - மகப்பேறு மருத்துவமனைகளை மேம்படுத்துதல்.

7. பூங்காக்கள், சிறுவர் பூங்கா, நீரூற்றுகள் - திறந்த வெளி சறுக்கு அரங்கு.

8. பேருந்து நிலையங்கள் விரிவாக்கம்.

9. சுற்றுப்புறச் சூழல் அபிவிருத்தி.

10. நிர்வாகத் திறன் அதிகரித்தல்.

ஒவ்வொரு திட்டத்தின் கீழும் நடைபெறவுள்ள பணிகள் மற்றும் வருகின்ற வருடத்திற்கான கொள்கை குறிப்புகளின் விபரம் திட்டங்கள் வாரியாக குறிப்புகள் வழங்கப்படுகின்றன.

3. பிரதான மழைநீர் வடிகால் வாய்க்கால்களில் தூர் அகற்றுதல்:

சிறந்த சாலைகளாலேயே நகரம் அழகு பெறும். மதுரை நகரில் கடந்த மழை வெள்ளத்தின்போது இங்குள்ள சாலைகள் அனைத்தும் பழுதடைந்து போயின. மதுரையில் ஓடும் 11 மழைநீர் வடிகால்கள் பயன்படும் நிலையில் இல்லாத வகையிலிருப்பதால், நகருக்குள் வெள்ளம் புகுந்து சாலைகளில் சேதமேற்படுத்தி விட்டன. சிறுமழையின் போதும் கூட சாலைகளில் நீர் தேங்கி, சாலைகள் பழுதடைய பெரும் வாய்ப்புகள் உள்ள நிலையில் இன்று இந்நகர் உள்ளது. ஒவ்வொரு வாய்க்காலும் குறைந்தபட்சம் 50 அடி அகலம் கொண்டடை. ஆக்கிரமிப்புக்களை அகற்றி அவைகளை ஆழப்படுத்துவதின் மூலம் மாத்திரமே நகருக்குள் வரும் வெள்ளம் வடிய வாய்ப்புண்டு. இதுவே சாலைகளைப் பராமரிக்க சிறந்த வழியாகும் எனக் கருதப்படுகிறது. மதுரை மாநகராட்சி இந்த வாய்க்கால்கள் அனைத்தையும் முன்பிருந்த அளவுக்குக் கொண்டுவர முயற்சிகள் மேற்கொண்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

1994 ஏப்ரல் 26]

ஆறு வாய்க்கால்களில் பெரும் பகுதி ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுவிட்டன. தூர் எடுக்கும் பணிதுவங்கப்பட்டுள்ளது. வருகின்ற வருடத்தில், நகரின் வழியாகப் பாயும் வாய்க்கால்கள் அனைத்திலும் தூர் எடுக்கப்பட்டு விடும். இது நகரின் தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் பாதிக்கப்படாதவாறு தடுக்கும்.

4. போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தி முறைப்படுத்துதல்:

மதுரை நகரின் மையப் பகுதியில் அருள்மிகு ஸ்ரீமீனாட்சி அம்மன் கோவிலுக்கு மிக அருகாமையில் பல மொத்த விற்பனை சந்தைகள் அமைந்துள்ளது. நகரின் நெரிசலான போக்குவரத்துக்கு மிகவும் முக்கியமான காரணமாகும். இவைகளை பெரும்பான்மையாக மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளாது வேறு எந்தவிதமான நடவடிக்கைகளை எடுத்தாலும், போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த சிறிதும் வழியில்லை. இதன் பொருட்டு பலதரப்பட்ட மொத்த வியாபாரிகளுடன், மதுரை மாநகராட்சியால் முக்கியம் வாய்ந்த பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன.

1. மைய மொத்த காய்கறி அங்காடி.

2. நெல்பேட்டை

3. மொத்த மலர் அங்காடி

4. மொத்த பழ அங்காடி

ஒரு சிறுபிரிவினர் தவிர 95 சதவீதம் மொத்த வியாபாரிகள் நகரின் வெளிப்புறம் தங்களது வணிகத்தை மாற்றுவதற்கு சம்மதம் தெரிவித்து உள்ளனர். எடுக்கப்பட்டு வருகின்ற மேல் நடவடிக்கைகள் விபரம்:

அ. ஒரு தொழில் தொடர்புடைய குழுமம் புள்ளவிவர ஆய்வு நடத்தி முடித்து பெரும்பாலான மொத்த வியாபாரிகள்

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஒவ்வொருவரும் மாற்று இடத்தில் வணிகம் செய்ய விரும்புகிறார்கள்என்ற முடிவினை வெளிப்படுத்தியுள்ளது.

ஆ. மொத்த வியாபாரிகளுடைய சம்மதத்துடன் இடமும் வரைபடங்களும் தயார்செய்யும் பணி முற்று பெற்றுள்ளது.

இ. கட்டுமானப் பணிகளுக்காகவும் மேம்பாட்டுப் பணிக்காகவும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

ஈ. தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடம் மாநகராட்சிக்குரிய இடம் என்பதாலும், வணிகர்கள் தகுந்த இடமென்று உறுதி செய்துள்ளதாலும், நிலம் தற்போது உபயோகப்படுத்தப் படாது காலியாக உள்ளதாலும், நிலம் கையகப்படுத்தும் பிரச்சனையோ, வேறு பிரச்சனைகளோ எழவில்லை.

உ. மூன்று மொத்த வணிக மையங்களுக்குத் திட்டமிடப்படும் செலவு பின்வருமாறு:

திட்டத்தின் மொத்த எதிர்பார்க்கப்படும் செலவு சுமாராக ரூ.20 கோடியாகும்.

மேம்பாட்டுக்குப் பின் ஒவ்வொரு வணிகமையமும் அனைத்து வசதிகளையும் கொண்டதாக இருக்கும். பொதுவான தேவைகளைச் செய்யும் பணி மாநகராட்சி வசமும், தனித்தனியே கடைகள் பராமரிப்பு மொத்த வியாபாரிகள் வசமும் வைத்துக்கொளள முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதற்கான செலவுகளில் மூன்றில் ஒருபங்கு மொத்த வியாபாரிகள் முதலில் செலுத்தவும், மீதத் தொகையை 3 ஆண்டுக் காலத்தில் எளிய தவணைகளில் செலுத்தவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. திட்டமானது வருகின்ற டிசம்பர் 94 மாதம் 31-ஆம் தேதிவாக்கில் நிறைவேற்றி முடிக்கப்படும். 31.12.1994-ஆம் தேதிக்குள் இப்பணி முடிவடைய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

1994 ஏப்ரல் 26]

5. போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டங்கள்

திட்டச் செலவு
(ரூபாய் லட்சத்தில்)

அ. **சாலைத்திட்டுக்கள் மற்றும் சாலையோரப் பூங்காக்கள்**

28 சாலைத்திட்டுகள் மற்றும் 28 சாலையோரப் பூங்காக்கள் தன்னார்வ நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டு பராமரிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

ஆ. **போக்குவரத்துதானியங்கிச் சைகை (சிக்னல்) விளக்குகள்**

2 முக்கிய இடங்களில் தானியங்கி போக்குவரத்து சைகை (சிக்னல்) விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள வகையில் செலவினம்.	2.79
இ. எளிதான போக்குவரத்து சாலைகளில் 1000 சாலை கண்கள் பொருத்தப்பட உள்ளன. -- செலவு.	1.25
ஈ. சாலைக்கிராதிகள் வடிவமைக்கப்பட்டுள்ளதன் மூலம் சாலைகளின் முக்கியமான இடங்களில் பொருத்தப்படும்.	1.43

உ. பாதசாரிகள் நடைபாதைகள்:

புதிய நடைபாதைகள் அமைக்க கெர்ப்ஸ்லாப் வடிவமைக்கப்பட்டு வருகின்ற வருடத்தில் அமைக்கப்படும். -- செலவு	10.05

6. சாலைகள்

மதுரை மாநகராட்சியால் 526.10 கி.மீ நீள சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவைகள் பின்வருமாறு:

தார் சாலை	306.05 கி.மீ.
மெட்டல் சாலை	121.14 கி.மீ
கிராவல் சாலை	0.90 கி.மீ.
மற்றவை	98.01 கி.மீ.

கடந்த ஆண்டில் 60 கிலோ மீட்டர் நீளம் அளவிலான சாலைகளுக்கு ரூ.181 லட்சம் செலவிடப்பட்டது.

1994-95ஆம் ஆண்டில் சில பிரதான சாலைகள் அகலப்படுத்துவதற்கும், மேம்படுத்துவதற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

7. தெருவிளக்கு - மின்விநியோக மேம்பாட்டுத் திட்டம்

மதுரை மாநகரை அழகுபடுத்தும் திட்டத்தின் கீழ் பல்முனைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

1. இருள்சூழ்ந்த பகுதிகளைக் கணக்கெடுத்தல்,
2. போதுமான வெளிச்சம் கிடைக்கும் வகையில் தெருவிளக்குகளை மேம்படுத்துதல்.
3. நான்கு தெருக்கள் சந்திப்புகளில் அதிக வெளிச்சம் தரத்தக்க விளக்குள் பொருத்துதல்.
4. பிரதான சாலை சந்திப்புகளில் அதிக வெளிச்சம் தரும் விளக்குகள் அமைத்தல்.

1994 ஏப்ரல் 26]

	ஒதுக்கீடு எண்ணிக்கை	செலவு (இலட்சத்தில்)	நிறைவேற்றப்பட்டவை எண்ணிக்கை	செலவு (இலட்சத்தில்)
199394				
1. குழல்விளக்குகள் அமைத்தல்	400	8.00	290	3.81
2. 70 வாட்ஸ் சோடியம் ஆவிவிளக்குகள் அமைத்தல்	400	12.00	300	9.00
3. 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல்	200	10.00	100	5.00
4. மின்மாற்றிகள் அமைத்தல்	10	25.00	10	15.00
5. பள்ளிகளில் மின்சார அமைப்பு ஏற்படுத்துதல்	18	12.00	18	12.00
6. பூங்காக்களில் விளக்குகள் அமைந்தல்	19	8.00	19	8.00

மேற்கண்ட திட்டத்திற்கு பிறகு நகரில் உள்ள அனைத்து சந்திப்புகளிலும் சோடியம் வாயு விளக்குகள் பொருத்தப்பட்டு விடும். மேலும் முக்கியமான சந்திப்புகள் அனைத்தும் 400 வாட்ஸ் சோடியம் வாயு விளக்குகள் பொருத்தப்படும்.

8. பள்ளிக் கட்டிடங்கள் மற்றும் மகப்பேறு மருத்துவமனைகள் மேம்பாடு

மாநகராட்சி பள்ளிக்கட்டிடங்களையும், மகப்பேறு மருத்துவ மனைக் கட்டிடங்களையும், படிப்படியாக மேம்படுத்த திட்டமிடப்பட்டது. முதல் கட்டமாக அனைத்து மாநகாராட்சி 19 உயர்நிலை மற்றும் மேல் நிலைப்பள்ளிக் கட்டிடங்கள், முழுமையாக மேம்படுத்தப்பட்டிருக்கின்றன. 17 மகப்பேறு மருத்துவ மனைக்கட்டிடங்கள் மேம்படுத்தும் பணிநடைபெற்றுக் கொண்டுள்ளது. இப்பணி இந்திய மக்கள் தொகை திட்டநிதி ஒதுக்கீடு மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1994.95 ஆண்டில் 5 சுகாதார மையங்களும், ஒரு அறுவை சிகிச்சைகூடமும் கட்டப்பட உள்ளன. மேலும் அனைத்து மகப்பேறுமனைகளையும் மேம்படுத்தும்பணியும் முடிவடைந்துவிடும். 1993-94ல் செயல்படுத்தப்படுவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட 55 வேலைகளுக்கான நிதி ஒதுக்கீடு ரூ.55.00 இலட்சம் ஆகும். இதில் 33 வேலைகள் ரூ.34.00 இலட்சம் செலவில் 31-12-93ல் முடிக்கப்பட்டது.

9. பூங்காக்கள், சிறுவர் பூங்கா, நீருற்றுகள் - திறந்தவெளியில் வழுக்கிச் செல்லும் பாதை அமைத்தல்

மதுரை மாநகர் மக்கள் மாலைப் பொழுதைக் கழித்திட பொருத்தமான பூங்காக்கள் மற்று பொழுதுபோக்கு இடங்கள் இல்லாது சிரமப்படுவது இந்நகருக்கு மிகப்பெரிய குறையாகும். மாநகரை அழகுபடுத்தும் திட்டத்தின்கீழ் பல பூங்காக்கள் மற்றும் நீருற்றுகள் மேம்படுத்தப்பட்டு தன்னார்வ நிறுவனங்களிடமும், குடியிருப்போர் நலச் சங்கங்களிடடும் ஒப்படைக்கப்பட்டன. மேற்படி நிறுவனங்கள் பூங்காக்களை மற்றும் நீருற்றுக்கள் பராமரிக்கவும் அதற்கான மின் கட்டணத்தைப் பொறுப்பேற்கவும் ஆர்வம் கட்டி அவைகளைப் பெற்றுக் கொண்டுள்ளன. பத்து பூங்காக்கள் இவ்வாறு முடிக்கப்பட்டுள்ளன.

1993-94

இலக்கு நிர்ணயம்		முடிக்கப்பட்டவை		நடைபெற்று கொண்டிருப்பவை	
எண்ணிக்கை	செலவு (ரூபாய் லட்சத்தில்)	எண்ணிக்கை	செலவு (ரூபாய் லட்சத்தில்)	எண்ணிக்கை	செலவு (ரூபாய் லட்சத்தில்)
22	*23.30*	*5*	*4.50*	*17*	*18.80*

சிறுவர் பூங்கா

சின்னஞ்சிறுவர்களுக்கு நிரந்தர பொழுதுபோக்கு அம்சம் நிறைந்த இடம் இல்லாத குறையைப் போக்க ஒரு சிறுவர் பூங்கா வடிவமைக்கப்பட்டு வருகிறது. இப்பணி1994-95ம் ஆண்டில் முடிக்கப்படும். சிறுவர்களுக்கான புகைவண்டி, விளையாட்டுச் சாதனங்கள், இசைக்கேற்ப நடனமிடும் நீருற்றுகள், சருக்குகள்,

1994 ஏப்ரல் 26]

அலங்கார மீன்கள் நீந்துமிடம் போன்றவைகள் இதன் சிறப்பம்சமாகும். இதற்கான மொத்தச் செலவு ரூ.40.00 லட்சம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

திறந்தவெளி வழுக்கிச் செல்லும் பாதையமைப்பு:

தேசிய அளவில் சில சிறந்த சறுக்கு வீரர்களையும் வீராங்கனைகளையும் இந்நகரம் உருவாக்கியுள்ளது. சறுக்கு விளையாட்டுகளும் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த விளையாட்டை ஊக்குவிக் உலகதரத்திற்கு இணையாக ரூ.5லட்சம் செலவில் ஒரு திறந்தவெளி சறுக்கு அரங்கு அமைக்கப்பட உள்ளது. இவ்வேலை 1994-95ல் முடிக்கப்படும்

பேருந்து நிலைய விரிவாக்கத் திட்டம்:

10. தற்போதுள்ள மையப் பேருந்து நிலையத்தை விரிவாக்க வேண்டும் என்பது மதுரை மக்களின் நீண்டநாளைய விருப்பமாகும். தற்போதுள்ள மையப்பேருந்து நிலையம் விரிவாக்கத்திற்கு போதுமான இடமில்லை என்பதைத் தனித்தனியே அளித்துள்ள அறிக்கைகளின் மூலம் பல போக்குவரத்து நிபுணர்கள் தெளிவாக்கி உள்ளதோடு, இந்த இடம் போக்குவரத்து நெரிசல் மிகுதியாகும் இடம் எனவும் கூறியுள்ளனர். கடந்த நிதி நிலை அறிக்கைக் கூட்டத்தில் சட்டமன்றத்தில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் மேலூர் சாலையில் நவீன பேருந்து நிலையம் அமைக்கப்படுமென உறுதி அளித்துள்ளார்கள். 21-10-93 அன்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் இப்பேருந்து நிலையத்திற்கான அடிக்கல் நாட்டி உள்ளார்கள். இந்த பேருந்து நிலைய கட்டுமானப் பணிகள் 3 கட்டமாக மேற்கொள்ளப்படும். முதல் இரண்டு கட்டப் பணிகள் தலா ரூ.5 கோடி செலவில் மேற்கொள்ளப்படும் இறுதி கட்டப்பணி ரூ.10 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். பேருந்து நிலையம் அமையவிருக்கும் இடம் தற்போது சமன் செய்யப்பட்டு வருகிறது. இதற்கான மதிப்பீடுகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டம் தன்னாட்சி நிதித்திட்டமாகவும் மாநகராட்சி நிதியைக் கொண்டும் மேற்கொள்ளப்படும். முதல் கட்டப் பணியில் எல்லா அடிப்படை வசதிகளும் செய்து பேருந்துகள் நிறுத்துமிடமாகப் பயனுக்கு கொண்டுவரப்படும் இப்பேருந்து நிலையம் 1994-95ல் கட்டி முடிக்கப்படும்.

புதிதாக அமைக்கப்படும் இந்த மையப் பேருந்து நிலையம் தவிர தற்போதுள்ள கீழ்க்கண்ட பேரூந்து நிலையங்களும் மேம்படுத்தப்பட உள்ளன.

அ. பெரியார் பேரூந்து நிலையம்

ஆ. பழங்காநத்தம் பேருந்து நிலையம்

இ. ஆரப்பாளையம் பேருந்த நிலையம்

ஈ. அண்ணா பேரூந்து நிலையம்

அ. பெரியார் பேருந்து நிலையம்

சாதாரணமாக சிறு மழை பெய்தாலும் தாழ்வான பகுதியானதால் பெரியார் பேரூந்து நிலையத்தில் 3 அடி மழைநீர் தேங்கி நிற்கிறது. எனவே பேருந்து நிலை மட்டத்தை உயர்த்தியமைக்கத் திட்டமிடப்பட்டு இப்பணிகள், முடிவடையும் தருவாயில் உள்ளன. கூடுதல் விளக்குகள், கூடுதல் கடைகள், கூடுமான விரிவாக்கம் ரூ.30 லட்சத்தில் திட்டமிடப்பட்டு ஓரளவுக்கு அவைகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஆ. பழங்காநத்தம் பேருந்து நிலையம்:

புறவழிச்சாலையில் பழங்காநத்தம், பகுதியில் தென்பகுதிக்குச் செல்லும் அனைத்து வெளியூர்ப் பேரூந்துகள் நிற்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பேரூந்து நிலையம் ரூ.29 லட்சம் மதிப்பீட்டில் 6 மாத காலத்தில் கட்டி

1994 ஏப்ரல் 26]

முடிக்கப்பட்டுள்ளது.

இ) ஆரப்பாளையம் பேருந்து நிலையம்:

இந்த பேருந்து நிலையம் ரூ.12 லட்சம் மதிப்பீட்டில் முற்றிலும் திருத்தி வடிவமைக்கப்பட்டு மேற்கு நோக்கிச் செல்லும் அனைத்து வெளியூர்ப் பேருந்துகளும் இயக்குவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது.

ஈ) அண்ணா பேருந்து நிலையம்:

சாலைகள் சீரமைக்கும் பணி ரூ.300 லட்சத்திலும் கூடுதல் கடைகள் கட்டும் பணி ரூ.5 லட்சம் செலவிலும் மேற்கொள்ளப்பட்டது.

11. சுற்றுப்புறச் சூழல் அபிவிருத்தி:

சுற்றுப்புற சூழலை மேம்படுத்த பல்நோக்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு. சுகாதார வசதி குறைவாக உள்ள பல்வேறு இடங்களில் வடிகால் அமைக்கும் பணி பிரதானமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. ஜெய் ஹிந்த்புரம், சோலையழகுபுரம் ஆகிய தாழ்வான பகுதிகள் ஒருங்கிணைக்கப்பட் வடிகால் அமைப்புகள் மூலம் மேம்படுத்தப்பட்டு நகரில் மோசமான நிலையில் விளங்கியதிலிருந்து அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

ஆ) மின்மயானம்

மதுரை மாநகராட்சிப் பகுதியில் மின் மயானம் பிப்ரவரி 1994 முதல் இயங்கி உள்ளது. வருடத்தில் 5000 சடலங்கள் வரை எரியூட்டப்படும் வகையில் இம்மயானம் மேம் படுத்தப்பட்டுள்ளது. இந்த இடத்தில் மின் மயானம் அமைப்பது சுற்றுப்புற சூழலைப் பாதுகாக்க உதவும் என நம்பப்படுகிறது.

இ) உரம் தயாரிக்கும் இயந்திரம்:

மதுரை மாநகரில் சேரும் குப்பைகளின் ஒரு பகுதியிலிருந்து பம்பாயைச்சேர்ந்த பெர்டி-பிளாணட் என்னும் நிறுவனம் உரம் தயாரிக்கிறது. இதன்மூலம் மதுரை மாநகராட்சிக்கு கணிசமான பங்குத் தொகை கிடைக்கிறது.

ஈ) கூட்டுத்தூய்மை இயக்கம்:

பொதுமக்கள் கல்வி நிறுவனங்கள் உதவியுடன் கூட்டுத்தூய்மை இயக்கம் நடத்தப்பட்டு வருகிறது. பல்வேறு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சுகாதார விழிப்புணர்ச்சியை பரப்பி - மதுரை நகரை தூய்மையாக வைத்துக்கொள்ள உதவுகின்றன. விழிப்புணர்ச்சியை ஊக்குவிக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. நிரந்தர குப்பைத் தொட்டிகள்:

1. நகரில் பல்வேறு பகுதிகளில் 1000 நிரந்தர குப்பைத் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன.

2. ஷை குப்பைகளை அகற்ற தனியார் லாரிகள் உபயோகப்படுத்தப்படுகின்றன.

3. சிறப்புத்துப்பரவுப்பணிக்காக கூடுதல் துப்பரவு கருவிகள் வாங்கப்பட உள்ளன.

4. கூடுதலாக 5 டிராக்டர்கள், 12 இணைப்பு டிரெய்லர்கள் குப்பைகள் ஏற்றிச் செல்லும் வகையிலும் மாற்றி வடிவமைக்கப்பட்ட ஒரு பேரூந்து ஆகியவை வாங்கப்பட்டுள்ளன.

5. சிறு சந்துகளில் குப்பைகளை அள்ளி அகற்ற 60 மூன்று சக்கர வண்டிகள் வாங்கப்படுகின்றன. இதனால் நெரிசல் மிகுந்த சந்துகளையும் தூய்மையாக வைத்துக்கொள்ள முடியும் என்று எதிர்பாக்கப்படுகின்றது.

1994 ஏப்ரல் 26]

நிர்வாகத் திறனை மேம்படுத்துதல்:

நிர்வாகத் திறனை மேம்படுத்த கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அ) நடைமுறைகள் எளிமைப்படுத்தி பணிகளை விரைவுபடுத்த பல்வேறு பிரிவுகளில் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு முடிவெடுக்கப்படுகிறது.

ஆ) தகவல் மையம்:

ஒரு நவீன தகவல் மையம் கூடிய விரைவில் துவக்கப்பட உள்ளது. மாநகராட்சி குறித்த பல்வேறு தகவல்களை தெரிந்துகொள்ள உரிய படிவங்கள் வாங்க-தங்கள் மனுவின் மீது நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் முடிவை தெரிந்துகொள்ள இந்த மையம் துணைபுரியும். இதனால் குறித்த காலத்தில் மனுக்கள் மீது மாநகராட்சிப் பணியாளர்கள் நடவடிக்கை எடுத்து விரைவாக அதன்பேரில் தீர்வெடுத்து பொதுமக்களுக்கு சேவைபுரிய முடியும்.

இ. மின்கட்டண அட்டைப்பட்டியல் முறை:

மதுரை மாநகரைத்தவிர தமிழகமெங்கும் அட்டைப்பட்டியல் நடைமுறையில் உள்ளது. மாதந்தோறும் பட்டியல் வழங்கி வசூல்செய்யும் நடைமுறையால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுககின்றனர். இக்குறைகளை நீக்க மார்ச் 16, 1994 முதல் இரு மாதத்திற்கு ஒருமுறை மின்கட்டணம் கட்டும் வகையில் அட்டைப்பட்டியல் முறை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

ஈ. கணிப்பொறியமாக்குதல்:

34 கணிப்பொறிகள் கொண்ட கணிப்பொறி கட்டமைப்பு நிறுவப்பட்டு முதல்கட்டமாக சொத்துவரி கணிப் பொறியமாக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் குடிநீர் கட்டணம், சம்பளப்பட்டியல் நகரமைப்புப் பணிகள், பிறப்பு இறப்பு பதிவு ஆகியவை கணிப்பொறியமாக்கப்பட்டும், இதனால்

மாநகராட்சியின் பணி மேம்படும் என கருதப்படுகிறது.

உ. சொத்துவரி சீரமைப்பு:

மாநகராட்சியின் நிதிநிலையை மேம்படுத்த சொத்துவரியை சீரமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. பாரபட்சமற்ற நியாயமானமுறையில் பொதுச்சீராய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1,25,000 வரிவிதிப்புகள் சீராய்வு செய்யப்பட்டதில் 4000 இனங்களில் மட்டுமே மறுபரிசீலனை மனுக்கள் வந்துள்ளன. சொத்துவரி 44% உயர்ந்துள்ளது.

1994-95ம் ஆண்டின் மொத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டின்படி எதிர்பார்க்கப்படும் வரவு மற்றும் செலவு கீழ்க்கண்டவாறு இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

	நிதிமதிப்பீடு 1992-93		நிதி மதிப்பீடு 1993-94		திருத்தப்பட்ட நிதி மதிப்பீடு 1993-94		நிதி மதிப்பீடு 1994-95	
	வரவு	செலவு	வரவு	செலவு	வரவு	செலவு	வரவு	செலவு
பொது நிதி	3050.25	2481.55	3089.00	4273.00	3974.98	4533.14	4304.10	4853.27
ஆரம்ப கல்வி நிதி	529.32	516.64	317.21	141.65	301.07	347.65	333.46	33.75
குடிநீர், வடிகால் நிதி	809.33	633.94	1279.00	1493.00	1072.00	1079.00	1294.00	1314.00
மின் நிதி	2719.78	2644.88	2985.52	3045.29	3378.05	3359.81	3877.01	3856.76

1994 ஏப்ரல் 26]

இயல் - 6

கோயம்புத்தூர் மாநகராட்சி

கோயம்புத்தூர் மாநகராட்சி 1981 ஆம் ஆண்டு மே மாதம் 1ம் தேதி அமைக்கப்பட்டது. மாநகரத்தின் மொத்தப் பரப்பளவு 105.60 சதுர கி.மீ. ஆகும். 1991 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை 12 இலட்சம் ஆகும். மாவட்ட ஆட்சித் தலைவர் மாநகராட்சியின் தனி அலுவலராக செயல்பட்டு மாநகராட்சி மன்றத்தின் அதிகாரங்களை செலுத்தி வருகிறார்.

சாலைகள்

2. மாநகராட்சி 614 கி.மி. சாலையை பராமரித்து வருகிறது. 1993-94ஆம் ஆண்டிற்கு 560.40 இலட்சம் புதிய சாலைகளை அமைப்பதற்கும், இருக்கின்ற சாலைகளை பழுது பார்த்து மேம்படுத்தி பராமரிக்கவும் ஒதுக்கப்பட்டது. இதில் ரூபாய் 477.03 இலட்சம் பிப்ரவரி 1994 வரை செலவிடப்பட்டுள்ளது. புதிய சாலைகள் 13 கி.மி. நீலத்திற்கு அமைக்கப்பட்டது. 50 கி.மி. நிலத்திற்கான சாலைகள் பராமரிப்பிர்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. பேருந்து வழிசாலைகள் 9 கி.மி. நீலத்திற்கு ரூபாய் 100 இலட்சம் செலவில் காண்கிரிட் போட்டு வலுவாக்கப்பட்டுள்ளது.

1994-95 ஆம் ஆண்டில், மாநகராட்சி 50 கி.மி. நீலம் உள்ள சாலைகளை ரூபாய் 400 இலட்சம் செலவில் மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இதே ஆண்டில் பேருந்து வழிச்சாலைகள் 10 கி.மி. நீலத்திற்கு ரூபாய் 100 இலட்சம் செலவில் கான்கிரட் போட்டு செம்மைப்படுத்தப்படும். புதிய சாலைகள் ரூபாய் 50 இலட்சம் செலவில் 25 மனைபிரிவுகளுக்கு வசதியாக அமைப்பதற்கும் மாநகராட்சி திட்டமிட்டுள்ளது.

மசகளிப்பாளையம் மற்றும் சவுரிப்பாளையம் ஆகியவற்றை இனைப்பதற்கு சங்கனூர் பல்லம் மீது ரூபாய் 6.00 இலட்சம் செலவில் 1994-95ல் ஒரு பாலம் அமைக்கப்படும்.

விளையாட்டு மைதானங்கள்:

4. சாஸ்திரி மைதானத்தில், டென்னிஸ் விளையாட்டு மைதானம் மற்றும் பிற விளையாட்டுகளுக்கான மைதானங்கள் பார்வையாளர்கள் பார்ப்பதற்கு வசதியாக கேலரிகள், விளையாட்டு வீரர்களுக்கு தங்குவதற்கான விடுதிகள் ஆகியவை ரூபாய் 25 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

பூங்காக்கள்

5. காந்தி பூங்காவை ரூபாய் 15 இலட்சம் செலவில, நடைபாதைகள், விளக்குகள், மற்றும் செயற்கை நீர் ஊற்றுகள் அமைத்து அழகுபடுத்தப்படவுள்ளது. வ.உ.சி. பூங்காவில். பணிச்ருக்கு விளையாட்டுக்கான மைதானம், குழந்தைகள் விளையாடுவதற்கான இடம், விளையாட்டு பொருட்களுடன் ரூபாய் 15 இலட்சம் செலவில் அமைக்கப்படஉள்ளது. தமிழ்நாடு அரசு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மையத்தின் உதவியுடன் சுற்றுப்புறச் சூழல் கொள்கையை விளக்கும் வகையில் வ.ஊ.சி மைதானத்திற்கு தென்மேற்கான மூலையில் அமைக்கும்.

நடைபாதைகளை மேம்படுத்துதல்

6. முக்கியமான சாலைகளிலும், பாதசாரிகளுக்கான நடைபாதைகளிலும், கைதாங்கிகளும், நடைபாதை மேடைகளும் அமைப்பதற்காக ரூ.80 இலட்சம் செலவிடப்படும்.

கட்டடங்கள்

(1) கோளரங்ம். வ.ஊ.சி பூங்காவில் டாக்டர் நஞ்சப்பா

சாலைக்கு எதிராக ஒரு கோளரங்கம் ரூ.80 இலட்சம் செலவில் கட்டப்படும்.

2 பள்ளிக்கட்டடங்கள்

மாநகராட்சி தொடக்கப்பள்ளிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதலாக கட்டங்கள் கட்டுவதர்காகவும், பழுது பார்பதற்கும் ரூபாய் 130.00 இலட்சம் ஒதுக்கி உள்ளது. இதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.

3. மருந்தகங்கள் மற்றும் மகப்பேறு மையங்கள்:

மருந்தகங்கள், மகப்பேறு மையங்கள் மற்றும் மருத்துவமனைகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கும் ரூபாய் 15 இலட்சம் மாநகராட்சி செலவிடும்.

4. கல்யாண மண்டபம்

கல்யாண மண்டபம் தெலுங்கு பாளையம் மற்றும் காமராஜபுரம் ஆகிய இடங்களில் கல்யாண மண்டபங்கள் மற்றும் சமுகக் கூடங்கள் கட்டுவதற்கு ரூபாய் 10 இலட்சம் செலவில் பணிகள் தொடங்கப்படும்.

5. விலங்கு காட்சியகம்

வ.வு.சி. பூங்காவில் உள்ள வனவிலங்கு காட்சியத்தில் பறவைகள், விலங்குகள் தாராளமாக நடமாடும் வகையில் அவற்றின் இருப்பிடங்களை விரிவுபடுத்த ரூபாய் 18 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

6. தமிழ்நாடு நகர்புற வளர்ச்சித்திட்டத்தின் கீழும், உலக வங்கியின் நிதி உதவியுடனும் கீழ்கண்ட வேலைகள் தொடங்கப்படவுள்ளன.

1. குரு உணவு விடுதி அருகாமையில் ஒரு வணிக மையம், ரூபாய் 70 இலட்சம் செலவில்

2. கௌலி பிரவுன் சாலையில், ரூபாய் 60 இலட்சம் செலவில் ஒரு வணிக மையம்.

3. உக்கடம் லாரிபெட், போதனூர்சாலையில் கனரக வாகனங்கள் நிர்பதற்கான மையம் ரூபாய் 50 இலட்சம் செலவில் அமைக்கப்படும்,

4. மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள டி.கே. அங்காடி மற்றும் அண்ணா அங்காடியில் சில்லறை காய்கிற அங்காடி ஒன்று ரூபாய் 15 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

5. உலக தரத்திற்கு இணையான வ.உ.சி. பூங்காவில் ஒரு புதிய நீச்சல் குளம் ரூபாய் 90 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

8. குடிநீர் வசதி

தற்பொழுது 61,166 வீட்டுகுடிநீர் இணைப்புகளும், 1193 பொதுக்குழாய்களும் உள்ளன. மொத்தம் 580 கி.மீ. நீளம் குடிநீர் வழங்கும் குழாய்கள் மாநகராட்சியால் பராமரிக்கப்படுகிறது. குடிநீர்க்குழாய்கள் அமைக்கப்படாத பகுதிகளில் 10 லாரிகள் மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது. 1993-94ல் குடிநீர் விநியோகப் பணிகளுக்காக ரூ.110.27 இலட்சம் செலவு செய்யப்பட்டது. 1993-94ல் 5.40 கி.மீ. நீளத்திற்கு புதிய குடிநீர் குழாய்கள் ரூ.13.69 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டது. இதே ஆண்டில் 3.14 கி.மீ. நீளத்திற்கான முன்பே உள்ள குடிநீர் குழாய்களின் பராமரிப்பிற்காக மற்றும் பழுது பார்ப்பதற்காக ரூ.9. இலட்சம் செலவிடப்பட்டது.

1994-95 ஆம் ஆண்டு ரூ.132.27 இலட்சம் குடிநீர் குழாய்களின் அமைப்பிற்காக செலவிடுதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. குடிநீர் வழங்கப்படாத சுமார் 14 கி.மீ. நீளத்திற்கு புதிய குடிநீர் குழாய்களை அமைப்பதற்கும், மற்றும் பராமரிப்பதற்காகவும், இந்ததொகை செலவிடப்படும்.

9. வடிகால்

கோவை மாநகராட்சி மாதாளச் சாக்கடைகள் அமைக்கும் பணியை தமிழ்நாடு குடிநீர் வழங்கும் வாரியம் நிறைவேற்றி

1994 ஏப்ரல் 26]

வருகிறது. இத்திட்டம் 3 பகுதிகளைாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒன்று மற்றும் இரண்டாம் பகுதிகளில் வேலைகள் முடிக்கப்பட்டு பாதாளச் சாக்கடைகள் பயனுக்கு வந்துள்ளன. மூன்றாம் பகுதிப் பணிகள் நடந்து கொண்டு வருகின்றன. இது மே மாதம் இறுதிக்குள் முடிக்கப்பட்டு விடும், தமிழ்நாடு குடிநீர் வழங்கும் வாரியம் ரூ.9.75 இலட்சம் செலவில், மாநகராட்சியின் கூடுதல் பகுதிகளில் பாதாளச் சாக்கடைகள் அமைப்பதற்கு ஆய்வுப்பணி மேற்கொண்டுள்ளது. இது 1994-95 ஆம் ஆண்டில் முடிவுக்கு வரும்.

10. பாதாளச்சாக்கடை

பாதாளச்சாக்கடைகளை மூடுவதற்கும் மற்றும் அவைகளைப் பராமரிப்பதற்கும், 1993-94 ஆம் ஆண்டு ரூ 758.20 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இது வரை 14.38 கி.மீ. நீளத்திற்கு புதிய பாதாளச் சாக்கடைகள் ரூ.96.76 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. 18.97 கி.மீ. நீளத்திற்குள்ளான பாதாளச்சாக்கடைகளைப் பராமரிப்பதற்காக ரூ.64.74 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

1994-95ல் 100 கி.மீ. நீளத்திற்கு புதிய பாதாளச் சாக்கடைகளை அமைப்பதற்கும், பராமரிப்பதற்காகவும் ரூ.774.24 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

11. கல்வி:

வரும் ஆண்டுகளில் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கும், இதற்கான அடிப்படைவசதிகளான பெருக்குவதற்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. பள்ளிகளுக்கு மேஜை, நாற்காலிகள் போன்றவற்றை வாங்குவதற்காக 1994-95 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 100 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக சிறப்புத் தேர்வுகள் மற்றும் உடல் தகுதிக்கான சிறப்புத் தேர்வுகள்:

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பள்ளியில் பயிலும் மாணவர்களில், திறமையான மாணவர்களை தேர்ந்தெடுத்து ஊக்குவிப்பதற்கான சிறப்பு தேர்வுகள்நடத்தப்படும். திறமையாக மாணவர்களுக்கு அவர்களது திறமையை முழுவதும் நெறிப்படுத்துவதற்கு ஏதுவாக சிறப்பு பயிற்சி அளிக்கப்படும். அதே சமயத்தில் திறமையில் சற்று பின் தங்கிய மாணவர்களை முன்னேற்றுவதற்கும் சிறப்பு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. ரூபாய் 6 இலட்சம் இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்றுவிக்கும் திறனை மேம்படுத்த புதிய திட்டங்கள்:

பள்ளி ஆசிரியர்களுக்கு அவர்களது பயிற்றுவிக்கும் திறனை மேம்படுத்துவதற்கான சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்படும்.

சிறப்புப்பணிக்கான விருதுகள்:

சிறப்பான பள்ளிக்கூடம், சிறப்பு மாணவர், நன்கு பணியாற்றிய தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோருக்கு அவர்களை ஊக்குவிப்பதற்கும் உயர்ந்த தரங்களை அடைவதற்காகவும் சிறப்பு விருதுகள் வழங்குவதற்கு மாநகராட்சிகள் திட்டமிட்டுள்ளது.

பள்ளி சிறுவர்களுக்கான சுகாதார கல்வி

இந்த ஆண்டில் எல்லாப் பள்ளிகளிலும் சுகாதாரத் கல்வித்திட்டம் நவீன உத்திகளுடன் தொடங்கப்படும். மரபு வழி கல்விமுறைகள் அல்லாது நவீன உத்திகளில் இத்திட்டம் செயலாக்கப்படும், மாணவகளுடன், மாணவர்கள் கலந்து உரையாடல் மற்றும் சமூக நோக்கு ஆகியவற்றை இது உள்ளடக்கியதாக இருக்கும்.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 26]

12. பொது சுகாதாரத்துறை

திட கழிவு நிர்வாகம்

குப்பை கொட்டும் மைதானங்களை நவீன முறையில் நிர்வகிக்க இந்த ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ளது. குப்பைகளை மொத்தமாக அகற்றி அவைகளை ஓரிடத்தில் சேகரித்து புது முறையில் அவைகளை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. குப்பைகளை அகற்றும் மாட்டுவண்டிகளுக்குப் பதிலாக, மூன்று சக்கர சைக்கிள் வண்டிகளும், மற்றும் இயந்திர, வாகனங்களும் பயன்படுத்தப்படவுள்ளது. மாநகராட்சி குப்பைகளை அகற்றும் முதற்கட்டத்தில் கைவண்டிகளையும், மூன்று சக்கர, சைக்கிள் வண்டிகளையும் பயன்படுத்தி, இரண்டாவது கட்டத்தில் இவைகளை அகற்றுவதற்கு, இயந்திர வண்டிகளை பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளும்.

13. பொது சுகாதாரம்.

உணவகங்கள், தங்கும் இடங்கள், சுற்றுலா மையங்கள் ஆகிய இடங்களில் பொது சுகாதரத்தை கருத்தில் கொண்டு, உணவு சம்பந்தப்பட் வேலைகளில் ஈடுபட்டு உள்ளவர்களுக்கு, தனியாக சான்றிதழ் வழங்கவும், மாநகராட்சி நடவடிக்கை எடுத்துள்ளது. உணவகங்கள் போன்ற இடங்களில் குடிநீரை தூய்மையாக விநியோகிக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துவதற்குஉரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுச் சுகாதார ஆய்வுக் கூடம் நவீன முறையில் மாற்றி அமைக்கப்படும். பதினெட்டு மைதானங்களை மேம்படுத்துவதற்கான அடிப்படை வசதிகளை மாநகராட்சி மேற்கொள்ளும்.

நாய் வண்டிகள்

1) தெருவில் சுற்றும் நாய்களை படிப்பதற்காக இரண்டு ஊர்திகள் வாங்கப்பட உள்ளது.

2) பொது மக்களின் உபயோகத்திற்காக, ஒரு அமரர் ஊர்தி இந்த ஆண்டில் வாங்கப்படும்.

இந்திய மக்கள் தொகை திட்டம் 5:

இத்திட்டத்தின் கீழ் அறுவை அரங்கம் மேம்படுத்தப்படும் மற்றும் நோய்களை கணிப்பதற்கான புதிய தளவாடங்கள் வாங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

கணிப்பொறிகளை அமைப்பதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவுள்ளது. மாநகராட்சியின் மகப்பெறு இல்லங்களுக்காக நோயாளிகளை ஏற்றி செல்லும் ஊர்திகள் வாங்கப்படவுள்ளது. குழந்தை நோய்களுக்கான தனிப்பிரிவும் அவசரக்கால மகப்பேறு சிகிச்சைக்கான தனிப்பிரிவும் தொடங்கப்படும்.

வனவிலங்கு காட்சியகம்:

வனவிலங்கு காட்சியகம் விரிவுபடுத்துவதற்கும், பெண் புலிகள், முதலைகள் மற்றும் நீர்யானைகள் வாங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளன. பறவைகளுக்காக காட்சியகத்தில் தனி இடம் ஒதுக்கப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு IV

[207 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

வனத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு

உயிரின வாழ்க்கைச் சூழல் சமன்பாடு மிகவும் கவனத்துடன் பராமரிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இதனைப் பராமரிப்பதில் வனங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. சுற்றுச் சூழல் - மேம்பாடு குறித்து ரியோடி ஜெனிரோவில் 1992 ஜூன் திங்களில் நடைபெற்ற, ஐக்கிய நாடுகள் மாநாட்டின் 21-ஆம் நிகழ்ச்சி நிரல் குறிப்பில் (அத்தியாயம் 11) பின்வருமாறு வலியுறுத்தப் பட்டுள்ளது:

கட்டுப்பாடற்ற முறையில் காடுகள் அழிக்கப்படுதல், பெருகிவரும் மக்கள் தேவைகளின் காரணமாக காடுகளை ஏனைய வகைகளில் பயன்படுத்துவதற்குச் சலுகையளித்தல், வேளாண் விரிவாக்கப் பணிகள், சுற்றுச் சூழலுக்கு ஊறு விளைவிக்கும் நிருவாகம், (உதாரணமாக காட்டுத் தீயை கட்டுப்படுத்துதல் மற்றும் திருட்டுத் தனமாக வேட்டையாடுதலைத் தடுத்தல் ஆகியவற்றில் உள்ள குறைபாடுகள்), வணிக நோக்கில் அளவுக்கு மீறி மரங்கள் வெட்டுதல், பெருமளவில் கால்நடை மேய்ச்சலை அனுமதித்தல், கட்டுப்பாடற்ற முறையில் துளிர்களை நாசப்படுத்துதல், காற்று மாசுபடுவதால் ஏற்படும் ஊறுகள், ஏனைய பொருளாதாரப் பிரிவுகள் மேற்கொண்ட பொருளாதார ஊக்க உதவிகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் ஆகியவற்றாலும் உயிரின வாழ்க்கைச் சூழல்கள் பாதிக்கப் படுகின்றன. மண் சரிவு, வன உயிரின உய்விடங்களில் உள்ள அரிதான உயிரினங்களுக்கு ஏற்பட்டுள்ள அழிவு மற்றும் பாதிப்பு, நீர்வரத்துப் பகுதிகளுக்கு ஏற்படும் பாதிப்பு, வாழ்க்கைத் தரச் சீரழிவு, மேம்பாட்டுப் பணிகளுக்கான வாய்ப்புகளின் குறைவு ஆகிய வழிகளில் வனங்களுக்கு பல்வேறு இழப்பும், பாதிப்பும் ஏற்படுகின்றன. வனவள

ஆதாரங்களை உடனடியாகப் பாதுகாத்து பராமரிக்க வேண்டிய உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. பொருத்தமான இடங்களில் எல்லாம் காடுகள் மற்றும் தோட்டங்கள் அமைத்தலும், இதர தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்வதும் வன ஆதாரங்களைப் பாதுகாத்து பராமரிப்பதில் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த உதவும்.

1988- ஆம் ஆண்டு தேசிய வனக் கொள்கையின் அடிப்படை நோக்கங்களாவன:

1. உயிரின வாழ்க்கைச் சூழல் சமன்பாட்டைப் பாதுகாப்பது மற்றும் மீட்பது மூலம் சுற்றுச்சூழல் நிலைத் தன்மையை பாதுகாத்தல்.

2. இந்த மாநிலத்தின் குறிப்பிடத்தக்க பல்வேறு தாவர விலங்கினங்களையும் மரபு வழி ஆதாரங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள இயற்கை வனங்களை, அவற்றிலுள்ள தாவர வகைகள் உயிரினங்கள் ஆகியவற்றுடன் பாதுகாத்தல் மூலம் இயற்கை மரபுச் செல்வத்தைக் காத்தல்.

3. வறட்சி, வெள்ளங்கள் முதலியன ஏற்படுவதைக் குறைக்கவும் நீர்த் தேக்கங்களில் வண்டல் படிவதைத் தவிர்க்கவும் ஆறுகள், குளங்கள், நீர்த்தேக்கங்கள் ஆகியவற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் காடுகள் அழிக்கப் படுவதையும் மற்றும் மண் அரிப்பையும் தடுத்தல்.

4. கடற்கரைகளில் மணல் மேடிடுவதைத் தடுத்தல்.

5. அழிக்கப்பட்ட காடுகளிலும், தரம் குறைந்த காடுகளிலும் மற்றும் பயனற்ற நிலங்களிலும், சமூகக் காடு வளர்ப்புத் திட்டங்கள், அதிகப் பரப்பில் காடுகளை வளர்த்தல் முதலான திட்டங்கள் மூலம் வனப் பகுதியை கணிசமான அளவுக்கு அதிகரித்தல்.

6. கிராமப் பகுதி, பழங்குடி மக்களின் விறகு, தீவனம், சிறு காடுபடு பொருட்கள் மற்றும் சிறிய மரத் துண்டுகளின் தேவைகளை நிறைவு செய்தல்.

7. இன்றியமையா தேசிய தேவையை சமாளிக்க வனங்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல்.

8. வனப் பொருட்களைத் திறன்பட பயன்படுத்தவும், மரத்திற்குப் பதிலாக மாற்றுப் பொருட்களை அதிகமாகப் பயன்படுத்தவும் ஊக்குவித்தல்.

9. மேற்சொன்ன நோக்கங்களை எய்துவதற்கும் தற்போதுள்ள காடுகள் மீது ஏற்படுத்தப்படும் நெருக்கடிகளைக் குறைக்கவும் கிராமப் பகுதி மகளிரை ஈடுபடுத்திப் பெரிய அளவிலான மக்கள் இயக்கம் ஒன்றை உருவாக்குதல்.

10. வன நிருவாகத் திட்டத்தில் தேவையான வழிமுறைகள் சேர்த்துக் கொள்வதன் மூலம் வன நிர்வாகத்தில் வனவிலங்கு பாதுகாப்பின் அவசியம் குறித்த சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும். செயற்கையாகப் பிரித்து வைக்கப் பட்டுள்ள இடம் பெயர் வன விலங்குகளின் உட்பிரிவுகளிடையேயான மரபுத் தொடர்பை தொடர்ந்து பராமரிக்க பாதுகாக்கப் பட்ட பகுதிக்குள் சென்று வர ஊடுவழி அமைக்க தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டும்.

11. மரம் காடுபடு பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக அறிவியல் பூர்வமான வனவள ஆராய்ச்சியினை மேற்கொண்டு ஆராய்ச்சிக்கான அடிப்படைத் தளத்தை வலுப்படுத்தி முன்னுரிமை நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

12. வனம் சார்ந்த தொழில்கள் இயன்ற வரையில் அதன் பயனுக்குத் தேவையான மூலப் பொருட்களை காடுகளை வளர்த்து உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். இதற்காக,

அவை, மூலப் பொருட்களை உற்பத்தி செய்கின்ற காடுகளை வளர்ப்போருடன் நேரடித் தொடர்பு கொண்டு, அவர்களுக்குத் தேவையான கடன் உதவி உட்பட, இப்பொருள்கள் தொடர் தொழில் நுட்ப ஆலோசனை, அறுவடை செய்தல், ஓரிடத்திலிருந்து எடுத்துச் செல்லுதல் போன்ற உதவிகளைச் செய்ய வேண்டும். இதனால் தொழிற் சாலைகளுக்குச் சலுகை விலையில் வனப் பொருட்களை வழங்குவது நிறுத்தப்பட்டு தொழிற் சாலைகள் மாற்று மூலப் பொருட்களைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்க வேண்டும். மரத்துண்டுகள் மற்றும் மரம் சார்ந்த பொருட்கள் இறக்குமதி செய்வதை படிப்படியாகத் தாராளமாக்க வேண்டும்.

தமிழ்நாடு, பலதரப்பட்ட உயிரினங்களும், உயிர்ப் புவியியல், வேளாண் உயிரின வாழ்க்கைச் சூழல்களும் செறிந்து அமைந்துள்ள ஒரு மாநிலமாகும்.

காடுகள் வளர்க்கப்படும் பரப்பளவு

தமிழ்நாட்டின் பரப்பளவு மொத்தம் 1,30,057 சதுர கிலோ மீட்டர் ஆகும். இதில் 22,699 சதுர கிலோ மீட்டர் பரப்பு வனப்பகுதியாகும். இது, மொத்தப் பரப்பில் 17.45 சதவீதம் ஆகும். பொதுவாக நிலப்பரப்பில் வனப்பகுதி இருக்க வேண்டிய உரிய அளவான 33 சதவீதத்தைவிட இது குறைவாகும். சேமகாப்புக் காடுகளாக அறிவிக்கப் பட்டுள்ள பரப்பில், 18,838 சதுர கிலோ மீட்டர் மொத்தமுள்ள 17,000 வருவாய்க் கிராமங்களில், 3,070 கிராமங்கள் வனப் பகுதிகளை ஒட்டி அமைந்துள்ளன.

இவை நீங்கலாக, வனப்பகுதிக்கு வெளியில் அமைந்துள்ள சுமார் 3,09,000 எக்டேர் பரப்பு சமுதாய நிலங்களிலும் மரங்கள் வளர்க்கப் பட்டுள்ளன. இச்சமூகக் காடுகள், மொத்த நிலப்பூரப்பில் 2.3 விழுக்காடு ஆகும்.

1994 ஏப்ரல் 26]

அண்மைக் காலமாக, வனவளங்கள் பெருமளவிற்கு அழிக்கப்பட்டு வருவதால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை பெரும்பாலான மக்கள் உணர்ந்துள்ளனர். பெருகி வரும் மக்கட் தொகையின் மிக இன்றியமையாத தேவையையும், சமுதாயத்தின் உயரினப் பாதுகாப்புச் சூழலையும் கருத்தில் கொண்டு தரமான மர உற்பத்தி மற்றும் நிலைத்த மேம்பாட்டுக் கொள்கையின் அடிப்படையில் நிர்வகித்தலை உறுதி செய்யும் வகையில் இவ்வரசு வன மேம்பாட்டிற்கான பல்வேறு திட்டங்களைப் பெருமளவில் மேற்கொண்டு வருகிறது.

1987-ம் ஆண்டு மேற்கொண்ட வன நிலங்கள் குறித்த ஆய்வில், அடர்ந்த காடுகள் 26 சதவீதம் இருப்பதும், ஏனைய வன நிலங்களில் மரங்கள் (அடர்ந்து போதுமான அளவிற்கு) இல்லாதிருப்பதும் தெரிய வந்துள்ளது. கடந்த காலங்களில் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால், அழிந்த காட்டுப் பகுதிகளை மீண்டும் வளமுடைய காட்டுப் பகுதியாக மாற்றியதோடல்லாமல் காடுபடு பொருட்களை அறுவடை செய்ய முடிந்துள்ளது.

எனவே, அரசு இத்துறையின் கீழ் வகுத்துள்ள மற்றும் நிறைவேற்ற உள்ள திட்டங்கள் யாவும் வனப்பகுதிகளின் பரப்பு குறையாமலேயே, மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், வனப் பாதுகாப்பு நோக்கில் அமைந்தவையாகும்.

ஆண்டுத் திட்டம்:

நிதி ஒதுக்கீடு

இந்த அரசு, வன உற்பத்தி, பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டிற்காக 1991-92-ம் ஆண்டு ரூ.64.81 கோடியும், 1992-93-ல் ரூ.79.61 கோடியும், 1993-94-ஆம் ஆண்டில் ரூ.86.56 கோடியும் ஒதுக்கியுள்ளது. 1994-95-ம் ஆண்டில் பகுதி-2 புதிய திட்டங்களுக்கான ரூ.77.60 இலட்சம் உட்பட,

மொத்தம் ரூ.88.55 கோடி செலவில் திட்டங்களை நிறைவேற்ற அரசு கருதியுள்ளது.

வன வளத்திற்கான முதலீடு

1994-95-ம் ஆண்டில், பின்வருமாறு முதலீடுகள் செய்வதென்று உத்தேசிக்கப் பட்டுள்ளது.

தொடர் எண்.	திட்டம்	1994-95-ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு (ரூ.இலட்சத்தில்)
1.	வன மேம்பாடு	3940.76
2.	மோட்டார் வாகனங்கள்	89.31
3.	பணியாளரமைப்பு	3955.58
4.	பயணச் செலவுகள்	170.00
5.	சில்லறைச் செலவினம் உட்பட ஏனைய செலவுகள்	702.30
		8857.95

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திட்டப்பணிகள்:

சேமக்காப்பு காடுகளுக்குள்ளும், வெளியிலும் 1991-92 முதல் 1993-94 ஆம் ஆண்டு வரையில் மொத்தம் 1,44,000 எக்டேரில் காடு வளர்ப்பு திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டன. 1991-92-ஆம் ஆண்டில் இப்பரப்பளவு 42,080 எக்டேராக இருந்தது. 1993-94-ஆம் ஆண்டில் 51,460 எக்டேராக

1994 ஏப்ரல் 26]

அதிகரித்துள்ளது. 1994-95-ஆம் ஆண்டில் இப்பரப்பை 57,650 எக்டேராக உயர்த்த உத்தேசிக்கப் பட்டுள்ளது.

சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 3,09,000 எக்டேர் பரப்பில், மரங்கள் நடப்பட்டு வளர்க்கப்பட்டு வருகின்றன. சாலை ஓரங்கள், ரயில்பாதை ஓரங்கள், ஆற்றங்கரைகள், கால்வாய் கரைகள் ஆகிய இடங்களில் மொத்தம் 8900 கி.மீ. தொலைவிற்கு மரங்கள் நடப்பட்டுள்ளன.

காடு வளர்ப்பின் மூலம் கிடைக்கும் வருவாய்

1991-92-ஆம் ஆண்டில் 45.17 கோடி ரூபாய் வருவாய் கிடைத்தது. 1992-93-ஆம் ஆண்டு இவ்வருவாய் ரூ.48.56 கோடியாக உயர்ந்தது. 1993-94-ஆம் ஆண்டிற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ள வருவாய் ரூ.51.82 கோடி ஆகும். 1994-95-ஆம் ஆண்டில், 53.93 கோடி ரூபாய் வருமானம் எதிர்பார்க்கப் படுகிறது. சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ், வளர்ந்த மரங்களை விற்பனை செய்ததில் ரூ.25.46 கோடி கிடைத்தது. இவ்வருமானத்தில் 60 சதவீதம் உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கப்படுகின்றது.

சில முக்கிய வன ஆதாரங்களிலிருந்து கிடைத்த வருவாய்:

	உத்தேச வருவாய் 1994-95-ல் (ரூபாய் கோடியில்)
சந்தன மரம்	14.50
மரத்தடிகள்	1.42
மூலப் பொருட்கள் வழங்கல்	22.83
சிறு காடுபடு பொருட்கள் (புளி, கடுக்காய், சீயக்காய்)	1.22
பண்ணைக்காடு தோட்டங்கள் (திருப்பிக் கொடுப்பவை நீங்கலாக)	6.69

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மூங்கில், முந்திரி, மென்மரம் போன்ற தோட்ட மரங்கள்	3.70
மொத்தம்	50.36

1994-95-ம் ஆண்டில் முக்கியத்துவம் அளிக்கப்படும் திட்டங்கள்

வனத்தின் முக்கியத்துவத்தை மிக நீண்ட காலத்திற்கு முன்னரே உணர்ந்த தமிழ்நாடு அரசு, அவற்றைப் பாதுகாத்து மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை வகுத்தது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பின்வரும் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதென உத்தேசிக்கப் பட்டுள்ளது.

1. காப்பு காடு வளர்ப்பு
2. மீட்புக் காடுகள் வளர்ப்பு
3. உற்பத்திக் காடு வளர்ப்பு
4. சமுதாயக் காடு வளர்ப்பு
5. முன்னிலை காடு வளர்ப்பு.

1. காப்புக் காடுகள் வளர்ப்பு

மண்வளப் பாதுகாப்பு, காவிரி - வைகை நீர்ப்பிடிப்புப் பகுதிகளைச் சேர்ந்த நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றல், காப்புச் சூழலில் விலங்குகளை வளர்த்தல், வனவிலங்கு சரணாலயங்களில் வசதிகளை மேம்படுத்துதல், உயிரினங்களின் வாழ்க்கைச் சூழல் - காப்பு இடங்கள்(Biosphere Reserves) நவீன உயிரியல் பூங்காவை உருவாக்குதல், வேளாண் மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற திட்டங்களின் மூலம், வனப்பகுதிகளைக் காத்தல், மீண்டும் உருவாக்குதல், மேம்படுத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன. மொத்தத்தில், 1994-95-ஆம் ஆண்டில்ரூ.1218.50

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

1994 ஏப்ரல் 26]

இலட்ச செலவில், 15700 எக்டேர் பரப்பில் 32 திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளன.

2. மீட்புக்காடுகள் வளர்ப்பு

அந்தந்தப் பகுதியின் உயிரின வாழ்க்கைச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தும் வகையில், மரங்கள் அடர்ந்த வனப்பகுதியைப் போதுமான அளவு ஏற்படுத்துவதற்கானத் தொகுதி திட்டங்கள் மூலம் காடுகள் மீண்டும் உருவாக்கப் படுகின்றன. மாநிலநிதிகளைக் கொண்டு செயற்படுத்தப் படும் காடு வளர்ப்புத் திட்டங்களோடு, மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம், மருந்துச் செடிகளை வளர்த்தல், வான்வழி விதை தூவுதல் உள்ளிட்ட, அந்தந்தப் பகுதிகளுக்கான விறகு மரம், தீவனம், மற்றும் சிறுகாடுபடு பொருட்கள் உற்பத்தித் திட்டம் ஆகிய மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களும் செயற்படுத்தப் படுகின்றன. இத்திட்டங்கள், அழிந்துவிட்ட வனப்பகுதிகளில் மீண்டும் காடுகளை வளர்க்க உதவுகின்றன. இதற்காக, ரூ.1,108.48 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இவ்வகையில், 24,100 எக்டேர் பரப்பில், ஏழு திட்டங்களைச் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

3. உற்பத்திக் காடு வளர்ப்பு

மூலப்பொருட்கள், முக்கியமாக மரக்கூழ் தயாரிப்பதற்குரிய மரங்கள் மிலாறு, சந்தன மரம், சிறுகாடுபடு பொருட்கள் முதலியவற்றின் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தோடு, 11 திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. 1994-95-ஆம் ஆண்டில், ரூ.406.86 இலட்சம் செலவில், 3800 எக்டேர் பரப்பில், காடுகள் வளர்க்கக் கருதப் பட்டுள்ளது. இந்த உத்தேச முதலீட்டின் மூலம், மாநிலத்திற்கு, ஆண்டிற்கு, சுமார் 20 முதல் 25 கோடி ரூபாய் வருவாய் கிட்டும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

4. சமுதாயக் காடு வளர்ப்பு

தற்போதுள்ள 3.09 லட்சம் எக்டேர் தோட்டங்களை பராமரிப்பதுடன் ஆண்டுதோறும் 15000 எக்டேர் புதிய பகுதிகளில், சுவீடன் அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் நிதி உதவியுடன் சமூகக் காடுகள் திட்டம் செயல்படுத்தப் படுகிறது. 1994-95-ஆம் ஆண்டில், ரூ.25.42 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது.

பழங்குடியினரின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் சொத்துக்களை உருவாக்குவதற்கு ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் என்ற மற்றொரு திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், தற்போது, சுமார் 500 எக்டேர் பரப்பில் ஆண்டிற்கு ரூ.150 இலட்சத்திற்கும் குறையாத செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1994-95-ஆம் ஆண்டில் ரூ.155.37 இலட்சம் செலவில் இத்திட்டத்தைச் செயற்படுத்தக் கருதப் பட்டுள்ளது.

5. முன்னிலைக் காடுகள்

தரமான மரக்கன்றுகளின் உற்பத்தியை தீவிரப்படுத்தி, அதன் மூலம் வனச் செல்வங்களைப் பெருக்குவதற்காக அண்மைக்கால தொழில்நுட்ப உத்தியை மக்களிடையே பரப்ப வேண்டி, காடு வளர்ப்பு குறித்து ஆராய்ச்சி மற்றும் சோதனைத் திட்டங்கள் முனைப்புடன் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. பயிற்சி, ஆராய்ச்சி கல்வி, விரிவாக்கத் திட்டம் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சென்னைக்கு அருகிலுள்ள வண்டலூரில், மொத்தம் ரூ.50.00 கோடி மூலதனச் செலவில், மாநில வனப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைப்பதற்கான பெருந்திட்டம் ஒன்று வரையப் பட்டுள்ளது. ஆராய்ச்சிப் பணிகளுக்கும் தற்போதுள்ள பணியாளர்களுக்கும், ஐந்து ஆண்டுகால அளவில் ரூ.26.55 கோடி செலவாகும். ஆராய்ச்சி திட்டங்களை விரிவான அளவில் மேற்கொள்ள

1994 ஏப்ரல் 26]

இயலும் வகையில், இத்திட்டத்திற்காக, வெளிநாட்டு உதவிகள் கோரப்படும். இத்திட்டம் படிப்படியாக மேம்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரையில், கட்டுமான பணிகளுக்காக ரூ.84.00 இலட்சம் வழங்கப் பட்டுள்ளது. கட்டுமான பணிகளுக்காக, 1994-95-ம் ஆண்டில் சுமார் ரூ.10 இலட்சம் வழங்கவும் கருதப் பட்டுள்ளது. ஆராய்ச்சிப் பணிகளில் செய்யப்படும் முதலீடுகளின் பயனாக களப்பணிகளில் பயன்படுத்தப் படுவதற்கான தொழில்நுட்ப உத்திகள் கிடைக்கும். நம்மிடம் ஆராய்ச்சி மையங்களின் இணைப்புத் தொகுதி உள்ளது. தமிழ்நாடு வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உள்ள செலவினங்கள் தவிர, மாநிலம் முழுவதும் ரூ.131.00 கோடி செலவில் ஆராய்ச்சிப் பணிகள் நடைபெறுகின்றன.

கோயம்புத்தூர் வன ஆராய்ச்சிப் பிரிவு

காடு வளர்ப்புத் துறையில் புதிய புதிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அவற்றின் முடிவுகளைச் செயற்படுத்த வேண்டியது அவசியமாகிறது. கோயம்புத்தூரிலுள்ள காடு வளர்ப்பு ஆராய்ச்சிப் பிரிவு, உயரிய, தரம் வாய்ந்த பல்வேறு மரவகைகள் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, பல்வகை நிலப் பயன்பாட்டு முறையின் கீழ், பயிரின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக தரமான விதைகள் வழங்கி வருகிறது. செடிகளின் உற்பத்தி குறித்து பல்வேறு வகைத் தாவரங்களை (மரம், செடி, கொடிகள்) அவை தோன்றி வளர்ந்த இடத்திலே வளர்த்தல் பாதுகாப்பது மற்றும், வெளியிடத்திலே நட்டு வைத்து வளர்த்தல் ஆகியவை தொடர்பாக பயிர்களின் பல்வகை மரபினங்களின் ஆதாரங்கள் குறித்த பயிர்ப் பாதுகாப்பு நோய்ப் பூச்சிக் கட்டுப்பாடு, பசுந்தாள் உரவகைகளைப் பயன்படுத்தல், நாற்றங்கால்கள், நடவு உத்திகள் ஆகியவற்றின் தரம் நிலை நிறுத்தல் வாயிலாக, துறையும், உழவர்களும், பொது மக்களும் பயன் கொள்ளும் வகையில் ஆராய்ச்சி மேற்கொள்ளப் படுகிறது.

இந்த ஆராய்ச்சிப் பிரிவு உருவாக்கிய அதிக விளைச்சல்

தரும் மர வகைகளான புளியமரம், கடுக்காய், வேப்ப மரம், சவுக்கு மரம், யூகலிப்டஸ், தேக்கு முதலியவற்றை உழவர்களும், பொது மக்களும் பெருமளவில் பயன்படுத்தி வருகின்றனர். இந்த ஆராய்ச்சிப் பிரிவு, சவுக்கு மரத்திற்கான ஒட்டு விதைப் பண்ணை ஒன்றையும், சந்தனம் யூகலிப்டஸ் மரங்களுக்கான வேறொரு ஒட்டு விதைப் பண்ணையையும் துவக்கியுள்ளது.

இந்த ஆராய்ச்சிப் பிரிவு உயரளவு விளைச்சல் தரக்கூடிய அதாவது, ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 1000 முதல் 2000 கிலோ வரை பழம் தரக்கூடிய, 21 புளிய மரங்களையும், சராசரி விளைச்சல் அளவு 40 முதல் 50 கிலோவாக இருப்பதை, 400 முதல் 600 கிலோவுக்கும் அதிகமான விளைச்சல் தரக்கூடிய 27 கடுக்காய் வகைகளையும் அது தெரிந்தெடுத்துள்ளது.

சில மேம்பாட்டுத் திட்டங்கள்

திட்டப் பிரிவின் கீழ் செயற்படுத்தப் படும் சில மேம்பாட்டுத் திட்டங்களின் சிறப்புக் கூறுகள் வருமாறு:

1. கூழ்மரத் தோட்டங்கள்

மரக்கூழின் தேவை அதிகரித்துக் கொண்டே வருகிறது. காகிதம், ரேயான் போன்ற, மரக்கூழை அடிப்படையாகக் கொண்ட தொழிற் சாலைகளின் மூலப் பொருள் தேவைகளைச் சமாளிக்கும் வகையில், விரைவில் வளரக்கூடிய மரவகைகள் மிகவும் நெருக்கமாக நடப்படுகின்றன. கூழ் மரங்களின் தற்போதைய தேவை சுமார் 4.00 இலட்சம் டன்களாகும். 1993-94-ஆம் ஆண்டில், 2500 எக்டேர் பரப்பில் ரூ.199.49 இலட்சம் செலவில் மரங்கள் நடப்படும். 1994-95-ஆம் ஆண்டில், 2500 எக்டேர் பரப்பில் ரூ.205.37 இலட்சம் செலவில் மரங்கள் வளர்க்கக் கருதப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 26]

2. விறகு மரத் தோட்டங்கள்

மாநகரங்கள், நகரங்கள் ஆகியவற்றுக்கருகே அமைந்துள்ள வனப்பகுதிகளிலும், படுகை நிலங்களிலும், மக்களின் விறகுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், விறகுக்குப் பயன்படும் மரங்களை வளர்க்கும் நோக்கத்தோடு, 1993-94-ஆம் ஆண்டில் ரூ.229.49 இலட்சம் செலவில் 5319 எக்டேர், நிலப்பரப்பிலும் 10 கிலோ மீட்டர் தொலைவுக்கும் விறகு மரங்கள் நடப்பட்டன. 1994-95-ஆம் ஆண்டில் ரூ.232.54 இலட்சம் செலவில், 5,200 எக்டேர் பரப்பில், மரங்கள் நடக் கருதப்பட்டுள்ளது. இது, முழுக்க முழுக்க, கிராமப்புற மக்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பு அளிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு திட்டமாகும்.

3. தரம் குறைந்த காடுகளில் மீண்டும் காடுகளை வளர்த்தல்

சிறிய அளவிலான வெட்டு மரங்கள், விறகு, கால்நடைத் தீவனம், ஏனைய காடுபடு பொருட்கள் ஆகியவற்றின் தேவைகளைச் சமாளிக்கும் பொருட்டும், காடுகள் அழிக்கப்பட்டு விட்ட, சிறு குன்றுகள், தரம் குறைந்த காட்டு நிலங்கள் ஆகியவற்றில் மீண்டும் காடு வளர்க்க இத்திட்டம் வகை செய்கிறது. கிராமப்புற மக்களுக்கு வேளாண் பருவம் அல்லாத காலங்களில், இத்திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்பு கிடைக்கிறது. 1993-94-ஆம் ஆண்டில் ரூ.109.00 இலட்சம் செலவில் 6500 எக்டேர் பரப்பில் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டது. 1994-95-ஆம் ஆண்டில், ரூ.106 இலட்சம் செலவில் 6500 எக்டேர் பரப்பில், இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இதுவும் முழுக்க, முழுக்க கிராம மக்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பு அளிப்பதை நோக்கமாகக் கொண்ட திட்டமாகும்.

4. மென் மரக்காடுகள்

இத்திட்டத்தின் கீழ், தீக்குச்சி தயாரிப்புத் தொழிற் சாலைகளின் தேவைகளை நிறைவு செய்வதற்காக மென் மரங்கள் வளர்க்கப் படுகின்றன. பெரும்பாலான தீக்குச்சி தயாரிப்புத் தொழிற் சாலைகள், தங்களின் தேவைகளை, பிற மாநிலங்களிலிருந்தே பெறுகின்றன. மென்மரங்கள் வளர்ப்பதை அதிகரிக்கும் வகையில், 1993-94-ஆம் ஆண்டில், ரூ.4.20 இலட்சம் முதலீட்டில், 105 எக்டேர் பரப்பில், அவை வளர்க்கப்பட்டன. 1994-95-ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.4.20 இலட்சம் முதலீட்டில் 100 எக்டேர் பரப்பில், செயல்படுத்தப்படும்.

5. தேசிய தரிசுநில மேம்பாட்டு திட்டத்தின் கீழ் உயிரின வாழ்க்கைச் சூழல் மேம்பாடும், கால்நடைத் தீவனப் பயிர் வளர்ப்பும்

தரிசு நிலங்களிலும், தரம் குறைந்த காடுகளிலும் உயிரின வாழ்க்கைச் சூழலை மேம்படுத்தவும், கிராமங்களை அடுத்தமைந்துள்ள முகப்புக் காடுகளில் கால்நடைத் தீவனம், சிறு மரத்தடிகள், விறகு மரங்கள் ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்கவும் இத்திட்டம் செயற்படுத்தப் படுகிறது. 1993-94ஆம் ஆண்டில், 695 எக்டேர் பரப்பில் ரூ.20.00 இலட்சம் செலவில் தொகுப்புக் காடுகள் வளர்ப்பதற்கான திட்டம் செயல்படுத்தப்பட்டது. 1994-95-ஆம் ஆண்டில், ரூ.21.00 இலட்சம் செலவில் 700 எக்டேர் பரப்பில் இத்திட்டத்தைச் செயற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

6. தேக்குமரத் தோட்டங்கள்

மாநிலத்தில் மர வளத்தை பெருக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். குறைந்த அளவு மர உற்பத்தித் திறன்

1994 ஏப்ரல் 26]

கொண்டுள்ள வனப்பகுதிகள், மிகவும் மதிப்புமிக்க மரங்களை உற்பத்தி செய்யத்தக்க வனப்பகுதிகளாக மாற்றப்படுகின்றன. இது, உள்ளூர் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பையும் உருவாக்குகின்றது. 1993-94-ஆம் ஆண்டில், இத்திட்டம், ரூ.15.43 இலட்சம் செலவில் 560 எக்டேர் பரப்பில் செயல்படுத்தப் பட்டது. 1994-95-ஆம் ஆண்டில், ரூ.15.53 இலட்சம் செலவில் 560 எக்டேர் பரப்பில் இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

7. சிறு காடுபடு பொருட்கள்

இத்திட்டம் சிறுகாடுபடு பொருட்களான புளி, கடுக்காய், (Gallnut) சீயக்காய் மற்றும் ஏனைய வகைப்பட்ட சிறுகாடுபடு பொருட்களை உற்பத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டதாகும். இத்தகைய சிறுகாடுபடு பொருட்களைச் சேகரிப்பதன் மூலம் ஒருவர் நாளொன்றுக்கு சுமார் ரூ.50/- சம்பாதிக்கிறார். 1993-94-ஆம் ஆண்டில், அக்டோபர் முதல் மார்ச்சு வரையிலான பருவ காலத்தில் இத்தகைய வேலை வாய்ப்பின் மூலம், பழங்குடியினர், ஆதி திராவிட மகளிர் ஆகியோர் 30,000 பேர்கள் உட்பட மொத்தம் 40,000 உள்ளூர் ஏழை மக்கள் பயனடைந்தனர்.

1993-94-ஆம் ஆண்டில் சிறுகாடுபடு பொருட்கள், 16 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், 3 பழங்குடியினத் தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டன. துறையால் நிர்ணயிக்கப்பட்ட நியாய விலையில் இச்சங்கங்களுக்கு 10 சதவீதம் சலுகை அளிக்க, இச்சலுகையின் மூலம் ஏழைப் பழங்குடியினரும், ஆதி திராவிட மக்களும் பயன்பெற முடிகிறது. இச்சங்கங்கள், இத்தகைய சிறு காடுபடு பொருட்களைச் சேகரிக்க முன் வரவில்லையாயின், அப்பணி ஏலத்தில் விடப்படுகிறது.

1993-94-ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் ரூ.72.05 இலட்சம் செலவில், 930 எக்டேர் பரப்பிலும், 30 கிலோ மீட்டர் நீளத்திலும் காடுகள் வளர்க்கப் பட்டுள்ளன. 1994-95-ஆம் ஆண்டிலும், இத்திட்டம் ரூ.73.84 இலட்சம் செலவில், 930 எக்டேர் பரப்பில் செயல்படுத்தப்படும். 1993-94-ஆம் ஆண்டில் சுமார் ரூ.2.00 கோடி வருவாய் கிடைத்துள்ளது.

மத்திய அரசின் நிதியுதவியுடன் மாநில அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்

1993-94-ஆம் ஆண்டில், மத்திய அரசின் நிதியுதவியுடன் மாநில அரசும் (50:50 என்ற வீதத்தில் செலவை ஏற்கும்) ரூ.294.98 இலட்சம் செலவில், பின்வரும் திட்டங்களை, மாநில அரசு செயல்படுத்தியது.

தொடர் எண்.	திட்டம்	1993-94-ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு (ரூ.இலட்சத்தில்)
1.	ஊரக விறகு மரக்காடுகள்	211.99
2.	தார் சரணாலயம்	6.10 0.03
3.	கோடிக்கரை சரணாலய மேம்பாடு	0.01
4.	முதுமலை வனவிலங்கு சரணாலய மேம்பாடு	4.72
5.	கிண்டி, தேசீயப் பூங்கா மேம்பாடு	5.00
6.	ஆனைமலை வனவிலங்கு சரணாலய மேம்பாடு	*8.00*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 26]

7.	புலிகள் புகலிடம்	45.10
8.	விதையில்லா தாவரப் பெருக்க முறையில் முந்திரி சாகுபடியை மேம்படுத்துதல்	0.01
9.	கடலோர சதுப்புப் பகுதியில் மாங்குரோவ் காடுகளைப் பாதுகாத்தலும் மேம்படுத்துதலும்	0.01
10.	காட்டுத் தீயை நவீன முறையில் கட்டுப்படுத்தல்	0.05
11.	வனப் பாதுகாப்பிற்கான அடிப்படை வசதிகள்	13.96
		294.98

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் 1993-94-ஆம் ஆண்டு கீழே குறிப்பிட்டுள்ளபடி இருபது திட்டங்கள் ரூ.144.03 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டன.

தொடர் எண்.	திட்டம்	1993-94-ஆம் ஆண்டிற்கான மூலதனம் (ரூ.இலட்சத்தில்)
1.	பரவலாக்கப்பட்ட நாற்றங்கால் பண்ணைகள்	0.01
2.	புலிகள் புகலிடம்	51.58

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

3.	மாங்குரோ காடுகளை (கடலோர சதுப்புக் காடுகள்) பாதுகாத்தலும் நிர்வகித்தலும்	0.01
4.	வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் மேம்படுத்தல்	0.01
5.	நீலகிரி உயிரின வாழ்க்கைச் சூழலைப் பாதுகாத்தல்	0.01
6.	மன்னார் வளைகுடாவில் உயிரின வாழ்க்கைச் சூழல் பாதுகாப்பை ஏற்படுத்தல்.	0.01
7.	கரிக்கிளி பறவைகள் சரணாலயம் மேம்படுத்தல்	0.01
8.	வேட்டங்குடி பறவைகள் சரணாலயம் மேம்படுத்தல்	0.01
9.	பழவேற்காடு பறவைகள் சரணாலயம் மேம்படுத்தல்	2.20
10.	சாம்பல்நிற அணில்கள் சரணாலயம் மேம்படுத்தல்	0.01
11.	வான்வழி விதைத் தூவுதல்	50.00
12.	காடுபடு சிறு பொருள் மருந்துச் செடிகளை வளர்த்தல்	9.00
13.	மேம்பட்ட விதை சேகரிப்பு	4.63
14.	ஒருங்கிணைந்த தரிசுநில மேம்பாட்டுத் திட்டம் - நீர்வரத்துப் பகுதிகள் - பாலகோம்பை, புலிமான் கோம்பை, எத்தக்கோயில்	0.01
15.	ஆனைமலை, முதுமலை யானைகள் புகலிடம்	16.50

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1994 ஏப்ரல் 26]

16.	கல்வி உதவி மற்றும் திட்ட விளக்கவுரையாளர் நிதியுதவி	0.01
17.	முந்திரி வளர்ப்பு	0.01
18.	காடுகளைப் பாதுகாப்பதற்கான அடிப்படை வசதிகள்	5.00
19.	முதுமலை தேசீயப் பூங்கா மேம்பாடு	0.01
20.	நவீன முறை வன தீத்தடுப்பு நடவடிக்கைகள்	5.00
		144.03

புதிய திட்டங்கள்

1994-95-ஆம் ஆண்டு ரூ.77.60 இலட்சம் செலவில் பின்வரும் எட்டு புதிய (பகுதி2) திட்டங்களைச் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

தொடர் எண்.	திட்டம்	1994-95-ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு (ரூ.இலட்சத்தில்)
1.	சித்தேரி மலைப்பகுதிகளில் சந்தன மரபுவழித் தோட்டங்கள் உருவாக்குதல்	15.00
3.	மாநிலக் காடு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் வண்டலூர் (3-வது கட்டம்)	10.00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

3.	சமயம் சார்ந்த மரக்கன்றுகளை வளர்த்தலும் விநியோகித்தலும்	1.00
4.	வனச்செல்வங்களைப் பாதுகாத்தல், அடிப்படை வசதி, சாதனங்களுக்கு வகை செய்தல்	25.00
5.	வனப்பாதுகாப்பு - பாதுகாப்புப் பணியை ஒப்படைத்தல்	13.00
6.	சாலைத் தொடர்புகளும் கட்டிடங்களும்	10.00
7.	அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் நோய்க் கூறு ஆய்வுக் கூடத்தை ஏற்படுத்தல்	2.00
8.	அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் மருத்துவ மூலிகைத் தோட்டத்தை ஏற்படுத்தல்	1.00
	மொத்தம்	77.60

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மண்வளப் பாதுகாப்பு

வனப்பகுதிகளிலும், தனியார் நிலங்களிலும், வனத்துறையாலும், வேளாண்மைப் பொறியியல் துறையாலும் மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மண் அரிப்பைத் தடுப்பதற்கு வெவ்வேறு பரிகார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேட்டூர் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தையும், வைகை மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தையும் வனத்துறை செயல்படுத்தி

1994 ஏப்ரல் 26]

வருகிறது. 1994-95-ஆம் ஆண்டு சுமார் 1150 எக்டேர் பரப்பில் மொத்தம் ரூ. 142.00 இலட்சம் செலவில் இத்திட்டங்களைத் தொடர்ந்து மேற்கொள்ளக் கருதப்படுகிறது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

நீலகிரி மாவட்டம் அமைந்துள்ள மேற்கு மலைத் தொடர் பகுதியில் உயிரினக் குறுக்கீடுகள் காரணமாக பல்வேறு உயிரின வாழ்க்கைச் சூழல் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் உயிரின வாழ்க்கைச் சூழல் தரத்தை உயர்த்துவதற்கென்றே மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. காடு வளர்ப்பு, மண்வளப் பாதுகாப்புப் பொறியியல் பணிகள், மரபுவழி காப்பிடங்களை ஏற்படுத்துதல், பாதுகாப்பு மற்றும் உயிரின சூழல் விழிப்புணர்வு திட்டங்கள் ஆகியவை செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கு எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.1094.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

1992-93-ல் இத்திட்டம் ரூ.250 இலட்சம் செலவில் செயல்படுத்தப் பட்டது. 1993-94-ல் இத்திட்டம் ரூ.291 இலட்சம் மூலதனச் செலவுடன் 675 எக்டேர் பரப்பளவில் மேற்கொள்ளப் பட்டுள்ளது. 1994-95-லும் தொடர்ந்து, இத்திட்டம் ரூ.324.59 இலட்சம் மூலதனச் செலவில் 600 எக்டேர் பரப்பளவில் மேற்கொள்ளப்படும்.

மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 22.67 இலட்சம் எக்டேர் வனப்பகுதிகளில், 5,59,600 எக்டேர் வனப்பகுதி, மேற்கு மலைத் தொடர்களில் அமைந்துள்ளது. இப்பகுதியில் மிகப் பெருமளவில் உயிரினங்களும் செடி கொடி வகைகளும் காணப்படுகின்றன. மேற்கு மலைத் தொடர் மாவட்டங்களில் உயிரின வாழ்க்கைச் சூழல் நிலைமையினை மேம்படுத்த,

மண்வளப் பாதுகாப்பு, கற்றாழைகளைப் பயிரிடுதல், உயிரின வாழ்க்கைச் சூழல் மேம்பாட்டு திட்டங்கள் போன்ற திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. எட்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ.1067.00 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

1992-93-ல் இத்திட்டங்கள் ரூ.237.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப் பட்டன. 1993-94-ஆம் ஆண்டு, இத்திட்டங்கள் 2450 எக்டேர் பரப்பளவில் ரூ.236.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப் பட்டன. 1994-95-ம் ஆண்டு இத்திட்டங்களை ரூ.258.26 இலட்சம் செலவில் 2355 எக்டேர் பரப்பளவில் தொடர்ந்து மேற்கொள்ளக் கருதப் பட்டுள்ளது.

பழங்குடியினர் மேம்பாடு

நமது மாநிலத்தில் சுமார் 5.20 இலட்சம் பழங்குடியினர் வாழ்கின்றனர். இவர்களில் திருச்சி, விழுப்புரம் இராமசாமி படையாச்சியார், திருவண்ணாமலை சம்புவராயர், வட ஆற்காடு அம்பேத்கர், தருமபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களில் சுமார் 2.10 இலட்சம் பழங்குடியினர் வாழ்கின்றனர்.

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், காடு வளர்ப்பு, தற்போதுள்ள சாலைகளை பராமரித்து மேம்படுத்தல், பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல், மாணவர் இல்லங்கள் கட்டுதல் போன்ற பணிகள் பழங்குடியினரின் பொருளாதார நிலைமையினை மேம்படுத்துவதற்காகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திட்ட மற்றும் நிதி இலக்குகள் அவற்றை எட்டிய விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டிருக்கின்றன.

திட்ட இலக்கு பணிகள்	1992-93 ஆம் ஆண்டு கணக்குகள்	1993-94 ஆம் ஆண்டு கணக்குகள்	1994-95 ஆம் ஆண்டு இலக்கு
மரம் நடுதல்	351 எக்	371 எக்	371 எக்
சாலையோரத்தில் மரங்களை நடுதல்	45 கி.மீ.	45 கி.மீ.	45 கி.மீ.
தீவிரப் பராமரிப்புப் பணி	...	120 எக்	120 எக்
பழங்குடியினர் கிராமக் காடுகள்	5 மையங்கள்	5 மையங்கள்	5 மையங்கள்
நிதி இலக்கு (ரூபாய் இலட்சத்தில்)	129.51	158.18	158.24

சுமார் 1990 எக்டேர் பரப்புடைய நிலங்கள், பயிரிடுவதற்காக பழங்குடியினருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

வேலூர், தருமபுரி, திருப்பத்தூர், சேலம் ஆகிய வனக் கோட்டங்களில் பழங்குடியினர் கால்நடைகளை மேய்க்க கட்டணமின்றி அனுமதிக்கப் படுகின்றனர்.

சென்ற மூன்றாண்டுகளில் மேய்ச்சல் கட்டணம் மூலம் வசூலிக்கப்பட்ட தொகை வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

1991-92	19.50
1992-93	20.28
1993-94	21.09
1994-95 (எதிர்பார்க்கப் படுகிறது)	21.93

பழங்குடியினருக்கு உண்மையில் தேவைப்படும் அளவிற்கு மூங்கில், பிரம்பு மரத் துண்டுகள் போன்ற மூலப்பொருட்கள் சலுகை விலையில் எடுத்துச் செல்ல அனுமதிக்கப் படுகின்றனர். வீட்டுத் தேவைக்குரிய சிறு மரத்துண்டுகள், விறகு, ஏனைய காடுபடு பொருட்களை இலவசமாக எடுத்துச் செல்லவும் அவர்கள் அனுமதிக்கப் படுகின்றனர்.

நியாயமான விலையில் 10 சதவீதம் சலுகையில் பழங்குடியினர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் குத்தகைக்கு சிறு காடுபடு பொருட்கள் ஒதுக்கீடு செய்யப் படுகின்றன. (1994-95-ஆம் ஆண்டு சிறுகாடுபடு பொருட்களின் விற்பனை மூலம் ரூ.122.00 இலட்சம் வரவு எதிர்பார்க்கப் படுகிறது)

மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தன் கீழ், பழங்குடியினருக்கு, இத்துறை வீட்டு வசதியையும் செய்து கொடுத்துள்ளது. பழங்குடியினருக்காக இதுவரை 92 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

வனத்துறையிலுள்ள வெவ்வேறு பதவிகளுக்குத் தகுதி வாய்ந்த பழங்குடியினர், விதிகளைத் தளர்த்தியுங்கூட, நியமனம் செய்யப்படுகின்றனர். இதுவரையில், வனத்துறையில் 181 பழங்குடியினர் நியமனம் செய்யப் பட்டிருக்கின்றனர். அவர்களுக்குக் குடியிருப்பதற்கான வீடுகளும் வழங்கப்படுகின்றன.

திருப்பத்தூர், வேலூர், திருவண்ணாமலை, பொள்ளாச்சி ஆகிய வனக் கோட்டங்களில் 17 ஆரம்பப் பள்ளிகளையும், ஒரு உயர்நிலைப் பள்ளியையும், ஒரு மேல்நிலைப் பள்ளியையும் வனத்துறை நடத்தி வருகிறது. இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை (பையன்கள் 2990, பெண்கள் 1334) 4324 ஆகும். ஆசிரியர்களின் எண்ணிக்கை 149 ஆகும். 1989-90-ல் 37 சதவீதம் மாணவர்களும், 1990-91-ல்

1994 ஏப்ரல் 26]

19 சதவீதம் மாணவர்களும், 1991-92-ல் 68 சதவீதம் மாணவர்களும், 1992-93-ல் 63 சதவீதம் மாணவர்களும் தேர்ச்சிப் பெற்றனர். 1993-94-ல் இன்னும் அதிக சதவீதம் மாணவர்கள் தேர்ச்சிப் பெறுவர் என்று எதிர்பார்க்கப் படுகிறது. பழங்குடி மாணவர்களுக்காக வட ஆற்காடு அம்பேத்கர், திருவண்ணாமலை சம்புவராயர், மாவட்டங்களில் செயல்பட்டு வரும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு இரு மாணவர் இல்லங்களும், தொடக்கப் பள்ளிகளுக்கு 8 மாணவர் இல்லங்களும் இருக்கின்றன. அவற்றில் தங்கியிருக்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 750 ஆகும்.

வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்கள்

வனத்துறைக்கு கிடைக்கும் நிதி ஆதாரங்களின் பற்றாக்குறையை ஈடு செய்யும் வகையில், வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் நிதியுதவியைச் சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

1. சமூகக் காடு வளர்ப்புத் திட்டம்

சமுதாயக் காடு வளர்ப்புப் பணிகளை மும்முரமாக மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, ஸ்வீடன் நாட்டின் அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் நிதியுதவியுடன், சமூகக் காடு வளர்ப்புத் திட்டம் செயற்படுத்தப் பட்டு வருகின்றது. இதன் 1-ஆம் கட்டப்பணி 57 கோடி ரூபாய் செலவில் 1981-82 முதல் 1987-88 வரை செயற்படுத்தப் பட்டது.

2-ஆம் கட்டப்பணி, 85.40 கோடி ரூபாய் மூலதன ஒதுக்கீட்டுடன், 5 ஆண்டு காலத்திற்குப் பல துறை சம்பந்தப்பட்ட பணியாக 1988-89 முதல் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 1990-91 முதல் வளர்க்கப்பட்ட தோட்டங்களின் விவரம் வருமாறு:

ஆண்டு	சமுதாய நிலங்கள் (எக்டேரில்)	இடைபடுக் காடுகள் (எக்டேரில்)	நீள் வரிசைத் தோட்டம் (கி.மீ.)
1990-91	11521	2653	305
1991-92	10559	6807	...
1992-93	11042	7757	...

மேற்கூறிய மூன்றாண்டுக் காலத்தில், வேளாண்மைத் துறை, சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் ஒரு பகுதியான புன்செய் நில வேளாண் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ், பொது மக்களுக்கு 244.373 இலட்சம் மரக் கன்றுகளை வழங்கியுள்ளது.

1993-94 ஆம் ஆண்டில் மட்டும், 14250 எக்டேர் பரப்பில் மரக்கன்றுகளை நடும் வகையில், மொத்தம் 27.16 கோடி ரூபாய் செலவாயிற்று. 1994-95-ஆம் ஆண்டில் ஸ்வீடன் நாட்டின் அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் நிதியுதவி பெறும் சமூகக் காடு வளர்ப்புத் திட்டம் 11700 எக்டேர் பரப்பில், ரூ. 17.59 கோடி நிதியுதவியைக் கொண்டு, செயற்படுத்த கருதப் பட்டுள்ளது. 1995-96-ஆம் ஆண்டிலிருந்து அடுத்த ஐந்தாண்டுகளுக்கு, 60 கோடி ரூபாய் நிதி உதவியுடன் இத்திட்டத்தைச் செயற்படுத்த தமிழ்நாடு அரசு ஏற்பாடு செய்துள்ளது.

கடந்த மூன்றாண்டுகளில், சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் வளர்க்கப்பட்ட முதிர்ச்சி அடைந்த மரங்களிலிருந்து கிடைத்த வருமானம் பற்றிய விவரம் வருமாறு:

வருடம்	(ரூபாய் கோடியில்)
1991-92	8.84
1992-93	8.32
1993-94	8.30
மொத்தம்	25.46

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2. தமிழ்நாடு வேளாண் மேம்பாட்டுத் திட்டம்

உலக வங்கியின் நிதியுதவியுடன், தமிழ்நாடு வேளாண் மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு திட்டம், 42.20 கோடி ரூபாய் செலவில் 1990-91-ஆம் ஆண்டு முதல் 7 ஆண்டுகளுக்குச் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

தரமான விதை உற்பத்தி, மண்வளப் பாதுகாப்புப் பொறியியல் பணிகள், காடு வளர்ப்புப் பணிகள், ஆகியவை இத்திட்டத்தின் நோக்கங்களாகும். தருமபுரியில் ஒன்றும், திருச்சிராப்பள்ளியில் (முக்கொம்பு) ஒன்றுமாக வித்துகள் செயல்முறைப்படுத்தும் நவீன பிரிவுகள் இரண்டு உள்ளன. நீர்பிடிப்புப் பகுதிகளை வளமாக்குவதற்கென்று பெரிய குளம், திருச்சிராப்பள்ளி, கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி ஆகிய ஐந்து இடங்களில் மொத்தம் ஐந்து பிரிவுகள் செயற்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், பச்சைமலை, கல்ராயன் மலை, கொல்லிமலை ஆகிய இடங்களில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

1992-93-ஆம் ஆண்டில், 2540 எக்டேர் பரப்பில், ரூ. 321.96 இலட்சம் செலவில் காடு வளர்ப்புப் பணி மேற்கொள்ளப் பட்டது. 1993-94ஆம் ஆண்டில், 431.85 இலட்சம் ரூபாய் செலவில் சுமார் 3,530 எக்டேர் பரப்பில்

காடுகள் வளர்க்கப்பட்டன. 1994-95 ஆம் ஆண்டில் மொத்தம் 4.68 கோடி ரூபாய் செலவில், 6,550 எக்டேர் பரப்பில் காடு வளர்க்கக் கருதப் பட்டுள்ளது.

3. உயிரின வாழ்க்கைச் சூழல் மேம்பாட்டுத் திட்டம்

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தின் நாங்குநேரி- அம்பாசமுத்திரம் பகுதியில் உள்ள மேற்கு மலைத் தொடர் சரகங்களில், 817 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில், புலிகள் வளர்ப்பு காப்புத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. புலிகளையும் ஏனைய முதுகெலும்புள்ள உயிரினங்களையும், பதுங்கி வாழும் உயிரினங்களையும் பாதுகாப்பதையும், பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் ஏற்படும் நெருக்கடிகளை வேறு திசைக்குத் திருப்பி விடுவதற்கு, எரிசக்தி தரும் கூளங்களையும், வருவாயையும் தரவல்ல மாற்று இடங்களை மேம்படுத்தும் நோக்கம் கொண்டும் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்காக, இதுவரை, மொத்தம் 2.14 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட சமுதாயம் இதில் ஈடுபடுவதன் மூலமும், அவர்களது ஆதரவுடனும், ஒத்துழைப்புடனும் இத்திட்டத்தின் நோக்கங்கள் எய்தப் பெறவுள்ளன. கள அளவில், குறிப்பாகத் திட்டமிடுவதன் மூலமும், ஒருங்கிணைந்த பகுதி மேம்பாட்டின் மூலமும் இதனை எய்தக் கருதப்படுகிறது.

இந்நோக்கங்களை எய்துவதற்காக, இவ்வரசு தயாரித்த உயிரின வாழ்க்கைச் சூழல் மேம்பாட்டுத் திட்டத்திற்கு உலக வங்கி ஒப்புதலளித்துள்ளது. இத்திட்டத்திற்கான மொத்த செலவுத் தொகையான 7.53 கோடி ரூபாயை இவ்வரசுக்கு வழங்க வகை செய்யும் பொருட்டு 1993 டிசம்பரில் ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிடப்பட்டது. 1994-95-லிருந்து ஐந்தாண்டுகளுக்கு, இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு இத்தொகை செலவிடப்படும்.

1994 ஏப்ரல் 26]

உயிரின வாழ்க்கைச் சூழல் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 57 கிராமங்களை (ஒவ்வொரு கிராமத்திலும் 80 குடும்பங்கள் உள்ளன) ஒட்டியுள்ள காடுகளிலுள்ள 4,500 குடும்பங்கள், மாற்று வருமான வழியையும், வேலை வாய்ப்புகளையும் பெற்று பயனடையும். இதன் மூலம் 6,33,140 மனித உழைப்பு நாட்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கப்படும். இவற்றுடன், மண்வளப் பாதுகாப்பு, மரம் நடுதல், நீர்வரத்து மேம்பாடு, குடிநீர் வழங்கல், எரி பொருள் வசதிகள், வீட்டு வசதி, புனர் வாழ்வு போன்ற ஒருங்கிணைந்த பகுதி மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள கருதப்படுகிறது.

4. டானிடா உதவி பெறும் மூலிகைச் செடிகள் வளர்ப்புத் திட்டம்

இம்மாநிலத்தில், ஒதுக்கக் காடுகள் உள்ள பகுதிகளில், மூலிகைச் செடி வளர்ப்பை அதிகரிப்பதற்காக, 'டானிடா' நிறுவனம் வழங்கும் முழு நிதியுதவியுடன் கூடிய புதிய திட்டமொன்று 1993-94-ல் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், மூலிகைச் செடிகளைப் பாதுகாத்து வளர்ப்பதற்காக மொத்தம் 76.90 இலட்சம் ரூபாய் செலவில் 1650 எக்டேர் பரப்பில் 11 மையங்கள் (ஒவ்வொன்றும் 150 எக்டேர்) அமைக்க கருதப்படுகிறது. இந்த 11 மையங்களும் ஆனைமலை, குற்றாலம், அழகர்கோயில், கோடிக்கரை, பேச்சிப்பாறை, முண்டந்துறை, தண்ணிப்பாறை, கோடைக்கானல், கொல்லிமலை, மரக்காணம், சிங்காரப்பேட்டை ஆகிய பகுதிகளில் அமைக்கப்படும்.

இத்திட்டம், மலைவாழ் பழங்குடியினருக்கு வேலை வாய்ப்பளிக்கவும், மூலிகை மருந்து தயாரிப்பு தொழிற்சாலைகள் அமைக்கவும், மூலிகைகளிலிருந்தும், மருந்துச் செடிகளிலிருந்தும் மருந்துகள் தயாரித்து ஏற்றுமதி செய்வதை நோக்கமாகக் கொண்ட தொழில் தொடங்கவும்

பயன்படும். இதேபோன்று, அரசு சாரா அமைப்புகளுக்கு நிதியுதவி அளிப்பதன் மூலம், காப்பு வனப்பகுதிகள் அல்லாத பகுதிகளில், மருந்து மூலிகை மையங்கள் அமைக்கப்படும்.

இத்திடம், மருந்துச் செடி பாதுகாப்பை அதிகரிப்பதோடு மட்டுமின்றி, நமது நாட்டு பாரம்பரிய மூலிகை மருந்தின் முக்கியத்துவத்தை அறியவும் உதவியாகவுள்ளது. மருந்துச் செடி பாதுகாப்பு குறித்த இத்திட்டம், பழைய மருத்துவ முறைகளுக்குப் புத்துயிர் அளிப்பதற்கான அமைப்பிடமிருந்து பெறும் நிதியுதவியுடன் செயற்படுத்தப் படுகிறது.

மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்ட உலக வங்கியின் நிதியுதவி கோரும் திட்டங்கள் / புதிய திட்டப் பணிகள்

அ) தஞ்சாவூர், நாகப்பட்டினம் - காயிதே மில்லத் மாவட்டங்களில் கால்வாய் மற்றும் ஆற்றின் ஓரங்களில் வனத்துறை தேக்கு மற்றும் சிசு மரங்களை வளர்த்திருந்தது. அண்மையில் வீசிய புயல் மற்றும் வெள்ளத்தினால் பெரும் எண்ணிக்கையில் மரங்கள் வேருடன் சாய்ந்து விட்டன. மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணையின்படி இந்த இடங்களில் மீண்டும் மரங்கள் வளர்த்திட ஒரு திட்டம் வரையப்பட்டுள்ளது. தஞ்சாவூர், நாகப்பட்டினம் - காயிதே மில்லத் மாவட்டங்களில் 5 ஆண்டுகால அளவில், தீவிரமாக மரம் வளர்ப்பதற்கு ரூ.281.18 இலட்சம் நிதி ஒதுக்கீட்டுடன் ஒருங்கிணைந்த காடு வளர்ப்புத் திட்டச் செயற்குறிப்பு மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

ஆ) முனைப்பான நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில் வனப்பாதுகாப்பு தொடர்பான ஏனைய புதிய முறைகளைக் கொண்டு வரவும், சதுப்புநிலக் காடுகளைப் பாதுகாக்கவும், தகவல் தொடர்பை

மேம்படுத்தவும், சட்ட விரோதமாக மரங்கள் வெட்டப்படுவதைத் தடுக்கும் நோக்கத்துடனும், உலக வங்கியிடம் அல்லது நன்கொடை வழங்கும் ஏனைய முகவரமைப்புகளிடம் நிதியுதவி பெற, ரூ.300.00 கோடி செலவில், தமிழ்நாட்டிலுள்ள காடுகளில் உயிரின வாழ்க்கைச் சூழலைப் பாதுகாக்கும் முக்கியத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

இத்திட்டம், உலக வங்கியின் ஆய்வுக் குழு அளித்துள்ள கருத்துரைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. இத்திட்டம், மலைப் பகுதிகளைச் சுற்றியுள்ள சுமார் 800 கிராமங்களில் வசிக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவுவதோடு, 1.80 லட்சம் எக்டேர் பரப்புள்ள வனப்பகுதியை உருவாக்கும். இதில் 1.20 லட்சம் எக்டேர் தரம் குறைந்த காடு, மற்றும் 0.40 லட்சம் எக்டேர் மேல் மண் மற்றும் வளம் அரிக்கப்பட்ட நிலம் அடங்கும். இத்திட்டம், சுற்றுச்சூழலை மேம்படுத்துவதுடன் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு, கணிசமான வேலை வாய்ப்பையும் உருவாக்கும்.

இயற்கை வளத்தைப் பேணிப் பாதுகாத்தல் - வனவிலங்குகள் உய்விடங்களின் நிருவாகம்

தமிழ்நாட்டில், வனவிலங்குகளின் உய்விடமாக பெரிய அளவில் அமைந்துள்ள புகலரண்கள், தேசீயப் பூங்காக்கள், புலிகள் காப்பு வனம் ஆகியவை தமிழகத்திற்குப் பெருமை சேர்ப்பவையாகும். பலதரப்பட்ட தட்ப - வெப்ப நிலைகளையும், பல்வேறு வகையான காடுகளையும் கொண்டுள்ளதால், இந்தியாவைச் சேர்ந்த பெரும்பாலான முக்கிய வகையான பாலூட்டிகள், ஊர்வன, பறவைகள் ஆகியவை இங்கு வாழ்கின்றன.

ஒரு பகுதி, போதிய அளவு வாழ்க்கைச் சூழல், தாவர இயல், உயிரியல், மண்ணியல், முக்கியத்துவம் கொண்ட பகுதியாக இருப்பின், அப்பகுதிகளில் வனவிலங்குகளையும், அவற்றின் சுற்றுச் சூழலையும் பாதுகாத்து, இனம் பெருக்கி, மேம்படுத்தும் பொருட்டு, அப்பகுதி, 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் 18(1) ஆம் பிரிவின் கீழ், சரணாலயப் பகுதியாக அறிவிக்கப்பட்டு வருகின்றது.

இச்சட்டத்தின் 37 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவிப்பானது, வனத்துறைக்கு அப்பகுதி மீதான உரிமையை அளிப்பதில்லை. இது, எந்த ஒரு பகுதியையும் குறிப்பிட்ட கால அளவிற்கு, வேட்டையாடக் கூடாது என்று அறிவிக்கக் கூடியது. 1972-ஆம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம் மற்றும் 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு வனவிலங்கு (பாதுகாப்பு) விதிகள் நடைமுறைப்படுத்துவதின் மூலம் நல்ல பயனை அளித்துள்ளன.

2541 யானைகள், 95 புலிகள், 215 சிங்கவால் குரங்குகள், 119 சிறுத்தைகள், 400 நீலகிரியைச் சேர்ந்த குரங்குகள், 1500 காட்டுப் பன்றிகள் மற்றும் ஏனைய வகையைச் சேர்ந்த வனவிலங்குகள் ஆகியவை இருக்கின்றன என்று இம்மாநிலத்தில் அண்மைக் காலத்தில் எடுக்கப்பட்ட விலங்குகள் குறித்த புள்ளிவிவரம் கூறுகிறது.

வனத்துறைக்குச் சொந்தமாக, வண்டலூர், கிண்டி, வேலூர் அருகே அமிர்தி, சேலம் அருகே குரும்பபட்டி, ஆகிய இடங்களில் நான்கு விலங்கு காட்சியகங்கள் இருக்கின்றன. தஞ்சாவூர், ஈரோடு, ஏற்காடு, கோயம்புத்தூர், குன்னூர், ஒகேனக்கல் ஆகிய இடங்களில் தனியார் விலங்கு காட்சியகங்கள் உள்ளன.

இம்மாநிலத்தில், முதுமலை (10323.69 எக்டேர்), முக்குருத்தி (7846 எக்டேர்), ஆனைமலை (11710.53 எக்டேர்), கிண்டி (282 எக்டேர்), மன்னார் வளைகுடா (21 தீவுகள், 623.12

எக்டேர்) ஆகிய இடங்களில் ஐந்து தேசிய பூங்காக்கள் இருக்கின்றன.

முதுமலை (21776.31 எக்டேர்), ஆனைமலை (84149 எக்டேர்), களக்காடு (22358 எக்டேர்), முண்டந்துறை (56738 எக்டேர்), கோடிக்கரை (1726 எக்டேர்), திருவில்லிபுத்தூர் (48520.22 எக்டேர்), வள்ளநாடு (1641.21 எக்டேர்), ஆகிய இடங்களில் ஏழு வன விலங்கு சரணாலயங்கள் உள்ளன.

வேடந்தாங்கல் (30 எக்டேர்), வேட்டங்குடி (30 எக்டேர்), கரிக்கிளி (61.2 எக்டேர்), பழவேற்காடு (15367 எக்டேர்), காஞ்சிரன் குளம் (104.21 எக்டேர்), சித்திரங்குடி (47.43 எக்டேர்), உதயமார்த்தாண்டபுரம் (45.28 எக்டேர்), வடுவூர் (128.10 எக்டேர்) ஆகிய இடங்களில் எட்டு பறவைகள் சரணாலயங்கள் இருக்கின்றன.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் புதிய சரணாலயங்கள் அமைக்கக் கருதப்பட்டுள்ளது.

1. ஈரோடு கோட்டத்திலும், பெரியார், சத்தியமங்கலம் கோட்டத்திலும், பவானிசாகர் வெளிமான்(Black Buck) புகலிடம்.

2. தென் ஆற்காடு மாவட்டத்தில் பிச்சாவரத்தில் மாங்குரோவ் சரணாலயம்.

3. தருமபுரி மாவட்டத்தில் காவிரி வனவிலங்கு சரணாலயம்.

4. நாகப்பட்டினத்தில் கோடிக்கரைப் பகுதி.

5. திருச்சியில் காரவெட்டி பறவைகள் சரணாலயம்.

6. திருநெல்வேலி மாவட்டத்தில் கூத்தங்குளம் பறவைகள் சரணாலயம்.

7. கன்னியாகுமரி மாவட்டத்தில் சுசீந்திரன்குளம்

பறவைகள் புகலிடம்.

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், கொடைக்கானல் வனவிலங்கு சரணாலயம், மன்னவனூரில் தேசீயப் பூங்கா ஆகியவற்றை அமைப்பதாக அறிவித்துள்ளார்கள். மேற்சொன்னவற்றை அமைப்பது பற்றி கவனமாக ஆய்வு செய்து, அமைக்கக் கருதப்பட்டுள்ள கொடைக்கானல் வனவிலங்கு சரணாலயம், மன்னவனூர் தேசீயப் பூங்கா மற்றும் கொடைக்கானல் வனவிலங்கு காட்சியகம் ஆகியவற்றை விரைவில் அமைப்பதற்குரிய செயல் திட்டங்கள் பற்றி அறிவுரை வழங்க, திரு.பி. விஜயராகவன், இ.ஆ.ப. (ஓய்வு பெற்றவர்) அவர்களின் தலைமையில் குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

வண்டலூர், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா

வண்டலூரிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா 510 எக்டேர் பரப்பைக் கொண்டுள்ளது. இதனை ஓர் நவீன உயிரியல் பூங்காவாக அமைக்கும் பணி ரூ.7.3 கோடி மதிப்பீட்டுச் செலவில் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தென்கிழக்கு ஆசியாவிலேயே அமைந்துள்ள ஓர் மிகப் பெரிய பூங்காவாகும். இதில், உள்நாட்டு விலங்குகளும், அயல்நாட்டு விலங்கு வகைகளும் உள்ளன. இப்பூங்காவில், மொத்தம் 1803 வன விலங்குகள், பறவைகள், ஊர்வன இருக்கின்றன.

சிங்கங்களும், மான்களும் உலவித் திரியும்படி அமைந்துள்ள திறந்த வெளி பூங்கா (Lion Safari Park) உள்ளே சென்று காணக்கூடிய பறவைகள் கூடாரம், மற்றும் இருட்டில் திரியும் விலங்குளின் கூடுகள், வளைகள், போன்றவை இந்த உயிரியல் பூங்காவின் சிறப்பு அம்சங்களாகும்.

1994 ஏப்ரல் 26]

யானைப் பாதுகாப்புத் திட்டம்

ஆசிய யானைகளைப் பாதுகாப்பதற்காக 1990-91ஆம் ஆண்டிலிருந்து யானைப் பாதுகாப்புத் திட்டம் என்ற ஒரு திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக 1993-94 ஆம் ஆண்டில் ரூ.16.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இது மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டமாகும். இதுவரையில் இத்திட்டத்திற்கு மத்திய அரசு, ரூ.25.60 இலட்சம் ஒப்பளித்துள்ளது.

தேசீய கடல் பூங்கா — மன்னார் வளைகுடா, உயிரின இயற்கைச் சூழல் பாதுகாப்பு

உயிரின வாழ்க்கைச் சூழல், தாவர விலங்கின சேர்க்கைக் காரணமாக வனவிலங்குகள் - சுற்றுச் சூழல் ஆகியவற்றைப் பாதுகாப்பதன் அவசியத்தை உணர்ந்து, மன்னார் வளைகுடாவில் 21 தீவுகள் அடங்கிய பகுதியும், தீவைச் சுற்றி 5 கி.மீ. பகுதியும், தேசீய கடல் பூங்காவாக அறிவிக்கப் பட்டுள்ளன. இத்தீவுகளும், அதைச் சுற்றியுள்ள நீர்ப் பரப்புகளும், அவற்றின் தனித்தன்மை மற்றும் பல்வகை தாவர விலங்கினம் வகை காரணமாகவும், அவற்றின் உறைவிடம் காரணமாகவும் உயிரியல் அறிஞர்களுக்கு சொர்க்க பூமியாக அமைந்துள்ளது. இங்கே பவழப் பாறைகள், சதுப்புநிலக் காடுகள், பாறை - மணல் நிறைந்த கடற்கரைகள், கடற்படுகைகள் ஆகியவை உள்ளன. இத்திட்டம், இவ்வரசு தயாரித்த செயல்முறை அடிப்படையில் மத்திய அரசின் உதவியுடன் செயற்படுத்தப் பட்டு வருகிறது. ரூ.7.50 இலட்சம் இத்திட்டத்திற்காக செலவிடப் பட்டுள்ளது.

நீலகிரி இயற்கைச் சூழல் பாதுகாப்பு

வளமையான உயிரியல் மாறுபாடு மரபைப் பாதுகாக்கும் தற்போதைய அணுகுமுறையின் ஒரு பகுதியே இயற்கைச் சூழல்

பாதுகாப்புத் திட்டமாகும். நீலகிரி இயற்கைச் சூழல் பாதுகாப்புத் திட்டம், தென் மாநிலங்கள் மூன்றின் வனப்பகுதியான ஒட்டுமொத்த 5520 சதுர கிலோ மீட்டரில் இம்மாநிலத்தின் 2538 சதுர கி.மீ. காப்பு வனப்பகுதியை உள்ளடக்குகிறது.

1992-93 ஆம் ஆண்டில், ரூ.12.87 இலட்சம் செலவிடப்பட்டது. 1993-94-ல் ரூ.22.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1994-95-லும் தொடரும்.

1993-94 ஆம் ஆண்டில் வனவிலங்கு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், தற்போதுள்ள மத்திய அரசு பொறுப்பேற்கும், திட்டங்கள் பின்வருமாறு:

திட்டம்	1993-94 (ரூபாய் இலட்சத்தில்)
1. கிண்டி தேசீய பூங்கா	5.00
2. பழவேற்காடு பறவைகள் சரணாலயம்	2.20
3. கோடிக்கரை வனவிலங்குகள் சரணாலயம்	*0.01*
4. வேட்டங்குடிபறவைகள் சரணாலயம்	0.01
5. இந்திராகாந்தி வனவிலங்குகள் சரணாலயம்	8.00
6. முதுமலை தேசீய பூங்கா	0.01
7. கரிக்கிளி பறவைகள் சரணாலயம்	0.01
8. சாம்பல்நிற அணில் சரணாலயம்	0.01
9. முதுமலை வனவிலங்குகள் சரணாலயம்	4.72
10. முக்குருத்தி வனவிலங்குகள் சரணாலயம்	6.10
11. வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம்	0.01
12. முத்துப்பேட்டை சதுப்புநிலக் காடுகள்	0.01
13. யானைகள் பாதுகாப்புத் திட்டம்	16.50

1994 ஏப்ரல் 26]

14. புலிகள் பாதுகாப்புத் திட்டம் 51.58

15. மன்னார் வளைகுடா இயற்கைச் சூழல் பாதுகாப்பு 0.01

இருபது அம்சத் திட்டம்

சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் மற்றும் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு மக்களைத் தீவிரமாக ஈடுபடுத்தி மரங்களையும், காடுகளையும் பெருமளவு வளர்ப்பது இருபது அம்சத் திட்டத்தின் கீழ் வரும் 16-வது அம்சமாகும்.

தமிழ்நாடு வனத்துறை, தீவிரமாக செயற்படுத்தியமையால், அதன் இலக்கை அடைய முடிந்தது. இத்திட்டத்தின் சாதனை பின்வருமாறு:

	1991-92		1992-93		1993-94	
	இலக்கு	சாதனை	இலக்கு	சாதனை	இலக்கு	சாதனை
16(அ) விநியோகிக்கப் பட்ட மரக் கன்றுகள் (இலட்சத்தில்)	800	1013.84	875	1037.34	875	1026.07
16 (ஆ) காடு வளர்ப்பு திட்டத்தின் கீழ் பணி மேற்கொள்ளப் பட்ட நிலப்பகுதி (எக்டேரில்)	54000	68144	65000	113553.10	65000	77381.81
						(1994-ஆம் ஆண்டு பிப்ரவரி வரை)

1994-95-ஆம் ஆண்டில், பின்வரும் இலக்கு வரையறுக்கப் பட்டுள்ளது;

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

16(அ) மரக்கன்றுகளை விநியோகித்தல் மற்றும் நடுதல்	875 இலட்சம்
16(ஆ) நிலப்பகுதியின் அளவு	65,000 எக்டேர்

வனப்பகுதிகளில் கனிமவளத்தை வெட்டியெடுக்கும் பணிகள்

வனப்பகுதிகளில் கல் வெட்டி எடுத்தல், கனிமவளத்தை வெட்டியெடுக்கும் பணி ஆகியவை 1980 ஆம் ஆண்டு வன (பாதுகாப்பு) சட்டத்தின் விதித்துறைகளின் கீழ் வருகிறது. இதற்கு மத்திய அரசின் அனுமதி பெறுவது அவசியமாகும். கல் வெட்டி எடுப்பதற்காக, தகுதியான கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டுமே நிலத்தை ஒதுக்க அல்லது ஏலத்தில் விடுவதற்கு கொள்கை முடிவு எடுக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான சங்கங்களில் ஏழை ஆதிதிராவிடத் தொழிலாளர்களே உள்ளனர்.

தமிழ்நாட்டில் ஊனமாஞ்சேரி காப்பு வனங்களில் மொத்தம் 48 கல் வெட்டி எடுக்கும் இடங்கள் உள்ளன. மேற்சொன்ன கல் வெட்டி எடுக்கும் இடங்கள் 37.36 எக்டேர் பரப்பில் 33 தாம்பரத்திலும், 15 ஊனமாஞ்சேரியிலும் உள்ளன. இவை சென்னை மாநகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள இடங்களில் கட்டிடங்கள் கட்டுவதற்கும், சாலைகள் அமைப்பதற்கும், பல்வேறு துறைகளின் ஏனைய நோக்கத்திற்காகவும், அவற்றின் தேவையை நிறைவு செய்கின்றன. கல் வெட்டி எடுக்கும் அத்தகைய இடங்களில், 487 பேருக்கு, நேரடியாக வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதில் 132 பெண்கள் உள்பட பெரும்பான்மையோர் ஆதிதிராவிடர்களாவர்.

கல் வெட்டி எடுக்கும் 13 இடங்களின் மூலம் ரூ.17.2 இலட்சம் வருவாய் வரப்பெற்றது. மேலும் 1994-95-ல் ரூ.59.00 இலட்சம் வருவாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

1994 ஏப்ரல் 26]

''டாமின்'' (Tamin) நிறுவனத்திற்கு சேலத்திலும் வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டத்திலும் விலை மதிப்பு மிக்க கிரானைட் கல் வெட்டி எடுக்கும் இடம் ஒதுக்கப் பட்டுள்து. மேலும் அந்நிறுவனம் மூலம் அந்நிய செலாவணி கிடைக்க வகை செய்வதுடன் ஏழை பழங்குடியினர் மற்றும் உள்ளூர் மக்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கப் பெறுகிறது.

வனப்பாதுகாப்பு நடவடிக்கைகள்

வனத்துறை குற்றப்புலனாய்வுப் பிரிவு

வனத்துறை தொடர்பான முக்கியமான குற்றங்களைப் புலனாய்வு செய்யவும், வனச்செல்வங்களைக் கள்ளத்தனமாக கடத்துவதைத் தடுப்பதற்கும், 1983-84 ஆம் ஆண்டில் வனத்துறை குற்றப்புலனாய்வுப் பிரிவு அமைக்கப்பட்டது. இந்தக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணியாளர் எண்ணிக்கையில் ஒரு காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரலும், இரண்டு காவல் துறை கண்காணிப்பாளர்களும், 142 பிற பணியாளர்களும் அடங்குவர். 1993 ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையில், 408.03 இலட்சம் ரூபாய் மதிப்புடைய வனப்பொருட்கள் தொடர்புடைய 292 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் ரூ.385.12 இலட்சம் மதிப்புடைய சந்தனக் கட்டைகள், ரூ.0.10 இலட்சம் மதிப்புடைய பாம்புத் தோல்கள், ரூ.22.81 இலட்சம் மதிப்புடைய ஏனைய வனப்பொருட்கள் ஆகியவையும் அடங்கும். இப்பிரிவு, ஒவ்வொரு இனத்திலும், ரூ.5.00 இலட்சத்திற்கும் குறைவான மதிப்புடைய வனப்பொருட்கள் சம்பந்தப்பட்ட 185 குற்றங்களை, அவற்றிற்காக மேலும் மேற்கொள்ள வேண்டிய புலனாய்வு மற்றும் நடவடிக்கைக்காக வனத்துறைக்கு மாற்றியுள்ளது. வனத் துறையிலிருந்து அனுப்பப்பட்ட 70 குற்றங்களில் ஒன்று நீதிமன்ற விசாரணையிலும், 2 குற்றங்கள் புலனாய்விலும் உள்ளன.

சந்தன மரங்களை சட்ட விரோதமாக வெட்டும் குற்றங்கள்

வனங்களில், வனத்துறை அதிகாரிகளும், வனத்துறைப் பணியாளர்களும் இரவு பகல் பாராது மேற்கொண்ட திடீர் சோதனைகள், சந்தனமரக் கடத்தல் குற்றங்கள் பல வெற்றிகரமாக கண்டுபிடிக்கப்பட வழி வகுத்துள்ளது. பெரும்பான்மையான குற்றங்கள், கோயம்புத்தூர், அந்தியூர், ஈரோடு, மேட்டூர், அரூர், மொரப்பூர், இராசிபுரம், வேலூர், செங்கம், ஆலங்காயம், திருப்பத்தூர், குடியாத்தம், ஒடுகத்தூர், ஆற்காடு, அமிர்தி, ஆத்தூர், வாழப்பாடி, கல்ராயன், சிங்காரப்பேட்டை மற்றும் நாமக்கல் ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. கடந்த இரண்டு ஆண்டுகளில் கண்டுபிடிக்கப் பட்டுள்ள சந்தனமரக் கடத்தல் குற்றங்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

	1992-93	1993-94 (மார்ச்சு திங்கள் 15 வரையில்)
1. கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை	1799	3350
2. கைப்பற்றப்பட்ட சந்தனமரக் கட்டைகளின் அளவு (டன்களில்)	549	804
3. கைப்பற்றப்பட்ட சந்தனமரக் கட்டைகளின் மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்)	958	1406
4. சந்தனமரக் கடத்தலில் குற்றஞ்சாட்டப் பட்டவர்களின் எண்ணிக்கை	4227	7085
5. கைப்பற்றப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை	497	623
6. குண்டர்கள் தடைச் சட்டத்தின் கீழ் கைதானவர்களின் எண்ணிக்கை	205	77

1994 ஏப்ரல் 26]

சிறப்பு நீதிமன்றங்கள்

மாவட்ட மாஜிஸ்திரேட் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சந்தன மரக் கடத்தல் பட்டியலிடப்பட்ட மரங்கள் கடத்தல் ஆகியவற்றில் சம்பந்தப்பட்ட வனக்குற்றங்கள், பல்லாண்டுகளாக முடிவுறாத நிலையில் இருந்து வருகின்றன. எனவே, இத்தகைய வனக்குற்ற வழக்குகளை விரைவில் விசாரித்து முடிக்கும் பொருட்டு, திருப்பத்தூரில் ஒரு சிறப்பு நீதிமன்றம் நிறுவப்பட்டு, 1992 ஆம் ஆண்டு மார்ச்சு முதல் செயல்பட்டு வருகிறது. இந்நீதி மன்றத்தில் 1643 வழக்குகள் விசாரிக்கப்பட்டு வருகின்றன. சேலத்திற்காக அனுமதிக்கப்பட்ட மற்றொரு சிறப்பு நீதிமன்றம் விரைவில் செயல்படவுள்ளது.

சட்டங்கள் மூலம் வனப்பாதுகாப்பு நடவடிக்கைகள்

தமிழ்நாட்டில் பின்வரும் சட்டங்களின் கீழ், வனங்களைப் பேணிப் பாதுகாத்தல், அதனை நிருவகித்தல் ஆகிய பணிகள் யாவும் மேற்கொள்ளப் படுகின்றன.

1. 1882-ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச்சட்டம்

2. 1980-ஆம் ஆண்டு வன (பாதுகாப்பு) சட்டம்

3. 1972-ஆம் ஆண்டு வனவிலங்குகள் (பாதுகாப்பு) சட்டம்.

பின்வரும் சட்டங்களை செயற்படுத்துவதன் மூலம், தனியார் வனங்கள், மலைத் தோட்டங்கள் போன்றவற்றில் உள்ள மரங்களையும் ஏனைய வனச் செல்வங்களையும் வகை தொகையின்றி அழிப்பதைத் தடுக்க வகை செய்கிறது.

1. 1949 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் வனங்கள் பாதுகாப்புச் சட்டம்.

2. 1955- ஆம் ஆண்டு தமிழ்நாடு மலைப் பகுதிகள்

(மரங்களைப் பாதுகாத்தல்) சட்டம்.

மேற்சொன்ன சட்டங்களின் காப்புரைகளை செயற்படுத்துவதன் மூலம், இம்மாநிலத்தில் உள்ள வனங்கள், மரங்கள் யாவும் அழிக்கப்படாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. வணிக நோக்கத்திற்காக, காப்பு வனப்பகுதியில் உள்ள மரங்களை வெட்டுவதை அரசு தடுத்து நிறுத்திய போதிலும், தனியார் வனங்கள், மலைத் தோட்டங்களிலுள்ள மரங்கள் ஆகியவற்றை வெட்டுவது தொடர்பாக, தடைகளை வலுப்படுத்துவதற்காக அரசு நிலைமையை ஆய்வு செய்து அண்மையில் சில வழிமுறைகளைத் திரும்பப் பெற்றுள்ளது.

வனத்திற்கு தொடர்பற்ற நோக்கங்களுக்காக, வனப்பகுதிகளை மாற்றி பயன்படுத்துவதை மிக நுணுக்கமாக ஆய்வு செய்து முடிவு எடுக்க வேண்டுமென 1980 ஆம் ஆண்டு வன (பாதுகாப்பு) சட்டம் வரையறுத்துள்ளது. இதுவரையில் வனம் சாரா நோக்கங்களுக்குப் பயன்படுத்த 1944.27 எக்டேர் வனப்பரப்பை உள்ளடக்கிய 139 இனங்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

1980 ஆம் ஆண்டு வன (பாதுகாப்பு) சட்டத்தின்படி, புனல்மின் / பாசனப் பயனுக்கு, குடிநீர் வழங்கலுக்காக முதன்மை குழாய் பதித்தல், சாலைகளை அகலப்படுத்துதல் / விரிவு படுத்துதல், கால்வாய் வெட்டுதல், குழாய்கள் பதித்தல், சுரங்கம் வெட்டுதல், கற்களை வெட்டி எடுத்தல் போன்ற வனம் சாராத நோக்கங்களுக்காக வன நிலங்களைப் பயன்படுத்த ஒதுக்கக் காடுகள் என்ற வகைப்பாட்டிலிருந்து நீக்க மத்திய அரசின் முன் அனுமதி' பெறுதல் அவசியம். ஒரு எக்டேர் வரையிலான வன நிலங்களுக்குக்கூட மத்திய அரசின் முன் அனுமதி தேவையாகும்.

மத்திய - மாநில அரசு உறவுகள் குறித்து சர்க்காரியா கமிஷன், மாநிலங்களுக்கு அதிகாரங்களைப் பிரித்து அளிப்பது

குறித்த செயற்குறிப்பை ஆய்வு செய்த பின்னர், 5 எக்டேர் பரப்பு வரையிலான வன நிலங்களை வனம் சாரா நோக்கங்களுக்கு பயன்படுத்த மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்க வேண்டுமென்று பரிந்துரை செய்துள்ளது. எனினும், மேற்சொன்ன பரிந்துரைகளை ஆய்வு செய்த இவ்வரசு, பொது நோக்கங்களுக்கு அவசரமாகத் தேவைப்படும் போது ஒரு எக்டேர் பரப்பு வரையிலான நிலத்தை மத்திய அரசின் முன் அனுமதியின்றிப் பயன்படுத்த இந்த அரசு, அனுமதி கோரியிருந்தது. இதுவரையில் மத்திய அரசிடமிருந்து பதில் எதுவும் வரவில்லை.

வன (பாதுகாப்பு) சட்டத்தின் தற்போதைய காப்புரைகள் அவசரப் பொதுத் தேவைகளைக் கூட கவனிக்க முடியாத செயலற்ற நிலைக்கு மாநில அரசைத் தள்ளி விடுகின்றன. எனவே, மக்களுக்கு வசதிகளைச் செய்து கொடுக்க ஏதுவாக மாநில அரசுக்குத் தேவையான அதிகாரம் வழங்குமாறு இந்த அரசு, மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

வனத்தோட்டக் கழகங்கள்

மூன்று வனத்தோட்ட கழகங்கள் பின்வருமாறு:

1. திருச்சிராப்பள்ளியில் உள்ள தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம் (டாப்கார்ன்)

2. குன்னூரில் உள்ள தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் (டான்டீ)

3. நாகர்கோவிலில் உள்ள அரசு ரப்பர் கழகம்.

1. தமிழ்நாடு வனத்தோட்டக் கழகம்

இக்கழகம், திருச்சிராப்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்டு அமைக்கப் பட்டது. தமிழ்நாடு வனத்துன்ற,

தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்க தேவர் திருமகனார், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் 71,669 எக்டேர் நிலப்பரப்பை இக்கழகத்திற்கு குத்தகைக்கு அளித்துள்ளது.

கூழ்மரத் தோட்டங்களையும் விறகு மரத் தோட்டங்களையும் முந்திரித் தோட்டங்களையும் அமைத்தல் இக்கழகத்தின் முக்கிய நோக்கங்களாகும். இக்கழகம் கீழே விவரித்துள்ளவாறு தோட்டங்களை அமைத்துள்ளது:

	எக்டேரில்		
	1992-93	1993-94	1994-95
1. யூகலிப்டஸ்	5,200	4,765	5,000
2. முந்திரி	40	486	700
3. சவுக்கு மரமும் மற்ற மரங்களும்	78	90	50
4. முந்திரி மீண்டும் வளர்க்கப்படும் பகுதிகளில் தீவிர சாகுபடிப் பணிகள்	5,569	5,810	5,535

கடந்த மூன்றாண்டுகளாக இக்கழகத்தின் செயல்பாடு சிறப்பானதாகவும், குறிப்பிடத் தகுந்ததாகவும் உள்ளது. இக்கழகம் 1992-93-ஆம் ஆண்டுக்கு 20 சதவீத ஆதாயப் பங்குத் தொகையினை அறிவித்துள்ளது. அதன் மதிப்பு ரூ.40 இலட்சம் என்று கணக்கிடப் பட்டுள்ளது.

இதன் வரவு செலவு பற்றிய விவரங்கள் கீழே அளிக்கப் பட்டுள்ளன.

	1992-93 கணக்குகள்	1993-94 வரவு - செலவு திட்டநிதி ஒதுக்கம்	1994-95 எதிர்பார்க்கப் படுபவை
	(ரூபாய் இலட்சத்தில்)		
(அ) வருவாய்	887.62	820.16	967.25
(ஆ) செலவு (குத்தகை தொகை நீங்கலாக)	355.91	464.47	607.10
(இ) குத்தகை வாரம் அளிப்பதற்கு முன்னால் ஆதாயம் (அ) - (ஆ)	531.71	355.69	360.15
(ஈ) குத்தகைவாரம்	349.03	353.00	353.00
(உ) குத்தகைவாரம் அளித்த பின்னர் நிகர ஆதாயம்	182.68	2.69	7.15

இக்கழகத்திற்கு குத்தகைக்கு அளிக்கப்பட்ட வனத்துறை நிலங்களுக்கு இக்கழகம் செலுத்த வேண்டிய குத்தகைத் தொகை பின்வருமாறு திருத்தியமைக்கப் பட்டுள்ளது:

முந்திரி சாகுபடி செய்யப்படும் நிலத்திற்கு ஆண்டொன்றுக்கு எக்டேர் ஒன்றுக்கு ரூ.800/-.

முந்திரி அல்லாத ஏனைய பயிர்கள் சாகுபடி செய்யப்படும் நிலத்திற்கு ஆண்டொன்றுக்கு எக்டேர் ஒன்றுக்கு ரூ.400/-

2. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் (டான்டீ)

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், கோயம்புத்தூர் நீலகிரி மாவட்டங்களில் தற்போது 6,100 எக்டேர் பரப்புள்ள நிலங்களை உடைமையாகக் கொண்டுள்ளது. 4,050 எக்டேர் பரப்புள்ள தேயிலைத் தோட்டங்கள் இக்கழகத்திற்குச் சொந்தமாக உள்ளன. இந்த வகையில், இக்கழகம் தமிழ்நாட்டில்

அதிக அளவு நிலங்களை வைத்திருப்போரில் இரண்டாவது இடத்தையும், தென்னிந்தியாவில் நான்காவது இடத்தையும் வகிக்கிறது.

வனத்தோட்ட வளர்ப்புத் திட்டமும் வனத் தோட்டங்களுக்குப் புத்துயிரளிக்கும் திட்டமும் படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டன. இதன் மூன்று நிலைகள் முடிக்கப் பெற்றுள்ளன. இக்கழகம் தற்போது முன்னாள் சின்கோனாத் துறையிடமிருந்து எடுத்துக் கொண்ட நிலப்பரப்பில், வனத்தோட்ட வளர்ப்பின் நான்காவது நிலையில் அடியெடுத்து வைத்துள்ளது.

முன்னாள் சின்கோனாத் துறையிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட 3,348 எக்டேர் பரப்பில், இதுவரை 1259.85 எக்டேர் பரப்பில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. 1994-95-ல் 650 எக்டேர் பரப்பு தேயிலை சாகுபடியின் கீழ் கொண்டு வர மதிப்பிடப்பட்டுள்ளது.

சுமார் 160 எக்டேர் பரப்பில் சின்கோனா மரத் தோட்டங்கள், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் பாதுகாக்கப்பட்டு, தாவர இன வங்கியாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

1991-92-ல் பசுந்தேயிலையின் மொத்த விளைச்சல் 259.77 இலட்சம் கிலோ கிராமாகும். 1992-93-ல் அதன் விளைச்சல் 272.42 இலட்சம் கிலோ கிராமாகும். 1993-94-ல் அதன் விளைச்சல் 299 இலட்சம் கிலோ கிராமாகும். 1994-95-ல் 325.04 இலட்சம் கிலோ கிராம் பசுந்தேயிலையை அறுவடை செய்ய இக்கழகம் மதிப்பிட்டுள்ளது.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், ஆண்டொன்றுக்கு 60 இலட்சம் கிலோ தேயிலை உற்பத்தி திறனுடன் கூடிய நான்கு நவீன தேயிலை தயாரிப்புத் தொழிற் சாலைகளை, முறையே சேரங்கோடு, சேரம்பாடி, பாண்டியாறு, புலிமலை (Tiger hill)

1994 ஏப்ரல் 26]

ஆகிய இடங்களில் பராமரித்து வருகிறது. தயாரிக்கப்பட்ட தேயிலையின் உற்பத்தி விவரங்கள் வருமாறு:

ஆண்டு	உற்பத்தி (இலட்சம் கிலோகிராமில்)
1992-93	64.19
1993-94	52.26
1994-95	74.76

கோத்தகிரி, நெல்லியாளம், ஆனைமலை ஆகிய இடங்களிலுள்ள இக்கழகத்தின் மூன்று புதிய தேயிலை தொழிற்சாலைகள், 1994-95-ல் செயல்படத் தொடங்கும். அவை, பசுந்தேயிலையை பதப்படுத்தி, தொடக்கத்தில் மொத்தம் 20.78 இலட்சம் கிலோ கிராம் தேயிலையைத் தயாரிக்கும்.

கொச்சி, குன்னூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில், வாராந்திர ஏலம் நடைபெறும் மையங்களில் மொத்தமாக தேயிலை விற்பனை செய்யப்படுகின்றது. 1993-94-ல் 'டான்டீ' நிறுவனம் கூட்டுறவு சிறப்பு அங்காடிகள் மற்றும் பொருட்காட்சி விற்பனை நிலையங்கள் ஆகியவற்றின் மூலம் சில்லறை விற்பனையையும் தொடங்கியுள்ளது.

'டான்டீ' நிறுவனம், கீழே குறிப்பிட்ட அளவு தயாரிக்கப்பட்ட தேயிலையை நேரடியாக ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணி ஈட்டியுள்ளது.

ஆண்டு	அளவு (கிலோ கிராமில்)	மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்)
1991-92	24,420	11.5
1992-93	3,62,087	160.61
1993-94 (1993 டிசம்பர் வரை)	1,26,525	64.12

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் 10,500 தொழிலாளர்கள் (6,300 தொழிலாளர்கள், 700 பணியாளர்கள், 3,500 தற்காலிக தொழிலாளர்கள்) பணியாற்றுகின்றனர். அனைத்து வகையான வசதிகளுக்கும் வகை செய்ததன் மூலம், இக்கழகம், இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய 2,445 குடும்பங்களுக்கு நிரந்தரமாகப் புனர் வாழ்வு அளித்து சாதனை படைத்துள்ளது. 1994-95-ல் மூன்றாம் கட்டமாக, கூடலூர் பகுதியில் புனர் வாழ்வு அளிக்கப் படவுள்ள தாயகம் திரும்பிய சுமார் 380 குடும்பங்களை இக்கழகம் ஏற்றுக் கொள்ளலாம். அகதிக் குடும்பம் ஒன்றின் சராசரி ஆண்டு வருமானம் சுமார் 22,000 ரூபாய் ஆகும்.

இக்கழகம் 33 இலட்சம் ரூபாய் செலவில், 15 படுக்கை வசதிகள் கொண்ட தோட்டத் தொழிலாளர்களுக்கான மருத்துவமனை ஒன்றை கோத்தகிரியிலும், 89 இலட்சம் ரூபாய் செலவில் 72 படுக்கை வசதிகள் கொண்ட தோட்டத் தொழிலாளர்களுக்கான மற்றொரு மருத்துவமனையை சேரம்பாடியிலும்கட்டியுள்ளது. இவ்விரு மருத்துவமனைகளும் 1994-95-ல் செயல்படத் தொடங்கும்.

கடந்த மூன்றாண்டுகளில் வரவினங்கள், செலவினங்கள் பற்றிய விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

1994 ஏப்ரல் 26]

	1992-93 கணக்குகள்	1993-94 நிதி ஒதுக்கம்	1994-95 எதிர்பார்க்கப் படுகிறது
	(ரூபாய் இலட்சத்தில்)		
அ) வருவாய்	2428.14	2907.53	3392.57
ஆ) செலவு (குத்தகை தொகை நீங்கலாக)	2188.88	2575.43	2950.20
இ) குத்தகை / வாரம் அளிப்பதற்கு முன்னால் ஆதாயம் / நட்டம்	+ 239.26	+ 332.10	+ 442.37
ஈ) குத்தகை / வாரம்	460.37	460.37	460.37
உ) குத்தகை - வாரம் அளித்த பின்னர் நிகர ஆதாயம் / நட்டம்	- 221.11	- 128.27	- 18.00

வனத்துறைக்கு இந்த கழகம் செலுத்த வேண்டிய குத்தகை தொகை பின்வருமாறு:

வனநிலங்கள் ரூ.2000/- (எக்டேருக்கு)

சின்கோனா நிலங்கள் ரூ.12,500/- (எக்டேருக்கு)
தேயிலை விளை நிலங்கள்
ரூ.100/- எக்டேருக்கு
பிற நிலங்கள்.

3. அரசு ரப்பர் தோட்டக் கழகம்

நம் நாட்டில் ரப்பர் தோட்டங்களை வளர்க்க கன்னியாகுமரி மாவட்டமே மிகச் சிறந்த பகுதியாகும். முதலில் வனத்துறையின் நிர்வாக் கட்டுப்பாட்டின் கீழிருந்த ரப்பர் தோட்டங்களும், தொழிற்சாலைகளும், 1984 ல் அரசு ரப்பர் கழகம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் அதன் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன.

ரப்பர் பால் சேகரிப்பு, அதனை முறைப்படுத்தி பொருள்கள்

தயாரிப்பது, விற்பனை செய்வது ஆகியவற்றை இக்கழகம் கவனித்து வருகிறது. 110 எக்டேர் பரப்பில் பயிரிடப்பட்ட இலவங்கத் தோட்டங்கள், எட்டு ரப்பர் தோட்டங்கள், கீரிப்பாறை, பெருஞ்சாணி, மைலாறு ஆகிய இடங்களிலுள்ள மூன்று ரப்பர் தொழிற்சாலைகள் ஆகியவை இக்கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன.

கடந்த 3 ஆண்டுகளில் இக்கழகத்தின் உற்பத்தி, வருவாய் ஆகியவை பற்றிய விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

ஆண்டு	விளைச்சல் உற்பத்தி (மெட்ரிக் டன்னில்)	விற்பனை (மெட்ரிக் டன்னில்)	மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்
1991-92	2592	2418	664.76
1992-93	2551	2845	882.68
1993-94 (எதிர்பார்க்கப் பட்டது)	2700	2900	900.00
1994-95 (எதிர்பார்க்கப் படுவது)	2900	2927	1003.50

கடந்த மூன்றாண்டுகளின் வரவினங்கள், செலவினங்கள் பற்றிய விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

	1992-93 கணக்குகள்	1993-94 நிதி ஒதுக்கம்	1994-95 வரவு செலவு எதிர்பார்க்கப் படுபவை
		(ரூபாய் இலட்சத்தில்)	
அ) வருவாய்	1024.33	1136.32	1023.96
ஆ) செலவு (குத்தகை தொகை நீங்கலாக)	922.66	1029.00	987.20
இ) குத்தகை / வாரம் அளிப்பதற்கு முன்னால் ஆதாயம் / நட்டம் (அ) - (ஆ)	+ 101.67	+ 107.32	+ 36.76
ஈ) குத்தகை / வாரம்	266.40	161.45	161.45
(உ) குத்தகை / வாரம் அளித்த பின்னர் நிகர ஆதாயம் / நட்டம்	- 164.73	- 54.13	- 124.69

முதிர்ந்த ரப்பர் தோட்டங்களுக்கு எக்டேருக்கு ரூ.6,000/- குத்தகை தொகையாகவும், பால் எடுக்க இயலாத தோட்டங்களுக்கு எக்டேருக்கு ரூ.400/- குத்தகை தொகையாகவும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

ரப்பர்பால் சேகரிக்கும் தொழிலாளர்கள், தொழிற்சாலைத் தொழிலாளர்கள் ஏனையோர் அடங்கிய சுமார், 2,500 தொழிலாளர்கள் உள்ளனர். அவர்களில் 285 பேர் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோராவர். இக்கழகம், 1218 மாணவர்கள் பயிலும் ஏழு பள்ளிகளையும், ஏழு மருந்தகங்களையும், கீரிப்பாறையில் தோட்டத் தொழிலாளர்கள் மருத்துவமனை (10 படுக்கை வசதிகள் கொண்டவை) ஒன்றையும், சித்தாரில் தோட்டத் தொழிலாளர் மருத்துவமனை ஒன்றையும் (6 படுக்கை வசதிகள் கொண்டவை) நிருவகித்து வருகிறது.

மனிதவள மேம்பாடு

அனைத்து இந்திய விளையாட்டு போட்டிகள்

மத்திய அரசு பொறுப்பேற்று, டேராடூனில் 1993 டிசம்பர் 15-19-ல் நடத்திய அனைத்து இந்திய தடகள போட்டிகள் மற்றும் ஏனைய விளையாட்டுப் போட்டிகளில் பல்வேறு பதவியிலுள்ள 60 பணியாளர்கள் பங்கேற்றனர். இவர்கள் (2 தங்கம், 2 வெள்ளி, 3 வெண்கலம்) 7 பதக்கங்களை வென்றனர்.

வனத்துறையின் பாதுகாப்புப் பணியாளர்களின் நல்லொழுக்கத்தை மேம்படுத்தி ஊக்குவிப்பதற்காக, பாதுகாப்புப் பணியாளர் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.20-ஐ இடர் ஏற்புப் படியாக வழங்க அரசு அனுமதியளித்துள்ளது.

1991-92 மற்றும் 1992-93 ஆகிய ஆண்டுகளில் வன அலுவலர்களுக்கும் தகவல் அளிப்பவர்களுக்கும் (வெகுமதியாக) ஊக்கத் தொகையாக ரூ.17.74 இலட்சம் வழங்கப்பட்டது.

ஆண்டுதோறும் வனச்சரகர்கள், வனவர்கள், வனக்காப்பாளர்கள், வனக்காவலர்கள் வரையிலான பதவித் தரத்தலுள்ள 50 வன அலுவலர்களுக்கு விருதுகளும், வெகுமதிகளும் வழங்குவதற்கான செயற்குறிப்புக்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள். வெகுமதி ரூ.2,500/- முதல் ரூ.3,000/- வரையிலாகும்.

வேலை வாய்ப்பை உருவாக்குதல்

1993-94-ல் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ், பல்வேறு பணிகளை மேற்கொள்ள ரூ.52.61 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. காடு வளர்ப்பு, மண் வளப்பாதுகாப்பு,

1994 ஏப்ரல் 26]

சாலைகள், கட்டிடங்கள் முதலிய முதலீட்டு பணிகளுக்காக மேற்சொன்ன நிதி ஒதுக்கத்திலிருந்து, சுமார் ரூ.36 கோடி செலவிடப்பட்டது. வனத்துறையில், ஆண்டுதோறும் சுமார் 144 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டு வருகின்றன. அவற்றுள், சுமார் 50 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் பல்வேறு நாற்றங்கால் பணிகள், தோட்டப் பணிகள், முதலானவற்றில் கிராமப்புற மகளிருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதாக இருக்கும்.

ஸ்வீடன் அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவன நிதியுதவி பெறும் சமூகக் காடு வளர்ப்புத் திட்டம் பெருமளவிலான நிதியொதுக்கத்தைப் (ரூ.24.88 கோடி) பெற்றுள்ளது. இத்திட்டம் ஆண்டுதோறும் 75.6 இலட்சம் மனித உழைப்பு நாட்களை உருவாக்குகிறது; அதில் 26.46 இலட்சம் மனித உழைப்பு நாட்கள், அருகிலுள்ள கிராமங்களிலிருக்கும் மகளிரைப் பணியில் ஈடுபடுத்திக் கொள்ள பயன்படுத்தப் படுகிறது.

இவ்வாறு காடு வளர்ப்புத் துறையில், வேலை வாய்ப்பை குறிப்பாக கிராமப்பகுதியிலுள்ள ஏழை எளியோருக்கு உருவாக்கியுள்ளதன் மூலம், தமிழ்நாட்டில் உள்ள மக்களின் குறிப்பாக எதுவும் இல்லாத ஏழை எளிய மக்களின் நலனுக்கு, வனத்துறை, பெரும்பங்கு ஆற்றி வருகிறது.

டாக்டர் புரட்சித் தலைவி வனச்சோலை திட்டம் விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்

நமது மாநிலத்தில், பசுமைப் போர்வையை (Green Cover) மேலும் வளமாக்க, பெருமளவில் விழிப்புணர்ச்சி விழாக்களை நடத்துதலில் இந்த அரசு மற்ற எந்த அரசுக்கும் சளைத்ததல்ல. **டாக்டர் புரட்சித் தலைவி வனச்சோலைத் திட்டம்** தமிழகமெங்கும் 9.9.93 முதல் 15.9.93 வரை கொண்டாடப்பட்டது. இதற்கென 138 விழாக்கள்

தமிழகமெங்கும் ஏற்பாடு செய்யப்பட்டன. இவ்விழாக்களில் மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் முக்கிய பிரமுகர்கள் மிகச் சிறப்பாக பங்கேற்றனர். மரம் நடும் நிகழ்ச்சிகளில் கல்லூரி மற்றும் பள்ளி மாணவ, மாணவியர் ஈடுபடுத்தப்பட்டனர். இந்த விழிப்புணர்ச்சி விழாக்களின் போது, வனத்துறை 14,76,636 மரக்கன்றுகளை நட்டது. விழிப்புணர்ச்சி வாரத்தில் 6,14,910 பல்வேறு வகை மரக்கன்றுகளை தங்கள் சொந்த நிலங்களில் நட மக்கள் விலைக்கு வாங்கியுள்ளனர்.

இந்த திட்டத்தின் இரண்டாம் கட்டம் 24.2.94 முதல் நடைபெற்றது. 46,000 மரக்கன்றுகளை, நட 23 மாவட்டங்களில், ஒவ்வொன்றிலும் 2 இடங்கள் வீதம் தேர்வு செய்யப்பட்டு, 46 தோட்டங்களில் மரம் நடு விழா கொண்டாடப்பட்டது.

முடிவுரை

சுற்றுச் சூழலுக்கு இணங்க முற்போக்கும், தேவையானவர்க்கு அளிக்கும் வகையில் மேம்பாட்டினை துரிதப்படுத்துதலும், நிலைபெறச் செய்தலும் நமது ஒருங்கிணைந்த திட்டச் செயல்முறை, திட்ட அணுகுமுறை ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதாகவுள்ளது. முற்போக்குடன் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதை உறுதி செய்ய, திட்ட செயல்முறைக்காக வளர்ந்துவரும் சமுதாய தொழில் நுட்பச்சிக்கல்கள் கருத்தில் கொள்ளப்பட்டு வருகின்றன. உயிரின வாழ்க்கைச் சூழல் முறைகளை மீண்டும் ஏற்படுத்தவும், காடுபடு பொருட்கள் அனைவருக்கும் கிடைக்கச் செய்யும் வகையில் நீடித்த உற்பத்திக்காகவும் உயிரின வாழ்க்கைச் சூழல் மேம்பாட்டுத் திட்டங்களை தீவிரப்படுத்துவதற்கு முன்னுரிமை அணுகுமுறை அவசியமாகிறது.

1994 ஏப்ரல் 26]

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய வழிகாட்டலின் கீழ் செயல்பட்டு வரும் நமது அரசு, பரந்த பாரம்பரிய அடிப்படை, பல்வகை உயிரினங்களின் மாறுபாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நீடித்த முறையில், நமது இயற்கை வளங்களைப் பாதுகாத்து, மேம்படுத்துவதன் வாயிலாக, நாட்டின் மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதியை வனப்பரப்பாக அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்ற தேசீய இலக்கை எய்துவதற்கு தன்னுடைய முழு முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொள்ளும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS